பிலிப்பியர்

டேவிட் ரோப்பர்

1. பவுல் இல்லத்திற்கு எழுதிய போது (பிலிப்பியர் 1:1,2)
2. விலங்கிடப்பட்டிருக்கையில் மகிழ்ச்சியாக இருப்பது எவ்வாறு (பிலிப்பியர் 1:3-11)
3. பவுலின் கண்களின் வழியாக (பிலிப்பியர் 1:12-20)
4. “இருப்பதா அல்லது இல்லாது ஒழிவதா: (பிலிப்பியர் 1:20-30)
5. ஒரு கிறிஸ்தவர் செய்ய வேண்டிய “ஒரே” விஷயம் (பிலிப்பியர் 1:27-30)
6. “ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!” (பிலிப்பியர் 2:1-4)
7. “இந்த எண்ணப்போக்கைக் கொண்டிருங்கள்” (பிலிப்பியர் 2:5-11)
8. ஒரு கிறிஸ்தவரின் வேலை பற்றிய விவரிப்பு (பிலிப்பியர் 2:12-18)
9. “ஒரு சில நல்ல மனிதர்கள் (பிலிப்பியர் 2:19-30)
10. “கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள்” (பிலிப்பியர் 3:1-3)
11. “பவுலின் இலாப நஷ்டக் கணக்கு” (பிலிப்பியர் 3:4-11)
12. கவனம்குவிக்கப்பட்ட வாழ்வை வாழுதல் (பிலிப்பியர் 3:10-16)
13. பூமியில் அடித்தளமிடப்பட்டது, ஆனால் பரலோகத்தில் கட்டப்பட்டது (பிலிப்பியர் 3:17-4:1)
14. நல்ல கிறிஸ்தவர்கள் இணங்கிப்போக இயலாத போது (பிலிப்பியர் 4:1-3)
15. எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் (பிலிப்பியர் 4:4-7)
16. ஒரு கிறிஸ்தவர் போன்று சிந்தித்துச் செயல்படுதல் (பிலிப்பியர் 4:8,9)
17. நாம் அறிந்து கொள்ள அவசியமான ஒரே “இரகசியம்” (பிலிப்பியர் 4:10-14)
18. கொடுத்தல் உங்களுக்கு என்ன செய்யும் (பிலிப்பியர் 4:14-20)
19. வல்லமையைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுதல் (பிலிப்பியர் 4:21-23)

1

பவுல் இல்லத்திற்கு எழுதிய போது

[பிலிப்பியர் 1:1, 2]

நாம் கடிதங்களைப் பெறுவதற்கு விரும்புகிறோம், விசேஷமாக நாம் நேசிக்கிறவர்களிடத்தில் இருந்து அவற்றைப் பெறுவதற்கு விரும்புகிறோம். எனது குடும்பம் ஆஸ்திரேலியாவில் வாழ்ந்து கொண்டிருந்தபோது, நாங்கள் அஞ்சல்காரரை எதிர்பார்த்துக் கவனித்துக் கொண்டிருப்போம். அவர் வந்த பின்பு, அமெரிக்காவில் உள்ள குடும்பம் மற்றும் நண்பர்களிடத்தில் இருந்து ஏதேனும் செய்தி வந்துள்ளதா என்று பார்ப்பதற்காக அஞ்சல்பெட்டியை நோக்கி விரைந்தோடுவோம். இந்தப் பாடம் பிலிப்பியில் இருந்த சபைக்குப் பவுலின் நிருபம் என்ற அவரது "அன்புக் கடிதம்" பற்றிய ஒரு பாடத்தை தொடங்கி வைக்கிறது.

நமது படிப்பை நான், "மகிழ்ச்சி நிறைந்த கிறிஸ்தவம்" என்று அழைக்கிறேன், மற்றும் இந்தக் குறிப்பிட்ட பாடத்திற்கு நான், "பவுல் இல்லத்திற்கு எழுதியபோது" என்று தலைப்பிட்டுள்ளேன். இந்த அறிமுகப் பாடத்தில் நாம், இந்தப் புத்தகத்தின் முதல் இரு வசனங்களைப் பற்றி முதன்மையாகப் பார்ப்போம்:

> *இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலும் தீமோத்தேயும்,*
>
> *பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக (வசனங்கள் 1, 2).*

மேலும் நாம்,இந்த நிருபத்தைச் சுருக்கமாக ஆய்வு செய்வோம். இது நமது பாடத்தொடருக்கு ஒரு பின்னணியை அளிக்கும்.

உண்மைகள்

வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்களை வரிசை முறையில் ஆராய்வு செய்தல் என்பது 1 மற்றும் 2 வசனங்களை அணுகுவதற்கான ஒரு வழியாக உள்ளது. (ஆங்கில வேதாகமத்தில்) "பவுல்"[1] என்பது முதல் வார்த்தையாக உள்ளது. இவர் புறஜாதியாருக்கு மாபெரும் அப்போஸ்தலராக இருந்தார், இந்த நிருபத்தை எழுதிய வேளையில் இவர் அனேகமாக,ரோமாபுரி சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு இருந்தார். சிறையில் அடைக்கப்பட்டு இருத்தலையும் (1:13) மரணம் அடைவதற்கான சாத்தியக்கூறு இருத்தலையும் (1:21-24)

பவுல் குறிப்பிட்டார். இந்த அப்போஸ்தலர், தாம் சிறையில் அடைக்கப்பட்டு இருத்தலானது, கிறிஸ்துவானவர் "அரண்மனை எங்கும் உள்ளவர்களால்" நன்கு அறியப்பட்டவர் ஆனார் (1:13) என்ற விளைவை ஏற்படுத்தியது என்று கூறினார். மேலும் இவர் "இராயனுடைய அரமனையிலுள்ளவர்களிடம்" இருந்து வாழ்த்துதல்களையும் அனுப்பினார் (4:22).

முதல் வசனத்தில் அடுத்ததாக "தீமோத்தேயும்" என்ற வார்த்தை வருகிறது. தீமோத்தேயு, பவுலின் பயணத்தோழராக இருந்து, இந்த நிருபத்தை எழுதியபோது பவுலுடன் இருந்த ஒரு இளம் பிரசங்கியாராவார். தீமோத்தேயுவின் பெயரை உள்ளடக்கியது, அவர் இந்த நிருபத்தின் உடன் எழுத்தாளராக இருந்தார் என்று அர்த்தப்படுவதில்லை; இந்தப் புத்தகம் முழுவதிலும் பவுல் தன்மை ஒருமைச் சொல்லையே பயன்படுத்தினார் (காண்க 1:3, 6-9, 12). மாறாக, இந்த அப்போஸ்தலர், அனேகமாக, தீமோத்தேயு தமது உடன் ஊழியக்காரராக இருந்தார் என்று வலியுறுத்தி இருக்கலாம் மற்றும் இவரது சொற்றொடர் அமைப்பானது, இவர் இந்த நிருபத்தைக் கூற, அவ்வார்த்தைகளைத் தீமோத்தேயு எழுதியிருப்பார் என்று சுட்டிக்காண்பிப்பதாக இருக்கலாம்.

பவுல் தம்மையும் தீமோத்தேயுவையும் "இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள்" என்று அடையாளப்படுத்திக் கொண்டார். ஆங்கில வேதாகமத்தில் இது "bond-servants" என்றுள்ளது, இது "அடிமைகள்" என்று அர்த்தப்படுகிறது. KJV வேதாகமத்தில் "servants" என்று இருந்தாலும், கிரேக்க வேதாகமத்தில், "servant" என்று அர்த்தப்படும் வார்த்தையின் பன்மை வடிவம் (*diakonos*) அல்ல, ஆனால் "அடிமை" என்று அர்த்தப்படும் வார்த்தையே (*doulos*) உள்ளது. இவ்விடத்தில் இவ்வார்த்தையின் பயன்பாடு, இந்தச் சுவிசேஷ ஊழியர்கள் இருவரைப் பற்றியும் பல உண்மைகளைக் கருத்தாகத் தெரிவிக்கிறது: (1) அவர்களை இயேசு தமக்கு உரிமையானவர்கள் ஆக்கியிருந்தார். அவர்கள் "கிரயத்திற்குக் கொள்ளப்பட்டிருந்தனர்" (1 கொரிந்தியர் 7:23). (2) அவர்கள் கிறிஸ்துவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தனர் மற்றும் அவரது சித்தத்தைச் செய்வதற்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருந்தனர். (3) செப்துவஜிந்த் (பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பு) வேதாகமத்தில் இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளபடி, அவர்கள் *மதிப்புள்ள* வேலைக்காரர்களாக இருந்தனர். இது, பவுல் தம்மை அப்போஸ்தலர் என்று அடையாளப்படுத்திக் கொள்ளாத சில நிருபங்களில் ஒன்றாக உள்ளது. ஒருவேளை இதை அவர் பிலிப்பியில் இருந்த சபைக்கு நிரூபிக்கத் தேவையில்லாது இருந்திருக்கலாம்.

இந்த நிருபம், "கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும்" எழுதப்பட்டது. "பரிசுத்தவான்கள்" என்பது "பாவமற்ற பரிபூரண நிலையை அடைந்தவர்கள்" என்று அர்த்தப்படுவது இல்லை. "பரிசுத்தவான்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை ("பரிசுத்தமானவர்கள்" என்பதற்கான வார்த்தையான) *hagios* என்பதன் நான்காம் வேற்றுமைப் பன்மைச் சொல்லாகும், இது "பிரித்து வைக்கப்பட்டவர்கள்" என்று அர்த்தப்படுகிறது. இவ்வார்த்தை தேவனுடைய ஊழியத்திற்கென்று "பிரித்து வைக்கப்பட்ட" "தேவனுடைய பரிசுத்தமான மக்கள்" என்பதைக் குறிக்கிறது.இது அந்தப் பகுதியில் இருந்த எல்லா கிறிஸ்தவர்களைக் குறிப்பிடுவதாக இருந்தது.

குறிப்பிட்ட இந்தப் "பரிசுத்தவான்கள்," "பிலிப்பி நகரத்தில் இருந்தவர்கள்"

என்று அடையாளப்படுத்தப்படுகின்றனர். பிலிப்பி என்பது மெக்கதோனியாவில் இருந்த ஒரு நகரமாகும்.[2] பிலிப்பி ஒரு பெரிய நகரமாக இராதபோதிலும், அது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நகரமாக இருந்தது. மெக்கதோனியாவின் பிலிப்பு என்பவர், கிரேக்க நாட்டை ஒன்றிணைக்கும் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, இந்தப் பகுதியிலிருந்த தங்கத்தைப் பயன்படுத்தினார். அவர் இந்த நகரத்திற்கு தமது நினைவாக, "பிலிப்பி" என்ற மறுபெயரிட்டார். பல ஆண்டுகளுக்குப் பின்பு, ஆக்டேவியனும் அந்தோனியும், புரூட்டஸ் மற்றும் கேஸியஸ் ஆகியோரைக் தோல்வியடையச் செய்து, ரோமப் பேரரசின்மீதான கட்டுப்பாட்டை ஆதாயப்படுத்திக் கொள்ளுகையில் நடைபெற்ற, வரலாற்றின் மாபெரும் யுத்தங்களில் ஒன்று இவ்விடத்திற்கு அருகாமையில் நடத்தப்பட்டது. இந்த வெற்றியைக் கனப்படுத்தும் வகையில் பிலிப்பி நகரம் ரோமக் காலனியாக்கப்பட்டது (காண்க நடபடிகள் 16:12). இருப்பினும் இன்றைய நாட்களில் பிலிப்பி நகரம், அதன் வரலாற்று முக்கியத்துவத்திற்காக அல்ல, ஆனால் பவுல் என்ற பெயருடைய பிரசங்கியார், சுவிசேஷத்துடன் அங்கு சென்றதாலேயே முதன்மையாக நினைவுகூறப்படுகிறது (நடபடிகள் 16:6-40).

அடுத்ததாக, சபைக்குழுமத்தின் நடத்துனர்கள் குறிப்பிடப்படுகின்றனர்: "கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும்." KJV வேதாகமத்தில் "bishops" என்றுள்ளது. இது 1611ன் நாட்களில் மதரீதியான பெயரிடும் முறையிலிருந்து வசனத்திற்குள் வாசிக்கப்பட்டது. "கண்காணி" என்பது "மீது" (*epi*) என்ற முன்னிடைச் சொல்லுடன் "காணுகிற ஒருவர்" என்பதற்கான சொல்லை (*skopos*) இணைத்துப் பெற்ற கிரேக்கக் கூட்டுவார்த்தையாகும்.

"கண்காணிகள்" என்பது சபையின் மூப்பர்களைக் குறிக்கும் பெயர்களில் ஒன்றாக உள்ளது (காண்க நடபடிகள் 20:17, 28; தீத்து 1:5, 7; 1 பேதுரு 5:1, 2). சாதாரண மக்கள் புரிந்துகொள்ளும் சொற்றொடர்களைப் பயன்படுத்த முயற்சி செய்யும் NCV வேதாகமம், "overseers" அல்லது "bishops" என்பவைகளுக்குப் பதிலாக "elders" என்பதைக் கொண்டுள்ளது. NCV வேதாகமம். ஒரு நேரடி அர்த்தமான மொழிபெயர்ப்பாக இல்லை என்றாலும், இந்தச் சொற்றொடர், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலங்களில் மூப்பர்கள் சபையின் கண்காணிகளாக இருக்க வேண்டும் என்பதை மொழிபெயர்ப்பாளர்கள் புரிந்து கொண்டுள்ளதைச் சுட்டிக்காண்பிக்கிறது. "கண்காணிகள்" என்ற சொற்றொடர். மூப்பர்கள் கொண்டுள்ள பொறுப்பின் பரப்பெல்லையைச் சுட்டிக்காண்பிக்கிறது: அவர்கள் சபைக்குழுமம் தொடர்பான எல்லாவற்றையும் - குறிப்பாக தங்கள் கண்காணிப்பில் ஒப்புவிக்கப்பட்டுள்ள ஆத்துமாக்களை - கண்காணிப்புச் செய்ய வேண்டியவர்களாக உள்ளனர் (காண்க 1 பேதுரு 5:2; எபிரெயர் 13:17).

"உதவிக்காரர்கள்" என்ற வார்த்தை நேரடி அர்த்தத்தில் "வேலைக்காரர்கள்" என்று அர்த்தப்படுகிறது. "உதவிக்காரர்கள்" என்பது "வேலைக்காரன்" என்பதற்கான கிரேக்க வார்த்தையின் (*diakonos*) பன்மை வடிவத்தினுடைய ஆங்கிலப்படுத்தப்பட்ட வார்த்தையாக உள்ளது. இந்த சந்தர்ப்பப் பொருளில் இது, சபையில் மூப்பர்களுடன் மற்றும் மூப்பர்களின் கீழ் ஊழியம் செய்யும் விசேஷித்த ஊழியர்களைக் குறிக்கிறது (காண்க 1 தீமோத்தேயு 3:8-13).

இந்த நிருபத்தில் மாத்திரமே பவுல் தமது வாழ்த்துரையில் சபையின் நடத்துனர்களைத் தனிப்படக் குறிப்பிட்டார். ஒருவேளை பிலிப்பியர்களுக்கு அவர்கள் செய்த நிதிசார்ந்த உதவிக்காக நன்றி செலுத்துதல் என்பது

அவரது நோக்கங்களில் ஒன்றாக இருந்தது - மற்றும் சட்டப்படி, சபைக்குழுமத்தின் நடத்துனர்களே நிதிகளைப் பெறுதல் மற்றும் தருதல் ஆகியவற்றில் ஈடுபட்டிருந்தனர் என்பதால் இவ்விடத்தில் அவர் இதைச் செய்திருக்கலாம்.

வாழ்த்துதல் பின்வரும் வார்த்தைகளுடன் முடிகிறது: "நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக." இது பவுலின் வழக்கமான வாழ்த்துதலாகும். இதே வார்த்தைகள், ரோமாபுரி, கொரிந்து, கலாத்தியா மற்றும் எபேசு ஆகிய இடங்களில் இருந்த சபைகளுக்கு அவர் எழுதிய நிருபங்களில் காணப்படுகின்றன. அவரது மற்ற நிருபங்களில் சற்றே மாறுபாடுகளுடன் இவை காணப்படுகின்றன. இந்த வாழ்த்து, "கிருபை" என்ற கிரேக்க வாழ்த்தையும் "சமாதானம்" (Heb.: *shalom*) என்ற எபிரெய வாழ்த்தையும் ஒன்றிணைத்ததாக உள்ளது.

உணர்வு

உண்மைகள் பற்றிய முந்திய கலந்துரையாடலானது ஒரு விளக்கவுரையில் முதல் இரண்டு வசனங்கள் கையாளப்பட வேண்டியதாக இருக்கும் வழியைப் போன்றதாக உள்ளது. இருப்பினும் நான், பவுலின் திறவுக் கூற்றைவிட்டு இவ்வளவு விரைவாக வெளியேறி வருதல் என்பது அவரது வார்த்தைகளுக்குப் பின்னால் உள்ள உணர்வை - மன எழுச்சிகளை - தவறவிடுதலாக இருக்கும் என்று கருத்துத் தெரிவிக்கிறேன். 1:7ஆ வில் பவுல் "*உங்களை என் இருதயத்தில் தரித்துக்கொண்டிருக்கிறபடியினாலே*, உங்களெல்லாரையுங்குறித்து நான் இப்படி *நினைக்கிறது* எனக்குத் தகுதியாயிருக்கிறது" என்று எழுதினார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது).

மன எழுச்சிகள்

பிலிப்பி நகரத்தில் இருந்த சபை, பவுலுக்கு விசேஷித்ததாக இருந்தது. அதைப் பவுலின் "இதயத்திற்கு இனிய சபை" என்று ஏவன் மலோன் என்பவர் அழைத்துள்ளார்[3]. இதன் உறுப்பினர்களை, "எனக்குப் பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே, எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரியமானவர்களே ..." என்று 4ம் அதிகாரத்தில் அப்போஸ்தலர் குறிப்பிட்டார் (4:1). இந்த நிருபத்தில் பவுல், குளிர்ந்த தர்க்க வாதியாகவோ, ஆழ்ந்தறிவுள்ள இறையியலாளராகவோ அல்லது விசுவாசத்தை உணர்வுக் கிளர்ச்சியுடன் தற்காப்பவராகவோ இருக்கவில்லை. மாறாக அவர் தமது நண்பர்களுக்குத் தமது இருதயத்தில் இருந்து எழுதும் ஒரு மனிதராக இருந்தார். அதனால்தான் இந்தப் பாடத்திற்கு நான், "பவுல் இல்லத்திற்கு எழுதியபோது" என்று தலைப்பிட்டேன்.

"இல்லம்" என்ற வார்த்தையை நான் பயன்படுத்தும்போது,பவுல் பிலிப்பி நகரில் வளர்ந்தவர் என்று மறைமுகமாய் சுட்டிக்காண்பிக்க நான் நோக்கங்கொண்டிருக்கவில்லை. அவர் தர்சு நகரில் பிறந்து எருசலேமில் கல்வி பயின்றார் (நடபடிகள் 22:3). இருப்பினும் பவுல் தமது மனமாற்றத்திற்குப் பின்பு, பெருமளவில் உலகக் குடிமகன் ஆனார். அவர் விரிவான பயணம் செய்தார் - மற்றும் கிறிஸ்துவுக்குள் தமது சகோதர சகோதரிகள் எங்கெல்லாம் இருந்தனரோ அவையாவும் அவரது "இல்லமாக" இருந்தன. இவ்விஷயத்தில் நான் பவுலுடன்

உறவுமுறை ஒன்றை உணருகிறேன். நான் வளர்ந்து கொண்டிருந்த காலத்தில், எனது பெற்றோர்கள் அடிக்கடி இடம் மாறிக்கொண்டிருந்தனர்.மக்கள் என்னை, “உங்கள் இல்லம் எங்குள்ளது?” என்று கேட்கும்போது, சில வேளைகளில் நான், “ஆக்லஹாமாவின் பேன்ஹேன்டில் என்ற ஊரில் நான் பிறந்தேன், ஆக்லஹாமாவின் தென்மேற்கு மூலையில் நான் வளர்ந்தேன், மத்திய ஆக்லஹாமாவில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வி பெற்றேன், மேற்கு டெக்ஸாஸில் உள்ள கல்லூரிக்குச் சென்றேன், மற்றும் மத்திய மற்றும் கிழக்கு ஆக்லஹாமா, ஆஸ்திரேலியா, வடக்கு டெக்ஸாஸ் மற்றும் அர்க்கன்ஸாஸ் ஆகிய இடங்களில் பிரசங்கியாராகப் பணிசெய்துள்ளேன். ஆனால் எனது குடும்பத்தினரும் நண்பர்களும் எங்கு இருக்கின்றனரோ, அந்த இடமே எனது இல்லமாக உள்ளது” என்று பதில் அளிப்பதுண்டு.

நினைவுகள்

“இருதயம் எங்குள்ளதோ அவ்விடமே இல்லமாக உள்ளது”[4] என்பது உண்மை என்றால், பிலிப்பி நகரத்தைப் பவுல் “இல்லம்” என்று சுலபமாக அழைத்திருக்க முடியும். பிலிப்பி நகரில் இருந்த பரிசுத்தவான்களுக்கு அவர் தமது நிருபத்தை எழுதத் தொடங்குகையில், பல ஆண்டுகளாகத் தாம் அவர்களுடன் கொண்டிருந்த தமது உறவு பற்றிப் பின்னோக்கி அவர் சிந்திக்கத் தொடங்கியதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது.

ஒருவேளை அவரது சிந்தனைகள், சீலாவுடன் இணைந்து சபைக்குழுமங்களைத் திரும்பவும் சந்திக்கச் சென்ற, அவரது இரண்டாம் சுவிசேஷப் பயணத்துடன் தொடங்கி இருக்கலாம் (நடபடிகள் 15:36-41). லீஸ்திரா அல்லது தெர்பையில், அவர்களுடன் இளம் தீமோத்தேயு சேர்ந்து கொண்டார் (நடபடிகள் 16:1-5). பவுல், ஆசியாவின் ரோம மாகாணத் தலைநகரான எபேசுவுக்குச் செல்லும் ரோமானிய சாலையில் பயணம் தொடரத் திட்டமிட்டார். ஆனால் ஆவியானவரால் தடை செய்யப்பட்டார் (16:6). பின்பு அவர் வடக்கில் இருந்த பித்தினியாவுக்குச் செல்லத் தீர்மானித்தார், ஆனால் மீண்டும் அவரது வழி தடைசெய்யப்பட்டது (16:7). அவர் ஏஜியன் கடலின் மீதிருந்த கப்பல் துறைமுகமான துரோவாவுக்குச் செல்லும்படி ஆயிற்று (16:8). அங்கே அவர் தம்மிடத்தில் ஒரு மனிதன், “நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று” கூறிய தரிசனமான, “மக்கெதோனிய அழைப்பை” பெற்றார் (16:9). மருத்துவர் லூக்காவும் சேர்ந்து கொண்ட சிறு குழுவானது கடலினூடே பயணம் செய்து அதைக் கடந்து நெயாப்போலி என்ற ஊர் சென்று சேர்ந்தது (16:10, 11). அங்கிருந்து அவர்கள் உள்நாட்டில் பத்து மைல்கள் பயணம் செய்து பிலிப்பி என்ற நகருக்கு சென்று சேர்ந்தனர் (16:12).[5]

அவர்கள், ரோமப் பேரரசின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளுக்கு இடையில் முதன்மை வர்த்தகச் சாலைகளில் ஒன்றாக இருந்த ரோமாபுரியின் பொதுப்போக்குவரத்துச் சாலையான, அதிகப் போக்குவரத்து நிறைந்த, எக்நேத்தியன் சாலை வழியாகச் சென்று அந்த நகருக்குள் நுழைந்திருப்பார்கள். ஒரு குட்டி ரோமாபுரியாக இருந்ததால், பிலிப்பி நகரம் என்ற அந்த ரோமானியக் காலனி ஆவலுடன் விரும்பப்பட்டது. பவுல் நகருக்குள் நுழைகையில், அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு ஒரு புதிய எல்லைப்பகுதியில் நுழைந்தார். அவர் பிலிப்பி நகரிலும் அதற்கு அப்பால் இருந்த பகுதிகளிலும் தாம் செய்த

ஊழியத்தைக் குறிப்பிட, "நாள்முதல்" மற்றும் "சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே" என்பது போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தினார் (பிலிப்பியர் 1:3; 4:15).

பொதுவாகப் பவுல், ஒரு புதிய இடத்தில், அங்குள்ள ஜெப ஆலயத்திற்குச் செல்வதைக் கொண்டு தமது ஊழியத்தைத் தொடங்கினார்; ஆனால் பிலிப்பி நகரத்தில் இருந்த ஜனத்தொகையில், ஒரு ஜெப ஆலயத்தை நிலைநாட்டத் தேவையான பத்து யூதமனிதர்கள் உள்ளடங்கவில்லை, கடைசியில் அப்போஸ்தலர், நகருக்கு வெளியே நதியோரத்தில் ஆராதித்துக் கொண்டிருந்த பெண்கள் குழு ஒன்றைக் கண்டார் (நடபடிகள் 16:13). அங்கு அவர் போதித்து, லீதியாள் என்ற பெயருடைய ஒரு பெண்ணுக்கும் அவளது வீட்டாருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார் (16:14, 15), இவ்வாறாகப் பிலிப்பி நகரில் சபையை நிலைநாட்டினார்.

இதற்குச் சற்றுப் பின்பு பவுல், அடிமைப் பெண் ஒருத்தியிடம் இருந்த அசுத்த ஆவியைத் துரத்தியதற்காகக் கைது செய்யப்பட்டார் (16:16-21). அவரும் சீலாவும் அடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர் (16:22-24). நள்ளிரவில் ஒரு பெரிய பூமியதிர்ச்சி உண்டாகி பவுலும் மற்ற கைதிகளும் கட்டவிழ்க்கப்பட்டனர் (16:25, 26). இந்தக் கட்புலக் காட்சியைச் சுற்றி நடந்த நிகழ்வுகள், அவர்களைச் சிறைவைத்திருந்த அதிகாரியின் மனதை மென்மையாக்கி அவருக்கும் அவரது வீட்டாருக்கும் போதித்து ஞானஸ்நானம் கொடுக்க ஒரு வாய்ப்பை முன்வைத்தன (16:27-34). இவ்வாறாக பிலிப்பியில் இருந்த சிறிய சபையானது புதிய உறுப்பினர்களை ஆதாயப்படுத்திற்று.

அடுத்த நாள் காலையில் பவுலும் சீலாவும் பட்டணத்து அலுவலர்களால் விடுதலை செய்யப்பட்டனர், ஆனால் அந்த நகரை விட்டு வெளியே சென்று விடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர் (16:35-39; காண்க 1 தெசலோனிக்கேயர் 2:2) பிலிப்பி நகரில் இருந்த புதிய கிறிஸ்தவர்களைச் சுருக்கமாகச் சந்தித்தபின்பு, பவுலும் சீலாவும் தீமோத்தேயுவும் ஊழியத்தைச் செய்யும்படி லூக்காவை அங்கேயே விட்டுவிட்டு புறப்பட்டுச் சென்றனர்.[6]

பவுல் ஒருசில வாரங்களுக்கு மேல் பிலிப்பி நகரில் இருக்க முடியாதிருந்தது; இருப்பினும் அங்கிருந்த கிறிஸ்தவர்கள் அவரது இருதயத்தில் ஒரு விசேஷித்த இடத்தைப் பெற்றிருந்தனர். அவர் அங்கிருந்து சென்றபின் அவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார் மற்றும் அவர்களும் அவருடன் தொடர்பு கொண்டிருந்தனர். பிலிப்பி நகரில் இருந்து பவுல் பிரசங்கிப்பதற்காகத் தெசலோனிக்கே நகருக்குச் சென்றார் (நடபடிகள் 17:1). அங்கு பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் அவருக்கு உதவி அனுப்பினர் (பிலிப்பியர் 4:15, 16). அடுத்ததாகப் பவுல் பெரோயா மற்றும் அத்தேனே நகரங்களில் சுருக்கமாக ஊழியம் செய்துவிட்டு, கொரிந்து நகருக்குச் சென்றார் (நடபடிகள் 17:10, 15; 18:1). மீண்டும் பிலிப்பி நகரத்தில் இருந்த சகோதரர்கள் அவரை ஆதரித்தனர் (2 கொரிந்தியர் 11:9). இந்த வடிவமைப்பு ஆண்டுகளினூடே தொடர்ந்தது (காண்க பிலிப்பியர் 1:5).

பவுல் தம்மால் இயன்றபோதெல்லாம், பிலிப்பி நகரில் இருந்த தமது சகோதர சகோதரிகளைச் சந்திக்க விசேஷித்த முயற்சி மேற்கொண்டார். அவர் தமது மூன்றாம் ஊழியப் பயணத்தில், எபேசு நகரில் சுமார் மூன்று ஆண்டுகள் இருந்த பின்பு, பிலிப்பி இருந்த இடமான மெக்கதோனியா பகுதிக்கு அவர்

பயணமானார் (நடபடிகள் 20:1; 2 கொரிந்தியர் 2:13; 7:5). மூன்றாம் பயணத்தின் முடிவில் அவர் கொரிந்து நகரை விட்டு எருசலேம் நோக்கிப் பயணமானார். எருசலேமுக்கு நேரடியாக ஒரு கப்பலைப் பிடித்துச் செல்வதற்குப் பதிலாக, அவர் முதலில் வடக்கு நோக்கி பிலிப்பி நகருக்குச் சென்றார் (நடபடிகள் 20:3, 6), அங்கு அவரது குழுவினருடன் மருத்துவர் லூக்காவும் சேர்ந்து கொண்டார்.

பவுல் எருலேசம் சென்று சேர்ந்தபோது, கைது செய்யப்பட்டார் (நடபடிகள் 21:15-26:32). பல ஆண்டுகள் சிறையிருப்பிற்குப் பின்பு (24:27), அவர் இராயனுக்கு அபயமிட்டதினால் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டார் (27:1-28:31). விசாரணைக்காகக் காத்திருக்கையில், அவர் "சிறை நிருபங்களை" எழுதினார். இந்த நிருபங்களில், அவரது சிந்தனைகளில் இருந்து ஒருக்காலும் தொலைவில் இருந்திராத ஒரு சபை இருந்தது, அது பிலிப்பியில் இருந்த சபைக் குழுமம். (எபேசியர், கொலோசெயர் மற்றும் பிலேமோன் ஆகியவை மற்ற "சிறை நிருபங்கள்" ஆகும்; எபேசியர் 6:20; கொலோசெயர் 4:3; பிலேமோன் 10 ஆகிய வசனங்களைக் காணவும்.)

தூண்டுதல்

எந்த ஒரு கடிதத்திற்கும் அன்பு என்பது போதுமான தூண்டுதலாக உள்ளது ஆனால் இந்த நிருபத்தை நாம் வாசிக்கையில், பவுலின் சிந்தையில் பல எண்ணங்கள் இருந்தன என்று நாம் முடிவு செய்கிறோம். அவற்றில் ஒன்று, அவர் ரோமாபுரியில் இருக்கையில் பிலிப்பி நகர சபையார் அவருக்கு அனுப்பியிருந்த உதவியாகும். பிலிப்பியர் 1:3ல் பவுல், "சுவிசேஷம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள்முதல் இதுவரைக்கும் நீங்கள் அதற்கு உடன்பட்டவர்களானபடியால்" என்று கூறினார். 4:14ல் அவர், தம்முடன் அவர்கள் உபத்திரவத்தில் உடன்பட்டது பற்றிக் குறிப்பிட்டார். சற்றுகாலத்திற்கு அவர்கள் அவருடனான தொடர்பை இழந்திருந்தனர் என்று தெரியவருகிறது (4:10); ஆனால் அவர் எங்கு இருந்தார் மற்றும் அவரது தேவைகள் என்ன என்பதை அவர்கள் அறிந்தபோது, அவர்கள் தங்கள் சொந்த சகோதரரான எப்பாப்பிராதீத்துவை அவரிடத்திற்கு அனுப்பினர். எப்பாப்பிராதீத்து பிலிப்பி நகரில் இருந்து உதவியைக் கொண்டுவந்தார்; அதற்கு மேலாக அவர், அந்த அப்போஸ்தலருக்குத் தனிப்பட்ட வகையிலும் சேவை செய்திருந்தார் (காண்க 2:25). பிலிப்பியர்கள் அனுப்பிய உதவியை "எப்பாப்பிராதீத்துவின் கையில் வரப்பற்றிக்கொண்ட" தாகவும் அவர்கள் அனுப்பியிருந்த உதவியானது "தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக" இருந்ததாகவும் பவுல் கூறினார் (4:18). பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு "நன்றி" கூறுதல் என்பது இந்த நிருபத்தை எழுதுவதற்கு அப்போஸ்தலர் கொண்டிருந்த நோக்கங்களில் ஒன்றாக இருந்தது.

எப்பாப்பிராதீத்துவே பவுல் இந்த நிருபத்தை எழுதுவதற்கு இன்னொரு காரணமாக இருந்தார்.எப்பாப்பிராதீத்து ரோமாபுரியில் இருக்கையில், மரணத்திற்கேதுவாக வியாதிப்பட்டார் (2:25, 27, 30). அவரது சுகவீனம் பற்றிய செய்தி பிலிப்பி நகருக்கு எட்டியது, மற்றும் அங்கிருந்த கிறிஸ்தவர்கள் மனக் கலக்கம் அடைந்தனர் (2:26). பவுல் இந்த நிருபத்தை எழுதியதாலும் எப்பாப்பிராதீத்துவை அவர்களிடத்திற்குத் திரும்ப அனுப்பியதாலும், அவர்களின் மனங்களை அமைதியடையச் செய்தார் (2:25, 28). அனேகமாக, எப்பாப்பிராதீத்து பிலிப்பி நகருக்குத் திரும்பிச் சென்றபோது, அவர் இந்த

நிருபத்தைப் பிலிப்பியர்களுக்கு எடுத்துச் சென்றிருக்கலாம்.

பவுல் பிலிப்பி நகரில் இருந்த சபைபற்றி இன்னொரு அக்கறையும் கொண்டிருந்தார். அவர் அந்த நகரத்தில் துன்பப்படுத்தப்பட்டிருந்தார், மற்றும் உபத்திரவம் தொடர்ந்திருந்தது என்பதற்கு ஆதாரம் இருந்தது, பிலிப்பியர்கள் "[அவர்களை] எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கும்" படி அவர் வேண்டிக் கேட்டுக்கொண்டார் (1:28அ). அவர், "ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. நீங்கள் என்னிடத்திலே கண்டதும் எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே உங்களுக்கும் உண்டு" என்று எழுதினார் (1:29, 30). ஒரு வகையில் பவுல், தமது திட்டங்களை அவர்களுக்குத் தெரிவிப்பதன் மூலம் அவர்களை ஊக்கப்படுத்த முயற்சி செய்தார். அவர் விரைவில் தீமோத்தேயுவை அவர்களிடத்திற்கு அனுப்ப நோக்கங்கொண்டிருந்தார் (2:19-23). மேலும் அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்படலாம் என்றும், தாமே அவர்களிடத்தில் செல்லலாம் என்றும் நம்பிக்கையாயிருந்தார் (1:26; 2:24). "சிறைநிருபங்களில்" மற்றொன்றில் பவுல், தாம் விரைவில் விடுதலை செய்யப்படலாம் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார் (காண்க பிலேமோன் 22).

அதே வேளையில், அவர்களுக்குப் பெலத்தையும் ஆறுதலையும் தருவதற்கு ஒரு செய்தியை அனுப்ப அவர் விரும்பினார். பவுலின் எல்லா நிருபங்களிலும் அவர் வழக்கமாகச் செய்வது போன்றே, அவர்களைப் பாராட்ட (காண்க 1:3-7), அவர்களுக்கு கட்டளையிட (காண்க 2:5), அவர்களை எச்சரிக்க (காண்க 3:2) மற்றும் அவர்களை திருத்த (காண்க 4:2) அவர் வாய்ப்பை எடுத்துக்கொண்டார்.

திருத்துதலின் விஷயம் பற்றி, சில விளக்கவுரையாளர்கள் பிலிப்பி நகரில் இருந்த சபையானது பெரிய ஆவிக்குரிய பிரச்சனைகளைக் கொண்டிருந்தது என்று நம்புகின்றனர். அங்கிருந்த கிறிஸ்தவர்கள் "ஏக சிந்தை" உள்ளவர்களாக இருக்கும்படி பவுல் கட்டளையிட்டார் (2:2), மற்றும் இதை அந்த சபையானது பிரிவினைகளால் நிறைந்து இருந்தது என்பதற்கு ஆதாரமாக விளக்கவுரையாளர்கள் எடுத்துக் கொள்கின்றனர். மேலும் அப்போஸ்தலர், "எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்" என்று தமது வாசகர்களுக்குக் கூறினார் (2:16); எனவே சிலர், அங்கு எல்லா உறுப்பினர்களும் முறையிட்டுக் கொண்டிருந்தனர் என்று முடிவு செய்கின்றனர். இருப்பினும், இந்த நிருபத்தில் உள்ள பல்வேறு தலைப்புகள், எவ்விடத்திலும் உள்ள எந்த சபைக்குழுமத்திற்கு, அந்தப் சபைக்குழுமம் அந்தப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க பிரச்சனைகளைக் கொண்டிருந்தாலும் இல்லை என்றாலும், பயன்நிறைந்த வகையில் பயன்படுத்தப் படமுடியும் (மற்றும் அவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன).

சபைக்குழுமத்தினால் சந்திக்கப்பட்ட ஒரு சில பிரச்சனைகளைப் பவுல் பட்டியலிட்டார்: இரண்டு சகோதரிகள் சமாதானமாக இருக்கவில்லை என்பது தெளிவு (4:2), மற்றும் அந்த சபையானது கள்ளப்போதகர்களுக்கு எதிராகத் தன்னைக் காத்துக்கொள்ளும்படி எச்சரிக்கப்பட்டது (3:2, 18, 19). இருந்தபோதிலும் 1 மற்றும் 2 கொரிந்தியர் நிருபங்களில் பவுல் செய்தது போன்று பிரச்சனைகளின் பெருக்கம் ஒன்றைச் சரிசெய்வதற்காகப்

பிலிப்பியருக்கு இந்த நிருபத்தை அப்போஸ்தலர் எழுதவில்லை என்று நான் வலியுறுத்துகிறேன். பிரிவினைகள் மற்றும் விரோதங்கள் பற்றிப் பவுலின் கவலைக்கான வெளிப்படையான நோக்கத்தைக் கண்டறிய பவுல் எந்த நகரத்தில் இருந்து எழுதினார் என்பதைத் தவிர வேறு எதையும் நாம் கண்ணோக்கத் தேவையில்லை (காண்க பிலிப்பியர் 1:15, 16). பவுல், ரோமாபுரி சபையில் நிலவிய பிரச்சனைகளை, பிலிப்பி நகரில் இருந்த தமக்கு மிகவும் அன்பான சபையானது அனுபவிப்பதை விரும்பவில்லை.

இந்த நிருபம், தைரியம், சந்தோஷம், ஐக்கியம் மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றை மூச்சாக வெளியிடுகிறது. இது ஒரு அன்பின் கடிதமாக உள்ளது.

வடிவமைப்பு

இந்த வேளைக்குள் நீங்கள், பவுல் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தைப் பற்றி மேம்போக்காகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். இந்த அறிமுகக் குறிப்புகளை நிறைவு செய்வதற்கு முன்னர், இந்தப் புத்தகத்தின் [நிருபம்] வடிவமைப்பை நாம் கண்ணோக்குவோமாக.

ஒரு கடிதம்

முதலாவது, இது ஒரு கடிதமாக உள்ளது - மற்றும் இது முதல் நூற்றாண்டில் எழுதப்பட்ட கடிதங்களின் வழக்கமான பண்புகளைக் கொண்டுள்ளது. இங்கு ஒருசில பொதுவான பண்புகள் குறிப்பிடப்படுகின்றன:

- *எழுத்தாளரின் அடையாளப்படுத்துதல்: "இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலும் தீமோத்தேயும்" (1:1அ).*
- *யாருக்கு எழுதப்பட்டதோ அவர்களை அடையாளப்படுத்துதல்: "பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும்" (1:1ஆ).*
- *வாழ்த்துதல்: "நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" (1:2).*
- *நன்றி செலுத்துதல்: "சுவிசேஷம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள்முதல் இதுவரைக்கும் நீங்கள் அதற்கு உடன்பட்டவர்களானபடியால், நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம்பண்ணி, உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி, நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" (1:3-6; அத்துடன் வசனம் 7-11).*
- *செய்தி: கடிதத்தின் முக்கிய பொருளுள்ள பகுதி (1:12-4:23) குறிப்பு: கடிதத்தின் முக்கிய பொருளுள்ள பகுதியை, ஆசீர்வாதம் மற்றும் வாழ்த்துக்களின் கூடுதல் வார்த்தைகளுடன் முடிப்பது வழக்கமாக இருந்தது. இதைப் பவுல் செய்தார் (4:21-23).*

எழுதியவர் பெயரானது, இன்றைய நாட்களில் நாம் போடும் இடமாகிய,

கடிதத்தின் முடிவில் இருப்பதற்குப் பதிலாகக் கடிதத்தின் தொடக்கத்தில் இருப்பது ஏன் என்று நீங்கள் வியப்படையலாம். அந்த நாட்களில் கடிதங்கள் தோல்சுருள்களில் எழுதப்பட்டன. அந்தத் தோல்சுருள் விரிக்கப்படத் தொடங்கிய உடனே, அதைப் பெற்றுக்கொண்டவர்கள், அதை எழுதியது யார் மற்றும் ஏன் அதை எழுதினார் என்பவற்றை அறிந்துகொள்ளும்படிக்கு, முக்கியமான தகவல்கள் சுருளின் தொடக்கத்திலேயே எழுதப்பட்டுவிடும்.

பொருளடக்கம்

பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் ஒரு கடிதமாக மாத்திரமல்ல ஆனால் ஒரு தனிப்பட்ட கடிதமாக உள்ளது. இது எந்தவிதமான உறுதியான ஒருங்கமைவும் இன்றி ஒரு கருத்தில் இருந்து இன்னொரு கருத்திற்குக் கடந்து செல்கிறது, அவ்வாறு மாறிச்செல்லுதல் குறித்துச் சிறிதளவே கவலை கொண்டதாக உள்ளது. "நண்பர்களுக்கு இடையிலான முறைசாரா உரையாடலில் இருப்பது போன்று, எவ்விதக் குறிப்புமின்றி கருத்து மாறும் தாராளமான அளவலாவல் போன்றுள்ளது."[7] எனவே, இந்தப் புத்தகம் பற்றிய எந்த வரை குறிப்பும் செயற்கையானதாகவே இருக்க வேண்டும். G. கேம்ப்பெல் மார்கன் என்பவர் "அன்பின் கடிதம் ஒன்றை யார் ஆய்வு செய்ய முடியும்?" என்று கேட்டார்.[8] இருந்தபோதிலும் இந்தப் புத்தகம் பற்றிய உதவிகரமான பல வரைகுறிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்கு, ஏவன் மலோன் என்பவர் பயன்படுத்திய தரம் வாய்ந்த ஒன்று தரப்படுகிறது:[9]

அதிகாரம் 1: கிறிஸ்து நமது *நோக்கமாக* இருக்கிறார் (காண்க வசனம் 21).
அதிகாரம் 2: கிறிஸ்து நமது *மாதிரியாக* இருக்கிறார் (காண்க வசனம் 5).
அதிகாரம் 3: கிறிஸ்து நமது *பந்தயப்பொருளாக* இருக்கிறார் (காண்க வசனம் 13, 14).
அதிகாரம் 4: கிறிஸ்து நமது *அளிப்பாக* இருக்கிறார் (காண்க வசனங்கள் 13, 19).

(நாம் காணப்போகிறபடி) சிந்தை (சிந்தித்தல்) என்பது இப்புத்தகத்தில் முதன்மை ஆய்வுக் கருத்தாக இருப்பதால், ஒரு எழுத்தாளர் தமது வரைகுறிப்பில் அந்தத் தலைப்பைப் பயன்படுத்தினார்:[10]

அதிகாரம் 1: *ஒரே சிந்தை.*
அதிகாரம் 2: *கீழ்ப்படியும்* சிந்தை.
அதிகாரம் 3: *ஆவிக்குரிய* சிந்தை.
அதிகாரம் 4: *பாதுகாப்பான* சிந்தை.

இருப்பினும், இந்தப் புத்தகத்தின் பொருளடக்கத்தைப் பட்டியலிடுவதே இந்தப் புத்தகத்தைப் படிப்பதற்கான மிகச்சிறந்த அணுகுமுறைகளில் ஒன்றாக உள்ளது:

(1) பவுலின் வாழ்த்து (1:1, 2).
(2) பிலிப்பியர்களுக்காக நன்றி செலுத்துதலும் ஜெபமும் (1:3-11).
(3) பவுல் சிறையில் அடைக்கப்பட்டிருத்தல் - மற்றும் பொதுவாக உபத்திரவம் - பற்றிய உட்கண்ணோக்கு (1:12-30).

(4) கிறிஸ்துவைப் போன்று தாழ்மையும் கீழ்ப்படிதலும் கொண்டிருத்தலின் மூலம் ஐக்கியம் பேணுவதற்காக ஊக்கப்படுத்துதல் (2:1-18). இது இந்த நிருபத்தின் மாபெரும் இறையியல் பகுதியாக உள்ளது.
(5) தீமோத்தேயுவை அனுப்புவதற்கான எதிர்காலத் திட்டம் மற்றும் எப்பாப்பிராதீத்துவை அனுப்புவதற்கான உடனடி திட்டம் (2:19-30).
(6) கள்ளப்போதகர்களுக்கு எதிரான எச்சரிக்கைகள், அத்துடன் பின்பற்றத் தகுதியான உதாரணமாகப் பவுல் தம்மையே உயர்த்திப் பிடித்தல் (3:1-21).
(7) பலவகையான புத்திமதிகள் - ஐக்கியத்திற்கு, சந்தோஷத்திற்கு மற்றும் சரியான சிந்தித்தலுக்கு (4:1-9). நம்மில் பலருக்கு, இது இந்த நிருபத்தின் மிகவும் அர்த்தம் நிறைந்த பகுதிகளில் ஒன்றாக உள்ளது.
(8) அவர்களின் கொடைக்காக நன்றி வெளிப்படுத்துதல் அத்துடன் மனநிறைவு பற்றிய போதனை (4:10-19).
(9) முடிவுரை - தனிப்பட்ட வாழ்த்துகள் மற்றும் ஆசீர்வாதத்துடன் (4:20-23).

ஆய்வுக் கருத்துக்கள்

இந்த நிருபம் சிறிதளவே உள்ளான ஒருங்கமைப்பைக் கொண்டிருப்பதாகக் காணப்பட்டாலும், திரும்பத் திரும்ப வரக்கூடிய ஆய்வுக்கருத்துக்கள் பலவற்றை இது கொண்டுள்ளது. அவற்றில், "ஐக்கியம்" அல்லது "பகிர்ந்துகொள்ளுதல்" என்பது ஒன்றாகும் (காண்க 1:5; 2:1, 25; 4:3, 15). சிந்தை மற்றும் சிந்தித்தல் மீதான வலியுறுத்தம் என்பது இன்னொன்று ஆகும்: நீங்கள் இந்தப் புத்தகத்தை முழுவதும் வாசிக்கும்போது, "சிந்தை," "நடக்கை," "சிந்தித்தல்" (அல்லது "ஆழ்ந்து சிந்தித்தல்") மற்றும் "நினைவில் வைத்தல்" போன்ற வார்த்தைகளைக் காணத்தேடுங்கள். மேலும் உபத்திரவம் மற்றும் பாடுகள் உள்ளான தத்துவம் ஒன்றும் உள்ளது.

"சந்தோஷம்" என்பது மேலாதிக்கம் செலுத்தும் ஆய்வுக்கருத்துக்களில் ஒன்றாக உள்ளது. பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் "சந்தோஷத்தின் கீர்த்தனை" என்று அழைக்கப்பட்டுள்ளது.[11] "சந்தோஷம்" மற்றும் "மகிழ்ச்சி" என்ற வார்த்தைகள் இந்தப் புத்தகத்தில் பதினைந்து முறைகள் (KJV வேதாகமத்தில் பதினாறு முறைகள்) காணப்படுகின்றன. இங்கு ஒரு மாதிரி வசனப்பகுதி உள்ளது:

> கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன். உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார். நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும் (4:4-7).

இந்த நிருபத்தில் உள்ள - "நன்றி செலுத்துதல்," "சமாதானம்" மற்றும் "மனநிறைவாயிருத்தல்" போன்ற - கூடுதல் வார்த்தைகள் சந்தோஷம்

என்பதுடன் தொடர்பு கொண்டுள்ளன. அதனால்தான் இந்தப் புத்தகம் பற்றிய நமது படிப்பை நான் "சந்தோஷம் நிறைந்த கிறிஸ்தவம்" என்று அழைக்கிறேன்.

இந்த சந்தோஷம் என்பது "நேர்மறையான மனரீதியான எண்ணப்போக்கின்" விளைவாக மாத்திரம் இருப்பதில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.[12] *மாறாக, நமது சந்தோஷம் என்பது* கிறிஸ்துவிற்குள் *வேரூன்றப்பட்டுள்ளது என்பதை இந்தப் புத்தகம் தெளிவாக்குகிறது. "சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து" என்ற ஆய்வுக்கருத்து இந்த நிருபத்தில் ஊடுருவிப் பரவியுள்ளது.*

- *"கிறிஸ்து" என்ற இயற்பெயரே பதினேழு முறைகள் காணப்படுகிறது (காண்க 1:10).*
- *"இயேசு" என்ற பெயர் ஒரு முறை காணப்படுகிறது (2:10).*
- *(கர்த்தர் என்ற வார்த்தையை உள்ளடக்காமல்) "கிறிஸ்து இயேசு" அல்லது "இயேசு கிறிஸ்து" என்ற கூட்டுப்பெயர் பதினாறு முறைகள் காணப்படுகிறது (காண்க 1:1).*
- *"கர்த்தர்" என்ற பட்டம் ஒன்பது முறைகள் காணப்படுகிறது (காண்க 1:14).*
- *("கிறிஸ்து" என்ற வார்த்தையின்றி) "கர்த்தராகிய இயேசு" என்ற கூட்டுப்பெயர் ஒருமுறை காணப்படுகிறது (2:19).*
- *"கர்த்தராகிய இயேசு கிறிஸ்து" அல்லது "எனது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து" என்ற முழுமையான பட்டப்பெயர் நான்கு முறைகள் காணப்படுகிறது (காண்க 1:2). இந்தப் பட்டப்பெயரானது, இதை "இரட்சகர்" என்ற வார்த்தையை முன்னுரையாகக் கொண்டு பவுல் கூறும் 3:20ல் உச்சகட்டம் அடைகிறது.*[13]
- *இயேசுவின் மரணம் பற்றிய மறைவான குறிப்புகளும் உள்ளன (காண்க 3:10, 18), அத்துடன் சுவிசேஷம் பற்றிய ஒன்பது குறிப்புகளும் உள்ளன (காண்க 1:5).*[14]

*"கிறிஸ்துவுக்குள்" அல்லது அதற்குச் சமமான வார்த்தை இந்த நிருபத்தின் திறவுகோல் சொற்றொடராக உள்ளது; இந்தச் சொல்விளக்கம் குறைந்தபட்சம் பதினாறு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது (காண்க 1:1, 26; 4:4). மற்ற குறிப்புகள் NASB வேதாகமத்தில் தெளிவாக இருப்பதில்லை; எடுத்துக்காட்டாக, 1:13ம் வசனம் "*கிறிஸ்துவுக்குள் *எனது கட்டுகள்" என்று நேரடியாக உள்ளது. "கிறிஸ்துவுக்குள்" என்பது பவுலுக்கு மிகவும் பிரியமான சொல்விளக்கங்களில் ஒன்றாகும் (காண்க ரோமர் 3:24; 6:11; 8:1; 9:1). இதை அவர், கர்த்தருடன் நாம் கொண்டுள்ள உறவுமுறை பற்றித் தெரிவிக்கப் பயன்படுத்தினார்.*[15] *இது நாம் "*அவருக்குள் *இருக்கிறோம்" என்று கூறுவதால் மாத்திரமே கூறப்படக்கூடிய மிகவும் விசேஷித்த, மிகவும் நெருக்கமான, மிகவும் உள்ளார்ந்த உறவாக இருக்கிறது. ஒரு பறவை காற்றில் வாழ்வது போன்று,ஒரு மீன் நீரில் வாழ்வது போன்று, ஒரு மரம் மண்ணில் வேரூன்றி இருப்பது போன்று, ஒரு கிறிஸ்தவர் "கிறிஸ்துவுக்குள்" வாழ்கிறார். ஒரு கிறிஸ்தவர், தம்மைச் சுற்றியுள்ளவர்களில் இருந்து "வேறுபட்டு" இருக்கிறார், ஏனெனில் அவர் இயேசுவின் சுற்றிச்சூழும் பிரசன்னத்தைப் பற்றி எப்போதும் அறிந்திருக்கிறார்!*

முடிவுரை

சற்றுக் காலத்திற்கு முன்னர், எண்பத்தி எட்டு வயதான எனது தாயாரிடத்தில் நான், பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தைப் பற்றி எழுதுதல் எனது அடுத்த திட்டமாக உள்ளது என்று கூறினேன். அவர்களின் முகம் ஒளிவீசிற்று மற்றும் அவர்கள், "அந்தப் புத்தகத்தை நான் நேசிக்கிறேன்!" என்று கூறினார். பின்பு சிந்தனையுடன் கண்ணோக்கி, "ஆனால் அது போதிக்கும் விஷயங்களுக்கு ஏற்ப எப்போதுமே நான் வாழ்வதில்லை" என்பதையும் கூடுதலாகக் கூறினார். அது இந்தப் புத்தகத்தில் என்னைக் குற்றம் சாட்டும் பின்வரும் வசனப் பகுதிகளைப் பற்றி நான் சிந்திக்கச் செய்தது:

- *''கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்!" (4:4).*
- *"எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்" (2:16).*
- *"... ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்" (4:11).*

இந்தப் புத்தகத்தைப் படித்தல் என்பது எனக்கு ஒரு அறைகூவலாக இருக்கும் - ஒருவேளை உங்களுக்கும் அப்படியே இருக்கும். இருப்பினும் நான், இந்தப் புத்தகம் எச்சரிக்கை விடுக்கும் அறைகூவல்களுடன் ஆச்சரியமான ஆறுதலும் கலந்ததாக இருக்கும் என்று எதிர்நோக்குகிறேன். "சந்தோஷம் நிறைந்த கிறிஸ்தவம்" பற்றிப் படித்தல் என்பது மன எழுச்சி நிறைந்ததாக இருக்க வேண்டும்!

குறிப்புகள்

[1]ஒரு வகுப்பறை அமைவில் நீங்கள் இந்த வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்கள் ஒவ்வொன்றிற்கும் பதிலுரைகளைக் கூறும்படி மாணவர்களைக் அழைக்கலாம். எடுத்துக்காட்டாக, முதல் வார்த்தையை வாசித்தபின் நீங்கள், வகுப்பில் இருப்பவர்கள் பவுலைப் பற்றி அறிந்துள்ளது என்ன என்பதைப் பகிர்ந்து கொள்ளும்படி கேட்கலாம். [2]பல்வேறு நகரங்களை நீங்கள் குறிப்பிடுகையில், வேதாகம இடங்களின் வரைபடத்தில் அவை இருக்கும் இடத்தைச் சுட்டிகாண்பிக்க நீங்கள் விரும்பலாம். இதற்காக ஒரு வரைபடம் இந்தப் புத்தகத்தில் தரப்பட்டுள்ளது. [3]Avon Malone, *The Book of Philippians* (West Monroe, La.: International Video Bible Lessons, n.d.), 1. [4]Pliny, quoted in Lewis Copeland, *Popular Quotations for All Uses*, rev. ed. (Garden City, N.Y.: Dolphin Books, Doubleday & Co., 1961), 228. *[5]அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தை எழுதிய லூக்கா, அப்புத்தகத்தில் இவ்விடம் தொடங்கி, படர்க்கைப் பெயரிலிருந்து ("அவர்கள்"; 16:8 ஐக் கவனிக்கவும்) தன்மைப் பெயருக்கு ("நாங்கள்"; 16:10, 11 ஐக் கவனிக்கவும்) தமது எடுத்துரைப்பை மாற்றியதால், லூக்கா இந்தக் குழுவினருடன் துரோவா நகரில் சேர்ந்து கொண்டார் என்று நாம் அறிகிறோம். [6]பவுல் பிலிப்பி நகரை விட்டு சென்ற பின்பு, லூக்கா தமது எடுத்துரைப்பில் மீண்டுமாகப் படர்க்கைக்குத் ("அவன்," "அவர்கள்") திரும்பியதால், நாம் இந்த முடிவிற்கு வருகிறோம் (கவனிக்கவும் நடபடிகள் 17:1). பவுல் பிலிப்பி நகர் வழியே மறுபடி திரும்பி வரும்வரையிலும், லூக்கா தன்மைப் பெயர்களை ("எங்களுடைய," "நாங்கள்") பயன்படுத்தவில்லை (கவனிக்கவும் நடபடிகள் 20:6).* [7]Gerald F. Hawthorne,

Word Biblical Commentary, vol. 43, *Philippians*, ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), xlviii. [8]G. Campbell Morgan, *Living Messages of the Books of the Bible (*Grand Rapids, Mich.: Baker Book House, 1982), 229. [9]Malone. [10]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 63.

[11]Charles R. Erdman, *The Epistle of Paul to the Philippians* (Grand Rapids, Mich.: Baker Book House, 1983), 9. [12]*இப்படிப்பட்ட எண்ணப்போக்கிற்காகக் கடினமாகப் பிரயாசப்படுதலில் மதிப்பு இருக்கையில், இந்தத் தலைப்பின்மீது எழுதப்பட்டுள்ளவற்றில் அதிகமானவை மேம்போக்கானவையும் சுயத்தை மையமாகக் கொண்டவையுமாக உள்ளது. சுயநிறைவு என்பதன் மீதே அடிக்கடி வலியுறுத்தம் இருந்துள்ளது. கிறிஸ்தவர் சுயநிறைவு கொண்டவராக அல்ல ஆனால் தேவனில் நிறைவு கொண்டவராக இருக்கிறார்.* [13]*"கிறிஸ்து" என்பது எபிரெய மொழியில் "மேசியா" என்பதற்குக் சமமான கிரேக்க வார்த்தையாகும். இவ்விரு வார்த்தைகளுமே "அபிஷேகம் பண்ணப் பட்டவர்" என்று அர்த்தப்படுகின்றன. இந்தச் சொற்றொடர் அரசர்களைக் குறிக்க, யூதர்களால் முதன்மையாகப் பயன்படுத்தப்பட்டது. "இயேசு" என்பது எபிரெய மொழியில், "யெகோஷ்வா" என்பதன் சுருக்கப் பெயரான "யோசுவா" என்பதற்குச் சமமான கிரேக்க வார்த்தையாகும், இது "யெகோவா இரட்சிக்கிறார்" என்று அர்த்தப்படுகிறது. "கர்த்தர்" என்பது "ஆண்டவர்," "ஆட்சியாளர்" அல்லது "எஜமானர்" என்று அர்த்தப்படுகிற kurios என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* [14]*கிறிஸ்துவுடனான நமது உறவை வலியுறுத்த, பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்திலிருந்து கூடுதல் வசனப் பகுதிகள் மேற்கோள் காண்பிக்கப்பட முடியும். நாம் "அவருக்குள்," "அவருடையவர்களாக" மற்றும் "அவருடன்" இருக்கும்படி கூறப்பட்டுள்ளோம்; மேலும் நாம் "அவர் சார்பாக" விஷயங்களைச் செய்கிறோம். நீங்கள் இந்த நிருபத்தை வாசிக்கையில் இவ்வகையான சொற்றொடர்களைத் தேடக் கண்ணோக்குங்கள்.* [15]*2:1ல்* NIV *வேதாகமம் "கிறிஸ்துவுக்குள்" என்பதை "கிறிஸ்துவுக்குள் ஐக்கியப்பட்டிருத்தல்" என்று மொழிபெயர்த்துள்ளது.* CJB *வேதாகமம் "கிறிஸ்துவுக்குள்" என்பதை "மேசி யாவுடன் ஐக்கியமாயிருத்தல்" என்று சீராக மொழிபெயர்த்துள்ளது.*

2

விலங்கிடப்பட்டிருக்கையில் மகிழ்ச்சியாக இருப்பது எவ்வாறு

(பிலிப்பியர் 1:3-11)

பவுல் ரோமாபுரியில் விலங்கிடப்பட்டுச் சிறைப்படுத்தப்பட்டிருந்தார் (1:13; 4:22; காண்க எபேசியர் 6:20). அவர் தமது நேரத்தைச் சுய பச்சாதாபத்திலும் முறையிடுதலிலும் செலவிட்டிருக்க முடிந்திருக்கும். அதற்குப் பதிலாக அவர் சந்தோஷம் அடைந்து அதையே செய்யும்படி மற்றவர்களையும் ஊக்கப்படுத்தினார்: "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்" (4:4). நீங்களும் நானும் உடல்ரீதியாகக் கட்டிவைக்கப் பட்டிராதிருக்கலாம். ஆனால் நம்மில் பெரும்பான்மையானவர்கள் வெவ்வேறு அளவுகளிலும் நீளங்களிலும் "சங்கிலிகளை" அணிந்து கொண்டிருக்கிறோம்:

- *உடல்நலக் கோளாறு அல்லது தீவிரமான மருத்துவப் பிரச்சனை.*
- *மகிழ்வற்ற திருமண வாழ்வு அல்லது நமது இருதயங்களை உடைக்கிற பிள்ளைகள்*
- *பணி தொடர்பான மன இறுக்கங்கள்.*
- *வயதான பெற்றோர்.[1]*

இந்த அப்போஸ்தலர் விலங்கிடப்பட்டிருக்கையில் எவ்வாறு சந்தோஷமாயிருக்க முடியும்? நமது விலங்கிடப்படுதல்களில் நாம் எவ்வாறு சந்தோஷமாயிருக்க முடியும்? இதை இந்தப் பாடத்திற்கான நமது வேதவசனப் பகுதியான பிலிப்பியர் 1:3-11 வசனப் பகுதி கூறுகிறது.

கடந்த காலத்தைத் தேவனுக்கு நன்றி செலுத்துதலுடன் கண்ணோக்குங்கள்[2] (1:3-5)

அன்று

முதலாவது பவுல், கடந்த காலத்தை நன்றி செலுத்துதலுடன் கண்ணோக்கியபோது, விலங்கிடப்பட்டிருத்தலில் அவரால் சந்தோஷமாக இருக்க முடிந்தது. பவுலின் வாழ்வு பற்றித் தரமான நாள்வரிசை குறிப்புகள் சரியானவைகளாக உள்ளன என்றால், அவர் பத்து ஆண்டுகள் காலமாகப்

பிலிப்பி நகரின் சபையுடன் இணைவு கொண்டிருந்தார் என்றாகிறது. அந்த இணைவின் பாசமிக்க நினைவுகளை மாத்திரமே அவர் கொண்டிருந்தார். 6ம் வசனத்தில் அவர், "நான் உங்களை நினைக்கிற *பொழுதெல்லாம்* என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" என்று கூறினார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது). 4ல் வசனத்தில் அவர்கள் "அனைவருக்காகவும்" தாம் எப்போதும் "சந்தோஷத்தோடே" ஜெபங்களை ஏறெடுத்ததாக அவர் எழுதினார்.[3] "எல்லா" என்ற வார்த்தை இருமுறை பயன்படுத்தப்படுதலானது (தமிழ் வேதாகமத்தில் இது "ஒவ்வொரு" மற்றும் "அனைவருக்காகவும்" என்றுள்ளது) இவ்வசனங்களைத் திகைப்புக்கு உரியதாக்குகிறது! அவைகள் சுய ஆய்வு செய்யும்படி நம்மையும் எழுப்புகின்றன. நாம் உறுப்பினர்களாக இருக்கும் சபைக்குழுமங்கள் பற்றிய விஷயம் என்ன? நம்மைப் பற்றி மற்றவர்கள், "உங்களைப் பற்றி நினைக்கும்போது, நாங்கள் நல்ல நினைவுகளைத் தவிர வேறு எதையும் கொண்டிருப்பதில்லை" என்று கூறுவார்களா? தனிநபர்கள் என்ற வகையில் நம்மைப் பற்றிய விஷயம் என்ன? பிரசங்கியார்கள், "நான் உங்களைப் பற்றி நினைவுகூருகிற எல்லாவற்றிற்காகவும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" என்று நம்மைப் பற்றிக் கூறக்கூடுமா?

இது, பிலிப்பி நகரத்தில் பவுல் இருந்தபோது, அவருக்கு நல்ல விஷயங்கள் மாத்திரமே நடந்தன என்று அர்த்தப்படுகிறா? அல்லது பிலிப்பி நகரில் இருந்த சபை பூரணப்பட்டதாக இருந்தது என்று அர்த்தப்படுகிறதா? இல்லவே இல்லை. இந்த அப்போஸ்தலர் "பிலிப்பிபட்டணத்திலே பாடுபட்டு நிந்தையடைந்திருந்து" இருந்தார் (1 தெசேலானிக்கேயர் 2:2; நடபடிகள் 16:16-24, 35-40). மேலும், பிலிப்பி நகரில் இருந்த சபையில் பிரச்சனைகள் இல்லாமல் இருக்கவில்லை (காண்க - 4:2).[4] எனவே பவுல், அவர்களைப் பற்றி தமது நினைவுகள் *யாவும்* நல்லவையாக இருந்தன என்று கூறிய போது, அவர் எதை அர்த்தப்படுத்தினார்?

ஒருவேளை அவர், பிலிப்பி நகரில் நடந்த மகிழ்ச்சியற்ற நிகழ்ச்சிகளைப் பின்னோக்கிப் பார்த்த போது, அவற்றில் இருந்து வெளிவந்த நன்மையை அவர் கண்டிருக்கலாம் (காண்க ரோமர் 8:28). அவர் தவறாகச் சிறையில் அடைக்கப்பட்டது, சிறைச்சாலைக்காரரும் அவரது வீட்டாரும் மனமாறியதை விளைவித்தது (நடபடிகள் 16:16-34). அவர் நகரத்தை விட்டு வெளியேறும்படி நிர்ப்பந்திக்கப் பட்டது, மற்ற இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தலை விளைவித்திருந்தது (காண்க நடபடிகள் 16:39, 40; 17:1).

பவுலின் மகிழ்ச்சியான நினைவுகள் பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் மீது கவனம் குவிக்கப்பட்டிருந்தது. அவற்றைக் குறித்தும்கூட, அவர் நல்லதாக இருந்த "தேர்ந்தெடுத்த நினைவை" கொண்டிருந்தார் (காண்க 4:8). அவரது ஊழியத்தை அவர்கள் உண்மையாகத் தாங்கிய வழிமுறை என்பது நல்ல நினைவுகளில் ஒன்றாக இருந்தது: "சுவிசேஷம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள் முதல் இதுவரைக்கும் [அவர்கள்] அதற்கு உடன்பட்டவர்களானபடியால்" அவர் தேவனை ஸ்தோத்திரித்தார் (1:3).[5] "உடன்பட்டவர்களாகுதல்" என்பது *koinonia* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தை பவுலுக்கு முக்கியமானதாக இருந்தது. இது தனது பல்வேறு வடிவங்களில் இந்தச் சிறிய நிருபத்தில் ஐந்து முறைகள் காணப்படுகிறது. 1:3ல் இது "உடன்பட்டவர்களாகுதல்" என்றும்; 1:7ல் "பங்குள்ளவர்கள்" என்றும்; 2:1 மற்றும் 3:10ல் "ஐக்கியம்" என்றும்; மற்றும் 4:15ல் "உடன்படுதல்"

என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த வினைச்சொல் வடிவமானது அடிப்படையில், "பொதுவில் கொண்டிருத்தல்" என்று அர்த்தப்படுகிறது[6]. பெயர்ச்சொல் வடிவமானது "ஐக்கியம்" மற்றும் "கூட்டாளித்துவம்" என்ற கருத்துக்களைத் தெரிவிக்கிறது.[7] இவ்வார்த்தை, பங்கு பெறுதல் மற்றும் இணைப் பங்கேற்புத்துவம் என்பவற்றின் கருத்துக்களைத் தழுவி நிற்கிறது. இது சமூக, நெருக்கமான மற்றும் கூட்டுறவான கருத்தைச் சொல்விளக்கப்படுத்துகிறது.

பிலிப்பியர்கள் பவுலின் ஊழியத்தை, அவருக்காக ஜெபித்தல் உட்பட, பலவழிகளில் தாங்கினர் (1:19). இருப்பினும் அவர் பிலிப்பியர்கள் "சுவிசேஷத்தில் உடன்பட்டனர்" என்பது பற்றிப் பேசியபோது, அவர்களின் நிதி உதவிக்காக அவர் விசேஷமாய் நன்றிசெலுத்தினர். நிதி உதவியைப் பற்றிப் பவுல் பேசியபோது, சிலவேளைகளில் அவர் "கொடுத்தல்" என்பது போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினார் (காண்க 4:15), ஆனால் "ஐக்கியம்" போன்ற வார்த்தைகளுக்கு அவர் முன்னுரிமை விருப்பம் அளித்தார். கொடுத்தல் பற்றிய அவரது நீண்ட உரையாடலில் (2 கொரிந்தியர் 8; 9), அவர் "தயவு" (கொடை), "பங்கேற்றல்" (ஐக்கியம்) மற்றும் "உதவி" என்பவை போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினார் (காண்க 2 கொரிந்தியர் 8:4).

பிலிப்பியர்கள் தங்கள் பொதுவான விசுவாசத்தினால், தாங்கள் கொண்டிருந்தவற்றைப் பவுலுடன் பகிர்ந்து கொண்டனர். 4ம் அதிகாரத்தில் இந்த அப்போஸ்தலர், "மேலும், பிலிப்பியரே, சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே நான் மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்டபோது, கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள்மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை என்று நீங்கள்அறிந்திருக்கிறீர்கள். நான் தெசலோனிக்கேயிலிருந்தபோதும். என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள்" என்று எழுதினார் (4:15, 16). லீதியாள், பவுலுக்கும் அவரது உடன் ஊழியர்களுக்கும் தனது இல்லத்தை திறந்தபோது, பவுலுடன் அவர்களின் பகிர்ந்து கொள்ளுதல் தொடங்கியிருந்தது. அது எப்பாப்பிராதீத்துவினால் ரோமாபுரிக்குக் கொண்டவரப்பட்ட அவர்களின் சமீபத்திய நன்கொடை வரையிலும் தொடர்ந்தது (4:10, 18).

முன்னாள் [வெளிநாடு சென்று] ஊழியம் செய்தவன் என்ற வகையில் நான், பிலிப்பியர்களின் உதவி பற்றிப் பவுலின் வார்த்தைகளை விரும்புகிறேன்: "சுவிசேஷத்திற்கு உடன்படுதல்" ["ஐக்கியம்": KJV]. எனது குடும்பத்தினர் ஆஸ்திரேலியாவில் வாழ்ந்தபோது, நாங்கள் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் ஒருமுறை விடுமுறைக்காக அமெரிக்காவுக்குத் திரும்பிச் செல்வது உண்டு. எங்களது ஊழியத்திற்கு நிதி உதவி அளித்த சபைக்குழுமங்களுக்கு நான் செல்லுவேன்: எங்களது ஊழியத்தில் அவர்களின் "ஐக்கியத்திற்காக" அவர்களுக்கு நான் நன்றி செலுத்தி, அவர்கள் உதவியை அனுப்பிய போது, அவர்கள் எங்கள் ஊழியத்தில் பங்கேற்றனர் என்பதை அவர்களுக்குத் தெளிவாக்குவேன்.

இன்று

பவுல் கடந்த காலத்தைத் தேவனுக்கு நன்றி செலுத்துதலுடன் கண்ணோக்கியதால், அவர் விலங்கிடப் பட்டிருக்கையில் அவரால் சந்தோஷமாக இருக்க முடிந்தது. நீங்களும் நானும், நமது வாழ்வில் நடந்துள்ள மற்றும் ஆண்களும் பெண்களும் கசப்புணர்வு கொள்வதில் முடிந்த மோசமான

விஷயங்கள் மீது கவனம் குவிக்க முடியும் - அல்லது நாம் நல்ல விஷயங்களை நினைத்துக் கர்த்தருக்கு நன்றி செலுத்தி சந்தோஷமாக இருக்கமுடியும். *சந்தோஷம் என்பது விருப்பத் தேர்வாக உள்ளது* என்று தலைப்பிடப்பட்ட ஒரு புத்தகத்தை நான் வைத்திருக்கிறேன்.[8] சிலர், இந்தத் தலைப்பு சற்றே மிகைப் படுத்தப்பட்ட கூற்றாக உள்ளது என்று நினைக்கலாம், ஆனால் நாம் சந்தோஷமாக இருக்கிறோமா இல்லையா என்பது, வாழ்வை நாம் கண்ணோக்கும் வழிமுறையையே பெரிதும் சார்ந்துள்ளது என்பது உண்மையாகவே உள்ளது. எல்லா வீலர் வில்காக்ஸ் என்பவர் இதை "கப்பல் பாய்களின் அமைவு" என்று அழைத்தார்:

ஒரே விதமான காற்று வீசும் கடலில் ஒரு கப்பல் கிழக்கிலும் இன்னொன்று
மேற்கிலும் பயணம் செய்கிறது.
பலத்த காற்றல்ல ஆனால் கப்பல் பாய்களின் அமைவே
எவ்வழியே நாம் செல்கிறோம் என்று
நமக்குக் கூறுகிறது.

கடலின் காற்றுப்போல விதியின் வழிகள் உள்ளன:
நாம் வாழ்வினூடே கடற்பயணம் செல்லுகையில்
அமைதியோ அல்லது கலகமோ அல்ல
ஆனால் ஆத்துமாவின் அமைவுதான்
இலக்கைத் தீர்மானிக்கிறது.[9]

தேவன்மீதான உறுதியான நம்பிக்கையுடன் நிகழ்காலத்தைக் கண்ணோக்குங்கள் (1:6-8)

அன்று

பிலிப்பி நகரத்தில் இருந்த கிறிஸ்தவர்களைப் பற்றிப் பவுல் நினைத்தபோது, அவருக்குள் உணர்வு எழுச்சி பெருக்கெடுத்து ஓடியது. அன்பு என்பது ஒரு உணர்வெழுச்சியாக இருந்தது. அவர்களிடத்தில் அவர், "உங்களை என் இருதயத்தில் தரித்துக்கொண்டிருக்கி[றேன்]" என்று கூறினார் (வசனம் 7). வார்ரென் W. வயர்ஸ்ப் என்பவர் அந்தச் சொற்றொடரைப் பற்றி எடுத்துரைக்கப் பழைய ஏற்பாட்டு உதாரணம் ஒன்றைக் கருத்தாகத் தெரிவித்தார்:

> பழைய ஏற்பாட்டு ஆசாரியர்கள், ஏபோத்து என்ற விசேஷித்த உடையொன்றைத் தங்கள் இருதயப் பகுதிக்கு மேலாக அணிந்தனர். அதின் மீது, இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களின் பெயர்கள், ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு கல்லில் என்ற வகையில், பொறிக்கப்பட்ட பன்னிரெண்டு கற்கள் இருந்தன ([யாத்திராகமம்] 28:15-29). அவர் தமது இருதயத்தில் மக்களை அன்பினால் சுமந்தார், அதுபோன்றே பவுலும் செய்தார்.[10]

மேலும் பவுல், "இயேசுகிறிஸ்துவின் உருக்கமான அன்பிலே உங்களெல்லார்மேலும் எவ்வளவோ வாஞ்சையாயிருக்கிறேன் என்பதற்கு தேவனே எனக்குச் சாட்சி" என்றும் எழுதினார் (வசனம் 8).

"உருக்கமான அன்பிலே" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள ("bowels" என்ற) கிரேக்க வார்த்தையானது உள்ளான உறுப்புகள் என்பதற்கான "viscera" என்ற வார்த்தையின் கூட்டுச் சொற்றொடராக உள்ளது.[11] அந்த நாட்களில் இந்த உறுப்புகள் உருக்கமான அன்பின் அமர்விடம் என்று கருதப்பட்டன.[12] பவுல் அவர்களுக்காக "உருக்கமான அன்புடன்" ஏங்கியதாக கூறியபோது, அவர் தமது உணர்வெழுச்சியின் ஆழத்தையும் பலத்தையும் வெளிப்படுத்தினார். இன்றைய நாட்களில் நாம் "நான் என் முழு இருதயத்துடன் உனக்காக ஏங்குகிறேன்" என்று கூறுவோம். இருப்பினும் "உருக்கமான அன்பு" என்ற வார்த்தையைக் காட்டிலும் அதை தகுதிப்படுத்தும் "கிறிஸ்து இயேசுவின்" என்ற வார்த்தைகள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. கர்த்தரைப் பண்புபடுத்தும் அன்பைக் கொண்டு அப்போஸ்தலர் அவர்கள் மீது அன்பு காண்பித்தார்![13] இது ஒரு சிறு உரிமைகோருதலாக இருப்பதில்லை - ஆனால் அவர், தேவனைத் தமது சாட்சியாக அழைத்த வகையில் அது உண்மையாக இருந்தது என்று மிகவும் நிச்சயமாயிருந்தார்.

பவுல் தமது சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுக்கு நினைவூட்டியபடி, அவர் *நம்பிக்கையால்* நிரப்பப்பட்டவராகவும் இருந்தார். 5ம் வசனத்தில், "என்று நம்பி" என்றுள்ளது. நம்பிக்கை என்பது நமது பாடத்தில் நான் வலியுறுத்த விரும்பும் இரண்டாவது காரணியாக உள்ளது: பவுல் நிகழ்காலத்தை நம்பிக்கையுடன் கண்ணோக்க முடிந்ததால், அவர் விலங்கிடப் பட்டிருக்கையிலும் சந்தோஷமாக இருந்தார் ...

நான் அந்தக் கூற்றை முடிக்கும் முன்னர், "நம்பிக்கை" என்பது பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூறுவது அவசியமாகிறது. "நம்பிக்கை" என்பதன் ஆய்வுக்கருத்து இந்த நிருபம் முழுவதிலும் பரவி ஓடுகிறது. நிச்சயமற்ற தன்மை நிரம்பியுள்ள உலகத்தில், இந்த ஆய்வுக்கருத்து புத்துணர்ச்சி தருவதாக உள்ளது. "நம்பிக்கை" என்பதற்கான கிரேக்க வார்த்தையின் பல்வேரு வடிவங்கள் இந்தப் புத்தகத்தில் குறைந்தது ஐந்து முறைகள் காணப்படுகின்றன: 1:5ல் "confident" (நம்பி) என்ற ஆங்கில வார்த்தையும்; 1:14ல் "trusting" (திடன்கொண்டு) என்ற வார்த்தையும்; 1:25ல் "convinced" (நிச்சயத்தை) என்ற வார்த்தையும்; 3:4ல் "confidence" (நம்பிக்கை) என்ற வார்த்தை (இருமுறை)யும் பயன்படுத்தப்பட்டுள்ளன. நம்பிக்கை என்ற வார்த்தை குறித்து, சரியான தராசைக் கண்டறிதல் சிரமமானதாக உள்ளது. மிக அதிகமாக நம்பிக்கை உடையவர்கள், வெறுப்பு உண்டாக்குபவர்களாகவும் பிறரைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வன்முறையாகக் கொண்டுவருபவராகவும் இருக்கலாம். இதற்கு மறுபுறத்தில், நம்பிக்கை குறைவு உள்ளவர்கள் தமக்குத் தாமே மிக மோசமான விரோதியாகின்றார்.

இப்போது எனது கூற்றை முடிக்க என்னை அனுமதியுங்கள்: பவுல், தேவன் *மீது* நம்பிக்கை கொண்டு நிகழ்காலத்தைக் கண்ணோக்க முடிந்ததால், அவர் விலங்கிடப் பட்டிருக்கையிலும் சந்தோஷமாக இருந்தார். அவர் கொண்டிருந்த *சுயநம்பிக்கையைப்* பார்க்கிலும், அவர் *தேவன் மீது* கொண்டிருந்த நம்பிக்கை பெரிதாக இருந்தது. தேவன் யாராக இருக்கிறார் என்பதே பவுல் நம்பிக்கையினால் நிரப்பப்பட முதன்மைக் காரணமாக இருந்தது: அவர் [தேவன்] நமக்குள் கிரியை செய்கிறார். பவுல், "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி"

என்று கூறினார். இதில் அவர் எதைக் குறித்து நம்பிக்கையாக இருந்தார் என்று கூறினார்: "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று." அடுத்த அதிகாரத்தில் இந்த அப்போஸ்தலர், "ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" என்று எழுதினார் (2:13). கிறிஸ்தவர்களுக்குள் தேவன் பல வகையில் கிரியை செய்கிறார்: அவர் தமது வசனத்தின் மூலமாக நமக்குள் கிரியை செய்கிறார் (காண்க எபிரெயர் 4:12). அவர் நமது வாழ்வில் நடக்கும் நிகழ்ச்சிகள் மூலமாக நமக்குள் கிரியை செய்கிறார் (காண்க யாக்கோபு 1:2, 3; ரோமர் 5:3-5). அவர் மக்கள் மூலமாக நமக்குள் கிரியை செய்கிறார் (காண்க 2 கொரிந்தியர் 7:6). அவர் உள்ளாக வாசம்பண்ணும் தமது ஆவியானவரின் மூலமாக நமக்குள் கிரியை செய்கிறார், இது ஞானஸ்நானத்தின் போது எல்லா கிறிஸ்தவர்களும் பெற்றுக்கொள்ளுகிற *அற்புதமற்ற* கொடையாக உள்ளது (நடபடிகள் 2:38; காண்க ரோமர் 8:9, 26-28).

பவுல், பிலிப்பி நகரில் தேவன் கிரியை செய்ததைக் கண்டிருந்தார், மற்றும் அங்கு நிறைவேற்றப் பட்டிருந்த ஒவ்வொரு நற்செயலுக்காகவும் கர்த்தர் துதிக்கப் பாத்திரராக இருந்தார் என்று அவர் நம்பினார். 5ம் வசனத்தில் அவர், பிலிப்பி நகரில் தேவன் சபையின் தொடக்கத்திற்காகத் தேவனுக்குப் புகழ்ச்சியை உரித்தாக்கினார்: "உங்களின் நற்கிரியையைத் தொடங்கினவர்." மேலும் அவர், தேவன் தொடங்கியதை அவர் முடித்து வைப்பார் என்று நம்பினார்: "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர்." மேலும் அவர், "தேவன் தெடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி," "முடிய" என்பது "முடிவு வரையிலும் நடத்துதல்" என்று அர்த்தப்படும் கிரேக்கக் கூட்டு வினைச்சொல்லாகும்.[14] "இயேசு கிறிஸ்துவின் நாள்" என்பது கர்த்தரின் இரண்டாம் வருகையைக் குறிக்கிறது (காண்க 1 தெசலோனிக்கேயர் 5:2). அந்த விசேஷித்த நாளைப்பற்றிப் பவுல், பிலிப்பியர் 3:20, 21ல் மீண்டும் குறிப்பிட்டார். உலகம் அழிந்து போகும் வரையிலும், தேவன் பிலிப்பியர்களின் (மற்றும் பிற கிறிஸ்தவர்களின்) வாழ்வில் தேவன் தொடர்ந்து கிரியை செய்வார், அவர்களில் தமது நோக்கத்தை நிறைவேற்றுவார் என்று அப்போஸ்தலர் நம்பினார்.

தேவன் தமது கிரியையை நிறைவேற்றுவார் என்று பவுல் பேசியபோது, கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் விழுந்துபோக இயலாது என்று மறைமுகமாக உணர்த்த அவர் நோக்கங்கொண்டிருக்கவில்லை என்பதை நான் இவ்விடத்தில் கூடுதலாகக் கூறவேண்டியிருக்கலாம். அந்தப் பாடக் கருத்தைப் பற்றி நாம் 3ம் அதிகாரத்தைப் படிக்கையில் இன்னும் அதிகமாக கலந்துரையாடுவோம். இருப்பினும் நாம் விழுந்து *போகாதிருக்கும்படிப்* பவுல் நமக்கு பலமான ஊக்குவிப்பைக் கொடுக்கிறார்: தேவன் நம்மைப் பற்றி அக்கறையாயிருந்து நமது வாழ்வில் செயல்படுபவராக இருக்கிறார்!

பவுலினால் வெளிப்படுத்தப்பட்ட நம்பிக்கையானது, தேவன் யாராக இருந்தார் (மற்றும் இருக்கிறார்) என்பதை முதன்மையான காரணமாகக் கொண்டிருந்தது, ஆனால் அவரது நம்பிக்கையானது, பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் யாராக இருந்தனர் என்பதைக் கொண்டு பலப்படுத்தப்பட்டது: தேவன் கிரியை *செய்யக்கூடிய* வகையிலான மக்களாக இருந்தனர். தேவன், தாம் கிரியை செய்வதற்குப் பூரணமாக மக்கள் வேண்டும் என்று

கண்ணோக்குவதில்லை; அவர் அப்படிச் செய்தார் என்றால், அவர் எக்காலத்திலும் எவர் ஒருவருக்குள்ளும் கிரியை செய்ய முடியாது.[15] மாறாக அவர். தங்கள் வாழ்வில் தம்மைக் கிரியை செய்ய *அனுமதிப்பவர்கள்* யார் என்று கண்ணோக்கித் தேடுகிறார். தேவன் பிலிப்பியர்களுக்குள் தமது நற்கிரியையை நிறைவாக்குவார் என்ற தமது நம்பிக்கையைப் பவுல் வெளிப்படுத்திய பின்பு (1:5), அவர் "என் கட்டுகளிலும், நான் சுவிசேஷத்திற்காக உத்தரவுசொல்லி அதைத் திடப்படுத்திவருகிறதிலும், நீங்கள் அனைவரும் எனக்கு அளிக்கப்பட்ட கிருபையில் பங்குள்ளவர்களானதால், உங்களை என் இருதயத்தில் தரித்துக்கொண்டிருக்கிறபடியினாலே, உங்களெல்லாரையுங்குறித்து நான் இப்படி நினைக்கிறது எனக்குத் தகுதியாயிருக்கிறது" என்று கூறினார் (வசனம் 7).

பிலிப்பி நகரத்தில் இருந்த கிறிஸ்தவர்களின் வாழ்வில் கிரியை செய்யும்படி தேவனை அனுமதித்த பண்புகள் யாவை? மீண்டும் பவுல் *koinonia* ("partaker") ["பங்குள்ளவர்"] என்ற வார்த்தையைப் பயன்படுத்தி தமது வாசகர்கள் "பொதுவில்" கொண்டிருக்கும் மூன்று விஷயங்களை குறிப்பிட்டார்: அவரைப் பொறுத்தமட்டிலும், சுவிசேஷத்தைப் பொறுத்தமட்டிலும் மற்றும் கிருபையை பொறுத்த மட்டிலும் அவர்களின் ஐக்கியம் (வசனம் 7).

- பவுலுடன் அவர்களின் ஐக்கியத்தைத் பொறுத்தமட்டில், அவர் சிறையில் அடைக்கப்பட்டபோது, மற்றவர்களைப் போல் அவர்கள் தங்கள் முதுகுகளை அவருக்குக் காண்பிக்கவில்லை (காண்க -1:15, 16; 2 தீமோத்தேயு 1:8; 4:16). அவர்கள் அவருக்கு உதவி செய்ய அணிவகுக்கத் தொடர்ந்தனர்.
- சுவிசேஷத்துடன் அவர்களின் ஐக்கியத்தைப் பொறுத்தமட்டில், அது தாக்கப்பட்ட போது அதை அவர்கள் தற்காத்து உறுதிப்படுத்தினர். 7ம் வசனத்தில் (ஆங்கில வேதாகமத்தில்) உள்ள "defense" "தற்காத்தல்" என்ற வார்த்தையில் இருந்தே நாம் "apologetics" "தற்காப்பு வாதம் செய்தல்" என்ற வார்த்தையைப் பெறுகிறோம்.[16] இது "வாய்மொழியில் தற்காத்தல்"[17] என்பதாகவும் மறுப்புகளுக்குப் பதில் அளிக்கும் பணிப்பொறுப்பை உள்ளடக்குவதாகவும் இருக்கிறது. "திடப்படுத்தி" என்பது சுவிசேஷத்திற்காக உத்தரவு சொல்லுதலின் அதிக நேர்மறையான பகுதியாக உள்ளது: இது விசுவாசத்தில் நிலைத்திருக்கச் செய்யும் வகையில் போதித்தல் மற்றும் புத்திகூறுதல் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது (காண்க நடபடிகள் 14:21, 22).
- கிருபையுடன் அவர்களின் ஐக்கியத்தைப் பொறுத்தமட்டில், பவுல் தமது நிலை மற்றும் தாம் செய்த எல்லாவற்றையும் சுற்றிச் சூழச்செய்யும் வகையில் "கிருபை" (தகுதியற்று இருந்தும் தரப்படும் தயவு) என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார் (காண்க ரோமர் 1:5). அவர் கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருந்தார், அவர் தமது அப்போஸ்தலத்துவத்தைக் கிருபையினால் பெற்றுக் கொண்டிருந்தார், மற்றும் அவர் தேவனுடைய கிருபையினால் ஊழியம் செய்தார். பிலிப்பியர்கள் பவுலுக்கும் சுவிசேஷத்திற்கும் ஆதரவு அளித்தபோது, அவர்கள் இந்த கிருபைக்குப் "பங்குள்ளவர்கள்" ஆயினர்.

பிலிப்பியர்கள் மீது பவுல் நம்பிக்கை வைக்கக் கூடியவராக இருந்தது நல்லதாக உள்ளது. ஒருவேளை நீங்கள், இன்னொரு நபர் மீது கொண்டுள்ள நம்பிக்கையை இழந்து போகுதல் என்பது இருதயத்தை எவ்வளவாக உடையச் செய்யும் என்பதை அறிந்திருக்கலாம். இருப்பினும், பவுல் விலங்கிடப்பட்டிருக்கையிலும் அவரால் எவ்வாறு சந்தோஷமாக இருக்க முடிந்தது என்பதற்கான இரண்டாவது காரணத்தை நாம் [படித்து] முடிக்கையில், அந்த நம்பிக்கைக்கான அவரது முதன்மைக் காரணத்திற்கு நாம் திரும்புதல் அவசியமாக உள்ளது: அவர் *தேவன் மீது* நம்பிக்கை கொண்டவராக - அதாவது தமது வாழ்விலும் மற்ற கிறிஸ்தவர்களின் வாழ்விலும் தேவன் தொடர்ந்து கிரியை செய்வார் என்ற நம்பிக்கை கொண்டவராக - இருந்தார்.

இன்று

வாழ்வில் நமக்கு விடப்படும் அறைகூவல்கள் என்னவாக இருப்பினும், நாம் தேவனுக்கு உண்மைநிறைந்த பிள்ளைகளாக இருந்தால், அந்த அறைகூவல்களை நாம் தன்னந்தனியே எதிர்கொள்வதில்லை என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளுதல் அவசியமாக உள்ளது. நமது வாழ்வில் தேவன் இன்னமும் ஜீவனுள்ளவராகவும் செயல்படுபவராகவும் இருக்கிறார்.[18] பவுல் கர்த்தரை "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவர்" என்று விவரித்தார் (எபேசியர் 3:20). தேவன் தொடங்கியதை அவர் முடித்து வைப்பார் என்பதையும் நாம் நினைவில் வைத்தல் அவசியமாக உள்ளது. அவர் "ஒரு வேலையைப் பாதியில் விட்டுச் செல்லுபவராக" இருப்பதில்லை.

நமது பிரச்சனைகள் உட்பட, நமது வாழ்வைக் கர்த்தரிடமாய்த் திருப்புதல் என்பது சந்தோஷத்தின் "இரகசியங்களில்" ஒன்றாக உள்ளது. ஒரு காலத்தில், இரவும் பகலுமாகத் தனது வர்த்தகத்தைக் குறித்து மன அலைக்கழிப்பைக் கொண்டிருந்த ஒரு மனிதர் இருந்தார், ஒரு நாள் அவர் அதைத் தேவனிடத்தில் திருப்ப முடிவுசெய்தார். "இது உம்முடையது" என்ற அவர் கர்த்தரிடத்தில் கூறினார். கடைசியில் அவர் மனதில் சமாதானத்தைப் பெற்றார் மற்றும் இரவில் அவரால் உறங்க முடிந்தது. பின்பு ஒருநாள் மாலை வேளையில், அவரது வர்த்தகம் நடைபெறும் இடத்தில் தீப்பற்றிக் கொண்டது என்று கூறிய தொலைபேசி அழைப்பினால் அவர் எழுப்பப்பட்டார். அவர் அந்த இடத்திற்குச் சென்று அந்தக் கட்டிடம் எரிவதை அமைதியாகக் கவனித்தார். அருகில் இருந்தவர்கள் திகைத்துப் போயினர். அவரிடத்தில் அவர்கள், "உங்களால் எப்படி இவ்வளவு அமைதியாக இருக்க முடிகிறது?" என்று கேட்டனர். அவர் புன்முறுவலுடன், "நான் இந்த நிருவனத்தைக் கர்த்தருக்குக் கொடுத்துவிட்டேன். அவர் இதைத் தரைமட்டமாக்கும்படி எரிக்க விரும்பினால், அது அவர் பாடு" என்று அவர் பதில் அளித்தார்.[19] இப்படிப்பட்ட பதிலானது முதலில் உங்களுக்கு விசித்திரமானதாக, நியாயமற்றதாகக்கூடத் தோன்றலாம், ஆனால் மனதில் சமாதானத்தைப் பராமரிக்க அவ்வகையான எண்ணப்போக்கு அத்தியாவசியமானதாக உள்ளது. சார்லஸ் ஸ்வின்டால் என்பவர், "ஒவ்வொரு விஷயத்தையும் தளர்வாகப் பிடித்துக் கொண்டு தங்கள் வாழ்வின் கவலைகள், மன இறுக்கம் நிறைந்த நிலைகள் மற்றும் பயமூட்டும் விஷயங்களைத் தேவனுடைய பராமரிப்பின்கீழ் விடக்கற்றுக் கொண்டுள்ளவர்களே நான் அறிந்த வரையில் மிகவும் சந்தோஷமான

மனிதர்களாக உள்ளனர்" என்று எழுதினார்.[20] உங்கள் "விலங்குகளில்" நீங்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றால், நிகழ்காலத்தை தேவன் மீதான நம்பிக்கையுடன் கண்ணோக்குங்கள்.

எதிர்காலத்தைத் தேவனிடத்தில் ஜெபித்தலுடன் கண்ணோக்குங்கள் (1:9-11)

அன்று

கடைசியாக, பவுல் எதிர்காலத்தைத் தேவனிடத்தில் ஜெபித்தலுடன் கண்ணோக்கியதால் அவர் தாம் விலங்கிடப் பட்டிருக்கையிலும் சந்தோஷமாக இருந்தார். எதிர்வந்து கொண்டிருந்ததைப் பற்றி, அவர் வாழ்வின் உண்மை நிலைகளைப் புறக்கணித்து விடவில்லை;[21] பிலிப்பியர்கள் அறைகூவல்களைத் தொடர்ந்து எதிர்கொள்ளுவார்கள் என்றுஅவர் அறிந்திருந்தார். அவரது தீர்வு என்னதாக இருந்தது? கவலை? இல்லை, ஜெபம் என்பதே அவரது பதிலாக இருந்தது. குறிப்பாக அவர், பிலிப்பியர்கள் கர்த்தருக்குள் *பக்குவமடையத்* தொடர வேண்டும் என்று அவர் ஜெபித்தார்.

> மேலும்,[22] உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும், தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி, நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்[22] (வசனங்கள் 9-11).

முதலாவதாக, அவர்கள் *அன்பில்* வளர வேண்டும் என்று அவர் ஜெபித்தார்: "உங்கள் அன்பானது அறிவிலும் *எல்லா உணர்விலும்* இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும்." "அன்பு" என்பதற்கான *agape* என்ற கிரேக்க வார்த்தையானது, அன்புகூரப்படுபவர்களுக்கு "மிகச்சிறந்தவற்றை" நாடுகிற சுயநலமற்ற அன்பாக உள்ளது. அப்போஸ்தலர், ஒப்புமைச் சொற்களைக் குவித்தார்: அவர்களின் அன்பு "பெருகவேண்டும்," அதாவது அது "அதிகமாய்" பெருக வேண்டும் என்று ஜெபித்தார், மற்றும் "அதிகமதிகமாய்ப் பெருகவேண்டும்" என்று அவர் கூடுதலாகக் கூறினார். அவர்களின் அன்பானது வல்லமையான ஒரு ஊற்றைப் போல், அளவிலும் பலத்திலும் எப்போதும் வளருவதாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். இருப்பினும் அன்பிற்குத் திசை தேவைப் படுகிறது. கட்டுப்பாடு இல்லாத ஒரு ஆறானது பேரழிவை ஏற்படுத்துவதாக இருக்கக்கூடும்.[23] இருதயமும் மூளையும் ஒன்றாகச் செயல்பட வேண்டும் (காண்க மத்தேயு 22:37; ரோமர் 10:2). இவ்வாறாக பவுல் தமது ஜெபத்தில் இன்னும் இரு விஷயங்களை உள்ளடக்கினார்.

அடுத்ததாக, அவர்கள் *அறிவில்* வளர வேண்டும் என்று அவர் ஜெபித்தார்: NASB வேதாகமத்தில் "in real knowledge" என்றுள்ளது. "Real knowledge" என்ற சொற்றொடர், "அறிவு" என்பதற்கான (*gnosis* என்ற) கிரேக்க வார்த்தையுடன் "மீது" (*epi*) என்ற முன்னிடைச் சொல்லை இணைத்துள்ள ஒரு கிரேக்கக்

கூட்டுவார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது "சில விஷயங்கள் கூட்டப்பட்ட" அறிவைக் குறிக்கிறது. இது மேலோட்டமான அறிவல்ல. "எல்லா உணர்விலும்"[24] என்ற வார்த்தை, முழுமையான அறிவைக் கொண்டிருத்தலை அர்த்தப்படுத்துகிறது. CJB வேதாகமத்தில் "fullness of knowledge" ("அறிவின் முழுமைத்தன்மை") என்றுள்ளது. ஆவிக்குரிய அறிவை, தேவன் மற்றும் அவரது சித்தம் பற்றிய அறிவைப் பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தார். அப்படிப்பட்ட அறிவு, தேவனுடைய வசனத்தைக் கவனமாகப் படித்தல் மற்றும் ஒருவரின் வாழ்வில் அது அர்த்தப்படுத்துவது என்ன என்பது பற்றிய எல்லாவற்றையும் தியானித்தல் ஆகியவற்றில் இருந்து வருகிறது.

பிலிப்பியருக்காகப் பவுலின் ஜெபத்தில் இத்துடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டதாக அடுத்த விஷயம் உள்ளது: அவர்கள், *சரியானது மற்றும் தவறானது ஆகியவற்றைப் பகுத்துணரும் திறனில்* வளர வேண்டும் என்று அவர் ஜெபித்தார்: "மேலும், உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது … எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும்." இந்த வார்த்தைகளில் அதிகமான கருத்துக்கள் பொதியப்பட்டுள்ளன. "உணர்வு" என்ற வார்த்தையைக் கொண்டு நாம் தொடங்குவோம். "உணர்வு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது, "பகுத்தறிதல், புரிந்துகொள்ளுதல்" என்று அர்த்தப்படுகிறது.[25] NIV வேதாகமத்தில் "depth of insight" என்றுள்ளது. ஒருவர், "பகுத்துணர" கூடியவராக இருக்கும்போது, அவரால் விஷயங்களுக்கு இடையில் வித்தியாசப்படுத்துதலைச் செய்ய முடியும். இந்தத் திறன், பக்குவம் அடைந்திருத்தலின் அடையாளமாக உள்ளது: நான்கு கால்கள் கொண்ட ஒவ்வொரு மிருகமும் நாய்தான் என்று ஒரு குழந்தை நினைக்கலாம்; ஆனால் அந்தக் குழந்தை வளருகையில், ஒரு நாய்க்கும் ஒரு பசுவிற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைப் பகுத்துணரக் கற்றுக்கொள்கிறது.

பிலிப்பியர்கள் ஆவிக்குரிய வகையில் வித்தியாசப்படுத்தக் கூடிய அளவிற்கு வளர வேண்டும் என்று பவுல் விரும்பினார். எபிரெயர் 5:14ம் வசனம், "நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும்" என்பதைக் குறிப்பிடுகிறது. இவ்வகையான பகுத்தறிதல் பிலிப்பியர் 1:9, 10ம் வசனங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. NCV வேதாகமம், "நீங்கள் உங்கள் அன்புடன் அறிவையும் புரிந்துகொள்ளுதலையும் கொண்டிருக்க வேண்டும் என்றும், நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான வேறுபாட்டை நீங்கள் காண வேண்டும்" என்ற பவுலின் விருப்பம் பற்றிப் பேசுகிறது.

9ம் வசனத்தில் உள்ள "ஒப்புக்கொள்ளுதல்" என்ற சொற்றொடர், சில விஷயங்கள் பரிசோதிக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு மற்றும் உண்மையானவை என்று கண்டறியப்பட்டதைச் சுட்டிக் காண்பிக்கிறது. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் (செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பில்) பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை "நிரூபித்தல்" என்பதற்கு உறவுவார்த்தையாக உள்ளது; இது உலோகத்தைச் சோதிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது (எடுத்துக்காட்டாக, நீதிமொழிகள் 17:3ஐக் காணவும்) நாம் ஒவ்வொருவரையும், ஒவ்வொரு போதனையையும் ஒவ்வொரு செயலையும் சோதிக்கக் கற்றுக் கொள்ளுதல் அவசியமாகும். "வசனத்தைச் சோதித்தல்" மற்றும் "கனியைச் சோதித்தல்" என்பது இரண்டு முக்கியமான சோதனைகளாக உள்ளன (காண்க

மத்தேயு 7:16; ரோமர் 12:2; 2 கொரிந்தியர் 2:9; 13:5; யாக்கோபு 1:22; 1 யோவான் 4:1; வெளிப்படுத்தின விசேஷம் 2:2). எல்லாவற்றையும் இவ்வகைகளில் சோதித்தறியக் கூடியவர்களாக இருத்தல் என்பது சாதாரண சாதனையல்ல; சரியானது மற்றும் தவறானது, நல்லது மற்றும் தீயது ஆகியவற்றிற்கு இடையில் வித்தியாசப்படுத்தும் திறனில் பலர் குறைவுபடுகின்றனர்.

இருப்பினும் பவுல், தமது வாசகர்கள் தங்கள் பகுத்தறிவில் இன்னும் சற்றுத் தூரம் அடியெடுத்து வைத்தவர்களாக இருக்கவேண்டும் என்று விரும்பினார். அவர்கள், "*உத்தமமானவைகளை* ... ஒப்புக்கொள்ள" வேண்டும் என்று விரும்பினார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது). "உத்தமமானவைகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை (Gk.: *diaphero*) "மாறுபட்டு இருப்பவை" என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. 1:10ன் சந்தர்ப்பப்பொருளில் "தனிச்சிறந்தது" என்ற வார்த்தை இக்கருத்தை தருகிறது: "தனிச்சிறந்த தன்மையினால் விலைமதிப்பு அற்றதாக உள்ள பொருள்/விஷயம்." 4:8ம் வசனத்தை நாம் அடைகையில், "புண்ணியமான" மற்றும் "புகழ்ச்சியான" விஷயங்களைப் பற்றி படிப்போம். நல்லது எது என்று பகுத்தறிதல் மாத்திரமல்ல, ஆனால் மிகச் சிறந்தது எது, மிகமிகச் சிறந்தது எது - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "உண்மையிலேயே" மிகச் சிறப்பானது எது என்று பகுத்தறிதலும் முக்கியமானதாக உள்ளது. காலம் மற்றும் திறன்களைப் பயன்படுத்துதல் பற்றி, நல்லது மற்றும் தீயது ஆகியவற்றைப் பகுத்தறிதல் அல்ல, ஆனால் நல்லது மிக நல்லது மற்றும் மிகமிக நல்லது ஆகியவற்றைப் பகுத்தறிதலே எனக்கு மிகவும் சிரமமான முடிவுகளாக இருந்துள்ளன: எடுத்துக்காட்டாக, எனது நேரம் மற்றும் திறன்களை நான் எவ்வாறு மிகச்சிறப்பான முறையில் பயன்படுத்திக்கொள்ள முடியும்?

பிலிப்பியர்கள் கிறிஸ்தவப் பண்பில் வளர வேண்டும் என்றும் பவுல் ஜெபித்தார். "கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் (sincere) இடறலற்றவர்களுமாயிருக்கவும் (blameless) வேண்டுதல் செய்கிறேன்." Sincere என்ற ஆங்கில வார்த்தை, "இல்லாத" என்று அர்த்தப்படும் sin மற்றும் "மெழுகு" என்று அர்த்தப்படும் cere என்ற இரு இலத்தீன் வார்த்தைகளில் இருந்து வருகிறது.

> இத்தாலியில் இருந்த சலவைக்கல் விற்பவர்கள் மற்றும் பீங்கான் விற்கும் சில வர்த்தகர்கள், தங்கள் விற்பனைப் பொருள்களில் உள்ள குறைகளை, அவற்றின் வெடிப்புகள் மற்றும் அழுக்குகளில் குறிப்பிட்ட வகையான மெழுகை ஊற்றி நிரப்பி மறைப்பதுண்டு; ஆனால் மிகப் புகழ்வாய்ந்த வியாபாரிகள், தங்கள் பொருள்கள், *sin cere* (மெழுகு இல்லாதவை) என்று விளம்பரப்படுத்துவது உண்டு; இதிலிருந்து "sincere" என்ற ஆங்கில வார்த்தைக்கு அர்த்தம் தரவழைக்கப்பட்டது. "வஞ்சகம் அற்ற" அல்லது "மாய்மாலம் அற்ற" என்பதே ... இதன் அர்த்தமாக உள்ளது.[26]

மூலவசனப் பகுதியானது "சூரியப் பிரகாச நியாயந்தீர்க்கப்பட்டது" என்று அடிப்படையில் அர்த்தப்படும் கூட்டு வார்த்தை ஒன்றைக் கொண்டுள்ளது.[27] அவ்வப்போது நான், எனது இருளான அறையில் - நான் சூரிய வெளிச்சத்தில் காணும்வரையில் - கொண்டிருந்த மென்மையான பஞ்சுத் துணியைப்பற்றி நினைப்பது உண்டு. சூரிய வெளிச்சமானது அதில் உள்ள ஒவ்வொரு குற்றம்

குறையையும் வெளிப்படுத்தும் வகையைக் கொண்டுள்ளது. சிலவேளைகளில் "சூரிய ஒளிப்பரிசோதனை" உண்மையானதாகவும் நம்பக்கூடியதாகவும் உள்ளது. ஆங்கில மற்றும் கிரேக்க வார்த்தைகள் ஒரே அடிப்படை அர்த்தத்தைக் கொண்டுள்ளன: "மாய்மாலம் எதுவும் இன்றி."

"துப்புரவானவர்கள்" என்ற வார்த்தையுடன் பவுல், "இடறலற்றவர்கள்" என்ற சொற்றொடரைக் கூடுதலாகக் கூறினார். "இடறலற்றவர்கள்" என்ற வார்த்தை "பூரணமானவர்கள்" என்று அர்த்தப்படுவதில்லை; அது அவ்வாறு அர்த்தப்பட்டது என்றால், நம்மில் எவரும் தகுதியுடையவர்கள் ஆக இயலாது (ரோமர் 3:23). அது நாம் மற்றவர்களால் ஒருக்காலும் "இடறல்படுத்தப்படாது" இருப்போம் என்றும் அர்த்தப்படுவதில்லை; இயேசுவும் அப்போஸ்தலர்களுமே கூட தவறாகச் செயல்பட்டதாகப் பிறரால் குற்றம்சாட்டப்பட்டனர் (காண்க மத்தேயு 27:12; நடபடிகள் 24:2; 3 யோவான் 10). இது, நாம் சரியானவற்றைச் செய்ய முயற்சி செய்கிறோம் என்பதைப் பிறர் காணக்கூடிய வகையில் வாழும் வாழ்வைக் குறிப்பிடுகிறது. "இடறலற்றவர்கள்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள கிரேக்க வார்த்தை "இடறிவிழுதல்" என்பதற்கான வார்த்தையுடன் எதிர்மறை முன்சொல் ஒன்றை இணைத்துப் பெற்ற (*aproskopos* என்ற) வார்த்தையாக உள்ளது;[28] இது "இடறிவிழுதல் இன்றி" என்ற நேரடி அர்த்தம் தருகிறது. நமது திறனில் மிகச்சிறப்பான வகையில், நாம் "இடறி விழாது" தேவபக்தியுள்ள வாழ்வை வாழவேண்டும் (காண்க 2 பேதுரு 1:10). மேலும் நாம் மற்றவர்களின் தேவைகள் மற்றும் உரிமைகள் ஆகியவற்றைப் பற்றிய உணர்வறிவு உள்ளவர்களாக இருந்து - அவர்கள் "இடறல் அடைய" காரணம் ஆகிவிடாதவாறு வாழ முயற்சி மேற்கொள்ள வேண்டும் (காண்க 1 கொரிந்தியர் 8:13; 1 யோவான் 2:10). "துப்புரவான" மற்றும் "இடறலற்ற" என்ற வார்த்தைகள் ஒன்று மற்றொன்றின் அர்த்தத்தை நிறைவு செய்பவையாக உள்ளன. இவற்றில் முதலாவது பண்பைப் பற்றியதாக இருக்கையில், இரண்டாவது நற்புகழ்ச்சியைப் பற்றியதாக உள்ளது. இவ்விரண்டுமே முக்கியமானவையாக உள்ளன.

பவுல் பிலிப்பி நகரில் இருந்த தமது சகோதர சகோதரிகளுக்காக ஜெபித்த ஜெபத்தின் பட்டியலில், அவர்கள் "நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி" *கனிநிறைந்த வாழ்வில் வளர வேண்டும்* என்பது கடைசி விஷயமாக இருந்தது. "கனி" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் பல்வேறு வழிகளில் பயன்படுத்தப் பட்டிருந்தாலும் இவ்விடத்தில் அது, கர்த்தருக்கு நெருக்கமாக வாழ்வதன் நடைமுறை விளைவுகளைக் குறிக்கிறது: மற்றவர்கள்கூட உற்றுக்கவனிக்கக் கூடிய வகையிலான, கிறிஸ்துவைப் போன்ற பண்புகள். "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை" (கலாத்தியர் 5:22, 23). பவுல், தமது வாசகர்கள் அப்படிப்பட்ட "கனி"யினால் "நிரப்பப்பட்டு" இருக்க வேண்டும் என்று ஜெபித்தார். நிறையக் கனிகளைச் சுமந்துள்ள மரத்தின் உருவகம் ஒன்று மனதிற்கு வருகிறது. இயேசு தமது சீஷர்களிடத்தில், "நீங்கள் *மிகுந்த* கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கு சீஷராயிருப்பீர்கள்" என்று கூறினார் (யோவான் 15:8; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

நாம் எவ்வாறு "நீதியின் கனிகளால் நிரப்பப் பட்டிருக்க" முடியும்? கனியானது "இயேசு கிறிஸ்துவின் மூலமாக வருகிறது." உலகப்பிரகாரமான

கனியை உற்பத்தி செய்யும் முயற்சியில் இருப்பது போன்றே, இதிலும் தனிப்பட்ட முயற்சி உள்ளடங்கி இருக்கிறது; ஆனால் உலகப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய ஆகிய இருவகைப்பட்ட கனிகளுக்குமே, கர்த்தரே நிறைவான ஆதாரவளமாக இருக்கிறார். ஒரு எழுத்தாளர், ஒரு மரம் அல்லது திராட்சக் கொடி கனிகளை உற்பத்தி செய்யும்போது அதிகமாக இரைச்சல் எழுப்புவதில்லை என்று சுட்டிக்காண்பித்தார். நமது வாழ்வில், *கர்த்தரே* "கனிகளின்" ஆதாரவளமாக இருக்கிறார் என்று நாம் புரிந்துகொள்ளும்போது, இது நமது மேட்டிமையையும் சுயத்தை உயர்த்துதலையும் நீக்கிப்போட வேண்டும். இயேசு, "ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று கூறினார் (யோவான் 15:5).

நாம் ஏன் இந்தக் "கனிகளினால் நிரப்பப் பட்டிருக்க" வேண்டும்? "தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி" நாம் இதைச் செய்ய வேண்டும். நாம் கூறுகிற அல்லது செய்கிற ஒவ்வொரு விஷயமும் கர்த்தரைக் கனப்படுத்த வேண்டும். "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படியாக" வாழுங்கள் (மத்தேயு 5:16). அவ்வாறு செய்வதில், நாமும்கூட ஆசீர்வதிக்கப்படுவோம், ஏனெனில் தேவனை மகிமைப்படுத்தும் விஷயம் மனிதரையும் கண்ணியப்படுத்துகிறது.

இன்று

10 முதல் 13வரை உள்ள வசனப்பகுதியில் இருந்து தனிப்பட்ட நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துதல் என்பது சிரமமானதாக இருப்பதில்லை. எதிர்காலத்தை நம்பிக்கையுடன் கண்ணோக்குதலுக்கு, நாம் அன்றாடம் கர்த்தருடன் நெருக்கமாக வாழுதலும் எல்லாவற்றிலும் அவரை மகிமைப்படுத்துதலும் அவசியமாக உள்ளது.[29] இருப்பினும் நான், இந்தக் கடைசிப் பகுதியின் முதன்மைக் கருத்தாழத்தை வலியுறுத்த விரும்புகிறேன்: பவுல் எதிர்காலத்தைத் தேவனை நோக்கிய ஜெபத்துடன் கண்ணோக்கியதால், அவர் தாம் விலங்கிடப்பட்ட நிலையிலும் சந்தோஷமாக இருந்தார். அவர், கிறிஸ்து மறுபடியும் வரும்போது (வசனங்கள் 6, 10), எல்லாம் சரியாகத் திரும்பும் என்று அறிந்தவராக தேவன் மீது தமது நம்பிக்கையை வைத்தார். நாம், "(நம்மேல்) நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்க" வேண்டும் என்பதைக் கற்றிருந்தார் (2 கொரிந்தியர் 1:9) தீமோத்தேயுவுக்கு அவர், "ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்" என்று கூறினார் (1 தீமோத்தேயு 4:10). "விலங்கிடப்பட்டு" இருக்கிறவர்களுக்கு, அவர்கள் தங்கள் கண்களால் தங்களை நோக்குவதை விட்டுவிட்டு கர்த்தர் மீது அவற்றைப் பதிக்க வேண்டும் என்று கூறுவதைவிட மேன்மையான அறிவுரை எதையும் நான் அறியவில்லை.

முடிவுரை

நாம் கடந்த காலத்தை நம்பிக்கை இழந்த வகையிலோ அல்லது நன்றி செலுத்தும் வகையிலே கண்ணோக்க முடியும். நாம் நிகழ்காலத்தை கோழைத்தனத்துடனோ அல்லது தைரியத்துடனோ கண்ணோக்க முடியும். நாம் எதிர்காலத்தை அச்சத்துடனோ அல்லது ஜெபத்துடனோ கண்ணோக்க முடியும்.

நாம் நமது சொந்த பலத்தைச் சார்ந்திருக்க முடியும் அல்லது நம் தேவன் மற்றும் இயேசு ஆகியோரைச் சார்ந்திருக்க முடியும். இவற்றில் முதலாவதாக வரும் விருப்பத் தேர்வுகள் சந்தோஷம் இல்லாமைக்கான நிச்சயமான சூத்திரங்களாக உள்ளது. இரண்டாவதாக வருபவை-நம்மைக் "கட்டி" வைத்திருப்பவை எந்த "விலங்காக" இருந்தாலும் சந்தோஷத்திற்கான தேவனுடைய சூத்திரங்களாக உள்ளன.

குறிப்புகள்

[1]இந்த உதாரணங்கள் பொதுவானவைகளாக உள்ளன. உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு நடைமுறைப்படுத்தும் வகையில் இவற்றைத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள். [2]பிலிப்பியர் 1:3-11 வசனப் பகுதியானது இந்தப் புத்தகத்தில் "நன்றி செலுத்துதலின்" தொடக்கமாக உள்ளது. இந்தப் பத்தி நன்றி செலுத்துதலுடன் தொடங்குகிறது, ஆனால் இந்தப் பகுதி - நாம் காணப்போகிறபடி - இன்னும் அதிகமானவற்றை உள்ளடக்குகிறது. [3]மற்றவர்களுக்காக ஜெபிப்பதின் - மற்றும் அவர்களுக்காக நீங்கள் ஜெபிக்கிறீர்கள் என்று அவர்கள் அறியச் செய்தலின் - முக்கியத்துவம் பற்றி ஒரு குறிப்பை இவ்விடத்தில் உட்செருக நீங்கள் விரும்பலாம். [4]பிலிப்பி நகரில் இருந்த சபை, பிரச்சனைகள் நிரம்பி வழிந்ததாக இருக்கவில்லை-ஆனாலும் அது பிரச்சனைகளைக் கொண்டிருந்தது என்று "பவுல் இல்லத்திற்கு எழுதியபோது" என்ற பாடம் வலியுறுத்துகிறது. ஒவ்வொரு சபைக்குழுமமும் மக்களைக் கொண்டதாகவே உள்ளது; மக்கள் பூரணப்பட்டவர்களாக இருப்பதில்லை என்பதால் (ரோமர் 3:23), எந்த சபைக்குழுமமும் பூரணப்பட்டதாக இருப்பதில்லை. [5]அவர்கள் ஒருமுறை பவுலுக்கு உதவி செய்தபின்பு, அவர்கள் நிறுத்திவிடவில்லை என்பதை நீங்கள் வலியுறுத்த விரும்பலாம். சில வேளைகளில் நாம் நல்ல ஊழியங்களைத் தொடங்கிவிட்டு, அவைகள் நிறைவடையுமுன் அவற்றைக் கைவிட்டுவிடுகிறோம் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 3:2). [6]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 235. [7]Ibid. [8]Frank Minirth and Paul D. Meier, *Happiness Is a Choice* (Grand Rapids, Mich.: Baker Book House, 1978). [9]Ella Wheeler Wilcox, "The Winds of Fate," in *The Best Loved Poems of the American People,* comp. Hazel Felleman (Garden City, N.Y.: Garden City Books, 1967), 364. [10]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 66.

[11]*Analytical Greek Lexicon,* 373. [12]இன்றைய நாட்களிலும்கூட நான் வாழும் இடத்தில், நாங்கள் உணர்வுப் பூர்வமாக அமைதியற்றுப் போகும்போது, "வயிற்றில் பட்டாம்பூச்சிகள்" அல்லது "வயிற்றுக் குழியில் மோசமான உணர்வு" என்று அதைப் பற்றிப் பேசுவதுண்டு. நீங்கள் வாழும் இடத்தில் இதைப் போன்ற சொற்றொடர்கள் பொதுவாகப் பயன்படுத்தப் படுவதாக இருந்தால், அவற்றை நீங்கள் விவரிப்புகளாகப் பயன்படுத்த முடியும். [13]உலகில் நான் வாழும் பாகத்தில் உள்ள இளைஞர்கள், "கர்த்தரின் அன்புடன் நான் உன்னை அன்புசெய்கிறேன்" என்று கூறும் ஒரு பாடலைக் கொண்டுள்ளனர். உங்கள் உரையைக் கேட்பவர்கள் இந்தப் பாடலுக்குப் பழக்கமானவர்களாக இருந்தால், நீங்கள் அதைக் குறிப்பிடலாம் அல்லது வகுப்பை அல்லது உரையைக் கேட்பவர்களை அதைப் பாடும்படி கூட வழிநடத்தலாம். [14]*Analytical Greek Lexicon*, 162. [15]உங்கள் உரையைக் கேட்பவர்கள், மேரி பாப்பின்ஸ் என்ற திரைப்படத்திற்குப் பழக்கமானவர்களாக இருந்தால், இவ்விடத்தில் நீங்கள், "மேரி பாப்பின்ஸ் போலின்றி, நாம் 'நடைமுறையில் ஒவ்வொரு வகையிலும் பூரணப்பட்டவர்களாக' இருப்பதில்லை" என்று கூடுதலாகக்

கூறலாம். [16]"Apologetics" கிறிஸ்தவத்தைப் தற்காக்க ஒப்புக்கொடுக்கப்பட்ட மதரீதியான சிந்தனையின் பிரிவைக் குறிப்பிட என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது, இது தேவன், கிறிஸ்து ஆகியோர் மீதும் வேதாகமத்தின் மீதும் விசுவாசம் கொண்டிருந்தலுக்கான காரணங்களை விசேஷமாக வலியுறுத்துவதாகவும் உள்ளது. [17]*Analytical Greek Lexicon,* 45. [18]"அவர் இன்னும் என் மீது கிரியை செய்கிறார்" என்ற பாடலை நாம் விரும்புகிறோம். உங்கள் உரையைக் கேட்பவர்கள் இந்தப் பாடலுக்குப் பழக்கமானவர்களாக இருந்தால், இவ்வார்த்தைகளை ஒரு விவரிப்பாக நீங்கள் பயன்படுத்த முடியும். [19]இந்த விவரிப்பு Charles R. Swindoll, *Laugh Again* (Dallas: Word Publishing, 1992), 40-41 என்ற புத்தகத்தில் இருந்து தழுவப்பட்டது. [20]Ibid., 41.

[21]ஜார்ஜ் பெய்லி என்ற சக ஊழியர், "நீங்கள் உங்கள் எதிர்காலத்தை ஒளிமிக்கதாகவோ அல்லது பனிமூடி ஒளிமிக்கதாகவோ கண்ணோக்க முடியும்"என்று கூறினார். [22]இவ்விடத்தில் "வேண்டுதல் செய்கிறேன்" என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, ஜெபத்தின் (நன்றி செலுத்துதல் மற்றும் துதி போன்ற) எல்லாக் கூறுகளையும் சுற்றிச் சூழும், ஜெபத்திற்கான பொதுவான வார்த்தையாக உள்ளது. [23]உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு நன்கு பழக்கமான ஒரு நிகழ்ச்சியைத் தேர்ந்துகொண்டு அதைப்பற்றி விவரிக்க நீங்கள் விரும்பலாம். [24]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III with James A. Swanson (Minneapolis: Bethany House Publishers, 1984), 629. (Emphasis mine.) [25]*Analytical Greek Lexicon*, 9. [26]James Burton Coffman, *Commentary on Galatians, Ephesians, Philippians, Colossians* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977), 265. [27]*Analytical Greek Lexicon,* 118. [28]Ibid., 49.

[29]பவுல், பிலிப்பியருக்காக ஜெபித்த எல்லாக் காரியங்களைக் குறித்தும் மறுகண்ணோட்டமிட நீங்கள் விரும்புவீர்கள்.

3

பவுலின் கண்களின் வழியாக

(பிலிப்பியர் 1:12-20)

"வாழ்வு உங்களுக்கு ஒரு எலுமிச்சம் பழத்தைக் கொடுக்கும்போது, எலுமிச்சம்பழச் சாற்றைச் செய்யுங்கள்" என்ற பழமொழியை ஒருவேளை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். விவரிப்பு தெளிவாக உள்ளது: எழுமிச்சம்பழம் தன்னில்தானே புளிப்பாக உள்ளது, ஆனால் சிறிதே எலுமிச்சம் பழச்சாறு குளிர்ந்த நீருடன் கலக்கப்பட்டு, அதில் சர்க்கரை போடப்பட்டு எழுமிச்சம்பழச் சாறாக்கப்படும்போது, அது புத்துணர்ச்சியூட்டும் பானமாகிறது. ஒப்புவமை ஏற்புடையதாக உள்ளது. சில வேளைகளில், வாழ்வானது நமக்கு - வெறுப்புச் சுவையூட்டும் சூழ்நிலைகள் என்ற "எலுமிச்சம்பழங்களைக் கையளிக்கிறது." அது நடக்கும்போது, அந்தச் சூழ்நிலையைச் சகித்துக்கொள்ள மட்டும் நாம் முயற்சி செய்யக் கூடும் அல்லது நாம் அதிலுள்ள நன்மையைக் கண்டறிய முயற்சி செய்யக் கூடும்: நமது "எலுமிச்சம்பழங்களை" நாம் "எலுமிச்சம்பழச் சாறாக்க" முடியும்.

பவுல் இந்தப் பழமொழியைக் கேள்விப்பட்டிருக்க மாட்டார், ஆனால் அவர் இதற்குப் பின் உள்ள தத்துவத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார். அவர் ஒரு கிறிஸ்தவரானதில் இருந்து, அவருக்கு "பாரவண்டிகள் சுமையளவுக்கு எலுமிச்சம்பழங்கள்" கையளிக்கப்பட்டிருந்தன. நடபடிகள் புத்தகம் அவர் தவறாக நடத்தப்பட்ட விஷயங்களில் சிலவற்றைப் பதிவு செய்துள்ளது (காண்க நடபடிகள் 9:1-23:11), ஆனால் அது, கர்த்தருக்காக அவர் பொறுமையுடன் சகித்துக் கொண்டவற்றில் ஒரு சிறு துணுக்காக மாத்திரமே இருந்தது (காண்க 2 கொரிந்தியர் 11:23-30). தவறாக சிறைவைக்கப்பட்டிருத்தல் என்பது அவரது அப்போதைய சிறுமைப்படுத்தப்படுதலாக இருந்தது. அவர் செசரியாவில் இரண்டு ஆண்டுகளைச் செலவிட்டிருந்தார் (காண்க நடபடிகள் 23:12-26:32). செசாருக்கு அபயமிட்ட பின்பு (நடபடிகள் 25:10-12), அவர் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டிருந்தார் (காண்க நடபடிகள் 27:1-28:15). பிலிப்பியருக்கு நிருபத்தைப் பவுல் எழுதியபோது, அவர் ஏற்கனவே அந்த நகரில் இரண்டு ஆண்டுகள் சிறைவைக்கப்பட்டிருந்தார் (நடபடிகள் 28:30; காண்க 28:16-31). (இந்த நிருபம் ரோமாபுரியில் பவுல் முதன்முறை சிறை வைக்கப்பட்டிருந்த வேளையின் முடிவுக்கு அண்மையில் எழுதப்பட்டது என்பதை, பவுல் விரைவில் தாம் விடுதலை செய்யப்பட எதிர்பார்த்திருந்தது உட்பட [2:24], இந்த நிருபத்தில் உள்ள பல விபரங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன.)

பிரசங்கியார் என்ற வகையில் ரோமாபுரிக்குச் செல்ல அவர் ஏங்கியிருந்தார் (ரோமர் 1:10, 11, 13; 15:22-24); அதற்குப் பதிலாக அவர் அங்கு ஒரு *கைதியாக* இருந்தார்! அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் மற்றவர்கள் சுயபச்சாதாபத்தால் நிரப்பப்பட்டிருக்கலாம் என்றிருக்கையில், பவுலுக்குள் எவ்வித கசப்பும் இருந்ததாக நமது வேதவசனப் பகுதி குறிப்பெதுவும் கொண்டிருப்பதில்லை.

பவுல் தமது "எழுமிச்சம்பழங்களை" எடுத்து "எலுமிச்சம்பழச் சாறாக்க" முடிந்தது எவ்வாறு? இதற்குப் பதிலானது, அவருக்கு நடந்த எல்லாவற்றைக் குறித்தும் அவரது *எண்ணப்போக்கில்* அமைந்து கிடக்கிறது. ஆம், சரியான சிந்தையை [எண்ணப்போக்கை] மேம்படுத்திக் கொள்ளுதலின் முக்கியத்துவம் பற்றி நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம், ஆனால் பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் பற்றிய நமது படிப்பில், அதை நாம் திரும்பத் திரும்பத் கேள்விப்படுவோம். ஒரு கருத்தமைவில் இந்தப் புத்தகம், ஏற்புடைய சிந்தையின் [எண்ணப்போக்கின்] அவசியம் பற்றியதாக உள்ளது:

> கிறிஸ்து இயேசுவிலிருந்த *சிந்தையே* உங்களிலும் இருக்கக்கடவது (2:5; என்னால் வலியுறுத்தப்படுகிறது).
>
> ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் *சிந்தையாயிருக்கக்கடவோம்* (3:15அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது).
>
> கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ *அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்* (4:8; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

பவுலை நீங்கள் ரோமாபுரியில் கண்ணோக்கியிருந்தால், முதிர் வயதான ஒரு பிரசங்கியார், விலங்குகளில் கட்டப்பட்டு இருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். பிலேமோன் 8, நடபடிகள் 28:20 மற்றும் எபேசியர் 6:19 ஆகிய வசனங்களை வாசியுங்கள். இவற்றில் இரு வசனப்பகுதிகளில் "கட்டு" என்பதற்கான கிரேக்க வார்த்தையானது (*halusis*) "கைதியின் மணிக்கட்டு, அவர் தப்பிச் செல்லுதலை இயலாத செயலாக்கும் வகையில் அவரைக் காவல் செய்யும் போர்வீரரின் மணிக்கட்டுடன் இணைத்துக் கட்டப்பட்டிருக்கும் ஒரு குறுகிய நீளம் கொண்ட சங்கிலி" என்று அர்த்தப்படுகிறது.[1] பவுலுக்கு இருந்த கட்டுப்பாடுகளைப் பற்றி நீங்கள் ஆழ்ந்து சிந்திக்கையில், பரிதவிப்பிலும் கோபத்திலும் நீங்கள் உங்கள் தலையைக் குலுக்கும்படி சோதிக்கப்படலாம். இருப்பினும் காணப்படுபவற்றில் இருந்து காணப்படாதவற்றை நோக்கி உங்கள் கவனத்தை மாற்றுங்கள்: பவுலின் இருதயம், பவுல் தமது சூழ்நிலையைக் கண்ணோக்கிய போது, அவர் துன்பத்தை அல்ல ஆனால் வெற்றியையே கண்டார். அவர் தம்மைப் பற்றி, தீங்கிழைக்கப்பட்டவர் என்று எண்ணாமல், வெற்றியாளர் என்றே நினைத்தார்.

இந்தப் பாடத்தில், அப்போஸ்தலரின் கண்கள் வழியாகக் கண்ணோக்குதல் அதாவது சூழ்நிலைகளை அவர் கண்டவிதமாகக் காண்பது என்பது நமது அறைகூவலாக இருக்கும். அவ்வாறு செய்வதில் ஒருவேளை, நீங்களும் நானும், வாழ்வை நேர்மறையாக கண்ணோக்குதல் பற்றிய சில விஷயங்களைக் கற்றுக்கொள்வோம்.

அவர் தேவனுடைய நோக்கத்தின் வளர்நிலையைக் கண்டார் (1:12-14)

பவுலின் நிருபத்தினுடைய பொருள் பகுதியை நாம் அடைந்திருக்கிறோம். நிருபத்தின் பொருள் பகுதியை, அதை எழுதுபவர் எவ்வாறெல்லாம் அலைக்கழிக்கப்படுகிறார் என்பது உட்பட, ஒரு சொந்தக் குறிப்புடன் தொடங்குதல் என்பது வழக்கமான ஒன்றாக இருந்தது. ஒரு வகையில் பவுல், இந்த நிருபத்தின் பொருள் பகுதியை ஒரு சொந்தத் தகவலுடன் தொடங்கினார் ... ஆனால் உண்மையில் அது அவ்வாறில்லை. அவர் தமது கண்களைத் தம்மீது அல்ல ஆனால் இயேசுவின் மீதும் இயேசுவின் சுவிசேஷத்தின் மீதும் வைத்திருந்தார்.

அவர், "சகோதரரே, ... நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன்" என்று தொடங்கினார் (வசனம் 12). "சகோதரர்" மற்றும் "சகோதர சகோதரிகள்" என்ற வார்த்தைகளைப் பவுல் விரும்பினார். இவைகள் ஒரு குடும்ப உறவைச் சுட்டிக் காண்பிக்கின்றன. அவ்வார்த்தைகள் அவரது நிருபத்தில் 130 அல்லது அதற்குச் சற்றேக் குறையலான முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன, இந்தக் குறுகிய தொகுப்பின் நான்கு அதிகாரங்களில் ஒன்பது முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன (வசனம் 12, 14; 2:25; 3:1, 13, 17; 4:1, 8, 21).

அவர் தொடர்ந்து, "எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று ..." எழுதினார். "எனக்குச் சம்பவித்தவைகள்" என்ற சொற்றொடர், பவுல் கடந்த காலத்தில் பாடுகளாக அனுபவித்தவை மற்றும் [இந்த நிருபம் எழுதப்பட்ட] நிகழ்காலத்தில் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்தவை ஆகிய யாவற்றையும் உள்ளடக்குகிறது. அவை யாவற்றையும் அவர் பின்வரும் இரண்டே இரண்டு வார்த்தைகளினால் விரைவில் நீக்கிப்போட்டார்: "எனக்குச் சம்பவித்தவைகள்."

அவரது சிந்தையானது பிரச்சனைகள் மீதல்ல ஆனால் வளர்ச்சியின் மீதே கவனம் குவித்திருந்தது: "சுவிசேஷம் பிரபலமாகும்படி." "சுவிசேஷம்" என்ற வார்த்தை, "நற்செய்தி" என்று அர்த்தப்படுகிற *euangelion* என்ற கிரேக்கக் கூட்டு வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

அப்போஸ்தலர், சுவிசேஷம் பிரபலமாகுதல் பற்றிப் பேசியபோது, அவர் சித்தரிப்புள்ள ஒரு வார்த்தையைப் பயன்படுத்தினார். "பிரபலம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "முன்னோக்கி வெட்டுதல்" என்று அர்த்தப்படுகிற வினைவடிவத்தைக் (*prokoptein*) கொண்ட (*prokope* என்ற) கூட்டு வார்த்தையில் இருந்து வந்ததாக உள்ளது.[2] "தொடக்கத்தில் இவ்வார்த்தை, முன்னோடி ஒருவர் புதர்க்காடுகளினூடே வழியுண்டாக்க வெட்டிச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டது."[3] இவ்வார்த்தை, படைக்கு முன்னால் சென்று, மரங்களையும் படைமுன்னேறிச் செல்லுதலைத் தாமதப்படுத்தும் செடிகொடிகளையும் வெட்டிச் செல்லும் படையின் பொறியாளர்களின் நடவடிக்கையை விவரிக்கவும் பயன்படுத்தப்பட்டது.[4] இது அடிக்கடி புதிய எல்லைப் பகுதிகளைத் திறந்து வைத்தது.[5] பவுல் சிறைவைக்கப்பட்டிருத்தல், சுவிசேஷத்திற்காக "வழியைச் செவ்வை" செய்தலாக இருந்தது!

இழந்துபோகப்பட்டிருந்தவர்களுடன் தொடர்பு

பவுல், தாம் சிறைவைக்கப்பட்டிருந்ததன் காரணமாக சுவிசேஷம் பிரபலமானதற்கு இரண்டு உதாரணங்களைக் கொடுத்தார். முதலாவது, இழந்துபோகப்பட்டிருந்தவர்களுடன் தொடர்பு என்பதாக இருந்தது. பவுல் எருசலேமில் கைது செய்யப்பட்டது முதற்கொண்டு, சுவிசேஷ ஊழியம் செய்யும் குறிப்பிடத்தக்க வாய்ப்புகளை அனுபவித்திருந்தார். அவர் யூதசங்கத்தார்களுக்கு, ரோமானிய ஆளுநர்களுக்கு மற்றும் ஒரு அரசர் உட்பட, உயர்பதவியில் இருந்த அதிகாரிகளுக்குப் பிரசங்கித்திருந்தார் (நடபடிகள் 23:1; 24:10, 24, 25; 25:23; 26:1). இருப்பினும் இந்த வாய்ப்புகளில் எதுவும், பவுல் ரோமாபுரியில் படைவீரர்களுக்கு சங்கிலியால் கட்டப்பட்டிருக்கையில் அளிக்கப்பட்ட வாய்ப்பைக் காட்டிலும் அதிகம் பலனுள்ளதாக இருந்திருக்கவில்லை (காண்க நடபடிகள் 28:16). "சுவிசேஷம் பிரபலமாகுதல்" பற்றிப் பேசியபின்பு (பிலிப்பியர் 1:12) அவர், "அரமனையெங்குமுள்ளவர்களுக்கும் [praetorian guard] *மற்ற யாவருக்கும் என் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று வெளியரங்கமாகி" என்று கூறினார் (வசனம் 13).*

"Praetorium" *என்பது* "praetorian guard" *என்ற கிரேக்கச் சொற்றொடரின் ஆங்கிலப்படுத்தப்பட்ட வடிவமாக இருக்கும். சிலர், இது பேரரசின் அரண்மனையைக் குறிக்கிறது என்று நினைக்கின்றனர்* (KJV *யில் காணவும்). சுவிசேஷமானது இராயனின் அரண்மனை சென்றடைந்தது என்பது உண்மையாக இருக்கையில் (4:22), 1:13ல் பயன்படுத்தப்பட்டுள்ளபடி இவ்வார்த்தை அரண்மனைக் காவலர்களைக் குறிக்கிறது என்று பெரும்பான்மையான கல்வியாளர்கள் நம்புகின்றனர். இந்தச் சிறு குழுவான போர்வீரர்கள், ரோமானியப்படையில் மிகவும் நேர்த்தியான படைப்பிரிவாக இருந்தனர்.*[6] *அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்தாயிரம் இத்தாலியத் துருப்புகளாக இருந்தனர், இவர்கள் யாவரும் நூற்றுக்கு அதிபதியின் (நூறு போர்வீரர்கள் மீது அதிகாரம் கொண்ட ஒரு அலுவலர்) தகுதிக்கு இணையான பதவி ஒன்றைக் கொண்டிருந்தனர். மற்ற கடமைகளுடன், இவர்கள் பேரரசரின் மெய்க்காவலர்களாக இருந்தனர். இவர்கள் ரோமாபுரியில் மிகுந்த செல்வாக்குச் செலுத்தியிருந்தனர் மற்றும் பிற்பாடு ரோமப்பேரரசின் அரசர்களை ஏற்படுத்துபவர்கள் ஆயினர். இவர்கள், இரட்டை ஊதியம் மற்றும் ரோமாபுரியில் தங்களுக்குச் சொந்தமான வீடு ஆகியவை உட்பட, விசேஷித்த சலுகைகளைக் கொண்டிருந்தனர். பன்னிரெண்டு முதல் பதினாறு ஆண்டுகள் வரையில் பணியாற்றிய பின்பு, இவர்கள் ஓய்வுபெற்ற போது, இவர்களுக்கு ரோமக்குடியுரிமையும் தாராளமான நிதியும் தரப்பட்டது. இந்த படையினரிடத்தில் பவுல் ஒப்புவிக்கப்பட்டு இவர்களால் காவல் செய்யப்பட்டது, இவரது வழக்கிற்கு ரோம அலுவலர்களால் தரப்பட்ட முக்கியத்துவத்தைச் சுட்டிக்காண்பிக்கலாம்.*

பவுலைக் காவல் செய்வதில், ஒவ்வொரு ஆறு மணி வேளைக்கும் பணிகள் மாறுவதாக இருத்தல் என்பது நிர்ணயமான நடைமுறையாக இருந்தது. இவ்வாறாக இந்த அப்போஸ்தலர் ஒரு நாளுக்கு நான்கு போர்வீரர்கள் மீது விளைவு ஏற்படுத்தும் வாய்ப்பைக் கொண்டிருந்தார். எனது கணக்குச் சரியானதாக உள்ளதென்றால், இது இரண்டு ஆண்டுகளில் ஏறக்குறைய 2,920 தொடர்புகளாக இருந்திருக்கக் கூடும்![7] *பவுல் ஒரு கைதி என்று*

போர்வீரர்கள் நினைத்தனர் என்பதில் சந்தேகம் இல்லை, ஆனால் அவர் தமது பணிமும்முரமான [பின்வரும்] நாட்களினூடே செல்லுகையில் "சிலையாக நின்று உரையைக் கேட்பவர்களை" கொண்டிருந்தார்:

- அவர், பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் போன்ற கடிதங்களை எழுதும்படி கூறுகையில்.
- அவர், தீமோத்தேயு மற்றும் எப்பாப்பிராதீத்து போன்ற நண்பர்களுடன் பேசுகையில் (காண்க 1:1; 2:25).
- அவர், தம்மைக் காணவந்தவர்களுக்குப் போதிக்கையில் (காண்க நடபடிகள் 28:17-31).
- அவர், தேவனிடத்தில் ஜெபித்து அவரைத் துதிக்கையில். (காண்க பிலிப்பியர் 1:3, 4. இதற்கு முன்பு சிறைப்பட்டிருந்தது பற்றிக் கூறும் நடபடிகள் 16:25ம் வசனமானது, பவுல் சிறைவைக்கப்பட்டிருக்கையில் ஈடுபட்டிருந்த செயலின் வகையைக் காண்பிக்கிறது.)
- அவர், தம்மைச் சிறைப்பிடித்து வைத்திருந்தவர்களிடத்தில் பேசி அவர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில். (அவர் போர்வீரர்களுடன் பேசினார் என்று வேத வசனம் கூறுவதில்லை, ஆனால் இந்தத் தனிச்சிறப்பான வாய்ப்பை அவர் தவறவிட்டிருப்பார் என்று நீங்கள் கற்பனை செய்ய முடியுமா? காண்க ரோமார் 1:14-16.)

பவுல் தொடக்கத்தில் திட்டமிட்டபடி ரோமாபுரிக்குச் சென்று, ரோம அரங்க சாலையில் பிரசங்கித்து இருப்பார் என்றால், அநேகமாக அவர் கூறுவதைக் கவனிக்கப் போர்வீரர்களில் எவரும் அங்கு வந்து நின்றிருக்க மாட்டார்கள். இருப்பினும், அவர்கள் இரவும் பகலுமாக அவருடன் சங்கிலியால் கட்டப்பட்டு இருந்தபடியால், அவரைப் புறக்கணித்தல் என்பது கடினமானதாக இருந்திருக்கும். தேவன் அறிவுகடந்த வகையில் செயல்படுகிறார்!

இந்தப் போர்வீரர்களில் எவரேனும் கிறிஸ்தவரானார்களா? ஏவுதல் பெற்றிராத பாரம்பரியக்கூற்றின்படி சிலர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர். குறைந்தபட்சம் அவர்கள் பவுல் பிரதிநிதித்துவப்படுத்தியது என்ன என்பதைப் புரிந்துகொள்ளவாவது செய்தனர். அப்போஸ்தலர் தமது, "அரமனையெங்குமுள்ளவர்களுக்கும் மற்ற யாவருக்கும் என் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று *வெளியரங்கமாகி*" என்று கூறினார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது). அவர் குற்றம் எதையோ செய்து சிறைவைக்கப்படவில்லை, ஆனால் இயேசுவின் மீது கொண்டிருந்த தமது விசுவாசத்தின் காரணமாகவே சிறைவைக்கப்பட்டிருந்தார் என்று அவர்கள் அறிந்தனர். NIV வேதாகமத்தில், "நான் கிறிஸ்துவுக்காகக் கட்டுகளில் இருக்கிறேன் என்பது அரண்மனைக் காவலர்கள் யாவருக்கும் மற்றும் ஒவ்வொருவருக்கும் தெளிவானது" என்றுள்ளது.

மேலும் பவுல், "மற்ற யாவருக்கும்" என் கட்டுகள் "கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று" வெளியரங்கமாகி, என்றும் கூறினார் (வசனம் 13ஆ). "மற்ற யாவருக்கும்" என்பது அப்போஸ்தலர் விளைவு ஏற்படுத்திய மற்றவர்களை உள்ளடக்குவதாக இருக்கும். (இவர்களில் ஒருவர், தமது முதலாளியை விட்டு ஓடிவந்த ஒநேசிமு என்ற அடிமையாக இருந்தார்; காண்க பிலேமோன் 10-21.)

ரோமாபுரியில் செய்தி விரைவாகப் பரவிற்று. பவுல் அனேகமாக இராயனின் வீட்டார் மனமாற்றத்தில் ஒரு பங்கைக் கொண்டிருந்திருப்பார் (காண்க 4:22). தேவனுடைய செய்தியாளர் கட்டப்பட்டு இருக்கலாம், ஆனால் தேவனுடைய செய்தி அவ்வாறு இருக்கவில்லை (காண்க 2 தீமோத்தேயு 2:9)!

இவ்வாறாக, வசனம் பரவுவதற்கான தனிச்சிறந்த வாய்ப்புகள் என்பவை, அவருடைய கட்டுக்களின் விளைவாக, சுவிசேஷம் எவ்வாறு பிரபலமாயிற்று என்பதற்கான முதல் உதாரணமாக இருந்தது. ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளபடி, நீங்களும் நானும், பல வழிகளில் "கட்டப்பட்டு" இருப்பதாக உணராலாம் - ஆனால் இந்தக் "கட்டுகளில்" பெரும்பான்மையானவை மற்றவர்களுடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புகளை அளிக்கின்றன. பவுல் போர்வீரர்களுடன் கட்டப்பட்டிருக்கையில், அவர்கள் அவருடன் கட்டப்பட்டு இருந்தனர். அதுபோன்றே, கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, ஆனால் மற்றவர்களும், விரும்பத்தக்கதற்கு குறைவான சூழ்நிலைகளில் கட்டப்பட்டிருக்கின்றனர் - இது அவர்களின் மீது விளைவு ஏற்படுத்த வாய்ப்புகளை அளிக்கிறது. ஒரு தாயானவள் வீடு நிறைய உள்ள சிறுகுழந்தைகளுடன் "கட்டப்பட்டு" இருப்பதாக உணரலாம்; ஆனால் அந்தக் குழந்தைகளுக்கு அவள் கர்த்தருடைய வழியைப் போதித்தால் (உபாகமம் 6:7), இராஜ்யத்தில் அந்தப் பிள்ளைகள் செய்யவிருக்கும் நற்செயல்கள் என்ன என்று யார் அறிவார்?[8] ஒரு பெண், விசுவாசியாயிராத தனது துணையுடன் "கட்டப்பட்டிருப்பதாக" உணரலாம், ஆனால் அவருக்கு ஒரு நல்ல உதாரணமாக இருக்கும் வாய்ப்பை அவள் கொண்டிருக்கிறாள் (காண்க 1 பேதுரு 3:1, 2). ஒரு வேலைக்காரர் தாம் விரும்பாத ஒரு வேலையுடன் "கட்டப்பட்டிருப்பதாக" உணரலாம், ஆனால் பெரும்பான்மையான வேலைகள், உடன் வேலை செய்பவர்களுக்குப் போதிப்பதை உள்ளடக்கி இருக்கின்றன. பல மக்கள் உடல் ரீதியான கோளாறுகளினால் "கட்டப்பட்டிருக்கின்றனர்," ஆனால் அப்படிப்பட்ட வாய்ப்புகள் கிறிஸ்துவின் ஊழியத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. உடல் இயலாமையுடன் இருக்கும் சிலர், தேவனுக்கு ஊழியம் செய்யவும் மற்றவர்களுக்கு உதவவும் வேறு வகையில் தாங்கள் பெற்றிருக்கக் கூடாத நேரத்தை அந்த நிலையில் கொண்டிருப்பதைக் கண்டறிந்து இருக்கின்றனர். எனக்குத் தெரிந்த, வீட்டோடு இருக்கும் ஒரு பெண்மணி, அட்டைகள், கடிதங்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் ஆகியவற்றைக் கொண்டு மற்றவர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

இரட்சிக்கப்பட்டவர்களுக்குத் தைரியம்

பவுலின் கட்டுகள் சுவிசேஷம் பிரபலமாவதற்கு எவ்வாறு உதவின என்பதற்குப் பவுல் இரண்டாவது உதாரணம் ஒன்றைக் கொடுத்தார்: அவைகள் இரட்சிக்கப்பட்டவர்களுக்குத் தைரியம் அளித்தன. அவர், "சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன்கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள்" என்று எழுதினார் (வசனம் 14). இது ஒருசில வசனங்களுக்குப் பிற்பாடு பவுல் குறிப்பிட்டதைப் போன்று முற்றிலும் உண்மையாக இருக்கவில்லை - ஆனால் இது பெரும்பான்மையும் உண்மையாக இருந்தது.

பவுல் சிறைவைக்கப்பட்டது மற்றவர்களுக்குத் தைரியத்தை எவ்வாறு கொடுத்தது? பவுல் தம்மைப் பாரமரித்துக் கொள்வதற்குக் கர்த்தர்மீது எவ்வளவு

நம்பிக்கைவைத்திருந்தார் என்று அவர்கள் கண்ட போது, ஒருவேளை இது தேவன்மீது அவர்கள் கொண்டிருந்த தைரியமான நம்பிக்கையைப் பெருகச் செய்திருக்கலாம். அப்போஸ்தலர் தமக்குத் துன்பங்கள் ஏற்பட்டிருந்தாலும், அவர் கொண்டிருந்த உறுதிப்பாடு, அவர்கள் தங்களுக்கு என்ன விதமான இகழ்ச்சி வந்தபோதும் அவற்றை எதிர்கொள்ள அவர்களுக்குத் தைரியத்தைக் கொடுத்திருக்கலாம். விலங்கிடப்பட்டுள்ள ஒரு மனிதர் மூலமாகத் தேவன் பெரிய செயல்களைச் செய்ய முடியும் என்றால், தங்கள் மூலமாகவும் அவர் பெரிய செயல்களைச் செய்யமுடியும் என்று அவர்கள் பகுத்தறிந்து இருக்கலாம். சுவிசேஷத்திற்காகப் பேசும் முக்கிய பேச்சாளர்களில் ஒருவர் தமது நடமாட்டத்தில் கட்டுப்படுத்தப்பட்டிருக்கையில் சுவிசேஷம் பாதிக்கப்படாதபடிக்கு அவர்கள் தங்கள் முயற்சிகளைப் பெருக்கமடையச் செய்வதற்குப் பவுலின் துன்பங்கள் காரணமாக இருந்திருக்கலாம்.

14ம் வசனம், "பிரசங்கித்தல்" என்பதற்குப் பதிலாக "சொல்லுதல்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறது. "பிரசங்கித்தல்" என்பதற்கான வழக்கமான கிரேக்க வார்த்தையானது (*karusso*, "அறிவிக்க") வெளியரங்கமான அறிவித்தலை மறைமுகமாக உணர்த்துகையில், இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தையானது (*laleo* என்பதன் ஒரு வடிவம்) "பேச" என்ற அர்த்தம் கொண்ட சாதாரண கிரேக்கச் சொற்றொடர்களின் ஒன்றாக உள்ளது. இவ்விடத்தில் வெளியரங்கமான அறிவித்தல் மீதல்ல ஆனால் ஒவ்வொரு கிறிஸ்தவராலும் சுவிசேஷம் தினந்தோறும் பகிர்ந்து கொள்ளப்படுதல் மீது வலியுறுத்தம் உள்ளது என்று விளக்கவுரையாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர் (காண்க நடபடிகள் 8:1, 4).

கிறிஸ்தவத்தைத் தொடக்க காலத்தில் விமர்சித்தவர்களில் ஒருவரான செல்ஸஸ் என்பவர், "தோல் பதனிடும் வேலை செய்பவர்கள், கம்பளிவேலை செய்பவர்கள், செருப்பு தைப்பவர்கள், மிகவும் கல்வி அறிவற்றவர்கள் மற்றும் மனித குலத்தில் கேவலமானவர்களே சுவிசேஷத்தை வைராக்கியத்துடன் பிரசங்கிப்பவர்களாக உள்ளனர்" என்று எழுதினார்.[9] செல்ஸஸ் இதை ஒரு விமர்சனமாகக் குறிப்பிட்டார், ஆனால் இது ஒரு உயர்வான புகழ்ச்சியாக இருக்கிறது. "வர்த்தகரின் காசு வாங்குமிடம், வரிவசூலிப்பவரின் எழுது மேஜை, விவசாயியின் உழவுக் கைப்பிடிகள் அவர்களின் பிரசங்க மேடைகளாக இருந்தன."[10] பவுல் சிறையில் வைக்கப்பட்டிருந்தது கிறிஸ்தவர்களுக்கு இதுபோன்ற மாபெரும் நம்பிக்கையைக் கொடுத்தது.

அவர் தேவனுடைய சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுதலைக் கண்டார் (1:15-18)

பவுல் சிறைப்படுத்தப்பட்டிருத்தலின் சிறுமையைச் சகித்துக் கொள்ள வேண்டியிருந்தது மட்டும் இன்றி, அவர் தம்மை இகழ்ச்சி செய்து தமக்குத் துன்பம் விளைவிக்க முயற்சி செய்த சகோதரர்களினால் ஏற்பட்ட வேதனையையும் சகித்துக் கொள்ள வேண்டியதாக இருந்தது. இதை அவர்கள் கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கித்தல் மூலமாகச் செய்தனர் என்பதுதான் வினோதமானதாக இருந்தது!

சிலர் பொறாமையினாலும் விரோதத்தினாலும், சிலர் நல்மனதினாலும்

கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள். சிலர் என் கட்டுகளோடே உபத்திரவத்தையுங்கூட்ட நினைத்து, சுத்தமனதோடே கிறிஸ்துவை அறிவியாமல், விரோதத்தினாலே அறிவிக்கிறார்கள். சுவிசேஷத்திற்காக நான் உத்தரவு சொல்ல ஏற்படுத்தப்பட்டவனென்று அறிந்து, சிலர் அன்பினாலே அறிவிக்கிறார்கள் (வசனங்கள் 15-17).[11]

"சில" மனிதர்கள் பவுல் மீதான "நல்லெண்ணம்" மற்றும் அவர் மீதான "அன்பினாலே கிறிஸ்துவைப் பிரசங்கித்தனர்." உண்மையில் "பெரும்பான்மையானவர்கள்" இதைச் செய்தனர் (1:14). அவர்கள் பவுலையும், அவர் எதற்காக நின்றாரோ அந்தக் காரணத்தையும் மற்றும் அவர் செய்ய முயற்சித்துக் கொண்டிருந்ததையும் பாராட்டினர். அவர் "சுவிசேஷத்திற்கு உத்தரவு சொல்ல நியமிக்கப்பட்டவராக" இருந்தார் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். சந்தர்ப்பப் பொருளில் "நியமிக்கப்பட்டவர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை "தெய்வீகத்தினால் நியமிக்கப்பட்டவர்" என்ற கருத்தை மறைமுகமாக உணர்த்துகிறது. பவுல், *இயேசுவைப் பற்றிய* நற்செய்திக்கு உத்தரவு சொல்ல "நியமிக்கப்பட்டிருந்தார்." அவர் விரைவிலேயே இராயனின் நீதிமன்றத்திற்குச் சொல்ல வேண்டியிருந்தது என்றாலும், அவர் தம்மைத் தற்காத்துக்கொள்ளுதல் பற்றி அக்கறைப்படவில்லை; சுவிசேஷத்தைத் தற்காத்துக்கொள்வதே அவருடைய அக்கறைக்குரிய விஷயமாக இருந்தது!

எதைப்பற்றி நாம் நிச்சயமாக இருக்க முடியாது

இருப்பினும் சில சகோதரர்கள், தவறான நோக்கங்களுக்காகக் கிறிஸ்துவைப் பிரசங்கித்து, பவுலின் துன்பத்தைப் பெருகச்செய்ய நம்பிக்கையாயிருந்தனர். அவர்கள் யாராக இருந்தனர்? இந்த மனிதர்கள் கடந்த காலத்தில் அப்போஸ்தலரைத் துன்புறுத்திய யூதர்களாகவோஅல்லது அவிசுவாசிகளாகவோ இருந்திருக்கமாட்டார்கள். அவ்வப்போது பவுல், தமது சக யூதர்களை, மாம்சத்தில் தமது சகோதரர்களைக் குறிப்பதற்கு "சகோதரர்" என்ற வார்த்தையைக் பயன்படுத்தினார் (காண்க 1:14); ஆனால் அப்படிப்பட்ட மனிதர்கள் "கிறிஸ்துவைப் பிரசங்கித்து" இருக்கமாட்டார்கள் (வசனம் 15). மேலும், இவர்கள் - கிறிஸ்தவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பது அவசியம் என்று போதித்த யூதக்கிறிஸ்தவர்களான - யூதத்துவப் போதகர்களாக இருந்திருக்கவும் முடியாது. *அவர்களின்* செய்தியில் பவுல் ஒருக்காலும் அகம்மகிழ்ந்து இருக்கமாட்டார் (காண்க காலத்தியர் 1:8, 9; 5:2-4), ஆனால் அவர் பிலிப்பியர் 1:18ல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களின் செய் தியில் அகம் மகிழ்ந்தார். இவ்வசனப் பகுதியைக் கவனத்துடன் வாசியுங்கள். *செய்தியில்* அல்ல ஆனால் செய்தியாளர்களின் *நோக்கத்திலேயே* பிரச்சனை இருந்தது.

பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தது யார் என்பதைப் பற்றி நாம் உறுதியாக எதுவும் கூற இயலாது, ஆனால் அவர்கள் அனேகமாக, ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவ சுவிசேஷ ஊழியக்காரராக இருந்திருக்க வேண்டும். பவுல் சென்று சேருகையில் சபை ஏற்கனவே நிலைநாட்டப்பட்ட ஒருசில இடங்களில் ஒன்றாக ரோமாபுரி இருந்தது. சட்டப்படி அவர், "மற்றொருவனுடைய

அஸ்திபாரத்தின்மேல் கட்டாதபடிக்கு” இருத்தலை அவர் தேர்ந்துகொண்டார் (ரோமர் 1:11-15). ஒருவேளை, ரோமாபுரியில் இருந்து சுவிசேஷம் ரோமப்பேரரசின் எல்லா மூலைகளுக்கும் பரவ முடியும் என்று அவர் அறிந்தார் என்பதே இதற்கு ஒரு காரணமாக இருந்தது எனலாம்.

இதற்கு ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கு முன்பு,[12] பவுல் ரோமாபுரியில் இருந்த சபைக்கு ஒரு நிருபத்தை எழுதியிருந்தார், அதில் இரண்டு டஜனுக்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான கிறிஸ்தவர்கள் பெயருடன் குறிப்பிடப்பட்டிருந்தனர் (ரோமர் 16:3-16). அந்த நகரில் இருந்த சபையானது அப்போஸ்தலர் அங்கு சென்ற காலத்தில், திறன்மிக்க சுவிசேஷ ஊழியர்கள் பலரைக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டு இருந்தது என்பதில் சந்தேகமில்லை.

துரதிர்ஷ்டவசமாக, இவர்களில் சிலர் பவுலை விரும்பாதிருந்தனர். அது ஏன் என்று நமக்குத் தெரியவில்லை. பவுலிடத்தில் அவர்கள் கொண்டிருந்த விரோத உணர்வு ரோமாபுரியின் சபையில் இருந்த எல்லாராலும் பகிர்ந்து கொள்ளப்படவில்லை (காண்க நடபடிகள் 28:14ஆ-16அ). ஒருவேளை குறிப்பிட்ட இந்தச் சுவிசேஷ ஊழியர்கள் சபையை குறித்த நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்ப முயற்சி செய்திருக்கலாம், அவர்கள் பவுல் ஒரு கைதியாக அந்த நகருக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது பற்றிச் சங்கடம் அடைந்திருக்கலாம். அப்போஸ்தலருக்குத் தரப்பட்ட கவனம் குறித்து அவர்கள் பொறாமை கொண்டிருக்கக்கூடச் சாத்தியமுள்ளது. அவர்கள் தங்கள் சொந்த நடத்துவத்துவப் பணிப்பொறுப்புகள் அச்சுறுத்தப்பட்டதாக உணர்ந்திருக்கலாம்.

இந்த மனிதர்கள் “[பவுலின்] கட்டுகளோடே உபத்திரவத்தையுங்கூட்ட நினைத்து” சுவிசேஷத்தை பிரசங்கிக்க முடிவு செய்தனர் என்பதுதான் சூழ்நிலையின் மிக வினோதமான பாகமாக இருக்கிறது. ஒருவேளை அவர்கள், தாங்கள் கொண்டிருந்த அதே சுயநல மையங்கொண்ட நோக்கங்களைப் பவுலும் கொண்டிருப்பார் என்று யூகித்திருக்கலாம். ஆகவே அவர்கள், தங்கள் பிரசங்கித்தலில் பவுலைக் காட்டிலும் அதிகம் “வெற்றி நிறைந்தவர்களாக” இருந்தால், அது அவரை வருத்தம் அடையச் செய்யும் என்று யூகித்திருக்கலாம். சுவிசேஷத்தைத் தீவிரமாகப் பிரசங்கித்தலானது ரோம அதிகாரிகளைத் தொந்தரவு செய்து பவுலைக் கடினமாக உபத்திரவப்படுத்தும்படியான செயல் விளைவை அவர்களிடம் ஏற்படுத்தும் என்று அவர்கள் நினைத்திருப்பார்கள் என்ற இன்னொரு சாத்தியக்கூறும் உள்ளது. அவர்கள் இவ்வாறு சிந்தித்து இருப்பார்கள் என்றால், அவர்களும் கூட எதிர்விதமாகப் பாதிப்பை அடையக்கூடும் என்றும் அவர்கள் உணர்ந்து அறிந்திருக்க வேண்டும். இருப்பினும் பொறாமையானது ஒருக்காலும் தர்க்கரீதியானதாக இருந்ததில்லை.

எதைப்பற்றி நாம் நிச்சயமாக இருக்க முடியும்

தவறான காரணங்களுக்காகக் கிறிஸ்துவைப் பிரசங்கித்து யார் அல்லது ஏன் என்பது பற்றி நம்மால் நிச்சயமாக ஒன்றும் கூற இயலாது, ஆனால் கர்த்தரைச் சேவிப்பதில் தூய்மையற்ற நோக்கங்கள் கொண்டிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது என்று நமது வேதவசனப் பகுதியில் இருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும். பவுலைப் புண்படுத்த முயற்சி செய்தவர்களின் நோக்கங்களைக் கண்ணோக்கச் சற்று நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். 15ம் வசனம், சிலர் “பொறாமையினாலும் விரோதத்தினாலும், ... கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள்”

என்று கூறுகிறது. இந்தப் பிரசங்கியார்கள் தங்களைப் பவுலுக்குப் போட்டியாளர்களாகக் கண்டனர் என்பது தெளிவு. பொறாமையும் விரோதமும் ஒன்றாகவே செல்லுகின்றன மற்றும் இவை எப்போதுமே சபையின்மீது ஒரு சாபமாகவே இருந்துள்ளன.

16ம் வசனம், அவர்கள் கிறிஸ்துவை "விரோதத்தினாலே அறிவிக்கிறார்கள்" என்று கூறுகிறது. கிரேக்க வசனப்பகுதியில் உள்ள வார்த்தையானது "கூலிக்கு சேவிக்க" என்ற தோற்றகால அர்த்தம் கொண்டுள்ளது.[13] பின்பு அது, கூலிக்காக மாத்திரம், சுயபயனுக்காக மாத்திரம் ஊழியம் செய்யும் ஒருவரைக் குறிப்பிட வந்தது. கடைசியாக அது, அரசியலில் இணைவு கொண்டிருக்க வந்தது: எந்த விலை கொடுத்தாகிலும் ஆதரவைப் பெற வேலைசெய்தல், மக்களை ஒருவரின் "பக்கத்தில்" அணி திரளச் செய்தல்.

முதல் நூற்றாண்டில் இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் இருந்தனர் என்று நம்புவதை நீங்கள் சிரமமானதாகக் காண்கிறீர்களா? அவர்களைப் போன்ற சிலர் இன்றைய நாட்களிலும் நம்மைச் சுற்றி இருக்கிறார்களோ என்று நான் அஞ்சுகிறேன். நம்மால் மற்றவர்களின் குறைபாடுகளைச் சுலபமாகச் சுட்டிக்காண்பிக்க முடிகிறது, ஆனால் நம்மையே நாம் கண்ணோக்குவோமாக. கிறிஸ்தவ ஊழியத்திற்கான நமது நோக்கங்கள் எப்போதாவது "தூய்மை" என்பதைக் காட்டிலும் குறைவானதாக இருக்கின்றனவா? பிரசங்கிக்க விரும்புகிறவர்களுக்கு முதலில் ஒரு வார்த்தையை நான் கூறுவேன்: பிரசங்கித்தல் என்பது "ஒரு நல்ல [வசதியான] வாழ்வை" அல்லது "ஒரு சுலபமான [சுகமான] வாழ்வை" ஏற்படுத்துவதற்கான வழியாக *இருப்பதில்லை*. பிரசங்கித்தல் என்பது மரியாதை மற்றும் கவனத்தை ஆதாயப்படுத்துவதற்கான வழிமுறையாகக் கையாளப்படக் *கூடாது*; அது ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கு தேவனை மகிமைப்படுத்துவதற்குமான வழியாக *உள்ளது*. பிரசங்கியாது இருப்பவர்களிடத்திலும் நான் பேசுவேன். நம்மில் ஒவ்வொருவரும் கிறிஸ்துவினித்தம் நாம் செய்கின்றவற்றை ஏன் நாம் செய்கிறோம் என்று பரிசீலனை செய்து பார்த்தல் அவசியமாக உள்ளது. நாம் புகழ்ச்சி அல்லது கவனத்தை விரும்புவதால் ஒருசில பணிகளில் செயல்படுகிறோமா? நாம் "பாராட்டப்படவில்லை" என்று உணர்ந்தால் உடனே அதிலிருந்து வெளியேறி விடுகிறோமா? தேவனுக்கு "தூய்மையான நோக்கங்களுடன்" ஊழியம் செய்ய அவர் நமக்கு உதவுவாராக.

பவுல் கசப்புணர்வு உடையவராகி இருக்கலாம். அவர், "நான் ஏற்கனவே நான்கு ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறையில் இருந்திருக்கிறேன், மற்றும் சகிக்க இயலாத இந்தச் சூழ்நிலையில் மிகச்சிறந்தவற்றைச் செய்ய நான் முயற்சித்திருக்கிறேன். நான் போதித்துக் கொண்டும் நிருபங்களை எழுதிக் கொண்டும் நல்ல நடக்கையைப் பராமரிக்க முயற்சிசெய்து கொண்டும் இருக்கிறேன். இப்போது இங்கே *எனது சொந்த சகோதரர்களே* என்னைப் புண்படுத்த முயற்சி செய்கின்றனர்! அது நியாயமானதல்ல!" என்று கூறியிருக்க முடியும். அதற்குப் பதிலாக அவர், "இதனாலென்ன? வஞ்சகத்தினாலாவது, உண்மையினாலாவது, எப்படியாவது, கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார்; அதனால் சந்தோஷப்படுகிறேன், இன்னமும் சந்தோஷப்படுவேன்" என்று கூறினார் (வசனம் 18). இது "மாபெரும் மனிதர்களில் ஒருவரால் கூறப்பட்ட மிகக் கண்ணியமான கூற்றுகளில் ஒன்றாகும்" என்று அழைக்கப்பட்டுள்ளது.[14] பவுல்,

பவுலைக் குறித்துக் கவலை கொண்டிருக்கவில்லை. அவர் சுவிசேஷத்தைக் குறித்து அக்கறை கொண்டிருந்தார். அவர் தம்மைச் குறித்து விமர்சகர்கள் என்ன நினைத்தனர் என்பது பற்றி நிலைகுலைந்து போகவில்லை, ஆனால் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதைப் பற்றி சந்தோஷம் அடைந்தார்.

முன்னெச்சரிக்கையான இரு குறிப்புகள் இவ்விடத்தில் முறையானவையாக உள்ளன: முதலாவது, ஒருவரின் நோக்கங்கள் முக்கியமானவைஅல்ல என்று பிலிப்பியர் 1:18 போதிப்பதில்லை. ஒரு விஷயத்தை நாம் *ஏன்* செய்கிறோம் என்பது தேவனுடைய பார்வையில் முக்கியமானதாக உள்ளது என்று ஏற்கெனவே நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம் (காண்க 1 கொரிந்தியர் 13:1-3; ரோமர் 16:17, 18; 2 கொரிந்தியர் 9:7). இரண்டாவது, மற்றவர்களின் மோசமான நோக்கங்களுக்காக அவர்களைக் குற்றப்படுத்துவதற்கு ஒரு முன் எடுத்துக்காட்டை பிலிப்பியர் 1:18 அமைத்து வைப்பதில்லை. பவுலைப் போலின்றி, நீங்களும் நானும் ஏவுதல் பெற்றிருப்பதில்லை மற்றும் நாம் பிறரின் நோக்கங்கள் பற்றி அதிகாரத்துவத்துடன் பேச முடியாது. நாம் *நமது சொந்த* நோக்கங்களை நன்கு பரிசீலனை செய்து மற்றவர்களின் நோக்கங்களைக் கர்த்தர் நியாயந்தீர்க்க விட்டுவிட வேண்டும் (காண்க எபிரெயர் 4:13; ரோமர் 2:16).

பிலிப்பியர் 1:18ல் இருந்து நாம் என்ன கற்றுக்கொள்ள *முடியும்*? தவறாக நடத்தப்படுதல் பற்றிய அழிவுக்குரிய சிந்தனைகளினால் நமது மனங்களை குழப்பம் அடையச் செய்துவிடக்கூடாது என்று நாம் கற்றுக்கொள்ள முடிகிறது. உண்மையான அல்லது கற்பனை செய்யப்பட்ட தவறாக நடத்தப்படுதலில் இருப்பவர்கள் பரிதாபகரமான நிலையில் உள்ளனர். மேலும் நன்மை செய்கின்ற மக்களை, அவர்கள் மிகத்தூய்மையான நோக்கங்களுக்காக அவற்றைச் செய்யவில்லையோ என்று நாம் சந்தேகப்பட்டாலும்கூட, நாம் அவர்களைப் பாராட்டக் கற்றுக்கொள்ள முடியும். மற்றவர்களில் உள்ள எதிர்மறையானவற்றை அல்ல, ஆனால் நேர்மறையானவற்றை நாம் கண்ணோக்குதல் அவசியமாக உள்ளது.

அவர் தேவனுடைய தயவின் அளிப்பைக் கண்டார் (1:19, 20)

பவுல் தமது சூழ்நிலையைக் கண்ணோக்கியபோது வேறு எவற்றைக் கண்டார்? நிகழ்வுகள் "ஒரு சந்தோஷமான முடிவில்" உச்சகட்டம் அடைவதை அவர் கண்டார்:

> அது உங்கள் வேண்டுதலினாலும் இயேசுகிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று அறிவேன். நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப்போகாமல், எப்போழுதும்போல இப்பொழுதும், மிகுந்ததைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய், அப்படி முடியும் (வசனங்கள் 19, 20).

இவ்வசனங்களில் அப்போஸ்தலர் தாம் ஏன் சந்தோஷம் அடைந்தார் என்பது பற்றித் தொடர்ந்து கூறினார் ("அது" என்ற வார்த்தை 19 மற்றும்

20ம் வசனங்களை 18ம் வசனத்துடன் பிணைக்கிறது). இவ்விரு வசனங்களும் வலிவுடன் அதிர்ந்து துடிக்கின்றன. 19ம் வசனத்தில் பவுல், "அறிவேன்" என்று கூறினார், இது "அறிதல்" என்பதற்கான வழக்கமான வார்த்தையாக இருக்கவில்லை, ஆனால் "உறுதியான நம்பிக்கையுடன் கூடிய அறிவு" என்பதைக் கருத்தாக தெரிவிக்கும் வார்த்தையாக உள்ளது.[15] 20ம் வசனம், பவுலின் "வாஞ்சையை [ஊக்கமான எதிர்பார்ப்பை]" குறிக்கிறது. "வாஞ்சை" என்பது *apo* ("இருந்து புறம்பே") என்ற முன்னிடைச் சொல்லை *kara* ("தலை") என்ற பெயர்ச்சொல்லுடனும் *dokein* ("கண்ணோக்க") என்ற வினைச்சொல்லுடனும் இணைக்கும் *apokaradokia* என்ற கிரேக்கக் கூட்டு வார்த்தையில் இருந்து வருகிறது. இந்த வார்த்தை "விருப்பம் கொண்டுள்ள குறிக்கோள் மீது கவனத்தை நிலைநிறுத்துவதற்காக மற்ற எல்லாவற்றில் இருந்தும் திரும்புகிற, ஆவலான, வலிவான கண்ணோக்கு" ஒன்றைக் குறிக்கிறது.[16]

பவுலின் இரட்சிப்பு [விடுதலை]

நடந்துகொண்டிருந்த ஒவ்வொரு விஷயத்தின் மீதும் பவுல் தமது பார்வையை நிலைநிறுத்துகையில், அவர் இரண்டு நல்ல விளைவுகளைக் கண்டார். முதலாவது அவரது சொந்த விடுதலை: "அது உங்கள் வேண்டுதலினாலும் இயேசுகிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று அறிவேன்." ஆங்கில வேதாகமத்தில் "விடுதலை" ["deliverance"] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை (இது *soterias* என்பதன் ஒரு வடிவமாகும்) "இரட்சிப்பு" என்று மிகப் பொதுவாக மொழிபெயர்க்கப்படுகிறது (KJV மற்றும் தமிழ் வேதாகமத்தில் காண்க). "இரட்சிப்பு" என்பது தன்னில்தானே ஒரு "வெறுமையான" வார்த்தையாக உள்ளது என்பதைச் சிலவேளைகளில் நாம் மறந்துபோகும் அளவுக்கு அது, நமது விசுவாசத்தின் அவ்வளவு வலிவார்ந்த பாகமாகவும் அவ்வளவு விலையேறப்பெற்ற வார்த்தையாகவும் உள்ளது. அவ்விடத்தின் சந்தர்ப்பப் பொருளானது, பேரழிவில் இருந்து ஒருவர் இரட்சிக்கப்பட்ட நிலையைச் சுட்டிக்காண்பிப்பதாக இருக்க வேண்டும். பவுல் தமது சிந்தையில் எவ்வகையான "விடுதலை"/"இரட்சிப்பு" என்பதைக் கொண்டிருந்தார்? ஒரு சில சாத்தியக்கூறுகள் யாவை?

- சிறைவைப்பில் இருந்து விடுவிக்கப்படுதல்? ஒருவேளை இருக்கலாம், ஆனால் பவுல் தமது விடுதலை பற்றி நம்பிக்கையாயிருக்கவில்லை (காண்க 2:17, 23, 24). *"அறிவேன்"* என்ற சொற்றொடர் அவர் விடுதலை ஆவதற்கு மாத்திரம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால், அது சற்றே பலத்ததாகக் காணப்படுகிறது.
- தமது விரோதிகளின் இகழ்ச்சி மற்றும் தவறாக நடத்தப்படுதல் ஆகியவற்றில் இருந்து விடுவிக்கப்படுதல்? இருக்கலாம். செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பில் யோபு 13:16ல் உள்ள அதே சொற்றொடராக்கத்தைக் பவுல் பயன்படுத்தினார். பவுல், யோபுவின் புத்தகத்தில் இருந்து மேற்கோள் காண்பித்தார் என்றும் யோபு அர்த்தப்படுத்தியதையே பவுலும் அர்த்தப்படுத்தினார் என்றும் பல விளக்கவுரையாளர்கள் நம்புகின்றனர்: "என் நீதி விளங்கும்" (காண்க யோபு 13:18).
- நீரோவுக்கு முன்பாக அவர் வந்தபோது ஏற்பட்ட இக்கட்டான

சூழ்நிலையில் இருந்து விடுவிக்கப்படுதல்? ஒருவேளை அவ்வாறு இருக்கலாம்; இது அடுத்த வசனத்துடன் பிணைக்கப்பட்டிருக்கும். ரோம நீதிமன்றத்தில் முன்பாகப் பவுல் தமது வாதத்தை ஏற்படுத்தியபோது, இயேசுவின் மீது தாம் கொண்டிருந்த விசுவாசத்தைத் தைரியமாக அறிவிக்கும்படி அவர் ஜெபித்திருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை.

- நித்தியத்திற்கும் விடுவிக்க (இரட்சிக்க)ப்படுதல்? இதைப் பவுல் தமது முழுஇருதயத்தோடும் நம்பினார் (பிலிப்பியர் 1:23; காண்க ரோமர் 5:9).

பவுலின் ''விடுவிக்கப்படுதல்'' என்பது மேலே கடைசியாகக் குறிப்பிடப்பட்டதாகவே இருக்கும் என்பது எனது தனிப்பட்ட தேர்வாக உள்ளது. சட்டப்படி பவுல், "இரட்சிப்பு" என்ற வார்த்தையைப் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுதலைக் குறிப்பிடவே பயன்படுத்தினார். ஒருவேளை, இங்குள்ள "விடுவிக்கப்படுதல்" [தமிழில் "இரட்சிப்பு"] என்ற வார்த்தை மேற்கண்ட கருத்துக்களின் கலவையை உள்ளடக்கி இருக்கலாம். என்ன நடந்தாலும், பவுல் நிறைவாக "விடுதலையில்" இருப்பார்.

அவரது விடுதலைக்கு இரு விஷயங்கள் பங்களிப்பதாயிருக்கிறது, முதலாவது, பிலிப்பியர்களின் ஜெபங்களின் மூலம் கிடைத்த ஆதரவாக இருந்தது: "அது உங்கள் வேண்டுதலினாலும் ... எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று அறிவேன்." அவர்களுக்காகப் பவுல் ஜெபித்தார் (1:3, 4), மற்றும் அவர்கள் பவுலுக்காக ஜெபித்தனர் (1:19). பவுல் எப்போதுமே சக கிறிஸ்தவர்களின் ஜெபங்களை அளவு கடந்த ஆவலுடன் நாடினார் (ரோமர் 15:30-32; 2 கொரிந்தியர் 1:11; 1 தெசலோனிக்கேயர் 5:25; 2 தெசலோனிக்கேயர் 3:1, 2; பிலேமோன் 22). கிறிஸ்தவர்கள் ஒருவருக்காக மற்றவர் ஜெபிப்பது அவசியமாக உள்ளது.

பரிசுத்த ஆவியானவரின் ஆதரவு என்பது அவரது விடுதலைக்குப் பங்களித்த இரண்டாவது விஷயமாக உள்ளது: "அது ... இயேசுகிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று அறிவேன்." "உதவி" என்று தரவமைக்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையின் வேரில் இருந்துதான் நாம் "chorus" என்ற ஆங்கில வார்த்தையைப் பெறுகிறோம். இந்தச் சொற்றொடர் தொடக்கத்தில், ஒரு கிரேக்க நகரமானது ஒரு பண்டிகைக்குத் திட்டமிடும்போது ஆடல் - பாடல் குழுவின் செலவுகளுக்குப் பணம் கொடுத்தலைக் குறிப்பிட்டது. அந்த நிகழ்ச்சியை நடத்துபவர்களுக்குச் செலவிடுவதற்காக ஏராளமான தொகையைக் கொடுக்கும்படி செல்வந்தரான குடிமகன் ஒருவரிடம் அராசாங்கம் வேண்டிக் கேட்டுக்கொள்ளும். கடைசியில் இந்த வார்த்தைக்கு ஆடல் பாடல் குழுவினருடன் இருந்த இணைவு விடப்பட்டது, ஆனால் இவ்வார்த்தை தாராளமாக மற்றும் ஊதாரித்தனமாக அளித்தலின் கருத்தைத் தக்கவைத்துக் கொண்டது.[17] பரிசுத்த ஆவியானவரே "இயேசுகிறிஸ்துவினுடைய ஆவி" எனப்படுகிறார். பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக இயேசு வாக்குறுதி அளித்து அவர் தமது வாக்குறுதியை நிறைவேற்றியிருந்தார் (யோவான் 14:16, 17; நடபடிகள் 1:8; 2:1-4). வில்லியம் பார்க்ளே என்பவர் இதை, "கிறிஸ்து எனக்கு அளிக்கிற பரிசுத்த ஆவியானவரின் தாராளமான உதவி" என்று ஏற்புடைய சொற்றொடராக மொழிபெயர்த்தார்.[18]

பவுல் பரிசுத்த ஆவியானவர் தமக்குத் தாராளமாகவும் வரம்புகடந்த

வகையிலும் உதவுவார் என்று முன்னெதிர் நோக்கினார் - மற்றும் ஆவியானவர் நமக்கும் அளிக்கிறார். நாம் தண்ணீருக்குள் முழுக்காட்டப்பட்டு கிறிஸ்தவர்கள் ஆனபோது, பரிசுத்த ஆவியானவரையே ஒரு கொடையாகப் பெற்றுக்கொள்கிறோம் (நடபடிகள் 2:38). தேவனுடைய பிள்ளைகள் எல்லாருக்குள்ளும் வாசம்செய்கிற பரிசுத்த ஆவியானவர், பெலம் மற்றும் உதவியின் ஆதாரமூலமாக இருக்கிறார் (ரோமர் 8:11-13, 26-28). "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" என்று எழுதியபோது பவுல், ஆவியானவரிடத்தில் இருந்து வரும் உதவியையும் உள்ளடக்கி இருக்கலாம் (பிலிப்பியர் 4:19).

கிறிஸ்து மகிமைப்படுதல்

இயேசு மகிமைப்படுதல் என்பது பவுல் முன்னதாகக் கண்ட இரண்டாவது நல்ல விளைவாக உள்ளது: "நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப்போகாமல், எப்பொழுதும்போல இப்பொழுதும், மிகுந்த தைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய், அப்படி முடியும்" (1:20). இந்தக் கூற்றானது அனேகமாக, இராயனுக்கு முன்பாகப் பவுல் நிற்க வேண்டியதை முன்னெதிர் நோக்குவதாக இருக்கலாம். அப்போஸ்தலர், ராஜ அறைகளுக்குள் தாம் தைரியமாக இருப்போம் என்று வெகு நம்பிக்கையாக இருந்தார் - மற்றும் இவ்வாறாக அவர் தமது வாழ்வை எந்தக் காரணத்திற்காக ஒப்புக்கொடுத்திருந்தாரோ அதனிமித்தம் தாம் "வெட்கப்பட்டுப் போகாமல்" மற்றும் கனவீனம் அடையாமல் இருப்போம் என்று உறுதியாக நம்பினார்.

வெளிப்படுத்தப்பட்ட விஷயம் *ஒவ்வொன்றும்* கடைசியில் கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் என்று அவர் நம்பினார். "மகிமைப்படுதல்" என்ற சொற்றொடர் "விரிவாக்கப்படுதல்" அல்லது "பெரிதாக்கப்படுதல்" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும்.[19] முதல் அடியில் இதன் கருத்து நமக்கு வினோதமானதாக உள்ளது. இயேசு ஏற்கனவே "பெரிதைக் காட்டிலும் பெரியவராக" இருக்கிறார் என்பதால், அவரைப் பவுல் எவ்வாறு "விரிவாக்க" அல்லது "பெரிதாக்க" முடியும்? நாம் அதை எவ்வாறு செய்ய முடியும்? "மனிதர்களின் சிந்தைகளில் அவரை நாம் மகிமைப்படுத்த முடியும்" என்பதே பதிலாக உள்ளது. உருப்பெருக்கும் கண்ணாடியானது பொருட்களை மக்கள் அதிகத் தெளிவாகக் காண உதவுவது போலவே, கிறிஸ்துவை மையமாகக் கொண்ட வாழ்வானது கர்த்தர் உண்மையில் எவ்வாறு இருக்கிறார் என்பதை மனிதகுலம் காண உதவி செய்ய முடியும்.

பவுல், "[தமது] சரீரத்தினாலே கிறிஸ்து மகிமைப்படுவாரென்று" நம்பினார். நமது சரீரங்கள் தேவனுடைய ஆலயமாக உள்ளன (1 கொரிந்தியர் 6:19) மற்றும் அவைகள் கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும் (ரோமர் 12:1). கிறிஸ்து "ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும்" - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் [பவுல்] வாழ்ந்தாலும் இறந்தாலும் - மகிமைப்படுவார் என்று பவுல் நம்பினார். அவர் தமது விசாரணைக்குப் பின்பு அனேகமாக விடுதலை செய்யப்பட்டு விடுவார் என்று நினைத்தார், ஆனால் அவர் எல்லாம் அறிந்தவராக இருக்கவில்லை. என்ன நடந்தாலும் இயேசுவை மகிமைப்படுத்தவே அவர்

தீர்மானித்தார்.

அவர், தம்மீது குற்றம் சாட்டியவர்களை எதிர்கொண்டபோது, வெட்கம் அடைவதில் இருந்து தவிர்க்கப்பட்டு இருப்போம் என்றும் கர்த்தர் மகிமை அடைவார் என்றும் முன்னெதிர் நோக்கினார். இந்த விளைவுகளுக்காக தாம் நன்மதிப்புப் பெற அவர் திட்டமிட்டு இருந்தாரா? இல்லை. மூல வசனத்தில், "வெட்கப்படுதல்" மற்றும் "மகிமையடைதல்" ஆகிய இரண்டுமே எதிர்கால *செயப்பாட்டு வினையில்* உள்ளன. இந்த செயப்பாட்டு வினையானது, வாக்கியத்தின் எழுவாயினால் *செய்யப்பட்ட* விஷயத்தைக் குறிக்கிறது. விரும்பத் தக்க விளைவிற்குப் *பவுல் தாம்* பொறுப்பாளியாக இருப்பதாக நம்பவில்லை; தேவனே அதற்குப் பொறுப்பாளியாக இருப்பார் என்று அவர் நம்பினார்.

வாழ்வைப் பவுல் கண்ணோக்கியது போன்று நாம் கண்ணோக்கினால், நமக்கு என்ன நடந்தாலும், எல்லாம் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கும் என்று நாம் நம்புவோம். தேவனுடன் நமது உறவு சரியானதாகவும் நமது சிந்தை /எண்ணப்போக்கு சரியானதாகவும் இருந்தால், தேவன் *நிச்சயமாகவே* எல்லாவற்றையும் நமது நன்மைக்கு ஏதுவாகவே திருப்புகிறார் (காண்க ரோமர் 8:28). இது நமது இருதயத்திற்கு எவ்வளவு சமாதானத்தைக் கொண்டு வரக்கூடும்!

முடிவுரை

பவுல் தமது "எலுமிச்சம்பழங்களைக்" கொண்டு "எலுமிச்சம் பழச்சாற்றை" செய்யக் கூடியவராக இருந்தார். இது எனக்கு, வாழ்வையும் அதன் பிரச்சனைகளையும் பவுல் கண்ணோக்கியது போலவே கண்ணோக்கக் கற்றுக்கொள்ள உதவுமா? நான் இந்தப் பாடத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தபோது, யாரோ ஒருவருக்கு நான், "பவுல் எனது காதுகளில், 'ரோப்பர் உன் சிந்தையை மேம்படுத்திக்கொள்!' என்று கிசுகிசுப்பது போன்று தனிப்பட்ட உணர்வைக் கொண்டுள்ளேன்" என்று கூறினேன். இதை முடிக்கும் வேளையில், அது ஒரு கிசுகிசுப்பு அல்ல, ஆனால் உரத்த குரலாக இருந்தது என்று நான் முடிவு செய்தேன்! நான் எனது சிந்தையின் மீது செயல்பட வேண்டியதாக உள்ளது. உங்களைப் பற்றிய விஷயம் என்ன?

குறிப்பு

நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் ஒரு அழைப்பை உள்ளடக்குங்கள். நீங்கள் உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு, "*கர்த்தரைப் பற்றிய* உங்கள் சிந்தை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. நீங்கள் அவரை நேசித்து அவர் மீது நம்பிக்கை வைக்கிறீர்களா? அப்படியென்றால், நீங்கள் அவரது சித்தத்தின்படி செய்வீர்கள் (யோவான் 14:15; மாற்கு 16:16)" என்று கூறலாம்.

குறிப்புகள்

[1]William Barclay, *The Letters to the Philippians, Colossians, and Thessalonians*, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 22. [2]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words*, ed. John R. Kohlenberger III with James A.

Swanson (Minneapolis: Bethany House Publishers, 1984), 468. [3]Ibid. [4]Barclay, 20; Avon Malone, *Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 35; Charles R. Swindoll, *Laugh Again* (Dallas: Word Publishing, 1992), 53; Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 67. [5]*நீங்கள் வாழும் இடத்தைப் பொறுத்து, நீங்கள் அனேகமாக இதற்கு ஒரு விவரிப்பை கண்டறிய முடியும். இரண்டாம் உலகப் போரில், கடல் தேனீக்கள் என்ற அழைக்கப்பட்ட படைப்பிரிவினர் (தற்காலிகப்பாலங்கள் மற்றும் வான்வெளிக் களங்கள் கட்டுதல் உட்பட) அமெரிக்கப் படைக்கு வழியைத் தயார் செய்வதற்காகச் சென்றனர். மற்றவர்கள் பின்பற்றி வர ஏதுவாக, காட்டினூடே ஒரு பாதையைச் சுத்தம்செய்தல் என்பது இன்னொரு விவரிப்பாக இருக்கலாம்.* [6]*இந்தப் பத்தியில் உள்ள தகவல்கள்* Wilbur Fields, *Philippians - Colossians - Philemon* (Joplin, Mo.: College Press, 1969), 27; Malone, 36; and Barclay, 21 *என்ற புத்தகம் உட்படப் பல்வேறு ஆதாரவளங்களில் இருந்து திரட்டப்பட்டவையாகும்.* [7]*அநேகமாக, 2,920 வெவ்வேறு போர் வீரர்கள் வருவதற்கு மாறாக திரும்பத் திரும்ப வந்த போர்வீரர்களே வந்திருக்கலாம். அப்போஸ்தலர் மற்றும் அவரது போதனையினால் மனம் ஈர்க்கப்பட்டவர்கள், சுழற்சி அடிப்படையில் பவுலைக் காவல் செய்யும் பணிக்குத் தங்களை நியமிக்கும்படி வேண்டிக் கேட்டுக் கொண்டிருக்கலாம்.* [8]*தனிச்சிறந்த சுவிசேஷப் பிரசங்கியார்கள் ஆன பெரும்பான்மையான பையன்களைக் கொண்ட பெரிய குடும்பங்கள் பலவற்றை நான் அறிந்திருக்கிறேன். ஒருவேளை இங்கு குறிப்பிடப்பட்டுள்ள "கட்டுகள்" ஒவ்வொன்றிற்கும் நீங்கள் விவரிப்புகள் கூறுதலைப் பற்றிச் சிந்திக்க முடியும்.* [9]Quoted in Malone, 37. [10]Ibid.

[11]KJV *மற்றும் தமிழ் வேதாகமங்களில் 16 மற்றும் 17ம் வசனங்கள் இடம் மாறியுள்ளன. கையெழுத்துப் பிரதிகளின் ஆதாரமானது* NASB *வேதாகமத்தின் வரிசை முறைக்கே ஆதரவு அளிப்பதாக உள்ளது, ஆனால் வரிசை முறைமை என்பது இவ்வசனப் பகுதியின் அர்த்தத்தை மாற்றுவதில்லை.* [12]*இது, ரோமருக்கு எழுதிய நிருபம் கி.பி. 57ன் வசந்த காலத்தில் எழுதப்பட்டிருக்கும் என்றும் பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் ரோமாபுரியில் பவுல் முதன்முறை சிறைவைக்கப்பட்டிருந்த காலத்தின் கடைசிப் பகுதியில், அதாவது கி.பி. 62ல் எழுதப்பட்டிருக்கும் என்றும் யூகிக்கிறது.* [13]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 166. General information in this paragraph came from Barclay, 23. [14]D. A. Hayes, quoted in James Burton Coffman, *Commentary on Galatians, Ephesians, Philippians, Colossians* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977), 269. [15]Pat Edwin Harrell, *The Letter of Paul to the Philippians*, The Living Word Commentary series, ed. Everett Ferguson (Austin, Tex.: R. B. Sweet Co., 1969), 68. [16]Barclay, *26. மற்ற விளக்கங்கள், "தலையைத் திருப்புவதைக் கவனித்தல்"* (Harrell, 70) *மற்றும் "ஒரு குறிக்கோள் அல்லது ஒரு இலக்கின் மீது தலையைத் திருப்பி ஒருவரின் அவயவங்கள் விருப்ப நோக்கத்துடன் கவனம் குவித்தல்"* (Malone, 39) *என்பவற்றை உள்ளடக்குகின்றன.* [17]Harell, 68; Wiersbe, 69. [18]Barclay, 24. [19]Harell, 70.

4

"இருப்பதா அல்லது இல்லாது ஒழிவதா"

[பிலிப்பியர் 1:20-30]

ஹாம்லெட் என்பது வில்லியம் ஷேக்ஸ்பியரால் எழுதப்பட்டவற்றில் நன்கு அறியப்பட்ட ஒரு நாடகம் ஆகும்.இந்த நாடகத்தில் நன்கு அறியப்பட்ட ஒருவரியாக உள்ளது, "ஹாம்லெட்" தனக்குத் தானே பேசிக்கொள்ளும் பேச்சின் தொடக்கம் ஆகும்: "இருப்பதா அல்லது இல்லாது ஒழிவதா, - அதுவே கேள்வியாகும்." [1] என்னால் பின்னோக்கி எவ்வளவு தூரம் நினைவுகூர முடியுமோ அவ்வளவு நினைவுகூருகையில், அவைகள் பிரபலமான வார்த்தைகளாக இருந்தன, ஆனால் ஹாம்லெட்டின் கேள்வியை ஒரு இளைஞன் என்ற வகையில் நான் புரிந்துகொள்ளும் வரையில் மாத்திரமே அவை அவ்வாறு இருந்தன. அவர் தற்கொலை செய்து கொள்ளுதல் பற்றிஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தார். அவர் வாழ்வு மற்றும் மரணம் ஆகிய இரண்டில் ஒன்றை முடிவு செய்ய முயற்சித்துக் கொண்டிருந்தார்: வாழ்வதா ("இருப்பதா") அல்லது சாவதா (இல்லாது ஒழிவதா). நமது தற்போதய வசனப்பகுதியில், பவுல் வாழ்வதா அல்லது மரிப்பதா எது மிக மேன்மையானது என்ற கேள்வியுடன் போராடினார்:

> ஆகிலும் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே என் கிரியைக்குப் பலனுண்டாயிருப்பதால், நான் தெரிந்துகொள்ளவேண்டியது இன்னதென்று அறியேன். ஏனெனில் இவ்விரண்டிலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்; அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம் (வசனங்கள் 22-24).

"நெருக்கப்படுகிறேன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "இரு கைப்புறங்களிலும் கற்சுவர்களைக் கொண்டுள்ள ஒரு குறுகலான இடத்தில் பக்கமாய்த் திரும்ப இயலாமல் நேராக மட்டுமே செல்லக்கூடிய நிலையில் உள்ள பயணி ஒருவரால் பயன்படுத்தப்படும்."[2] இன்றைய நாட்களில் நாம் இதை, அவர் "பாறைகளுக்கும் கடினமான இடத்திற்கும் நடுவில்" இருந்தார் என்ற கூறலாம். வாழுதல் மற்றும் இறந்து போகுதல் என்பவையே இக்கட்டான சூழ்நிலையை உண்டாக்கிய இரு சுவர்களாக இருந்தன.[3]

ஹாம்லெட்டும் பவுலும் ஒரேவிதமான கேள்விகளையே முனைப்புடன் சிந்தித்தனர், ஆனால் அவர்களுக்கு இடையில் நிலவிய நேரெதிரான பண்புதான் எப்படிப்பட்டதாக உள்ளது! ஹாம்லெட் தமது சொந்தக் கையினால் ஏற்படுத்திக் கொள்ளும் மரணத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டு இருந்தார், ஆனால்

பவுலோ விளைவைத் தேவனுடைய கரங்களில் ஒப்புவித்துக் கொண்டிருந்தார். ஹாம்லெட் இரண்டு முடிவுகளையுமே விரும்பவில்லை - அவர் வாழ்வினால் அழுத்தப்பட்டிருந்தார், ஆனால் மரணத்திற்குப் பயப்பட்டார்; பவுலுக்கு இரு முடிவுகளுமே நல்லதாகவே இருந்தன![4]

நமது வேதவசனப் பகுதியில் இருந்து நாம், வாழ்வு மற்றும் சாவு ஆகியவற்றைப் பற்றி மதிப்பு மிக்க பாடங்களைக் கற்றுக் கொள்ளுகிறோம். 20 முதல் 30 வரையிலான வசனங்கள், பவுல் வாழ்ந்தாரா அல்லது மரித்தாரா என்பதைப் பற்றி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கையாளுகின்றன.

பவுலின் இக்கட்டான சூழ்நிலை (1:20-24)

நமது முந்திய படிப்பு 20ம் வசனத்துடன் நிறைவடைந்தது: "நான் ஒன்றிலும் வெட்கப் பட்டுப்போகாமல், எப்பொழுதும்போல இப்பொழுதும், மிகுந்த தைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய், அப்படி முடியும்." பவுல், நீரோவுக்கு முன்பாகத் தாம் விசாரிக்கப்படுவதன் விளைவு என்னவாக இருந்தாலும் - தாம் விடுவிக்கப்பட்டாலும் (மற்றும் இவ்வாறாக, வாழ்ந்தாலும்) அல்லது நீதிமன்றம் தனக்கு மரண தண்டனையைக் கொடுத்தாலும், கிறிஸ்துவை மகிமைப்படுத்தத் தீர்மானித்தார்.

"ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும்" என்ற வார்த்தைகள் வாழ்வு மற்றும் மரணம் ஆகியவை பற்றிய "பவுலின் தனிமைப்புலம்பல்"[5] என்று அழைக்கப்பட்டுள்ளதைத் தூண்டிற்று. தொடர்ந்து வரும்வசனங்கள் - வாழ்வதா அல்லது மரிப்பதா, எது தமக்கு நல்லதாக இருக்கும் என்று அவர் தத்துவார்த்தமாகக் கலந்துரையாடுகையில் - பவுலின் எழுத்துக்களில் மிகவும் வழக்கத்திற்கு மாறான பகுதிகளில் ஒன்றைக் கொண்டுள்ளது:

> கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம். ஆகிலும் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே என் கிரியைக்குப் பலனுண்டாயிருப்பதால், நான் தெரிந்துகொள்ளவேண்டியது இன்னதென்று அறியேன். ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மை யாயிருக்கும்; அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம் (வசனங்கள் 21-24).

ஏற்கனவே குறிப்பிட்டபடி, ஹாம்லெட்டைப் போல் இல்லாமல் பவுல் தற்கொலையைப் பற்றி முனைப்புடன் சிந்திக்கவில்லை. மாறாக அவர், தாம் தேர்ந்துகொள்ளும் விளைவைப் பற்றித் தமது இருதயத்தில் ஆராய்ந்து கொண்டிருந்தார். இது, இந்த அப்போஸ்தலர் ஒரு தாளின் மையப்பகுதியில் ஒரு கோட்டை வரைந்தது போன்று இருந்தது. ஒரு பத்தியின் மேற்பகுதியில் "ஜீவனுக்கு" என்ற சொற்றொடர் இருந்தது. மற்றொரு பத்தியின் மேற்பகுதியில் "மரணத்திற்கு" என்ற வார்த்தை இருந்தது. பின்பு, செயல்விளைவில் அவர் இரு தலைப்புகளின் கீழ் ஒவ்வொரு மாற்றுச் செயலின் அனுகூலங்களைப்[6] பட்டியலிட்டார்.

ஜீவனுக்கு ஆதரவானவை

21ம் வசனத்தின் முதல் பாகத்தில் பவுல், வாழ்வதற்கான ஒரு காரணத்துடன் தொடங்கினார்: *ஜீவன் = கிறிஸ்து.* "கிறிஸ்து எனக்கு ஜீவன்." இது "புதிய ஏற்பாட்டின் மிகச்சிறந்த கூற்றுகளில் ஒன்றாக உள்ளது."[7] இது பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தின் இருதயம் போன்ற மையப்பகுதி என்று அழைக்கப் பட்டுள்ளது.

"எனக்கு" என்பது, வாக்கியத்தில் முதலாவது வந்து தனது வலியுறுத்தத்தைக் கொடுக்கும் கிரேக்கவார்த்தை ஒன்றிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அடிப்படையில் பவுல் "மற்றவர்களுக்கு வாழ்வு என்பது எப்படிப்பட்டதாக இருந்தாலும், *எனக்கு* அது கிறிஸ்துவாக உள்ளது" என்று கூறினார். பிலிப் என்பவரின் மொழிபெயர்ப்பில், "வாழ்வது என்பது என்னைப் பொறுத்த மட்டில் 'கிறிஸ்துவாகவே' இருக்கிறது" என்றுள்ளது. கிறிஸ்து, பவுலின் வாழ்வின் தொடக்கமாக, அவரது வாழ்வின் அறைகூவலாக, அவரது வாழ்வின் நோக்கமாக, அவரது வாழ்வின் பலமாக மற்றும் அவரது வாழ்வின் இலக்காக இருந்தது.

நம்மைப் பற்றி விஷயம் என்ன? இந்த வாக்கியத்தை நாம் எவ்வாறு "நிறைவு செய்வோம் என்று ஆழ்ந்து சிந்தியுங்கள்: ________ எனக்கு ஜீவன்." நம்மில் சிலர் கோடிட்ட இந்த இடத்தை, "பணம்," "உடைமைகள்," "புகழ்ச்சி," "அதிகாரம்" அல்லது "செல்வாக்கு" என்பது போன்ற வார்த்தையைக் கொண்டு நிரப்ப வேண்டியிருக்குமா? உலகத்தில் உங்களுக்கு மிகவும் இன்றியமையாத விஷயமாக இருப்பது எது? அது கிறிஸ்துவாகவா - அல்லது வேறு ஏதேனுமாகவா, எதுவாக உள்ளது? நமக்கு எதுமிகவும் முக்கியமானதாக உள்ளதோ அது நம்மில் செயல் விளைவை ஏற்படுத்துகிறது.

பவுல் தமக்கு நடக்கவிருந்த விசாரணைக்குப்பின்பு தாம் பிழைத்திருக்கக் கூடிய சாத்தியக் கூறு பற்றி ஆழ்ந்து சிந்தித்து, அது சரியாக இருக்கும் என்று அவர் முடிவு செய்தார். அவர் அப்பொழுதும் கிறிஸ்துவுக்கு நெருக்கமாகவே இருப்பார்.

மரணத்திற்கு ஆதரவானவை

இதற்கு மறுபுறத்தில், அவர் விடுதலை செய்யப்படாதிருக்கலாம், அவர் தமது ஜீவனை இழக்கக் கூடும். (உண்மையில் அவர் இந்தக் காலகட்டத்திற்குப் பல ஆண்டுகளுக்குப் பிற்பாடுதான், ரோமாபுரியில் இரண்டாவது முறையாக சிறைவைக்கப்பட்டிருக்கையில் மரணத்திற்கு உட்படுத்தப்பட்டார்.) 21ம் வசனத்தின் கடைசிப் பகுதியில் பவுல், இந்தச் சாத்தியக்கூறு தம்மை கவலைப்படுத்தாது இருந்தது ஏன் என்பதற்குக் காரணத்தைக் கொடுத்தார்: *சாவு = ஆதாயம்.* "... சாவு எனக்கு ஆதாயம்." 23ம் வசனத்தில் பவுல், தமது மரணத்தின் மிகவும் ஆச்சரியமான விளைவைக் குறிப்பிட்டார்; ஆனால் இந்த வேளைக்கு நாம், மிக அதிகமாக இவ்வுலகம் சார்ந்த ஆதாயம் ஒன்றைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்போம். அவர் சாவில் *நிம்மதியைக்* கண்டடைவார். அவர் களைப்பாக இருந்திருக்க வேண்டும். பிலிப்பியருக்கு எழுதிய நிருபம ானது, அவர் கடந்த காலத்தில் சகித்திருந்த மற்றும் அவ்வேளையில் சகித்துக் கொண்டிருந்த துன்பங்கள் பற்றி பல குறிப்புகளைக் கொண்டுள்ளது (1:7, 13, 17, 30; 4:3, 14). இத்துடன் கூடுதலாக, அவரது எழுத்துக்களில் இருந்து எடுக்கப்பட்ட மற்ற சாராம்சங்கள், அவர் எந்த அளவிற்கு இளைப்புள்ளவராக

இருந்திருக்க வேண்டும் என்பதைப் பற்றிய கருத்தை நமக்குத் தருகின்றன. ஏறக்குறைய பிலிப்பியருக்குப் பவுல் எழுதிய இதே வேளையில், பிலேமோனுக்கு எழுதிய நிருபத்தின் 8ம் வசனத்தில் அவர் தம்மைப் பற்றி, "ஆகையால், பவுலாகிய நான் முதிர்வயதுள்ளவனாகவும், இயேசுகிறிஸ்துவினிமித்தம் இப்பொழுது கட்டப்பட்டவனாகவும் இருக்கிறபடியால்" என்று விவரித்தார். 2 கொரிந்தியர் 11:23-28ல் அவர் தமக்கு நேர்ந்த சோதனைகளைப் பட்டியலிட்டார்:

> *அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம்; புத்தியீனமாய்ப் பேசுகிறேன்; நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன், மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம்பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும் கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன். இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது.*

வெளிப்படுத்தின விசேஷம் 14:13ன் ஆசீர்வாதங்கள் யாருக்கேனும் நடைமுறைப்படும் என்றால், அது பவுலுக்கு நிச்சயமாகவே நடைமுறைப்படும்: "கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் ... அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்." பவுலுக்கு மரணம் என்பது, பாவம், வியாதி மற்றும் கவலை ஆகியவற்றில் இருந்து விடுதலை என்பதாக இருந்தது.

இருப்பினும் நாம் 21ம் வசனத்தின் முதல் மற்றும் நிறைவுப் பகுதிகளை ஒன்றாகக் காத்துக் கொள்வதில் கவனமாக இருக்கக் கடவோம். "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்." "*கிறிஸ்துவுக்காக* வாழ்ந்தால்" *மாத்திரமே* "சாவு என்பது ஆதாயமாக" இருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் 14:13ன் ஆசீர்வாதங்கள், "*கர்த்தருக்குள்* மரிக்கிறவர்களுக்கானதாக" உள்ளது. கோடிட்ட இடத்தை நிரப்பும் பயிற்சிக்குச் சற்று நேரம் திரும்பவும் செல்லுங்கள். நேர்மையாகக் கூறவேண்டும் என்றால், "பணம் அல்லது சந்தோஷம் அல்லது கிறிஸ்துவைத் தவிர வேறு ஏதாவது எனக்கு ஜீவன்" என்று நீங்கள் சொல்ல வேண்டியிருந்தால் நிலைமை என்னவாக இருக்கும்? இங்கு நிரப்புவதற்கு மற்றசில வாக்கியங்கள் தரப்படுகின்றன: "பணம் எனக்கு ஜீவன் என்றால், சாவு எனக்கு __________"; "சந்தோஷம் எனக்கு ஜீவன் என்றால், சாவு எனக்கு __________ ." இந்தக் கோடிட்ட இடங்களை எவ்வாறு நிரப்புவது என்று

நீங்கள் உறுதியாக அறியாதிருந்தால், இதற்குப் பதிலானது மத்தேயு 16:26ல் மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது: "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" கிறிஸ்து உங்களுக்கு ஜீவனாக இருந்தால், சாவு என்பது ஆதாயமாக இருக்கும். வேறு ஏதாவது உங்களுக்கு ஜீவனாக இருந்தால், சாவு என்பது உங்களுக்கு நஷ்டமாக இருக்கும்.

ஜீவனுக்கு ஆதரவானவை

22ம் வசனத்தின் முதல் பாகத்தில், வாழ்வதற்காக இன்னொரு காரணத்தைப் பவுல் கொடுத்தார்: *ஜீவன் = பலனுள்ள கிரியை.* "ஆகிலும் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே[8] என் கிரியைக்குப் பலனுண்டாயிருப்பதால் ..." அவர் பிழைத்திருக்க வேண்டுமென்றால், அவர் தமது ஊழிய முயற்சிகளை விரிவாக்க, போதிக்கவும் மற்றும் கர்த்தருக்குக் கனிகளைச் சேகரிக்கவும், வாய்ப்புக் கொண்டிருப்பார்.

என்ன ஒரு கடினமான தெரிவு! 22ம் வசனத்தின் கடைசிப் பகுதி இது எவ்வளவு கடினமானது என்பதை வலியுறுத்துகிறது: "நான் தெரிந்துகொள்ளவேண்டியது இன்னதென்று அறியேன்." "அறிதல்" என்று தரவழைக்கப்பட்டுள்ள (Gk.: *gnorizo*) வார்த்தையானது "அறியச் செய்தல்" அல்லது "வெளிப்படுத்துதல்" என்று அர்த்தப்படுகிறது.[9] NKJV வேதாகமத்தில் "நான் எதைத் தேர்ந்து கொள்வேன் என்று என்னால் கூற முடியவில்லை" என்றுள்ளது. முடிவாகப் பவுல் இந்த விஷயத்தைத் தேவனுடைய கரங்களில் ஒப்புவிப்பார். அவர் யாக்கோபு 4:15ன் தத்துவத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார்: "*ஆண்டவருக்குச் சித்தமானால்,* ... உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம்" (என்னால் வலியுறுத்தப்படுகிறது).

மரணத்திற்கு ஆதரவானவை

முடிவெடுத்தல் சிரமமானதாக இருந்தாலும், பவுல் தமக்குச் சொந்தமான ஒரு விருப்பத் தேர்வைக் கொண்டிருந்தார். 23ம் வசனத்தின் கடைசிப் பகுதி, அவர் மரணத்தைத் தேர்ந்து கொள்ள ஒரு உச்சபட்சமான காரணத்தைக் கொடுக்கிறது: *மரணம் = கர்த்தருடனே இருக்கும்படி பிரிதல்.* "... தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்." "கர்த்தருடன் இருக்கும்படி பிரிதல்" என்பது எவ்வளவு நேர்த்தியானதாக இருக்கும் என்பதை வலியுறுத்துவதற்கு, அப்போஸ்தலர் மூன்று ஒப்பீடுகளைப் பயன்படுத்தினார். அது *"நன்மையானதாக"* மாத்திரமல்ல, ஆனால் "*அதிக* நன்மையாயிருக்கும்." அது "*மிக அதிக* நன்மையாய் இருக்கும்"! [இவ்விடத்தில் NASB வேதாகமத்தில் "very much better" என்றுள்ளது.]

இந்த வாழ்வை விட்டுப் பிரிதல் எவ்வளவு மேன்மையாக இருக்கும் என்பதை பவுல் எவ்வாறு அறிந்தார்? அவர் "மூன்றாம் வானம்வரைக்கும் ... பரதீசுக்குள் எடுக்கப்பட்ட" போது, அனேகமாக, வரவிருக்கும் உலகத்தில் மகிமை பற்றிய கணநேரத் தோற்றம் அவருக்குத் தரப்பட்டிருக்கலாம் (2 கொரிந்தியர் 12:1-4). வரவிருக்கும் வாழ்வைக் கண்டிருந்தவருக்கு இந்த வாழ்வு எவ்வாறு காணப்பட்டிருக்கும் என்பதைப் பற்றி நான் வியப்படைகிறேன். இந்த வாழ்வின்

மிகவும் அழகிய விஷயங்கள்கூட, நேரெதிர் ஒப்பீட்டில் அழகற்றவையாகக் காணப்பட்டிருக்க வேண்டும்; மிகவும் விலையுயர்ந்த பொருட்கள்கூட மதிப்பற்றவைகளாகக் காணப்பட்டிருக்க வேண்டும்! நமக்காகத் தேவன் வைத்துள்ளவை பற்றி ஏவுதல் பெற்ற விவரிப்புகளை நாம் வாசித்து, நமது நித்திய வீடு எதைப்போன்று இருக்குமோ என்று நாம் ஆச்சரியப்படுகிறோம். இருப்பினும் பவுல், ஏறக்குறைய நிச்சயமாகவே அதை *அனுபவித்திருந்தார்.* 2 கொரிந்தியர் 12ம் அதிகாரம் கேள்விப்படுதலை மாத்திரம் குறிப்பிடுகையில், பரதீசு எதைப்போன்று உள்ளது என்பதைப் பவுல் மற்ற வழிகளில் அனுபவித்து இருக்க வேண்டும். தனிமையின் கணங்களில், வேதனை மற்றும் துக்கம் நிறைந்த இவ்வுலகத்தை விட்டுப் பரதீசுக்குத் திரும்ப வேண்டும் என்ற ஏக்கம் எவ்வளவாக அவர் ஆத்துமாவை நிரப்பி இருக்க வேண்டும்!

23ம் வசனத்தில் பவுல், மரணத்திற்கு அழகுநிறைந்த நற்கூற்று ஒன்றைப் பயன்படுத்தினார்: "தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க." "பிரிந்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது (*analuo*) என்பதன் ஒரு வடிவம், "மேலே" (*ana*) என்பதற்கான முன்னிடைச் சொல்லையும் "தளர்த்த" (*luo*) என்று அர்த்தப்படும் வினைச்சொல்லையும் ஒன்றிணைக்கும் ஒரு கூட்டு வார்த்தையாக உள்ளது. இவ்வார்த்தை, ஒரு கூடாரத்தைக் கலைத்து எடுத்துச் செல்வதற்கும் கப்பலை அதன் கட்டுக்களில் இருந்து விடுவித்து நகர்த்துவதற்கும், ஒரு அடிமையை அல்லது சிறைப்பிடிக்கப்பட்டவரை விடுதலையாகிச் செல்ல அனுமதிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது.[10] பவுல் மரணத்தை "பிரிந்து செல்லுதல்" என்ற வகையில் கண்ணோக்கினார் - நாமும்கூட அதை அவ்வாறே கண்ணோக்க வேண்டும், கிறிஸ்தவர்களைப் பொறுத்தமட்டில் இந்த வாழ்வானது ஒரு பயணமாக உள்ளது, கிறிஸ்துவுடன் இருத்தல் என்பதே அடைவிடமாக உள்ளது. சட்டப்படி, மரணம் என்பது அந்த அடைவிடத்தைச் சென்று சேர அத்தியாவசியமான பாகமாக உள்ளது. கர்த்தர் மறுபடி வருகிறபோது இன்னமும் உயிரோடிருக்கும் விசுவாசம் நிறைந்த கிறிஸ்தவர்கள் இதற்கு ஒரு விதிவிலக்காக இருப்பார்கள்.

பவுலுக்கு மரணம் = கிறிஸ்து*வுடன்* இருத்தல் என்பதே 23ம் வசனத்தில் வலியுறுத்தமாக உள்ளது. அவருக்கு, மரணம் என்பது இந்த உலகத்தின் வேதனை மற்றும் பிரச்சனைகளில் இருந்து விடுதலையாக மாத்திரம் இருக்கவில்லை. அது மிக மிக அதிகமானதாக இருந்தது. மரித்தல் என்பது அவர் தமது விலையேறப் பெற்ற கர்த்தருடன் இருக்கச் செல்லுதல் என்று அர்த்தப்படுத்திற்று![11]

ஜீவனுக்கு ஆதரவானவை

24ம் வசனத்தில் பவுல், வாழ்தலுக்கான இன்னும் ஒரு காரணத்தைப் பட்டியலிட்டார்: *வாழ்வு = மற்றவர்களுக்கு உதவி செய்யக் கூடுதலான வாய்ப்புகள்.* "அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம்." மரணத்திற்குப் பின்பு இயேசுவுடன் இருத்தல் "மிக மிக நல்லதாக" இருந்தது, ஆனால் வாழுதலும் மற்றவர்களுக்கு உதவுதலும் "மிகவும் அவசியமாக" இருந்தது. நீங்கள் நமது கற்பனையான தாளில் "மதிப்பெண்" போட்டுக்கொண்டிருந்தால், அது "ஜீவனுக்கு ஆதரவானவை" என்பதன் கீழ் *மூன்று* விஷயங்களையும் "மரணத்திற்கு ஆதரவானவை" என்பதன் கீழ் *இரண்டு* விஷயங்களையும் மாத்திரம் கொண்டிருக்கும்.

21முதல் 24 வரையிலான வசனங்களைத் திரும்பவும் வாசியுங்கள். அந்த வகையான எண்ணப்போக்குடன் [சிந்தனையுடன்] இருக்கும் கிறிஸ்தவரை எதுவும் துன்பப்படுத்த முடியாது. அவர் வாழப் போகிறாரா? அது நல்லது; வாழுதல் என்பது அவருக்கு அவரது தாலந்துகளைக் கர்த்தருக்காகப்பயன்படுத்த அதிக வாய்ப்புக்களைக் கொடுக்கும். அவர் மரிக்கப் போகிறாரா? அதுவும் நல்லதாகவே உள்ளது. அவர் தமது கர்த்தருடன் இருக்கச் செல்ல முடியும். இருப்பினும் அப்படிப்பட்ட எண்ணப்போக்கு [சிந்தை] இயேசுவுடன் சரியான உறவு முறையைக் கொண்டிருத்தலையே அடிப்படையாகக் கொண்டு அமைகிறது என்பதை ஒருக்காலும் மறக்கவேண்டாம். "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று பவுலுடன் சேர்ந்து கூறக்கூடியவராக இருத்தலே திறவுகோலாக உள்ளது.

பவுலின் தீர்மானம் (1:25, 26)

25 மற்றும் 26ம் வசனங்களில், முந்திய நிச்சயமற்ற தன்மையிலிருந்து எதிர்பாராத மாறுதல் ஒன்றுள்ளது: "இந்த நிச்சயத்தைக்கொண்டிருந்து, நான் மறுபடியும் உங்களிடத்தில் வருகிறதினால் என்னைக்குறித்து உங்களுடைய மகிழ்ச்சி[12] கிறிஸ்து இயேசுவுக்குள் பெருகும்படிக்கு, உங்கள் விசுவாசத்தின் வர்த்தனைக்காகவும் சந்தோஷத்துக்காகவும் நான் பிழைத்து, உங்கள் அனைவரோடுங்கூட இருப்பேனென்று அறிந்திருக்கிறேன்." அந்த வேளையில் பவுல் கர்த்தரிடத்தில் இருந்து ஒரு விசேஷித்த வெளிப்படுத்துதலைக் கொண்டிருந்தார் என்று சிலர் யூகித்திருக்கின்றனர். அவர் "அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு *அதிக அவசியம்" என்று கூறியபோது (வசனம் 24; என்னால் வலியுறுத்தப்படுகிறது), அது அவரது சிந்தையில் இந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைத்தது என்பதே மிகவும் ஏற்புடையதாக உள்ளது. பவுல், பொறுப்புணர்வின் ஆழமான சிந்தையைச் கொண்டிருந்தார். அவர் சுயநலமற்றவராக இருந்தார். அவர் மற்றவர்களுக்கு "ஆம்" என்று சொல்வதற்காகத் தமக்கு "இல்லை" என்று சொல்லிக் கொண்டார்.*

பவுலின் தீர்மானத்தை மிகவும் முழுமையாக மதித்து உணர்வதற்கு நாம், 25 மற்றும் 26ம் வசனங்களில் உள்ள சில வார்த்தைகளை ஒவ்வொன்றாக பரிசீலனை செய்வோம். முதலில் அப்போஸ்தலர், "இந்த நிச்சயத்தைக் கொண்டிருந்து" என்று கூறினார். அவர் தமது வாசகர்களுக்காகத் தாம் மாம்சத்தில் தரித்திருப்பது "அதிக அவசியமாக" இருந்தது என்று நிச்சயம் கொண்டிருந்தார்.

பின்பு அவர், "உங்கள் அனைவரோடுங்கூட இருப்பேனென்று அறிந்திருக்கிறேன்" என்று கூறினார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால் "நான் ஜீவித்திருப்பேன் என்று நான் அறிந்திருக்கிறேன்." "அறிந்திருக்கிறேன்" என்ற சொற்றொடர் தொடக்கத்தில் அவ்வளவு நிச்சயமானதாக இராதிருக்கலாம். [ஆனால்] பவுல் விசாரிக்கப்படும்போது மிகச்சரியாக என்ன நடக்கும் என்பது பற்றிப் பவுலின் சிந்தையில் கேள்விகள் இருந்தன என்பதைச் சந்தர்ப்பப் பொருள் சுட்டிக்காண்பிக்கிறது. இருந்த போதிலும், அவர் அனேகமாக விடுதலை செய்யப்படுவார் என்றும் பிலிப்பியர்களைத் திரும்பவும் காண்பார் என்றும் அவர் பலமாக உணர்ந்தார். ஏறக்குறைய அதே வேளையில், பவுல் பிலேமோனுக்கு எழுதிய நிருபத்தில், பிலோமோனை விரைவில் தாம் சந்திப்பதை

எதிர்பார்ப்பதாகக் கூறினார் (பிலேமோன் 22).

"நான் பிழைத்து, உங்கள் அனைவரோடுங்கூட இருப்பேன்" என்பது ஒரு சொல்லாடலாக உள்ளது. "பிழைத்து" மற்றும் "இருப்பேன்" என்ற இரு வார்த்தைகளும் ஒரே வேர் வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளன: "பிழைத்து" என்பது *meno* என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கையில், "இருப்பேன்" என்பது, *meno* என்ற வார்த்தையை "உடன்" என்று அர்த்தப்படும் *para* என்ற முன்னிடைச் சொல்லுடன் இணைத்துப் பெற்ற ஒரு கூட்டு வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பவுல், "நான் உங்கள் *பக்கமாக* இருப்பேன். நான் *உங்களோடு* இருப்பேன்" என்று கூறினார்.

இது பிலிப்பியர்களின் "விசுவாசத்தின் வர்த்தனைக்காகவும் சந்தோஷத்துக்காகவும்" பங்களிக்கும். "விசுவாசம்" என்பது இயேசுவின் மீதான விசுவாசத்தில் மையங்கொண்டுள்ள போதனையின் பொருளை - அதாவது, புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டபடி கிறிஸ்தவ முறைமையின் முழு போதனையை - குறிக்கிறது. பிலிப்பியர்கள் விசுவாசத்தில் "சந்தோஷம்" அடைய முடியும்படிக்கு, அவர்கள் விசுவாசத்தில் "வர்த்திக்க [வளர] வேண்டும் என்று பவுல் விரும்பினார். விசுவாசத்தில் சந்தோஷம் கொண்டிருக்க, விசுவாசத்தில் வர்த்தனை [வளர்ச்சி] என்பது அவசியமாக உள்ளது.

பவுல் மறுபடியும் பிலிப்பியர்களிடத்தில் "வருவதன்" மூலமாக, "கிறிஸ்து இயேசுவுக்குள் அவர்களின் மகிழ்ச்சி பெருகும்" என்பதே பிலிப்பியர்களின் முடிவு விளைவாக இருக்கும்.

> ... அவரது "வருகை" (*parousia*) விசேஷித்த அர்த்தம் கொண்டிருக்கும். இவ்வார்த்தை தொடக்கத்தில், வெற்றிபெற்றவர் அல்லது அரசர் ஒருவர் ஒரு நகருக்குள் சடங்காச்சாரமாகப் பிரவேசிப்பதைக் குறித்தது. பவுல் வந்தார் என்றால் வெற்றியின் ஒரு கருத்துணர்வு இருக்கும், ஆனால் அவர் வரவில்லை என்றாலும் தோல்வி எதுவும் இராது. இதே சொற்றொடர் கிறிஸ்துவின் வருகைக்கும் அரை - நுட்ப வார்த்தையாக உள்ளது (1 தெசலோனிக்கேயர் 2:19; 3:13; 4:15; 5:23).[13]

25 மற்றும் 26ம் வசனங்களில் இருந்து நாம், பல பாடங்களைச் சேகரிக்க முடியும். அவற்றில் ஒன்று இங்குள்ளது: நமக்கு மிகச்சிறந்தது எது என்பதன் அடிப்படையில் மாத்திரம் நமது தீர்மானங்கள் இருக்கக்கூடாது. ஆனால் மற்றவர்களுக்கு மிகச் சிறந்தது என்ன என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். மரணம் நெருங்குகையிலும்கூட, பொதுவான முடிவுகளை மேற்கொள்ளுதல் பற்றிய விஷயத்தில் இது உண்மையாக உள்ளது. இன்றைய நாட்களில் உலகின் குறிப்பிட்ட பாகங்களில், "யூத்தனேஷியா" அல்லது "கருணைக்கொலைகள்" பற்றி அதிகமானவை கூறப்பட்டுள்ளன. "Euthanasia" என்பது "நன்மை" அல்லது "நலம்" என்று அர்த்தப்படுகிற ஈற்றுச் சொல்லை (*eu*) "மரணம்" என்பதற்கான வார்த்தையுடன் (*thanatos*) இணைந்துள்ள கிரேக்க வார்த்தையின் ஆங்கிலப்படுத்தப்பட்ட சொல்லாக உள்ளது. இதன் வினை வடிவம் "நல்லபடியாக இறத்தல்" என்று அர்த்தப்படுகிறது; இவ்வார்த்தை வழக்கமாகப் பயன்படுத்தப்படுகிறபடி, இது ஒரு தவறான பயன்பாடாக உள்ளது.

"கர்த்தருக்குள்" இறத்தல் ஒன்றே "நல்ல" மரணமாக உள்ளது. தற்கொலை என்பது கிறிஸ்தவர்களுக்குத் தெரிவாக இருப்பதில்லை. இப்படிப்பட்ட தேவபக்தியற்ற விவாதங்கள் எல்லாமும் இல்லை என்றாலும், இவற்றில் பெரும்பான்மையான விவாதங்கள் முற்றிலும் சுயத்தை மையங்கொண்டுள்ளன. ஒரு கிறிஸ்தவர் தமது மரணத்தின் வேளையைத் தேவனுடைய கரங்களில் ஒப்புவிக்கிறார். அவர் உதவியுடனான அல்லது உதவியற்ற வகையிலான தற்கொலை மூலமாக "சுலபமாகத் தப்பிச் செல்லுதல்" என்பதைத் தெரிவு செய்வதில்லை. ஒரு கிறிஸ்தவர், இறக்கும்போதுகூட, இன்னொரு நபருக்கு உதவியாயிருக்கும் ஒரு வார்த்தையைக் கூற இன்னும் ஒரு வாய்ப்பை அடிக்கடி காண முடியும். வேறு எதுவும் இல்லை என்றாலும், இறக்கும் கிறிஸ்தவர், கர்த்தருக்குள் தைரியமாக இறப்பது எப்படி என்பதற்கு ஒரு உதாரணமாக இருக்க முடியும்.

பவுலின் உய்த்துணர்வு (1:27-30)

27ம் வசனத்தில் பவுல், தத்துவத்தில் இருந்து நடைமுறைக்கு மாறினார். 27 முதல் 30 வரையில் உள்ள வசனங்கள் நமது அடுத்த பாடத்தில் அதிக விபரமாக எடுத்துரைக்கப்படும், ஆனால் இறையியல் என்பது பவுலுக்கு வெறும் கற்பிதக் கோட்பாடாக மாத்திரம் ஒருக்காலும் இருந்ததில்லை என்பதைக் குறிப்பிடாது இந்தப் பாடத்தை முடிக்க நான் விரும்பவில்லை. அது எப்போதுமே செய்முறை மற்றும் தனிப்பட்ட நடைமுறைப்படுத்தலைக் கொண்டிருந்தது. இவ்விடத்தில் அப்போஸ்தலர், எழுதப்பட்டவற்றிருந்தவற்றைத் தமது வாசகர்கள் புரிந்து கொள்ளுதலானது அவர்களின் வாழ்வில் செயல் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அறிய வேண்டும் என விரும்பினார்.

முதலாவது, அது அவர்களை *விசுவாசம் நிறைந்த* கிறிஸ்தவ வாழ்வை வாழும்படி தூண்டுவதாக இருக்க வேண்டும்: "நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக் குறித்து நான் கேள்விப்படும்படி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்" (வசனம் 27). அவர்களைத் திரும்பவும் காணும்படிக்கான தமது விருப்ப நோக்கத்தை அவர் சுட்டிக் காண்பித்து இருந்தார் (வசனம் 26). இப்போது செயல்விளைவில் அவர், "அது நடந்தாலும் இல்லை என்றாலும், உங்கள் வாழ்வு முறைகள் சுவிசேஷத்திற்கு இசைவானதாக உள்ளன என்று நான் அறிய விரும்புகிறேன்" என்று கூறினார்.

இரண்டாவது, அவர்கள் *தைரியமான* கிறிஸ்தவ வாழ்வை வாழும்படி அசைக்கப்பட வேண்டும்:

> நீங்கள் மருளாதிருக்கிறது அவர்கள் கெட்டுப்போகிறதற்கும், நீங்கள் இரட்சிக்கப்படுகிறதற்கும் அத்தாட்சியாயிருக்கிறது; இதுவும் தேவனுடைய செயலே. ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. நீங்கள் என்னிடத்திலே கண்டதும் எனக்கு உண்டென்று இப்போழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே உங்களுக்கும் உண்டு (வசனங்கள் 28-30).

அவர்கள், பவுல் கொண்டிருந்த "அதே போராட்டத்தை" (உபத்திரவத்தை)க் கொண்டிருந்தனர், எனவே அவர்கள் அதே முடிவிற்கு வர வேண்டும்: "நாம் வாழ்ந்தாலும் மரித்தாலும், எல்லாமும் தேவனுடைய மகிமைக்காகவே செய்யப்பட முடியும்!" பவுல் அஞ்சவில்லை, எனவே அவர்கள் அஞ்சுவதற்குக் காரணம் இல்லாதிருந்தது.

முடிவுரை

"இருப்பதா அல்லது இல்லாது ஒழிவதா?" வாழ்வா அல்லது மரணமா? நீங்கள் ஹாம்லெட்டின் கேள்வியைக் கேட்காதிருக்கலாம், மற்றும் நீங்கள், பவுல் செய்தது போன்று மாற்றுச் செயல்கள் பற்றி ஆழ்ந்து சிந்திக்காது இருக்கலாம். நேர்மையாகக் கூறினால், நம்மில் பெரும்பான்மையானவர்கள், மரணத்தைப் பற்றி நினைக்க விரும்புவதில்லை. உண்மையில், சிலர் அந்தப் பாடக்கருத்தைத் தவிர்ப்பதற்கு வெகுதூரம் செல்கின்றனர்.

> வில்லியம் ராண்டால்ஃப் ஹெர்ஸ்ட் என்பவர், "என் முன்னிலையில் 'மரணம்' என்ற வார்த்தையை ஒருக்காலும் பயன்படுத்தாதீர்கள். அதைக் கேட்க நான் விரும்பவில்லை" என்று கூறினார். ஆஸ்கார் லெவென்ட் என்பவரும் அதே வேண்டுகோளை விடுத்தார். பழங்கால அரசர்களில் ஒருவர் அவ்வாறே உணர்வு கொண்டிருந்தார், அவரது வாகனம், ஒரு கல்லறையைக் கடந்து செல்லும்படி இழுத்துச் செல்லப்பட்டபோது, மனிதர்களின் அழிவின் சத்தமிடாத எச்சங்களைக் காண வேண்டியிராதபடிக்கு அந்த வாகனத்தின் திரைகள் மூடும்படி இழுக்கப்படச் செய்தார்.[14]

இருந்தபோதிலும் மரணம் என்பது ஒரு உண்மை நிலையாக இருக்கிறது. "அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" (எபிரெயர் 9:27). நாம் இறந்து போவோமா என்பதல்ல ஆனால் நாம் இறக்கத் *தயாராக இருப்போமா* என்பதே கேள்வியாக உள்ளது. நீங்கள் இந்தப் பாடத்திலுள்ள எதையும் நினைவில் வைக்காவிட்டாலும், பின்வருவதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: வாழத்தயாராக இராத வரையிலும் எந்த நபரும் சாகத் தயாராவதில்லை. சாகத் தாயராயிருக்க நீங்கள் "*கிறிஸ்து* எனக்கு ஜீவன்" என்று உண்மையுடன் கூறக் கூடியவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்து உங்களுக்கு அர்த்தப்படுத்துவது என்ன? நீங்கள் உங்கள் வாழ்வை அவருக்கு கொடுத்திருக்கிறீர்களா? இல்லை என்றால், அந்த உறுதிப்பாட்டை மேற்கொள்ளாமல் இன்னொரு நாள் உங்களைக் கடந்து செல்ல அனுமதிக்காதீர்கள்!

குறிப்பு

இந்தப் பாடத்தை நீங்கள் முடிக்கையில், உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு, நம்பிக்கை வைத்துக் கீழ்ப்படிதலில் கிறிஸ்துவினிடத்தில் வருதல் எவ்வாறு என்று கூற நீங்கள் விரும்பலாம் (யோவான் 14:15; மாற்கு16:16; கலாத்தியர் 3:26, 27).

குறிப்புகள்

[1]ஆங்கிலக் கவிஞரும் நாடக ஆசிரியருமான வில்லியம் ஷேக்ஸ்பியர் (ஏறத்தாழ 1564-1616) என்பவர் மேற்கத்திய நாகரீக வரலாற்றில் மிகவும் செல்வாக்குள்ள இலக்கியப் படைப்புகளை எழுதினார். டென்மார்க் இளவரசனான ஹாம்லெட் என்பவரின் துக்கமான வரலாறு 1600 வாக்கில் எழுதப்பட்டது. பாகம் III, *காட்சி 1ல், ஹாம்லெட்டின் தனிமைப் புலம்புதல் காணப்படுகிறது. "தனிமைப் புலம்புதல்" என்பது ஒரு பாத்திரப் படைப்பு தனக்குத்தானே பேசிக்கொள்வதன் மூலம் தனது சிந்தனைகளைப் பார்வையாளர்களுக்கு வெளிப்படுத்துவதற்கான ஒரு செயல்முறையாக உள்ளது.* [2]William Barclay, *The Letters to the Philippians, Colossians, and Thessalonians,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 27. [3]Pat Edwin Harrell, *The Letter of Paul to the Philippians,* The Living Word Commentary series, ed. Everett Ferguson [Austin, Tex.: R. B. Sweet Co., 1969], 73. *[4]ஹாம்லெட் "ஒரு தோல்வி - தோல்வி சூழ்நிலையில்" இருக்கையில், பவுல் "ஒரு வெற்றி - வெற்றி சூழ்நிலையில்" இருந்தார். [5]பவுல் தமது வார்த்தைகளை மற்றவர்களை நோக்கிக் கூறினார் என்றாலும், பல எழுத்தாளர்கள் இவ்வசனப்பகுதியை ஹாம்லெட்டின் தனிமைப் புலம்பலுடன் ஒப்பிட்டுள்ளனர். வாழ்வு மற்றும் மரணம் பற்றிய அப்போஸ்தலரின் இந்தக் கலந்துரையாடலை காஃப்மேன் என்பவர், "பவுலின் மாபெரும் தனிமைப் புலம்பல்" என்று அழைத்தார்* (James Burton Coffman, *Commentary on Galatians, Ephesians, Philippians, Colossians* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977], 270). *[6]நான் வாழும் இடத்தில், அவர் ஒவ்வொரு தலைப்பின்கீழும் "ஆதரவான" விஷயங்களை அவர் இட்டார் என்று கூறுவோம். நாங்கள்* "pro" and "con" *என்ற சொல்விளக்கத்தைப் பயன்படுத்துகிறோம்.* "Pro" *என்பது "ஆதரவான" என்பதற்கான இலத்தீன் சொல்லாக இருக்கையில்,* "con" *என்பது "எதிரான" என்பதற்கான இலத்தீன் சொல்லாக உள்ளது.* [7]Avon Malone, *Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 39. *[8]"இந்த சந்தர்ப்பப் பொருளில் 'மாம்சம்' (sarki) என்பது பவுலின் எழுத்துக்களில் அடிக்கடி பயன்படுத்தப்படுவதுபோன்று, மனித இயல்பை அதன் பலவீனங்களுடன் அர்த்தப்படுத்துவதாக இருப்பதில்லை (1 கொரிந்தியர் 1:29; கலாத்தியர் 2:16; ரோமர் 7:25; 8:4-9), ஆனால் இது 'சரீரம்' (வசனம் 20) என்பதற்குச் சமமானதாக மாத்திரம் உள்ளது"* (Harrell, 72-73). [9]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 80. *[10]இந்தச் சொற்றொடர், ஒரு கடினமான பிரச்சனையைத் தீர்த்துவைத்தல் போன்ற மற்ற வழிகளிலும் பயன்படுத்தப்பட்டது. இந்தப் பத்தியில் உள்ள தகவல்கள்,* Barclay, 28; Malone, 41; and Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 70 *என்ற புத்தகங்களில் இருந்து எடுத்தாளப்பட்டுள்ளன.*

[11]"தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்கும்படி" என்ற சொற்றொடராக்கத்தைப் பயன்படுத்தியதில், பவுல் லூக்கா 16ல் கிறிஸ்துவால் சித்தரிக்கப்பட்ட விஷயமான மரித்தோர் இடைநிற்கும் இடம் என்பது இல்லை என்று கூறவில்லை. இயேசு பாதாளத்தின் வட்டாரத்தை ஆளுகை செய்கிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 1:18). இயேசுவுக்குள் மரித்தல் என்பது முழுமையான கருத்தில் "இயேசுவுடன் இருத்தல்" என்று இருக்க வேண்டும் (காண்க 1 தெசலோனிக்கேயர் 5:10). இருப்பினும் இரண்டாம் வருகை மற்றும் நியாயத்தீர்ப்பின் நாளுக்குப்பின், நீதியுள்ளவர்கள் பரலோகத்திற்குச் செல்லும் போது, முழுமையான கருத்தில், பின்பு நாம் "இயேசுவுடன் இருப்போம்" (காண்க 1 தெசலோனிக்கேயர் 4:17). [12]"என்னைக்குறித்து உங்கள் மகிழ்ச்சி" என்பதன் நேரடி அர்த்தமான தரவழைத்தல், "மீண்டும் நான் உங்களிடத்தில் இருப்பதன் மூலமாக என்னைக் குறித்து நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டி நம்பிக்கை

வைத்தல் பெருகும்" என்றிருக்கும். பிலிப்பியர்களின் மேன்மை பாராட்டுதலுக்குக் காரணமானவர் யார் என்பதை இவ்வசனப் பகுதி தெளிவாக்குவதில்லை. "கிறிஸ்து இயேசுவுக்குள்" மற்றும் "என்னைக் குறித்து" ஆகிய இரண்டுமே ஒன்று போன்ற கட்டமைப்புகளாக பக்கம் பக்கம் நிற்கின்றன. "கிறிஸ்து இயேசுவுக்குள்" என்பதற்கு முன்னர் "உங்கள் மகிழ்ச்சி" என்ற சொற்றொடர் வருவதால், கிறிஸ்து இயேசுவே அவர்களின் மகிழ்ச்சிக்குக் காரணமாக இருந்தார் என்பது எனது விருப்பத் தேர்வாக உள்ளது. விஷயம் இப்படி இருந்தால், பவுல் தாம் மறுபடியும் அவர்களிடத்தில் திரும்புதல், கர்த்தருக்குள் அவர்களின் சந்தோஷத்தைப் பெருகச் செய்யும் என்று நம்பியிருந்தார் என்றாகிறது. CJB வேதாகமத்தில், "பின்பு, உங்களுடன் நான் மீண்டும் இருப்பதன் மூலமாக, நீங்கள், மேசியாவை [இயேசுவை]க் குறித்து மேன்மை பாராட்ட இன்னும் மாபெரும் காரணம் கொண்டிருப்பீர்கள்" என்றுள்ளது. இவ்வசனம் ஆங்கிலத்தில் "Convinced of this, I know that I will remain and continue with you all for your progress and joy in the faith, so that your proud confidence in me may abound in Christ Jesus through my coming to you again" [NASB]. என்றுள்ளது. ஆனால் தமிழில் "இந்த நிச்சயத்தைக் கொண்டிருந்து, நான் மறுபடியும் உங்களிடத்தில் வருகிறதினால் என்னைக்குறித்து உங்களுடைய மகிழ்ச்சி கிறிஸ்து இயேசுவுக்குள் பெருகும்படிக்கு, உங்கள் விசுவாசத்தின் வர்த்தனைக்காகவும் சந்தோஷத்துக்காகவும் நான் பிழைத்து, உங்கள் அனைவரோடுங்கூட இருப்பேனென்று அறிந்திருக்கிறேன்" என்றுள்ளது. [13]Harrell, 77. [14]இந்தப் பத்தி, அவொன் மலோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட "பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தின் ஆய்வு" என்ற விரிவுரையில் இருந்து தழுவப்பட்டது, இது 1984ம் ஆண்டு வாக்கில் "Truth in Love" (Fort Worth, Tex.), என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் ஒளிபரப்பப்பட்டது. ஹெர்ஸ்ட் (1863-1951) என்பவர் அமெரிக்காவில் இருந்த ஒரு கோடீஸ்வரர் ஆவார், இவர் அச்சுப் பதிப்புத் துறையில் இருந்தவர் மற்றும் லெவன்ட் (1906-1972) என்பவர் இசையமைப்பாளராகவும் பியானோ இசைக்கலைஞராகவும் இருந்தார்.

5

ஒரு கிறிஸ்தவர் செய்ய வேண்டிய "ஒரே" விஷயம்

[பிலிப்பியர் 1:27-30]

கிறிஸ்தவர் என்ற வகையில் நீங்கள் செய்யத் தேவையானவை என்ன என்று உங்களுக்குக் கூறும் பிரசங்கியார்கள் மற்றும் போதகர்கள் குறித்து நீங்கள் எப்போதாவது இளைப்படைந்து இருக்கிறீர்களா? தேவபக்தியுள்ள வாழ்வு வாழ்தல் மற்றவர்களுக்கு உதவுதல், தேவனை ஆராதித்தல் மற்றும் பிறருக்குப் போதித்தல் பற்றிய தொடர்ந்த அறிவுறுத்துதலைக் கவனித்துக் கேட்டதினால் நீங்கள் எப்போதாவது களைப்படைந்து இருக்கிறீர்களா? இயேசுவைப் பின்பற்றுவதற்குச் செய்ய வேண்டிய விஷயங்கள் ஒரு சில வார்த்தைகளில் தொகுத்துக் கூறப்பட முடியுமா என்று நீங்கள் எப்போதாவது விரும்பி இருக்கிறீர்களா? அப்படியானால் இருதயத்தைக் கொடுத்துக் கவனியுங்கள் - ஏனெனில் இதையே பவுல் பிலிப்பியர் 1:27ல் செய்தார்:

> நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக்குறித்து நான் கேள்விப்படும்படி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்.

Monon என்பது, "மாத்திரம்" என்று இவ்வசனத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையாக உள்ளது. இவ்வார்த்தை, "மாத்திரம், மட்டும் ... வினைச்சொல்லினால் குறிப்பிடப்பட்ட செயலை அல்லது நிலையை வரயறைப்படுத்துகிற" என்று அர்த்தப்படுகிறது.[1] ஜெரால்டு ஹாவ்தார்ன் என்பவர் இவ்வார்த்தையை "மாத்திரம் மற்றும் எப்போதும்" என்று மொழிபெயர்த்து,[2] "பவுல், *monon* என்ற வினையுரிச் சொல்லுடன் இந்தப் புதிய பகுதியை அறிமுகப்படுத்துகிறார் ... இவ்வாறு செய்வதில் அவர், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராகக் கிறிஸ்தவர் வாழ்வதற்குச் செய்ய வேண்டிய 'அவசியமான ஒரு விஷயத்தை' வலியுறுத்துகிறார்" என்று விளக்கம் அளித்துள்ளார்.[3] வில்லியம் பார்க்ளே என்பவர், தமது மொழிபெயர்ப்பில் இவ்வார்த்தையை, "நீங்கள் [செய்யும்படி] கண்ணோக்கியாக வேண்டிய ஒரு விஷயம்" என்று விரித்துரைத்தார் மற்றும் அதன் பின்பு அவர் தமது குறிப்புகளில் பின்வரும் விளக்கத்தை உள்ளடக்கினார்: "என்ன நடந்தாலும் பரவாயில்லை - ஒரு விஷயம் அத்தியாவசியமாக உள்ளது ... பிலிப்பியர்கள் தங்கள் விசுவாசம்

மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவற்றிற்குத் தக்க வகையில் வாழ வேண்டும்."[4]

மற்ற எழுத்தாளர்கள் *monon* என்பது பற்றிய இந்தக் கண்ணோட்டத்துடன் கருத்து ஒருமைப்பட்டுள்ளனர். அலெக் மோட்யர் என்பவர், "பவுல், 'இந்த ஒரு விஷயம் மற்றும் இது மாத்திரமே' என்று கூறியிருப்பது போன்று, 'மாத்திரம்' என்ற வார்த்தையின் வலிவானது மிகப்பிரம்மாண்டமானதாக உள்ளது. வேறு எதுவும் அவர்களை இந்த மாபெரும் குறிக்கோளில் இருந்து தடம் மாற்றி விடவோ அல்லது சாக்குப்போக்குக் கூறவைத்துவிடவோ கூடாது; இது ஒன்றுதான் அவர்கள் விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டிருக்க வேண்டிய எல்லாமுமாக இருக்க வேண்டும் ..." என்று எழுதினார்.[5] சார்லஸ் ஏர்ட்மேன் என்பவர், "ஒரு கிறிஸ்தவரின் வாழ்வு 'கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரமானதாக இருக்க வேண்டும் என்பதே, அவரது வாழ்வின் விதி அல்லது சட்டமாக இருக்க வேண்டும்' " என்று எழுதினார்.[6]

ஒரு கருத்துணர்வில் பவுல், கர்த்தரை உண்மையாகப் பின்பற்றுபவராக இருத்தலில் உள்ளடக்கப்பட்டுள்ளது எல்லாவற்றையும் எடுத்து அதைக் பின்வருமாறு சுருக்கியுரைத்தார் எனலாம்: "நீங்கள் 'கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரரான வகையில் நடந்து கொள்ளவேண்டும்' என்பதே நீங்கள் செய்ய வேண்டிய ஒரே விஷயமாக உள்ளது." ஆகையால் நாம், "அது மாபெரிது - இப்போது நான் இந்தப் பிரசங்கியார்கள் பேசுகிற மற்ற அவசியமான செயல்கள் யாவற்றைப் பற்றியும் கவலைப்படத் தேவையில்லை" என்று கூறலாமா? இல்லை. பவுலின் கூற்றானது அர்த்தம் பொதிந்ததாக உள்ளது, ஆனால் அவர் கூற விருப்ப நோக்கம் கொண்டிராத ஒன்றை அவர் கூறியதாக ஆக்க முயற்சி செய்யாதீர்கள்.

வேதவசனங்களில் அவ்வப்போது, தேவனுடைய பிள்ளை தமது பரலோக பிதாவிற்குச் செய்ய வேண்டிய பொறுப்புப் பற்றித் தொகுத்துரைக்கும் கூற்றுகள் கூறப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, பழைய ஏற்பாட்டில் மீகா, "நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்?" என்று எழுதினார் (மீகா 6:8). ஏவுதல் பெற்ற மீகாவின் கூற்று, இஸ்ரவேல் மக்கள், மோசேயின் நியாயப் பிரமாணத்தில், ரபீக்கள் அடையாளம் கண்டறிந்த அறுநூறுக்கும் சற்று அதிகமான பிரமாணங்களைப் பற்றி மறந்து விடமுடியும் என்று அர்த்தப்படுத்திற்றா? இல்லவே இல்லை. அந்தப் பிரமாணத்தைப் பற்றி இயேசு பேசுகையில் (மத்தேயு 5:17, 18), "ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்" என்று அவர் கூறினார் (மத்தேயு 5:19).

கிறிஸ்து தாமே ஒருமுறை, நியாயப்பிரமாணம் முழுவதையும் பின்வரும் ஒருசில வார்த்தைகளில் தொகுத்துரைத்தார்: "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே" (மத்தேயு 22:37-39). இது,

அவரது உரையைக் கேட்டவர்கள், தேவன் வெளிப்படுத்தியிருந்த வேறு விஷயங்கள் எல்லாவற்றையும் புறக்கணிக்க முடியும் என்று அர்த்தப்படுத்தியதா? இல்லை. இயேசுவின் வார்த்தைகள் சுருக்கமானவைகளாக, தேவன் மனிதன் ஆகியோருடன் ஒருவரின் உறவுநிலை பற்றிய கட்டளைகள் எல்லாவற்றையும் தொகுத்துரைப்பவையாக இருக்கின்றன. நீங்கள், மத்தேயு 22:37-39ன் கொள்கைகளைத் தழுவிக்கொண்டால், கர்த்தருடைய கட்டளை ஒவ்வொன்றிற்கும் கீழ்ப்படிய நீங்கள் உங்களால் முடிந்த அளவுக்கு மிகச் சிறப்பாகச் செயல்படுவீர்கள் (காண்க-மத்தேயு 7:21-23; யோவான் 14:15; எபிரெயர் 5:9; 1 யோவான் 5:3).

பிலிப்பியர் 1:27ஐ மீண்டும் கண்ணோக்குங்கள். பவுல், தாம் வாழ்வாரா அல்லது இறப்பாரா என்பதுபற்றி, தாம் பிலிப்பியர்களைத் திரும்பவும் எப்போதாவது காண்பாரா இல்லையா என்பது பற்றிக் கலந்துரையாடி இருந்தார் (1:21-27). பின்பு அவர், கவனத்தைத் தமது சூழ்நிலையில் இருந்து அவர்களின் சூழ்நிலைக்கு மாற்றினார். செயல்விளைவில் அவர், "நான் விரைவில் உங்களைக் காணவருவேன் என்று நம்பியிருக்கிறேன், ஆனால் நான் அதைச் செய்ய முடிந்தாலும் இல்லை என்றாலும், உங்களிடத்தில் ஒரே ஒரு விஷயத்தைக் கேட்கிறேன்: "கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்," என்று கூறினார். அப்போஸ்தலருடைய கூற்றின் சுருக்கத் தன்மையை நான் நேசிக்கிறேன். அதே வேளையில் அவரது வார்த்தைகள், புதிய ஏற்பாட்டின் பொதுவான போதனையைக் குறைத்துவிடப் பயன்படுத்தப்படக்கூடாது. மிகச்சரியாக இதையே சில விளக்கவுரையாளர்கள் செய்வதைக் காணுகையில் நான் திகைப்படைந்தேன். செயல்விளைவில் அவர்கள், "போதனை, ஒழுக்க அளவீடுகள் மற்றும் இவை போன்றவைகளைக் குறித்து வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதைப் பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. இவ்விடத்தில் பவுல் கூறியதை மாத்திரம் நீங்கள் செய்தால் போதும்" என்று கூறுகின்றனர். அந்த முடிவை அடைபவர்கள் வேதவசனத்தைத் தனிமைப்படுத்தும் குற்றம் செய்தவர்களாக உள்ளனர். இவ்வார்த்தைகளைப் பிலிப்பியர்கள் வாசித்தபோது அவர்கள், "எவ்வளவு நல்லது! இப்போது நாம், பவுல் கூறும் வேறு எதையும் கவனிக்கத் தேவையில்லை" என்று பதில் அளித்திருப்பார்கள் என்று நினைக்கிறீர்களா? அப்படிப்பட்ட ஒரு கருத்தினால் பவுலும் பிலிப்பியர்களும் திகில் அடைந்திருப்பார்கள்.

மீகா 6:8 மற்றும் மத்தேயு 22:37-39 ஆகியவற்றின் வார்த்தைகளைப் போன்று, பவுலின் வார்த்தைகளும் சுருக்கமானவைகளாக உள்ளன. சுவிசேஷத்திற்குப் பாத்திரராக வாழும்படித் தங்களை ஒப்புவித்தவர்கள், எஜமானரின் கட்டளை ஒவ்வொன்றிற்கும் கீழ்ப்படியத் தங்கள் பெலத்தில் எல்லாவற்றையும் செய்வார்கள் (காண்க பிலிப்பியர் 2:12அ). இந்தப் படிப்பிற்கான வசனப்பகுதியை நாம் ஆழ்ந்து ஆராய்கையில் அந்தத் தெய்வீகக் கேட்புகள் சிலவற்றை நாம் படிப்போம்: அது, பிலிப்பியர் 1:27-30. அவற்றை நாம் கலந்துரையாடுகையில், அவைகள் "ஒரு கிறிஸ்தவர் செய்ய வேண்டிய 'ஒரே' விஷயத்தின்" பாகமாக உள்ளன என்பதைச் சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஆளுமைத்தன்மையில் தனிச்சிறந்தவராக இருங்கள் (1:27இ)

பவுல், "நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்" என்று கூறியபோது அவர் எதை அர்த்தப்படுத்தினார் என்பதை அதிகம் நெருக்கமாக ஆய்வு செய்வதில் இருந்து நாம் தொடங்குவோமாக. அப்போஸ்தலர் "நீங்கள் நடந்துகொள்ளுங்கள்" என்று கூறியபோது, அவர் வழக்கத்திற்கு மாறாக ஒரு கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்தினார் (*politeuesthai* என்ற) அந்த வார்த்தை "politics" என்ற வார்த்தையுடன் தொடர்புடையதாக உள்ளது. அது "நீங்கள் *குடிமகன்கள்* என்ற வகையில் நடந்துகொள்ளுங்கள்" என்று அர்த்தப்படுகிறது. ASV வேதாகமத்தில், மூலகிரேக்க வசனத்தின் மீது பின்வரும் குறிப்பு உள்ளது: "தகுதியான குடிமக்கள் என்ற வகையில் நடந்துகொள்ளுங்கள். [3:20 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.]" AB வேதாகமத்தில், "உங்கள் வாழ்வின் நடக்கையானது நற்செய்திக்கு (சுவிசேஷத்திற்கு) தகுதியுள்ளதாக இருக்கும்படி குடிமகன்கள் என்ற வகையில் நடந்துகொள்ளுவதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்" என்றுள்ளது. இந்த நிருபத்தின் பிற்பகுதியில் பவுல், "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது" என்று கூறினார் (3:20; காண்க எபேசியர் 2:19). மொஃபாட் என்பவர் மொழிபெயர்த்த வேதாகமத்தில், பிலிப்பியர் 3:20 வசனமானது, "நாம் பரலோகத்தில் குடியேற்றம் பெறுபவர்களாக/ காலனிவாசிகளாக இருக்கிறோம்" என்றுள்ளது.

பவுலின் சொற்றொடராக்கத்தை மதித்து உணருவதற்கு, பிலிப்பி நகரானது ஒரு ரோமக்குடியேற்ற நகராக/காலனி நகராக இருந்தது என்பதை மனதில் கொள்ளுங்கள் (நடபடிகள் 16:12). "ரோமக் குடியேற்ற நகரம் ஒவ்வொன்றும் உலகம் முழுவதிலும் தூரத்து இடங்களில் நிலைநாட்டப்பட்ட சிறிய ரோமாபுரியாக இருந்தது. ஒரு ரோமக்குடிமகன் எங்கிருந்த போதிலும், தான் ஒரு ரோமன் என்பதை ஒருக்காலும் மறப்பதில்லை."[7] அவர் "ரோமாபுரியில் இருந்து எவ்வளவு தொலைவில் இருந்தாலும், இலத்தீன் மொழியைப் பேசினார், லத்தீன் உடைகளை உடுத்தினார், ... நீதிபதிகளை இலத்தீன் பெயர்களைக் கொண்டு அழைத்தார்."[8] செயல்விளைவில் பவுல் பிலிப்பியர்களுக்கு, "நீங்கள் ரோமக் குடிமக்கள் என்ற வகையில் எவ்வாறு நடந்துகொள்வது என்று அறிந்திருக்கிறீர்கள்; இப்போது நீங்கள் பரலோக இராஜ்யத்தின் குடிமக்கள் என்றவகையில் எவ்வாறு நடந்துகொள்வது என்பதைக் கற்றுக் கொள்ளுங்கள். ரோமக்குடிமக்களாக இருத்தல் என்பது உங்களை விசேஷித்தவர்கள் ஆக்குகிறது, ஆனால் பரலோகத்தின் குடிமக்களாக இருத்தல் என்பது உங்களைத் *தனிச்சிறந்தவர்கள்* ஆக்குகிறது!" என்று கூறினார்.

பரலோகத்தின் குடிமக்கள் என்ற வகையில் அவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள *வேண்டி இருந்தது?* "கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக நடந்து கொள்ள வேண்டி இருந்தது." அவர்கள் சுவிசேஷத்திற்கு *மதிப்புப் பெற்றுத் தரும் வகையில்,*[9] சுவிசேஷத்திற்குக் *கனம் தரும் வகையில்* (CEV வேதாகமம்), மற்றவர்களைச் சுவிசேஷத்தினிடம் *ஈர்க்கும் வகையில்* நடந்துகொள்ள வேண்டியிருந்தது. பவுலின் இந்தப் புத்திமதியை நான் நினைக்கையில், நான் ஆஸ்திரேலியாவில் வாழ்ந்து கொண்டிருந்தபோது அங்கு வந்த

அமெரிக்கர்களைப் பற்றிய சிந்தனைக்கு என் மனம் பின்னோக்கிச் செல்கிறது. அவர்களில் பெரும்பான்மையானவர்கள் அன்புக்குரிய மக்களாக இருந்தனர், ஆனால் ஒரு சிலர், எனது சொந்த நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் வறியவர்களாக இருந்தனர். அவர்கள் எங்கள் ஆராதனை ஊழியங்களுக்கு வந்தபோது, ஆஸ்திரேலிய உணவு மற்றும் ஆஸ்திரேலியப்பழக்கங்கள் பற்றி உரத்து முறையிட்டனர். அது என்னைச் சங்கடத்திற்கு உள்ளாக்கிற்று, ஏனெனில் இந்த விருந்தினர்கள் அமெரிக்கர்கள் என்பதை எனது ஆஸ்திரேலிய சகோதர சகோதரிகள் அறிந்திருந்தனர். அவர்கள் தங்கள் குடியுரிமைக்குக் கனம் கொடுக்கும் வகையில் நடந்துகொள்ளவில்லை.

நாம் வாழ்வில் கடந்து செல்லுகையில், முடிவுகளை மேற்கொள்ளவும் பிரச்சனைகளைத் தீர்க்கவும் வேண்டியுள்ளது. சிலவேளைகளில், நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி வேதவசனங்கள் தெளிவாக உள்ளது; சிலவேளைகளில் நாம், வசனத்தின் பொதுவான கொள்கைகளைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. வாழ்வின் அறைகூவல்களை நாம் எதிர்கொள்ளுகையில், பின்வரும் கேள்விகள் பதில்களைக் கண்டறிய நமக்கு உதவலாம்: "இந்தச் சூழ்நிலையில் *பரலோகத்தின் குடிமகன்* என்ன செய்வார்? *பரலோகத்தின் குடிமகன்* எவ்வாறு செயல்படுவார்?" நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தால், நீங்கள் தனிச்சிறந்தவர் என்பதை ஒருக்காலும் மறவாதீர்கள் - ஏனெனில் நீங்கள் தேவனுடைய இராஜ்யத்தின் குடிமகனாக இருக்கிறீர்கள்!

கொள்கைகளில் அலைவுபடாதிருங்கள் (1:27, 30)

பிலிப்பியர்கள், "கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக" நடந்துகொள்ள வேண்டும் என்று கூறியபோது பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தது என்ன என்பது பற்றிப் பிலிப்பியர்கள் யூகிக்கத் தேவையில்லாதிருந்தது. [ஏனெனில்] அவர் அதே வசனத்தின் முற்பகுதியில் பின்வருமாறு கூறினார்: "நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று (வசனம் 27அ, ஆ,). இவ்விடத்தில் "ஆவி" என்பது *pneuma* என்ற கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடக்கூடும்; ஆனால் சந்தர்ப்பப் பொருளில் இது அனேகமாக மனிதரின் ஆவியைக் குறிப்பதாக இருக்கலாம். பவுல் "ஒரே ஆத்துமாவினாலே" என்ற சொற்றொடரைக் கொண்டு தொடர்ந்தார் (வசனம் 27ஆ). "ஆத்துமா" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது, ஆங்கிலத்தில் "*Spirit*" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது *psyche* என்ற (அல்லது *psuche* என்ற) கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது. இது "ஆவி" என்றும் தரவழைக்கப்படக்கூடும். அப்போஸ்தலர் தமது வாசகர்கள் "உறுதியாய் நின்று, ... சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடினர்" என்று கேள்விப்படலாம் என நம்பியிருந்தார். அவர் இந்த சகோதரர்களைத் திரும்பவும் சந்திக்கலாம் என்று எதிர்பார்த்து இருந்தார் (வசனங்கள் 25-27); ஆனால் அது நடந்தாலும் இல்லை என்றாலும், அவர்கள் கர்த்தருக்கு உண்மையாக நிலைத்திருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

1ம் அதிகாரத்தின் முடிவிலும் 2ம் அதிகாரத்தின் தொடக்கத்திலும் "ஐக்கியம்" என்ற பாடக்கருத்து இழையோடுகிறது. 1:27ல் பவுல், ஐக்கியத்தின் அவசியத்தை மூன்று முறை வலியுறுத்தினார்:

- *அவர் தமது வாசகர்கள் எண்ணப்போக்கில் ஐக்கியமாயிருக்க வேண்டும் என்று விரும்பினார்: "ஒரே ஆவியிலே."*
- *அவர்கள் கவனத்தில் ஐக்கியமாயிருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்: "ஒரே ஆத்துமாவினாலே."*
- *அவர்கள் செயல்பாட்டில் ஐக்கியமாயிருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்: "கூடப்போராடி."*

ஐக்கியம் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது! 27ம் வசனத்தில் கேட்கப்பட்டுள்ளவற்றை நாம் *பிறருடன் இணைந்து* செய்தால், அவற்றை நிறைவேற்றுதல் என்பது மிகவும் சுலபமாக இருக்கும். இவ்வசனத்தில் "கூடப்போராடி"[10] என்றுள்ள இடத்தில் மூலமொழி வசனமானது, "ஒரு பொதுவான குறிக்கோளுக்காக விளையாட்டு வீரர்கள் ஒன்றுகூடிப் போராடுதல் என்று பொழிப்புரை செய்யப்படலாம். இது களத்தில் உள்ள ஓரக் கோடுகளின் அருகே பவுல் நின்றுகொண்டு, 'நாம் மாபெரும் குழுச் செயல்பாட்டைக் காண்போமாக!' என்று வேண்டிக்கொள்வது போல் உள்ளது."[11]

அடுத்த பாடத்தில், நாம் 2:2ம் வசனத்திற்குச் செல்லும் வரையிலும், ஐக்கியம் பற்றிய நமது விரிவான கலந்துரையாடலைச் சற்றே நிறுத்தி வைப்போம். இந்த வேளைக்கு நான், தேவனுடைய பிள்ளையாக இருப்பவருக்கு இந்த உலகம் எதைச் செய்தாலும், அவர் *அசைக்கப்படாமல் நிலைத்திருக்க வேண்டும்* என்ற பிலிப்பியர் 1:27ன் வலியுறுத்தத்தின் மீது கவனம் குவிக்க விரும்புகிறேன். பிலிப்பி நகரில் இருந்த சகோதரர்கள் *உறுதியாக நிலைநிற்க வேண்டும்* என்று பவுல் புத்திகூறினார் (காண்க 1 கொரிந்தியர் 16:13; எபேசியர் 6:11, 13, 14; 1 தெசலோனிக்கேயர் 3:8; 2 தெசலோனிக்கேயர் 2:15).

நாம் வாழ்வா சாவா என்ற ஆவிக்குரிய போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் (காண்க எபேசியர் 6:10-17; 2 கொரிந்தியர் 10:4). பவுல் "போராடியதாக" பிலிப்பியர்கள் கண்டிருந்த, அவர் "இன்னமும் போராடிக் கொண்டிருந்த அதே யுத்தங்களை" பிலிப்பியர்கள் "போராடவேண்டியிருக்கும்" என்று பிலிப்பியர்களுக்குப் பவுல் கூறினார் (பிலிப்பியர் 1:30). "உலகமானது ... கிறிஸ்தவத்திற்கு விரோதமான சூழ்நிலையாகவே எப்போதும் இருந்துள்ளது."[12] உங்கள் விசுவாசம் தாக்கப்படலாம். உங்கள் உறுதிப்பாடு மற்றும் தரஅளவைகள் பற்றி மக்கள் கேலி செய்யலாம். உங்கள் பலவீனங்களை அறிகிற சாத்தான், நீங்கள் தவறு செய்யும்படி உங்களைத் தூண்டலாம். சில வேளைகளில் வாழ்வானது உங்களைக் மூழ்கடிப்பதாக இருக்கக் கூடும். இவற்றில் ஏதாவது நடைபெறும்போது, பவுல் உங்களைக் கர்த்தருக்கு நெருக்கமாக இழுத்து அவருக்குள் உறுதியாக நிலைநிற்கச் செய்வார் (பிலிப்பியர் 4:1; காண்க 1 பேதுரு 5:7).

"சுவிசேஷத்தின் விசுவாசம்" என்பது ஒரு போர்க்களமாக உள்ளது (பிலிப்பியர் 1:27). "விசுவாசம்" என்பது, இயேசுவின் மீதான விசுவாசத்தில் மையங்கொண்டுள்ள போதனையின் அமைப்பை - அதாவது புதிய ஏற்பாட்டை குறிக்கிறது. சுவிசேஷத்தின் விசுவாசமானது தொடர்ந்து தாக்குதலின் கீழ் இருக்கிறது. அதை வெறுப்பவர்கள், அதை சிறுமைப்படுத்துபவர்கள், அதை மறுப்பவர்கள், மற்றும் அதை அழிக்க நாடுபவர்கள் உள்ளனர். நீங்களும் நானும் அதைச் செய்ய (அதாவது அதன்படி *வாழ*), அதை அறிவிக்க, அதைத்

தற்காக்க மற்றும் அதற்காக மரிக்கக்கூட மனவிருப்பமாயிருக்க வேண்டும்! நாம், "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக ... தைரியமாய்ப் போராட" தயாராக இருக்க வேண்டும் (யூதா 3ஆ).

உபத்திரவத்தில் பயமில்லாதிருங்கள் (1:28-30)

நாம் ஒரு யுத்தத்தில் இருந்தால், நமக்கு விரோதிகள் இருக்க வேண்டும். வேறொரு இடத்தில் பவுல், சாத்தானும் அவனது உடன் வேலையாட்களும் நமது ஆவிக்குரிய எதிரிகளாக இருக்கின்றனர் என்று வலியுறுத்தினார் (எபேசியர் 6:11, 12). இருப்பினும் சட்டப்படி, பிசாசானவன் மக்கள் மூலமாகக் கிரியை செய்கிறான் (காண்க மத்தேயு 16:23; யோவான் 6:70).

தொடர்ந்து பவுல், "(எதிர்க்கிறவர்களுக்கு) நீங்கள் மருளாதிருக்கிறது" என்று உரைத்தார் (வசனம் 28அ). இந்த "எதிர்க்கிறவர்கள்" யார் என்பது பற்றி நாம் உறுதியாக எதுவும் கூற இயலாது; ஆனால் 30ம் வசனத்தில் அப்போஸ்தலர், பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்கள், அந்த நகரத்தில் தாம் அனுபவித்திருந்ததும் இப்போது ரோமாபுரியில், தாம் அனுபவித்துக் கொண்டிருப்பதுமான, "அதே போராட்டத்தை அனுபவித்துக்" கொண்டிருந்தனர் என்று கூறினார். பிலிப்பி நகரில் இருந்த அரசு அதிகாரிகள் அந்த நகரத்துக் குடிமக்களால் தூண்டிவிடப்பட்டுப் பவுலின் எதிரிகள் ஆகியிருந்தனர் (காண்க-நடபடிகள் 16:19-22). ரோமாபுரியில், எருசலேம் நகரத்துக் குடிமக்களால் தூண்டிவிடப்பட்டிருந்த யூதத்துவப் பிரதிநிதிகளினுடைய அரசு அலுவலர்கள் அவரது முதன்மை விரோதிகளாக இருந்தனர் (காண்க நடபடிகள் 25:6-11). புறதெய்வ வணக்கம் செய்த மக்களாலும் ஒருவேளை சிறிய அளவிலான யூதத்துவ சமூகத்தினராலும் செல்வாக்குச் செலுத்தப்பட்டிருந்த இரக்கமற்ற அரசு அலுவலர்களே, பிலிப்பியர்களின் முதன்மை எதிரிகளாக இருந்திருப்பார்கள்.

பிலிப்பியர்களின் எதிரிகள் யாராக இருந்தாலும், சில வேளைகளில் போராட்டமானது மூழ்கடிக்கச் செய்வதாக இருந்திருக்க வேண்டும், ஏனெனில் சகோதரர்கள் தங்களை எதிர்க்கிறவர்களால் "மருளாதிருக்க" வேண்டும் என்று பவுல் ஊக்கப்படுத்தினார். "மருளாதிருத்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (pturo என்பதன் ஒரு வடிவமான) கிரேக்க வார்த்தையானது "அச்சம் அடைதல், [அல்லது] பயமடைதல், ஒருவரை அச்சம் அடையச் செய்தல்" என்று அர்த்தப்படுகிறது.[13] இந்த வார்த்தை "தொடக்கத்தில், பயமடைந்த ஒரு மிருகம், குறிப்பாக கூச்சமான ஒரு குதிரை அல்லது திகைப்படைந்த மந்தையின் கட்டுப்படுத்த இயலாத மிரண்டோடும் ஓட்டம் என்பதற்கு நடைமுறைப்படுத்தப்பட்டது."[14] மின்னலினால் திகைப்படைந்து புல்வெளியின் குறுக்கே மிரண்டோடும், குதிரைகளின் மந்தையொன்றை உங்கள் சிந்தையில் சித்தரித்துக் கொள்ளுங்கள்.[15] நீங்கள் மனிதரீதியான விவரிப்பு ஒன்றை விரும்பித் தேர்ந்து கொள்வதென்றால், கெத்செமனே தோட்டத்திற்கு வெளியே "ஓடிப்போகையில்" சீஷர்கள் இருந்த நிலையைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள் (மத்தேயு 26:56ஆ). இவ்வாறு பயமடைந்து விடக்கூடாது என்று பவுல் தமது வாசகர்களிடத்தில் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். இயேசு தமது சீஷர்களிடத்தில், "என் சிநேகிதராகிய உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: சரீரத்தைக் கொலைசெய்து, அதன்பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள்" என்று கூறினார் (லூக்கா 12:4).

எபிரெயர் 13:6ம் வசனம், "அதினாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று சொல் லலாமே" என்று கூறுகிறது.

பிலிப்பியர்கள் தங்கள் விசுவாசத்திற்காகத் துன்புற வேண்டியிருந்தபோது, அவர்கள் "மருளாதிருக்க" எது உதவி செய்திருக்கும்? அவர்களின் மனக்காட்சிக்கு உதவப் பவுல் மூன்று சத்தியங்களைப் பட்டியலிட்டார். முதலாவது, *அவர்கள் துன்புறுதலானது அவர்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர் என்று சுட்டிக் காண்பித்தது:* "நீங்கள் மருளாதிருக்கிறது அவர்கள் கெட்டுப்போகிறதற்கும், நீங்கள் *இரட்சிக்கப்படுகிறதற்கும் அத்தாட்சியாயிருக்கிறது;*[16] இதுவும் தேவ னுடைய செயலே" (வசனம் 28; என்னால் வலியுறுத்தப்படுகிறது). துன்புறுதலைப் பிலிப்பியர்கள், தாங்கள் பலவீனமாகவும் தங்கள் எதிராளிகள் பலத்தவர்களாகவும் இருந்ததற்கு "ஒரு அத்தாட்சியாக" கண்ணோக்கியிருக்க முடிந்திருக்கும் - ஆனால் செயல்விளைவில் அப்போஸ்தலர், "இல்லை, அது நீங்கள் இரட்சிப்பின் சாலையில் இருக்கிறீர்கள் என்பதற்கு ஒரு அத்தாட்சியாக உள்ளது!" என்று கூறினார். துன்புறுதல் மாத்திரம் ஒருவர் தேவனால் அங்கீகரிக்கப்பட்டவராக இருக்கிறார் என்பதற்கு நிரூபணமாக இருப்பதில்லை; ஆனால் நீங்கள் கிறிஸ்தவராக இருப்பதால் துன்புற்றால், நீங்கள் சரியானவற்றைச் செய்பவராக இருக்க வேண்டும்! இது ஆறுதலைக் கொண்டுவர முடியும், ஏனெனில் "தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோமர் 8:31).

அவர்களின் உபத்திரவம், அவர்களுடைய எதிராளிகளுக்கு "கெட்டுப்போகிறதற்கு அத்தாட்சியாக" உள்ளது என்றும் அவர் கூறினார். அவர்களின் எதிரிகள், கிறிஸ்துவின் சபையை அழிப்பதற்கான தங்கள் முயற்சிகள் "கெட்டுப்போகிறதற்கு அடையாளமாக" இருந்தன என்று அறிந்து இருந்தார்களா? அனேகமாக இல்லை. பிலிப்பியர் 1:28ம் வசனம், NASB வேதாகமத்தில் "for them" (காண்க KJV மற்றும் NIV) என்று குறிப்பிடுகையில், கிரேக்க வசனமானது "அவர்களுக்கு" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். இது, கிறிஸ்தவர்களின் உபத்திரவம் *அவிசுவாசிகளுக்கு* "அத்தாட்சியாக" இருக்கச் சாத்தியமான வழி என்ன என்பது பற்றிய கலந்துரையாடலைத் தூண்டியுள்ளது. கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படும்போதும் கூட தவறு செய்யவில்லை என்ற உண்மையானது அவர்களின் எதிராளிகளில் சிலர், நின்று தாங்கள் ஒருவேளை சரியாக இருக்கிறோமா அல்லது தவறாக இருக்கிறோமா என்று மறுபடி ஆழ்ந்து சிந்திக்கச் செய்திருக்கலாம். பிலிப்பியர்களைத் துன்புறுத்தியவர்கள், கிறிஸ்தவர்களுக்கு எதிரான தங்கள் வெற்றியை, தாங்கள் சரியாக இருந்தமைக்கும் இயேசுவைப் பின்பற்றியவர்கள் தவறாக இருந்தமைக்கும் "அத்தாட்சியாக" கண்ணோக்கியிருக்க அதிக வாய்ப்புள்ளது. இருந்தபோதிலும், ஒவ்வொரு நாளும் கடந்துசென்ற போது, அவர்கள் நித்திய அழிவை நோக்கி ஒரு படி நெருங்கி நகர்ந்தனர். "சபைக்கும் சுவிசேஷத்திற்கும் எதிர்ப்பு விடாப்பிடியாக இருத்தல் என்பது, நிறைவான அழிவிற்கு நிச்சயமான அத்தாட்சியாக உள்ளது, ஏனெனில் அது இரட்சிப்பின் ஒரே வழியைப் புறக்கணித்தலை உள்ளடக்குகிறது."[17] பிலிப்பியர்கள், தங்கள் பிரச்சனைகள் "நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள் என்பதற்கும் உங்கள் விரோதிகள் இழந்துபோகப்படுவார்கள் என்பதற்கும் தேவனிடமிருந்து வரும் நிரூபணமாக" இருந்தன என்பதை அறிய வேண்டும்

என்று பவுல் விரும்பினார்.

கர்த்தருக்காகத் துன்புறுத்தப்படுதல் ஒரு சிலாக்கியமாக இருந்தது என்பது பற்றிய பிலிப்பியரின் கண்ணோக்கிற்கு உதவிசெய்யும் வகையிலான, பவுலின் இரண்டாவது சத்தியம் பின்வருவதாக இருந்தது: "ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது" (வசனம் 29). "Granted" ["அருளப்பட்டிருக்கிறது"] என்பதற்கான (*charizomai* என்பதன் ஒரு வடிவமான) கிரேக்க வார்த்தை "கிருபை" (*charis*) என்ற வார்த்தை வந்த அதே வேர்வார்த்தையில் இருந்தே வந்துள்ளது. இது, "ஒரு இலவச சலுகை *அளித்தல்*" என்று அர்த்தப்படுகிறது.[18] 29ம் வசனம் தேவன் நமக்குத் தருகிற இரண்டு கொடைகளைக் குறிப்பிடுகிறது. விசுவாசித்தல் என்பது ஒரு கொடையாக உள்ளது. விசுவாசத்தை உண்டாக்குகிற வேதாகமத்தையும் (ரோமர் 10:17) அதன் சத்தியங்களைப் புரிந்துகொள்ளக்கூடிய திறனுள்ள மனங்களையும் (எபேசியர் 5:17) கர்த்தர் நமக்குக் கொடுத்தார் என்ற வகையில், அவர் நமக்கு விசுவாசத்தை "கொடுக்கிறார்." விசுவாசத்தின் கொடைக்காகத் தேவனுக்கு நன்றி! விசுவாசத்தின் மூலமாக தாம், தேவனுடைய கிருபையை நமதாக்கிக் கொள்கிறோம் (எபேசியர் 2:8, 9) மற்றும் அன்றாடம் நிலைநிறுத்தப்படுகிறோம். விசுவாசம் என்பது "பரத்திலிருந்து" வருகிற "நல்ல" கொடைகளின் ஒன்றாக உள்ளது (யாக்கோபு 1:17).

கிறிஸ்துவினிமித்தம் பாடுபடுதல் என்பது, 29ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இன்னொரு கொடையாக உள்ளது. இது "விரும்பப்படாத கொடை" என்று அழைக்கப்பட்டுள்ளது. கொடைகள் நிரம்பிவழியும் மேஜை ஒன்றை எனது மனக்காட்சியில் நான் காண்கிறேன்: அதில் கர்த்தர் நமக்கு அருளுகிற ஆச்சரியமான எல்லா ஆசீர்வாதங்களும் உள்ளன. இந்தக் கொடைகளில், மக்கள் தாங்கள் விரும்புகிறவற்றைத் தேர்ந்து எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டால், துன்புறுதலின் கொடையே அனேகமாக, மேஜையில் விடப்பட்ட கடைசிக் கொடையாக இருக்கும். விசுவாசித்தலைக் கிறிஸ்தவ வாழ்வின் "பெருமகிழ்வு நிறைந்த பாகம்" என்றும் துன்புறுதலை "கடினமான பாகம்" என்றும் சார்லஸ் ஸ்வின்டால் என்பவர் அழைத்தார்.[19]

இருந்தபோதிலும், துன்புறுதல் என்பது கிறிஸ்தவ அனுபவத்தின் பாகமாக உள்ளது - மற்றும் துன்புறுதலில் மதிப்புள்ளது - என்று வேதாகமம் போதிக்கிறது (காண்க யோவான் 16:33; நடபடிகள் 5:41; 14:22; ரோமர் 5:3-5; 2 தெசலோனிக்கேயர் 1:4, 5; எபிரெயர் 12:5-7, 11; யாக்கோபு 1:2-4; 1 பேதுரு 3:14; 4:12-14). துன்புறுதல் என்பது விசுவாசத்தினால் சந்திக்கப்படுகையில், அது கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் வளர நமக்கு உதவுகிறது.

இருப்பினும், துன்புறுதலில் அல்ல, ஆனால் "அவர் நிமித்தமாக" - இயேசுவின் நிமித்தமாக துன்புறுதலில்தான் ஆசீர்வாதம் உள்ளது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். பேதுரு, "ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் [கிறிஸ்துவின் நாமத்தின்நிமித்தம்] தேவனை மகிமைப்படுத்தக்கடவன்" என்று

எழுதினார் (1 பேதுரு 4:15, 16). கர்த்தருக்காகப் பாடுபடுதல் ஒரு சிலாக்கியமாக உள்ளது. இயேசு பின்வருமாறு கூறினார்:

> *நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.*
>
> *என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் (மத்தேயு 5:10-12அ).*

__பிலிப்பியர்கள் துன்புற்றபோது அவர்கள் நல்ல தோழமையில் இருந்தார்கள்__ என்பதே, துன்புறுத்தப்படுதல் பற்றிய பிலிப்பியரின் கருத்துநோக்கைக் கூர்மையாக்கக் பவுல் கொடுத்த மூன்றாவது சத்தியமாக உள்ளது: "நீங்கள் என்னிடத்திலே கண்டதும் எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே உங்களுக்கும் உண்டு" (பிலிப்பியர் 1:30). "போராட்டம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (agon என்பதன் ஒரு வடிவமானது) சொற்றொடர், ஆங்கிலத்தில் நாம் "agony" என்ற வார்த்தையை எதிலிருந்து பெறுகிறோமோ அதே கிரேக்க வார்த்தையாக உள்ளது. இது, வட்ட அரங்கில் கிளாடியேட்டர்களால் போரிடப்பட்ட உக்கிரமான யுத்தங்களை விவரிக்கப்பயன்படுத்தப்பட்டது.[20] 30ம் வசனத்தில் உள்ள வார்த்தைகள், பிலிப்பி நகரத்தில் பவுலுக்கு நேர்ந்தவற்றின் நினைவுகளுடன் பிலிப்பியக் கிறிஸ்தவர்களின் சிந்தைகளில் பெருக்கெடுத்திருக்கலாம். (சிறைச்சாலைக்காரரின் முகத்தில் தோன்றிய சங்கடத்தை உங்களால் காண முடிகிறதா?) இப்போது, அவர்கள் அதே வகையான துன்பத்தின் கீழ்க் கடந்து சென்று கொண்டிருந்தனர். அவர்கள் தனித்து விடப்படவில்லை என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று பவுல் விரும்பினார் - மற்றும் அதையே அவர் புரிந்து கொண்டிருந்தார்.

தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் நிருபத்தில் பவுல், "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் __துன்பப்படுவார்கள்__" என்று எழுதினார் (3:12; என்னால் வலியுறுத்தப்படுகிறது). அது உங்களுக்கு நடக்கும்போது, இந்த மூன்று சத்தியங்களும் உங்களை ஆறுதல்படுத்தி உங்களுக்குப் பலத்தைக் கொடுக்கக்கூடும்:

- *உங்கள் உபத்திரவங்கள், நீங்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதற்குக் குறிப்படையாளமாக உள்ளது.*
- *கர்த்தருக்காகத் துன்புறுதல் ஒரு சிலாக்கியமாக உள்ளது.*
- *நீதியின் நிமித்தம் நீங்கள் துன்புறும்போது, நீங்கள் ஒரு நல்ல தோழமையில் இருக்கிறீர்கள் (காண்க மத்தேயு 5:12ஆ).*

முடிவுரை

நாம், "ஒரு கிறிஸ்தவர் செய்ய வேண்டிய 'ஒரே' விஷயம்" என்பதைப் பற்றிக் கலந்துரையாடி இருக்கிறோம். சுலபமாக நிறைவேற்றக் கூடியதான ஒரே ஒரு நிபந்தனையை நீங்கள் கண்டறியும்படி நம்பிக்கையாயிருந்தால், அநேகமாக நீங்கள் ஏமாற்றம் அடைந்திருப்பபீர்கள்; ஏனெனில் நாம் பொறுப்புகளின் பல

வகைகளைத் தொட்டிருக்கிறோம். இருப்பினும் நான், பின்வரும் சிந்தனை உதவும் என்று நம்புகிறேன்: "ஒரு கிறிஸ்தவர் என்ற வகையில் நான் செய்ய வேண்டிய விஷயம் ஒன்றைக் கொண்டிருக்கிறேன் - அது பரலோக ராஜ்யத்தின் குடிமகன்/குடிமகள் போன்று செயல்படுவதே ஆகும்!"

நாம் பரலோக வட்டாரத்தின் குடிமகன்கள் என்று புரிந்துணரக்கூடும் என்றால், இது பிலிப்பியர் 1:27-30ன் பொறுப்புகளை நிறைவேற்ற நமக்கு உதவும்:

- *பெரும்பான்மையான குடிமக்கள் தங்கள் குடிமைத்துவம் பற்றிப் பெருமை அடைகின்றனர். பரலோகத்தின் குடிமக்கள் என்ற வகையில் நாம், நமது தனிச்சிறப்பைப் புரிந்துகொண்டு நமது "சொந்தநாட்டின்" மீது சாதகமாக சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் வகையில் வாழ வேண்டும்.*
- *குடிமக்கள் என்பவர்கள் தங்களைக் காட்டிலும் பெரிய ஒன்றின் பாகமாக உள்ளனர்; ஒன்றுகூடி இணைந்த நிலையில், அவர்கள் தங்கள் விரோதிகளை எதிர்த்து நிற்க முடியும். பரலோகத்தின் குடிமக்கள் என்ற வகையில், நாம் ஒருவர் பிறரை ஆதரிக்கிறோம், இவ்வாறாக நாம், தடைகள் எவையென்றாலும், உறுதியாக நிலைநிற்க முடியும்.*
- *ஒன்றுகூடி இணைந்த நிலையின் மூலமாக, குடிமக்கள் தைரியத்தை ஆதாயப்படுத்திக் கொள்கின்றனர். இனிவரவிருக்கும் உலகத்தின் குடிமக்கள் என்ற வகையில், நாம் இந்த உலகத்தினால் பயமுறுத்தப்படுவதில்லை. மாறாக, "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே" (ரோமர் 8:37).*

பிலிப்பியர் 2:1-4 வசனப் பகுதியின் மீதான, "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற பாடத்தில், பரலோக ராஜ்யத்தின் குடிமகன்/குடிமகள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றிய நமது கலந்துரையாடலை நாம் தொடருவோம்.

குறிப்புகள்

[1]William F. Arndt and F. Wilbur Gingrich, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature* (Chicago: University of Chicago Press, 1957), 529. பெரும்பான்மையான தரமான மொழிபெயர்ப்புகள், monon என்பதை "மாத்திரம்" என்றே தரவழைக்கின்றன (KJV; NKJV; ASV; NASB; RSV; NRSV; CJB), ஆனால் ஒரு சில மொழிபெயர்ப்புகள் இவ்வார்த்தையை மொழிபெயர்ப்பதற்குப் பதிலாகப் பொருள் விளக்கியிருக்கின்றன (NIV; NCV). [2]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary,* vol. 43, *Philippians,* ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 54. [3]Ibid., 55. [4]William Barclay, *The Letters to the Philippians, Colossians, and Thessalonians*, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 29. [5]Alec Motyer, *The Message of Philippians: Jesus Our Joy*, The Bible Speaks Today series, ed. John R. W. Stott (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1984), 92. [6]Charles R. Erdman, *The Epistle of Paul to the*

Philippians (Grand Rapids, Mich.: Baker Book House, 1983), 71. [7]Maxie D. Dunnam, *Galatians, Ephesians, Philippians, Colossians, Philemon*, The Communicator's Commentary, ed. Lloyd J. Ogilvie (Waco, Tex.: Word Books, 1982), 272. [8]Barclay, 30. [9]Eugene H. Peterson, *The Message: New Testament with Psalms and Proverbs* (Colorado Springs: NavPress, 1995), 490. [10]இந்தச் சொற்றொடர் கிரேக்க மொழியில் *sun ("உடன்") athleo* என்ற முன்னிடைச் சொல்லை, "athlete" மற்றும் "athletic" என்ற வார்த்தைகளை நாம் பெறுகிற சொல்லான *sunathleo* என்ற வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது. இவ்வார்த்தை, "ஒரு விளையாட்டு வீரர் போராடுவது போலப் போராடுதல்" என்று அர்த்தப்படுகிறது (*The Analytical Greek Lexicon* [London: Samuel Bagster & Sons, Ltd., 1971], 8, 385).

[11]Avon Malone, *Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 45. [12]James Burton Coffman, *Commentary on Galatians, Ephesians, Philippians, Colossians* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977), 273. சுவிசேஷத்திற்கு விரோதமான சூழ்நிலைகளில் வாழ்கிற கிறிஸ்தவர்கள், பவுலின் புத்திமதியை உண்மையாகவே புரிந்துகொள்கின்றனர். [13]Arndt and Gingrich, 735. [14]John A. Knight, *Philippians, Colossians, Philemon,* Beacon Bible Expositions (Kansas City, Mo.: Beacon Hill Press, 1985), 57. [15]உங்கள் உரையைக் கேட்பவர்கள், மிரண்டோடும் மற்ற பெரிய விலங்குகளைப் பற்றி அதிகம் அறிந்திருக்கலாம். விஷயம் அப்படியிருந்தால், இந்த விவரிப்பில் அந்த விலங்குகளைப் பதிலிட்டுக் கொள்ளவும். [16]*Endeixes* என்ற கிரேக்க வார்த்தை, " 'வெளியே சுட்டிக்காண்பித்தல்' என்று நேரடி அர்த்தப்படுகிறது. இது ... 'ஒரு செயல்விளக்கம் அல்லது நிரூபணம்' என்று அர்த்தப்பட வந்தது" (James M. Tolle, *Notes on Philippians* [San Fernando, Calif.: Tolle Publications, 1972], 24). [17]Richard B. Gaffin, Jr., notes on Philippians, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 1804. [18]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 433-34. [19]Charles R. Swindoll, *Laugh Again* (Dallas: Word Publishing, 1992), 72. [20]*Analytical Greek Lexicon*, 6; Malone, 47.

6

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!"

(பிலிப்பியர் 2:1-4)

ஈசாப் என்பவரின் கதைகளில்[1] ஒன்று, "நான்கு எருதுகளும் சிங்கமும்" என்று அழைக்கப்படுகிறது. அந்தக் கதை பின்வருமாறு செல்கிறது: நெருங்கிய நண்பர்களாயிருந்த நான்கு எருதுகள் இருந்தன. அவை ஒன்றாகப் பயணம் செய்தன, ஒன்றாக உணவு உண்டன மற்றும் ஒன்றை மற்றவை பாதுகாக்கும்படி ஒன்றுக்கொன்று நெருக்கமாகத் தங்கியிருந்தன. இருப்பினும் அவற்றைத் தின்பதென்று ஒரு சிங்கம் தீர்மானித்தது. அந்தச் சிங்கம் அந்த எருதுகளில் எந்த ஒன்றுடனும் சரிசமானமாகப் போராட முடியும், ஆனால் அவை நான்குடனும் ஒரே நேரத்தில் போராட இயலாது - எனவே அந்தச் சிங்கம் ஒரு திட்டம் வகுத்தது. எப்போதெல்லாம் ஒரு எருது மற்றவற்றிலிருந்து சற்றுப் பின்தங்கிச் சென்றதோ, அப்போதெல்லாம் அந்தச் சிங்கம் அந்த எருதின் காதில், அதன் மற்ற மூன்று நண்பர்களும் அதைப்பற்றி இரக்கமற்ற விஷயங்களைக் கூறுகின்றன என்று கிசுகிசுக்கும். சற்றுக் காலத்திற்குப் பின்பு, ஒவ்வொரு எருதும் மற்ற மூன்றும் தனக்கு எதிராகத் திட்டம் வகுக்கின்றன என்று முடிவு செய்து, அவை ஒவ்வொன்றும் தனது தனிவழியில் சென்றன. இவ்வாறாக அந்தச் சிங்கம் நான்கு நல்ல பெரிய விருந்துகளைப் பெற்றுக்கொண்டது.[2] இந்தக் கதை பின்வரும் "ஒழுக்கநெறியுடன்" முடிகிறது: ["United we stand; divided we fall."[3]] *"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கிடின் அனைவர்க்கும் தாழ்வு."*

புகழ்பெற்ற இவ்வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள உண்மையானது உலகம் முழுவதிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.[4] அரசியலாளர்கள் இதன் உண்மையை ஒப்புக் கொள்கின்றனர். 1769ல், ஜான் டிக்கின்ஸ்[5] என்பவர் தமது சகக் குடிமக்களிடத்தில், "எனவே, வீர அமெரிக்கர்களே, நாம் யாவரும் கையோடு கை கோர்த்து நிற்போம்! நாம் யாவரும் ஒன்றுபட்டிருத்தலால் நிமிர்ந்து நிற்கிறோம், பிரிந்திருத்தலால் நாம் வீழ்ந்துபோகிறோம்" என்று வற்புறுத்தி வேண்டிக் கேட்டுக்கொண்டார். இராணுவ வியூகம் வகுப்பவர்கள் இதன் உண்மையை ஒப்புக்கொள்கின்றனர். "பிரித்துவைத்து வெற்றிகொள்" என்பது ஒரு பழங்கால அமெரிக்கப் பழமொழியாக உள்ளது.[6] இவ்வார்த்தைகள் மதத்தில் இருமடங்கு உண்மையாக உள்ளது. இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் ஒன்றாயிருக்க வேண்டும் என்று ஜெபித்தார் (யோவான் 17:20-23) மற்றும் பின்வரும் பொதுவான உண்மையை உரைத்தார்: "ஒரு ராஜ்யம் தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த ராஜ்யம் நிலைநிற்கமாட்டாதே" (மாற்கு 3:24).

"ஒரு கிறிஸ்தவர் செய்ய வேண்டிய 'ஒரே' விஷயம்" என்ற பாடத்தில் நாம், "சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம்" நாம் நடந்துகொள்ள வேண்டியதன் மீது கவனம் குவித்தோம் (பிலிப்பியர் 1:27). "நடந்துகொள்ளுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையானது, நாம் பரலோக ராஜ்யத்தின் குடிமக்களாயிருத்தலுக்குச் சீர்பொருத்தமான வகையில் நடந்துகொள்ள வேண்டியதைச் சுட்டிக்காண்பிக்கிறது என்று குறிப்பிட்டோம். சிந்தை, இருதயம் மற்றும் வாழ்வு ஆகியவற்றில் ஒன்றிணைந்திருத்தல் என்பது அதைச் செய்வதற்கான ஒரு வழியாக உள்ளது:

> நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக் குறித்து நான் கேள்விப்படும்படி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள் (1:27).
>
> நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள் (2:2).

ஒரு நாட்டின் குடிமக்கள் பிரிந்து இருக்கும்போது, அவர்கள் தங்கள் விரோதிகளுக்குச் சுலபமாக இரையாகி விடுகின்றனர். பரலோக ராஜ்யத்தின் குடிமக்கள் பிரிந்திருக்கும்போது, அவர்கள் தங்கள் அரசருக்குச் சங்கடமாயிருப்பது மாத்திரமல்ல (காண்க 1 கொரிந்தியர் 1:10-13; கலாத்தியர் 5:19-21), ஆனால் அவர்கள், "கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிற" (1 பேதுரு 5:8) தங்கள் "எதிராளியால்" சுலபமாகத் தாக்கப்படக் கூடியவர்களும் ஆகின்றனர்.

பிலிப்பியர் 2:1-4, இந்தப்பாடத்திற்கான நமது வேதவசனப் பகுதியாக உள்ளது. நாம் ஒரு புதிய அதிகாரத்தைத் தொடங்கினாலும், பிலிப்பியர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற கலந்துரையாடலைப் பவுல் இதிலும் தொடர்ந்தார். 2ம் அதிகாரத்தின் தொடக்கத்தில் உள்ள "ஆதலால்" என்ற வார்த்தையானது இதை 1ம் அதிகாரத்தின் முடிவுப் பகுதியுடன் பிணைக்கிறது. முதல் நான்கு வசனங்களின் வலியுறுத்தம் ஐக்கியத்தின் மீதுள்ளது.

ஆவியில் ஐக்கியமாயிருத்தல் (2:1, 2)

1:27-30ல் பவுலின் வாசகர்கள் உறுதியாக நிலைநிற்க வேண்டும் என்றும் தங்களின் விரோதிகளால் பயமுறுத்தப்பட்டவர்களாக இருந்து விடக்கூடாது என்றும் பவுல் புத்திகூறினார். இப்போது, 2ம் அதிகாரத்தின் திறப்பு வசனங்களில் அவர், சககிறிஸ்தவர்களிடத்தில் இருந்து ஆதாயப்படுத்தப்பட்டு இருக்கக் கூடிய நிலைப்புத்தன்மையும் பலமுமே, அசைக்கப்படாமலும் அச்சமில்லாமலும் நிலைத்திருப்பதற்கான திறவுகோல் காரணியாக உள்ளது என்று வலியுறுத்தினார். அவர்கள் எவ்வாறு இருக்கவேண்டுமோ அவ்வாறு இருப்பதற்கு, அவர்கள் *ஐக்கியமாக* இருத்தல் அவசியமாயிற்று.

இந்த அதிகாரம், கலந்துரையாடலின் கீழ் உள்ள தலைப்பின்

முக்கியத்துவத்தை அடிக்கோடிட வடிவமைக்கப்பட்டுள்ள இலக்கியக் கருவி ஒன்றுடன் தொடங்குகிறது: "ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால்" (வசனம் 1). "ஆல்" என்ற வார்த்தையானது வழக்கமாக ஒரு நிபந்தனையை அறிமுகப்படுத்தி அதைத் தொடர்ந்து வருவது விஷயமாக இருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது. இந்த வசனத்தில் பவுல், அவ்வார்த்தையை அந்த வகையில் பயன்படுத்தவில்லை. மாறாக அதை அவர், குறிப்பிட்ட சத்தியங்களை வலியுறுத்த, ஏவுதல் பெற்ற சொற்கலை விளக்கத்தின் பகுதியாகப் பயன்படுத்தினார். 1ம் வசனத்தில் [உண்டானால்] "ஆல்" என்பதற்குப் பதிலாக [உண்டாகி,] "இருப்பதால்" என்ற சொல்லைப் பதிலாகப் பயன்படுத்தினால் இவ்வாக்கியத்திற்கு எந்த ஊறும் செய்யப்படுவதில்லை.

குறிப்பிட்ட பண்புகள் வசனத்தைக் கடந்து போகுதலில் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளன, ஆனால் இயேசுவுக்குள் நாம் கொண்டுள்ள ஆசீர்வாதங்களின் மிகச்சிறந்த தொகுப்புரை ஒன்றைக் கண்டறிதல் கடினமாயிருக்கும்:

- "... கிறிஸ்துவுக்குள் ... ஆறுதல்": "ஆறுதல்" [இது ASV வேதாகமத்தில் உற்சாகப்படுத்துதல் என்று அர்த்தப்படும் "encouragement" என்ற வார்த்தையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது (Gk.: *paraklesis*) "பக்கமாக அழைத்தல்" என்று நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. இது, உதவிக்கு யாரேனும் ஒருவரை "பக்கமாக அழைத்து" இருத்தல் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது. இது (ASV) "புத்திமதிகூறுதல்" அல்லது (KJV) "ஆறுதல்" என்றும் மொழிபெயர்க்கப்படமுடியும். [தமிழ் வேதாகமத்தில் இவ்வாறே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது] NCV வேதாகமம், "கிறிஸ்துவுக்குள் உங்கள் வாழ்வு, உங்களுக்கு பலத்தைக் கொடுத்துள்ளதா?" என்று கேட்கிறது. "ஆம்!" என்ற திரும்ப ஒலிக்கும் வார்த்தையே நமது பதிலாக உள்ளது.
- "அன்பினாலே ... தேறுதல்": "தேறுதல்" [இது ASV வேதாகமத்தில் "consolation" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது] என்பதற்கான வார்தையானது (Gk.: *paramuthia* இது "உடன் பேசுதல்" என்று அர்த்தப்படுகிறது) "ஆறுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையைப் போன்றதாகவே உள்ளது; இது "தேற்றுதல்" (KJV, NIV) அல்லது "தூண்டுதல்" (RSV) என்று கூட அர்த்தப்படக்கூடும். NCV வேதாகமம், "அவரது அன்பு உங்களைத் தேற்றுகிறதா?" என்று கேட்கிறது. ஆம், அது அவ்வாறு செய்கிறது! தேவன் தமது குமாரனை அனுப்புமளவுக்கு அன்புகூர்ந்தார் (யோவான் 3:16), மற்றும் அவர் நாள்தோறும் தமது அன்பைத் தொடர்ந்து காண்பிக்கிறார் (ரோமர் 8:39).
- "ஆவியின் ... ஐக்கியமும்": "ஆவி" என்ற வார்த்தை மனித ஆவியையோ அல்லது பரிசுத்த ஆவியானவரையோ அர்த்தப்படுத்தக் கூடும். மனித ஆவியே இவ்விடத்தில் அர்த்தப்படுத்தப்படுகிறது என்று நம்புகிறவர்கள்,

மூலவசனத்தில் “ஆவி” என்பதற்கான வார்த்தைக்கு முன்னால் (“the” என்ற) திட்டவட்டச் சுட்டுச்சொல் இல்லை என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றனர். இருப்பினும் மிகப்பரவலாகப் பயன்படுத்தப்படுகிற மொழிபெயர்ப்புகள், “Spirit” என்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பதாக ஆக்கும்படி அதில் பெரிய “S” என்ற எழுத்தை இடுகின்றன (KJV, NKJV, ASV, NASB, NIV, RSV). இது சரியானதாக இருக்கும் என்று யூகித்த நிலையில், “ஆவியின் ஐக்கியம்” என்பது “ஆவியானவருடன் ஐக்கியம்'' என்பதையோ (காண்க NIV மொழிபெயர்ப்பு) அல்லது “ஆவியானவரால் நாம் மகிழ்வுடன் அனுபவிக்கும் ஐக்கியம்” என்பதையோ சுட்டிக் காண்பிக்கக்கூடும். இவ்விரண்டில் எந்தவித விளக்கமும் சாத்தியமானதாக உள்ளது, மற்றும் இவ்விரண்டுமே முக்கியமான சத்தியங்களைக் குறிப்பிடுகின்றன; ஆனால் பிந்தியது இவ்விடத்தில் அதிகம் பொருத்தமானதாக இருக்கச் சாத்தியம் உள்ளது. நாம் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்ற (முழுக்காட்டப்பட்ட) போது, தேவனுடைய ஆவியானவரை நாம் ஒரு கொடையாகப் பெற்றோம் (நடபடிகள் 2:38), மற்றும் அது நம்மை ஐக்கியப்படுத்த வேண்டும் (காண்க 1 கொரிந்தியர் 12:13). ரிச்சர்டு கேஃபின் என்பவர், இவ்விடத்தில் “விசுவாசிகள் ஒவ்வொருவருக்குள்ளும் தங்கியிருக்கும் ஆவியானவரால் விசுவாசிகளுக்கு இடையில் உண்டாக்கப்பட்ட ஐக்கியம் [காண்க 2 கொரிந்தியர் 13:14]” என்பதற்கான குறிப்பு உள்ளதென்று முடிவு செய்தார்.[7] “இது, கர்த்தருக்குள் சகோதரர்களாக இருக்கும் நாம், ஒரே ஆவியானவரைப் பகிர்ந்து கொள்கிறோம் என்ற எதையாவது உங்களுக்கு அர்த்தப்படுத்துகிறதா?” (LB) அது அவ்வாறு செய்யவேண்டும்!

- “... உருக்கமான பட்சமும் இரக்கங்களும்”: தேவனுடைய அன்பை அறிந்திருப்பவர்கள் மற்றவர்கள் மீது அன்புகூர வேண்டும் (1 யோவான் 4:11; காண்க கொலோசெயர் 3:12). பிலிப்பியர்கள் பட்சத்தையும் இரக்கத்தையும் பெற்றிருந்தார்களா? ஆம், அவர்கள் அவற்றைப் பெற்றிருந்தனர் (காண்க பிலிப்பியர் 1:8) - மற்றும் நாமும் அவ்வாறே பெற்றிருக்கிறோம்!

ஆவிக்குரிய இந்த ஆசீர்வாதங்கள் எல்லாவற்றையும், நம்மைப் போன்றே பிலிப்பியர்களும் அனுபவித்திருந்தனர். கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் ஆசீர்வாதங்களை உங்களுக்குத் தரப்பட வேண்டியவைதான் என்பது போன்று ஒருக்காலும் நினைக்காதிருங்கள்! அவைகள் பொதுவான/சாதராணமாக இடத்திற்கு உரியவைகளாக அனுமதிக்காதீர்கள்.

1ம் வசனத்தில் தரித்திருக்கும்படி நாம் சோதிக்கப்படுகையில், பவுலின் கருத்தை நாம் பெற்றுக் கொள்வது அவசியமாக உள்ளது. பிலிப்பியர்கள் இவ்வாறு ஆசீர்வதிக்கப்பட்டிருந்ததால், அப்போஸ்தலர் ஒரு வேண்டுகோளைக் கொண்டிருந்தார். 2ம் வசனத்தில் அவர், “... என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்” என்று கூறினார் (வசனம் 2ஆ). பிலிப்பி நகரில் இருந்த சகோதரர்கள் ஏற்கனவே அவரை சந்தோஷமுள்ளவர் ஆக்கியிருந்தனர் (1:3, 4; 4:1); இப்போது செயல் விளைவில் அவர், “அந்த சந்தோஷத்துடன் [சந்தோஷத்தை] கூட்டுங்கள்” என்று கூறினார். “நிறைவாக்குங்கள் என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க

வார்த்தை "நிரப்புவதற்கு"[8] என்று அர்த்தப்படுகிறது; KJV வேதாமத்தில் "fulfill" ("fill full") என்றுள்ளது. J. B. Lightfoot என்பவரின் மொழிபெயர்ப்பில் "எனது சந்தோஷத்தின் பாத்திரத்தை நிரம்பி வழியும்படி நிரப்புங்கள்" என்றுள்ளது.[9]

பவுலின் சந்தோஷத்தை நிரம்பிவழியச் செய்வது எதுவாக இருக்கும்? பிலிப்பியர்கள் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் மகிழ்வுடன் அனுபவித்தனர் என்று கேள்விப்படுவதே ஆகும்: "நீங்கள் ஏக சிந்தையும் [நேரடியான அர்த்தத்தில், "ஒன்றையே நினைத்து"] ஏக அன்புள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் [நேரடியான அர்த்தத்தில், "ஒரே ஆத்துமாவாக"] ஒன்றையே சிந்தித்து [நேரடியான அர்த்தத்தில், "ஒரே விஷயத்தையே சிந்தித்துக் கொண்டிருந்து"], என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்" (2:2). இவ்விடத்தில் உள்ள வார்த்தை அமைப்பானது 1:27ல் உள்ள வார்த்தை அமைப்பைப் போன்றுள்ளது: அவர்கள் *கவனித்தலில்* (சிந்தித்தலில், "ஒரே சிந்தையுள்ளவர்களாக இருந்து") மற்றும் *எண்ணப்போக்கில்* ("இசைந்த ஆத்துமாக்களாய்") ஒன்றாக இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் விரும்பினார். இருப்பினும், அவர் இரண்டு புதிய கூறுகளைக் கூடுதலாகக் கூறினார்: அவர்கள் *பிரியத்தில்* ("ஏக அன்புள்ளவர்களாயிருந்து") மற்றும் *குறிக்கோளில்* ("ஏக சிந்தையும்") ஒன்றாக இருக்க வேண்டும் என்றும் அவர் விரும்பினார். பிலிப்பியர்கள் ஒரே இருதயமும், ஒரே சிந்தையும் ஒரே வாழ்வும் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று பவுல் விரும்பினார். 1ம் வசனத்தின் நினைவூட்டுதல்கள் 2ம் வசனத்தின் வேண்டுகோள்களுடன் தொடர்புபடுத்தப்பட்ட முடியும் என்று எழுத்தாளர்கள் உற்று நோக்கியுள்ளனர்:

- "கிறிஸ்துவுக்குள் ஆறுதல்" இருப்பதால் (வசனம் 1), "ஏக சிந்தையுள்ளவர்களாக" இருங்கள் (வசனம் 2).
- "அன்பின் தேறுதல்" இருப்பதால் (வசனம் 1), "ஏக அன்பை" பராமரியுங்கள் (வசனம் 2).
- "ஆவியானவரின் ஐக்கியம்" இருப்பதால் (வசனம் 1), "இசைந்த ஆத்துமாக்களாக" இருங்கள் (வசனம் 2).
- "உருக்கமான பட்சமும் இரக்கங்களும்" இருப்பதால் (வசனம் 1), "ஒன்றையே சிந்தித்து" இருங்கள் (வசனம் 2).

ஒருமித்து இருத்தல் என்பது மதிப்புமிக்க பண்பாக உள்ளது - கிறிஸ்துவினிமித்தமாக அப்படி இருத்தல் என்பது முக்கியமானதாக உள்ளது! இயேசுவைத் தேவன் அனுப்பியிருந்தார் என்று உலகத்தார் விசுவாசிப்பதற்காக, இயேசுவைப் பின்பற்றுபவர்கள் "ஒன்றாயிருக்க" வேண்டும் என்று இயேசு ஜெபித்தார் (யோவான் 17:21, 23). பிரசங்கியின் புத்தகத்தை எழுதியவர், ஒன்றாயிருத்தலில் இருந்து தரவழைக்கப்பட வேண்டிய பலத்தைப் பற்றிப் பேசினார்: "ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்துநிற்கலாம்; முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது" (4:12). "சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுகிற" தனிநபர், தேவன் வெறுக்கிற விஷயங்களில் ஒருவராக இருக்கிறார் (நீதிமொழிகள் 6:19). ஒருமித்து இருத்தலின் ஆசீர்வாதம் மற்றும் பிரிவினையின் சாபம் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும் பிற வசனப்பகுதிகள், ஆதியாகமம் 14:8; ரோமர் 15:5; 16:17;

1 கொரிந்தியர் 1:10; கலாத்தியர் 5:19-21; எபேசியர் 4:1-6 ஆகியவையாகும்.

இந்த எடுத்துரைப்புகளுக்காகப் படித்ததில் நான், ஐக்கியத்திற்கு எதிராகப் பேசுவதற்கு, குறிப்பாக போதனை மற்றும் உபதேசம் ஆகிய பகுதிகளில் ஐக்கியத்திற்கு *எதிராகப்* பேசுவதற்கு பிலிப்பியர் 1:27 மற்றும் 2:2 ஆகிய வசனப்பகுதிகளை எத்தனை எழுத்தாளர்கள் பயன்படுத்தினர் என்பதை அறிந்து நான் திகைத்தேன். அவர்களில் பெரும்பான்மையானவர்கள், "ஐக்கியம் என்பது வேறுபாடற்று இருத்தல் என்பதல்ல" என்று உறுதிப்படுத்தினர். நாம் யாவரும் வேறுபாடுள்ளவர்களாக இருக்கிறோம், அதாவது எல்லாவற்றிலும் நாம் கருத்து ஒருமித்தவர்களாக இருக்கத் தேவையில்லை என்பதை நான் புரிந்துகொள்கிறேன், ஆனால் அப்படியிருந்தாலும், ஒரு அடிப்படை ஐக்கியத்தைத் தேவன் கேட்கிறார்.

"விசுவாச விஷயங்களில் ஐக்கியம்; அபிப்பிராய விஷயங்களில் சுயாதீனம், மற்றும் எல்லா விஷயங்களிலும் அறச்சிந்தனை [அதாவது அன்பு]" என்பது, கடந்த காலத்தில் அடிக்கடி கேட்கப்பட்ட சுலோகமாக இருந்தது. "விசுவாச விஷயங்கள்" என்பவை தேவனுடைய வசனத்தில் தெளிவாகப் போதிக்கப்பட்ட கொள்கைகளாக உள்ளன என்று புரிந்துகொள்ளப்பட்டது (காண்க ரோமர் 10:17). இவற்றில் நாம் ஐக்கியமாக இருக்க *வேண்டும்.* "அபிப்பிராய விஷயங்கள்" என்பவை வேதாகமத்தில் திட்டவட்டமான கூற்றுகள் காணப்படாத பாடக்கருத்துக்களைப் பற்றியவையாக உள்ளன. இவற்றில் நாம் கருத்து வேறுபடக்கூடும் - ஆனால் கருத்து ஒருமைப்பட இயலாத நிலையில் இல்லாத வகையில் நாம் இதைச் செய்ய வேண்டும் (எபேசியர் 4:1-3ல் *ஆவியானவரின்* ஐக்கியத்தின் மீதான போதனையைக் காணவும்). சில வேளைகளில் சகோதரர்கள், ஒரு குறிப்பிட்ட போதனையானது "விசுவாச விஷயமாக" உள்ளதா அல்லது "அபிப்பிராய விஷயமாக" உள்ளதா என்பது பற்றிக் கருத்து வேறுபடுகின்றனர், ஆனால் மேற்கூறப்பட்ட சுலோகத்தினால் வெளிப்படுத்தப்பட்ட அடிப்படைக் கொள்கைகளைக் கடைப்பிடித்தல் என்பது, சிந்தனை மற்றும் போதனையில் அடிப்படை ஐக்கியத்தை விளைவிக்கிறது. எல்லா விஷயங்களிலும் நாம் *அன்பினால்* தூண்டப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதும் உண்மையாகவே உள்ளது.

நாம் எல்லா விஷயங்களிலும் கருத்து ஒருமைப்பட்டு இருக்க வேண்டும் என்று அவசியமில்லை - ஆனால் விளக்கவுரையாளர்கள் இவ்வசனத்தின் கருத்து அழுத்தத்தில் நிலைத்திருந்து இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எல்லாரும் இல்லையென்றாலும் அவர்களில் சிலர் தங்கள் விளக்கத்தை முடித்திருந்தபோது, இவ்வசனப் பகுதியிலிருந்து "ஐக்கியம்" என்பது பிழிந்து வெளியே எடுக்கப்பட்டு இருந்தது. ஒவ்வொரு நபரும் "தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி" செய்தல் (நியாயாதிபதிகள் 21:25) ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக உள்ளது என்ற மனப்பதிவு விடப்பட்டது. நாம் "ஒரே சிந்தை" கொண்டிருக்கவும் "ஒரே அன்பை" பராமரிக்கவும், "ஆவியில் ஐக்கியம்" கொண்டிருக்கவும், மற்றும் "ஒன்றையே சிந்தித்து" இருக்கவும் கடுமையாக முயற்சி செய்யத் தேவன் நமக்கு உதவுவாராக!

சுயநலமற்ற தன்மையில் ஐக்கியமாயிருத்தல் (2:3, 4)

ஆளுமைத் தன்மைகள் மற்றும் விருப்பத் தேர்வு ஆகியவற்றில் நாம்

வேறுபட்டு இருப்பதால், நாம் எவ்வாறு ஐக்கியமாக இருக்க முடியும்? அனேகமாக, இயேசுவின் மீதான நமது பொதுவான விசுவாசமே நமது ஒருமைப்பாட்டில் முக்கியமான காரணியாக உள்ளது எனலாம். நாம் யாவரும் "அவருடன் இணைக்கப்பட்டு" இருப்பதால் (ரோமர் 6:5), நாம் ஒருவர் மற்றவருடனும் இணைக்கப்பட்டு இருக்கிறோம். இருப்பினும் சககிறிஸ்தவர்களைக் குறித்த நமது எண்ணப்போக்குகள் முக்கியமானவையாக உள்ளன. நாம் சுயத்தை மைய மாகக் கொண்டிருக்கும்போது மற்றும் அபிப்பிராயத்தின் விஷயங்களில் நமது சொந்த வழியைக் கொண்டிருக்கும்போது, ஐக்கியம் என்பது சாத்தியமற்றதாக உள்ளது.

3 மற்றும் 4ம் வசனங்களில் பவுல், சுயநலமின்மையின் தேவையை வலியுறுத்தினார். இந்த வசனங்களில் அவரது அறிவுறுத்துதல்கள் கீழ்ப்படியக் கடினமானவையாக உள்ளது - ஆனால் அவை மிகவும் அவசியமானவைகளாக உள்ளன! 3ம் வசனம், "ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாமல்," என்று தொடங்குகிறது. ஆங்கில வேதாகமத்தில் இது, "Do nothing from selfishness or empty conceit" என்றுள்ளது, இதில் "selfishness" என்பது, 1:17ல் "selfish ambition" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே கிரேக்க வேர்வார்த்தையில் இருந்து வந்துள்ளது. அவ்வார்த்தை, விரோதத்தை உண்டாக்கியாவது பின்பற்றாளர்களை ஆதாயப்படுத்த முயற்சி செய்யும் நடைமுறையை மறைமுகமாக உணர்த்துகிறது. துரதிர்ஷ்டவசமாக, சகோதரர்கள் "ஊழியத்தையல்ல ஆனால் தங்களையே மேன்மைப்படுத்திக் கொள்வதற்காக" ஊழியம் செய்ய முடிகிறது.[10] "சுயநலப்பேரார்வம்" என்ற கருத்துடன், "வீண்பெருமை" என்பது இணைந்துள்ளது. இதை NCV வேதாகமம் "பெருமை" என்று தரவழைக்கிறது. இந்தச் சொற்றொடர், "வெறுமையான மகிமை" என்று அர்த்தப்படும் கிரேக்கக் கூட்டு வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தமக்குத்தாமே பெருமையைத் தேடிக்கொள்ளுதல் என்பது ஒருவருடைய நோக்கமாக இருக்கும்போது, கடைசியில் அந்த "மகிமை" வெறுமையானதும் பயனற்றதுமாக இருக்கும்.

சுயமையம் மற்றும் பெருமை ஆகியவற்றிற்கு நிவாரணம் எது? 3ம் வசனம், "மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்" என்று தொடருகிறது. "மனத்தாழ்மை" என்பது தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட வார்த்தையாக உள்ளது. சிலர், இது ஒருவர் தம்மை மதிப்பற்றவராகக் கருதுதல் என்று அர்த்தப்படுவதாக யூகிக்கின்றனர், ஆனால் அது உண்மையல்ல. மோசே "மிகவும் தாழ்மையுள்ளவர்" என்று விவரிக்கப்பட்டிருக்கிறார் (எண்ணாகமம் 12:3), ஆனால் இந்த மாபெரும் நடத்துநர், தாம் மதிப்பற்றவராக இருந்ததாக நினைத்தார் என்பதை எந்த ஒன்றும் சுட்டிக் காட்டுவதில்லை. இயேசு தம்மை, "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் என்று விவரித்தார்" (மத்தேயு 11:29; காண்க-பிலிப்பியர் 2:8), ஆனால் அவர் தமக்கு அருளப்பட்டிருந்த மகிமையைப் பற்றியும் பேசினார் (யோவான் 17:22; காண்க யோவான் 2:11). எஜமானர் சுயத்தை மதிப்புக்குலையச் செய்வதில் தமது நேரத்தை வீணாக்கவில்லை.

கிரேக்கர்கள் தாழ்மைக்கு மதிப்பு எதையும் வைக்கவில்லை. இவ்வார்த்தையின் பெயர் உரிச்சொல் வடிவம், "ஒரு அடிமையின் மனநிலையை விவரிக்க ... பயன்படுத்தப்பட்டது. இது சிறுமையான, தகுதியற்ற, இழிநிலையில்

உள்ள ... கணக்கில் கொள்ளப்படாத என்ற கருத்துக்களைக் கொண்டுவந்தது."[11] புறதெய்வத்தை வணங்குபவர் "தாழ்மையானவர்" என்று பெயரிடப்பட்டு இருத்தலில் திகில் அடைந்திருப்பார். இருப்பினும் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள், தாழ்மையை ஒரு ஒழுக்க நெறியாக - மிக உயர்ந்த ஒழுக்க நெறிகளில் ஒன்றாக - ஏற்படுத்தினர். பேதுரு பின்வருமாறு எழுதினார்,

> ... நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.
>
> ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் (1 பேதுரு 5:5, 6).

தாழ்மையாயிருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? நமது பேச்சு மற்றும் நடக்கை ஆகியவற்றில் தன்னடக்கமாக இருத்தலின் அவசியம் பற்றி நாம் பேசக்கூடும். எந்த மனிதரும் "தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல்" இருக்க வேண்டும் என்ற பவுலின் புத்திமதியின் மீது நாம் கலந்துரையாடக்கூடும் (ரோமர் 12:3). இருப்பினும், பிலிப்பியர் 2:3, 4ல் "மனத்தாழ்மை" என்ற சொற்றொடரைத் தொடர்ந்து வருகிற வார்த்தைகளின் மூலம், இதற்கு மிகச்சிறப்பான விளக்கம் கருத்தாகத் தெரிவிக்கப்படலாம்: "... ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக."

தாழ்மை என்பது சுயத்தைத் தாழ்த்துதல் என்பதைக் காட்டிலும் அதிகமாக, சுயத்தை மறத்தல் என்பதாக உள்ளது. இது, ஒருவர் தம்மைப் பற்றி மோசமாக நினைத்தலாக இருப்பதில்லை; இது ஒருவர் தம்மைப் பற்றிச் சிறிதளவே சிந்திக்கும் அளவுக்கு பிறரைப் பற்றி மிகவும் அக்கறையாக இருத்தலாக உள்ளது. நமது வேதவசனப் பகுதியைத் தொடர்ந்து வரும் வசனங்களில் பவுல், நமக்கு மிக மேன்மையான உதாரணத்தைக் கொடுத்தார்: இயேசு. செயல்விளைவில் கிறிஸ்து தம்மையே "மறந்து போகும் அளவுக்கு *நம்முடைய* தேவைகளைக் குறித்து அக்கறையாயிருந்தார்," இந்த பூமிக்கு வந்து, நமக்காக மரித்தார் (வசனங்கள் 5-8). பவுல் தமது வாசகர்கள் அதே "சிந்தையை" கொண்டிருக்கும்படி அறைகூவல் விடுத்தார் (வசனம் 5). R. C. பெல் என்பவர், "தாழ்மையான சிந்தை உடையவர்கள் மாத்திரமே ஒரே சிந்தையுடையவர்களாக இருக்க முடியும்" என்று கூறினார்.[12]

3ம் வசனத்தின் பிற்பகுதியுடன் சிலர் போராடுகின்றனர். NASB வேதாகமத்தில் "ஒருவர் பிறரைத் தங்களிலும் அதிக முக்கியமானவர் என்று மதியுங்கள்" என்றுள்ளது. "தங்களிலும் அதிக முக்கியமானவர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்றொடரானது, *huper* ("மேலே") என்ற முன்னிடைச் சொல்லை *echo* ("பற்றிக்கொள்ள") என்ற சொல்லுடன் இணைத்து வரும் கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது. நேரடியான பொருளில் இது "மேலே பற்றிக்கொள்ளுதல்" என்று அர்த்தப்படுகிறது. உருவக நடையில் இது, "மேன்மையானவராக இருத்தல், மிகச்சிறப்பானவராக இருத்தல்" என்று அர்த்தப்படுகிறது.[13] தரம்வாய்ந்த பெரும்பான்மையான மொழிபெயர்ப்புகளில்

3ம் வசனத்தில் "தங்களிலும் மேன்மையானவர்கள்" என்றே உள்ளது (KJV, NKJV, ASV, NIV, RSV). இதை நாம், வலுவூட்டப்பட்ட இரண்டாவது பிரதான கட்டளை" என்று நினைக்கலாம். இரண்டாவது பிரதான கட்டளையானது, "உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்று கூறுகிறது (மத்தேயு 22:39; என்னால் வலியுறுத்தப்படுகிறது). "வலுவூட்டப்பட்ட இரண்டாவது பிரதான கட்டளையானது," "உன்னைக் காட்டிலும் மேன்மையாக உன் பிறனிடத்தில் அன்புகூருவாயாக" என்று கூறுகிறது.

ஒருவர் தம்மைக் காட்டிலும் மற்றவர்களை மேன்மையானவர்களாக மதிக்க வேண்டும் என்பதற்கான புத்திமதியானது சிலரைக் கவலையில் ஆழ்த்துகிறது. அவர்கள் சககிறிஸ்தவர் ஒருவரைச் சுட்டிக்காண்பித்து, "இவரை என்னிலும் *மேன்மையானவராக* அல்லது என்னைக் காட்டிலும் அதிக முக்கியமானவராக நான் நினைக்க வேண்டியது ஏன்? அவர் என்னைக் காட்டிலும் மேன்மையான கல்வித் தகுதி உடையவரல்ல ... அல்லது என்னைக் காட்டிலும் அதிக தாலந்துகளை உடையவரல்ல ... அல்லது என்னை காட்டிலும் அதிக திறனுடையவர் அல்ல ... அல்லது என்னை காட்டிலும் அதிக பலமுடையவர் அல்ல ... அல்லது என்னைக்காட்டிலும் உயர்வான தோற்றம் கொண்டவரல்ல ... அல்லது என்னைக் காட்டிலும் அதிக தேவபக்தி உடையவர் அல்லவே!" என்று கேட்கின்றனர். இவ்வாறாக விவாதிப்பவர்கள் இவ்வசனப் பகுதியின் இருதயம் போன்ற மையப்பகுதியைத் தவற விட்டுள்ளனர். இது, இன்னொரு தனிநபர் உங்களைக் காட்டிலும் மேன்மையானவராக *இருக்கிறார்* என்று கூறுவதில்லை; இது இன்னொரு தனிநபரை உங்களைக் காட்டிலும் மேன்மையானவராக *எண்ண வேண்டும்* என்று தான் கூறுகிறது. சந்தர்ப்பப் பொருளில் இது, அவரது *தேவைகளை* உங்கள் தேவைகளைக் காட்டிலும் அதிக முக்கியமானவையாகக் கருதுதலைக் குறிப்பிடுகிறது. பவுல், " 'மற்றவர்களை உங்களைக் காட்டிலும் முன்வரிசையில் இடுங்கள்' என்று மிகச்சிறப்பான வகையில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கக்கூடிய முதல் நூற்றாண்டு சொல்விளக்கம் ஒன்றை" பயன்படுத்தினார் என்று ஏர்ல் பால்மர் என்பவர் கருத்துத் தெரிவித்தார்.[14] நீங்கள் எப்போதாவது, மக்கள் இடித்துக் கொண்டும் தள்ளிக் கொண்டும், வரிசையின் முன்பகுதிக்கு நெருக்கமாகச் செல்வதற்கு முயற்சி செய்யும் ஒரு வரிசையில் நின்றிருந்தால் நீங்கள் இந்த ஒப்புவமையைப் புரிந்துகொள்வீர்கள். நாம் மற்றவர்களைக் கண்ணோக்கும் வகையினை மேம்படுத்துவதற்கு, "அந்த நபர் போன்று நான் பிறந்து வளர்க்கப்பட்டிருந்தால், அவரது திறமைகள் மற்றும் வாய்ப்புகள் மாத்திரமே எனக்கு அளிக்கப்பட்டு இருந்தால், நான் எவ்வாறு இருப்பேன்?" அல்லது, "அந்தத் தனிநபர் எனது வீட்டிற்குள் வளர்க்கப்பட்டு எனது திறமைகள் மற்றும் வாய்ப்புகள் அவருக்கு அளிக்கப்பட்டு இருந்தால், அவர் எவ்வாறு இருப்பார்?" என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ளலாம்.

3ம் வசனத்தின் பிற்பகுதியை நான் வாசிக்கையில், எனது பெற்றோர்களைப் பற்றி நான் நினைக்கிறேன். எனது சகோதரர் காய் என்பவரும் நானும், [அமெரிக்க] நாட்டின் வறுமைக் காலத்தில் பிறந்தோம். எனது பெற்றோர்கள் கொஞ்சப் பணமே கொண்டிருந்தனர், ஆனால் அவர்களுக்குக் கனிகளும் காய்களும் இல்லாதபோதும் கூட, காய்க்கும் எனக்கும், நாங்கள் ஆரோக்கியமாக இருப்பதற்குத் தேவையான கனிகளும் காய்களும்

கிடைப்பதை அவர்கள் நிச்சயப்படுத்திக் கொண்டனர். அவர்கள் தங்களைக் காட்டிலும் எங்களை "அதிக முக்கியமானவர்களாக" மதித்தனர் - அது நாங்கள் அவர்களைவிட பெரியவர்களாக, பலமானவர்களாக அல்லது மதிநுட்பம் வாய்ந்தவர்களாக இருந்தோம் என்பதால் அல்ல - ஆனால் அவர்கள் எங்களை நேசித்ததாலேயே அவ்வாறு செய்தனர்.[15]

நாம், கிறிஸ்துவுக்குள்ளான நமது சகோதர சகோதரிகளிடம் இதே வகையான எண்ணப்போக்கைக் கொண்டிருக்க வேண்டும் என்று பிலிப்பியர் 2:3, 4 வசனப்பகுதி நம்மை வற்புறுத்துகிறது. அன்பானது மற்றவர்களை "மேலானவர்களாக" மற்றும் "அதிக முக்கியமானவர்களாக" நாம் கண்ணோக்கக் காரணமாகும். பிள்ளைகளுக்கான பாடல் ஒன்று, "ச-ந்-தோ-ஷ-ம், ச-ந்-தோ-ஷ-ம், J-O-Y, J-O-Y, என்றுள்ளது. இது நிச்சயமாகவே இயேசு (Jesus) முதலிலும், நீங்கள் (you) கடைசியிலும், மற்றவர்கள் (others) இடையிலும் இருப்பதையே அர்த்தப்படுத்த வேண்டும்" என்று கூறுகிறது. சற்றுக் காலத்திற்கு முன்னர், "என்னுடையது - மூன்றாம்" தரம் என்று அழைக்கப்பட்ட சிறுபிள்ளைகளுக்கான வேதபாட வகுப்பைப் பற்றி வாசித்தேன்.[16] அந்தப் பெயரைப் பற்றி நினைத்தவர் யாரோ அவர் பவுல் உற்சாகமூட்டிக் கொண்டிருந்த ஆவியைப் பற்றிய கணநேரத் தோற்றத்தைப் பற்றிக் கொண்டிருந்தார்.

நமது வேதபாடப் பகுதியானது, பின்வரும் வார்த்தைகளுடன் முடிகிறது: "அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" (வசனம் 4). வேதாகமம், சுயத்தைப் பற்றிய சட்டப்பூர்வமான அக்கறை பற்றிப் போதிக்கிறது (காண்க மத்தேயு 22:39; எபேசியர் 5:28, 29), ஆனால் நாம் சுயத்தை மையமாகக் கொண்டவர்களாகி விடாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நாம் மற்றவர்களின் தேவைகள் குறித்துக் கூருணர்வு கொண்டவர்களாக இருக்க வேண்டும். 3ம் மற்றும் 4ம் வசனங்களில் பவுலின் அறிவுறுத்துதல்கள் பின்பற்றக் கடினமானவையாக உள்ளன. நமது சிந்தனைகள் சுயத்தை மையங்கொள்ளாதிருத்தல் என்பது *கடினமானதாக* உள்ளது!

முடிவுரை

நாம் இரண்டு சத்தியங்களை வெளிச்சப்படுத்திக் காட்ட முயற்சி செய்திருக்கிறோம்: (1) ஐக்கியத்திற்கான அவசியம் மற்றும் (2) ஐக்கியத்தை ஏற்படுத்துவதின் ஒரு திறவுகோல் காரணி - சுயநலம்இல்லாமை. பின்தொடரும் பாடங்களில் நாம், சுயநலமின்மையின் உதாரணங்களைப் படிப்போம்: இயேசு மற்றும் பவுலின் உடன் ஊழியக்காரர்களில் இருவரான தீமோத்தேயு மற்றும் எப்பாப்பிராதீத்து. இந்தப் படிப்பை நாம் முடிக்கும் இவ்வேளையில், இதைப் பற்றிய தனிப்பட்ட நடைமுறைப் பயன்பாட்டை நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்வோமாக. உங்களைப் பொறுத்த மட்டில் ஐக்கியம் என்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது? நீங்கள் சேர்ந்து ஆராதிக்கும் சபைக் குழுமத்தில் சமாதானமும் இசைவிணக்கமும் மேலோங்கியிருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு நீங்கள் எதை விட்டுக் கொடுக்க மனவிருப்பமாக இருப்பீர்கள்? வேதாகமரீதியான சத்தியங்களை சமரசம் செய்து கொள்ளுதல் பற்றி நான் பேசவில்லை. நான் தற்பெருமையையும் சுயநலத்தையும் விட்டு விடுதல் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன். அப்படிப்பட்டவை பிரிவினையைக் கொண்டுவரும்போது, உங்கள் சுயவழியை வலியுறுத்தாமல் இருப்பது பற்றிப்

பேசிக் கொண்டிருக்கிறேன். பின்வருவதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமை நீங்கிடின் அனைவர்க்கும் தாழ்வு!"/"ஐக்கியமாயிருந்தால் நாம் எழுந்து நிற்கிறோம்; பிரிந்து நின்றால் நாம் விழுகிறோம்"!

குறிப்புகள்

[1]ஈசாப் என்பவர் கி. மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாக கருதப்படும் கிரேக்க நாடோடிக் கதைகளின் நாயகர் ஆவார். அவர் மிருகங்களின் கதைகள் பற்றிக் கூறியவராக நினைவுகூரப்படுகிறார். இவைகள் அவரது மரணத்திற்குப் பல ஆண்டுகளுக்குப் பின்பு சேகரிக்கப்பட்டு, இவற்றுடன் "ஒழுக்கநெறிகள்" கூட்டப்பட்டன. இவைகள் இன்னமும் குழந்தைகளால் மகிழ்வுடன் அனுபவிக்கப்படுகின்றன. [2]Adapted from Paul Lee Tan, *Encyclopedia of 7,700 Illustrations: Signs of the Times* (Rockville, Md.: Assurance Publishers, 1979), 1172. தமிழில் இவ்விடத்தில் தரப்பட்டுள்ள பாரதியாரின் கவிதை வரி ஏற்புடையதாக உள்ளது. [3]John Bartlett, *The Shorter Bartlett's Familiar Quotations,* ed. Christopher Morley (New York: Permabooks, 1953), 5. [4]அமெரிக்க நாட்டில் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, புகழ்பெற்ற பாடல் ஒன்று, "United we stand, divided we fall" என்ற வார்த்தைகளைச் சித்தரித்தது (Tony Hiller and Peter Simons, "United We Stand," © Belwin Mills, 1970). (தமிழில் கூடப் பழைய திரைப்படப் பாடல் ஒன்றில், "ஒண்ணாயிருக்கக் கத்துக்கணும்; இந்த உண்மையைச் சொன்னா ஒத்துக்கணும்" என்ற வரிகள் உள்ளன.) [5]ஜான் டிக்கின்ஸன் (1732-1808) என்பவர், அமெரிக்கப் புரட்சியின்போது, அமெரிக்கக் கண்டத்தின் காங்கிரஸில் ஒரு உறுப்பினராகவும் விடுதலை உணர்வை தூண்டும் கைப்பிரதிகளை எழுதுபவராகவும் இருந்தார். இதைத் தொடர்ந்து வரும் மேற்கோள் - இது *விடுதலைப் பாடலில்* காணப்படுகிறது, இது 1768ல் வெளியிடப்பட்டது - ஒரு நாடு ஒன்றிணைந்து இருக்க வேண்டியதன் அவசியத்தைக் குடிமக்களுக்கு விவரிக்கிறது. உங்கள் நாட்டைச் சேர்ந்த தலைவர்கள் குடிமக்களுக்கு ஒன்றாயிருப்பதன் அவசியம் பற்றி வற்புறுத்தி வேண்டிக் கொண்டிருப்பார்கள் என்றால், அவ்விடத்தில் ஜான் டிக்கின்ஸனின் வார்த்தைகளுக்குப் பதிலாக அவற்றை எடுத்தாளுங்கள். [6]இது (இலத்தீனில்) நிக்கொலோ மாக்கியவல்லி என்பவரால் *யுத்தக்கலை* (1521) என்ற புத்தகத்தில் மேற்கோள் காண்பிக்கப்பட்டது. மாக்கியவல்லி (1469-1527) என்பவர் இத்தாலியில் புகழ்பெற்ற அரசியல் எழுத்தாளராகவும் இராணுவக் கோட்பாட்டாளராகவும் இருந்தார். [7]Richard B. Griffin, Jr., notes on Philippians, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 1805. [8]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 329. [9]J. B. Lightfoot, quoted in John A. Knight, *Philippians, Colossians, Philemon,* Beacon Bible Expositions (Kansas City, Mo.: Beacon Hill Press, 1985), 61. [10]William Barclay, *The Letters to the Philippians, Colossians, and Thessalonians,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 31.

[11]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary,* vol. 43, *Philippians,* ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 69. [12]R. C. Bell, *Studies in Philippians* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1971), 19. [13]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III with James A. Swanson (Minneapolis: Bethany House Publishers, 1984), 115. [14]Earl F. Palmer, *Integrity in a World of Pretense: Insights from the Book of Philippians* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992),

90. [15]தியாகமான அன்பிற்கான உதாரணங்கள் ஏராளமாக்கப்படலாம். உங்கள் உரையைக் கேட்பவர்கள் மிகச்சிறப்பாக அடையாளம் காணக்கூடியவற்றைப் பயன்படுத்துங்கள்.
[16]Manford George Gutzke, *Plain Talk on Philippians* (Grand Rapids, Mich.: Lamplighter Books, Zondervan Publishing House, 1973), 79.

7

"இந்த எண்ணப்போக்கைக் கொண்டிருங்கள்"

(பிலிப்பியர் 2:5-11)

நமது வேதபாடப் பகுதியில், புதிய ஏற்பாட்டின் மாபெரும் அறைகூவல்களில் ஒன்று - மற்றும் மாபெரும் உபதேசப் பகுதிகளில் ஒன்று - அடங்கியுள்ளது. இயேசுவில் இருந்த சிந்தையைக் கொண்டிருக்க வேண்டும் என்பது அறைகூவலாக உள்ளது: "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" (பிலிப்பியர் 2:5). "சிந்தையே ... இருக்கக் கடவது" என்பது, "நினைக்க" அல்லது "ஒரு கருத்தை வடிவமைத்தல் அல்லது பற்றிக்கொள்ளுதல்" என்று அர்த்தப்படும் phroneite என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[1] KJV வேதாகமத்தில் "Let this mind be in you, which was also in Christ Jesus" [இதுவே தமிழ் வேதாகமத்தில், "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது] என்றுள்ளது. வெய்மவுத் என்பவர் இந்தச் சொற்றொடரை, "கிறிஸ்து இயேசுவில் இருந்த மனநிலையே உங்களிலும் இருக்கக் கடவது" என்று தரவழைத்தார்.

பிலிப்பியர்கள் ஐக்கியமாக இருக்க வேண்டும் என்று பவுல் வற்புறுத்தி வேண்டிக் கேட்டுக் கொண்டிருந்தார் (2:1, 2). தன்னைப் பற்றியல்ல, ஆனால் மற்றவர்களைப் பற்றி நினைத்தலே ஐக்கியத்திற்கான ஒரு திறவுகோல் என்று அவர் வலியுறுத்தியிருந்தார் (வசனங்கள் 3, 4).

> சுயநலமான கண், தற்பெருமையுள்ள சிந்தை, பாராட்டுகளுக்காகப் பசியாயிருக்கும் காது, ஏதொன்றையும் பேசாத வாய், மற்றவர்களுக்குக் கொஞ்சம் இடமே கொண்டுள்ள இருதயம் மற்றும் சுயத்திற்கு மாத்திரமே சேவை செய்த கை ஆகியவற்றைக் கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஏற்பில்லாதவைகளாக நினைத்தார்.[2]

அவர் தமது வாசகர்கள், உண்மையான சுயநலமின்மை எதைக் கொண்டுள்ளது என்று புரிந்து உணர உதவுவதற்காக, திட்டவட்டமான உதாரணத்தைச் சுட்டிக்காண்பித்தார்: இயேசு (வசனங்கள் 5-8). செயல்விளைவில் பவுல், "நீங்கள் கர்த்தருடைய இருதயத்தின் மனநிலையைத் கொண்டிருந்தால், நீங்கள் ஐக்கியமா*யிருப்பீர்கள்*; நீங்கள் சமாதானத்தையும் இசைவிணக்கத்தையும் மகிழ்வுடன் அனு*பவிப்பீர்கள்* என்று கூறினார். பிலிப்பியர்களுக்குத் தரப்பட்ட அறைகூவல் நமக்கும் தரப்பட்டதாக உள்ளது: கிறிஸ்து கொண்டிருந்த அதே எண்ணப்போக்கே நமக்கும் அவசியமாக உள்ளது. நம்மில் சிலர், இயேசுவின் சிந்தையைக் கொண்டிராததால், இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதில் (காண்க 1 பேதுரு 2:21) கடினமான வேளைகளைக் கொண்டிருக்கிறோம்.

5ம் வசனத்தின் அறைகூவல், 6முதல் 11வரை உள்ள வசனங்களில் மாபெரும் செய்தியினால் பின்தொடரப்படுகிறது. இவ்வசனங்கள் இயேசுவைப் பற்றி ஏற்படுத்தப் பட்டவற்றிலேயே மிகவும் தனிச் சிறப்பான கூற்றுகளில் ஒன்றைக் கொண்டுள்ளது. ஜெரால்டு ஹாவ்தார்ன் என்பவர், இவ்வசனப் பகுதியைப் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்திலேயே "மிகவும் முக்கியமான பகுதி" என்று அழைத்தார் மற்றும் இதை அவர், "புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவைப் பற்றிய விபரத்தின் இணையற்ற வைரம்" என்று அறிவித்தார்.[3]

பிலிப்பியர் 2:6-11 வசனப் பகுதியானது தொடக்ககால ஞானப்பாடலாக உள்ளது என்று பலர் நம்புகின்றனர். இது, "கிறிஸ்துவைப் பற்றிய கீதம்" என்று அழைக்கப்பட்டுள்ளது. இவ்வசனப் பகுதி இயல்பாகவே இருபகுதிகளாகப் பிரிகிறது: கிறிஸ்துவின் தாழ்மை (வசனம் 6-8) மற்றும் கிறிஸ்துவின் மேன்மை (வசனம் 9-11). முதல் பகுதி, கிறிஸ்துவின் எண்ணப்போக்கைக் கொண்டிருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்று விவரிக்கிறது; இரண்டாவது பகுதி, அப்படிப்பட்ட எண்ணப்போக்கைக் கொண்டிருத்தல் ஏன் முக்கியமானதாக உள்ளது என்று கருத்துத் தெரிவிக்கிறது.

எச்சரிக்கப்பட்டவர்களாக இருங்கள்: இது பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் மிகவும் முக்கியமான வசனப்பகுதியாக மாத்திரமல்ல, ஆனால் மிகவும் வாதத்திற்கு இடமான வசனப் பகுதியாகவும் உள்ளது. ஒரு எழுத்தாளர், "மாணவரைப் பெருவருத்தத்தினால் நிரப்பி புத்திக்கூர்மையின் செயலற்ற தன்மையினால் அவரை வாதிக்கப் போதுமான அளவுக்கு இவ்வசனத்தைப் பற்றிப் பல கருத்துக்கள் விளக்கம் தருபவர்கள் மத்தியில் மேலோங்கியுள்ளன" என்று குறிப்பிட்டார்.[4] விளக்கவுரையாளர்கள், "ரூபம்," "கொள்ளையாடின பொருள்," "வெறுமையாக்கி" மற்றும் பலவாறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தைகளின் அர்த்தம் பற்றிப் போராடுகின்றனர். வார்த்தைகளின் *அர்த்தம் பற்றி* விவாதம் இருந்தபோதிலும், இவ்வசனப் பகுதியின் *செய்திபற்றிச்* சிறிதளவே வாதம் உள்ளது: இயேசு பரலோகத்தை விட்டு இறங்கி வந்து நமக்காக மரிக்கும் அளவுக்கு நம்மீது அன்புகூர்ந்தார்!

இவ்வசனங்களினூடே நாம் கடந்து செல்லுகையில், இயன்ற வரையில் புரிந்துகொள்ளப்படக் கூடியவனாகவும் வாதம் இல்லாதவனாகவும் இருக்க நான் முயற்சி செய்வேன். இருந்தபோதிலும் நான், கிரேக்க வசனப் பகுதியின் மீது வழக்கத்திற்கு மாறாக அதிக நேரம் செலவிடுவேன் - மற்றும் நீங்களும் தீவிரமான சிந்தனை செய்ய வேண்டியிருக்கலாம். நீங்கள் உங்கள் சிந்தையை நீட்சியடையச் செய்வதற்கு எதிரானவர்களாக இருந்தால், நீங்கள் அடுத்த பாடத்திற்குக் கடந்து செல்லலாம் - ஆனால் நீங்கள் அவ்வாறு செய்ய மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன். நீங்கள் அவ்வாறு செய்தால், இயேசுவைப் பற்றி வேதாகமத்தில் உள்ள மிகவும் முக்கியமான போதனைகளில் சிலவற்றை நீங்கள் இழந்து போவீர்கள்.

கிறிஸ்துவின் சிந்தை வெளிப்படுத்தப்பட்டது (2:6-8)

சுயநலமற்றிருத்தல் & சுயத்தை வெறுமையாக்குதல்

"கிறிஸ்துவைப் பற்றிய கீதம்" இயேசு பரலோகத்தில் முன்னிருந்த நிலை

பற்றிய விபரத்துடன் தொடங்குகிறது: "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும்" (வசனம் 6அ). அதாவது, இயேசு பூமிக்கு வருவதற்கு முன்னர், அவர் பரலோகத்தில் தேவனுடன் இருந்தார். அவரது முன்னிருந்த நிலை பற்றி எடுத்துரைக்கும் மற்ற வசனப்பகுதிகளில், யோவான் 1:1, 2; 17:5; 2 கொரிந்தியர் 8:9; கொலோசெயர் 1:15-17; எபிரெயர் 1:2, 3அ ஆகியவை உள்ளடங்கி இருக்கின்றன. "ரூபம்" என்பதற்கு நமது வசனப் பகுதியில் பின்வரும் இரண்டு கிரேக்க வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன: *morphe* (வசனங்கள் 6, 7) மற்றும் *schema* ("சாயல்"; வசனங்கள் 7, 8). இந்த வார்த்தைகளைக் கிரேக்கர்கள், ஒன்றிற்குப் பதில் இன்னொன்றாக அடிக்கடி பயன்படுத்தினர், ஆனால் இவைகள் நமது வேதவசனப் பகுதியில் நேர்மாறானவைகள் ஆக்கப்பட்டுள்ளன. சந்தர்ப்பப் பொருளில், *morphe* என்பது ஒரு நபர் அல்லது பொருளின் மாறாதிருக்கும் அத்தியாவசியமான இயல்பைக் குறிக்கையில், *schema* என்பது மாறக்கூடிய மற்றும் மாறுகிற வெளிப்புற தோற்றத்தைத் குறிக்கிறது.[5] ரிச்சர்டு கேஃபின் என்பவர், "தேவனுடைய ரூபம்" என்பது "தேவனைத் தேவானக்குகிற அந்தப் பண்புகளின் மொத்தம்" என்று எழுதினார்.[6] Phillips, Goodspeed, and Moffatt ஆகியோர் மற்றும் NEB உட்பட பல மொழிபெயர்ப்பாளர்கள், "தேவனுடைய இயல்பு" அல்லது "தெய்வீக இயல்பு" அல்லது அதைப்போன்ற சிலவற்றைக் கொண்டுள்ளனர். NCV வேதாகமம், "ஒவ்வொரு விஷயத்திலும் கிறிஸ்து தாமே தேவனைப் போன்றிருந்தார்" என்று கூறுகிறது. மேலும் பவுல், இயேசு "தேவனுக்குச் சமமாக இருப்பதை" உடைமையாகக் கொண்டிருந்தார் என்றும் உறுதிப்படுத்தினார் (வசனம் 6ஆ). 6ம் வசனத்தின் வார்த்தை அமைப்பானது, இயேசு மெய்யாகவே மற்றும் உண்மையாகவே தேவனாக இருந்தார் என்பதை உறுதிப்படுத்தும், அப்போஸ்தலருடைய வழியாக இருந்தது!

"தேவனுடைய ரூபமாக" இருத்தல், பரலோகத்தில் தேவனுக்குச் சமமாயிருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்திற்று என்று ஆழ்ந்து சிந்தித்துப்பாருங்கள். கிறிஸ்துவின் மீது பொழிந்தருளப்பட்டிருந்த கனத்தை, அவர் பெற்றிருந்த வந்தனையை மற்றும் அவர் மகிழ்வுடன் அனுபவித்த ஆச்சரியமான விஷயங்களைக் கற்பனை செய்ய முயலுங்கள். யோவான் 17ல் இயேசு தமது பிதாவினிடத்தில் ஜெபித்த ஜெபத்தில் அவர், "உலகம் உண்டாகிறதற்குமுன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமை" பற்றிக் குறிப்பிட்டார் (வசனம் 5). கர்த்தர் எதை விட்டுக்கொடுக்க வேண்டியிருந்தது என்பதை நாம் புரிந்து கொள்ளும் வரையில், அவரது சுயநலமின்மையை நம்மால் ஒருக்காலும் முற்றிலுமாக உணர்ந்தறிய இயலாது.

கிறிஸ்து "தேவனுடைய ரூபமாக" இருத்தலின் ஆசிர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவித்து இருந்தாலும், அவர் "தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்" இருந்தார். மூல மொழியில், "கொள்ளையாடின பொருள்" என்பது *harpagmon* என்ற கிரேக்கப் பெயர்ச் சொல்லாக உள்ளது. இது "பிடித்துக் கொள்ளுதல் ... ; வலிமையினால் எடுத்துக் கொள்ளுதல், பிடுங்கிச் செல்லுதல்" என்று அர்த்தப்படுகிற *harpazo* என்ற வினைச்சொல்லில் இருந்து தரவழைக்கப்பட்டது.[7] *Harpagmon* என்பது "பேராவலுடன் பிடித்துக் கொள்ளும் குணத்தைக் கொண்டு தக்க வைத்துக் கொள்ளப்பட்டுள்ள ஒரு பொருள்" என்பதைக் குறிக்கக் கூடும்.[8] இயேசு, பரலோக மகிமை என்ற தமது நிலையை "இறுக்கமாகப் பற்றிக்கொண்டு"

இருக்கவில்லை என்பதே இவ்வசனப்பகுதியின் அர்த்தம் என்று நான் நம்புகிறேன். J. B. லைட்ஃபூட் என்பவரின் கூற்றுப்படி, "இது, கிரேக்க மொழியின் நிபந்தனைகளினுடைய மிகவும் உயிர்த்துடிப்பான கருத்துணர்வைக் கொண்டிருந்த கிரேக்க முற்பிதாக்களின் பொதுவான மற்றும் ஏறக்குறைய உலகளாவியதான விளக்கமாகும்."[9]

பசியாயிருக்கும் ஒரு நாய்க்கு ஒரு எலும்பைக் கொடுத்தல் என்ற விவரிப்பைப் பிரசங்கியார்கள் பயன்படுத்தி இருக்கின்றனர். அந்த நாய் எலும்பைத் தனது எல்லாப் பலத்துடனும் பற்றிக் கொள்ளும். நீங்கள் அதனிடத்தில் இருந்து அந்த எலும்பை எடுக்க [பிடுங்க] முயற்சி செய்தால், நீங்கள் அதைப்பிடித்து இழுத்தாலும், அந்த நாய் அதைத் தளரவிடாது. ஏன்? அது எலும்பை இழந்து விடுவோமோ என்று அஞ்சுகிறது! இயேசு அதைப் போன்று இருக்கவில்லை. கிறிஸ்து, தமது பரலோக அந்தஸ்தை "பற்றிக்கொண்டு" இருப்பதற்குப் பதிலாக, இந்த பூமிக்கு வந்து நமக்காக மரிக்கக் கூடும்படி அவர் அதை "தளர்வாக விட" மனவிருப்பமாயிருந்தார். சமீபத்திய நாட்களில், இந்தக் கருத்தின் மாறுநிலை ஒன்று பிரபலமாகியுள்ளது: இயேசு, "தேவனுக்குச் சமமாயிருத்தல் என்பது *தமது சொந்த அனுகூலத்திற்காகப்* பற்றிக் கொண்டிருக்க வேண்டிய விஷயம் என்று நினைக்கவில்லை." கர்த்தருடைய சுயநலமின்மையைப் பற்றி நாம் வாசிக்கையில், நமது சொந்த வாழ்வில் இதற்கு நாம் ஒரு நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துதல் அவசியமாக உள்ளது. "தேவனுக்கும் மனிதருக்கும் இன்னமும் சிறப்பாக ஊழியம் செய்வதற்காக, தளர்வாக விட வேண்டிய ஏதாவது ஒரு விஷயத்தை நான் பற்றிக் கொண்டு, இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு இருக்கிறேனா?" என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்.

"ஆனால்" தமது பரலோக பதவியைப் பற்றிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, இயேசு, "தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்" (வசனம் 7). "தம்மைத்தாமே வெறுமையாக்கி" என்ற சொற்றொடர் கல்வியாளர்களை வசப்படுத்தியுள்ளது. "அவர் *எதிலே* தம்மை வெறுமையாக்கினார்?" என்ற கேள்வியின் மீது சொற்போர் சீறி எழுந்துள்ளது. "வெறுமையாக்குதல்" என்பதற்கான (*kenos* என்ற) கிரேக்க வார்த்தையானது, இயேசு பூமிக்கு வந்தபோது, அவர்தமது அடிப்படைத் தெய்வீகத்தை (தமது தெய்வீகப் பண்புகளில் எல்லாவற்றையும் அல்லது பெரும்பான்மையை) "தம்மையே வெறுமையாக்கி" என்று போதிக்கும், திருஅவதாரத்தின் "kenotic" கோட்பாடு என்று அழைக்கப்படும் கோட்பாட்டை எழுப்பித் தந்துள்ளது. இந்த நிலைப்பாடு, "தம்மையே வெறுமையாக்கி" என்ற வார்த்தைகளில் இல்லாத சிலவற்றை அதில் வாசிக்கிறது மற்றும் இது, பூமியின் மீது இயேசு இருக்கையில் அவர் அப்போதும் தேவனாகவே இருந்தார் என்று வேறு இடங்களில் போதிக்கும் தெளிவான வசனப் பகுதிகளுக்கு நேர்மாறானதாக உள்ளது.

தேவன் "மாம்சமாகி, ... நமக்குள்ளே வாசம்பண்ணினார்" என்று யோவான் அறிவித்தார் (யோவான் 1:1, 14). யோசேப்பினிடம் தூதன், இயேசு, "இம்மானுவேல்" என்று அழைக்கப்படுவார் என்று கூறினார், இதை மொழிபெயர்க்கும்போது, "தேவன் நம்மோடிருக்கிறார்" என்று அர்த்தப்படுகிறது (மத்தேயு 1:23). தோமா, கிறிஸ்துவை "என் ஆண்டவரே! என் தேவனே!" என்று அழைத்தார் (யோவான் 20:28). திருஅவதாரப் போதனையானது, இயேசு முழுமையாக மனிதனாக இருந்தார் ஆனால் முழுமையாகத் தேவனாகவும்

இருந்தார் என்று அறிவிக்கிறது. இயேசு இந்த பூமிக்கு வந்தபோது, அவர் சிலவற்றை (மனிதத்துவத்தை) எடுத்துக் கொண்ட அளவிற்கு, அவர் சிலவற்றை (தேவத்துவத்தை) விட்டுவிட வில்லை. பவுல் ரீஸ் என்பவர் பின்வரும் விவரிப்பைப் பயன்படுத்தினார்:

> பல ஆண்டுகளுக்கு முன்பு, விண்ட்சரின் பிரபு, வேல்ஸ்ஸின் இளவரசராக இருந்தபோது, அவர் ஒருநாள், பக்கிங்ஹாம் அரண்மனையை விட்டு வெளியேறி, நிலக்கரிச் சுரங்க நாடு இருந்த மேற்குப் பகுதிக்குப் பயணமாகி, சுரங்கத் தொழிலாளியின் தொப்பி ஒன்றை அணிந்தவராக, பிரிட்டிஷ் தொழிற்சாலையின் கடினமான மற்றும் அபாயமான பிரிவில் கடினமாக உழைக்கும் மனிதர்களின் நிலையைத் தாமே நேரில் காண்பதற்காக, இருள்சூழ்ந்த சுரங்கப் பாதைகளுக்குள் இறங்கிச் சென்றார். ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற வகையில் அவர் இலண்டனில் இருக்கும் அரண்மனையில் வாழ்ந்தபோது எப்படி ஒரு இளவரசராக இருந்தாரோ, அப்படியே அவர் நிலக்கரிச் சுரங்கத்தினுள் இருந்தபோதும், ஒரு இளவரசராகவே இருந்தார். ஆனால் அவரது ராஜரீகத்திற்கு அத்தியாவசியமான பண்பு மாறாதிருக்கையில், அனுபவத்திற்கு இணையான ஒன்று இருந்ததில்லை. அரண்மனையின் மாட்சிமை மற்றும் பிறர் தொற்றக்கூடாத தன்மை ஆகியவற்றின் மத்தியில், தம்மிடத்தில் ஒருக்காலும் வந்திராத அனுபவங்களுக்குள் பிரவேசிக்கச் சம்மதித்திருந்தார்.[10]

"இயேசு எதிலே தம்மை வெறுமையாக்கினார்?" என்ற கேள்விக்கு நாம் திரும்புவோமாக. யூகங்கள் ஏராளமாக உள்ளன. KJV வேதாகமத்தின் மொழிபெயர்ப்பாளர்கள், அவர் தமது பரலோக "புகழ்ச்சியில்" தம்மை வெறுமையாக்கினார் என்று நினைத்தனர் என்பது தெளிவு. NASB வேதாகமத்தின் பக்கக் குறிப்பில், "தமது சிலாக்கியங்களைப் புறம்பே ஒதுக்கிவைத்தார்" என்றுள்ளது. J. B. லைட்ஃபூட் என்பவர், "மகிமைகளை, தெய்வீகத்தின் சிறப்புரிமைகளை" அவர் தம்மைவிட்டு உரிந்துபோட்டார் என்று எழுதினார்.[11] இயேசு தம்மிடத்தில் இருந்து அகற்றிப் போட்ட பண்புகளை இவ்வசனப் பகுதி குறிப்பிடுவதில்லை என்பதால், அதை நாம் யூகத்தினால் சிறிதளவே கண்டறிகிறோம். 7ம் வசனத்தின் பகுதியை அவ்வசனத்தின் முற்பகுதிக்கு விளக்கமாக எடுத்துக் கொள்ளுதல் சிறந்ததாயிருக்கலாம்: அவர் "அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்" *என்ற வகையில்* "தம்மைத்தாமே வெறுமையாக்கி"னார். CJB வேதாகமம், "அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கி, *அதில்* அடிமையின் ரூபமெடுத்தார்" என்று கூறுகிறது (என்னால் வலியுறுத்தப்படுகிறது).

ஊழியம் செய்தல் & பரிவிரக்கப்படுதல்

7ம் வசனத்தில் உள்ள "அடிமை" என்பது, அடிமை என்பதற்கான *doulos* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அந்த வசனத்தில் "ரூபம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்றொடரானது 6ம் வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள அதே சொற்றொடராக உள்ளது. பரலோகத்தில் இயேசு, தேவனுடைய எல்லாப் பண்புகளையும் கொண்டிருந்தார்; பூமியில் அவர் ஒரு அடிமையின் எல்லாப் பண்புகளையும் எடுத்துக் கொண்டார்.

இயேசு தமது நாட்களில் இருந்த அடிமை வகுப்பில் பிறக்கவில்லை, ஆனால் அவர் தம்மையே அடிமையாக்கி, அதிலே அவர் முற்றிலும் தேவனைச் சார்ந்திருந்து அவருக்குக் கீழ்ப்படிந்தவரானார். இதன் விளைவாக, கிறிஸ்து மனிதகுலத்தின் தேவைகளுக்கும் - சிறப்பாக, இரட்சிப்பின் தேவைக்கும் அடிமையானார். இயேசுவின் அடிமைத்துவத்துவம் பற்றிக் பல வசனப்பகுதிகள் பேசுகின்றன (காண்க மத்தேயு 20:28; மாற்கு 10:45; லூக்கா 22:27); இயேசு தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவிய வேளையானது, அவர் ஒரு அடிமை/ஊழியக்காரர் என்பதற்கு மிகச்சிறப்பான விவரிப்பாக உள்ளது (யோவான் 13:5). நேர்மாறு தெளிவாக உள்ளது: இயேசு, ஒரு அடிமையாக (கற்பனை செய்ய மிக தாழ்ந்த நிலையில்) இருப்பதற்காக, தேவனுக்குச் சமமாயிருப்பதை (கற்பனை செய்ய மிக உயர்ந்த தகுதிநிலையை) விட்டுச் சென்றிருந்தார். 2 கொரிந்தியர் 8:9ல் உள்ள பவுலின் வார்த்தைகள் நமக்கு நினைவூட்டப்படுகின்றன: "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே."

கிறிஸ்துவின் கீழ்நோக்கிய பயணமானது, அவர் "மனுஷர் சாயலான"தைக் கொண்டு தொடங்கிற்று (பிலிப்பியர் 2:7ஆ). முதல் நூற்றாண்டின் முடிவிற்கு முன்னர், இயேசு மனிதர்களைப் "போல" இருந்தார், ஆனால் உண்மையில் அவர் மனிதராக இருக்கவில்லை என்று போதிப்பதற்குச் சிலர், "சாயலாகுதல்" என்ற வார்த்தையைப் பயன்படுத்த முயற்சி செய்தனர். அந்த வகையான தவறான சிந்தனையை, யோவான், இயேசு *"மாம்சமானார்"* (யோவான் 1:14; என்னால் வலியுறுத்தப்படுகிறது) என்று கூறியபோதும், "*மாம்சத்தில் வந்த* இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது" என்று எழுதியபோதும் (1 யோவான் 4:2; என்னால் வலியுறுத்தப்படுகிறது) எதிர்த்து நின்றார். இயேசுவின் மனிதத்துவம் என்பது மாயத்தோற்றமல்ல, ஆனால் உண்மை நிலையாக இருந்தது என்று பல வசனப் பகுதிகள் வலியுறுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், அவர் "*எவ்விதத்திலும்* தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது" என்று கூறினார் (எபிரெயர் 2:17; என்னால் வலியுறுத்தப்படுகிறது). எபிரெயர் 2:17ல் "ஒப்பாகவேண்டியிருந்தது" என்பது பிலிப்பியர் 2:7ல் "சாயலானார்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே கிரேக்க வேர்வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

2:7ல் பவுல், "சாயலானார்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியது ஏன் என்று நம்மால் உறுதியாகக் கூற இயலாது. ஒருவகையில், இயேசு முற்றிலும் மனிதராக இருந்ததால், அவர் மற்ற மனிதர்களைப் "போல்" இருந்தார் என்பதே இங்கு வலியுறுத்தம் என்று சிலர் நினைக்கின்றனர், ஆனால் இன்னொரு வகையில், அவர் முற்றிலும் தேவனாகவும் இருந்தபடியால், அவர் அவர்களைப் "போல்" இருக்கவில்லை. இங்கு ஒரு எளிய விளக்கம் தரப்படுகிறது: 7ம் வசனத்தில் ஆங்கில வேதாகமத்தில் "being made" (Gk.: *ginomai*) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை [இது தமிழில் "ஆனார்" என்றுள்ளது] "பிறந்திருக்க" என்று அர்த்தப்பட முடியும்.[12] RSV வேதாகமத்தில், "மனிதரின் சாயலில் பிறந்தவராயிருந்தார்" என்றுள்ளது. "மனுஷசாயாலானார்" என்ற சொற்றொடர், அனேகமாக இந்த உலகில் இயேசு பிரவேசித்ததைக் குறிக்கலாம்: அவர் மனிதப் பிறவிகளான நம் எல்லோரைப் போலவும் பிறந்தார்.

7ம் வசனத்தில், மனிதரிடத்தில் இருந்து இயேசுவின் வேறுபாடு அல்ல, ஆனால் அவர்களுடன் அவருக்கு உள்ள ஒற்றுமைத் தன்மையே வலியுறுத்தப்படுகிறது. கிறிஸ்து ஒரு தூதரின் "சாயலில்" வந்திருக்க முடியும், அப்படி வந்திருந்தால் மனிதகுலம் அவரைப் பார்த்து வியந்திருக்கும். அவர் தேவனுடைய சாயலில் வந்திருக்க முடியும், அப்படி வந்திருந்தால் மனிதகுலம் அவரை ஆராதித்திருக்கும். இருப்பினும் அவர் தமது ஊழியத்தை நிறைவேற்ற வேண்டி இருந்ததென்றால், அவர் மனித "சாயலாக" வரவேண்டியவராக இருந்தார் (காண்க ரோமர் 8:3). இயேசு நம்மைப் போலாக்கப்பட்டதால், அவர் நமக்காகப் பரிதபித்து நமக்கு உதவ முடியும் (காண்க எபிரெயர் 2:17, 18; 4:15, 16). மிக முக்கியமாக, அவர் நமக்காக மரிக்க முடிந்தது (1 கொரிந்தியர் 15:3).

நாம் மரிக்க வேண்டிய இடத்தில், நமக்காக இயேசு மரிப்பதற்கு முன்னர், அவர் மாம்சமாக வேண்டியிருந்தது ஏன்? ஒரு எழுத்தாளர், சேற்றில் விழுந்த ஒருவரைத் தூக்கி எடுக்கச் சென்ற ஒரு மனிதர், அவ்வாறு அவரை இழுத்து விடுவதற்கு முன்னர், அவரே சேற்றில் இறங்கிய அல்லது தண்ணீருக்குள் மூழ்கிக் கொண்டிருக்கும் ஒரு மனிதரைக் காப்பாற்றக் கூடும்படிக்கு தண்ணீருக்குள் இறங்கிய ஒரு மனிதரின் விவரிப்பைக் கருத்தாகத் தெரிவித்தார்[13]-ஆனால் எந்த விவரிப்பும் போதுமானதாக இருப்பதில்லை. இயேசு "மனித சாயலில்" வர வேண்டியிருந்தது ஏன் அவசியமாக இருந்தது என்று நாம் ஒருக்காலும் முற்றிலுமாக அறிய இயலாது; ஆனால் வேதாகமம் அதையே போதிக்கிறது, நாம் விசுவாசத்தில் அதை ஏற்றுக்கொள்கிறோம்.

மனிதகுலத்துடன் கிறிஸ்து அடையாளப்படுத்தப்படுதல் 8ம் வசனத்தில் தொடர்கிறது. அவ்வசனம், "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு" என்று தொடங்குகிறது. "ரூபம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (schema என்ற) கிரேக்க வார்த்தையானது, நமது வேதவசனப்பகுதியில் "சாயல்" என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள இரண்டாவது வார்த்தையாக உள்ளது. முன்பே குறிப்பிட்டபடி, இவ்வார்த்தை "மாறக்கூடிய மற்றும் மாறுகிற வெளித்தோற்றத்தை" குறிக்கிறது. இயேசுவின் அத்தியாவசிய இயல்பு (morphe) ஒருக்காலும் மாறவில்லை, ஆனால் அவர் பச்சிளம் குழந்தைப் பிராயத்தில் இருந்து பிள்ளைப் பருவத்திற்கும் பின்பு முழுமனிதநிலைக்கும் வளருகையில், அவரது தோற்றம் (schema) மாறியது. கிறிஸ்து, மனிதர்கள் மத்தியில் ஒரு மனிதராக நடக்கையில் - மனிதராக இருத்தலின் வேதனை மற்றும் துக்கத்தை அவர் தழுவிக்கொள்கையில் அவரது வாழ்வு மற்றும் ஊழியம் ஆகியவற்றைப் பற்றி நாம் நினைவூட்டப்படுகிறோம் (காண்க ஏசாயா 53:3).

இயேசு இந்த பூமிக்கு வருவதற்கு எதை விட்டுக் கொடுத்தார் என்பதைப் பற்றி மீண்டும் ஒருமுறை சிந்திக்க, நான் சற்றே தாமதிக்கிறேன். நான் எனது மனதில், இரு இணைகருத்துக்களைத் தரவழைக்க முயற்சி செய்கிறேன்: உலகப் புகழ்பெற்ற ஒரு ஓட்டப்பந்தய வீரர் தமது கால்களை இழந்து போகுதல் என்பது அவருக்கு எதை அர்த்தப்படுத்தும்? வரைபடக் கலைஞர் ஒருவர் தமது கண்களைப் பயன்படுத்துதலை இழந்து போகுதல் என்பது அவருக்கு எதை அர்த்தப்படுத்தும்? நம்மில் எவரேனும் நமது கைகள் மற்றும் கால்களைப் பயன்படுத்த முடியாமல் போகும் முடக்கு வாதக்காரரானால் அது நமக்கு எதை அர்த்தப்படுத்தும்? நான் இந்தக் கேள்விகளைக் கேட்கும்போதேகூட, எந்த ஒப்பீடும் போதுமானதல்ல என்பதை வருத்தம் நிறைந்த வகையில் உணர்ந்து

அறிகிறேன். ஒருவர், பரலோகத்தின் மகிமைகளை மகிழ்வுடன் அனுபவித்திருந்து, பின்பு திடீரென்று அவர் பலவீனத்திலும் மனிதகுலத்தின் மோசம்போக்கும் மாம்சத்திலும் பொதியப்பட்டு இருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்தும் என்று என்னால் புரிந்துகொள்ளத் தொடங்க இயலவில்லை. தேவன் எனக்காக அப்படிப்பட்ட ஒரு தியாகத்தைச் செய்ய மனவிருப்பம் கொண்டிருந்தார் என்பதற்காக நான் அவருக்கு நன்றி செலுத்த மாத்திரமே முடிகிறது!

என் மீட்பர் பூமிக்கு ஏன் வந்தார்,
தாழ்வான வாழ்வை ஏன் ஏற்றார்?
கீழான பிறப்பை ஏன் தேர்ந்தார்?
ஏனெனில் என்னை அவர் நேசித்தார்!

வருத்தம் வேதனை சாபமென்னும்
பாத்திரத்தில் அவர் ஏன் அருந்தினார்?
சிலுவையில் அவர் ஏன் ஏற்றப்பட்டார்?
ஏனெனில் என்னை அவர் நேசித்தார்![14]

கீழ்ப்படிதல் & தியாகம்

"மனித ரூபமாய்க் காணப்பட்டது" கிறிஸ்துவின் மலையிறக்கப் பயணத்தின் முடிவாக இருக்கவில்லை. அவர் இன்னும் கல்வாரியின் சாலையில் பயணம் செய்ய வேண்டியிருந்தது. "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலிப்பியர் 2:8). [மேற்குறிப்பிட்ட விளக்கங்களின்படி, இவ்வசனத்தில் "மனுஷரூபமாய்" என்பதற்குப் பதில் "மனுஷசாயலாய்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருந்தால் அதுவே சரியானதாக இருந்திருக்கும்].

இயேசு மரிக்க *வேண்டியிருக்கவில்லை.* மற்றவர்கள் - ஏனோக்கு (ஆதியாகமம் 5:24; எபிரெயர் 11:5) மற்றும் எலியா (2 இராஜாக்கள் 2:11) - மரிக்காமலேயே இந்தப் பூமியை விட்டுப் புறப்பட்டுச் சென்றிருந்தனர் - மற்றும் இயேசுவும் அவ்வாறு செய்திருக்க முடிந்திருக்கும் (காண்க யோவான் 10:18). இருப்பினும், நீங்கள் நானும் நித்திய வாழ்வின் நம்பிக்கையைக் கொண்டிருக்க வேண்டுமானால் அவர் மரிக்க வேண்டி இருந்தது (1 கொரிந்தியர் 15:3). ஆகையால் அவர் "மரணபரியந்தம்" தம்மையே தாழ்த்த மனவிருப்பம் கொண்டிருந்தார் - அதுவும் ஏதோ ஒரு மரணம் அல்ல, ஆனால் மனிதரால் கண்டுபிடிக்கக் கூடியவற்றிலேயே மிகவும் இழிவான மரணமாக இருந்தது. சிலுவையில் அறையப்பட்டு மரணம் அடையச் செய்தல் என்பது பெனிக்கேயர்கள் மற்றும் பெர்சியர்களிடத்தில் இருந்து கடனாகப் பெறப்பட்டு, ரோமர்களால் பூரணப்படுத்தப் பட்டிருந்தது. அது யூதர்களுக்கு அவமானத்தின் கருவியாக இருந்தது (உபாகமம் 21:23; கலாத்தியர் 3:13) மற்றும் புறஜாதியாருக்கு கனவீனம் நிறைந்த மதியீனமாக இருந்தது (1 கொரிந்தியர் 1:23). "ரோமானியர்களின் கண்ணியமிக்க சமூகத்தில், 'சிலுவை' என்ற வார்த்தை அருவருக்கத் தக்கதாக, உரையாடலில் உச்சரிக்கப்படக் கூடாததாக இருந்தது,"[15] சிலுவை என்பது "மனிதகுலத்தின் மதிப்பை இழிவுபடுத்துவதில் நிறைவானதாக இருந்தது"[16] "அது தேவனுடைய அரியணையில் இருந்து தொங்கும் ஏணியின் கடைசிப்படியாகும்."[17]

இப்படிப்பட்ட சிறுமைப்படுத்தும் மற்றும் வேதனை நிறைந்த மரணத்தை அனுபவிக்க இயேசுவை மனவிருப்பம் கொள்ளச் செய்தது எது? அவர் நம்மீது அன்புகூர்ந்தபடியால் இதைச் செய்தார் என்று ஏற்கனவே நாம் கருத்துத் தெரிவித்திருக்கிறோம் (கலாத்தியர் 2:20). பிலிப்பியர் 2:8ஆ வசனப்பகுதி இன்னொரு காரணத்தைக் கூடுதலாகத் தருகிறது: தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிதல். அவர் "மரணபரியந்தம் ... *கீழ்ப்படிந்தவராகி*" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). இயேசு தமது சொந்த ஊழியத்தின்போது, "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன்" என்று கூறினார் (யோவான் 6:38). கெத்செமெனே தோட்டத்தில் அவர், தமக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த பாடுகளுடன் போராடினார் ஆனால் தமது ஜெபத்தை அவர் பின்வரும் வார்த்தைகளுடன் முடித்தார்: "ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (லூக்கா 22:42). கடைசியில் அவர், "மரணம் வரையிலும் - சிலுவை மீதான அவரது மரணம் வரையிலும் - கீழ்ப்படிதலின் பாதையில் நடந்தார்" (பிலிப்பியர் 2:8). இயேசு, தேவனுக்குக் கீழ்ப்படிந்ததால், நமக்காக நிறைவான பலியைச் செலுத்தினார்.

இயேசு சுயநலமற்றவராக, தம்மையே வெறுமையாக்கியவராக, ஊழியம் செய்பவராக, பரிதபிப்பவராக, கீழ்ப்படிபவராக மற்றும் தியாகம் செய்பவராக இருந்தார் என்பதைப் பவுல் ஏன் வலியுறுத்தினார்? அது கிறிஸ்து நம்மீது கொண்டுள்ள அன்பையும் அக்கறையையும் நாம் மதிப்பதற்கு உதவ வேண்டும் என்பதற்காக மாத்திரம்தானா? இந்தச் செய்தியானது நம்மீது இந்தச் செயல் விளைவைக் கொண்டிருக்க வேண்டும் - ஆனால் இறையியலைப் போதித்தல் என்பதல்ல, வாழ்வை மாற்றுதல் என்பதே பவுலின் நோக்கமாக இருந்தது. இசைவிணக்கம், சமாதானம் மற்றும் ஒருமைப்பாட்டைக் கொண்டிருப்பதற்குப் பிலிப்பியர்கள் இயேசுவைப் போல் இருக்க வேண்டும் என்று அவர்கள் அறிய வேண்டுமென அவர் விரும்பினார். அவர்கள், "கிறிஸ்துவினால் ஏற்கனவே மிதித்து நடக்கப்பட்ட பாதையில் மிதித்து நடப்பதற்காக" அவர்களை அவர் அழைத்தார்.[18] நாமும் கூட இயேசுவின் எண்ணப்போக்கைத் தழுவிக்கொள்ள வேண்டும் என்பதை அறிய வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் விரும்புகிறார். கர்த்தருடைய சீஷர்களுக்கு அவர் விடுத்த அறைகூவலானது, உலகளாவிய அறைகூவலாக உள்ளது:

> ... உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார் (மாற்கு 10:43-45).

மேலும் இயேசு, "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னை தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்று கூறினார் (மத்தேயு 16:24). துரதிர்ஷ்டவசமாக, நம்மில் பலர், சிலுவை இல்லாமல் கிரீடத்தை விரும்புகிறோம் - அல்லது ஒரு

எழுத்தாளர் கூறியபடி நாம் இரத்தம் சிந்துதல் இல்லாமல் ஆசீர்வாதங்களை விரும்புகிறோம்.[19] நமது சிந்தைனைகளை வெளிப்புறமாய்த் திருப்பக் கற்றுக் கொள்ளுதல் எவ்வளவு கடினமானதாக உள்ளது!

நான் அறிந்த வரையில், மிகவும் அறைகூவல் விடுக்கும் பாடல்களின் ஒன்று "சுயம் ஒன்றுமல்ல எல்லாமும் நீரே" என்று தலைப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பாடல் பின்வருமாறு தொடங்குகிறது:

> "சுயம் ஒன்றுமல்ல எல்லாமும் நீரே" என்று
> இயேசுவினிடத்தில் நான் பெருமையாய்க் கூறும்போது
> கசப்பான வேதனையும் துக்கமும்,
> கலந்துள்ள காலமாய் அது இருக்கும்.

இதன் இரண்டாம் பத்தி "சற்றே சுயமும் சற்றே நீரும்" என்ற வார்த்தைகளைக் கொண்டுள்ள வேளையில், மூன்றாவது பத்தி "சுயம் குறைவாகவும் நீர் அதிகமாகவும்" என்று வளருகிறது. கடைசியில் இந்தப் பாடலின் நிறைவு வாக்கியம் பின்வருமாறு கூறுகிறது:

> மிக உயர்ந்த வானங்களிலும் உயர்ந்தது,
> மிக ஆழ்ந்த கடலிலும் ஆழமானது,
> கர்த்தாவே, கடைசியில் அன்பே வென்றது,
> "சுயம் ஒன்றுமல்ல எல்லாமும் நீரே."[20]

இந்தப் பாட்டைப் பாடுவது நம் இருதயங்களை சோதித்துப் பார்க்க நம்மை உற்சாகப்படுத்த வேண்டும். தன்னயமில்லாதிருத்தலின் பாதையில் நாம் எங்கு இருக்கிறோம்? கிறிஸ்துவின் எண்ணப்போக்கை எனதாக்கிக் கொள்ள, எனக்கு தேவனுடைய உதவி தேவையாயிருக்கிறது. ஒருவேளை உங்களுக்கும் அது தேவையாயிருக்கும்.

கிறிஸ்துவின் சிந்தை பலனளிக்கப்பட்டது (2:9-11)

உயர்த்தப்படுதல்

நாம், கிறிஸ்துவின் சிந்தை வெளிப்படுத்தப்படுதலில் இருந்து கிறிஸ்துவின் சிந்தை பலனளிக்கப்படுதலுக்குத் திரும்புகிறோம். 9ம் வசனம், "ஆதலால் [இயேசு தம்மையே தாழ்த்த மனவிருப்பமாக இருந்ததால்] தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி" என்று கூறுகிறது. இயேசு தம்மைத் தாமே உயர்த்திக் கொள்ளவில்லை; அடிமை ஒருவர் மற்றவரால் மட்டுமே உயர்த்தப்பட முடியும். "மேலாக உயர்த்தி" என்பது (*huperusoo* என்பதில் இருந்து வந்த *huperupsosen* என்ற) கிரேக்கக் கூட்டு வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது "மீது" அல்லது "மேலாக" (*huper*) என்ற முன்னிடைச் சொல்லுடன் "உயர்த்துதல்" என்பதற்கான (*hupsoo* என்ற) வார்த்தையை இணைத்துப் பெறப்பட்ட வார்த்தையாக உள்ளது. *Hyper* என்பதற்கு இணையான இலத்தீன் வார்த்தை "super" என்பது ஆகும். தேவன் இயேசுவை "மேலாக உயர்த்தினார்"![21] அவர் பூமிக்கு வருவதற்குப் பரலோகத்தை விட்டுப் புறப்படும்முன் மகிழ்வுடன் அனுபவித்திருந்த அவரது உன்னதமான

நிலைக்குத் திரும்பவும் கொண்டு செல்லப்பட்டார். அவரது தாழ்மை என்பது படிப்படியான நிலைகளில் வந்தது - ஆனால் அவர் ஒரே மாபெரும் செயலில் உயர்த்தப்பட்டார்! இயேசு உயர்த்தப்படுதலில், அவரது உயிர்த்தெழுதல், அவர் பரத்துக்கேறியது மற்றும் அவர் மகிமைப்படுத்தப்படுதல் ஆகியவை உள்ளடங்கி இருக்கின்றன - ஆனால் இவ்வசனத்தில் அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் மகிமைப்படுத்தப்படுதல் மீதே வலியுறுத்தம் உள்ளது. “இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார்” (மாற்கு 16:19ஆ).

பரலோகத்தில் தேவன், “எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்” (வசனம் 11ஆ). “மேலான” என்பது 9ம் வசனத்தில், “உயர்வான” என்பதற்கான (*huper* என்ற) முன்னிடைச் சொல்லில் இருந்து [“உயர்த்தி” என்று] மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அவர் மீது தந்தருளப்பட்ட நாமம் என்ன என்பது பற்றி நாம் உறுதியாக எதுவும் கூற இயலாது. இது தற்சமயம் தேவன் மாத்திரமே அறிந்துள்ள ஒரு நாமமாக உள்ளது என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இது சாத்தியமானதாக உள்ளது, ஆனால் பவுல் தமது வாசகர்களின் சிந்தைகளில் கிறிஸ்துவை உயர்த்த விருப்ப நோக்கங்கொண்டிருந்தார் என்பது தெளிவாக இருப்பதால், அப்படிப்பட்ட முடிவானது அப்போஸ்தலருடைய நோக்கத்திற்கு நடைமுறைச் சாத்தியமற்றதாகக் காணப்படுகிறது. அடுத்த வசனம், பவுல் “இயேசுவின் நாமம்” என்பதை அர்த்தப்படுத்தினார் என்று நம்மை வழிநடத்தலாம் (வசனம் 10). பல எழுத்தாளர்கள், “நாமம்” என்ற வார்த்தை இவ்விடத்தில் “பதவிப்பெயர்” என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று நினைக்கின்றனர் மற்றும் “கர்த்தர்” என்பதே அந்தப் பட்டம் என்ற கருத்தையும் அவர்களை விரும்பித் தேர்ந்து கொள்கின்றனர் (வசனம் 11).[22] மற்றவர்கள், 11ம் வசனத்தில் உள்ள “இயேசு கிறிஸ்து கர்த்தர்” என்ற முழுப்பட்டத்தை ஆதரிக்கின்றனர். கிரேக்க மொழி வேதாகமத்தில், “இயேசு கிறிஸ்து” மற்றும் “கர்த்தர்” ஆகியவற்றிற்கு இடையில் “இருக்கும்” என்ற வினைச் சொல் இல்லை; மூல மொழியில் [தமிழ் வேதாகமத்தில் உள்ளது போன்றே] “இயேசு கிறிஸ்து கர்த்தர்” என்று மாத்திரமே உள்ளது. “நாமம்” என்பதை அடையாளம் கண்டறிதல் நமக்கு அவசியமற்றது; அது “எல்லா நாமத்திற்கும் மேலானது” என்பதை மட்டும் அறிதல் நமக்கு அவசியமாக உள்ளது (வசனம் 11). பூமியில் இயேசு சிறுமைப்படுத்தப்பட்டார்; பரலோகத்தில் அவர் உயர்த்தப்பட்டார். பூமியின் மீது அவர் வேலைக்காரர்களிலேயே தாழ்ந்தவராக இருந்தார்; பரலோகத்தில், அவர் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைக் கொண்டுள்ளார்!

இயேசுவைத் தேவன் உயர்த்தியிருப்பதால், அவர் எல்லா படைப்புகளாலும் மகிழ்வுடன் பாராட்டப்பட வேண்டும்: “இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும்” (வசனம் 10, 11அ). இயேசுவின் நாமத்திற்கு முழங்கால் முடங்குதல் என்பது அவரை ஆராதித்தலாக உள்ளது (காண்க எபேசியர் 3:14). இயேசுவைக் கர்த்தர் என்று அறிக்கையிடுதல் என்பது, அவர் எல்லாவற்றையும் ஆள்கிறவர் என்று வெளிப்படையாகவும் நேர்மையாகவும் ஒப்புக்கொள்ளுதலாக உள்ளது. “பூமியின் கீழானோர்” என்ற சொல்விளக்கமானது, அனேகமாக, “மரித்தோர்” என்று அர்த்தப்படலாம்

(காண்க ரோமர் 14:9). "வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோர்" என்ற முப்பரிமாணப் பட்டியல், இயேசுவின் கர்த்தத்துவம் "வானவெளிக்கும் அண்டத்திற்கும்"[23] பரந்திருப்பதால், எங்குமுள்ள ஒவ்வொருவரும் அவரை அறிக்கையிட வேண்டும் என்று கூறுவதற்கான தனிச்சிறந்த வழியாக உள்ளது. இன்றைய நாட்களில் பலர் அதைச் செய்ய மறுக்கின்றனர், ஆனால் "நிறைவாக எல்லாரும் ... மனவிருப்பத்துடனோ அல்லது விருப்பம் இன்றியோ, அவரைக் கர்த்தர் என்று ஒப்புக்கொள்வார்கள்."[24]

இவையாவும் "தேவனுக்கு மகிமையாக" இருக்கும் என்று இவ்வசனப் பகுதி கூறுகிறது (வசனம் 11அ). "தேவனுக்கு மகிமை என்பதே எல்லா விஷயங்களின் நிறைவு நோக்கமாக உள்ளது."[25] கிறிஸ்து மகிமைப்படும்போது, தேவனும் மகிமைப்படுகிறார் என்பதால் இது இவ்வாறு இருக்கும். மற்றும், பெறுதல் அல்ல ஆனால் கொடுத்தல் என்பதே தேவனுடைய உண்மையான இயல்பாக உள்ளது என்று காண்பித்த இயேசுவின் தெய்வீக உதாரணத்தினால் தேவன் மகிமைப்படுகிறார்.

ஊக்குவித்தல்

9முதல் 11ம் வசனங்கள் வரையிலான பகுதியில், பிலிப்பியர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் அல்லது பாடங்கள் என்ன? இயேசு கர்த்தராக இருக்கிறார் என்ற உண்மையானது, அவரது உதாரணத்தை அவர்கள் பின்பற்றுவதற்கு, வல்லமைநிறைந்த காரணமாக இருந்திருக்க வேண்டும். இவ்வசனங்களில் இன்னொரு ஊக்குவிப்பும் மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது என்று நான் நம்புகிறேன்: "இயேசு தம்மையே தாழ்த்திய பின்பு உயர்த்தப்பட்டார் என்பதால், அவர் செய்தது போல நீங்கள் உங்களைத் தாழ்த்தி மற்றவர்களுக்கு முதலிடம் கொடுத்தீர்கள் என்றால், முடிவில் நீங்களும் உயர்த்தப்படுவீர்கள்!" ஃபிரெட் கிரெடாக் என்பவர் பின்வரும் சுருக்கமான தொகுப்புரையைக் கொடுத்தார்: "இப்போது கடைசி, பிற்பாடு முதல்!"[26] சிலர் இப்படிப்பட்ட நோக்கத்தின் "உறுதியற்றதன்மை பற்றி" குறைகூறி, இவ்விதமான முடிவை மறுக்கின்றனர் [அதாவது, ஒருவர் தாம் உயர்த்தப்படுவதற்காகவே தம்மைத் தாழ்த்த முடியுமே என்று இவர்கள் நினைக்கின்றனர்] இருப்பினும், தாழ்த்தப்படுதலைத் தொடர்ந்து உயர்த்தப்படுதல் வரும் என்ற குறிப்பான வாக்குத்தத்தத்துடன் (காண்க மத்தேயு 23:12; லூக்கா 14:11; 18:14; 1 பேதுரு 5:6) வெகுமதியின் கருத்து வேதவசனங்களில் அடிக்கடி காணப்படுகிறது (காண்க மத்தேயு 25:21).

வாழ்வினூடே நாம் கடந்து செல்லுகையில், பிரச்சனைகளை நாம் எதிர்கொள்ளுகையில், மற்றும் முடிவுகளை நாம் ஏற்படுத்துகையில், நாம் எப்போதுமே "நி காரணியை" ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் என்று கர்த்தர் நம்மிடத்தில் விரும்புகிறார். "நி காரணி" என்றால் என்ன? அது *நித்தியத்துவ* காரணியாக உள்ளது. இந்த வாழ்வு குறுகியதாகவும் நிச்சயமற்றதாகவும் உள்ளது (யோபு 14:1; யாக்கோபு 4:14). தெரிவுகளுடன் போராடுவதில் நாம், "*நித்தியத்தில்* இதன் விளைவுகள் என்னவாக இருக்கும்?" என்று நம்மையே கேட்டுக் கொள்ள வேண்டும்.

"கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தை"யை நாம் கொண்டிருக்க நீங்களும் நானும் நம்மால் முடிந்த அளவுக்கு மிகச் சிறப்பாகச் செயல்பட வேண்டியது

ஏன்? நாம் நமது கர்த்தருக்குக் கீழ்ப்படிவதற்காக, கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நம்மால் இயன்றபடி எல்லாம் இருப்பதற்காக, மற்றும் கிறிஸ்துவின் சரீரத்தில் சமாதானத்தையும் இசைவிணக்கத்தையும் மேம்படுத்துவதற்காக நாம் அவ்வாறு செய்ய வேண்டும். அதே வேளையில், நாம் நம்மைத் தாழ்த்தினால், ஒரு நாளிலே நாமும் உயர்த்தப்படுவோம் என்பதை உணர்ந்தறிவது எவ்வளவு ஆச்சரியமாக உள்ளது!

முடிவுரை

பிலிப்பியர் 2:5-11ம் வசனப் பகுதி நமது வாழ்வில் - அதை நாம் அனுமதித்தால் - வல்லமை நிறைந்த செயல்தாக்கம் ஒன்றைக் கொண்டிருக்க முடியும். யாரோ ஒருவர் இவ்வசனங்களை, சூரியனின் சக்தி நிறைந்த கதிர்களுக்கு ஒப்பிட்டிருக்கிறார்.[27] சூரியன் நமது வாழ்வை ஆசீர்வதிக்கக் கூடும், அல்லது நாம் ஒரு மூடப்பட்ட இருளானஅறைக்குள் அதிலிருந்து [சூரியனில் இருந்து] நம்மை ஒளித்துக் கொண்டிருக்கக் கூடும். சூரியன்அப்போதும் அங்கிருக்கும், ஆனால் நாம் இருளையும் குளிரையும் மாத்திரமே அறிந்து இருப்போம். நீங்கள் பிலிப்பியர் 2:5-11ன் ஆச்சரியமான சத்தியங்களைப் புறக்கணியாமல் அவற்றைத் தழுவிக்கொள்ள வேண்டும் என்பதற்காக நான் ஜெபிக்கிறேன். அவைகள் உங்கள் வாழ்வை மாற்றக்கூடும்.

குறிப்பு

இந்த எடுத்துரைப்பை நீங்கள் பயன்படுத்தும்போது, கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதற்கு அழைப்பை நீங்கள் விரிவாக்க விரும்பலாம். நீங்கள் பின்வருவது போன்று சிலவற்றைக் கூற, விரும்பலாம்: "ஒருநாளிலே, இயேசு கிறிஸ்துவின் முன்பாக ஒவ்வொரு முழங்காலும் முடங்கும்; பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று 'ஒவ்வொரு நாவும் அறிக்கையிடும்' (பிலிப்பியர் 2:10, 11). நீங்கள் அவரை உங்கள் கர்த்தர் என்றும் உங்கள் எஜமானர் என்றும் அறிக்கையிட்டு இருக்கிறீர்களா (ரோமர் 10:9, 10)? அவருடைய நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றிருத்தலினால் நீங்கள் அவருடைய கர்த்தத்துவத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறீர்களா (நடபடிகள் 2:38)? இந்த வாழ்வில் அவரை அறிக்கை செய்திராதவர்கள், இனிவரவிருக்கும் வாழ்வில் அவரை அறிக்கை செய்வார்கள், ஆனால் அப்போது அது மிகவும் தாமதமானதாயிருக்கும். நீங்கள் இந்தப் பாடத்தைக் கவனமாய் ஆழ்ந்து சிந்தித்து இருந்தீர்கள் என்றால், நிச்சயமாகவே நீங்கள் உங்கள் வாழ்வை, பரலோகத்தை விட்டுப் பூமிக்கு இறங்கி வந்து உங்களுக்காக மரித்த அவருக்கு ஒப்புக்கொடுப்பீர்கள் என்பது நிச்சயம். நீங்கள் இப்போது அகமகிழ்வுடன் அவரை அறிக்கை செய்ய முடியும் - அல்லது பிற்பாடு அதை நீங்கள் பெருவருத்தத்துடன் செய்ய வேண்டியிருக்கும். தேர்வு உங்களுடையது!"

ஒரு காலத்தில் இயேசுவைக் கர்த்தர் என்று அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றிருந்து, ஆனால் தாங்கள் ஏற்படுத்திய அறிக்கைக்குச் சீர்பொருத்தமான வகையில் வாழ்ந்திராத எவரையும் கூட நீங்கள் உள்ளடக்க விரும்பலாம். அவர்கள் மீளக்கட்டுவிக்கப்படும்படி வற்புறுத்தி வேண்டிக்கொள்ளுங்கள் (கலாத்தியர் 6:1; நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9).

குறிப்புகள்

[1]William F. Arndt and F. Wilbur Gingrich, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature* (Chicago: University of Chicago Press, 1957), 874. [2]Fred B. Craddock, *Philippians,* Interpretation series (Atlanta: John Knox Press, 1985), 38. [3]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary*, vol. 43, *Philippians,* ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 76, 79. [4]A. B. Bruce, *The Humiliation of Christ* (Edinburgh: T. & T. Clark, 1900), 11. [5]*இவ்வார்த்தைகள் மீதான படிப்பிற்கு பின்வரும் புத்தகம் ஒரு ஆதாரமூலமாக உள்ளது:* William Hendriksen, *New Testament Commentary: Exposition of Philippians* (Grand Rapids, Mich.: Baker Book House, 1962), 104. [6]Richard B. Gaffin, Jr., notes on Philippians, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publi shing House, 1985), 1805. [7]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 52. [8]Ibid. [9]J. B. Lightfoot, *The Epistle of St. Paul III: The First Roman Captivity I: Epistle to the Philippians* (London: MacMillan and Co., 1913), 134-35. [10]Paul Rees, *The Epistle to the Colossians, Philippians and Philemon* (Grand Rapids, Mich.: Baker Book House, 1964), 44.

[11]Lightfoot, 45. [12]Arndt and Gingrich, 157. [13]Manford George Gutzke, *Plain Talk on Philippians* (Grand Rapids, Mich.: Lamplighter Books, Zondervan Publishing House, 1973), 89. [14]J. G. Dailey, "Why Did My Savior Come to Earth?" *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [15]F. F. Bruce, *Philippians,* Good News Commentaries series (San Francisco, Calif.: Harper & Row Publishers, 1983), 47. [16]Hawthorne, 90. [17]Archibald Thomas Robertson, *Word Pictures in the New Testament,* vol. 4, *The Epistles of Paul* (Nashville: Broadman Press, 1931), 445. [18]I-Jin Loh and Eugene A. Nida, *A Translator's Handbook on Paul's Letter to the Philippians* (New York: United Bible Societies, 1977), 55. [19]J. H. Jowett, quoted in Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 75. [20]Theodore Monod, "None of Self and All of Thee," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994).

[21]I sometimes add here, "Jesus graduated from the College of Humiliation *summa cum laude,* 'with highest honors.' " [22]F. F. Bruce, 48, 50; Robertson, 446; Loh and Nida, 63. These writers and others make persuasive arguments for the title "Lord." [23]Loh and Nida, 62. [24]Gaffin, 1805. [25]Hendriksen, 118. [26]Craddock, 42. [27]Gutzke, 96.

8

ஒரு கிறிஸ்தவரின் வேலை பற்றிய விவரிப்பு

[பிலிப்பியர் 2:12-18]

நமக்குப் பொறுப்புக் கொடுக்கப்படும்போது, நம்மில் பெரும்பான்மையானவர்கள், வேலை பற்றிய விவரிப்பைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறோம். மிகச்சரியாக நாம் *எதைச்* செய்ய வேண்டும் மற்றும் அதை *எவ்வாறு* செய்ய வேண்டும் என்று அறிந்துகொள்ள நாம் விரும்புகிறோம். புதிய ஏற்பாட்டில் பல வசனப்பகுதிகள் கிறிஸ்தவரின் "வேலை பற்றிய விவரிப்பின்" பகுதி என்ற வகையில் நினைக்கப்படலாம். சில வசனங்கள், நாம் என்ன செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பவற்றைக் குறித்து அக்கறைகொள்பவைகளாக உள்ளன. இவைகள் ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் - மற்றவர்களுக்கு உதவுதல் மற்றும் தேவனை ஆராதித்தல் போன்ற - பொதுவான நிபந்தனைகளை வெளிப்படுத்துகின்றன. நாம் நமது தாலந்துகளையும் வாய்ப்புக்களையும் - நமது எஜமானருக்கு ஊழியம் செய்வதற்கு நமக்கே உரித்தான தனிச்சிறப்புள்ள வழிகளைக் கண்டறிய - பயன்படுத்தும்படியும் அறைகூவல் விடுக்கின்றன. மற்ற பகுதிகள், நாம் எவ்வாறு நமது பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும் என்பதன்மீது கவனம் குவிக்கின்றன. பிலிப்பியர் 2:12-18 அப்படிப்பட்ட ஒரு வசனப்பகுதியாக உள்ளது. உலகப்பிரகாரமான வேலை பற்றிய விவரிப்புகள் *செய்முறைகளை* விவரிக்கின்றன, ஆனால் கிறிஸ்தவரின் வேலைபற்றிய இந்த விவரிப்பு *சிந்தையின் மீது* - கர்த்தருக்கு நாம் ஊழியம் செய்கையில் நாம் கொண்டிருக்க வேண்டிய எண்ணப்போக்கின் மீது - கவனம் குவிக்கிறது.

வேண்டிக் கேட்கப்பட்ட வேலை (2:12அ, ஆ)

கீழ்ப்படிய வேண்டிய அவசியம்

12ம் வசனத்தில் பவுல், 1:27ல் தொடங்கிய நடைமுறை அறிவுறுத்துதலை மீண்டும் தொடர்ந்தார். அவ்வாறு செய்கையில் அவர், 2:8ல் இருந்து கீழ்ப்படிதலின் சிந்தனையைத் தேர்ந்து எடுத்தார்: இயேசு, "மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் *கீழ்ப்படிந்தவராகி*, தம்மைத்தாமே தாழ்த்தினார்." (என்னால் வலியுறுத்தப்படுகிறது.) இப்போது பிலிப்பியருக்குப் பவுல், "ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் *கீழ்ப்படிகிறபடியே*, நான் உங்களுக்குச் சமீபமாக இருக்கும்பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும்" என்று கூறினார் (வசனம் 12அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). 12ம் வசனம், "ஆதலால்" என்று தொடங்குகிறது, இது பின் தொடரும் கருத்தை முன்சென்ற கருத்துடன்

பிணைக்கிறது. இயேசு கீழ்ப்படிந்திருந்தார்; "ஆதலால்" அவர்களும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். இந்த புத்திமதி உறுதியான கட்டளையாக அல்ல, ஆனால் அன்பான ஒரு உடன்படிக்கையாகத் தரப்பட்டது: அவர்களைப் பவுல், "எனக்குப் பிரியமானவர்களே" என்று அழைத்தார்.

பிலிப்பியர்களின் கடந்த காலக் கீழ்ப்படிதல் பற்றி அப்போஸ்தலர் பின்வரும் திகைப்புக்குரிய கூற்றை ஏற்படுத்தினார்: "நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே." அதாவது அவர்கள் பவுலினால் வெளிப்படுத்தப்பட்டிருந்த தேவனுடைய அறிவுறுத்துதல்களுக்கு எப்போதும் கீழ்ப்படிந்திருந்தனர். பவுல் தேவனுடைய பிரதிநிதியாக இருந்ததால், அவரது உரையைக் கேட்பவர்கள், ஏவுதல் பெற்ற அவரது போதனைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டனர் (காண்க ரோமர் 1:5; 15:18; 2 கொரிந்தியர் 10:6; 2 தெசலோனிக்கேயர் 3:4; பிலேமோன் 21). அவர்கள் *எப்பொழுதும்* கீழ்ப்படிந்திருந்தனர் என்ற கூற்று, அவர்களை நினைக்கிற *பொழுதெல்லாம்* தேவனை ஸ்தோத்திரித்தார் என்ற அப்போஸ்தலரின் முந்திய கூற்றைப்போன்றே (1:3) திகைக்கச் செய்வதாக உள்ளது! மீண்டும் ஒரு முறை, பவுல் தமது "தேர்ந்து எடுக்கப்பட்ட நினைவுகூருதலை" பயன்படுத்தியிருக்கச் சாத்தியக்கூறுள்ளது. அனேகமாக அவர்கள் ஏவுதல் பெற்ற பவுலின் அறிவுறுத்துதல்களுக்குக் கீழ்ப்படிய, பொதுவாக எப்பொழுதுமே தயாராக இருந்திருப்பார்கள் என்பது இங்கு சிந்தையாக இருக்கலாம். பரலோகத்தின் கட்டளைகளுக்கு *எப்பொழுதுமே* நாம் கீழ்ப்படிந்து இருக்கிறோம் என்று மற்றவர்கள் நம்மைக் குறித்துக் கூற முடிந்தால் அது அற்புதமான விஷயமாயிருக்காதா?

பிலிப்பியர்கள் கீழ்ப்படிதலின் பாதையில் தொடர வேண்டும் என்று பவுல் வற்புறுத்திக்கேட்டுக் கொண்டார்: "ஆதலால், ... நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும் பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும் ..." பவுல் இதற்கு முன் பலவேளைகளில் பிலிப்பி நகரத்தில் சற்றுக் காலத்தைச் செலவிட்டிருந்தார் (காண்க நடபடிகள் 16:12-40; 20:1-3, 6). அங்கிருந்த சகோதரர்கள் தங்களுடன் அவர் இன்னும் இருக்கிறார் என்பது போன்று நடந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார். நான் சிறு பிள்ளையாக இருந்தபோது, எனது பெற்றோர்கள் என்னிடத்தில் ஒரு வேலையைக் கொடுத்தால், அவர்கள் என்னைக் கவனித்துக்கொண்டு இருக்கும்போது நான் அவ்வேலையைப் பொதுவாகக் கடினமாகச் செய்வேன். என்னைத் தனியே விட்டுவிட்டு அவர்கள் செல்லும் போது, சில வேளைகளில் நான் வேலை செய்வதற்குப்பதிலாக விளையாடுவேன். சில தனிநபர்கள் வளர்கிறபோது, "குழந்தைத்தனத்திற்குரியவற்றை விட்டுவிடுவது இல்லை" (காண்க 1 கொரிந்தியர் 13:11): அவர்கள் தங்களுக்கு வேலை அளிப்பவர்கள் இருக்கும்போது கடினமாக உழைக்கின்றனர் மற்றும் அவர்கள் இல்லாதபோது, கொஞ்சமே வேலை செய்கின்றனர். அப்படிப்பட்ட மக்கள் "மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ் செய்கின்றனர்" என்று பவுல் கூறினார் (எபேசியர் 6:6).

ஆவிக்குரிய பொறுப்புகளை பற்றிய விஷயங்களில், ஒரு சிலர் அவ்வாறு இருக்கின்றனர் என்பது கவலைக்குரியதாகும். அவர்கள் செய்வது என்ன என்பதை யாரேனும் ஒருவர் பார்க்க முடிகிற வரையிலும், தங்களின் முயற்சிகளுக்காக தாங்கள் அங்கீகரிக்கப்படுகிற வரையிலும் மதரீதியான செயல்களை அவர்கள்

காட்சிப்படுத்துகின்றனர். எவரொருவரும் கவனிக்காதபோது, அவர்கள் எஜமானரின் ஊழியத்திற்குத் தங்கள் நேரத்தையும் தாலந்துகளையும் பயன்படுத்துவதில் சிறிதளவே ஆர்வம் கொண்டுள்ளனர். இவர்களைப் போன்று பிலிப்பியர்கள் இருப்பதைப் பவுல் விரும்பவில்லை. NCV வேதாகமத்தில், "நான் உங்களிடம் இல்லாத இப்பொழுது நீங்கள் கீழ்ப்படிதல் இன்னும் அதிக முக்கியமாக இருக்கிறது" என்றுள்ளது. அவர்களின் கீழ்ப்படிதல் அந்த வேளையில் "இன்னும் அதிக முக்கியமானதாக இருந்தது" ஏனென்றால், (1) விட்டுவிட்டு வெளியேறுவதற்கான அழுத்தம் அதிகரித்துக் கொண்டு இருந்தது (1:28-30) மற்றும் (2) தனிப்பட்ட ஊக்குவிப்பைக் கொடுக்கப் பவுல் இல்லாத நிலையில் சிலர் விழுந்து போகலாம். நீங்களும் நானும் தேவனுக்கு ஏன் கீழ்ப்படிய வேண்டும்? நாம் கர்த்தரை விசுவாசத்துடன் பின்பற்றுவதை மற்றவர்கள் அறியாயிருப்பினும் மற்றும் நாம் நன்றிகளைப் பெறாதிருப்பினும், கர்த்தரை நாம் விசுவாசத்துடன் பின்பற்ற கற்றுக் கொள்ள வேண்டும். தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது <u>சரியாக</u> உள்ளது என்பதால் கர்த்தருக்குக் கீழ்ப்படியக்கற்றுக்கொள்வது கிறிஸ்தவர் என்ற வகையில் பக்குவம் அடைதலின் பாகமாக இருக்கிறது.

ஊழியம் செய்ய வேண்டிய அவசியம்

பவுல், பிலிப்பியர்கள் மத்தியில் தாம் இல்லாதிருந்த நிலையில சும்மா இருப்பதற்குப் பதில், "உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" என்று அவர்களுக்கு ஊக்கமூட்டினார் (2:12இ). RSV வேதாகமத்தில் "உங்கள் சொந்த இரட்சிப்பிற்காகப் பிரயாசப்படுங்கள்" என்றுள்ளது. பவுலின் வார்த்தைகள் நாமகரணக் கூட்டத்தாரின் சில விளக்கவுரையாளர்களைத் தொந்தரவு செய்துள்ளன. எடுத்துக்காட்டாக, இரட்சிப்பைப் பொறுத்த மட்டில் மனித முயற்சி, எதுவும் செய்வதற்கில்லை என்று நினைப்பவர்களை அவரது [பவுலின்] வார்த்தைகள் தொந்தரவு செய்துள்ளன - ஏனென்றால் முகப்பு மதிப்பை எடுத்துக்கொள்கையில் இவ்வார்த்தைகள் தனிநபருடைய ஊழியம் மற்றும் அவரது நித்திய வெகுமதி ஆகியவற்றிற்கு இடையில் உறவு இருப்பதாகக் கருத்துத் தெரிவிக்கின்றன. இந்த வார்த்தைகள், ஒருமுறை இரட்சிக்கப்பட்டவர் ஒருக்காலும் தவறிவிழ முடியாது என்று போதிப்பவர்களையும் தொந்தரவு செய்கின்றன - ஏனென்றால் இந்த வார்த்தைகள், ஒரு கிறிஸ்தவரால் சில செயல்கள் செய்யப்படாவிட்டால், அவர் மகிழ்வுடன் அனுபவிக்கும் இரட்சிப்பு இழந்துபோகப்படக்கூடும் என்று மறைமுகமாக உணர்த்துகின்றன. இதன் விளைவாக, சில எழுத்தாளர்கள், இவ்வசனப் பகுதியைச் சற்று நீளமாகவே "விவரிக்க" முயற்சி செய்துள்ளனர்.

பிலிப்பி நகரில் இருந்த சபைக் குழுமம், சச்சரவினால் நிரம்பி இருந்தது என்று நினைத்தவர்கள் "இரட்சிப்பு" என்ற வார்த்தை பாவத்திலிருந்து இரட்சிப்பு என்பதைக் குறிப்பதில்லை ஆனால் உறுப்பினர்களின் சிறுமைத் தன்மையிலிருந்து "விடுவிக்கப்படுதல்" அல்லது அவர்களின் மாறு பாடுகளில் இருந்து "குணமாகுதல்" என்பதைக் குறிக்கிறது என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். [இருப்பினும்] "இரட்சிப்பு" என்ற வார்த்தை சபைக்குழுமம் சார்ந்த பிரச்சனைகளில் இருந்து விடுவிக்கப்படுதல் என்பதைக் குறிக்கிறது என்று கருத்துத் தெரிவிக்கும் ஒவ்வொருவரும் இவ்வசனப் பகுதியை விளக்கி அப்புறப்படுத்தும் முயற்சியின் குற்றத்தைக்கொண்டு இருப்பதில்லை; சிலர் இவ்வசனப்பகுதி இதைத்தான்

பேசுகிறது என்று மட்டும் நினைக்கின்றனர். இருந்தபோதிலும், இந்த அணுகுமுறையானது "இரட்சிப்பு" என்பது பாவங்களில் இருந்து இரட்சிப்பு என்பதைத் தவிர வேறு சிலவற்றைக் குறிப்பதாக ஏற்படுத்துவதால், இது முன்பு குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களுக்கு விசேஷித்த வேண்டுகோள் ஒன்றைக் கொண்டுள்ளது.

"இரட்சிப்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *soterias* என்ற கிரேக்க வார்த்தை பல்வேறு வழிகளில் மொழிபெயர்க்கப்பட முடியும் என்பது உண்மையாகவே உள்ளது. இருப்பினும், "பவுல், *soterias* என்ற வார்த்தையை நித்திய இரட்சிப்பு என்ற கருத்தில் சீராகப் பயன்படுத்துகிறார் (1:28; ரோமர் 1:16; 10:1, 10; 13:11; 2 கொரிந்தியர் 6:2; 7:10; எபேசியர் 1:13; 1 தெசலோனிக்கேயர் 5:8f; 2 தெசலோனிக்கேயர் 2:13)."[1] உடனடி சந்தர்ப்பப் பொருளில் எதுவும், இவ்விடத்தில் அப்போஸ்தலர், இந்த வார்த்தையை மாறுபட்ட அர்த்தத்தில் பயன்படுத்தினார் என்று நம்பும்படி நம்மை வழிநடத்துவதில்லை. எனது நூலகத்தில் உள்ள தரமான ஒவ்வொரு மொழிபெயர்ப்பு (வேதாகமும்) பிலிப்பியருக்கு 2:12ல் "விடுதலை" அல்லது "குணமாக்குதல்" என்பதை அல்ல, ஆனால் "இரட்சிப்பு" என்பதையே கொண்டுள்ளது. ஆகவே நாம் மொழிபெயர்ப்பை அது இருக்கிறவாறே விட்டுவிடுவோம்.

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் கிரியை செய்ய வேண்டியதற்கான அவசியம் பற்றி அதிகம் கூறப்பட்டுள்ளது (காண்க 1 கொரிந்தியர் 15:58; 2 கொரிந்தியர் 5:10; கொலோசெயர் 1:10; யாக்கோபு 2:24; 1 பேதுரு 1:17). என்னைத் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம். நாம் செய்கிற கிரியைகளின் மூலமாக நாம் இரட்சிப்பை *ஈட்டுகிறோம்* அல்லது *அதற்குத் தகுதியாகிறோம்* என்று புதிய ஏற்பாடு போதிப்பதில்லை. ரோமர் 11:6, எபேசியர் 2:9 மற்றும் 2 தீமோத்தேயு 1:9 போன்ற வசனப்பகுதிகள் *விசுவாசத்தின்*அடிப்படையின் மீது (எபேசியர் 2:8) தேவனுடைய கிருபையால் (தகுதியற்றவருக்குத் தரப்படும் ஈவு) நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்று திட்டவட்டமாக உரைக்கின்றன. அதே வேளையில், *கீழ்ப்படிதல்* உள்ள விசுவாசமே - அன்பினால் *கிரியை செய்யும்* விசுவாசம் (கலாத்தியர் 5:6) - *இரட்சிக்கும்* விசுவாசமாக உள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு விளக்கவுரையாளர் பின்வருமாறு எழுதினார்:

> *நம்பிக்கை வைத்தலும் கீழ்ப்படிதலுமே* விசுவாசத்தின் அடிப்படைக் கூறுகளாக உள்ளன என்பதை நாம் அறியாத வரையில், விசுவாசம் என்பதற்குப் பவுல் தரும் அர்த்தத்தை நாம் ஏற்புடைய வகையில் புரிந்து கொள்வதில்லை ... தெசலோனிக்கேயர்கள் விசுவாசத்திற்கு வந்தது பற்றிப் பவுல் பேசியபோது (1 தெசலோனிக்கேயர் 1:8), அவர்களின் *கீழ்ப்படிதலைப்* பற்றி அவர் எழுதினார். ரோமர் 1:8ல் அவர் "உங்கள் விசுவாசம்" என்பதைப் பற்றியும் ரோமர் 16:19ல் "உங்கள் கீழ்ப்படிதல்" என்பதைப் பற்றியும் அவர் எழுதினார், இவை இரண்டும் ஒரே விஷயத்தைத் தெளிவாக அர்த்தப்படுத்தின. ரோமர் 1:7ல் அவர், "விசுவாசத்துக்குக் கீழ்ப்படிதல்"என்ற சொற்றொடரை மிகச்சரியாகப் பயன்படுத்தினார். இது அநேகமாக "விசுவாசமாகிய கீழ்ப்படிதல்" என்று அர்த்தப்படலாம்.[2]

[இக்கருத்துடன்] இன்னொரு எழுத்தாளர் பின்வருமாறு உடன்பட்டார்:

> ... விசுவாசித்தல் என்பதில் கீழ்ப்படிதல் அடங்கியுள்ளது. விசுவாசம் என்பது சில விஷயங்கள் உண்மையாக இருக்கும் என்று ஒத்துக்கொள்ளும் விஷயமாக மாத்திரமேயுள்ளது என்று நினைத்தல், துன்பமான ஒருபொறியாக/கண்ணியாக உள்ளது. இல்லை! பிசாசுகளும்கூட தேவனும் இயேசு கிறிஸ்துவும் உண்மையானவர்கள் என்று ஒப்புக்கொள்ளும், ஆனால் அவைகள் இன்னமும் பொல்லாதவைகளாகவே உள்ளன.
>
> நெருப்புக்கு எதிராக காப்பீடு அளித்தலை நீங்கள் நம்புகிறீர்களா? உங்கள் வீட்டை நீங்கள் காப்பீடு செய்திருக்கிறீர்களா? இல்லையா? அப்படி என்றால் நீங்கள் அதில் நம்பிக்கை வைப்பதில்லை! யாக்கோபு ... கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது என்று தெளிவாகக் கூறுகிறார் [யாக்கோபு 2:26]. ஒவ்வொரு கிறிஸ்தவ நபரும் யாக்கோபு எழுதிய நிருபத்தை அதிலும் குறிப்பாக இரண்டாம் அதிகாரத்தை அடிக்கடி வாசிக்க வேண்டும்.[3]

கீழ்ப்படிதலின் கிரியைகள் விசுவாசத்தின் நடைமுறைப் பகுதியாக உள்ளன. நமது கிரியைகளினால் நாம் நமது விசுவாசத்தை வெளிப்படுத்துகிறோம், நமது நம்பிக்கையைக் காண்பிக்கிறோம் மற்றும் நமது உறுதிப்பாட்டின் பலத்தைச் செயல்விளக்கப்படுத்துகிறோம். நாம் நமது கிரியை*களினால்* இரட்சிக்கப்படுவதில்லை என்று கூறப்படுகிறது, ஆனால் அவை *இல்லாத நிலையிலும்* நாம் இரட்சிக்கப்பட முடியாது.

12ம் வசனத்தின் "நிறைவேற" என்பது "வெற்றிகொள்ள, நிறைவேற்ற"[4] என்று அர்த்தப்படுகிற *katergazomai* என்ற கூட்டு வார்த்தையில்[5] இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தை "முடித்து வைத்தலுக்குக் கொண்டுவருதலின் கருத்தையே எப்போதும் கொண்டுள்ளது" என்று வில்லியம் பார்க்ளே என்பவர் கருத்துத் தெரிவித்தார்.[6] NCV வேதாகமத்தில் "உங்கள் இரட்சிப்பை நிறைவேற்றத் தொடர்ந்து கிரியை செய்து கொண்டிருங்கள்" என்றுள்ளது. AB வேதாகமத்தில் "உங்கள் சொந்த இரட்சிப்பு (நாட்டப்பட, இலக்கை கொண்டுசெல்ல மற்றும் முழுமையாக நிறைவேற) கிரியை செய்யுங்கள்" என்றுள்ளது. இது, நீங்கள் உங்கள் கடந்த காலப் பாவங்களில் இருந்து இரட்சிக்கப்பட நீங்கள் ஞானஸ்நானம் பெற்றபோது, நல்ல தொடக்கம் செய்தீர்கள் [காண்க மாற்கு *16:16;* நடபடிகள் *2:38;* ரோமர் *6:3-6, 17, 18*], மற்றும் நீங்கள் அது முதல் ஊழியத்தின் வாழ்வை வாழ்ந்தீர்கள் - ஆனால் இது நிறுத்துவதற்கான வேளையல்ல. இன்னும் செய்யப்படவேண்டிய கிரியைகள் உள்ளன! என்று பவுல் கூறுவது போன்றுள்ளது.

நம்மில் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் பணி மும்முரமாக இருக்க வேண்டும். தேவனுடைய பிள்ளை ஒவ்வொருவரிடத்திலும் கேட்டுக்கொள்ளப்படுகிற பொதுவான நிபந்தனைகள் உள்ளன மற்றும் பிற நிபந்தனைகள் ஒரு கிறிஸ்தவரின் திறன்கள் மற்றும் வாய்ப்புக்களுக்கு ஏற்ப மாறுகின்றன என்று நாம் முன்னதாகக் குறிப்பிட்டோம். இவற்றில் பிந்திய விஷயத்தைப் பொறுத்த மட்டில், உங்களிடம் தேவன் எதிர்பார்ப்பது என்ன என்று நீங்கள் ஜெபம் நிறைந்த வகையில் தீர்மானிக்க வேண்டும். ஒரு வேளை அவர் உங்களுக்கு, பிரசங்கிப்பதற்கு அல்லது போதிப்பதற்கு, கர்த்தருடைய பந்தியைத் தயார் செய்வதற்கு அல்லது சபை கூடி வரும் இடத்தைச் சுத்தம்

செய்வதற்கு திறனைக் கொடுத்திருக்கலாம். ஒரு வேளை அவர் உங்கள் அயலகத்தவர்களுக்கு நீங்கள் உதவி செய்யும்படிக்கு அன்பும் பரிவிரக்கமும் உள்ள இருதயத்தைக் கொடுத்திருக்கலாம். நீங்கள் ஒரு இளம் தாயாக இருந்தால், அவருடைய (தேவனுடைய) வழியில் உங்கள் பிள்ளைகளை வளர்த்தல்மீது நீங்கள் கவனத்தை ஒருமுகப்படுத்த வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். நீங்கள் உலகப்பிரகாரமான வேலை ஒன்றைப் பெற்றிருந்தால், உங்கள் உடன் பணியாற்றுபவர்களுடன் நீங்கள் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று இயேசு விரும்புகிறார். உங்கள் நேரத்தில் பெரும்பான்மையான பகுதி வயது முதிர்ந்த உங்கள் பெற்றோர்களைக் கவனிக்க எடுத்துக்கொள்ளப்படலாம். செய்ய வேண்டிய பணிப்பொறுப்பு *எதுவாக இருந்தாலும்*, அது செய்யப்படும்படி தேவன் விரும்புகிற *வழி* ஒன்றுள்ளது. பவுல், ஏவுதல் பெற்ற தமது “வேலைபற்றிய விவரிப்பில்” தொடர்ந்து “எவ்வாறு” (செய்யவேண்டும்) என்பது பற்றி நமக்குக் கூறுகிறார்.

வேலைக்கு இன்றியமையாத விஷயங்கள் (2:12இ-18)

பயபக்தியோடு செயல்படுங்கள் (2:12இ)

பயபக்தியோடு செயல்படுதல் என்பது இன்றியமையாத முதல் விஷயமாக உள்ளது: “அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்” (வசனம் 12இ). “பயத்தோடும் நடுக்கத்தோடுமா”? “பயம்” (Gk.: *phobos*) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையில் இருந்தே நாம் “phobia” என்ற ஆங்கில வார்த்தையைப் பெறுகிறோம். இது, நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்யும் போது மனக்கவலையினாலும் படபடப்பினாலும் மூழ்கடிக்கப்பட்டு இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுகிறதா? இல்லை. “பயம்” என்பது வேதவசனங்களில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது போன்றே, இவ்விடத்திலும் ஆழ்ந்த பக்தி மற்றும் மரியாதை என்ற கருத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. 1 பேதுரு 3:1ல் *phobos* என்ற வார்த்தை, “பயபக்தியோடு கூடிய ... நடக்கை” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது நம்மைத் தேவனை விட்டுத் துரத்தும் மன அமைவாக அல்ல, ஆனால் - தேவனுடைய மாபெரும் தன்மையையும் அவரை நாம் சார்ந்துள்ளதையும் நாம் ஒப்புக்கொள்ளுகையில் - நம்மைத் தேவனிடத்திற்குச் செலுத்தக் கூடிய மனதின் அமைவாக உள்ளது. AB வேதாகமம், 12ம் வசனத்தில் பின்வரும் விளக்க வார்த்தைகளை உட்செருகுகிறது:

> *அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் (சுயத்தின்மீது நம்பிக்கை வைக்காதிருத்தல், தீவிரமான முன்னெச்சரிக்கை மனச்சாட்சியின் மென்மைத் தன்மை, சோதனைக்கு எதிராகக் கவனத்துடன் இருத்தல்; தேவனுக்குக் கோபமூட்டக்கூடிய மற்றும் கிறிஸ்துவின் நாமத்தைக் கனவீனப்படுத்தக் கூடிய எல்லாவற்றிலும் இருந்து பயத்துடன் சுருக்கிக் கொள்ளுதல்) உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்.*

நாம் தேவனுக்கு ஊழியம் செய்கையில், பயத்தினால் நாம் முடக்கப்பட்டு விடக்கூடாது; ஆனால் அதே வேளையில் நாம் நமது பணிப்பொறுப்பின்

தீவிரத்தன்மையையும் நாம் யாருக்கு ஊழியம் செய்கிறோமோ அவருடைய மாபெரும் தன்மையையும் ஒருக்காலும் மறந்து விடக்கூடாது. நாம் எப்போதும் அவருக்கு, "பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை" ஏறெடுக்க வேண்டும் (எபிரெயர் 12:28).

உறுதியான நம்பிக்கையுடன் செயல்படுங்கள் (2:13)

சிலர், "தேவனுக்காக ஊழியம் செய்தல் என்பது கடினமானதாக ஒலிக்கிறது. அதை என்னால் செய்ய முடியும் என்று நான் நிச்சயமாய்க் கூறமுடிவதில்லை!" என்று சொல்லலாம். அதை நீங்கள் தனியே செய்யும்படி எதிர்பார்க்கப்படுவதில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஆண்டவர் ஆணைகளை மாத்திரமல்ல, ஆனால் பலத்தையும் உங்களுக்குக் கொடுக்கிறார். *உறுதியான நம்பிக்கையுடன்* செயல்படுதல் என்பது இரண்டாவது நிபந்தனையாகும் - தேவன் உங்களுக்கு உதவுகிறார் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். தொடர்ந்து பவுல், "ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" என்று கூறினார் (வசனம் 13).

"செய்கை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *energein* என்ற கிரேக்க வினைச்சொல்லில் இருந்தே நாம் "energy" மற்றும் "energize" என்ற ஆங்கில வார்த்தைகளை பெறுகிறோம். 13ம் வசனத்தில் இது இருமுறை காணப்படுகிறது. இருமுறையுமே இது "செய்கை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (தமிழ் வேதாகமத்தில் இது "செய்கை" மற்றும் "உண்டாக்குதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.) தேவன் நமக்கு "சக்தியூட்டுகிறார்." நமக்கு அவர் எதைப்பொறுத்த மட்டில் சக்தியூட்டுகிறார்? அவருக்காக ஊழியம் செய்ய நமக்கு குறைந்த பட்சம் இரண்டு விஷயங்கள் தேவைப்படுகின்றன. அவருக்காக ஊழியம் செய்வதற்கான விருப்பம் மற்றும் அவருக்காக ஊழியம் செய்யும் செயல் திறம். இவ்விரு விஷயங்களிலும் அவர் உதவுகிறார் என்று நமது வேதவசனப்பகுதி அறிவிக்கிறது: அவர் "விருப்பத்தையும் செய்கையையும்" நமக்குள் "உண்டாக்குகிறவராயிருக்கிறார்." CEV வேதாகமத்தில், "நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிய மனவிருப்பமும் செயல்திறனும் உள்ளவர்களாக இருப்பதற்கு அவர் உங்களுக்குள் கிரியை செய்கிறார்" என்றுள்ளது. NRSV வேதாகமம், அவர் "நீங்கள் அவருடைய நன் மகிழ்ச்சிக்கு மனவிருப்பமும் ஊழியம்செய்யும் பண்பும் கொண்டிருக்கச் செய்கிறார்" என்றுள்ளது. இதைத் தேவன் அற்புதவிதமாகச் செய்கிறாரா? இல்லை, நமக்குள் தேவன் கிரியை செய்யும் வழிகளில் சிலவற்றைப் பற்றி நாம் முன்னதாகக் கலந்துரையாடினோம். நமக்குள் ஊழியம் செய்வதற்கான "சித்தம்" அல்லது "விருப்பம்" உண்டாக்குவதற்காகக் கூட அவர் கிரியை செய்ய முடியும். சித்தமானது வேதவசனங்களை வாசித்தல், உரிய வேளையிலான ஒரு பிரசங்கம், கிறிஸ்தவ நண்பர் ஒருவரின் ஊக்குவித்தல் அல்லது மனச்சாட்சியை அசையச்செய்தல் என்பவற்றினால் தூண்டப்படலாம். இந்தக் காரணிகள் யாவும் நமது வாழ்வில் தேவன் கிரியைசெய்தலின் பாகமாக உள்ளன. அவர் நமக்குள் மிகச்சரியாக எவ்வாறு கிரியை செய்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளுதல் அல்ல ஆனால் அவர் அதைச் செய்கிறார் என்பதை ஏற்றுக்கொள்வதே முக்கியமான விஷயமாக உள்ளது. நாம் செய்வதற்கு வேலையை/ஊழியத்தை கொடுத்துவிட்டு புறம்பே விலகிச் சென்று நாம் நமது சொந்தப் பொறுப்பிலேயே அந்தப் பணிப்பொறுப்பில்

உழலச் செய்தலைத் தேவன் செய்வதில்லை. அவர் நம்முடன் தங்கியிருக்கிறார். நாம் அவருக்கு ஊழியம் செய்கையில் ஒருக்காலும் தனிமையாக இருப்பதில்லை (காண்க மத்தேயு 28:20).

தேவன் "தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி" நமக்குள் கிரியை செய்கிறார். நாம் மனவிருப்பத்துடன் ஊக்கத்துடன் அவருக்கு ஊழியம் செய்யும்போது, அது அவருக்குப் பிரியமாயிருக்கிறது. அவர் கீழ்ப்படியாமையில் சந்தோஷம் கொள்வதில்லை, மற்றும் யாரேனும் ஒருவர் கலகம் செய்யும் நிலையிலே மரித்துப்போகும்போது, அவரது இருதயம் உடைந்து போகிறது (காண்க சங்கீதம் 5:4; எசேக்கியேல் 18:23, 32). இருப்பினும் மக்கள் பாவத்திலிருந்து நீதிக்குத் திரும்பும்போது அவர் அதில் பிரியப்படுகிறவராய் *இருக்கிறார்* (காண்க எசேக்கியேல் 33:11). அவர் "தம்முடைய ஜனத்தின் மேல் பிரியம் வைக்கிறார்" (சங்கீதம் 149:4).

12ம் வசனம், நாம் நமது இரட்சிப்பு "நிறைவேறப் பிரயாசப்பட" வேண்டும் என்று கூறுகிறது, ஆனால் 13ம் வசனம், தேவன் நமக்குள் "கிரியை" செய்கிறார் என்று கூறுகிறது. இவ்விரு வசனங்களும் குழப்பமூட்டுபவையாக இருக்கக் கூடும். 12ம் வசனத்தை மாத்திரம் நாம் பார்த்தோமானால், இரட்சிக்கப்படுதல் என்பது முற்றிலும் மனிதரீதியான ஒரு பொறுப்பு என்று நாம் முடிவு செய்து விடலாம். 13ம் வசனத்தை நாம் தனிமைப்படுத்தினால், தேவன் முற்றிலும் பொறுப்பேற்கிறார் என்று நாம் முடிவு செய்துவிடலாம். இரட்சிப்பில் தேவனுடைய பகுதிப்பணியையும் தனிநபருடைய பகுதிப்பணியையும் இசைவிணக்கப்படுத்துவதற்குப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கொஞ்சமே முயற்சி செய்தனர். எபேசியர் 2:8 போன்ற, புதிய ஏற்பாட்டின் சில வசனப்பகுதிகள் இரட்சிப்பின் தெய்வீக மற்றும் மனிதரீதியான பகுதிகளை ஒன்றுகலக்கின்றன: "கிருபையினால் [தேவனுடைய பகுதிப்பணி] விசுவாசத்தைக்கொண்டு [மனிதருடைய பகுதிப்பணி] இரட்சிக்கப்பட்டீர்கள்." இருப்பினும், இரட்சிப்பு எவ்வாறு ஒரு கொடையாக ("கிருபையினாலே") இருக்கக்கூடிய அதே வேளையில் அந்தக் கொடையைப் பெற மனிதர் சிலவற்றைச்செய்ய வேண்டியிருக்கும் ("விசுவாசத்தினாலே") என்பதைச் சுருக்கமாக விளக்குவதற்குப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் சிறிதளவே முயற்சி மேற்கொண்டனர். மனிதகுலம் செய்ய முடியாததைத் தேவன் செய்திருந்தார் என்று அறிதல் அவர்களுக்குப்போதுமானதாக இருந்தது, ஆனால் சிலவற்றைச் செய்ய வேண்டியது மனிதர்களுக்கு அவசியமானதாக இருந்தது. சார்லஸ் R. ஏர்டுமான் என்பவர், பிலிப்பியர் 2:12, 13ஐப் பற்றிப் பின்வருமாறு எழுதினார்:

> இங்கு இவ்வாறாக, தெய்வீக ராஜரீகம் மற்றும் மனித சுயாதீன முகமை ஆகிவற்றின் மாபெரும் இரு உண்மை நிலைகள் உரைக்கப்படுகின்றன. கிரியை தேவனுடைய கிரியையாகவே உள்ளது. மற்றும் அதே வேளையில், அது மனிதருடைய கிரியையாக உள்ளது. தேவன் ஒரு பகுதி கிரியையும் மனிதர் ஒரு பகுதி கிரியையும் செய்வதில்லை. முழுக்கிரியையும் தேவனுடைய கிரியையாக உள்ளது மற்றும் முழுக்கிரியையும் மனித னுடைய கிரியையாக உள்ளது. சிந்தனையின் நேர்மாறாகத் தோன்றும் நிலையை ஒப்புரவாக்கப் பவுல் முயற்சி செய்வதில்லை.[7]

பவுலைப் போலின்றி நம்மில் பலர், "தெய்வீக - மனுஷீக நாடகம்"[8] என்று பேட் ஹாரல் என்பவர் அழைத்துள்ள இந்த இரு காரணிகளையும் ஒப்புரவாக்க நிர்பந்திக்கப்படுவதாக உணருகிறோம். இந்த முயற்சியானது, "இங்கு அடங்கியுள்ள ஒரு அல்லது மற்றொரு சத்தியத்தைப் பகுதி மறுத்தல் அல்லது காணாது விடுதல்"[9] என்ற விளைவை ஏற்படுத்தாத வரையிலும் இதில் தீங்கு எதுவும் இருப்பதில்லை. தேவன் செய்துள்ளதையோ அல்லது நாம் செய்யும்படி அவர் கேட்டுள்ளதையோ குறைத்துவிட நாம் துணியாதிருப்போமாக[10] இவ்விரண்டிற்கும் இடையில் ஒரு சமானநிலை இருக்க வேண்டும். ஏர்டுமான் என்பவர் இதைப்பற்றி பின்வருமாறு கூறினார்,

> மனிதப்பொறுப்பின் உணர்வுநிலையானது, தேவனுடைய கிருபை மற்றும் வல்லமை ஆகியவற்றில் உறுதியான நம்பிக்கையினால் சமநிலைப் படுத்தாதவரையிலும் அது பெருவருத்தத்திற்கு வழிநடத்திச் செல்கிறது. மனிதத் தரமானம் மற்றும் உணர்வுடன்கூடிய முயற்சி ஆகியவை இணைந்திராத நிலையில், தேவனுடைய வல்லமை மற்றும் செயல்பாட்டில் உள்ள நம்பிக்கையானது ஒழுக்கரீதியான வலிவின்மையையும் பேரழிவையும் விளைவிக்கிறது.[11]

நமது சொந்த இரட்சிப்பிற்கு நாமே "பிரயாசப்பட" வேண்டியுள்ளதா? ஆம், நாம் பிரயாசப்படுகிறோம். அதைச் செய்வதற்குத் தேவன் நமக்குள் "செயல்படுகிறார்"? ஆம், அவர் அதை செய்கிறார். அவர் அதை செய்கிறார், [எனவே] தேவனுக்கு நன்றி! அவர் நமக்குள் செயல்படுவதால், உறுதியான நம்பிக்கையுடன் நாம் செயல்பட முடியும்!

மனப்பூர்வமாகச் செயல்படுங்கள்! (2:16)

அடுத்ததாகப் பவுல், நாம் *மனப்பூர்வமாக* ஊழியம் செய்வது அவசியம் என்று உரைத்தார்: "எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்" (வசனம் 16). "முறுமுறுப்பு" என்பதற்கான *goggusmos* என்ற கிரேக்க வார்த்தை "இரகசியமான மற்றும் மறைவான மனநிறைவின்மை, முறுமுறுத்தல், முறையிடுதல் என்பவற்றின் வெளிப்பாடு" என்பதைக் குறிக்கிறது.[12] இவ்வார்த்தையை செப்துவஜிந்த் வேதாகமம், வனாந்திரத்தில் இஸ்ரவேல் மக்களின் முறுமுறுத்தல் மற்றும் முறையிடுதலை விவரிக்கப் பயன்படுத்துகிறது (காண்க யாத்திராகமம் 15:24; 16:7, 8; எண்ணாகமம் 11:1; 16:4). 1 கொரிந்தியர் 10:10ல் பின்வரும் எச்சரிக்கையைத் தருவதற்குப் பவுல், இஸ்ரவேல் மக்களின் உதாரணத்தைப் பயன்படுத்தினார்: "அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்."

16ம் வசனத்தில் உள்ள "தர்க்கிப்பு" என்பது, *dia* என்ற முன்னிடைச் சொல்லை "வாதிடுதல்" என்பதற்கான (*logismos* என்ற) வார்த்தையுடன் இணைத்துப் பெறப்பட்ட, *dialogismos* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த வார்த்தை "உள்ளாக வாதிடுதல்"[13] என்பதைக் குறிக்கலாம். ஆனால், "பொல்லாத சிந்தனைகள்" என்பதே புதிய ஏற்பாட்டில் இதற்கு மேலோங்கியுள்ள அர்த்தமாக உள்ளது.[14] பிலிப்பியர் 2:16ல் ASV வேதாகமம் இவ்வார்த்தையை "கேள்வி கேட்டல்கள்" என்று மொழி

பெயர்த்துள்ளது மற்றும் CJB வேதாகமம் இதை, "விவாதம் செய்தல்" என்று மொழிபெயர்த்துள்ளது.

இந்த தர்க்கிப்பு தேவனுடனா அல்லது மற்ற கிறிஸ்தவர்களுடனா என்பதில் கல்வியாளர்கள் கருத்து வேறுபடுகின்றனர். இவ்வசனப்பகுதி பிலிப்பி சபையில் இருந்த பிரச்சனைகள் மீது கவனம் குவித்தது என்று நினைப்பவர்கள், இது சக கிறிஸ்தவர்களுக்கு இடையிலான விவாதம் என்ற கருத்திற்கு ஆதரவாக இருக்கின்றனர். மற்றவர்கள், இது தேவனுடன் கருத்து வேறுபாடு - அதாவது, தேவனுடன் "விவாதம் செய்ய" அல்லது தமது வழக்கை அவர் முன் கொண்டுவர விரும்பிய யோபுவைப் போன்று (காண்க யோபு 31:35-37) பிலிப்பியர்கள் இருந்தனர் - என்று நம்புகின்றனர். இன்றைய நாட்களில் சிலர் வாழ்வில் நியாயமற்ற விஷயம் பற்றி அல்லது அவர்களிடத்தில் அவர் வேண்டுவது என்ன என்பது பற்றித் தேவனுடன் விவாதிக்க விரும்புகின்றனர். இவ்விரு விளக்கங்களையும் பிரித்தல் தேவையற்றதாக உள்ளது. இஸ்ரவேல் மக்கள் மோசேயைக் குறித்து முறையிட்டபோது (எண்ணாகமம் 16:41), அவர்கள் கர்த்தருக்கு எதிராக முறுமுறுத்தனர் (எண்ணாகமம் 17:10). சபையின் உறுப்பினர்கள் ஒற்றுமையாகச் செல்லாதபோது, தேவன் அதைத் தம்முடையதாக எடுத்துக்கொள்கிறார் (காண்க 1 யோவான் 4:20).

"முறுமுறுப்பு" மற்றும் "தர்க்கிப்பு" என்ற வார்த்தைகளை நான் வாசிக்கும்போது, எனக்குச் சில பிள்ளைகளின் நினைவு வருகிறது. அவர்கள் எதையாவது செய்யவேண்டும் என்று அவர்களின் பெற்றோர்கள் கூறும்போது, அவர்கள் முறுமுறுக்கின்றனர் மற்றும் சிலவேளைகளில் தங்கள் பெற்றோர்களுடன் விவாதம் செய்கின்றனர். நாம் நமது பரலோக பிதாவின் அறிவுறுத்துதல்களுக்குக் கீழ்ப்படிவதில் அதிகம் பக்குவமானவர்களாக இருக்க வேண்டும் என்று பவுல் விரும்பினார்.

"எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்" என்ற புத்திமதி, பொதுவான நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டுள்ளது; ஆனால் சந்தர்ப்பப்பொருளில் இது, கர்த்தருக்கு ஊழியம் செய்தலை விசேஷமாகக் குறிக்கிறது. எஜமானருடைய ஊழியத்தில் செயல் துடிப்பாக இருக்கும் சிலர், தொடர்ந்து முறுமுறுத்தல் மற்றும் முறையிடுதலினால் தங்கள் முயற்சிகளைப் பாழாக்குகின்றனர். நாம் தேவனுக்கு ஊழியம் செய்யும்போது, நமது முறுமுறுத்தலைத் தேவன் எவ்வாறு கண்ணோக்குகிறார்? உங்களுக்கு யாரேனும் ஒருவர், ஒரு பரிசை - ஒருவேளை அது உங்கள் மனதை ஈர்க்கக்கூடிய பரிசாக, நீங்கள் எப்போதுமே பெற்றிருக்க விரும்பிய ஒரு பரிசாக இருக்கலாம் - கொடுப்பதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். இருப்பினும் அதை அவர் கொடுக்கையில், அதன் விலை பற்றி அவர் முறையிட்டார் அல்லது உங்களுக்கு எதையும் கொடுக்காது இருக்க தேர்ந்துகொண்டதாகச் சுட்டிக்காட்டினார் என்று கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் எவ்வாறு உணருவீர்கள்? நீங்கள் அனேகமாக, அவர் தரும் அப்பரிசை அவரே வைத்துக்கொள்ளும்படி கூறுவீர்கள்! தேவனுடைய தெய்வீக ஆணைகளைச் செயல்படுத்துகையில், நாம் முறுமுறுத்தல் மற்றும் முறையிடுதலைச் செய்யும்போது, கர்த்தர் எவ்வாறு உணருவார் என்பதை கற்பனைசெய்ய முயற்சி செய்யுங்கள். நாம் மனப்பூர்வமாக ஊழியம் செய்ய வேண்டும்.

குற்றமற்ற வகையில் செயல்படுங்கள்! (2:14, 15)

அடுத்ததாக, நாம் *குற்றமற்ற* வகையில் ஊழியம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். பவுல், "எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்" (வசனம் 16) என்று கூறுவதற்கு முன்பு, அவர் "ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப்பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு" என்று கூறியிருந்தார் (வசனங்கள் 14ஆ, 15).

சமீபத்தில் நான், எனது வீட்டில் பழுது நீக்கும் பணியைச்செய்வதற்குப் பல மனிதர்களுக்கு கூலி கொடுத்தேன். நம்பிக்கைக்குப் பாத்திரமான ஊக்கமான மற்றும் திறமைவாய்ந்தவர்களாக இருந்த பணியாளர்களை வேலைக்கு அமர்த்த நான் விரும்பினேன் - ஆனால் அவர்களின் சொந்த வாழ்வைப் பற்றிச் சிறிதளவே நான் அறிந்திருந்தேன். உலகப்பிரகாரமான பல பணிப்பொறுப்புகள், தேவபக்தி இல்லாத மனிதர்களால், அவர்களின் ஆவிக்குரிய தன்மையிலுள்ள குறைபாடு அவர்கள் வேலையைப் பாதிக்காத வகையில் செய்யப்பட முடியும். ஆவிக்குரிய பணிப்பொறுப்புகளைப் பொறுத்தமட்டில் இது உண்மையாயிருப்பதில்லை. பண்பில் உள்ள எந்தக் குறைபாடும் இயேசுவின் நாமத்தில் செய்யப்படும் முயற்சிகளை அழித்துப் போடுகிறது.

நாம் கொண்டிருக்கத் தேவையான பண்பின் வகை என்ன? முதலில் பவுல், நாம் "குற்றமற்றவர்களாக" இருக்க வேண்டியது அவசியம் என்று கூறினார் (வசனம் 15). "குற்றமற்றவர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, 1:11ல் "இடறலற்றவர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே வார்த்தையாக இருப்பதில்லை, இவற்றின் அர்த்தம் ஒன்றுபோல் இருப்பினும் இவைகள் மாறுபட்ட வார்த்தைகளாக உள்ளன. இங்கு நாம் "முறையிடுதலுக்குக் காரணம் அல்லது அதன் அடிப்படைத்தளம்" என்று அர்த்தப்படும் வார்த்தை ஒன்றைக் கொண்டிருக்கிறோம், இது எதிர்மறை முன்னிடைச்சொல்லைக் கொண்டுள்ளது. *Amemptos* என்ற வார்த்தையின் ஒரு வடிவமானது *memtos* (*memphomai* லிருந்து, "குற்றம் கண்டுபிடிக்க") என்பதை a என்ற முன்னிடைச் சொல்லுடன் சேர்ந்து இணைக்கிறது.[15] இவ்வார்த்தை "குற்றமில்லாதிருத்தல்" என்று அர்த்தப்படக்கூடும். தேவன் தமது கிருபையின் மூலமாக நம்மை மன்னிக்கும் போதுதான் நாம் அவருடைய பார்வையில் உண்மையிலேயே "குற்ற மற்றவர்களாக" இருக்க முடியும். இருப்பினும் இவ்வசனப்பகுதியில், "விமர்சனத்தின் விரல் நம்மை நோக்கிச் சுட்டிக்காட்டக் கூடாதபடியான வாழ்வை வாழுதல்" என்பதற்கான குறிப்பு உள்ளது.[16]

பின்பு பவுல், எதிர்பாராத ஒரு வார்த்தையைக் கூடுதலாகக் கூறினார்: "கபடற்றவர்கள்," இன்றைய நாட்களில் பலர், கபடற்ற தன்மையை மிக உயர்வாக மதிப்பிடுவதில்லை. இது அறியாமையில் இருத்தல், அனுபவமற்று இருத்தல் மற்றும் எளிமையாயிருத்தல் ஆகியவற்றுடன் சமானப்படுத்தப்படுகிறது. இருந்தபோதிலும், நாம் "புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய்" இருக்க வேண்டும் என்று கர்த்தர் நம்மிடத்தில் விரும்புகிறார் (மத்தேயு 10:16). பிலிப்பியர் 2:15 மற்றும் மத்தேயு 10:16 ஆகிய இரு வசனங்களிலும், "கபடற்றவர்கள்" என்பதற்கான வார்த்தையானது, எதிர்மறை முன்னிடைச்

சொல்லான a என்பதும் "கலக்க" என்று அர்த்தப்படுகிற *kerannumi*, என்ற சொல்லும் இணைந்து பெறப்பட்ட *akeraios* என்ற கிரேக்க வார்த்தையின் வடிவமாக உள்ளது. இது "கலக்கப்படாத" என்று அர்த்தப்படுகிறது. இது கிரேக்கர்களால், தண்ணீர் கலக்கப்படாத திராட்சை மதுவை அல்லது மற்ற உலோகங்கள் கலக்கப்படாத உலோகத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.[17] நமது வேதவசனப் பகுதியில் இது, கர்த்தர் வேண்டிக்கேட்கிற இருதயத்தின் வகையை விவரிக்கிறது: நல்ல அதாவது பொல்லாங்கு கலக்கப்படாத இருதயம். NIV மற்றும் CJB வேதாகமங்களில் "தூய்மை" என்றுள்ளது. நாம் புறம்பாக நல்லவர்களாக ("குற்றமற்றவர்களாக") இருந்தால் மாத்திரம் போதாது, ஆனால் உள்ளாகவும் நல்லவர்களாக ("கபடற்றவர்களாக") இருக்க வேண்டும்.

குற்றமற்றவர்களாக மற்றும் கபடற்றவர்களாக இருத்தலின் பண்புகள் "மாசற்ற" என்ற வார்த்தையில் தொகுத்துரைக்கப்படுகின்றன. "மாசற்ற" என்பது "குற்றம்," "தவறு," "ஏளனம்செய்தல்," அல்லது "கனவீனப்படுத்துதல்" என்பதற்கான *momos* என்ற வார்த்தையுடன் *a* என்ற எதிர்மறை முன்னிடைச் சொல்லை இணைத்துப் பெறப்பட்ட ஒரு தனி கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[18] நாம் உலகத்தாரால் ஏளனம் செய்யப்படும்படியாகக் கிறிஸ்துவின் மார்க்கத்தை உயர்த்திப் பிடிக்கும் எதையும் செய்துவிடக்கூடாது. யாரேனும் ஒருவர் "ஆனால் பவுல் இந்த உலகத்தை 'கோணலும் மாறுபாடுமான' தென்று விவரித்திருக்கிறாரே. பாவம் நிறைந்த, தேவபக்தி இல்லாத உலகம் என்ன நினைக்கிறது என்பது என்ன வேறுபாட்டை ஏற்படுத்திவிடப்போகிறது?" என்று மறுப்புரை தெரிவிக்கலாம். நாம் நல்ல விஷயங்களுக்காக உலகத்தின் செல்வாக்கை ஈட்ட முயற்சிப்பதால், இது ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. நாம் மக்கள் இருளின் அதிகாரத்தில் இருந்து புறப்பட்டு வெளிவந்து ஒளியின் இராஜ்யத்திற்குள் வர வேண்டும் என்று விரும்புவதால், இது ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது (காண்க கொலோசெயர் 1:13).

விவசாயத் தொழிற்கல்வி ஆசிரியராக இருந்த என் தந்தையார், ஆக்லஹாமா நகரில் நடந்த ஆக்லாஹாமா மாகாணக் கண்காட்சியில் முதன்முறையாக என்னை விட்டுச் சென்ற நிகழ்ச்சி இன்னும் என் நினைவில் உள்ளது. பிற்பாடு தங்கள் வகைகளில் மிகச்சிறந்தவை என்ற பரிசுகளுக்காகப் போட்டியிட வேண்டியிருந்த எங்கள் பண்ணை விலங்குகளுடன் தங்கியிருக்கும்படி, என்னையும் மற்ற மாணவர்களையும் அவர் அழைத்து வந்திருந்தார். தமது வகுப்புகளில் போதிப்பதற்காக அவர் தென்மேற்கு ஆக்லஹாமாவுக்குத் திரும்புகையில், அந்தக் கண்காட்சியில் அவர் எங்களைப் பலநாட்கள் விட்டுச்சென்றார்; போட்டிகள் தொடங்குவதற்குச் சற்று முன்னர் அவர் திரும்பவும் வந்து எங்களுடன் இணைந்து கொள்வதாக இருந்தார். அவர் புறப்பட்டுச் செல்லத் தயாரானபோது, "ரோப்பர்" என்ற பெயர் தைக்கப்பட்டிருந்த எனது மேற் சட்டையைச் சுட்டிக்காண்பித்து, "அது எனது பெயரும்கூட என்பதை மறந்துவிடாதே" என்று கூறினார். அவரது அர்த்தம் தெளிவாக இருந்தது; அவர் இல்லாத போது நான் செய்யும் எந்த ஒரு செயலும், என்மீது மாத்திரமல்ல, ஆனால் அவர் மீதும் பிரதிபலிக்கும், அது போலவே நாம் செய்யும் எந்தச் செயலும் நமது பிதாவின்மீது பிரதிபலிக்கிறது - அது சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ இருக்கலாம். ஆகையால், நாம் "எல்லா மனுஷருக்கு முன்பாவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்"

(ரோமர் 12:17) என்பதை மறக்கலாகாது.

நாம் இழித்துரைக்கப்படுவதற்கு மேலானவர்களாக இருந்தால், நாம் "சுடர்களாக" பிரகாசிப்போம். NASB வேதாகமம், பிலிப்பியர் 1:14ன் மீது பின்வரும் குறிப்பைக் கொண்டுள்ளது: "அல்லது ஒளிவீசுபவைகள், நட்சத்திரங்கள்." "சுடர்கள்" என்பதற்கான கிரேக்க வார்த்தை, செப்துவஜிந்த் வேதாகமத்தில் வானத்தில் உள்ள சுடர்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது: சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் (காண்க ஆதியாகமம் 1:14-18). எனது சிந்தையானது ஆக்லஹாமாவின் கோடை காலத்தில் வெதுவெதுப்பாக இருந்த இரவுகளை நோக்கிப் பின் செல்லுகிறது. நான் கிராமப்புறத்தில் வாழ்ந்தேன் மற்றும் பொதுவாக கோடைகாலத்தில் வெளிப்புறத்தில் படுத்துறங்கினேன். உறக்கம் வரும் வரைக்கும் நான் நட்சத்திரங்களை- வானத்தின் கறுப்பு விரிவின் குறுக்கே சிதறியடிக்கப்பட்டிருந்த சுடர்களின் ஒளிமிக்க முனையங்களை - உற்று நோக்குவதுண்டு.

"கோணலும் மாறுபாடுமான சந்ததி" என்பதே 14ம் வசனத்தில் உள்ள "சுடர்களுக்கு" இருளான பின்புலமாக உள்ளது. "கோணல்" என்பதற்குப் பதிலாக, CJB வேதாகமத்தில் "பிறழ்வுபட்ட" என்றுள்ளது. "மாறுபாடு" என்பதற்கு பதிலாக NIV வேதாகமத்தில் "சீர்கெட்ட" என்றுள்ளது. பழைய ஏற்பாட்டில், கலகம் செய்த இஸ்ரவேல் மக்களைக் குறிப்பதற்கு இதே சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது (உபாகமம் 32:5). சில வேளைகளில் நான், இன்றைய நாட்களில் உலகத்தில் கொந்தளித்துப் பொங்கும் துன்மார்க்கத்தினால் மூழ்கடிக்கப்பட்டதாக உணருகிறேன், ஆனால் உலகம் *எப்போதுமே* "கோணலும் மாறுபாடுமாக" இருந்துள்ளது என்று எனக்கு நானே நினைவூட்டிக்கொள்கிறேன் (காண்க மத்தேயு 17:17; நடபடிகள் 2:40). மேலும் இந்த உலகமானது "கோணலும் மாறுபாடுமாக" இல்லாதிருந்தால் "எனது இந்தச் சிறிய வெளிச்சம்" தேவையில்லாதிருக்கும் என்பதையும் எனக்கு நானே நினைவூட்டிக்கொள்கிறேன்.[19] சூரியனின் ஒளிவீசும் கதிர்கள் சுற்றிலும் பிரகாசிக்கும்போது, ஒரு விளக்கு தேவைப்படுவதில்லை. இந்த உலகம் எவ்வளவு இருளாகிறதோ, அவ்வளவுக்கு நமது "சுடர்களுக்கான" தேவை அதிகமாகிறது - மற்றும் அந்த "சுடர்கள்" அதிகமாகப் பிரகாசிப்பதாகத் தோன்றும்.

உறுதியாகச் செயல்படுங்கள்! (2:14)

நாம் *உறுதியாக* ஊழியம் செய்ய வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். 14ம் வசனத்தில் தொடங்கிய வாக்கியம் இன்னும் முடிக்கப்படவில்லை. பிலிப்பியர்களை "சுடர்களைப்போல பிரகாசிக்க" அறைகூவல் விடுத்த பவுல், அவர்கள் "ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு" இருக்க வேண்டும் என்றும் கூறினார் (வசனம் 14ஆ). "சுடர்" என்ற ஒப்புவமையானது நட்சத்திரங்களில் இருந்து கையில் பிடித்துச் செல்லப்படும் விளக்கு என்பதற்கு மாறுகிறது. யாரோ ஒருவர் கைவிளக்கு ஒன்றை இறுகப் பிடித்துக் கொண்டு செல்வதை நான் சித்தரிக்கிறேன். சந்தர்ப்பப் பொருளில் இங்கு, *மற்றவர்களுக்கு* வழியைக் கண்டறிய வெளிச்சம் காட்டுவதன் மீது - இந்த உலகத்தில் உள்ளவர்கள் வழியைக் கண்டறிய உதவுவதன் மீது - வலியுறுத்தம் உள்ளது. "பிடித்துக்கொண்டு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது, "பிடித்துக்கொண்டு முன்சென்று" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும்.[20] இரு கருத்துக்கள் ஒன்று கலக்கப்பட

முடியும்: வெளிச்சத்தை மற்றவர்கள் கண்டு அதைப் பின்பற்றக்கூடும்படிக்கு நாம், அந்த வெளிச்சத்தை இறுக்கமாகப் பிடித்துக்கொள்ள வேண்டும்.

"ஜீவ வசனத்தை" நாம் உறுதியாகப் பிடித்துக் கொள்ளவேண்டும். "ஜீவ வசனம்" என்பது தேவனுடைய வசனமாக உள்ளது. சங்கீதக்காரர், தேவனுடைய வசனம் தமது பாதைக்கு வெளிச்சமாக உள்ளது என்று கூறினார் (சங்கீதம் 119:105). இது ஆவிக்குரிய ஜீவனைக்கொடுப்பதால், "ஜீவ வசனம்" என்று அழைக்கப்பட்டுள்ளது. NCV வேதாகமம் இதை, "ஜீவனைக் கொடுக்கும் போதனை" என்று அழைக்கிறது. இயேசு, "ஜீவ வார்த்தை" என்று அழைக்கப்பட்டுள்ளதைச் சில எழுத்தாளர்கள் சுட்டிக் காண்பிக்கின்றனர் (1 யோவான் 1:1). மீண்டுமாக, இரு கருத்துக்களுக்கும் இடையில் சிறு வேறுபாடே உள்ளது. இயேசுவை வெளிப்படுத்துகிற, புதிய ஏற்பாட்டை நாம் பிடித்துக் கொண்டு முன் செல்லாமல், இயேசுவை ஜீவ வசனம் என்ற வகையில் நாம் பிடித்துக் கொண்டு முன்செல்ல முடியாது. நாம் வசனத்தை எவ்வாறு உறுதியாய்ப் பிடித்துக்கொள்கிறோம் - அல்லது பிடித்து முன்செல்லுகிறோம்? நமது வாழ்வினால் (மத்தேயு 5:14-16), ஆனால் நமது உதடுகளினாலும் அதைச் செய்கிறோம் (மத்தேயு 28:18-20). பேட் ஹாரல் என்பவரின் கூற்றுப்படி, "இவ்விடத்தில் பவுல் பிலிப்பியர்கள் பிரசங்கிப்பதில் கடும் உழைப்பாளிகளாக இருக்க வேண்டும் என்று புத்திகூறுகிறார்"[21] - மற்றும் நான் இவ்விடத்தில் "போதிப்பதில்" என்பதையும் கூட்டுவேன்.

பவுல் தமது வாசகர்கள் உறுதியாக நிலைத்திருப்பதற்கு மற்ற ஊக்குவிப்பையும் கொடுத்தார்: "நான் வீணாக ஓடினதும் வீணாக பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு" (வசனம் 14அ). "கிறிஸ்துவின் நாள்" என்பது கிறிஸ்துமறுபடியும் வந்து ஒவ்வொருவரையும் நியாயந்தீர்க்கும் நாளைக் குறிக்கிறது. அந்த நாளில் அப்போஸ்தலர் "மகிழ்ச்சி அடையக் காரணம்" கொண்டிருக்க - அல்லது NIV வேதாகமம் கூறுகிறபடி, "மேன்மை பாராட்ட" காரணம் கொண்டிருக்க - விரும்பினார். பவுல் தம்மைக் குறித்து மேன்மை பாராட்ட விருப்பம் கொண்டிருந்ததில்லை (காண்க கலாத்தியர் 6:14), ஆனால் அவர் பிலிப்பியர்களைக் குறித்து - அவர்கள் முடிவு பரியந்தம் எவ்வாறு உறுதியுடனும் விசுவாசத்துடனும் இருந்தனர் என்று - மேன்மை பாராட்ட விரும்பினார்.

அவர்கள் அப்படி இருந்தால், பவுல் தாம், "வீணாக ஓடினதும் வீணாக பிரயாசப்பட்டதுமில்லை" என்று அறிவார். அந்தக் கூற்றில் இரு ஒப்புவமைகள் காணப்படுகின்றன. இவற்றில் முதலாவது, ஒரு போட்டியில் பங்கேற்று தனது முயற்சிகள் யாவையும் வீணானவையாக மாத்திரம் கண்ட ஒரு ஓட்டப் பந்தய வீரன் என்ற ஒப்புவமையாகும். அந்த ஓட்டப்பந்தய வீரன் "வீணாக" ஓடியிருந்தான். இரண்டாவது, சந்தைப் படுத்த இயலாத ஒரு பொருளைச் செய்வதற்குக் கடினமாக உழைத்த ஒரு தொழிலாளி என்ற ஒப்புவமையாகும். பவுல் கூடாரம் செய்பவராக இருந்ததால் (நடபடிகள் 18:2, 3) ஒருவேளை அவர், கூடாரத்துணியை நெய்வதற்குத் தேவையான திறமை மற்றும் முயற்சி ஆகியவற்றைத் தமது சிந்தையில் கொண்டிருக்கலாம். அப்போஸ்தலர் எந்த விதமான "பிரயாசத்தை" தமது சிந்தையில் கொண்டிருந்தாலும், அவரது விவரிப்பில் அது "வீணானதாக" இருந்தது. இவ்வசனப் பகுதியில் பவுல் தாம்

இரட்சிக்கப்படுவாரா அல்லது இழந்துபோகப்படுவாரா என்பது பற்றி [பிரதான] அக்கறை கொண்டிருக்கவில்லை என்பதைக் கூற நான் துரிதப்பட என்னை அனுமதியுங்கள். அவரது இரட்சிப்பைப் பொறுத்த மட்டில் அவர் உறுதியான நம்பிக்கையுடன் இருந்தார் (பிலிப்பியர் 1:21, 23). மாறாக அவர் பிலிப்பியர்கள் மீது தாம் செலவிட்டிருந்த நேரமும் சக்தியும் வீணாய்ப்போகவில்லை என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள விரும்பினார்.

பவுலின் அக்கறையை நான் புரிந்துகொள்கிறேன். நான் போதித்திருக்கிறவர்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்கிறார்கள் என்பதற்காக நான் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன், ஆனால் மற்றவர்கள் மாறுபாடுள்ளவர்கள் ஆகியிருத்தல் அல்லது விசுவாசத்தை விட்டு விலகிச் செல்லுதல் பற்றி நான் வருத்தத்தினால் நிரப்பப்படுகிறேன். இவர்களில் சிலருடன் நான் மணிக்கணக்கில் செலவிட்டு, தனிப்பட்ட வகையில் அவர்களுக்குப் போதித்து அவர்கள் தொடர்ந்து நிலைத்திருக்கும்படி அவர்களை ஊக்குவித்திருக்கிறேன். எனக்கு நெருக்கமான யாரேனும் ஒருவர் கர்த்தருடனும் அவருடைய மக்களுடனும் சரியான உறவில் இல்லை என்ற வார்த்தையைப் பெற்றுக் கொள்வதைக் காட்டிலும் என்னைச் சீரழிப்பது வேறு எதுவுமில்லை. பிலிப்பியர்களிடம் செயல்விளைவில் பவுல், "உங்கள் ஊழியத்தில் நீங்கள் உறுதியாய் தொடாதிருந்தால், அது எனது இரட்சிப்பைப் பாதிக்காது - ஆனால் அது *என் இருதயத்தை உடைந்துபோகச்செய்யும்!*" என்றே கூறினார்.

சந்தோஷமாக செயல்படுங்கள்! (2:17, 18)

நமது வேதவசனப்பகுதியின் கடைசி வசனங்களில் பவுல், பிலிப்பியர்களிடத்தில் தாம் செய்திருந்த உழைப்பை *வீணாகாது* என்று தாம் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்ததாகச் சுட்டிக்காண்பித்தார். இவ்வசனப்பகுதி, திரும்பத் திரும்பக் குறிப்பிடப்படும் பாடக்கருத்தான, சந்தோஷமாயிருத்தல் என்பதன் மீதான வலியுறுத்தத்துடன் முடிகிறது; "சந்தோஷம்" என்பதற்கான கிரேக்க வார்த்தை 17 மற்றும் 18 வசனங்களில் நான்கு முறை காணப்படுகிறது. ("சந்தோஷம்" மற்றும் "மகிழ்ச்சி" ஆகிய வார்த்தைகள் ஒரே கிரேக்க வேர்வார்த்தையில் இருந்து வருகின்றன.) நமது ஊழியம் உட்பட - சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும் நாம் மகிழ்ச்சி நிறைந்தவர்களாயிருக்க வேண்டும்.

ரால்ஃப் மார்ட்டின் என்பவர், 17 மற்றும் 18 ஆகிய வசனங்களை, "இந்த நிருபம் முழுவதிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தனிப்பட்ட குறிப்பு" என்று அழைத்தார்:[22] "மேலும், உங்கள் விசுவாசமாகிய பலியின்மேலும் ஊழியத்தின்மேலும் நான் வார்க்கப்பட்டுப்போனாலும், நான் மகிழ்ந்து, உங்களனைவரோடுங்கூடச் சந்தோஷப்படுவேன். இதினிமித்தம் நீங்களும் மகிழ்ந்து, என்னோடேகூடச் சந்தோஷப்படுங்கள்."

இவ்வசனங்களில் பவுல், பலி செலுத்தும் ஒரு ஆசாரியர் என்ற ஒப்புவமையைப் பயன்படுத்தினார். அவர் தம்மைப் பற்றி, "பானபலியாக வார்க்கப்பட்டு" இருத்தல் என்று பேசுவதில் தொடங்கினார். மூலமொழி வசனத்தில் "ஊற்றப்படுதல்" என்பதே நேரடி அர்த்தமாக உள்ளது. ஆனால் இவ்விடத்தில் உள்ள வினைச்சொல்லானது, பானபலியை ஊற்றுதல் அல்லது தேவனுக்குப் படைக்கப்படும் பானபலி என்பதைக் குறிப்பிடப் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டது.[23] பானபலிகள் என்பவை, புறதெய்வ வணக்கம் மற்றும்

யூதருடைய பலிகளில் பொதுவானவைகளாக இருந்தன. (யூதர்களுடைய பலிகள் பற்றிய விபரங்களுக்கு பின்வரும் வசனப்பகுதிகளை காணவும், எண்ணாகமம் 15:5, 7, 10; 28:7, 14; ஓசியா 9:4.) பவுல் உடனடி மரணம் என்ற மிகவும் உண்மையான சாத்தியக்கூறு பற்றி குறிப்பிட்டார். பிற்பாடு அவர், ரோமாபுரியில் தமது இரண்டாவது சிறைவைப்பின்போது, தமக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட பின்பு, இதே சொற்றொடராக்கத்தைப் பயன்படுத்தினார் (2 தீமோத்தேயு 4:6). பவுல் தமது மரணத்தின் சாத்தியக்கூறு தமது சிந்தையில் எவ்வளவு தெளிவாக இருந்தது என்று சுட்டிக்காண்பிக்க இதில் நிகழ்காலத்தைப் பயன்படுத்தினார். இருப்பினும் அப்போஸ்தலர் - தமது தலையானது தமது உடலில் இருந்து துண்டிக்கப்படும் என்ற - ரோமத்தண்டனையைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தபோது, அவர் பயங்கர நினைவில் அல்ல ஆனால் கனப்படுத்தப்படும் நினைவிலேயே வாசம் செய்தார். சிந்தப்படும் தமது இரத்தம் தேவனுக்கு முன்பாகப் பானபலியாக ஊற்றப்படும் என்று அவர் நினைத்தார்.

பவுல், பிலிப்பியரின் விசுவாசமாகிய பலியின்மேலும் ஊழியத்தின் மேலும் தாம் “பானபலியாக” வார்க்கப்பட்டுப் போவதைப் பற்றிப் பேசுவதன் மூலம், ஆசாரியத்துவ ஒப்புவமையைத் தொடர்ந்தார். NIV வேதாகமத்தில், “உங்கள் விசுவாசத்தில் இருந்து வருகிற பலி மற்றும் ஊழியம்” என்றுள்ளது. “பிலிப்பியர்களின் ‘விசுவாசம்’ என்பது, அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவர்மீது நம்பிக்கை வைத்ததை மாத்திரமல்ல, ஆனால் அவர்களின் விசுவாசம் வெளிப்படுத்தப்பட்ட கிரியைகள் மற்றும் ஒப்புக்கொடுத்தல் எல்லாவற்றையும் அர்த்தப்படுத்தியது.”[24] பவுல், பிலிப்பியர்களின் கீழ்ப்படிதல் உள்ள விசுவாசத்தை, தேவனுக்குச் செலுத்தப்பட்ட பலியாகக் கண்ணோக்கினார் (காண்க ரோமர் 12:2; பிலிப்பியர் 4:18; எபிரேயர் 13:15, 16). அவரது சிந்தையில், அவரது மரணம் என்ற பானபலி அவர்களின் வாழ்வு என்ற பலியுடன் ஒன்றுகலந்திருந்தது - மற்றும் அது எல்லாமே கர்த்தருக்குச் செலுத்தப்பட்ட பலியாக இருந்தது.

பவுல் தமது மரணத்தைப் பற்றி ஆழந்து சிந்திக்கையில், இது அவர் புலம்பக் காரணமாக இருந்ததா? இல்லை, அது சந்தோஷப்படக் காரணமாக இருந்தது: “மேலும், உங்கள் விசுவாசமாகிய பலியின்மேலும் ஊழியத்தின்மேலும் நான் வார்க்கப்பட்டுப்போனாலும், நான் மகிழ்ந்து, உங்களனைவரோடுங்கூடச் சந்தோஷப்படுவேன்” (பிலிப்பியர் 2:17). அவர் கொலைசெய்யப்பட்டால், அவர் கர்த்தருடன் இல்லத்தில் இருக்கச் செல்வார் (1:23). இருப்பினும் தமது மரணம் பிலிப்பியர்களைக் கவலைப்படுத்தும் என்று அவர் அறிந்திருந்தார். பிலிப்பியர் 2:26, 28ல் மறைமுகமாய் உணர்த்தப்பட்டபடி, எப்பாப்பிராதீத்து வியாதிப்பட்டு இருந்ததை கேள்விப்பட்டு, அவர்கள் கவலைப்பட்டிருந்தனர் என்றால், அப்போஸ்தலரின் மரணம் பற்றிய செய்திக்கு அவர்கள் எவ்வாறு பதில் செயல் செய்வார்கள்? ஆகவே அவர்களும் சந்தோஷமாக இருக்கும்படி அவர் வேண்டிக்கொண்டார்: “இதினிமித்தம் நீங்களும் மகிழ்ந்து, என்னோடேகூடச் சந்தோஷப்படுங்கள்.” NIV வேதாகமத்தில், “எனவே நீங்களும்கூட என்னோடே மகிழ்ந்து சந்தோஷப்படவேண்டும்” என்றுள்ளது.

நமது வேதவசனப் பகுதியானது, பகிர்ந்துகொள்ளப்பட்ட சந்தோஷத்தின் மீதான குறிப்புடன் முடிகிறது. கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமக்கு என்ன நடந்தாலும், நாம் சந்தோஷப்பட வேண்டும் (காண்க சங்கீதம் 118:24) என்ற சிந்தனையுடன், வேலை பற்றிய இந்த விவரிப்பை நான் முடிக்க விரும்புகிறேன்.

நாம் நமது கவலையான தருணங்களைக் கொண்டிருப்போம் - பவுலும்கூட அப்படிப்பட்ட தருணங்களைக் கொண்டிருந்தார் (பிலிப்பியர் 3:18; 2 கொரிந்தியர் 2:4) - ஆனால் சந்தோஷம் என்பது நமது அடிப்படை நிலைப்பாடுகளில் ஒன்றாக இருக்கவேண்டும். ஒருமுறை ஒரு பேச்சாளர். கிறிஸ்தவர்கள் ஆடு மேய்க்கும் நாய்கள் (மேய்ப்பர்களுக்கு உதவப் பயற்றுவிக்கப்பட்ட நாய்கள்) போன்று இருக்க வேண்டும் என்று கூறினார். உரையைக் கேட்டவர்களில் ஒருவர், அதற்கு விளக்கம் கேட்டார். அதற்கு அந்தப் பேச்சாளர், "சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும் - அது வெப்பமாகவோ அல்லது குளிராகவோ, ஈரமாகவோ அல்லது உலர்ந்தோ எப்படியிருந்தாலும் - மற்றும் வேலையானது கடினமாகவோ அல்லது சுலபமாகவோ எப்படியிருந்தாலும், ஆடுமேய்க்கும் நாய் தனது எஜமானர் கட்டளையிடும் எல்லாவற்றையும் செய்கிறது. அது பாராட்டப்படத் தக்கது. ஆனால் ஆடுமேய்க்கும் நாய் தனக்குத் தரப்பட்ட வேலையை முடித்த பின்பு, தனது எஜமானரிடத்திற்குத் - *தனது வாலை ஆட்டிக் கொண்டு* - திரும்பிவருகிறது. இதுவே நான் அந்த நாயினிடத்தில் மிகவும் விரும்புகிற குணமாகும்" என்று கூறினார்! நாம் மிகவும் சந்தோஷமாக ஊழியம் செய்வது அவசியமாக உள்ளது.

முடிவுரை

நாம் யாவரும் செய்ய வேண்டிய ஊழியத்தைத் தேவன் நமக்குக் கொடுத்துள்ளார். அதை நாம் செய்ய வேண்டிய விதம் பற்றி அவர் விரும்புவது என்ன? பயபக்தியுடன், உறுதியான நம்பிக்கையுடன், மனப்பூர்வமாக, குற்றமற்ற வகையில், உறுதியாக மற்றும் சந்தோஷமாகச் செய்ய வேண்டும். அதைப் போன்ற ஊழியமானது நமது வாழ்வை வளப்படுத்தி நமது பிதாவை மகிமைப்படுத்தும்!

குறிப்புகள்

[1]Pat Edwin Harrell, *The Letter of Paul to the Philippians,* The Living Word Commentary series, ed. Everett Ferguson (Austin, Tex.: R. B. Sweet Co., 1969), 97-98. [2]Maxie D. Dunnam, *Galatians, Ephesians, Philippians, Colossians, Philemon,* The Communicator's Commentary, ed. Lloyd J. Ogilvie (Waco, Tex.: Word Books, 1982), 285. [3]Manford George Gutzke, *Plain Talk on Philippians* (Grand Rapids, Mich.: Lamplighter Books, Zondervan Publishing House, 1973), 104. [4]Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* abr., ed. Gerhard Kittle and Gerhard Friedrich, trans. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 421. [5]*Katergazomai* என்று வார்த்தை *kata* என்ற முன்னிடைச் சொல்லை "கிரியை" என்பதற்கான (*ergazomai* என்ற) வினைச் சொல்லின் செயலுக்கு வலுவூட்டுகிறது (*The Analytical Greek Lexicon* [London: Samuel Bagster & Sons, Ltd., 1971], 223; W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III with James A. Swanson [Minneapolis: Bethany House Publishers, 1984], 1244). [6]William Barclay, *The Letters to the Philippians, Colossians, and Thessalonians,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 41. [7]Charles R. Erdman, *The Epistle of Paul to the Philippians* (Grand Rapids, Mich.: Baker Book House, 1983), 89. [8]Harrell, 97. [9]Erdman, 90. [10]இன்றைய நாட்களில் சிலர், ஒருவர் இரட்சிக்கப்படுவதற்குத் தாம் எதையும்

செய்யத் தேவையில்லை என்று முடிவு செய்யும் அளவுக்குத் தேவனுடைய கிருபையை வலியுறுத்தியிருக்கின்றனர்.

[11]Erdman, 90. [12]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 81. [13]Vine, 314. [14]Bromiley, 156. [15]*Analytical Greek Lexicon*, 18, 263. [16]Ralph P. Martin, *The Epistle of Paul to the Philippians,* rev. ed., Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 118. [17]Vine, 526. [18]*Analytical Greek Lexicon,* 19, 274. [19]*"என் சிறு வெளிச்சம்" என்பது அமெரிக்கா மற்றும் பிற இடங்களில் குழந்தைகளால் பாடப்படும் ஒரு பாடலாக உள்ளது. மத்தேயு 5:14-16 மற்றும் பிற வசனப்பகுதிகள், தேவனை மகிமைப்படுத்துவதற்கு நாம் சுடர்களாகப் பிரகாசிக்க வேண்டியதன் அவசியம் பற்றிப் பேசுகின்றன.* [20]NASB *வேதாகமத்தில் "பிடித்துக்கொண்டு" என்பதற்குப் பின்வரும் குறிப்பு உள்ளது: "அல்லது முன்சென்று."* KJV *மற்றும்* ASV *ஆகிய வேதாகமங்கள் உட்படப் பல மொழிபெயர்ப்புகளில் "பிடித்துக்கொண்டு" என்பதற்குப் பதில் "முன்சென்று" என்றே உள்ளது.*

[21]Harrell, 100. [22]Martin, 122-23. [23]Harrell, 101. [24]Erdman, 93.

9

"ஒரு சில நல்ல மனிதர்கள்"

[பிலிப்பியர் 2:19-30]

அமெரிக்க நாட்டின் கடற்படை கார்ப் என்ற படைப்பிரிவு (இது அமெரிக்க நாட்டின் ஆயுதப்படைகளின் ஒரு கிளையாகும்) "ஒரு சில நல்ல மனிதர்கள்" தேவை என்று விளம்பரம் செய்கிறது. "ஒரு சில நல்ல மனிதர்களுக்கான தேடுதல்" என்பது படையின் இந்தப் பிரிவில் தொடங்கவோ அல்லது இதனுடன் முடிவுபெறவோ இல்லை. பழங்காலத் தத்துவஞானி ஒருவர், எரியும் லாந்தர் விளக்குடன் வெளிச்சமான பகல் வேளையில் தெருக்களில் இங்கும் அங்கும் தேடி நடந்த வரலாற்றைப் பற்றிக் கூறப்படுகிறது. அவர் என்ன செய்துகொண்டிருந்தார் என்று அவரிடத்தில் கேட்கப்பட்டபோது அவர், "நான் ஒரு நேர்மையான மனிதனைத்தேடிக்கொண்டிருக்கிறேன்" என்று பதில் அளித்தார்.[1] தீர்க்கதரிசியான எசேக்கியேலிடம் கர்த்தர், "நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்" என்று கூறினார் (எசேக்கியேல் 22:30). கர்த்தருடைய சபையில் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஊழியம் செய்திருக்கும் ஒருவன் என்ற வகையில் நான், "ஒரு சில நல்ல மனிதர்கள்" என்பதே நமது இன்றியமையாத தேவைகளில் ஒன்றாக உள்ளது என்று நம்புகிறேன். (பெண்களும் வலிவார்ந்த வகையில் முக்கியமானவர்களாகவே உள்ளனர்; இருப்பினும், கர்த்தருடைய சபையில் ஆண்களே நடத்துவத்தைச் செய்ய வேண்டும் என்று தேவன் சித்தம் கொண்டு இருப்பதால், கிறிஸ்தவ ஆண்கள் மீது தேவன் வைத்துள்ள மாபெரும் வலியுறுத்துதல் என்பது சில வேளைகளில் அவசியம் நிறைந்ததாக உள்ளது.) பிலிப்பியர் 2:19-30ல், நாம் இரண்டு நல்ல மனிதர்களைப் பற்றி வாசிக்கிறோம்: தீமோத்தேயு மற்றும் எப்பாப்பிரோதீத்து.

இதுவரையிலும் நாம் படித்து முடித்துள்ள வசனப் பகுதியில், பவுல் தாம் இறந்து போகலாம் என்று பல முறை குறிப்பிட்டார். அவர் தமது வாழ்வைப் பற்றி, "பானபலியாக வார்க்கப்படுகிறது" என்று பேசினார் (2:17). இந்தச் சாத்தியக்கூறு தமது வாசகர்களிடத்தில் வேதனையை உண்டாக்கும் என்று அவர் உணர்ந்து அறிந்தார், எனவே அவர்களை ஆறுதல்படுத்த வேண்டும் என்று அவர் முடிவு செய்தார். அவர்களிடத்தில் இரண்டு நல்ல மனிதர்களை அனுப்பப் போவதாகக் கூறிய இது அவர் செய்த ஒரு வழியாக இருந்தது - ஒருவர் உடனடியாகவும் (எப்பாப்பிரோதீத்து) இன்னொருவர் விரைவிலும் (தீமோத்தேயு) அனுப்பப்பட இருந்தனர். அப்போஸ்தலர் தமது திட்டங்களை வரைகுறிப்பிடுவதில், இந்த உடன் ஊழியக்காரர்களின் பண்பைப் பற்றிப் பாராட்டினார். அவரது குறிப்புகளில் இருந்து நாம், தேவன் தமது ஊழியத்தில் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய மனிதர்களின் வகையைப் பற்றி கற்றுக்கொள்கிறோம்.

சில வேளைகளில் நாம், "ஒரு உண்மையான மனிதர்" - என்ற சொல்விளக்கத்தைப் பின்வரும் தகுதிபடுத்துகிற சொற்றொடர்களுடன்

கேள்விப்படுகிறோம்: "ஒரு உண்மையான மனிதர் இதைச் செய்கிறார்" அல்லது "ஒரு உண்மையான மனிதர் இதை அல்லது அதைச் செய்யமாட்டார்." "ஒரு உண்மையான மனிதர்" பற்றிய உலகத்தின் விளக்கமானது நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது. ஒரு நாட்டிற்குள்ளும்கூட இது பகுதிக்குப் பகுதி வேறுபடுகிறது மற்றும் கிராமப்புறத்தில் இருந்து நகர்ப்புறத்திலும் இது வேறுபடுகிறது. நீங்கள் எங்கு வாழ்ந்தாலும், "ஒரு உண்மையான மனிதர்" என்பவருக்கு உலகத்தின் நிபந்தனையானது தேவனுடைய நிபந்தனை போன்று இருப்பதில்லை. இந்தப் பாடத்தில் நாம், அக்கறைப்படுகிற மற்றும் துணிவுள்ள "ஒரு சில நல்ல மனிதர்களை" தேவன் தேடுகிறார் என்பதைக் கற்றுக்கொள்வோம்.

அக்கறைப்பட்ட ஒரு மனிதர் (2:19-24)

நபர்

முதலில் பவுல், தீமோத்தேயுவைப் பற்றிப் பேசினார் (வசனம் 19). பவுலுக்கு, தீமோத்தேயுவைக் காட்டிலும் வேறு எவரும் அதிகம் விசேஷித்தவர்களாக இருக்கவில்லை. சுவிசேஷக ஊழியரான இந்த இளைஞர், பவுலின் நிருபங்களில் இருபத்தி ஐந்து முறைகளுக்கும் மேலாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். அனேகமாகத் தீமோத்தேயு ஒரு வாலிபவயது இளைஞராக இருந்தபோது அவரைப் பவுல் மனமாற்றி இருக்கலாம் (காண்க 1 கொரிந்தியர் 4:17) மற்றும் பிற்பாடு அவரைத் தமது சுவிசேஷப் பிரயாணங்களில் தம்முடன் பயணம் செய்யத் தேர்ந்தெடுத்து இருக்கலாம் (நடபடிகள் 16:1-4). இப்போது தீமோத்தேயு பவுலுடன் ரோமாபுரியில் இருந்துகொண்டு (பிலிப்பியர் 1:1) அவரது ஊழியத்தில் உதவினார்.

தீமோத்தேயுவின் ''உத்தமகுணத்தைப்'' பற்றி பிலிப்பியர்கள் அறிந்திருந்தாகப் பவுல் எழுதினார் (2:22ஆ). பிலிப்பி நகரில் தீமோத்தேயு பல வேளைகளில் இருந்திருந்தார். (காண்க நடபடிகள் 16:1, 3, 12; 19:22; 20:3, 4; 2 கொரிந்தியர் 1:1; 2:13; 9:2, 4. பிலிப்பி "மக்கெதோனியா தேசத்து நாடுகளில் ஒன்றாக" இருந்தது; நடபடிகள் 16:12.) பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் அவரை அறிந்திருந்தனர் மற்றும் அவரை மதித்திருந்தனர். அவர், "தகப்பனுக்குப் பிள்ளை ஊழியஞ்செய்வதுபோல, அவன் என்னுடனேகூட சுவிசேஷத்தினிமித்தம் ஊழியஞ்செய்தானென்று" பிலிப்பியர்கள் அறிந்திருந்ததாகப் பவுல் கூறினார் (பிலிப்பியர் 2:22). பவுல் விசுவாசத்தில் பெற்ற மகனாக தீமோத்தேயு இருந்தார் (1 கொரிந்தியர் 4:17; 1 தீமோத்தேயு 1:2; 2 தீமோத்தேயு 1:2; 2:1). அவர்கள் பக்கம் பக்கமாகப் பல ஆண்டுகளாக ஊழியம் செய்திருந்தனர், மற்றும் அந்த இளம் சுவிசேஷகர் பவுலின் இருதயத்திற்கு மிகவும் பிரியமானவராக இருந்தார்.

திட்டம்

இப்போது பவுல் தமது உடன் ஊழியக்காரரைப் பிலிப்பியர்களிடத்திற்கு அனுப்பத் திட்டமிட்டார்: "அன்றியும், நானும் ... சீக்கிரமாய்த் தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பலாமென்று கர்த்தராகிய இயேசுவுக்குள் நம்பியிருக்கிறேன்" (2:19). இது தீமோத்தேயு பவுலின் தூதுவர் என்ற வகையில் அனுப்பப்பட்ட முதலாவது வேளையாக இருந்திராது (காண்க 1 கொரிந்தியர் 4:17; 16:10, 11;

1 தெசலோனிக்கேயர் 3:6).

தீமோத்தேயுவைப் பிலிப்பியர்களிடத்தில் அனுப்புவதற்குப் பவுல் இரண்டு காரணங்களைக் கொண்டிருந்தார். முதலாவது அவர், பவுல் விசாரணைப்படுத்தப்பட்டதன் விளைவு பற்றிய அறிக்கை ஒன்றை எடுத்துச் செல்ல முடியும்: "ஆகையால் என் காரியங்கள் இன்னபடி நடக்கும் என்று நான் அறிந்தவுடனே அவனை அனுப்பலாமென்று நினைத்திருக்கிறேன்" (2:23). பவுல், தாம் விடுதலையாவோம் என்று நம்பியிருந்தார்: "அன்றியும் நானே சீக்கிரத்தில் வருவேனென்று கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறேன்" (வசனம் 24) இருந்தபோதிலும் அவர், இது நிச்சயமற்றதாக இருந்தது என்று புரிந்து கொண்டிருந்தார் (1:20). இவ்வாறாக அவர், தமது திட்டங்களை "கர்த்தருக்குள்" என்ற வார்த்தையைக் கொண்டு தகுதிப்படுத்தினார் (2:19, 24). ஒவ்வொரு விஷயமும் தேவனுடைய கரங்களில் இருந்தது மற்றும் அவரது சித்தித்திற்குக் கீழ்ப்பட்டு இருந்தது.

பிலிப்பியர்களைப் பற்றிய அறிக்கை ஒன்றைத் திரும்பக் கொண்டுவரக் கூடும்படியாகவும் தீமோத்தேயுவைப் பவுல் அனுப்பினார்: "... நானும் உங்கள் செய்திகளை அறிந்து மனத்தேறுதல் அடையும்படிக்குச் சீக்கிரமாய்த் தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பலாமென்று ... நம்பியிருக்கிறேன்" (வசனம் 19). பிலிப்பியர்களைப் பற்றிய செய்தி, ஊக்கமூட்டும் செய்தியாக இருக்க வேண்டும் என்று பவுல் எதிர்பார்த்தார் - அவ்வாறே அவர்களுக்கு அவர் கூறினார். பிரசங்கித்தலில் எனக்கு முன்னுதாரணமாக இருந்தவர்களில் ஒருவரான குளூவிஸ் ரோட்ஸ் என்பவர், "மக்கள் எவ்வளவு நல்லவர்களாக இருக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களோ, அவ்வளவு நல்லவர்களாகவே அவர்கள் இருக்கின்றனர்" என்று கூறுவார்.

ஆளுமைத்துவம்

இந்த முக்கியமான பணிப்பொறுப்பிற்குப் பவுல், தீமோத்தேயுவைத் தேர்ந்து கொண்டது ஏன்? அவர், "அதேனென்றால், உங்கள் காரியங்களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு என்னைப்போல் மனதுள்ளவன் அவனையன்றி வேறொருவனும் என்னிடத்திலில்லை" என்று எழுதினார் (வசனம் 20). "என்னைப்போல் மனதுள்ளவன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (isopsuchon என்ற) கிரேக்க வார்த்தை, "சமமான" என்பதற்கான (iso என்ற) வார்த்தையுடன் "ஆத்துமா[மனம்]" என்பதற்கான (psuche என்ற) வார்த்தையை இணைத்துப் பெறப்பட்ட கூட்டு வார்த்தையாக உள்ளது. இது "சமமான மனதுள்ள" அல்லது "ஒன்றுபோன்ற மனதுள்ள" என்று அர்த்தப்படுகிறது. KJV வேதாகமத்தில் "likeminded" [ஒன்றுபோன்ற மனதுள்ள] என்று உள்ளது. "ஒரே மனதுள்ள" ஒரு நண்பரை அல்லது உடன் ஊழியக்காரரை ஒருவர் கண்டறிதல் என்பது விசேஷமானதாக உள்ளது. தாவீது மற்றும் யோனத்தான் ஆகியோர் என் நினைவுக்கு வருகின்றனர்: "யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது" (1 சாமுவேல் 18:1). பிலிப்பியர் 2:20ல் "என்னைப்போல் மனதுள்ளவன்" என்ற சொற்றொடர், தீமோத்தேயு பிலிப்பியர் மீது பவுல் கொண்டிருந்த அதே அன்பையும் அக்கறையையும் கொண்டிருந்தார் என்று அர்த்தப்படுகிறது. "உண்மையிலேயே மனிதர்களாக" இருப்பவர்கள் உணர்வெழுச்சிகளைக் கொண்டுள்ளனரா? "உண்மையிலேயே

மனிதர்களாக" இருப்பவர்கள் அக்கறை கொள்கின்றனரா? பவுலின் கூற்றுப்படி, அவர்கள் அவ்வாறே இருக்கின்றனர்!

பவுல், பிலிப்பியர்களின் நலத்தைப் பற்றி "உண்மையாய் விசாரிக்கிறதற்கு ... அவனையன்றி வேறொருவனும் என்னிடத்திலில்லை" என்று கூறியது ஏன் என்று சிலர் ஆச்சரியப்பட்டுள்ளனர். ரோமாபுரியில் பவுலுடன் - லூக்கா, யோவான் மாற்கு, தீகிக்கு மற்றும் எப்பாப்பிரா உட்பட - மற்ற உடன் ஊழியக்காரர்களும் அவ்வப்போது இருந்துள்ளனர் (நடபடிகள் 27:1; 28:14-16; எபேசியர் 6:21; கொலோசெயர் 1:7, 8; 4:7, 8, 12, 14; பிலேமோன் 23, 24). நிச்சயமாகவே பவுல் இந்த மனிதர்கள் அக்கறையற்று இருந்தனர் என்று அவர்கள்மீது குற்றம் சாட்டியிருக்க மாட்டார். பிலிப்பியருக்குப் பவுல் நிருபத்தை எழுதியவேளையில், அனேகமாக இவர்களில் எவரும் அவருடன் ரோமாபுரியில் இருந்திருக்க மாட்டார்கள்; சந்தேகத்திற்கு இடமின்றி, அவர்கள் மற்ற ஊழியங்களுக்கு அனுப்பப்பட்டிருப்பார்கள். வசனத்தை உண்மையாய் அறிவிக்கக்கூடிய மற்றவர்கள் ரோமாபுரியில் வாழ்ந்தனர் (காண்க பிலிப்பியர் 1:14-16); இவர்களைப் பற்றிய விஷயம் என்ன? ஒருவேளை பவுல் இந்த நிருபத்தை எழுதிய வேளையில், அப்படிப்பட்ட பயணத்தை மேற்கொள்வதற்கு, செல்லத் தகுதியாக இருந்தவர் மற்றும் செல்ல *மனவிருப்பமாக* இருந்தவர் எவரும் இல்லை என்று அர்த்தப்படுத்தி இருக்கலாம்.

அப்போஸ்தலருடைய வார்த்தையை ஒருவர் எப்படி விளக்கப்படுத்தினாலும், அவைகள் தீமோத்தேயுவைப் பற்றிய பிரகாசிக்கும் நற்சாட்சியாகவே இருக்கின்றன - மற்றும் அவைகள், அப்போதும் இப்போழுதும் உள்ள கிறிஸ்தவர்களுக்குச் சட்டமுறைமையாக உள்ளன. டிவைட் பென்ட்டகாஸ்ட் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> இங்கு போதிக்கப்பட வேண்டிய பரிசுத்தவான்கள் உள்ளனர். எவரொருவரும் அக்கறைப்படுவதில்லை. இங்கு ஆற்றும்படி கட்டப்பட வேண்டிய காயம்பட்ட இருதயங்கள் உள்ளன. எவரொருவரும் அக்கறைப் படுவதில்லை. இங்கு கிறிஸ்துவுக்காகச் சென்று சேரப்பட வேண்டிய மனிதர்கள் உள்ளனர். எவரொருவரும் அக்கறைப்படுவதில்லை. இங்கு கர்த்தருடைய விஷயங்களில் போதிக்கப்பட்டு வழிநடத்தப்பட வேண்டிய பிள்ளைகள் உள்ளனர், மற்றும் எவரொருவரும் அக்கறைப்படுவதில்லை.[2]

ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்கள் பிலிப்பியர்களைப் பற்றி அக்கறையில்லாது இருந்து ஏன்? தகுதியுள்ள அவர்கள் பிலிப்பி நகருக்குப் பயணம் செய்ய மனவிருப்பம் இல்லாதிருந்தது என்? தொடர்ந்து பவுல், "மற்றவர்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல், தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்" என்று கூறினார் (வசனம் 21). ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்கள் தங்கள் அன்றாட வாழ்வில் கடந்து செல்லுகையில், எழுநூறு மைல்களுக்கு அப்பால் இருந்த ஒரு சிறிய ரோமக்காலனியானது அவர்களுக்கு கொஞ்சமே ஆர்வம் உள்ளதாக இருந்திருக்கும். பிலிப்பி நகரத்தின் தேவைகள் குறிப்பிடப் பட்டிருந்தால், சிலர் "பிலிப்பி நகரத்தைப் பற்றி நாம் ஏன் அக்கறை கொள்ள வேண்டும்? நாம் எப்போதும் எதிர்கொள்ளக் கூடியவற்றைக் காட்டிலும் அதிகமான தேவைகள்

இப்போது இங்கேயே உள்ளனவே!" என்று பதில் அளித்திருப்பார்கள் என்று என்னால் கற்பனை செய்ய முடிகிறது! இவ்வகையான ஆவியானது சுவிசேஷ ஊழியத்தையும் உலகம் முழுவதிலும் செய்யப்படும் ஊழியத்தையும் நெருக்கடிக்கு ஆளாக்கி இருக்கிறது. காலங்கள் கடந்து போகையில், சுயமையமான சிந்தையானது இன்னும் அதிகம் குறுகலாகிறது:

- "எனது நாட்டில் அதிகமான தேவைகள் இருக்கும்போது, உலகத்தைப் பற்றி நான் ஏன் அக்கறைப்பட வேண்டும்?"
- "நான் வாழும் இடமான எனது நகரில் அதிகமான தேவைகள் இருக்கும்போது, எனது நாட்டைப் பற்றி நான் ஏன் அக்கறைப்பட வேண்டும்?"
- "நான் ஆராதிக்கும் சபைக்குழுமத்தில் அதிகமான தேவைகள் இருக்கும்போது, நான் வாழும் நகரத்தைப் பற்றி நான் ஏன் அக்கறைப்பட வேண்டும்?"
- "எனக்கு அதிகமான தேவைகள் இருக்கும்போது, நான் ஆராதிக்கும் சபைக்குழுமத்தில் உள்ள மற்ற உறுப்பினர்களின் தேவைகளைப் பற்றி நான் ஏன் அக்கறைப்பட வேண்டும்?"

பவுலினால் விவரிக்கப்பட்ட ஆவியை விட அதிகமாக சுவிசேஷத்தின் வளர்ச்சியைத் தடை செய்யும் விஷயம் வேறு எதுவும் இல்லை: "மற்றவர்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல், தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்." ஆராதிக்கும் இடத்தின் வெளியே "JESUS ONLY" ["இயேசு மாத்திரமே"] என்று அறிவிப்புப் பலகை தொங்க விடப்பட்டிருந்த ஒரு சபையைப் பற்றி நான் வாசித்தேன். இவ்வாக்கியத்தின் முதல் மூன்று எழுத்துக்களை ஒரு புயல் வீசி எறிந்து விட்டது, அதன்பின்பு அது "US ONLY" ["நாம் மாத்திரமே"] என்று வாசிக்கப்பட்டது.[3] அவ்வார்த்தைகள் ஒருசிலரை விவரிக்கின்றன என்பது கவலைக்குரியது. பவுல் நமக்குப் பின்வரும் அறைகூவலைக் கொடுத்தார்: "ஒவ்வொருவனும் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன்" (1 கொரிந்தியர் 10:24). இது அவர் தாமே எதிர்கொள்ள முயற்சித்த ஒரு அறைகூவலாக இருந்தது: அவர் தமது "சுயபிரயோஜனத்தைத் தேடாமல், அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி, அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு" நடந்துகொண்டார் (1 கொரிந்தியர் 10:33). இன்றைய நாட்களில் நமக்கு, *அக்கறை கொள்கிற*, சொந்த நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள மக்களின் தேவைகளினால் அசைக்கப்பட்டுள்ள, அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தங்களால் இயன்றவற்றை செய்வதற்கு மனவிருப்பம் கொண்ட ஆண்கள் - மற்றும் பெண்கள் - தேவைப்படுகின்றனர். நான் வெளிநாடுகளில் சென்றுஊழியம் செய்பவனாக இருந்த போது, சொந்த விருப்பங்களும் ஆர்வங்களும், வெளிநாட்டு ஊழியத்தைச் செய்வதால் தங்கள் கனவுகளை நனவாக்கும்படி வாழ்வதில் இருந்து தடைசெய்திருந்த, வெளிநாட்டு ஊழியத்தை செய்ய இருந்த பலருடன் நான் பேசியிருக்கிறேன்.

ஒரு துணிந்த மனிதர் (2:25-30)

பவுல், தீமோத்தேயுவை அனுப்ப விருப்பம் கொண்டிருந்தார், ஆனால் அவர் தமது விசாரணை முடியும் வரை அதைச் செய்ய விரும்பவில்லை. உடனடியாகப் பிலிப்பி நகருக்குச் செல்ல வேறு யாரேனும் ஒருவர் தேவைப்பட்டார். எப்பாப்பிரோதீத்துவை அனுப்புதலே பவுலின் உடனடித் திட்டமாக இருந்தது.

அவரது ஊழியம்

வேதாகமத்தில், பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் மாத்திரமே எப்பாப்பிரோதீத்துவைப் பற்றி நாம் வாசிக்கிறோம், ஆனால் இங்குள்ள சுருக்கமான சித்தரிப்பு, அவர் தேவனுக்கு மிகச்சிறந்த ஊழியக்காரராக இருந்திருப்பார் என்பதை வெளிப்படுத்துகிறது. அவர், "பழங்கால இலக்கியத்தில் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டதும் அடிக்கடி காணப்படுவதுமான ஒரு பெயரைச் சுமந்திருந்தார், இது சில வேளைகளில் எப்பாப்பிரா என்று சுருக்கப்பட்டுள்ளது."[4] (இருப்பினும் இந்த எப்பாப்பிரோதீத்து, கொலோசெ நகரில் இருந்த சபையின் உறுப்பினராக இருந்த எப்பாப்பிரா அல்ல என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது [காண்க - கொலோசெயர் 1:7; 4:12; பிலேமோன் 23].) இது, "மனம் மயக்குதல்" என்று அர்த்தப்பட்ட ஒரு கிரேக்கப் பெயராக இருந்தது. எந்த ஒரு கண்ணோகக் கருத்திலும், எப்பாப்பிரோதீத்து "மனம் மயக்கும்" தனிநபராக இருந்ததாகவே காணப்படுகிறது.

பிலிப்பி நகரில் இருந்த சபையானது ரோமாபுரியில் இருந்த பவுலுக்கு உதவி அனுப்பியிருந்தது (காண்க 1:3). பிலிப்பி நகரில் இருந்த சபைக்குழுமம் அனேகமாக, மக்கெதோனியாவில் இருந்த மற்ற சபைக் குழுமங்களைப் போன்று ஏழ்மையினால் தாக்கப்பட்டதாக இருந்திருக்கலாம் (காண்க 2 கொரிந்தியர் 8:1, 2; நடபடிகள் 16:12); ஆனால் பவுல் எங்கிருந்தார் என்று அவர்கள் அறிந்தபின்பு, அவருக்காக நிதி சேகரிக்க அவர்கள் தியாகம் செய்தனர். அந்தப் பங்குத் தொகையை எடுத்துச் செல்லும்படி எப்பாப்பிரோதீத்து தேர்ந்தெடுக்கப்பட்டார் (பிலிப்பியர் 4:18).

2:25ல் எப்பாப்பிரோதீத்து, "உங்கள் ஸ்தானாபதி" என்று அழைக்கப்பட்டுள்ளார். "ஸ்தானாபதி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (Gk.: *apostolon* என்ற) வார்த்தையில் இருந்தே நாம், "அப்போஸ்தலர்" என்ற வார்த்தையைப் பெற்றுள்ளோம். இது "இருந்து" (*apo*) என்ற முன்னிடைச் சொல், "அனுப்ப" என்பதற்கான (*stello* என்ற) வார்த்தையுடன் இணைக்கப்பட்ட கூட்டு வார்த்தையின் வினைவடிவத்தில் உள்ளது. இதற்கான பெயர்ச்சொல், "அனுப்பப்பட்ட ஒருவர்" என்று அர்த்தப்படுகிறது. இது புதிய ஏற்பாட்டில், இயேசுவினால் <u>அனுப்பப்பட்டவர்களைக்</u> குறிப்பதற்கு முதன்மையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது: பன்னிருவர் (காண்க மத்தேயு 10:2; நடபடிகள் 1:2, 26; 2:42, 43) மற்றும் பவுல் (காண்க ரோமர் 1:1; 11:13; காலாத்தியர் 1:1, 17). துணைநிலைக் கருத்தில் இது, சபைக் குழுமங்களினால் <u>அனுப்பப்பட்டவர்களைக்</u> குறிக்கிறது (காண்க நடபடிகள் 14:14; ரோமர் 16:7; 2 கொரிந்தியர் 8:23). பிலிப்பியர் 2:25ல் இது, "நீங்கள் அனுப்பியவர்" என்று அர்த்தப்படுகிறது. அவர்கள் எப்பாப்பிரோதீத்துவை அனுப்பி இருந்தனர் என்ற உண்மையானது, அவர் மீது அவர்கள் கொண்டிருந்த உறுதியான நம்பிக்கையைச் சுட்டிக்காண்பிக்கிறது. (எப்பாப்பிரோதீத்து பிலிப்பி நகரில் இருந்த சபையில்

ஒரு மூப்பராகவோ அல்லது ஒரு உதவிக்காரராகவோ இருந்தார் என்று பல எழுத்தாளர்கள் யூகிக்கின்றனர். அவர் அவ்வாறு இருந்திருக்கலாம், ஆனால் வேதவசனம் அதைப் பற்றி ஒன்றும் கூறுவதில்லை.)

எப்பாப்பிரோதீத்து ரோமாபுரிக்கு வந்து சேர்ந்த உடனே, அவர் கொடையைக் கொடுத்துவிட்டு உடனடியாக பிலிப்பி நகருக்குத் திரும்பிவிடவில்லை. மாறாக அவர், சிறைவைக்கப்பட்டிருந்த பவுலுக்கு உதவி செய்யத் தங்கினார். பிலிப்பியர்களுக்குப் பவுல், அவர் "உங்கள் ஸ்தானாதிபதியும் என் குறைச்சலுக்கு உதவிசெய்தவனுமான" என்று கூறினார் (வசனம் 25). "உதவிசெய்தவன்" என்பதற்கான வார்த்தையானது, மிகவும் பொதுவான *diakonos* என்பதாக அல்ல, ஆனால் இது *leitourgos* என்ற வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது. வில்லியம் பார்க்ளே என்பவர் பின்வருமாறு இதை விளக்கப்படுத்தினார்:

> உலகப்பிரகாரமான கிரேக்க மொழியில் இது ஒரு மாட்சிமைமிக்க வார்த்தையாக இருந்தது. பழங்கால நாட்களில், கிரேக்க நகரங்களில், தங்கள் நகரத்தை நேசித்ததால், தங்கள் சொந்த செலவில் குறிப்பிட்ட சில மாபெரும் குடிமைக் கடமைகளை மேற்கொண்ட மனிதர்கள் இருந்தனர். அது ஒரு தூதரகத்தின் செலவுகளை ஈடுகட்டப் பணம் கொடுப்பதாக இருக்கலாம், அல்லது மாபெரும் கவிஞர்களின் நாடகங்களை அரங்கேற்றும் செலவாக இருக்கலாம், அல்லது விளையாட்டுகளில் நகரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விளையாட்டு வீரர்களின் பயிற்சிக்கான செலவாக இருக்கலாம் அல்லது போர்க்கப்பல் ஒன்றைக் கட்டி தேசத்தின் கப்பற்படையில் படைக்குழுவினர் பணியாற்றச் செலுத்தப்படும் செலவாக இருக்கலாம். இவ்வாறு செலவு செய்யும் இந்த மனிதர்கள், நாட்டின் மிக மேன்மையான புரவலர்களாக இருந்தனர் மற்றும் இவர்கள் *leitourgoi* என்று அறியப்பட்டிருந்தனர்.[5]

எப்பாப்பிரோதீத்து, பிலிப்பியர்களின் சார்பில், பவுலின் புரவலராக இருந்தார். 30ம் வசனம், அவர், அப்போஸ்தலருக்குப் பிலிப்பியர்கள் செய்ய வேண்டிய ஊழியத்தில் "குறைவை நிறைவாக்கினார்" என்று கூறுகின்றது. "ஆங்கிலத்தில் ["*what was deficient*" என்ற சொற்றொடர்] ஒரு கடிந்துகொள்ளுதல் போன்று ஒலிக்கிறது, ஆனாலும் கிரேக்க மொழியில் இவ்வாறு ஒலிக்கும் நோக்கம் கொண்டிருப்பதில்லை."[6] பிலிப்பியர்களைப் பொறுத்தமட்டில், பவுல் ரோமாபுரியில் இருந்த போது, அவர்கள் அவருடன் இருக்க இயலாதிருந்தது தான் அவர்களுடைய ஒரே "குறையாக" இருந்தது. அடுத்த அதிகாரத்தில் பவுல் "... இப்படிச் செய்ய எண்ணங்கொண்டிருந்தீர்கள், சமயம்மாத்திரம் உங்களுக்கு நேரிடவில்லை" என்று கூறினார் (4:10). அவர்களின் "குறைவு" அவர்களின் பிரதிநிதியான எப்பாப்பிரோதீத்துவினால் நிறைவாக்கப்பட்டது. CJB வேதாகமம், அவர் பவுலுக்கு "நீங்கள் கொடுக்க இயலாதிருந்த நிலையில் இருந்த உதவியை" அவர் [எப்பாப்பிரோதீத்து] கொடுத்தார் என்று கூறுகிறது.

எப்பாப்பிரோதீத்து குறிப்பாகச் செய்தது என்ன? அவர் ஒரு பிரசங்கியாராகவோ அல்லது போதகராகவோ இருந்தார் என்பதற்கான குறிப்பு எதையும் நாம் காண்பதில்லை. மாறாக அவர், பவுலின் தேவைகளாக இருந்தவை எவைகளோ, அவைகளைக் கவனிக்கும் ஒரு "ஊழியக்காரராக" - ஒரு

வேலைக்காரராக - இருந்தார். அப்போஸ்தலர் ஒரு வயது முதிர்ந்த மனிதராகவும், விலங்குகள் மற்றும் காவலர் ஆகியோரால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தவராகவும் இருந்தார் (பிலேமோன் 9; எபேசியர் 6:20). யாரேனும் ஒருவர் அவருக்கு உணவு வாங்கி அதைத் தயார் செய்ய வேண்டியிருந்தது. யாரேனும் ஒருவர், அவர் உடுத்திக்கொள்ள ஏதாவது ஆடையைக் கொண்டிருந்தார் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. யாரேனும் ஒருவர் அவரது அறையில் பொருட்களை அமைவு செய்ய வேண்டியிருந்தது. யாரேனும் ஒருவர் அவரைப்படுக்கையிலேயே இருக்கும்படி நிர்ப்பந்தித்த "அவர் மாம்சத்தில் இருந்த முள்ளுக்கு" அக்கறை செலுத்த வேண்டியிருந்தது (2 கொரிந்தியர் 12:7). (பவுலின் "மாம்சத்தில் இருந்த முள்" என்பது சரீரப் பிரகாரமான ஒரு நோயாக இருக்கலாம் என்று நான் யூகிக்கிறேன்.) சில வேளைகளில் பவுல், யாரேனும் ஒருவர் தமக்குத் துணையாக இருக்க வேண்டும் என்று விரும்பி இருக்கலாம். உலகப் பிரகாரமான இந்தப் பணிப்பொறுப்புக்களுடன் கூட, ஓட வேண்டிய குற்றேவல் பயணங்கள், கொடுக்கப்பட வேண்டிய செய்திகள், விரிவாக்கப் படவேண்டிய அழைப்புகள் ஆகியவையும் இருந்திருக்கலாம்.

இந்த ஊழியங்களை எப்பாப்பிரோதீத்து எவ்வளவு காலம் செய்தார் என்று நமக்கு உறுதியாகத் தெரிவதில்லை, ஆனால் அது பல மாதங்கள் நடந்திருக்க வேண்டும். அவர் வந்து சேர்ந்து சில காலத்திற்குப் பின்பு, அவர் வியாதிப்பட்டார். அவரது சுகவீனம் பற்றிய செய்தி பிலிப்பி நகருக்குச் சென்று சேர்ந்தது. பின்பு யாரோ ஒருவர், பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் அவரது சுகவீனம் பற்றி அறிந்தனர் என்ற செய்தியைக் கொண்டு வந்தார். பயணம் என்பது அக்காலத்தில் மிகவும் மெதுவானதாக இருந்ததால், பிலிப்பி நகருக்கும் அங்கிருந்து ரோமாபுரிக்கும் செய்தி செல்லச் சற்றுக் காலம் எடுத்திருக்கும். இந்த வேளையில் பவுலின் *தேவைகளுக்குச் செய்ய அவசியமான எல்லாவற்றையும்* எப்பாப்பிரோதீத்து நிறைவேற்றியிருந்தார்.

சிலர், எப்பாப்பிரோதீத்துவின் கடமைகளைப் பொதுவானவைகளாகவும் முக்கியமற்றவைகளாகவும் கருதலாம், ஆனால் அவர் "கிறிஸ்துவின் ஊழியத்தை" செய்தார் என்று பவுல் கூறினார் (பிலிப்பியர் 2:30). இந்த மனிதரைப் பற்றியும் இவரது ஊழியத்தைப் பற்றியும் பவுலின் மதிப்பீட்டைக் கவனியுங்கள்: இவரை அவர், "என் சகோதரனும், உடன்வேலையாளும், உடன்சேவகனும்" என்று அழைத்தார் (வசனம் 25).

கர்த்தருக்காகச் செய்யப்படும் எந்த ஊழியமும் முக்கியமான ஊழியமாகவே உள்ளது. பிரசங்கித்தல், போதித்தல், ஆராதனையை நடத்துதல் ஆகியவை முக்கியமான பணிப்பொறுப்புகளாக உள்ளது - ஆனால் அதைப் போன்றே, ஒரு சகோதரனை அல்லது சகோதரியை ஊக்குவித்தல், துயரப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளித்தல் மற்றும் வியாதியாக இருப்பவருக்கு உணவு எடுத்துச் செல்லுதல் ஆகியவையும் முக்கியமான பணிப்பொறுப்புகளாகவே உள்ளன (காண்க மத்தேயு 10:42; 25:31-46). எந்த ஒரு பணித்திறத்திலாவது ஊழியம் செய்ய - கர்த்தருடைய ஊழியம் வளமடையும்படிக்கு, பாராட்டப் படாத பணிகளையும் செய்வதற்கு - மனவிருப்பம் கொண்ட அதிகமான கிறிஸ்தவர்கள் நமக்குத் தேவை.

அவரது தியாகம்

எப்பாப்பிரோதீத்து தமது ஊழியத்திற்கு ஒரு விலையைச் செலுத்தி இருந்தார்: அவர் சுகவீனப்பட்டார். 26ம் வசனம், "அவன் .. வியாதிப்பட்டு" இருந்தான் என்று கூறுகிறது. 27ம் வசனம், "அவன் வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தது மெய்தான்" என்று கூறுகிறது. ரோமாபுரியில் அவருடையபடுக்கையைச் சுற்றி அவரது நண்பர்களும் தோழர்களும் கூடி, தங்கள் தலைகளை அசைத்து, "அனேகமாக இன்றிரவே அவர் கதை முடிந்து விடலாம்" என்று கூறியதாக என்னால் கற்பனையில் காண முடிகிறது. ஏதோ ஒரு வழியில் அவரது சுகவீனம் அவரது ஊழியத்துடன் பிணைக்கப்பட்டு இருந்தது. 30ம் வசனம், "தன் பிராணனையும் எண்ணாமல், கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணத்திற்குச் சமீபமாயிருந்தான்" என்று கூறுகிறது.

பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தைப் பற்றிய இந்தப் பாடங்களை நான் எழுதத் தொடங்குவதற்கு பல மாதங்களுக்கு முன்னர், எனது மனைவி ஜோவுடன் சேர்ந்து நான் இந்த நிருபத்தை வாசிக்கத் தொடங்கினேன். ஒவ்வொரு இரவிலும் எங்கள் மாலை உணவிற்குப் பின்னர், நாங்கள் ஒரு அதிகாரத்தை வாசிப்போம். நாங்கள் பல்வேறு மொழிபெயர்ப்புகளை இதற்குப் பயன்படுத்தினோம். எப்பாப்பிரோதீத்து "தன் பிராணனையும் எண்ணாமல்" மற்றும் "மரணத்திற்குச் சமீபமாயிருந்தான்" என்பவற்றைப் பற்றிய விபரம் என்னைக் கவர்ந்தது. அந்த வார்த்தைகளை வாசிக்கும் ஒவ்வொரு முறையும் நான், "எப்பாப்பிரோதீத்து தமது வாழ்வை இடர்ப்பாட்டிற்கு உள்ளாக்கும்படிக்கு என்ன *செய்தார்?*" என்று நான் கேட்டேன். அவ்விஷயத்தைப் படித்த பின்னர், இன்னமும் என்னால் அதைப் பற்றி உறுதியாக ஒன்றும் கூற முடியவில்லை, ஆனால் விளக்கவுரையாளர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒருசில யூகங்கள் இங்கு தரப்படுகின்றன:

- ரோமாபுரிக்கு வர எழுநூறு மைல்கள் பயணம் செய்தது - விசேஷமாகப் பணத்துடன் இவ்வாறு பயணம் சென்றது - இடர்ப்பாட்டிற்கு உள்ளாக்கும் விஷயமாக இருந்திருக்கும். எப்பாப்பிரோதீத்து வழியில் தாக்கப்பட்டிருக்கக் கூடும். இது பொதுவான விஷயம் என்று லூக்கா 10:30ம் வசனம் காண்பிக்கிறது, எப்பாப்பிரோதீத்து தாக்கப்பட்டிருந்தார் என்றால், அவர் பவுலுக்காகப் பணத்தைக் காக்கும் விஷயத்தை நன்கு செய்தார் என்றாகிறது.
- வியாதிகள் எங்கும் மேலோங்கியிருந்த காரணத்தினாலும், அந்த நாட்களில் பயணம் செய்தல் என்பது இடர்பாட்டிற்கு உள்ளாக்குவதாக இருந்தது. ஒரு வேளை எப்பாப்பிரோதீத்துவின் பயணத்தின்போது பிணியொன்று அவரைத் தொற்றியிருக்கலாம்.
- ஒரு வேளை ரோமாபுரியில் ஊழியம் செய்வதிலேயே இடர்பாடு வந்திருக்கலாம். கூட்டம் நிறைந்த மாநகரப் பகுதிகளில், வியாதி விரைவில் பரவிற்று, ரோமாபுரி முழுவதிலும் காய்ச்சல்கள் பிளேக் நோய் போன்று பரவியதைப்பற்றிப் பழங்கால எழுத்தாளர்கள் கூறுகின்றனர்.
- ஒருவேளை தமது வாழ்விற்கே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த ஒரு மனிதருடன் அடையாளப்படுத்தப் பட்டிருத்தலில் இருந்து இடர்ப்பாடு வந்திருக்கலாம். பவுல், சூழ்ச்சி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்; ரோமர்களைப் பொறுத்த மட்டில், அதைக்

காட்டிலும் மிகமோசமான குற்றம் வேறு எதுவும் இல்லை. "மரண தண்டனைக்குரிய குற்றச்சாட்டின் பேரில் விசாரணைக்காகக் காத்திருக்கும் மனிதருக்கு தம்மை உதவி செய்பவராக அளிக்க முன்மொழியும் எவரொருவரும், அதே குற்றச் சாட்டு தம்மீது சுமரச் செய்யும் வகையில் அதில் உள்ளடங்கும் இடர்ப்பாட்டைக் கணிசமான அளவில் கொண்டிருக்கத் தம்மையே திறந்து கிடத்துபவராக இருப்பார்."[7]

- பவுலின் அறிவுறுத்துதல்கள் சிலவற்றைச் செயல்படுத்துதல் என்பது - எடுத்துக்காட்டாக, நோயாளிகளுக்கு ஊழியம் செய்யும்படி பவுல் கேட்டுக்கொண்டார் என்றால் அது - இடர்ப்பாட்டிற்கு உள்ளாக்குவதாக இருந்திருக்கக் கூடும். "தொடக்ககால சபையில் நோயாளிகள்மீது அக்கறை கொண்டு தங்கள் வாழ்வை இடர்ப்பாட்டிற்கு உட்படுத்தியவர்கள் *parabolani* என்று அழைக்கப்பட்டனர், இது இவ்வசனப் பகுதியில் 'எண்ணாமல்' [ஆங்கிலத்தில் "risking"] என்று தரவழைக்கப்பட்ட வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது, இது 'விளைவைப் பற்றிப்பொருட்படுத்தாத நபர்கள்' என்று நேரடி அர்த்தப்படுகிறது."[8]
- ஒருவேளை அவர் தம்மை மிக அதிகமாக விரிவாக்கி இருக்கலாம். பவுலின் உடன் ஊழியக்காரர்களைப் பற்றி யூகிப்பதில் நாம் சரியானவர்களாக இருந்தால், எப்பாப்பிரோதீத்து மற்றும் தீமோத்தேயு ஆகியோரைத் தவிர மற்றவர்கள் நகருக்கு வெளியே சென்றிருந்தால், அவர் மூன்று மனிதர்களின் வேலையைச் செய்ய முயற்சி செய்திருக்கலாம்.

எப்பாப்பிரோதீத்துவின் வியாதிக்குக் காரணம் என்ன என்று நாம் மிகத் துல்லியமாக அறிவதில்லை, ஆனால் அவர் கர்த்தருக்காகத் தமது உயிரை இடர்பாட்டிற்கு உள்ளாக்கினார் என்று நாம் அறிகிறோம். "இடர்பாட்டிற்கு உள்ளாக்குதல்" (இது தமிழில் "எண்ணாமல்" என்றுள்ளது) என்ற வார்த்தையின் பயன்பாடு (இது *paraboleuomai* என்ற கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது) ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது. பவுல் பயன்படுத்திய சொற்றொடர் "உடன்" என்பதற்கான (*para* என்ற) வார்த்தையை "எறிதல்" என்பதற்காக (*ballo* என்ற) வார்த்தையுடன் இணைக்கிறது. இது "ஒருவர் தம்மை அபாயத்திற்கு ஆளாக்குதல் என்பதைக் குறிக்கிறது." இங்கு பயன்படுத்தப்பட்ட வார்த்தை, சூதாட்டச் சொற்றொடராகப் பயன்படுத்தப்பட்டு இருந்தது என்று எழுத்தாளர்கள் சுட்டிக்காண்பிக்கின்றனர். இது, வேதாகமம் சூதாட்டத்தைப் பொறுத்துக் கொள்கிறது என்று அர்த்தப்படுவதில்லை. "நேரடியான சூதாட்டம் என்பது அதாவது, உழைப்பில்லாது இலாபம் பெறலாம் என்ற நம்பிக்கையில், பணத்தைப் பணையம் வைத்தல் என்பது, வேதாகமத்தில் உள்ள பல வசனப்பகுதிகளினால் எதிர்க்கப்பட்டுள்ளது (பொறுத்துதல் 2 தெசலோனிக்கேயர் 3:10; எபேசியர் 4:28; கலாத்தியர் 6:7)."[9] இது, எப்பாப்பிரோதீத்து, கிறிஸ்துவின் ஊழியத்தைத் தமது சொந்தப் பாதுகாப்பைக் காட்டிலும் அதிக முக்கியமானதாக எண்ணினார் என்று அர்த்தப்படுகிறது.

தனது உயிரைக் காப்பதற்கு இரத்தம் செலுத்தப்பட வேண்டியிருந்த ஒரு

ஆறுவயதுச் சிறுமியைப் பற்றி நான் வாசித்தேன்.[10] அவள் அரிதான வகை இரத்தப் பிரிவைக் கொண்டவளாக இருந்தாள், அவளது ஒன்பது வயதான அண்ணன் மாத்திரமே, அவ்வகை இரத்தத்தை அளிக்கக் கூடிய ஒரே நபராக இருந்தான். அவன் தனது தங்கையைக் காப்பாற்றத் தனது இரத்தத்தை எடுக்க சம்மதித்தான். அவர்கள் அவனது இரத்தத்தை எடுத்துக் கொண்டிருந்தபோது அவன், இரத்தம் எடுக்கும் நிபுணரைப்பார்த்து, "நான் எப்போது இறப்பேன்?" என்று கேட்டான். அவன் இரத்தம் கொடுத்தல் என்பது தனது மரணத்தை விளைவிக்கும் என்ற தவறான கருத்தைக் கொண்டிருந்தான் - ஆனால் தனது தங்கை வாழவேண்டும் என்பதற்காக அவன் அந்தத் தியாகத்தைச் செய்ய மனவிருப்பமாக இருந்தான். கர்த்தருடைய ஊழியமானது வாழ்ந்து வளம் பெறுவதற்காக, உள்ளபடியே தங்கள் வாழ்வை இடர்பாட்டிற்கு உள்ளாக்கத் துணிந்தவர்களுக்காகத் தேவனுக்கு நன்றி. யோவான், "அவர் [இயேசு] தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" என்று எழுதினார் (1 யோவான் 3:16).

அவரது சூழ்நிலை

எப்பாப்பிரோதீத்து, கிறிஸ்துவுக்குத் தமது உறுதிப்பாட்டின் காரணமாக வியாதிப்பட்டிருந்தார். "ஆகிலும், தேவன் அவனுக்கு இரங்கினார்" என்று பவுல் கூறினார் (வசனம் 27ஆ). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் சுகமடைந்தார். குணமாக்குதல் யாவையும் - இன்றைய நாட்களின் அற்புதமற்ற வகையில் குணமாகுதலும்கூட - கர்த்தரிடத்தில் இருந்தே வருகிறது. தொடர்ந்து பவுல், "அவனுக்கு இரங்கினதுமல்லாமல், துக்கத்தின்மேல் துக்கம் எனக்கு உண்டாகாதபடிக்கு, எனக்கும் இரங்கினார்" என்று கூறினார் (வசனம் 27இ, ஈ). "துக்கத்தின்மேல் துக்கம்" என்பது மூல வசனத்தின் நேருக்குநேரான மொழிபெயர்ப்பாக உள்ளது. "துக்கத்தின்மேல் துக்கம்" என்பது "மூழ்கடிக்கும் துக்கம்" என்று அர்த்தப்படுகிற பேச்சு உருவகமாக இருந்தது. இவ்வார்த்தைகளை நாம் நேருக்கு நேராக அர்த்தம் கொள்வோம் என்றால், முதல் "துக்கம்" என்பது எப்பாப்பிரோதீத்து வியாதிப்பட்டதால் விளைந்ததாகக் கண்ணோக்கலாம். இரண்டாவது "துக்கம்" என்பது அவர் மரித்திருந்தால் வந்திருக்கக் கூடிய துக்கமாக இருந்திருக்கும்.

எப்பாப்பிரோதீத்து குணமடைந்த பின்பு, அவர் ரோமாபுரியிலேயே தங்கியிருக்க வேண்டும் என்று பவுல் விரும்பி இருக்கலாம். இருப்பினும் ஏற்கனவே குறிப்பிடப்பட்டபடி, அவர் சுகவீனம் அடைந்ததைப் பிலிப்பிர்கள் அறிந்தனர் என்ற செய்தி வந்திருந்தது, இது எப்பாப்பிரோதீத்துவைக் கவலைக்குள்ளாக்கிற்று. பவுல், "அவன் உங்கள் எல்லார்மேலும் வாஞ்சையுள்ளவனும், தான் வியாதிப்பட்டதை நீங்கள் கேள்விப்பட்டதினாலே மிகவும் வியாகுலப்படுகிறவனுமாயிருந்தான்" என்று கூறினார் (வசனம் 26). "வியாகுலப்படுதல்" என்ற வார்த்தை, "கெத்சமெனே தோட்டத்தில் கர்த்தருடைய மனநிலையை (மத்தேயு 26:37) விவரிக்கப் பயன்படுத்திய அதே வார்த்தையாக உள்ளது. கிரேக்க மொழியில் இது, கனமான துக்கத்தினால் இளைப்படைந்து மேலாதிக்கம் செலுத்தப்பட்ட நிலையை விளக்கப்படுத்துகிறது."[11] LB *வேதாகம பொழிப்புரையில், "அவர் உங்களைக் காண வேண்டும் என்று ஏங்கியிருந்தார்*

மற்றும் தாம் வியாதிப்பட்டிருந்ததை நீங்கள் கேள்விப்பட்டதால் மனக்கலக்கம் அடைந்திருந்தார்" என்றுள்ளது. நீங்கள் எப்போதாவது வீட்டைப் பற்றிய ஏக்கம் கொண்டு நண்பர்கள் மற்றும் குடும்பத்தைப் பற்றிக் கவலைப் பட்டிருந்தால், எப்பாப்பிரோதீத்து எவ்வாறு உணர்ந்திருந்தார் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

எப்பாப்பிரோதீத்துவைப் பிலிப்பி நகருக்குத் திரும்ப அனுப்புதல் மிகச்சிறப்பான விஷயமாக இருக்கும் என்று பவுல் முடிவுசெய்தார். இது அவரது [பவுலின்] சொந்த வாழ்வைக் கடினமுள்ளதாக ஆக்கும், ஆனால் இது எப்பாப்பிரோதீத்துவுக்கும் பிலிப்பியர்களுக்கும் ஆறுதல் அளிக்கும். அவர், "ஆகையால் நீங்கள் அவனை மறுபடியும் கண்டு சந்தோஷப்படவும், என் துக்கங்குறையவும், அவனை அதிசீக்கிரமாய் அனுப்பினேன்" என்று எழுதினார் (பிலிப்பியர் 2:28). "எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை ... நாள்தோறும் நெருக்குகிறது" என்பது பவுலுக்கு எப்போதும் இருந்து வந்தது (2 கொரிந்தியர் 11:28). எப்பாப்பிரோதீத்துவை வீட்டிற்கு அனுப்பிவைத்தல், பிலிப்பி நகரில் இருந்த சபை பற்றிய அவரின் [பவுலின்] கவலையிலிருந்து சற்று நிம்மதியை அவருக்குத் தருவதாக இருக்கும்.

எப்பாப்பிரோதீத்து இவ்வளவு விரைவாகத் திரும்பி வந்ததற்காக அவர் ஊழியத்தில் தோல்வியடைந்தார் என்று பிலிப்பியர்கள் கருதியிருக்க வாய்ப்புண்டு என்று பல எழுத்தாளர்கள் நினைக்கின்றனர். இதற்கான சாட்சியம் எதையும் நான் காண்பதில்லை; எப்பாப்பிரோதீத்துவுக்கும் பிலிப்பி நகரில் இருந்த சபைக்கும் இடையில் ஒரு நெருக்கமான, இதமான, அக்கறைகொள்ளும் உறவையே நான் காண்கிறேன். எவ்வகையிலும் பவுல், எப்பாப்பிரோதீத்து வீட்டிற்குத் திரும்ப வேண்டும் என்பது தமது கருத்தாக இருந்தது என்று வலியுறுத்தியதால் அவர் சாத்தியமான எந்த விமர்சனத்தையும் துண்டித்தார்.

எப்பாப்பிரோதீத்து பற்றிய பகுதியைப் பவுல் முடிக்கையில், அவர் பின்வரும் புத்திமதியை உள்ளடக்கினார்: "ஆனபடியினாலே நீங்கள் கர்த்தருக்குள் மிகுந்த சந்தோஷத்தோடே அவனை ஏற்றுக்கொண்டு, இப்படிப்பட்டவர்களைக் கனமாய் எண்ணுங்கள்" (பிலிப்பியர் 2:29). அவர்கள் அவருக்கு [எப்பாப்பிரோதீத்துவுக்கு] ஒரு வீரனுக்குரிய வரவேற்பைத் தரவேண்டியவர்களாக இருந்தனர்! யாரேனும் ஒருவர், "ஆனால் அவர் வசீகரமற்ற ஒரு பணியை நிறைவேற்றிய சாதாரணக் கிறிஸ்தவராகத் தானே இருந்தார்! அவரை ஏன் இவ்வளவு உயர்வாக மதிக்க வேண்டும்?" என்று மறுப்புரை தெரிவிக்கலாம். ஏனென்றால் அவர் தமக்கு ஒப்புவிக்கப் பட்டிருந்த பணியில் மனச்சாட்சிப்படி நேர்மையாகச் செயல்பட்டதால், அவர் இவ்வளவு உயர்வாக மதிக்கப்பட வேண்டியவராக இருந்தார்.

பவுல், "ஆகையால் ... யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்; ... எவனைக் கனம்பண்ணவேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள்" என்று எழுதினார் (ரோமர் 13:7). சந்தர்ப்பப் பொருளில், ரோமர் 13:7ல் பவுல், உலகப் பிரகாரமான ஆட்சியாளர்களுக்குச் செலுத்த வேண்டிய கனம் பற்றித் தமது சிந்தையில் கருத்துக் கொண்டிருந்தார்; ஆனால் கனம் பெறத் தகுதியான மற்றவர்களுக்கும் இது நடைமுறைப்படுத்தப்படலாம். ரோமர் 13:7ல், "கனம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையும் பிலிப்பியர் 2:29ல் "கனமாக எண்ணுங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள

வார்த்தையும், ஒரே வேர்வார்த்தையில் இருந்து வந்தவைகளாக உள்ளன.

துரதிர்ஷ்டவசமாக நாம், உண்மையாக ஊழியம் செய்பவர்களை எப்போதுமே ஏற்றுக்கொண்டு அவர்களை மதித்து ஒப்புக்கொண்டு விடுவதில்லை. புறக்கணிப்பின், இருதயத்தை உடைந்துபோகச் செய்யும் ஒரு உதாரணமானது, வெளிநாட்டில் ஊழியம் செய்யும் குறிப்பிட்ட ஒரு ஊழியக்காரரும் அவரது மனைவியும் பல ஆண்டுகள் ஊழியக்களத்தில் செலவிட்டுப் பின்பு இல்லம் திரும்பும்போது நடைபெற்றது. அவர்களுடன் விமானத்தில், புகழ்பெற்ற ஒரு விளையாட்டு வீரர் பயணித்து வந்திருந்தார். அந்த விளையாட்டு வீரரைச் சந்திக்க, ஊக்கம் உள்ள பாராட்டாளர்களின் கும்பல் ஒன்று வந்திருந்தது, ஆனால் ஊழியக்காரரை வரவேற்க எவரொருவரும் வரவில்லை. ஊழியக்காரரின் மனைவி, பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு, ஏமாற்றமுற்றிருந்த தனது கணவரைத் தேற்றினார்: "இது பொருட்படுத்தக்கூடிய இல்லம் திரும்புதல் அல்ல." தேவனுக்காக மேற்கொள்ளப்படும் சிறிய பணிப்பொறுப்பும்கூட அங்கீகரித்து உணரப்படும் நாள் வரும் என்பதற்காகத் தேவனுக்கு நன்றி (மத்தேயு 25:31-46). ஆனால் இவ்வாழ்வில் நாமும்கூட அதே பாராட்டுதலை வெளிப்படுத்தினால், அது அற்புதமான விஷயமாக இராதா?

இன்னொருவர், "ஆனால் நாம் மக்களை, அவர்களின் ஆவிக்குரிய செயல்பாட்டிற்காகக் கனம் செய்தால், இது மேட்டிமையை உருவாக்குமே!" என்று கூறி மறுப்புரைக்கலாம். அவ்வாறு உருவாக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. பிலிப்பியர் 2ம் அதிகாரத்தில் பவுல், "வீண்பெருமை"யைக் கண்டனம் செய்தார் (வசனம் 3), அதே வேளையில் சகோதரரை "கனமாய் எண்ணுங்கள்" என்றும் அவர் ஊக்கப்படுத்தினார் (வசனம் 29). பின்வருமாறு எழுதிய ஏர்ல் பால்மர் கருத்தை நான் ஒப்புக்கொள்கிறேன்:

> *"உங்களுக்கு நன்றி" என்று மிக அதிகம் கூறியதாலோ அல்லது ஒருவர் மற்றவரிடம் மிகுந்த பிரியம் காண்பித்ததாலோ, எந்த ஐக்கியத்துவமாவது ஊறுபடுத்தப்பட்டதாக நான் கேள்விப்பட்டதில்லை. ஆனால் பல சபைகள் தங்கள் உறுப்பினர்கள் மத்தியில் முழுமையான பிரியம் கொண்டிருப்பதில் குறைவுபட்டதால், உலர்ந்துபோய், நிறம் மங்கி நொறுங்கக் கூடியவையானது பற்றி நான் அறிந்து இருக்கிறேன்.*[12]

"தேவனுக்கு மாத்திரமே செலுத்தப்பட வேண்டிய கனத்தைப் பெற்றுக்கொள்ள எவரொருவரும் பாத்திரராக இருப்பதில்லை என்பது உண்மையே, ஆனால் நாம் மனிதர்களுக்குச் செலுத்தக்கூடிய கனத்தின் வகையொன்றும் உள்ளது."[13] *பவுல் தாமே, பிலிப்பியர் 2:25-30ல் எப்பாப்பிரோதீத்துவைப் பற்றிய தமது மதிப்பீட்டில், அவரைக் கனப்படுத்தினார். "கிறிஸ்துவைப் பின்பற்றிய தாழ்மைமிக்க இந்தப் பின்பற்றாளர் வாழ்ந்திருந்த, மதில்கள் சூழ்ந்த நகருக்கு முன்பாக, ஒருகாலத்தில் உலகத்தின் பேரரசிற்காகப் போராடிய ரோமப் போர்வீரர்களின் பெயர்களைக்கூட மனிதர்கள் மறந்து போயிருக்கும்போது ... புகழ்ச்சியின் இவ்வார்த்தைகள் வாசிக்கப்படும்."*[14] *கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், "[மற்றவர்கள்] தங்கள் முக்கியத்துவத்தையும் நமக்குப் பொக்கிஷமாக்கப்பட்ட அவர்களின் மதிப்பையும் உணரச் செய்யும் தாராளமான அன்பை" அளிக்க வழிகளைக் கண்டறிய வேண்டும்.*[15]

முடிவுரை

பிலிப்பியருக்கு நிருபத்தை எழுதியதில் பவுல், சுயநலமற்ற தன்மையின் அவசியத்தை வெளிப்படுத்தினார் (2:3, 4). பின்பு அவர் சுயநலமற்ற தன்மையின் நிறைவான உதாரணத்தைக் கொடுத்தார்: இயேசு (2:5-8). அடுத்ததாக அவர் "கிறிஸ்துவின் சிந்தை" கொண்டிருந்த இரண்டு மனிதர்களின் உதாரணத்தைக் கொடுத்தார்: தீமோத்தேயு மற்றும் எப்பாப்பிரோதீத்து. என்ன ஒரு மேன்மை யான மனிதர்கள்; என்ன நல்ல மனிதர்கள்; நமக்கு என்ன ஒரு மிகச்சிறப்பான உதாரணங்கள்!

கடந்த காலத்தில், "ஆட்கள் தேவை" என்று கூறும் விளம்பரங்களைக் காணுதல் சாதாரணமாக இருந்தது. (இன்றைய நாட்களில் இவ்வகையான விளம்பரங்கள் மிகவும் பொதுவானவைகளாக உள்ளன: "உதவி தேவை.") "ஆட்கள் தேவை" என்ற வார்த்தைகளைத் தொடர்ந்து, அவர்கள் எந்த வேலைக்குத் தேவையோ, அந்த வேலையைப் பற்றிய விவரிப்புகள் தரப்பட்டன. ஆண்கள் - மற்றும் பெண்கள் இன்னமும் "தேவைப்படுகின்றனர்": மற்றவர்களுக்காக ஆழ்ந்த அக்கறைகொண்டிருந்த தீமோத்தேயு போன்ற, மற்றும் தங்களையே இடர்ப்பாட்டிற்கு உட்படுத்தக்கூடும் வேளையிலும் அவருக்கு [தேவனுக்கு] ஊழியம் செய்வதற்குத் துணிந்த எப்பாப்பிரோதீத்து போன்ற கிறிஸ்தவர்கள் தேவை!

குறிப்புகள்

[1]Diogenes the Cynic (c. 400-c. 325 B.C.), quoted in John Bartlett, *Bartlett's Familiar Quotations,* 16th ed., ed. Justin Kaplan (Boston: Little, Brown, and Co., 1992), 77. [2]J. Dwight Pentecost, *The Joy of Living: A Study of Philippians* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1973), 109. [3]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton Ill.: Victor Books, 1989), 82. [4]John F. Walvoord, *Philippians: Triumph in Christ,* Everyman's Bible Commentary (Chicago: Moody Press, 1971), 71. [5]William Barclay, *The Letters to the Philippians, Colossians, and Thessalonians,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 49. [6]Pat Edwin Harrell, *The Letter of Paul to the Philippians,* The Living Word Commentary series, ed. Everett Ferguson (Austin, Tex.: R. B. Sweet Co., 1969), 110. [7]Barclay, 48. [8]James M. Tolle, *Notes on Philippians* (San Fernando, Calif.: Tolle Publications, 1972), 47. [9]Avon Malone, *Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 70 n69. [10]இந்த வரலாறு பற்றி ஒரு விபரம், Charles R. Swindoll, *Laugh Again* (Dallas: Word Publishing, 1992), 120-21 என்ற புத்தகத்தில் உள்ளது.

[11]Tolle, 44. [12]Earl, F. Palmer, *Integrity in a World of Pretense: Insights from the Book of Philippians* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 118. [13]Tolle, 46. See Ephesians 6:2; 1 Timothy 5:17; 6:1; Hebrews 12:9; 1 Peter 2:17; 3:1-7. [14]Charles R. Erdman, *The Epistle of Paul to the Philippians* (Grand Rapids, Mich.: Baker Book House, 1983), 105. [15]Palmer, 117.

10

"கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள்"

[பிலிப்பியர் 3:1-3]

ஒருவேளை நீங்கள் ஒரு பேச்சாளரின் உரையைக் கவனிப்பதில் பின்வரும் அனுபவத்தைக் கொண்டு இருந்திருக்கலாம். நீண்ட நேரம் பேசியபின்பு அவர், "முடிவாக ..." என்று கூறுகிறார். நீங்கள் நேராகி, உங்கள் பொருட்களை சேகரித்துக்கொண்டு, உங்கள் பிள்ளைகள் புறப்படத் தயாராக இருப்பதை உறுதிசெய்து கொண்டு, மற்றபடி அங்கிருந்து புறப்படத் தயாராகிறீர்கள். பின்பு அந்தப் பேச்சாளர், தொடர்ந்து ... தொடர்ந்து ... பேசுகிறார். அந்த வேளையில் உங்கள் உணர்வு எவ்வாறாக இருந்தாலும் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தின் 3ம் அதிகாரம் அவ்வாறே இருப்பதாகக் காணப்படுகிறது. இந்த அதிகாரத்தைப் பவுல், "மேலும் என் சகோதரரே" [இது ஆங்கில வேதாகமத்தில் "Finally, my brethren" *என்று உள்ளது] என்ற வார்த்தைகளுடன் தொடங்கினார் - மற்றும் அவர் இன்னும் இரண்டு அதிகாரங்களைத் தொடர்ந்தார்.*

இவ்வதிகாரத்தில், "கடைசியாக" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (loipon என்ற) கிரேக்க வார்த்தை, ஒரு புதிய சிந்தனையை அறிமுகப்படுத்தக் கூடிய ஒரு மாறுதலுக்கான வார்த்தையாக இருக்க முடியும் என்று சுட்டிக்காண்பிக்கின்றனர். [எனவேதான் தமிழ் வேதாகமத்தில் இது, "மேலும்" என்ற தொடர்வினைச் சொல்லாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.] இங்கு பவுல், பிலிப்பியர் 1:13ல் "மற்ற யாவருக்கும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்றொடரின் பாகமாயிருக்கும், மற்றும் 4:3ல் "மற்ற என் உடன்வேலையாட்களோடுங்கூட" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்றொடரின் பாகமாயிருக்கும் வார்த்தையின் ஒரு வடிவத்தைப் பயன்படுத்தினார் என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர். 3:1ல் இது, "மற்றும் இப்பொழுது" (Goodspeed), *"என்ன நடந்தாலும்"* (LB) *அல்லது அதைப்போன்ற சொற்றொடராக மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். அவர்கள் கூறுவது சரியாக இருக்கலாம் - ஆனால் பெரும்பான்மையான மொழிபெயர்ப்புகள், "கடைசியாக" என்ற வார்த்தையை* (KJV, NKJV, ASV, NASB, NIV, RSV, NRSV, CEV) *அல்லது "முடிவாக"* (CJB, TEV) *என்ற வார்த்தையையே தரவழைக்கின்றன.*[1]

பிலிப்பியருக்கு எழுதிய நிருபம், பவுலின் நிருபங்களில் (ரோமருக்கு எழுதிய நிருபம் போன்ற) சிலவற்றைப்போல் முறைப்படுத்தப்பட்ட ஆராய்ச்சி ஏடாக இருப்பதில்லை என்பதைச் சிந்தையில் வைத்துக்கொள்ளுங்கள். இது ஒரு தனிப்பட்ட நிருபமாக இருந்தது - இப்படிப்பட்ட நிருபங்கள்,

முறையான ஒருங்கமைவின்மீது சிறிதளவே அக்கறை கொண்டவையாக, ஒரு பாடக்கருத்திலிருந்து இன்னொரு பாடக்கருத்திற்குத் தாவிச் செல்பவைகளாக உள்ளன: ஒரு தனிப்பட்ட நிருபம் என்பது, ஒரு நண்பர் வந்து நம்மைச் சந்தித்தல் போன்றதாக உள்ளன. நீங்கள் எப்போதாவது, உங்கள் நண்பர் வந்து உங்களைச் சந்தித்துவிட்டு, பிரிவு சொல்லிக்கொண்டு எழுந்து கதவருகே சென்று - ஆனால் அங்கே நின்றுகொண்டு இன்னொரு முப்பது நிமிடங்கள் பேசிய அனுபவத்தைக் கொண்டிருக்கிறீர்களா?

இருப்பினும், "மேலும், என் சகோதரரே" என்ற வார்த்தைகள் எவ்வாறு விளக்கியுரைக்கப்பட்டாலும், அவைகளைத் தொடர்ந்து வரும் பின்வரும் வலிவார்ந்த முக்கியமான கருத்தை வலியுறுத்தவே பவுலினால் அவை பயன்படுத்தப்பட்டன: "மேலும், என் சகோதரரே, *கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள்*" (பிலிப்பியர் 3:1அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

நினைவூட்டுதல் (3:1அ)

சந்தோஷமாயிருத்தல் என்பது இந்த நிருபத்தில் திரும்பத் திரும்ப வரும் ஒரு ஆய்வுக்கருத்தாக உள்ளது. முன்பு அவர் சந்தோஷமாயிருத்தலைப் பற்றிப் பேசியிருந்தார் (காண்க 1:18; 2:17, 18, 28). இங்கு அவர் தமது வாசகர்களை "சந்தோஷமாயிருக்கும்படி" திரும்பவும் வேண்டிக் கேட்டுக்கொண்டார். "சந்தோஷமாயிருங்கள்" என்பது நிகழ்கால வினைச் சொல்லாக உள்ளது, இது தொடர்ந்து சந்தோஷமாயிருத்தலைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. 3:1ல் அப்போஸ்தலர் குறிப்பிடத்தக்க கருத்தொன்றைக் கூடுதலாகச் சேர்த்தார்: "*கர்த்தருக்குள்* சந்தோஷமாயிருங்கள்" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). ஒருவேளை, பிலிப்பியர்கள் மீது என்ன துன்பங்கள் வந்து விழுந்தாலும், அவர்கள் "கர்த்தருக்குள் இருந்தனர்" எனவே சந்தோஷமாயிருக்க அவர்கள் எப்போதுமே காரணம் கொண்டிருந்தனர் என்பது பவுலின் கருத்தாக இருக்கலாம். அலெக் மோட்யெர் என்பவர், "அவருக்குள் உங்கள் சந்தோஷத்தைக் கண்டறியுங்கள்" என்று பவுல் அர்த்தப்படுத்தியதாக எழுதினார்.[2] உங்கள் சூழ்நிலை எதுவாக இருந்தாலும், நீங்கள் "கர்த்தருக்குள்" இருந்தால், சந்தோஷமாயிருக்க நீங்கள் காரணத்தைக் கொண்டிருப்பீர்கள்:

> நீங்கள் உங்கள் உடைமைகளை அல்லது உங்கள் பணத்தை
> இழந்துபோகலாம் ...
> உங்கள் துணை உங்களைக் கைவிட்டுப் போகலாம் அல்லது உங்கள்
> பிள்ளைகள் உங்களை ஏமாற்றலாம் ...
> உங்கள் உடல்நலம் தவறலாம் அல்லது உங்கள் அடிவைப்புகள் தவறலாம் ...
> நீங்கள் இன்னும் "கர்த்தருக்குள்" இருக்கிறீர்கள் - எனவே
> சந்தோஷமாயிருங்கள்!

அவன் மலோன் என்பவர், "ஒருவர் எப்போதுமே சம்பளநாளிலும் நல்ல வானிலை நிலவும் நாளிலும் சந்தோஷமாயிருக்க முடியாது, ஆனால் கிறிஸ்தவர்கள் எப்போதுமே 'கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்க' முடியும். என்று எழுதினார்."[3] ... கிறிஸ்துவுடனான உறவு என்பது கிறிஸ்தவ வாழ்வில் மாபெரும் உறுதிப்பாடாக உள்ளது. வில்லியம் பார்க்ளே என்பவர் இந்த உறவை "கிறிஸ்தவ சந்தோஷத்தின் அழிக்க இயலாத தன்மைக்கு" அடிப்படை என்று

குறிப்பிட்டார்.[4] வேறொரு இடத்தில் பவுல், *எந்த ஒரு விஷயமும்*, "கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று" வலியுறுத்தினார் (ரோமர் 8:38, 39).

சந்தர்ப்பப் பொருளின் வெளிச்சத்தில், பவுல் "கர்த்தருக்குள் *மாத்திரம்* சந்தோஷமாயிருங்கள்" என்றும் கூறியிருக்கலாம். சிலர், *தாங்கள்* செய்துள்ளவற்றில் சந்தோஷமாயிருந்தனர், ஆனால் பவுல் தமது வாசகர்கள், கர்த்தருக்குள்ளும் *அவர்* செய்திருந்தவற்றிற்குள்ளும் மாத்திரம் சந்தோஷமாயிருக்க வேண்டும் என்று விரும்பினார்.

திரும்பக் கூறுதல் (3:1ஆ)

சந்தோஷம் என்ற ஆய்வுக்கருத்திற்கு நாம் மறுபடியும் திரும்புவோம், ஆனால் ஒரு சுற்றுப் பாதை வழியாக நாம் அதற்குத் திரும்புவோம். பவுல், சந்தோஷமாயிருங்கள் என்ற தமது அறிவுறுத்துதல்களுக்குப் பின்பு, பின்வரும் புதிரான வார்த்தைகளைக் கூடுதலாகக் கூறினார்: "எழுதினவைகளையே எழுதுவது எனக்கு வருத்தமல்ல, அது உங்களுக்கு நலமாயிருக்கும்" (வசனம் 1ஆ). "எழுதினவைகளையே" என்பதைக் கொண்டு அவர் எதை அர்த்தப்படுத்தினார் என்று நாம் உறுதியாகக் கூற இயலாது என்பதால், அவ்வார்த்தைகளை நான், "புதிரானவை" என்று அழைக்கிறேன்.

- அவர் இதே போன்ற தலைப்புக்களைக் கலந்துரையாடிப் பிலிப்பியருக்கு இதற்கு முன்பு எழுதிய ஒரு கடிதத்தைக் குறிப்பிட்டு இருக்கலாம். ஏவுதல் பெற்ற மனிதர்களால் எழுதப்பட்ட ஒவ்வொரு கடிதமும் பாதுகாக்கப்பட்டு இருப்பதில்லை. யூஜின் பீட்டர்சன் என்பவரின் பொழிப்புரை வேதாகமத்தில், "முந்திய கடிதங்களில் நான் எழுதி யவற்றைத் திரும்ப எழுதுவதை நான் பொருட்படுத்துவதில்லை, … எனவே இங்கு இவ்வாறு செல்கிறது" என்றுள்ளது.[5]
- பவுல் இந்தக் கூற்றிற்கு முன்வந்த வார்த்தைகளைக் குறிப்பிட்டு இருக்கலாம்: "கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள்." அவர் அந்தப் புத்திமதியைக் திரும்பக் கூறுவதைப் பற்றிக் கவலைப்படவில்லை (காண்க 4:4). பிலிப்ஸ் என்பவரின் மொழிபெயர்ப்பு வேதாகமத்தில், "இதைப்போன்ற ஒரு அறிவுரைத் துணுக்கைத் திரும்பக்கூறுதல் என்பது எனக்குச் சலிப்பு ஏற்படுத்துவதில்லை" என்றுள்ளது. பிலிப்பியர்கள் சந்தோஷத்திற்காகக் கர்த்தரைக் கண்ணோக்கினர் என்றால், இது அவர்களைப் பவுல் கலந்துரையாடப்போகிற சுயத்தைச் சார்ந்திருத்தலுக்கு எதிராகக் காத்துக்கொள்வதாக இருக்கும்.
- பவுல், பின்தொடரும் வார்த்தைகளைக் குறிப்பிட்டு இருக்கலாம்: "நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள் …" "எழுதினவைகளையே" என்பது, சரியற்ற நோக்கங்களையும் நடவடிக்கைகளையும் கொண்டிருந்தவர்களைப் பற்றிய முந்திய எச்சரிக்கைகளைக் குறிப்பிடலாம் (காண்க 1:15அ, 17, 28).

பவுலின் குறிப்புக் கருத்து எதுவாக இருந்தாலும், நாம் குறைந்த பட்சம் பின்வருவதைக் கற்றுக் கொள்ள முடியும்: அடிப்படைச் சத்தியங்களைத்

திரும்பக் கூறுதல் என்பது மோசமானதல்ல. திரும்பக் கூறுதல் என்பது அதிகமாகக் செய்யப்பட்டதாக இருக்கக் கூடும், ஆனால் சில விஷயங்கள் அவசியமானவையாக இருக்கின்றன. ஒவ்வொரு பெற்றோரும் ஒவ்வொரு கல்வியாளரும் அறிந்துள்ளபடி, திரும்பக் கூறுதல் என்பதே மக்கள் கற்றுக்கொள்வதற்கான வழியாக உள்ளது. மற்றும் - பவுல் செய்தது போன்று - ஆவிக்குரிய சத்தியங்களைத் திரும்பக்கூறுதல் என்பது, கேட்பவர்களுக்கு "பாதுகாப்பானதாக" உள்ளது. பேதுரு பின்வருமாறு எழுதினார்,

> *இதினிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்போழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எனக்கு அறிவித்தபடி நான் என் கூடாரத்தைவிட்டுப்போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து, இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டி எழுப்பிவிடுவது நியாயமென்று எண்ணுகிறேன் (2 பேதுரு 1:12-14).*

சிலர் "அதே பழைய சத்தியங்களை எங்களுக்குக் கூறிக்கொண்டிருக்காதீர்கள்! எங்களுக்குப் புதிய மற்றும் மாறுபாடான விஷயங்கள் தேவைப்படுகின்றன!" என்று முறையிடுகின்றனர். இது நடக்கும் என்று பவுல் முன்னெதிர்பார்த்தார்:

> *ஏனென்றால், அவர்கள், ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு. சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும் (2 தீமோத்தேயு 4:3, 4).*

மலோன் என்பவர், "இன்றைய நாட்களில் உரையைக் கேட்பவர்கள், பவுலின் சிந்தனையைத் திருப்புகின்றனர், புதுமையில் குறைபாட்டைக் கண்டு, தங்களுக்குத் தாங்களே புலம்புதலையும் சோர்வையும் திரும்பத் திரும்பத் தரத் தொடருகின்றனர்" என்று எழுதினார். அத்துடன் கூடுதலாக அவர், "சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டுமென்றால், புதுமை என்பது அக்கறைக்குரியதல்ல. ... 'இது புதியதா?' என்பதல்ல ஆனால் 'இது உண்மையானதா?' என்பதே வலிவார்ந்த கேள்வியாக உள்ளது" என்றும் எழுதினார்.[6]

தேவனுடைய வசனத்தின் போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் என்ற வகையில் நாம், "பழைய, பழையதான" [இருப்பினும்] எப்போதும் புதியதான வரலாற்றை - வேதவசனத்தின்மீது கூட்டப்பட்ட உட்கண்ணோட்டத்துடன், புதிய விவரிப்புக்களுடன் மற்றும் ஒருவேளை, உரையைக் கேட்பவர்கள் காண்பதற்கான வரைபட அட்டைகள் போன்ற போதனை உதவிப் பொருட்களுடனும்கூட - காத்துக் கொள்வதில் நம்மால் இயன்ற அளவுக்கு மிகமிகச் சிறப்பாகச் செயல்பட வேண்டும். இருப்பினும் நாம் "வேறொரு சுவிசேஷத்தை" பிரசங்கிக்க அழுத்தப்படுதலில் விழுந்துவிடக் கூடாது (காண்க கலாத்தியர் 1:6). அடிப்படை சத்தியங்களைப் பகிர்ந்து கொள்வதில் நாம் ஒருக்காலும் இளைப்படையாதிருப்போமாக - ஏனெனில் இது நமது உரையைக் கேட்பவர்களைப் பலப்படுத்தி பாதுகாக்கும்! இளம் பிரசங்கியாரான

தீமோத்தேயுவுக்குப் பவுல், "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்தி சொல்லு" என்று கூறினார் (2 தீமோத்தேயு 4:2) மார்ஷல் கீபிள் என்பவர், "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் என்பது, அவர்கள் அதை விரும்பும்போதும் மற்றும் விரும்பாதிருக்கும்போதும்" என்று அர்த்தப்படுகிறது எனக் கூறினார்.

துறத்தல் (3:2)

முந்திய வசனங்களின் மீதான நேர்மறையான வலியுறுத்தத்திற்குப் பின்பு, 2ம் வசனம் ஏறக்குறைய அதிர்ச்சி ஏற்படுத்துவதாக வருகிறது: "நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், சுன்னத்துக்காரருக்கு எச்சரிக்கையாயிருங்கள்." இது அனேகமாக, இந்த நிருபத்தின் மிகவும் எதிர்மறையான கூற்றாக உள்ளது எனலாம். "மேலும்" என்ற வார்த்தையுடன் தொனியில் திடீரென்று ஏற்படும் மாற்றமானது, பிலிப்பியருக்கு எழுதிய நிருபம், பல்வேறு கடிதங்களின் துணுக்குகளால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று முடிவு செய்யும்படி சிலரை வழிநடத்தியுள்ளது; ஆனால் இந்த யூகத்திற்கு, புறம்பான ஆதாரம் எதுவும் இருப்பதில்லை.

தொனியில் ஏற்படும் மாற்றத்தைப் புரிந்து கொள்வதில் நான் பிரச்சனை எதுவும் கொண்டிருப்பதில்லை. பவுல் தாம் நேசித்த மக்களின் மீது கவனம் குவித்தவராக இருந்தார், ஆனால் அவர், அடுத்ததாக அவர்களுக்குத் தீங்கு இழைக்கக் கூடியவர்கள் மீது தமது கவனத்தைத் திருப்பினார். நீங்கள் யாரையேனும் வலிவாக நேசித்தீர்கள் என்றால், அவருக்கு அல்லது அவளுக்குத் துன்பம் தருபவரை நீங்களும்கூட வலிவாக எதிர்ப்பீர்கள். எனக்கு என் தாயாரின் நினைவு வருகிறது. அவர்களை நீங்கள் சந்தித்தால், அவர்கள் ஒரு சிறிய, மென்மை யான, நேசிக்கிற பெண்ணாக உங்கள் மனதைக் கவர்ந்திருப்பார்கள். இருப்பினும் பின்வருவதை நான் உங்களுக்குக் கூறட்டும்: அவருக்குப் பிரியமானவர்களை யாரேனும் அச்சுறுத்தினர் என்றால், அவர் ஒரு நூறு பவுண்டுகள் அழுத்தமான உணர்ச்சிவசமிக்க சீற்றத்தில் திரும்புவார்! மலோன் என்பவர், "இந்த நிருபம் இவ்விடத்தில் இதன் அதிக சாந்தமான வசனப்பகுதிகளைக் காட்டிலும் அன்பின் கடிதமாகக் குறையாதுள்ளது. உங்கள் வீடு தீப்பிடித்துக் கொண்டால், நீங்கள் உங்களுக்குப் பிரியமானவர்களை நோக்கி உரக்கக் கூக்குரல் இடுவீர்கள். சூழ்நிலையின் மிகைத்தன்மையானது செயல்பாட்டளவுகளின் மிகைதன்மையை வேண்டுகிறது" என்று விளக்கம் அளித்தார்.[7]

பவுலுக்குப் பிரியமான பிலிப்பியர்களின் ஆவிக்குரிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தியது யார்? யூதமார்க்கத்தைத் தழுவக் கட்டாயப்படுத்தும் யூதர்கள் என்று சிலர் நினைக்கின்றனர் (காண்க மத்தேயு 23:15), ஆனால் இவர்கள் கிறிஸ்தவத்தைத் தழுவிக் கொண்ட யூதமார்க்கப் போதகர்கள் என்று பெரும்பான்மையானோர் ஒப்புக்கொள்கின்றனர். 2 கொரிந்தியர் நிருபத்தில் பவுல் யூதமார்க்கத்துப் போதகர்களைப் பற்றிக் கலந்துரையாடியபோது, அவர் இவ்விடத்தில் பயன்படுத்தியுள்ளது போன்ற சொற்றொடர்களை அங்கும் பயன்படுத்தினார் (காண்க 2 கொரிந்தியர் 11:13). யூதமார்க்கத்துப் போதகர்கள், கிறிஸ்தவர்களாக மாறியிருந்த யூதர்களாக, ஆனால் இன்னமும் மோசேயின் பிரமாணத்தைப் பற்றிக்கொண்டு கிறிஸ்தவர்கள் யூதத்துவத்தைத் தழுவிக்

கொள்வது அவசியம் என்று போதித்தனர். இவர்களைப் பற்றி நாம், நடபடிகள் 15ல் பின்வருமாறு வாசிக்கிறோம்:

> *சிலர் [யூதக்கிறிஸ்தவர்கள்] யூதேயாவிலிருந்து வந்து: நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனமடையாவிட்டால், இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று [புறஜாதி] சகோதரருக்குப் போதகம்பண்ணினார்கள் (வசனம் 1).*

> *அப்பொழுது பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளான சிலர் எழுந்து, அவர்களை [புறஜாதியாரை] விருத்தசேதனம்பண்ணுகிறதும் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பிக்கிறதும் அவசியம் என்றார்கள் (வசனம் 5).*

இவ்விஷயத்தைப் பற்றிக் கலந்துரையாட, அப்போஸ்தலர்களும் மற்ற நடத்துனர்களும் எருசலேமில் ஒன்றுகூடினர் (நடபடிகள் 15:6-29). அவர்களின் முடிவானது இந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைத்திருக்க வேண்டும். ஏவுதல் பெற்ற மனிதர்கள், செயல்விளைவில் "புறஜாதியார்கள் விருத்தசேதனம் செய்விக்கப்படுதலோ அல்லது மோசேயின் நியாயப்பிரமாணத்தின் மற்ற சடங்குகளையும் சடங்காச்சாரங்களையும் கடைப்பிடிப்பதோ அவசியமில்லை*" என்று கூறினார்கள் (காண்க வசனங்கள் 24, 28, 29). இருப்பினும் ஆழமாக வேருன்றிய ஒருசார்புக் கொள்கையை அழித்துப் போடுதல் என்பது கடினமாக உள்ளது. பவுல் கலாத்தியருக்கு எழுதிய நிருபம், இந்தத் தவறைப் பற்றி நேரடியாக விவாதித்தது (காண்க கலாத்தியர் 5:2, 3, 6; 6:12, 13, 15) மற்றும் அவர் ரோமருக்கு எழுதிய நிருபம் இதைப்பற்றி மறைமுகமாக விவாதித்தது (காண்க ரோமர் 2:28, 29). (இன்றைய நாட்களில் - ஓய்வுநாளில் [ஏழாம் நாள்] ஆசரித்தல் போன்ற - நியாயப்பிரமாணத்தின் பகுதிகளைக் கொண்டு கிறிஸ்தவர்களைக் கட்டுப்படுத்த முயற்சி செய்யும் மக்களை இன்றைக்கும் நாம் காண்கிறோம்.)*

இந்த வேதப்புரட்டு பிலிப்பி நகரில் இருந்த சபையில் அபாயத்தை முன்னிறுத்தியது என்பதை நம்பப் பவுல் காரணம் கொண்டிருந்தார். ஒருவேளை, அவருக்கு இதைப் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தி இருக்கலாம். ஒருவேளை, இது பிலிப்பி நகரில் இருந்து வந்திருந்த - பிலிப்பியர்கள் எப்பாப்பிரோதீத்துவுக்காக எவ்வளவாய் வருத்தப்பட்டனர் என்பதை அவர் அறியச் செய்த செய்தியாகிய - தற்போதய செய்தியின் பாகமாக இருந்திருக்கலாம். நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதை வலியுறுத்திக் கொண்டிருப்பவர்கள், ஒருநாளில் அங்கு தங்களை வெளிப்படுத்துதல் தவிர்க்க இயலாததாக இருந்தது என்பதைப் பவுல் அப்போதுதான் அறிந்தார் என்பது சாத்தியமானது. எவ்வகையிலும், அவர் தமது வாசகர்களை எச்சரிக்க, ஏறக்குறையத் தமது வாய்மொழி ஆயுதசாலையின் ஒவ்வொரு ஆயுதத்தையும் பயன்படுத்தினார். அவரது வார்த்தைகள் உண்மையிலேயே எவ்வளவு பேரழிவைச் சுட்டிக்காண்பிப்பவையாக இருந்தன என்பதை நீங்கள் மதித்து உணருவதற்கு, நீங்கள் யூதருடைய மன அமைவில் உங்களை வைத்துப் பார்ப்பது அவசியமாக உள்ளது.

பவுல், "நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என்று தொடங்கினார் (வசனம் 2அ). நாய்கள் வளர்ப்புப் பிராணிகளாக அதிகம் செல்லம் கொடுத்து வளர்க்கப்படும் இடத்தில் நீங்கள் வாழ்ந்திருந்தால், இவற்றை உங்கள் மனதில்

இருந்து எடுத்துப் போட்டுவிடுங்கள். மாறாக, "கிழக்கத்திய நகரங்களில் வீடின்றி, உரிமையாளர்கள் இன்றித் தெருவில் சுற்றித்திரியும், தெருக்களில் கிடைக்கும் கழிவு மற்றும் அசுத்தங்களை உட்கொண்டு, தங்களுக்குள் சண்டையிட்டு, தெருவில் செல்பவர்களைத் தாக்கும் நாய்களைப்" பற்றி நினைத்துப் பாருங்கள்.[8] "நாய்கள்" என்ற சொற்றொடர் வேதாகமத்தில் எப்போதுமே இகழ்ச்சியான கருத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது (காண்க உபாகமம் 23:18; 1 சாமுவேல் 24:14; 2 இராஜாக்கள் 8:13; சங்கீதம் 22:16, 20; மத்தேயு 7:6; 15:26, 27; வெளிப்படுத்தின விசேஷம் 22:15). இவ்விடத்தில் முரண்கருத்தின் தொடுகை ஒன்றுள்ளது. ரபீக்கள் பின்வரும் கூற்று ஒன்றைக் கொண்டிருந்தனர்: "உலகத்து மக்களினங்கள் [அதாவது, புறஜாதியார்கள்] நாய்களைப் போன்றவர்களாக உள்ளனர்."[9] இப்போது பவுல் இதைச் சுற்றித் திருப்பிப்போட்டு, இந்த யூதர்கள் (கிறிஸ்தவர்களாகியும் இன்னமும் யூதர்களாக இருந்தவர்கள்), நாய்களைப் போன்று இருந்தனர் என்று கூறினார்.

பின்பு பவுல் தமது உரையைக் கேட்டவர்களிடத்தில், "பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என்று கூறினார் (பிலிப்பியர் 3:2ஆ). கள்ளப்போதகர்கள் தங்களை நன்மையின் ஊழியக்காரர்கள் என்று சந்தேகத்திற்கு இடமின்றி நினைத்தனர், ஆனால் அவர்கள் பொல்லாத வேலையாட்கள் என்று அப்போஸ்தலர் கூறினார் - ஏனெனில் அவர்கள் தேவன் கட்டுவிக்காததைக் கொண்டு புறஜாதியாரைக் கட்டுவிக்க நாடினர். அவரது வசனத்துடன் ஒன்றைச் சேர்க்கும் செயலினால் அவர்கள் குற்றப்பட்டு இருந்தனர் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 22:18).

அடுத்ததாகப் பவுல், "சுன்னத்துக்காரருக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என்று பிலிப்பியர்களை எச்சரித்தார் (பிலிப்பியர் 3:2இ). மூலமொழி வசனத்தில் "கள்ள விருத்தசேதனம்" (Gk.: *katatomen*) என்பது வார்த்தை விளையாட்டாக உள்ளது. 3ம் வசனத்தில் காணப்படுகிறபடி *peritome* என்பது "விருத்தசேதனம்" என்பதற்குரிய கிரேக்க வார்த்தையாக உள்ளது. *Peritome* என்பது, "சுற்றி" (*peri*) என்று அர்த்தப்படும் முன்னிடைச் சொல்லை "வெட்டுதல்" (*tome*) என்பதற்கான வார்த்தையுடன் சேர்த்துப் பெற்ற ஒரு கூட்டு வார்த்தையாக உள்ளது. இவ்வார்த்தையில் உள்ள *peri* என்ற முன்னிடைச் சொல்லிற்குப் பதிலாக "கீழே" என்று அர்த்தப்படும் *kata* என்ற முன்னிடைச்சொல் சேர்க்கப்பட்டு 2ம் வசனத்தில் பவுலினால் இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த மாற்றத்துடன் இவ்வார்த்தை, யூதர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட விருத்தசேதனச் சடங்கு என்றிருத்தலை நீக்கிப்போட்டு, புறஜாதியார்களால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த உடலை ஊனப்படுத்தும் செயலைக் குறிப்பதாகி விட்டது. NASB வேதாகமத்தின் எனது பிரதியில், பிலிப்பியர் 3:2க்கு அருகில், "கள்ள விருத்தசேதனம்" ["சுன்னத்து"] பற்றிப் பின்வரும் பக்கக் குறிப்பு உள்ளது: "நேரடியான உடல் ஊனப்படுத்துதல்." பல நவீன மொழிபெயர்ப்புகள் "ஊனப்படுத்துதல்" என்ற வார்த்தையின் ஒரு வடிவத்தைக் கொண்டுள்ளன: NKJV, NIV, NRSV, CJB. கிரேக்கப் பழைய ஏற்பாட்டில் (செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பில்) *katatome* என்ற வார்த்தையின் ஒரு வடிவமானது, பாகாலின் தீர்க்கதரிசிகள் தங்கள் உடல்களைக் கிழித்துக் கொள்ளும் வகையை விவரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது (1 இராஜாக்கள் 18:28).

விருப்பத்துடன் செய்யப்படும் மருத்துவ நடைமுறை என்ற

வகையில் விருத்தசேதனம் என்பதில் தவறு எதுவும் இல்லை; ஆனால் மக்கள் அதை, அவசியமான மதச்சடங்கு என்று கிறிஸ்தவர்கள்மீது கட்டுவிக்கும்போது, பவுல் அதை "ஊனமாக்குதல்" என்று பெயரிட்டார். விருத்தசேதனச் செயல் என்பது ஆவிக்குரிய வகையில் மதிப்பு எதையும் கொண்டிருப்பதில்லை. கலாத்தியர்களுக்கு அப்போஸ்தலர், "கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்" என்று கூறினார் (கலாத்தியர் 5:6; காண்க 6:15). மீண்டுமாக அவர், "விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறதே காரியம்" என்று கூறினார் (1 கொரிந்தியர் 7:19).

நம்மில் பெரும்பான்மையானவர்கள் பின்வரும் எச்சரிக்கை அடையாளக் குறிப்புகளைக் கண்டிருக்கிறோம்: "எச்சரிக்கை! சாலை மூடப்பட்டுள்ளது!"; "எச்சரிக்கை! பாலம் பழுதடைந்துள்ளது!" இப்படிப்பட்ட அடையாளக் குறிப்புகளைப் புறக்கணித்தல் என்பதை நாம் நமது சொந்த இடர்ப்பாட்டிலேயே செய்பவர்களாக இருப்போம். செயல்விளைவில் பவுல் பிலிப்பியர்களிடம் "எச்சரிக்கை! எச்சரிக்கை! எச்சரிக்கை!" என்றே கூறினார். இந்தக் கள்ளப்போதகர்கள் நன்கு உடை அணிந்திருக்கலாம். அவர்கள் இணங்கவைக்கும் வகையில் பேசுபவர்களாக இருக்கலாம், பழைய ஏற்பாட்டு வேதவசனங்களை நன்கு அறிந்தவர்களாக இருக்கலாம். இருந்தபோதிலும், அவர்கள் "நாய்களாக," "பொல்லாத வேலையாட்களாக" மற்றும் "சுன்னத்துக்காரர்களாக" இருந்தனர்! "எச்சரிக்கை!" என்று பவுல் கூறினார்.

வெளிப்படுத்துதல் (3:3)

தொடர்ந்து பவுல், "நாமே [*உண்மையான*] விருத்தசேதனமுள்ளவர்கள்" என்று கூறினார் (வசனம் 3ஈ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). "உண்மையான" என்ற வார்த்தை மூல வேதவசனத்தில் இல்லை. பவுல், "நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்" என்று மாத்திரமே கூறினார். "விருத்தசேதனம் உள்ளவர்கள்" என்ற சொற்றொடர் யூதர்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது (காண்க காலத்தியர் 2:8, 9). செயல்விளைவில் அப்போஸ்தலர், "இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களே உண்மையான யூதர்களாக, உண்மையிலேயே தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்றனர்" என்று கூறினார். ரோமருக்கு அவர் பின்வருமாறு எழுதினார்,

> ஆதலால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல. உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது (ரோமர் 2:28, 29).

விருத்தசேதனம் என்பது ஆபிரகாமுக்கும் அவரது சந்ததியார்களுக்கும் தரப்பட்ட உடன்படிக்கை உறவின் அடையாளமாக இருந்தது (ஆதியாகமம்

17:9-14; காண்க யாத்திராகமம் 6:7). "நாங்கள் விருத்தசேதனம் உள்ளவர்கள்" என்று கூறுதலானது, கிறிஸ்தவர்களாகிய நாங்கள் இப்போது தேவனுடைய உடன்படிக்கையின் மக்களாக இருக்கிறோம். நாம் "தேவனுடைய [புது] இஸ்ரவேலாக" இருக்கிறோம் [காண்க கலாத்தியர் 6:16]. நாம் பழங்கால இஸ்ரவேலுக்கு ஏற்படுத்தப்பட்ட வாக்குத்தத்தங்களைச் சுதந்தரித்துக் கொண்டிருக்கிறோம்" (காண்க ரோமர் 9:24-26; 1 பேதுரு 2:9, 10) என்று கூறுதலாக இருந்தது. (இன்றைய நாட்களில் சிலர், மாம்சப்பிரகாரமான இஸ்ரவேல் மக்கள், எதிர்காலத்திற்கான தேவனுடைய திட்டத்தில் செயல்பட இன்னமும் தனித்துவமான பணிப்பொறுப்பைக் கொண்டுள்ளதாகப் போதிக்கின்றனர், ஆனால் அப்படிப்பட்ட போதனை எதுவும் வேதாகமத்தில் இல்லை.)

கிறிஸ்தவர்களே "உண்மையான விருத்தசேதனமுள்ளவர்கள்" என்று உறுதிப்படுத்திய பவுல், "உண்மையான விருத்தசேதனம் உள்ளவர்களின்," "இருதயத்தில் விருத்தசேதனமுள்ளவர்களின்" (காண்க ரோமர் 2:29) மூன்று பண்புகளைப் பட்டியலிட்டார். முதலாவது, அவர்கள் "ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்கின்றனர்" (வசனம் 3ஆ). மூல வசனம் சில சிரமங்களை முன்னிறுத்துகிறது. எனது இருமொழி வேதாகமத்தில் கிரேக்கச் சொற்றொடர் "ஆவி[யினால்] தேவனு[க்கு] ஆராதனை செய்ப[வர்கள்]" என்று அர்த்தப்படுகிறது. இது பல்வேறு வகைகளில் மொழியாக்கம் செய்யப்படலாம், பல்வேறு மொழிபெயர்ப்புகளில் இது பின்வருமாறு உள்ளது.

- KJV: "Worship God in the Spirit." ["தேவனை ஆவியில் ஆராதித்தல்."]
- RSV: "Worship God in spirit." ["தேவனை ஆவியில் ஆராதித்தல்."]
- NKJV: "Worship God in the Spirit." ["தேவனை ஆவியில் ஆராதித்தல்."]
- NASB: "Worship in the Spirit of God." ["தேவனுடைய ஆவியில் ஆராதித்தல்."]
- NIV: "Worship by the Spirit of God." ["தேவனுடைய ஆவியால் ஆராதித்தல்."]
- CEV: "Worship by the power of God`s Spirit." ["தேவனுடைய ஆவியின் வல்லமையால் ஆராதித்தல்."]

"ஆவி" [spirit] என்ற வார்த்தை சிறிய "s" எழுத்தைக்கொண்டு உச்சரிக்கப்பட்டால், பவுல் அனேகமாக, யோவான் 4:24ல் இயேசுவினால் ஏற்படுத்தப்பட்ட கூற்றைப் போன்றதையே ஏற்படுத்தினார் என்றாகிறது: "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்." சரியான எண்ணப்போக்கு இன்றியே ஆராதனையின் சரியான செயல்களைச் செய்யச் சாத்தியக்கூறு உள்ளது. விஷயம் இப்படி இருக்கையில், உண்மையான ஆராதனை நடப்பதில்லை (காண்க 1 கொரிந்தியர் 11:27, 28).

"ஆவி" [Spirit] என்ற வார்த்தை பெரிய "S" எழுத்தைக்கொண்டு உச்சரிக்கப்பட்டால், நமது ஆராதனையில் பரிசுத்த ஆவியானவரின் பணிப்பொறுப்பைப் பற்றிப் பவுல் வலியுறுத்தி இருக்கலாம் என்றாகிறது. நாம் ஏவுதல் பெற்ற மனிதர்களால் வெளிப்படுத்தப்பட்ட வகையில் ஆவியானவரின்

அறிவுறுத்துதலுக்கேற்க ஆராதிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் (காண்க நடபடிகள் 2:42; 2 தீமோத்தேயு 3:16, 17). பரிசுத்த ஆவியானவர் ஜெபத்தில் நமக்கு உதவுகிறார் (ரோமர் 8:26, 27), இது தேவனுக்கு ஏறெடுக்கப்படும் நமது ஆராதனையின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது. மேலும், நமது வாழ்வில் ஆவியானவரால் உண்டாக்கப்படுகிற நீதி, சமாதானம் மற்றும் சந்தோஷம் ஆகியவை (ரோமர் 14:17), ஆராதனை நிறைந்த ஆவிக்குப் பங்களிப்பதில் சந்தேகம் எதுவும் இல்லை.

"ஆவியினாலே ஆராதித்தல்" என்பது, இன்றைய நாட்களில் சில மார்க்கக் குழுவினரால் செயல்படுத்தப்படுகிற கரிஸ்மாட்டிக் செயல்களைக் குறிப்பிடுவதில்லை. இந்த ஆராதனைகளின் மட்டு மீறிய விஷயங்கள், ஆராதனையைப் பண்புபடுத்த வேண்டிய கண்ணியமான விஷயங்களுக்கு நேர் எதிரானவையாக உள்ளன (காண்க 1 கொரிந்தியர் 14:40).

சிறிய "s" *அல்லது பெரிய* "S" *இவற்றில் எது பயன்படுத்தப்பட்டிருந்தாலும், "கிறிஸ்தவ ஆராதனையின் ஆவிக்குரிய வலிவார்ந்த பண்பு" என்பதன் மீதே வலியுறுத்தம் உள்ளது.*[10] *பவுல், பொய்யான விருத்தசேதனத்தின் மாம்சத்தைச் சார்ந்திருக்கும் தன்மையையும் (இது மாம்சத்திற்குரிய ஒரு சடங்காக உள்ளது) உண்மையான விருத்தசேதனத்தின் ஆவியை (ஆவிக்குரிய ஆராதனையை) சார்ந்திருக்கும் தன்மையையும் நேரெதிராக ஒப்பிட்டார்.*

இரண்டாவது, உண்மையான விருத்தசேதனம் உடையவர்கள் "கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகின்றனர்" என்று பவுல் கூறினார் (வசனம் 3இ). கள்ளப்போதகர்கள் தங்கள் சடங்குகள் மற்றும் சடங்காச்சாரங்கள் ஆகியவற்றில் மேன்மைபாராட்டினர், ஆனால் நாம் நமக்காக மரித்த ஒருவருக்குள் மேன்மைபாராட்டுகிறோம். மோட்யெர் என்பவரின் கூற்றுப்படி, ("glory") *"மேன்மைபாராட்டுதல்" என்பதற்கு [தமிழ் வேதாகமத்தில் உள்ளபடி]* ("boast") *"மேன்மைபாராட்டுதல்" என்பதே "மிகவும் விறுவிறுப்பான மொழிபெயர்ப்பாக"*[11] *இருக்கும். கலாத்தியர் 6:14அ வில் பவுல் இதே வார்த்தையின் வடிவம் ஒன்றைப் பயன்படுத்தினார்: "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக." நாம் செய்துள்ளவற்றைப் பற்றியல்ல (காண்க ரோமர் 4:2), ஆனால் அவர் நமக்காகச் செய்துள்ளவற்றைப் பற்றியே நாம் மேன்மை பாராட்டுகிறோம்.*

மூன்றாவது, பவுல் "மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ... நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்" என்று கூறினார் (வசனம் 3அ, ஈ) சந்தர்ப்பப் பொருளில் இதன் அர்த்தமானது, நாம் விருத்தசேதனம் என்ற மாம்சப்பிரகாரமான சடங்கில் நம்பிக்கை வைப்பதில்லை என்று இருக்க முடியும். இருப்பினும் புறம்பான (மாம்சப்பிரகாரமான) விஷயம் உள்ளான (ஆவிக்குரிய) விஷயத்திற்கு எதிரானவகையில் உள்ளது என்பதையே பெரும்பான்மையான மொழிபெயர்ப்புகள் சுட்டிக்காண்பிக்கின்றன:

- TEV - "We do not put any trust in external ceremonies." *"புறம்பான சடங்காச்சாரங்களில் நாம் எந்த நம்பிக்கையும் வைப்பதில்லை."*
- CJB - "We do not put confidence in human qualifications." *"மனிதத் தகுதி களில் நாம் நம்பிக்கை வைப்பதில்லை."*

- CEV - "We don't brag about what we have done." "நாம் செய்துள்ளவற்றைக் குறித்து நாம் தற்பெருமை கொள்வதில்லை."

மனிதர்கள் என்ற வகையில், நாம் காணக்கூடியவற்றில் நமது நம்பிக்கையை வைத்தல் என்பது சோதனையாக உள்ளது: மிகச்சிறப்பான பேச்சாளர்கள் மற்றும் போதகர்களில், நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஊழியத்தின் நிகழ்ச்சிகளில், போதுமான அளவான சபைகூடிவரும் இடங்களில், நமது ஊழியங்களில் பெரிய அளவுக்கு வரும் கூட்டங்களில், பதில்செயல்களின் எண்ணிக்கைகளில் அல்லது *நாம்* நிறைவேற்றி முடிக்கக் கூடிய வேறு எந்த செயல்களில் நம்பிக்கை வைத்தல் என்பது ஒரு சோதனையாக உள்ளது. இவையாவும் தவறக்கூடும்; இவைகள் இன்று இங்கிருந்து நாளை சென்றுவிடலாம். அதற்குப்பதிலாக நமது நம்பிக்கையானது அசைவில்லாததும் மாறாததுமான விஷயத்தின்மீது இருக்க வேண்டும்: அது கர்த்தர் மீது (வசனங்கள் 4-11)! ஜான் கால்வின் என்பவர், கிறிஸ்துவுக்குப் புறம்பே ஒருவர் தமது நம்பிக்கையை வைத்தல் என்பது, *மாம்சத்தின்மீது நம்பிக்கை வைத்தலாக உள்ளது* என்று கூறியது சரியானதே என்று நான் நம்புகிறேன்.[12]

மோட்யெர் என்பவர் "உண்மையான மார்க்கத்தின் மேல்நோக்கிய, புறம்பான மற்றும் உள்ளான அம்சங்களை" "உண்மையான விருத்தசேதனத்தின்" மூன்று பண்புகளாகக் குறிப்பிட்டார்:[13]

- மேல்நோக்கியது, ஏனெனில் நாம் "தேவனுடைய ஆவியில் தொழுது கொள்கிறோம்.""
- புறம்பானது, ஏனெனில் நாம் ''கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிறோம்."
- உள்ளானது, ஏனெனில் நாம் ''மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிருப்பதில்லை."

முடிவுரை

"சந்தோஷமாயிருங்கள்'' என்ற பவுலின் ஆணைக்கு நாம் திரும்புவோம் என்று நான் கூறியிருந்தேன் - இப்போது நாம் இங்கிருக்கிறோம்: "கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள்.'' என்ன நடந்தாலும் பரவாயில்லை, அவருக்குள் சந்தோஷப்படுங்கள் - மற்றும் மாம்சத்திற்குரிய விஷயங்களில் அல்ல, ஆனால் அவருக்குள் *மாத்திரம்* சந்தோஷப்படுங்கள். நமது அடுத்த படிப்பில் (3:4-11), பவுலின் வாழ்வு பற்றிய ஒரு சுருக்க வரைவையும் *அவர்* கர்த்தருக்குள் சந்தோஷமாயிருந்தது ஏன் என்பதைப் பற்றியும் நாம் காண்போம்.

இந்தப் படிப்பை முடிப்பதற்கு முன், நீங்களும் நானும் "உண்மையான விருத்தசேதனம் உள்ளவர்களின்'' கூட்டத்தில் எவ்வாறு பங்கேற்கிறோம் என்பதைத் தெளிவாக்க என்னை அனுமதியுங்கள். நமது அடுத்த பாடத்திற்கான வேதவசனப் பகுதி, இதை நாம் "விசுவாசத்தின் அடிப்படையில்" செய்கிறோம் என்று வலியுத்துகிறது (3:9) - அது நம்பிக்கை வைக்கிற, கீழ்ப்படிதல் உள்ள விசுவாசமாகும். பவுல் கொலோசெயருக்கு எழுதிய நிருபத்தில், நம்பிக்கை வைக்கும் அந்தக் கீழ்ப்படிதலில் ஞானஸ்நானத்தை அவர் உள்ளடக்கினார்:

அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள். ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும் அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள், உங்கள் பாவங்களினாலேயும் உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே கூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து (கொலோசெயர் 2:11-13).

நீங்கள், இயேசுவின் மீதான உங்கள் விசுவாசத்தையும் நம்பிக்கையையும், ஞானஸ்நானம் (தண்ணீருக்குள் முழுக்காட்டப்படுதல்) பெறுவதன் மூலமாக இன்னமும் வெளிப்படுத்தாமல் இருந்தால், இன்றே அதைச் செய்யுங்கள்.

குறிப்புகள்

[1]*தனிப்பட்ட நிருபம் ஒன்றை எழுதும்போது பவுல், "கடைசியாக" என்பதன் இப்படிப்பட்ட பயன்பாட்டை ஏற்படுத்தியது இந்த ஒருமுறை மாத்திரமல்ல என்பதை நினைவில் வையுங்கள். அவர் தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதல் நிருபத்தின் ஐந்தில் மூன்று பங்கு முடித்திருக்கையில், அவர் "அன்றியும், சகோதரரே" என்று எழுதினார் (1 தெசலோனிக்கேயர் 4:1).* [2]Alec Motyer, *The Message of Philippians: Jesus Our Joy,* The Bible Speaks Today series, ed. John R. W. Stott (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1984), 147. [3]Avon Malone, *Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 72. [4]William Barclay, *The Letters to the Philippians, Colossians, and Thessalonians,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 51. [5]Eugene H. Peterson, *The Message: New Testament with Psalms and Proverbs* (Colorado Springs, Colo.: NavPress, 1995), 492. [6]Malone, 72-73. [7]Ibid., 73. [8]J. B. Lightfoot; quoted in Barclay, 53-54. [9]Barclay, 54. [10]Ralph P. Martin, *The Epistle of Paul to the Philippians,* rev. ed., Tyndale New Testament Commentaries, ed. R. V. G. Tasker (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 142.

[11]Motyer, 151. [12]*இது* Martin, 144*ல் தரப்பட்ட கால்வின் என்பவரின் வார்த்தைகளின் சுருக்கமாக இருந்தது.* [13]Motyer, 150.

11

"பவுலின் இலாப நஷ்டக் கணக்கு"

(பிலிப்பியர் 3:4-11)

பல வியாபார நிருவனங்கள் காலமுறைப்படியான இலாப - நஷ்டக் கணக்குகளை வெளியிடுகின்றன: ஒரு நிறுவனம் பணம் ஈட்டியுள்ளதா இல்லையா என்று காண்பிக்க, இலாபங்கள் மற்றும் நஷ்டங்கள் ஆகியவை பட்டியலிடப்படுகின்றன. எது முக்கியமானது மற்றும் எது முக்கியமற்றது என்பவற்றை ஒப்பிடுவதற்கு, யூத ரபீக்கள் இவ்வகையான கணக்கியல் சொற்றொடரைப் பயன்படுத்தினர். இயேசு தமது புகழ்பெற்ற வார்த்தைகளில் இதேவகையான அணுகுமுறையைப் பயன்படுத்தினார்: "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?" (மத்தேயு 16:26அ). நமது வேதபாடப்பகுதியில், பவுல் தமது சொந்த இலாப - நஷ்ட கணக்கை உள்ளடக்கினார்:

> *ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன் (வசனங்கள் 7, 8).*

TEV *வேதாகமத்தில் "நான் எதையெல்லாம்* இலாபம் *என்று எண்ணலாகுமோ அதையெல்லாம் கிறிஸ்துவினிமித்தம்* நஷ்டம் *என்று இப்போது கணக்கிடுகிறேன்" என்றுள்ளது (வசனம் 7; என்னால் வலியுறுத்தப்படுகிறது).*

நாம் இந்தப் பாடத்தைப் படிக்கையில், பவுலுக்கு முக்கியமானதாக இருந்தது எது மற்றும் அவருக்கு முக்கியமற்றதாக இருந்தது எது என்பவற்றைக் காண்போம். நம்மில் ஒவ்வொருவரும், "எனக்கு உண்மையிலேயே முக்கியமாக இருப்பது எது?" என்று கேட்டுக்கொள்ளும்படி அறைகூவல் விடுக்கப்படுவோம்.

ஒருவர் தமது ஆவிக்குரிய மரபுரிமைமீது சார்ந்திருத்தல் = நஷ்டம் (3:4, 5அ, 7)

3ம் அதிகாரத்தின் முதல் பாகத்தில் பவுல், புறஜாதியார் விருத்தசேதனம் செய்துகொண்டு நியாயப்பிரமாணத்தின் மற்ற ஒழுங்கு முறைமைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வாதிட்ட யூதத்துவக் கிறிஸ்தவர்களான, கிறிஸ்தவ யூதர்களைப் பற்றிக் கூறக் குத்தலான விஷயங்களைக் கொண்டிருந்தார்.

இந்தக் கள்ளப்போதகர்களைப் பவுல், "நாய்கள்," "பொல்லாத வேலையாட்கள்" மற்றும் "சுன்னத்துக்காரர்கள்" என்று அழைத்தார் (வசனம் 2) நான் அதைச் செய்திருந்தால், "உங்களுக்கு அதைப்பற்றி என்ன தெரியும்? நீங்கள் ஒருக்காலும் ஒரு யூதராக இருந்ததில்லையே!" என்று அறைகூவல் விடப்பட்டிருப்பேன். பவுல் தாம் எதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தாரே, அதைப்பற்றி தாம் *அறிந்து இருந்ததை* நிரூபிக்கத் தொடர்ந்து செயல்பட்டார் - ஏனென்றால், ஒருகாலத்தில் அவர் நியாயப்பிரமாணத்தைக் கண்டிப்பாகப் பின்பற்றிய ஒரு யூதராக இருந்திருந்தார்.

"மெய்யான விருத்தசேதனமுடையவர்கள் [கிறிஸ்தவர்கள்] ... மாம்சத்தின்மீது நம்பிக்கை வைப்பதில்லை" என்று கூறியபின்பு (வசனம் 3), பவுல் "மாம்சத்தின் மேல் நம்பிக்கை வைக்கவேண்டுமானால் நானும் வைக்கலாம்; வேறொருவன் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிருக்க நினைத்தால் [இதையே யூதத்துவத்தைப் போதித்தவர்கள் செய்தனர்] நான் அதிகமாய் அப்படிச் செய்யலாம்" என்று கூடுதலாகக் கூறினார் (வசனம் 4). அவர் தமக்கும் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தலின் அவசியத்தைப் போதித்தவர்களுக்கும் இடையில் ஒரு ஒப்பீட்டைக் கோரினார். பின்தொடரும் வசனங்கள் "பழங்காலம் நமக்குச் சாசனமாக எழுதிவைத்துள்ளவற்றிலேயே மிகவும் குறிப்பிடத்தக்க அறிக்கைகளில் ஒன்று" என்று அழைக்கப்பட்டுள்ளது.[1]

ஒரு பழைய கருத்துநோக்கு

பவுல் முதலில் ஒரு யூதர் என்ற வகையில் தமது வாழ்வைப் பற்றிப் பேசினார். அவர் தமது தகுதிகளை, தாம் "அவற்றை உணர்வுடன் எண்ணியது போன்ற வகையிலும் மற்றும் தமது கைகளின் விரல்களின் மீது அவற்றை சுட்டிக்காண்பித்தது போன்றும்" பட்டியலிட்டார்.[2] இதைப் பின்வரும் விபரத்தைக் கொண்டு அவர் தொடங்கினார்: "நான் எட்டாம் நாளில் விருத்தசேதனமடைந்தவன்" (வசனம் 5அ). செயல்விளைவில் அவர், "நீங்கள் விருத்தசேதனம் பற்றிப் பேச விரும்புகிறீர்களா? நியாயப்பிரமாணம் கட்டளையிட்டுள்ளபடி *நான்* எட்டாம் நாளிலே விருத்தசேதனம் பெற்றவன்" என்று கூறினார்.

விருத்தசேதனம் என்பது தேவனுக்கும் ஆபிரகாமின் சந்ததியார்களுக்கும் இடையிலான உடன்படிக்கை உறவின் அடையாளமாக இருந்தது. யூத ஆண்பிள்ளைகள் பிறந்த எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்விக்கப்பட வேண்டும் என்று நியாயப்பிரமாணம் கூறியது (ஆதியாகமம் 17:12; லேவியராகமம் 12:3; காண்க லூக்கா 1:59; 2:21). எனவே பவுல், தாம் ஒரு யூதராகப் *பிறந்ததைப்* பற்றிக் கூறியதன் மூலம் [இந்த விவாதத்தை] தொடங்கினார். அவர் தமது வாழ்வில் பிற்பகுதியில் யூதத்துவத்தைத் தழுவிக்கொண்ட ஒரு யூதமார்க்கத்து அமைந்தவராக இருக்கவில்லை.

அடுத்ததாக அவர், தாம் "இஸ்ரவேல் வம்சத்தான்" என்று கூறினார் (வசனம் 5ஆ). "இஸ்ரவேல்" என்பது, யாக்கோபு ஒரு இரவு முழுவதும் ஒரு தூதனோடு போராடிய பின்பு அவருக்குத் தரப்பட்ட பெயராக இருந்தது (ஆதியாகமம் 32:28). அது யூதர்களுக்குப் புனிதத்துவமான குறிப்புப் பெயரானது, அது கர்த்தருடன் அவர்களுக்கிருந்த விசேஷித்த உறவைச் சுட்டிக்காண்பித்தது. இவ்வாறாகப் பவுல், யூத இனத்தின் பாகமாக இருந்ததில் தாம் கொண்டிருந்த

பெருமையை விளக்கப்படுத்தினார்.

பவுல், இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களில் தாம் எந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்பதைக்கூட அறிந்திருந்தார். அவரது நாட்களில், கோத்திர அடையாளத்துவங்கள் பெரும்பான்மையான யூதர்களுக்குத் தெளிவற்றவையாக இருந்தன, ஆனால் இந்த அப்போஸ்தலர், தாம் "பென்யமீன் கோத்திரத்தான்" என்பதை அறிந்திருந்தார் (வசனம் 5இ). பென்யமீன் கோத்திரம் ஒரு பெரிய கோத்திரமாக இருக்கவில்லை (காண்க சங்கீதம் 68:27; NIV வேதாகமத்தில் "பென்யமீனின் சிறிய கோத்திரம்" என்றுள்ளது), ஆனால் அது யூதர்களின் வரலாற்றில் தன்னைத் தனித்துவப்படுத்தி இருந்தது. இஸ்ரவேலின் முதல் அரசர் பென்யமீன் கோத்திரத்தில் இருந்து வந்தவராக இருந்தார் (1 சாமுவேல் 9:1, 2, 21; 10:1, 20-25), இஸ்ரவேல் இராஜ்யம் பிரிந்தபோது, பென்யமீன் கோத்திரத்தார் தாவீதின் வீட்டிற்கு விசுவாசமானவர்களாக நிலைத்து நின்றனர் (1 இராஜாக்கள் 12:21).[3]

பவுல், தாம் "எபிரெயரில் பிறந்த எபிரெயன்" என்று கூறியதன் மூலம் தொகுத்துரைத்தார் (வசனம் 5ஈ). இந்தச் சொற்றொடராக்கம், பவுலைப்பற்றிய பல்வேறு விஷயங்களைக் கூறுகிறது. இது, அவர் எபிரெயப் பெற்றோர்களுக்குப் பிறந்தவர் என்று சுட்டிக்காண்பிக்கிறது - ஆனால் இதைக் காட்டிலும் அதிகமானவற்றையும் இது கூறுகிறது. உதாரணமாக, அவரது இல்லத்தில் எபிரெய மொழி பேசப்பட்டு இருக்கலாம். வேதவசனங்களில், "எபிரெயன்" என்ற சொற்றொடர், யூதமக்களால் பேசப்பட்ட பழங்கால எபிரேயு மொழியை அடிக்கடி குறிப்பிடுவதாக உள்ளது (காண்க யோவான் 19:13, 17, 20). பவுல் எபிரெயு மொழியைக் கற்றிருந்தார், அவரால் அதைப் பேசமுடிந்திருந்தது (காண்க நடபடிகள் 21:40; 22:2; அரமாயிக் என்பது, "பவுலின் நாட்களில் பேசப்பட்ட, எபிரெயத்தில் இருந்த தரவழைக்கப்பட்ட மொழியாக இருந்தது"[4]). இருப்பினும் பவுலின் வார்த்தைகள் இன்னும் அதிகமானவற்றைக் கூறுகின்றன: அவைகள், அவரது குடும்பமானது எருசலேமில் இருந்து வெகுதொலைவில் இருந்த போதிலும், அது இன்னமும் எபிரெயக் கலாச்சாரங்கள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றிற்கு உண்மைநிறைந்ததாக நிலைத்திருந்தது என்று அறிவிக்கின்றன (காண்க நடபடிகள் 21:39; 22:3). பலஸ்தீனத்திற்குப் புறம்பே இருந்த பல யூதர்கள், புறஜாதியாரின் கலாச்சாரங்களையும் நடைமுறைகளையும் தழுவிக்கொண்டனர், ஆனால் பவுலின் பெற்றோர்கள் அவ்வாறு செய்யவில்லை.

பவுலின் கூற்றுக்கள், அவர் "ஒரு உண்மையான யூதராக" இருந்தார் என்பதற்கு நிரூபணம் கொடுத்தன. அந்த அப்போஸ்தலர் சடங்காச்சாரத் தூய்மையை ("எட்டாம் நாளிலே விருத்தசேதனமடைந்தவன்"), இனத் தூய்மையை ("இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான்") மற்றும் கலாச்சாரத் தூய்மையை ("எபிரெயரில் பிறந்த எபிரெயன்") நிலைநாட்டியிருந்தார்.[5]

ஒரு புதிய கருத்துநோக்கு

பவுலின் யூதத்துவ வாழ்வு அவருக்கு முக்கியமானதாக இருந்ததா? 7ம் வசனத்தில் அப்போஸ்தலர், இதைத் தமக்கு "இலாபமாக" இருந்தவற்றில் உள்ளடக்கினார். TEV வேதாகமச் சொற்றொடராக்கத்தை பயன்படுத்துவதென்றால், கடந்தகாலத்தில் அவர் தமது மரபுரிமையைத்

தமது ஆவிக்குரிய கணக்குப் பதிவேட்டில் "இலாபம்" என்ற பகுதியில் வைத்திருந்தார். இருப்பினும் பவுல், இரட்சிப்பிற்குத் தமது யூதச் சாதனைகள் மீது சார்ந்திருந்தாரா? இல்லை, தொடர்ந்து அவர் *"ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்"* என்று கூறினார்.

சிலர், தாங்கள் சுதந்தரித்துக் கொண்டுள்ளவற்றின் அடிப்படையில் தாங்கள் இரட்சிக்கப்படுவோம் என்ற சிந்தையின் வலைக்குள் விழுகின்றனர்: "எனது பெற்றோர்கள் (அல்லது பெற்றோரின் பெற்றோர்கள்) தங்கள் மதக்குழுவின் அர்ப்பணிப்பு மிக்க உறுப்பினர்களாக இருந்தனர்.'' அவர்கள் தங்கள் முன்னோர்கள் செய்தவை தங்கள் ஆவிக்குரிய "கணக்கில் வரவு வைக்கப்படும்" என்பது போன்று பேசுகின்றனர். "கிறிஸ்தவ நாடு" என்று அழைக்கப்பட்டுள்ள நாட்டில் பிறந்துள்ளதே தங்களைத் தாமாகவே கிறிஸ்தவராக்கிவிடும் என்று நினைத்துக் கொண்டுள்ள ஒரு சிலரைக் கூட நான் அறிவேன்.

எனது ஆவிக்குரிய மரபுரிமைக்காக நான் நன்றிநிறைந்தவனாக இருக்கிறேன். எனது எள்ளுத்தாத்தா ஜான் விட்மைர் என்பவர் டெக்ஸாஸின் ஜான்சன் மாவட்டத்தில் முன்னோடிப்பிரசங்கியாராக இருந்தார். எனது கொள்ளுத் தாத்தா ஜான்ஸன் டாஸன் டேக்கஸ் என்பவர், டெக்ஸாஸின் அர்க்கன்ஸாஸிலும் இந்திய எல்லைப் பகுதியிலும் சுவிசேஷப் பிரசங்கியாராக இருந்தார். "பரிசுத்த வேத எழுத்துக்களை, ... சிறுவயது முதல்" எனக்குப் போதித்த கிறிஸ்தவப் பெற்றோர்களுக்காக நான் தினமும் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன் (காண்க 2 தீமோத்தேயு 3:15). இப்படிப்பட்ட ஒரு மரபுரிமை எனது இரட்சிப்பை உத்திரவாதப்படுத்துகிறதா? இல்லை. அந்த மரபுரிமையில் நான் "மகிமைப்பட" ["நம்பிக்கைவைக்க" அல்லது "மேன்மைபாராட்ட"] வேண்டுமா? இல்லை. "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைச் குறித்தே யல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக" (கலாத்தியர் 6:14அ)!

ஒருவர் தமது சாதனைகள் மீது சார்ந்திருத்தல் = நஷ்டம் (3:5ஆ-7)

பழையதொரு கண்ணோக்கு

பவுல் தமது ஆவிக்குரிய மரபுரிமையைப் பட்டியலிட்ட பின்பு, தாம் கிறிஸ்தவராவதற்கு முன்பு தமது ஆவிக்குரிய சாதனைகளைக் கணக்கிட்டார். பட்டியலின் இந்த பாகம் பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்குகிறது: *"நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்"* (வசனம் 5உ). பவுல், யூதமார்க்கத்தின் "மிகவும் கண்டிப்பான பிரிவில்" உறுப்பினராக இருப்பதைத் தேர்ந்துகொண்டார் (நடபடிகள் 26:5). அவர் பரிசேயர்களில் மாபெரும் போதகராக இருந்த கமாலியேல் என்பவரின்கீழ் கல்வி கற்றிருந்தார் (காண்க நடபடிகள் 22:3; 5:34). பவுல் "பிதாக்களுடைய பாரம்பரிய நியாயங்களை" காத்துக் கொள்வதற்குத் தம்மையே அர்ப்பணித்திருந்தார் (கலாத்தியர் 1:14).

சுவிசேஷ விபரங்களில் பரிசேயர்களைப் பற்றிய சித்தரிப்பு, பரிசேயராக இருத்தல் என்பது மேன்மைபாராட்டக் கூடியதாக இருந்தது என்று

கற்பனை செய்யக் கடினமாக இருக்கும் அளவுக்கு, மிகவும் எதிர்மறையாக உள்ளது. இருப்பினும் பரிசேயர்கள் யூதர்களின் மத்தியில் மிகவும் உயர்வாக மதிக்கப்பட்டனர். மேன்மைப்படுத்தப்பட்ட ஒரு சிறுகுழு என்ற வகையில் அவர்கள், ஆவிகள், தூதர்கள் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைப் பற்றி நியாயப்பிரமாணம் கூறியவற்றை விசுவாசித்தனர் (நடபடிகள் 23:8), அவர்கள் நியாயப்பிரமாணத்தின் போதனைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்று பரிந்துரைத்தனர் (காண்க மத்தேயு 23:23). பவுல், தாம் ஒரு பரிசேயராக இருந்ததாகக் கூறியபோது, அவர் தாம் "ஒரு யூதரில் யூதராக" இருந்ததாகக் கூறினார்.

அடுத்ததாகப் பவுல், *"பக்திவைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன்" என்று கூறினார் (வசனம் 6அ).* (காண்க நடபடிகள் 8:1ஆ, 3; 9:1, 2.) " 'துன்பப்படுத்துதல்' (*diokein* என்ற) வினைச் சொல்லானது, 'ஏதேனும் ஒன்றை ஓடச்செய்தல்,' 'பின்செல்லுதல் அல்லது துரத்துதல்' என்ற தனது அடிப்படைக் கருத்தைக் கொண்டுள்ளது. இது, ஒரு படையானது தனது எதிரியைத் துரத்திச் சென்று, அவர்கள் ஓடும்படி செய்தலை அல்லது ஒரு வேட்டைக்காரர் தமது வேட்டை மிருகத்தைப் பின்தொடர்ந்து சென்று அதை ஓடும்படி செய்தல் என்பதைச் சித்தரிக்கிறது."[6] பவுல் ஒரு பரிசேயராக இருப்பதை ஏன் பட்டியலிட்டார் என்று புரிந்து கொள்வதில் நாம் ஏதேனும் சிரமங்களைக் கொண்டிருந்தால், அவர் மற்றவர்களைத் துன்புறுத்தியதை ஆவிக்குரிய சாதனையாக ஏன் பட்டியலிட்டார் என்பதைப் புரிந்துகொள்வதில் நாம் இருமடங்கு சிரமப்படுவோம். அப்போஸ்தலர், தாம் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியது எவ்வாறு என்பது குறித்து மேன்மை பாராட்டவில்லை என்பது நிச்சயம். வேறொரு இடத்தில் அவர், "... தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினதினாலே, நான் அப்போஸ்தலனென்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 15:9). அவரது முந்திய வாழ்வின், தொந்தரவு செய்யும் இந்தப்பகுதி அவரது மனதில் எப்போதுமே இருந்து வந்தது (காண்க நடபடிகள் 22:4, 5; 26:9-11; கலாத்தியர் 1:13; 1 தீமோத்தேயு 1:13).

பவுல் தமது *யூதத்துவ* சாதனைகளைப் பட்டியலிட்டார் என்பதை நினைவில் வையுங்கள். வைராக்கியம் என்பது யூதர்களால் உயர்வாக மதிக்கப்பட்டது (காண்க நடபடிகள் 22:3; ரோமர் 10:2). பழைய ஏற்பாட்டில், பினெகாஸ் என்ற ஆசாரியர், அவரது வைராக்கியத்திற்காகப் பாராட்டப்பட்டார் (காண்க எண்ணாகமம் 25:11-13). தேவனுடைய வீட்டின் மீதான வைராக்கியம் மேசியாவைப் பட்சிக்கும் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது (சங்கீதம் 69:9; காண்க யோவான் 2:17). பவுல், யூதத்துவம் கிறிஸ்தவத்தால் அச்சுறுத்தப்பட்டதைக் கண்டபோது, தாம் அபாயமான வேதப்புரட்டு என்று கருதிய அதை [கிறிஸ்தவத்தை] அழிக்க நாடும்படி, அவரின் சொந்த வைராக்கியம் மிகவும் வலுவாயிற்று (நடபடிகள் 26:9-11). மற்ற யூதர்கள், தாங்கள் எவ்வளவு வைராக்கியமாய் இருந்தனர் என்று *பேசிக்கொண்டு* இருந்திருக்கலாம், ஆனால் பவுல் தமது வைராக்கியத்தைச் *செயல்விளக்கப்படுத்தினார்.*

பவுல் *"நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்"* என்று கூறித் தமது ஆவிக்குரிய சாதனைகளின் பட்டியலை முடித்தார் *(வசனம் 6ஆ).* "நீதி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை

(இது *dikaiosune* என்பதன் ஒரு வடிவமாகும்), அடிப்படையில் "சரியாக இருத்தலின் பண்பு" என்று அர்த்தப்படுகிறது.[7] இந்தப் பண்பைப்பற்றி, மோசேயின் நியாயப்பிரமாணத்துடன் தொடர்புபடுத்துகையில், பவுல் தாம் "குற்றஞ்சாட்டப்படாதவராக" இருந்ததாகக் கூறினார். சிலர், "ஒரு நிமிடம் பொறுங்கள்! இயேசு கிறிஸ்து ஒருவரே நியாயப்பிரமாணத்தைப் பூரணமாகக் கடைப்பிடித்தவர் ஆவார்!" என்று கூறி நிச்சயமாக மறுப்புரை தெரிவிப்பார். பவுல், தாம் "குற்றஞ்சாட்டப்படாதவராக" இருந்தார் என்று கூறியபோது, அவர் எதை அர்த்தப்படுத்தினார்?

நாம், 2:15 உடன் தொடர்புடைய வகையில் "குற்றமற்றவர்" என்ற வார்த்தையைப் பற்றிக் கலந்துரையாடினோம். இது மனிதர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும்போது, அவர்கள் "பூரணமானவர்களாக" அல்லது "பாவமற்றவர்களாக" இருக்கின்றனர் என்று அர்த்தப்படுவதில்லை. பவுல், பூரணத்தன்மையையோ அல்லது பாவமற்ற தன்மையையோ உரிமை கோரவில்லை என்பது நிச்சயம் (காண்க 3:12; 1 தீமோத்தேயு 1:15). மாறாக, "குற்றஞ்சாட்டப்படாதவர்" என்ற வார்த்தை, எந்த ஒரு குற்றச் சாட்டும் அவர் மீது ஏற்படுத்தப்பட்டு நிலைநிறுத்தப்படமுடியாது என்பதையே மறைமுகமாக உணர்த்துகிறது. நியாயப்பிரமாணத்தின் புறம்பான நிபந்தனைகளை - மற்றவர்கள் காணக்கூடியவற்றை - பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தார். அவர் தாம் கடைப்பிடிக்கத் தவறியதாக யூதத்துவச் சட்டம் அல்லது சடங்காச்சாரம் ஏதாவது ஒன்றைச் சுட்டிக்காண்பிக்கும்படி அறைகூவல் விடுத்திருந்தார். அவர் வேறொருவரின் வார்த்தைகளைப் பயன்படுத்தி இருக்க முடியும்: "இவைகளையெல்லாம் என் சிறு வயது முதல் கைக்கொண்டிருக்கிறேன்" (லூக்கா 18:21).

ஒரு யூதர் என்ற வகையில், பவுலின் சாதனைகள் தனிச்சிறப்பானவையாக இருந்தன. கலாத்தியருக்கு அவர், "நான் யூதமார்க்கத்திலிருந்தபோது என்னுடைய நடக்கையைக்குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள் ... என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப்பார்க்கிலும் யூதமார்க்கத்திலே தேறினவனாய்" ... என்று கூறினார் (கலாத்தியர் 1:13அ, 14அ). அவரது வாழ்வு பற்றிய விபரங்கள், அவர் ஒரு நடத்துனர் என்ற வகையில் மதிக்கப்பட்டு கண்ணோக்கப்பட்டார் என்று கருத்துத் தெரிவிக்கின்றன (காண்க நடபடிகள் 7:58; 8:1அ; 9:1, 2; 22:5; 26:10). *The Jewish Times* என்று அழைக்கப்பட்ட ஒரு பத்திரிகையை யூதர்கள் வெளியிட்டிருந்தால், அதன் மேல் அட்டையில், பவுலின் படமானது, "இந்த ஆண்டின் மிகவும் வைராக்கியமான மனிதர்" என்ற தலைப்புடன் இருந்திருக்கும்.

மாறியதொரு கண்ணோக்கு

ஒரு காலத்தில் பவுல், தமது யூதத்துவ சாதனைகளைத் தமது ஆவிக்குரிய கணக்குப் பதிவேட்டில், "இலாப" பக்கத்தில் இட்டிருப்பார் - ஆனால் அவரது மனக் கருத்துநோக்கு மாறியிருந்தது: *"ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்" (வசனம் 7).* பவுல், "எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை" என்று அறிந்திருந்தார் (ரோமர் 3:20அ; காண்க கலாத்தியர் 5:4). கிறிஸ்துவுக்குள்

மாத்திரமே மீட்பு காணப்படுகிறது (காண்க ரோமர் 3:24); நாம் அவருக்குள் "விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறோம்" (கலாத்தியர் 3:24). ஆகவே பவுல் தமது ஆவிக்குரிய முந்திய சாதனைகளைப் பற்றிய தமது கண்ணோக்கை மாற்றிக் கொண்டார்: அவைகள் "இலாபமாக" இருப்பதற்குப் பதிலாக "நஷ்டம்" என்றாயின.

சாதனைகளுக்குப் பரிசளிக்கும் உலகத்தில் நாம் வாழ்கிறோம். வெற்றிக் கேடயங்கள், பதக்கங்கள், வெகுமதிகள், தகுதிச் சான்றிதழ்கள், பட்டயங்கள், வேலையில் உயர்வுகள்: இவற்றில் பெரும்பான்மையானவை தனிப்பட்ட சாதனைகளின் அடிப்படையில் உள்ளன. நாம் நமது சாதனைகளை விரும்பி, மதித்து, சிலவேளைகளில் அவைகள் கணிசமாக ஒப்புக்கொள்ளப்பட வேண்டும் என்றுகூட ஏங்குகிறோம். எனவே, மதவிஷயத்திற்கு நாம் வரும்போது, நாம் இரட்சிக்கப்படுகிறோமா அல்லது இழந்துபோகப்படுகிறோமா என்பதைத் தனிப்பட்ட சாதனைகள் தீர்மானிக்கும் என்று நினைக்கும்படி சோதிக்கப்படுதல் ஒன்றுள்ளது. ''கிரியைகளினால் அல்ல'' ஆனால் ''விசுவாசத்தினால் மாத்திரமே" இரட்சிப்பு உண்டு என்று உரிமைகோருபவர்களில் சிலர், இந்த சோதிக்கப்படுதலுக்கு ஆட்பட்டிருக்கின்றனர். ஞானஸ்நானத்தின் அவசியம் பற்றிக் கலந்துரையாடுவதில் நான் அடிக்கடி பின்வரும் மறுப்புரையைக் கேள்விப்படுகிறேன்: "எனது தாத்தா இரட்சிக்கப்பட்டிருக்க மாட்டார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அவர் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளவில்லை, ஆனால் *நான் அறிந்திருப்பவர்களிலேயே மிகச்சிறந்த மனிதர்களில் ஒருவராக அவர் இருந்தார்!*" இப்படிப்பட்ட மறுப்புரையாளர், அவரது முன்னோர், தனிப்பட்ட *சாதனையினிமித்தம்*, நல்ல மனிதர் என்ற அந்தஸ்தை *பெற்றிருப்பதனிமித்தம்* இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கிறார். இவ்வாறாக, "விசுவாசத்தினால் மாத்திரமே இரட்சிப்பு" என்று நம்புதலை உரிமை கோருபவர்கள், தங்கள் சொந்த போதனைக்கே முரண்பட்டு நிற்கின்றனர்.

தனிப்பட்ட சாதனையைச் சார்ந்திருத்தலுக்கு எதிராக நான் எச்சரிக்கும்போது, கர்த்தருக்கு நம்மால் முடிந்த எல்லாவற்றையும் நாம் செய்யக்கூடாதென்று நான் கூறுகிறேனா? இல்லை. ஆவிக்குரிய சாதனை நல்லதாகவே உள்ளது. மீட்பிற்கு நாம் சாதனைகளைச் சார்ந்திருக்க இயலாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்றே *நான்* கூறுகிறேன். இரட்சிப்பைப் பெறத் தகுதியாவதற்கு எவரொருவர் போதுமானவற்றைச் செய்ய முடியாது. இயேசு, "... நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பு: நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையைமாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள்" என்று கூறினார் (லூக்கா 17:10). மற்றும், மீட்புக்குத் தனிப்பட்ட சாதனையைச் சார்ந்திருத்தல் என்பது இயேசுவின் மரணத்தை மதிப்புக் குலையச் செய்வதாக உள்ளது. ஒரு நபர், நன்மை செய்தால் இரட்சிக்கப்பட முடியும் என்றால், இரு நபர்கள் அவ்வாறு இரட்சிக்கப்பட முடியும்; ஏனெனில், "தேவன் பட்சபாதமுள்ளவரல்ல" (நடபடிகள் 10:34). இருவர் இவ்வாறு இரட்சிக்கப்பட முடியும் என்றால், ஒரு நூறுபேர்களும் அவ்வாறே இரட்சிக்கப்பட முடியும். ஒரு நூறுபேர் அவ்வாறு இரட்சிக்கப்பட முடியுமென்றால், எல்லா மனிதர்களும் அவ்வாறே இரட்சிக்கப்பட முடியும் - மற்றும் இயேசு அந்தக் கொடூரமான சிலுவையில் மரித்திருக்கத் தேவையில்லை.

என்ன ஒரு தேவதூஷணமான சிந்தனை!

எஜமானருக்குச் செய்யும் ஊழியத்தில் உங்களால் இயன்ற எல்லாவற்றையும் செய்வதில் இருந்து உங்களை நான் ஒருக்காலும் ஊக்கம் இழந்துபோகச் செய்யமாட்டேன். பவுல், "ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்போழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 15:58). நீங்கள் உங்கள் சாதனைகளினால், தேவனை உங்கள் கடன் கணக்கில் வைக்கலாம் என்று சிந்தித்தலில் இருந்து நான் உங்களை ஊக்கம் இழக்கச் செய்வேன். *இரக்கம் நிறைந்த மற்றும் கிருபையுள்ள கர்த்தரைச் சார்ந்திருக்கக் கற்றுக் கொள்ளுங்கள்!*

கிறிஸ்துவைத் தவிர வேறு எதையாவது சார்ந்திருத்தல் = நஷ்டம் (3:7, 8)

7ம் வசனத்தைத் திரும்பவும் கண்ணோக்குங்கள்: *"ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்."* "எவைகளோ" என்பது, பவுல் தமது தொடக்ககால வாழ்வில் சுதந்தரித்திருந்த மற்றும் சாதித்திருந்த *எல்லா* விஷயங்களைக் குறிக்கிறது. "மனித மார்க்க சாதனை என்ற மலையின் உச்சியில் கோபுரத்தைக் கட்டியிருந்த நிலையில் அவர் ஒரே ஒரு அடியினால் அவை எல்லாவற்றையும் பேரழிவுக்கு உட்படுத்தினார்":[8] அவர் எல்லாவற்றையும், "கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று" எண்ணினார்.

"நஷ்டமென்று எண்ணினேன்" என்ற சொற்றொடர் கிரேக்க மொழியில், ஒருதரம் மட்டும் வருகிற வினைச்சொல்லில் உள்ளது. சட்டப்படி, ஒருதரம் மட்டும் வருகிற வினைச்சொல் கடந்த காலத்தில் *ஒருமுறை மாத்திரம்* நடந்த நிகழ்ச்சியைச் சுட்டிக்காண்பிக்கிறது. பவுல் தமது வாழ்வில், தமஸ்கு செல்லும் சாலையில், கர்த்தரின் தரிசனத்தினால் ஏற்பட்ட தீவிரமான மாற்றத்தைச் சிந்தையில் கொண்டிருந்து இருப்பார் என்பது உறுதி (நடபடிகள் 9:1-19; 22:4-16; 26:9-18). பிரகாசமான வெளிச்சம் அவரது கண்களைப் பார்வையற்றுப் போகச்செய்தது, ஆனால், அவரது புரிந்துகொள்ளுதலுக்கு ஒளியூட்டியது. அவரது வாழ்வு தலைகீழாகத் திருப்பப்பட்டது "இருள்" வெளிச்சமாயிற்று; "பொல்லாங்கு" நல்லதாயிற்று; "தவறு" சத்தியமாயிற்று!

கிறிஸ்துவைத் தவிர வேறு எதையாவது

பவுல் தமது இலாபங்கள் மற்றும் நஷ்டங்களை மறுமதிப்பீடு செய்ததில், கிறிஸ்துவுடன் தமது முதல் சந்திப்போடு அவர் நிறுத்திக்கொள்ளவில்லை. தொடர்ந்து அவர், *"அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்" என்று கூறினார் (வசனம் 8).* இவ்வசனத்தில் அப்போஸ்தலர், கிரேக்க மொழியில் நிகழ்கால வினைச்சொல்லை பயன்படுத்தினார், இது நிகழ்காலத்தில் *தொடர்ந்து நடைபெறும்* செயலைச் சுட்டிக்காண்பிக்கிறது. நஷ்டம் என்று எண்ணுதல், அவரது மனமாற்றத்தின்

போது செய்யப்பட்ட முடிவாக மாத்திரம் இருக்கவில்லை; அது ஒரு அன்றாட முடிவாக இருந்தது. இயேசுவோடு ஒப்பிடுகையில், பவுலுக்கு வேறு எதுவும் மதிப்புடையதாக இருக்கவில்லை. அவர் தமது கர்த்தராகிய "கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக" ஏதொன்றையும் மற்றும் எல்லாவற்றையும் விட்டுக்கொடுக்க மனவிருப்பம் கொண்டிருந்தார்.

தொடர்ந்து பவுல், *"அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்"* என்று கூறினார் *(வசனம் 11அ).* அப்போஸ்தலர், யூத அமைப்பின் படிநிலையில், தமது பதவியை இழந்தார். அவர் தமது சகமக்கள் மத்தியில் நல்லநிலையில் இருத்தலை இழந்தார். அவரது நண்பர்கள் அவருக்குத் தங்கள் முதுகுகளைத் திருப்பிக் காண்பித்தனர். சந்தேகமின்றி அவர் தமது குடும்பத்தில் பலருக்கு அந்நியரானார். ஒரே இரவில் அவர், யூதர்கள் மத்தியில் மிகவும் நேசிக்கப்பட்டவர் என்ற நிலையில் இருந்து மிகவும் வெறுக்கப்பட்டவர் என்ற நிலைக்கு வந்தார். அவர் பாதுகாப்பாக இருத்தலைக் கைவிட்டார், மற்றும் கடைசியில் அவர் தமது உயிரை இழந்துபோவார். அவர், இயேசுவுக்காக இவை எல்லாவற்றையும் செய்ய மனவிருப்பம் கொண்டிருந்தார்.

பவுலின் அடுத்த வார்த்தைகள் [இது தமிழ் வேதாகமத்தில் 11ம் வசனமாக உள்ளது] யூதத்துவ நபருக்கு அதிர்ச்சியூட்டுவதாக இருந்திருக்கும். (அவைகள் தொடக்கால வாசகர்கள் சிலருக்கு கூட அதிர்ச்சியூட்டுவதாக இருந்திருக்கும்.[9]) அவர் தாம் கலந்துரையாடியிருந்த எல்லாவற்றையும் குறித்து, *"நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு ... குப்பையுமாக எண்ணுகிறேன்"* என்று கூறினார் (வசனங்கள் 9அ, 11ஆ). "குப்பை" என்று தரவழைக்கப்பட்டுள்ள (*skubala* என்ற) வார்த்தை, மொழிபெயர்க்கக் கடினமான வார்த்தையாக உள்ளது. இது நாய்களுக்குத் தூக்கியெறியப்படும் துணுக்குகளை, வெறுக்கத்தக்க குப்பைக் குவியலை அல்லது மனித மற்றும் மிருகக் கழிவுகளைக் கூட அர்த்தப்படுத்தக்கூடும். "Filth" என்ற ஆங்கில வார்த்தை, இந்த கிரேக்க வார்த்தையின் அர்த்தப் பரப்பெல்லையை விளக்க நெருக்கமாக வரலாம். இவ்வார்த்தை எவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டிருந்தாலும், இது வெறுப்பூட்டுவதாக உள்ளது!

பவுல் தமது முந்திய வாழ்வைப் பற்றி (அல்லது கிறிஸ்துவிலிருந்து வழிவிலக்கிச் செல்லும் எந்த விஷயத்தைப் பற்றியாவது) நினைத்தபோது, அவர் அதை மதிப்பற்றது என்று எண்ணியதோடு நின்று விடவில்லை; அதை அவர் ஒரு கடன் சுமை போன்று நினைத்தார். வேறுவார்த்தைகளில் சொல்லுவது என்றால், அவர் அதை மதிப்பெதுவும் கொண்டிராதது என்று நினைத்தது மட்டுமின்றி, அதன்மீது அவர் *வெறுப்படைந்தார்* மற்றும் அதினால் அவர் *எதிர்த்து விலக்கப்பட்டார்.* நான் ஒரு பண்ணைச் சூழலில் வளர்ந்ததால் பின்வரும் விவரிப்பு எனது சிந்தைக்கு வருகிறது; ஒரு பெண் பிள்ளை தனது அழகிய புதிய காலணிகளைப் பெருமையுடன் காண்பிக்கிறாள். பின்பு அவள் அந்தக் காலணிகளை அணிந்தவளாக சேறும் அழுக்கான சாணியும் நிறைந்த இடத்தைக் கடந்து நடந்து வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறாள். அவளது பதில்செய்கையை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? அவ்வாறே பவுலும், இயேசுவின் மீது கவனம் குவிப்பதை விடுத்து வேறொரு இடத்தில் கவனம் குவிக்கக் கூடிய வகையில், மனிதர்களின் கண்களைக் கவரக்கூடிய எந்த விஷயத்தைப் பற்றியும் உணர்ந்தார்.

கிறிஸ்துவையன்றி வேறொன்றுமில்லை

பவுல், இயேசுவைப் பின்பற்றுவது என்ற தமது முடிவைக் குறித்து வருந்தினாரா? குப்பையைத் தூக்கியெறிந்த பின்பு அதைத் திரும்பவும் தனது வீட்டில் கொண்டிருக்க விரும்பும் மனப்போக்குடைய மனிதரைக் காட்டிலும் அதிகமாக அவர் வருத்தப்படவில்லை! பவுல், "விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு" அதை வாங்குவதற்காக "போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று" விட்ட வியாபாரியைப் போல் இருந்தார் (மத்தேயு 13:45, 46). அவர் அதிகமாக விட்டுக் கொடுத்திருந்தார், ஆனால் புதையல்களை பெறுவதற்குக் குப்பையை யார்தான் விட்டுக்கொடுக்க மாட்டார்கள்?

பவுலின் வார்த்தைகளில் இருந்து நாம் ஏற்படுத்தக் கூடிய நடைமுறைப்பயன்பாடு என்ன? உங்களுக்கும் கிறிஸ்துவுக்கும் நடுவே ஏதாவதொரு விஷயம் வருமென்றால் - அது எந்த விஷயமாக இருந்தாலும், அதை விட்டு விலகிவிடுங்கள். என்னைத் தவறாகப் புரிந்துகொள்வதைத் தவிர்ப்பதற்காக நான், பரிவிரக்கமற்ற ஒரு திருமணத் துணைவரை விட்டுச் சென்றுவிடுங்கள் என்று குறிப்பிடவில்லை என நான் கூறியாக வேண்டும். திருமணம் என்பது வாழ்நாள் முழுவதற்குமானது (மத்தேயு 19:1-9). அவிசுவாசியுடன் வாழுதல் என்பது கடினமானதாக இருக்கக் கூடும், ஆனால் அது ஒருவர் தமது விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு ஒன்றையும் அளிக்கிறது (காண்க 1 பேதுரு 3:1, 2). இருப்பினும் மற்ற பகுதிகளில், இந்த அடிப்படை சத்தியம் உண்மையாக நிலைக்கிறது: ஒரு விஷயமானது தன்னிலே நல்லதாக இருக்கலாம்; ஆனால் அது உங்களுக்கும் கர்த்தருக்கும் நடுவாக வரும் என்றால், அதைவிட்டு விலகிவிடுங்கள். அது மதிப்பற்றதாக உள்ளது. இல்லை, அது இரட்சகருடன் ஒரு நெருக்கமான உறவு கொண்டிராதபடி உங்களை விலக்கும் என்றால், அது மதிப்பற்றதைக் காட்டிலும் மிக மோசமானதாக *உள்ளது! அதை, "புயலில் மூழ்கிவிடும் என்ற நிலையில் உள்ள ஒரு கப்பலைக் காப்பதற்காக அதில் உள்ள மதிப்பு மிக்க சரக்குப்பெட்டியை ஒருவர் வெளியே எறிந்து விடுவதைப் போன்று" உடனடியாகத் தூக்கியெறிந்து விடுங்கள்.*[10]

கிறிஸ்துவின் மீது சார்ந்திருத்தல் = இலாபம் (3:9-11)

பவுலின் இலாப - மற்றும் - நஷ்ட கணக்கில் நாம், "நஷ்டம்" என்ற அம்சத்தின் மீது இதுவரை கவனம் குவித்திருந்தோம். இப்போது "இலாபம்" என்ற பக்கத்தை வெளிச்சம் போட்டுக் காண்பிக்க வேளை வந்துள்ளது.

கிறிஸ்துவை அறிதல்

8ம் வசனத்தில் பவுல், "என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்" என்று கூறினார். கிறிஸ்துவை "அறிதல்" என்பதன் மீதான வலியுறுத்தமானது 10ம் வசனத்தில் திரும்பவும் கூறப்பட்டு விரிவாக்கப்பட்டுள்ளது: "இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி."

பவுல், கிறிஸ்துவை "அறிதல்" பற்றிப் பேசியபோது, அவர் கிறிஸ்துவைப் பற்றி அதிகமாக அறிந்து கொள்ளுதலை மாத்திரம் - அது முக்கியமானதே

என்றாலும் (ரோமர் 10:17) அதை மாத்திரம் அவர் - தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை. "அறிதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*ginosko* என்ற வார்த்தையின் ஒரு வடிவம்) சொற்றொடர், உறவு வார்த்தையாக அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது: "[புதிய ஏற்பாட்டில்] *ginosko* என்பது அடிக்கடி, அறிகிற நபர் மற்றும் அறியப்படும் பொருள் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள உறவைச் சுட்டிக்காண்பிக்கிறது."[11]

ஏவுதல் பெற்ற வார்த்தையில் கிறிஸ்துவைப்பற்றி நாம் வாசிக்கும்போது, அவரைப்பற்றி "அறிதல்" தொடங்குகிறது (யோவான் 20:30, 31). அடுத்ததாக, மனம் வருந்திய விசுவாசிகள் என்ற வகையில், நாம் "*கிறிஸ்துவுக்குள்ளாக* ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறோம்" (கலாத்தியர் 3:27; என்னால் வலியுறுத்தப்படுகிறது). பின்பு அவருடன் நாம் "நடக்கையில்" (காண்க ரோமர் 6:4; கொலோசெயர் 2:6) மற்றும் அவரோடு "ஐக்கியம்" கொண்டிருக்கையில் (காண்க 1 கொரிந்தியர் 1:9; 1 யோவான் 5:20), நாம் அவரைப் பற்றி இன்னம் அதிகம் அதிகமாக "அறிந்து" கொள்கிறோம்: அவருடனான நமது உறவு இன்னும் நெருக்கமாகவும் இன்னும் தனிப்பட்டதாகவும் வளருகிறது. வில்பர் ஃபீல்ட்ஸ் என்பவர் இந்த அற்புதமான "அறிவை," "விரிவானது, பயன்நிறைந்தது, களிப்பூட்டுவது, திருப்திப்படுத்துவது, ஆழ்ந்தறிவுள்ளது, அதிகாரத்துவமானது, மேலேற்றுவது, தூய்மையாக்குவது, உதவிநிறைந்தது [மற்றும்] மறுரூபமாக்குவது!" என்று விவரித்தார்.[12] "தனிப்பட்ட வகையில் நம்பிக்கை வைத்தலின் நெருக்கத்தில், அவரை அறிதல் மற்றும் அர்ப்பணித்தல் என்பது அவரது இரட்சிக்கும் பயன்களை அறிதல் என்பதாகவே உள்ளது."[13]

நாம் இந்த வாழ்வில் இயேசுவை ஒருக்காலும் முழுமையாக "அறிய" முடியாது. அதனால்தான் பவுல், 9 மற்றும் 10ம் வசனங்களில் தமது கவனத்தை, மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுதல் என்ற கருத்தின் மீது திருப்பினார் 1 யோவான் 3:2ம் வசனம், "... அவர் வெளிப்படும்போது ... [கடைசியாக] அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் ... என்று கூறுகிறது."

கிறிஸ்துவுக்குள் காணப்படுதல்

பவுல் கிறிஸ்துவை "அறிதலோடு" நிறுத்திக் கொள்ள விரும்பவில்லை; அவர் "அவருக்குள் காணப்பட" விரும்பினார் (வசனம் 9அ) அவர் கிறிஸ்துவை "தமது நிரந்தரமான முகவரி" ஆக்கிக் கொள்ள விரும்பினார். அவர் "கிறிஸ்துவின் இயல்பு, ஊழியம், ஐக்கியம் மற்றும் பிரசன்னம் ஆகியவற்றிற்குள் முழுமையாக ஈடுபாடு கொண்டிருக்க விரும்பினார்."[14]

இந்த இலக்குகளைப் பவுல், தமது சொந்த முயற்சிகள் மூலமாக நிறைவேற்றிக்கொள்ள முடிந்ததா? இல்லை. தொடர்ந்து அவர், *"... நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து" என்று கூறினார் (வசனம் 9ஆ).* "நீதி" என்ற வார்த்தை இவ்வசனத்தில் இருமுறை காணப்படுகிறது, இது "தேவனுடைய பார்வையில் நீதியானவராக எண்ணப்பட்டிருத்தல்" என்பதைக் குறிக்கிறது.

பவுல், "நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல்" என்று கூறியபோது, அவர் மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் பற்றிப்

பேசினார். கலாத்தியர் 2:16 வசனப்பகுதியில் அவர் கூறியுள்ளபடி, "நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவ தில்லை." விருத்தசேதனமும் நியாயப்பிரமாணத்தின் மற்ற கிரியைகளும் நீதியைத் கொண்டுவர முடியாது மற்றும் கொண்டுவரமாட்டாது. இருப்பினும் நாம், இன்னும் அதிகமான நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும். பின்வரும் வார்த்தைகளை உங்கள் மனதில் அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள்: "எனது சுயநீதியை உடையவனாயிராமல்."

தேவனுக்குக் கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தை வேதாகமம் போதிக்கிறது (காண்க யோவான் 14:15; 1 யோவான் 5:2, 3). சர்வவல்லவரின் சில கட்டளைகளை "சிறியவை" அல்லது "முக்கியத்துவம் அற்றவை" என்று சிலர் கருதினாலும், நாம் அவரது ஒவ்வொரு கட்டளைக்கும் கீழ்ப்படியப்பிரயாசப்படவேண்டும் (காண்க மத்தேயு 5:19). இதை நான் என் முழு இருதயத்தோடும் நம்புகிறேன், மற்றும் இதை நான் என் முழுபெலத்தோடும் போதிக்கிறேன். நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்ய நம்மை ஒப்புக் கொடுக்காவிட்டால், நாம் இரட்சிக்கப்பட முடியாது (காண்க மத்தேயு 7:21; எபிரெயர் 5:8, 9). அதேவேளையில், கட்டளைகளைக் கடைப்பிடித்தல் பற்றி வலியுறுத்துதலில் ஒரு அபாயம் உள்ளதை நான் உணர்ந்து அறிந்திருக்கிறேன்: நமது கிரியைகளின் அடிப்படையில் நாம் இரட்சிக்கப்படுவோம் என்று நினைத்தலின் அபாயம், "நமது சுய நீதியை" நிலைநாட்ட முயற்சி செய்யும் அபாயம். மெலோன் என்பவர், "இரட்சிப்பு என்பது முயற்சியினால் அடையப்படுவதல்ல, ஆனால் அது ஈடுசெய்வதால் கிடைக்கப் பெறுவதாக உள்ளது! அது சாதித்ததினால் அல்ல அனால் இயேசுவைக் கீழ்ப்படிதலுடன் விசுவாசிப்பதால் உண்டாகிறது" என்று எழுதினார்.[15]

இதையே பவுல் போதித்திருந்தார்: "... சுயநீதியை உடையவனாயிராமல், *கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால்* வருகிறதும் *விசுவாசமூலமாய்* தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து ..." (3:9; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இந்த விசுவாசம் "கிறிஸ்துவைப் பற்றிய முன்மொழிதல்களின் வரிசையொன்றிற்கு மதிநுட்பமான ஒப்புதல் என்பதாக இருப்பதில்லை, ஆனால் கிறிஸ்துவின் மீது தனிப்பட்ட நம்பிக்கை மற்றும் அவருக்குச் சுயத்தை அர்ப்பணித்தல் ஆகியவற்றின் செயல்பாடாக உள்ளது."[16] இது ஜீவனுள்ள விசுவாசமாக, செயல்படுகிற விசுவாசமாக, கீழ்ப்படிதலுள்ள விசுவாசமாக உள்ளது (காண்க யாக்கோபு 2:26; கலாத்தியர் 5:6; எபிரெயர் 11:8) - இது எஜமானரின் சித்தத்திற்கு முற்றிலும் அர்ப்பணித்தலாக உள்ளது. இந்த நம்பிக்கையுள்ள கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தில் கிறிஸ்துவுக்குள் நமது ஞானஸ்நானமும் (தண்ணீரில் அமிழ்த்துதல்) அடங்கியுள்ளது (கலாத்தியர் 3:26, 27). இருந்த போதிலும் இது, நாம் இயேசுவுக்காக என்ன செய்கிறோம் என்ற விசுவாசமாக இன்றி, இயேசு நமக்காக என்ன செய்கிறார் என்பதிலான விசுவாசமாக நிலைத்திருக்கிறது. இது சுய வாழ்த்துதலுக்கு எந்த ஒரு இடத்தையும் விட்டு வைப்பதில்லை.

ஒரு சுவிசேஷ ஊழியக்காரர், "faith" என்ற ஆங்கில வார்த்தைக்கு உள்ளூர் மொழியில் மொழிபெயர்ப்பு வார்த்தை ஒன்றைக் கண்டறியப் போராடிக் கொண்டிருந்தார்.[17] ஒருநாள், தேவையில் இருந்த ஒரு மனிதரால் இடைமறிக்கப்படும் வரையிலும், ஏற்புடைய வார்த்தையொன்றை கண்டறிய அவர் தவறியிருந்தார். அந்த மனிதர், "நான் வந்து *கனமாக* உங்கள் மீது *சாய்ந்து*

கொள்ளட்டுமா?" என்று கேட்டார். கிறிஸ்துவை "விசுவாசித்தல்" என்பது அவர்மீது "கனமாகச் சாய்ந்து" கொள்ளுதலாக - அவரை, அவரைமாத்திரமே சார்ந்திருத்தலாக உள்ளது. நாம் அவரை "அறிய" வேண்டுமென்றால், நாம் "அவருக்குள் இருப்பதாகக் காணப்பட" வேண்டுமென்றால், இதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

முடிவுரை

நமது வேதபாட வசனப் பகுதியின், 9 மற்றும் 10ம் வசனங்களில், பவுல் கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை மற்றும் அவருடைய பாடுகளின் ஐக்கியம் உட்பட, கர்த்தரைப் பற்றிய *எல்லாவற்றையும்* தாம் அறிந்து கொள்ள விரும்பியதாக உரைத்தார் (வசனம் 10). இவ்வசனங்களைப் பற்றி ஒரு விபரமான படிப்பை நமது அடுத்த பாடத்திற்காக நாம் விட்டு வைப்போம்.

நமக்கு உண்மையிலேயே முக்கியமானதாக உள்ளது எது? பவுலுக்கு முக்கியமானதாக இருந்தது எது [அல்லது யார்] என்பது தெளிவாக உள்ளது: இயேசு மற்றும் இயேசு மட்டுமே. இலாபம் மற்றும் நஷ்டம் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், இந்த அப்போஸ்தலர், கர்த்தரைத் தவிர எல்லாவற்றையும் "நஷ்டம்" என்று கண்ணோக்கினார். கர்த்தரை அறிதல் என்பதே அவரது ஒரே "இலாபமாக" இருந்தது. உங்கள் இருதயத்தை ஆராய்ந்து பார்த்த பின்பு, உங்களுக்கும் கர்த்தருக்கும் இடையில் ஏதேனும் நிற்பதாக நீங்கள் கண்டறிந்தால், நீங்கள் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, பவுல் செய்தது போன்றே அதை "குப்பையாக" எண்ணுங்கள். உங்கள் வாழ்வை - இன்றே - அவருக்கு அர்ப்பணியுங்கள்!

குறிப்புகள்

[1]P. Bonnard; quoted in Ralph P. Martin, *The Epistle of Paul to the Philippians,* rev. ed., Tyndale New Testament Commentaries, ed. R. V. G. Tasker (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 144. [2]J. A. Bengel; quoted in Martin, 145. [3]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary*, vol. 43, *Philippians*, ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 132-33. [4]Pat Edwin Harrell, *The Letter of Paul to the Philippians,* The Living Word Commentary series, ed. Everett Ferguson (Austin, Tex.: R. B. Sweet Co., 1969), 117. [5]Ibid. [6]Hawthorne, 134. [7]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III (Minneapolis: Bethany House Publishers, 1984), 970. [8]Avon Malone, *Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 78. [9]Hawthorne, 139. [10]Ibid., 136.

[11]Vine, 628. [12]Wilbur Fields, *Philippians-Colossians-Philemon,* Bible Study Textbook Series (Joplin, Mo.: College Press, 1969), 78. [13]Martin, 151. [14]Fields, 79. [15]Malone, 79. [16]Hawthorne, 141. [17]இந்த விவரிப்பு, Alec Motyer, *The Message of Philippians: Jesus Our Joy*, The Bible Speaks Today series, ed. John R. W. Stott (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1984), 159 என்ற புத்தகத்தில் இருந்து தழுவியமைக்கப்பட்டுள்ளது.

12

கவனம்குவிக்கப்பட்ட வாழ்வை வாழுதல்

[பிலிப்பியர் 3:10-16]

பசியாயிருந்து ஒரு புலி, ஒரு மானின் வாசனையைக் கண்டு அதைத் தொடர்ந்தது. அது மானைத் தொடருகையில், ஒரு முயலின் வாசனை அதற்குத் தென்பட்டது. அது உடனே இப்புறமாகத் திரும்பி, முயலைத் தொடரத் தொடங்கிற்று. பின்பு அது ஒரு எலியின் வாசனையினால் வழிவிலக்கப்பட்டு அதைத் தொடரத் தொடங்கிற்று. கடைசியில் அது அந்த எலி உட்சென்று மாயமாகிவிட்ட ஒரு பொந்தினருகே வந்து நின்றது. அந்தப் புலி அந்த நாளின் தொடக்கத்தில் இருந்ததைக் காட்டிலும் அந்த நாளின் முடிவில் அதிக பசியாக உணர்ந்தது. இந்தக் கதை, நம்மில் சிலர் நமது வாழ்வை எவ்வாறு செலவிடுகிறோம் என்பதை விவரிக்கிறது: கடைசியில் சிறிதளவே சாதித்திருக்கும் நிலைவரைக்கும் - இதனால் அல்லது அதனால் வழிவிலக்கப்படுதல்.

சட்டப்படி, தனிச்சிறப்பான சாதனைகளை ஏற்படுத்துபவர்கள் தங்கள் சிந்தனைகள் மற்றும் ஆற்றல்களை ஒரு இலக்கின் மீது கவனம் குவிப்பதன் மூலம் அவ்வாறு செய்கின்றனர். நான் ஒரு சிறு பையனாக இருந்தபோது, எனது தந்தையார் எனக்கு, கிளென் கன்னிங்ஹாம் (1909-88) என்பவரின் வரலாற்றையும் ஒரு மைல் ஓட்டப் பந்தயத்தில் உலக அளவில் முதலிடம் பெறவேண்டும் என்ற அவரது தீர்மானத்தையும் பற்றி எனக்குக் கூறினார். கிளென் மற்றும் அவரது சகோதரர் ஆகிய இருவரும், கான்ஸாஸ் மாகாணத்தின் கிராமப் பள்ளிக்கூடம் ஒன்றில் சேர்ந்து கல்வி பயின்றனர். ஒரு குளிர்காலக் காலை வேளையில், அவர்கள் பள்ளி இல்லத்தின் அடுப்பில் நெருப்பு மூட்டிக் குளிர் காய்ந்து கொண்டு இருந்தபோது, அந்தக் கட்டிடத்தில் தீப்பற்றிக் கொண்டது. கிளென் தனது சகோதரனைச் சுமந்து கொண்டு வெளியேற முயற்சி செய்தார். அவர் கதவின் அருகே நிலைகுலைந்து விழுந்தார். அந்த இடத்திற்கு விரைந்து வந்த மக்கள் அந்த இரு பையன்களையும் வெளியே இழுத்து விட்டனர். இருவரும் கடுமையான தீக்காயங்களால் பாதிக்கப்பட்டிருந்தனர். மருத்துவர் வந்து சேர்ந்தபோது, கிளென்னுடைய சகோதரனின் இறப்பை அறிவித்த அவர் “கிளென் தேறி எழ மாட்டார்” என்று கூறினார். பல நாட்களுக்குப் பின்பு அந்த மருத்துவர், “அவன் [கிளென்] உயிர்பிழைத்துக் கொள்வான், ஆனால் அவன் ஒருக்காலும் நடக்கமாட்டான்” என்று கூறினார். கிளென் நேராக நின்று நடக்கும்படிக்கு கிளென்னின் கைகளை அவரது தந்தையார், நடவுக்கலப்பையில்[1] கட்டி வைப்பார். கடைசியில் அவரால் தாமாகவே கால்களைத் தேய்த்துத் தேய்த்து நடக்க முடிந்தது. பின்பு அவரால் கால்களைத் தேய்க்காமலேயே நடக்க முடிந்தது. பின்பு அவர் ஓடத் தொடங்கினார். அவர்

கல்லூரி அளவில், நாட்டு அளவில் மற்றும் உலக அளவில் ஒரு மைல் ஓட்டப் பந்தயத்தில் வெற்றிகளைக் குவிக்கத் தொடங்கினார். அவர் தமது நாட்களில் மிகச்சிறந்த ஓட்டப்பந்தய வீரர்களில் ஒருவராக ஆனார் - ஏனென்றால் அவர் தமது வாழ்வில் கவனக்குவிப்பைக் கொண்டிருந்தார்.

நமது பாடத்திற்கான வேத வசனப் பகுதியான 3:10-16ல் நாம், ஒருவரின் வாழ்விற்கான கவனக்குவிப்பை - ஆவிக்குரிய கவனக்குவிப்பை - காணுகிறோம். பவுல், "ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்று எழுதினார் (வசனங்கள் 13ஆ, 14). இவ்வசனப் பகுதியை நான் புதிரானதாகக் காணுகிறேன். "ஒன்று செய்கிறேன்." "நான் ஒரு நூறு விஷயங்களைத் தொடங்குகிறேன்" என்பதோ அல்லது "ஒரு டஜன் விஷயங்களை நான் முயற்சி செய்கிறேன்" என்பதோ அல்ல, ஆனால் "*ஒன்று* செய்கிறேன்" என்பதே இங்குள்ளது. "செய்கிறேன்" என்ற வார்த்தைகள் மொழிபெயர்ப்பாளரால் தரப்பட்டுள்ளன. மூல வேதவசனத்தின் நேரடித் தரவமைப்பு பின்வருவது போன்று வாசிக்கப்படும்: "ஒரு விஷயம்! பின்னானவைகளை மறந்து." LB வேதாகமத்தில் பின்வரும் பொழிப்புரை உள்ளது: "இந்த ஒரு விஷயத்தைச் சுமந்திருக்க நான் எனது எல்லா ஆற்றல்களையும் கொண்டுவருகிறேன்."

இந்தக் கருத்துடன் நான் போராடுகிறேன். நான் மிகப் பல திட்டங்களில் ஈடுபட்டு, அவற்றில் பெரும்பான்மையானவற்றை சுமாராகவே செய்து முடிக்கிறேன். நான் எனது வாழ்வை எளிமையாக்க முயற்சி செய்கிறேன் - ஆனால் அதில் சிறிதளவே வெற்றி கிடைக்கிறது. எனது எழுது மேஜைக்குப் பின்னால் பின்வரும் ஜெர்மானியப் பழமொழியை எழுதி ஒட்ட வைத்துள்ளேன்: "மிக அதிகமானதைத் தொடங்குகிறவர் மிகக் கொஞ்சமாகவே சாதிக்கிறார்." எனது நண்பன் ஒருவர், "கொஞ்சம் செய்து அதை மிகச்சிறப்பாகச் செய்தல்" என்பதே தமது புத்தாண்டுத் தீர்மானமாகும் என்று என்னிடத்தில் கூறினார். நானும் அதே தீர்மானத்தை மேற்கொள்ள முயற்சி செய்தேன் - மற்றும் விரைவிலேயே அதை மீறிவிட்டேன். ஒருவேளை நீங்களும் கூட, கவனக் குவிப்பில் நிலைத்திருப்பதில் இடர்ப்பாடு கொண்டு இருக்கலாம். விஷயம் அப்படியிருந்தால், பவுலின் கவனம் குவிக்கப்பட்ட வாழ்வு பற்றிய பாடம் நம் இருவருக்கும் உதவலாம்.

ஒரு நபர் மீது கவனம் குவித்தல் (3:10, 11)

நமது முந்திய படிப்பில் நாம், பவுலிடமிருந்து பின்வரும் வார்த்தைகளை வாசித்தோம்: "என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை *அறிகிற அறிவின்* மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்" (3:8ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). கிறிஸ்துவை "அறிதல்" என்பதில், அவரைப் பற்றி அறிந்து கொள்ளுதல் என்பதை விட அதிகமானவை உள்ளடக்குகின்றன என்று நாம் வலியுறுத்தினோம்; அது அவருடன் ஒரு *உறவை* மேம்படுத்துவதை உள்ளடக்குகிறது. ஜெரால்டு ஹாவ்தோர்ன் என்பவர், "எல்லாவற்றையும் நஷ்டம் என்று" எண்ணப் பவுல் மனவிருப்பமாயிருந்தார், ஏனென்றால் "இப்போது ... *ஒரு விஷயம்* பவுலின் நிறைவான மதிப்புடையதாக இருந்துள்ளது, அது கிறிஸ்து இயேசுவைப் பற்றிய தனிப்பட்ட அறிவு என்று பெயர் கொண்டுள்ளது" என்று உற்றுக் கவனித்துள்ளார்.[2]

கிறிஸ்துவை அறிதலுக்கான அப்போஸ்தலரின் விருப்பம் 10ம் வசனத்தில் விரிவாக்கபட்டுள்ளது: "இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்." கிறிஸ்துவுடன் ஒரு விசேஷித்த உறவை மகிழ்வுடன் அனுபவித்தார் என்ற கருத்தில் பவுல் கிறிஸ்துவை ஏற்கனவே அறிந்திருந்தார் (கலாத்தியர் 2:20), ஆனால் அவர் இன்னும் அதிக ஆழமான வளமான அறிவைப் பெற ஏங்கினார். எனது திருமணத்துடன் தொடர்புடைய ஒரு விவரிப்பு சிந்தைக்கு வருகிறது. நான் (19 என்ற "பக்குவமான" வயதில்) ஜோவைத் திருமணம் செய்துகொண்டபோது, அவளை நான் அறிந்து இருந்ததாக நினைத்தேன். ஆண்டுகள் கடந்து சென்றுள்ள நிலையில், அந்த அறிவு வளர்ந்துள்ளது - ஆனால் ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள் கால திருமண வாழ்விற்குப் பின்பு இப்போதும் அவள் என்னைத் திகைப்படையச் செய்கிறாள். அவளைப் பற்றிய எனது அறிவு, முழுமையிலிருந்து இன்னமும் தொலைவிலேயே உள்ளது.

இந்த வாழ்வில் கிறிஸ்துவை அறிதல்

பவுல், இயேசுவைப் பற்றிய *எல்லாவற்றையும்* அறிய விரும்பினார். *"அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை" அறிய அவர் [பவுல்] விரும்பினார் (வசனம் 10ஆ).*[3] இந்தக் குறிப்பு, கிறிஸ்து நம்மை மரித்தோரிலிருந்து எழுப்பும் வல்லமைக்கானதாக இருக்கலாம் (காண்க 3:21), ஆனால் அனேகமாகப் பவுல், உயிர்த்தெழுந்த கர்த்தர் மூலமாகக் கிறிஸ்தவருக்குத் கிடைக்கக் கூடிய வல்லமை அல்லது பெலத்தைத் தமது சிந்தையில் கொண்டிருக்கலாம். அப்போஸ்தலரின் வாழ்வானது இந்த வல்லமையினால் ஏற்கனவே ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது. அவர் "... நான் இப்போழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைதாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" என்று எழுதினார் (கலாத்தியர் 2:20). மீண்டுமாக அவர், "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" என்று எழுதினார் (பிலிப்பியர் 4:13). அதே வேளையில் அப்போஸ்தலர், அந்த பலம் மற்றும் வல்லமை தொடர்ந்து *புதுப்பிக்கப்படுதலுக்கான* தேவையை உணர்ந்தார். மின்சேமக்கலங்கள் [பேட்டரிகள்] மறுமின்னூட்டம் செய்யப்படாவிட்டால், அவைகள் "சக்தி இழந்து" போகின்றன. அதுபோன்றே, நம் யாவருக்கும் அவ்வப்போது "மறுமின்னூட்டம்" செய்விப்பது அவசியமாக உள்ளது.

அத்துடன் கூடுதலாக, பவுல் "அவரது பாடுகளின் ஐக்கியத்தை அறிய விரும்பினார்" (வசனம் 10இ). "ஐக்கியம்" என்பது "பகிர்தல்" அல்லது "இணைந்து பங்கேற்றல்" என்பதாக உள்ளது. கிறிஸ்துவின் பாடுகளில் பங்கேற்காத எவரொருவரும், அவரை முழுமையாக அறிந்துகொள்ள இயலாது என்று பவுல் நினைத்தார்! இவ்வகையான ஐக்கியத்தைப் பற்றிச் சிலர் அதிகமான உற்சாகம் கொண்டிருப்பதில்லை. ராபர்ட் லெய்ட்லா என்பவர், தாம் அடிக்கடி "ஊழியம் செய்யவே இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்" என்ற கொள்கையைக் கண்டிருந்தாகவும், ஆனால் "பாடுபடவே இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்" என்ற கொள்கையை ஒருக்காலும் கண்டிருந்ததில்லை என்று கூறினார்.[4]

பவுல், கிறிஸ்துவின் பாடுகளில் *பங்கேற்றிருந்தார்*. அவர், "கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன்" என்று எழுதினார் (கலாத்தியர் 6:17). கொரிந்தியருக்கு அவர் பின்வருமாறு எழுதினார்:

> கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்போழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம். எப்படியெனில், சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங்கும்படிக்கு உயிரோடிருக்கிற நாங்கள் எப்போழுதும் இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம் (2 கொரிந்தியர் 4:10, 11).

கிறிஸ்துவுக்காகப் பாடுபடுதலின் மூலமாகப் பவுல், தமக்காகக் கர்த்தர் பாடுபட்டிருந்ததை மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டார். அவர் கிறிஸ்துவை இன்னும் சிறப்பாகப் புரிந்து கொண்டார்.

பவுல், தமது சிந்தனையை, "அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி" என்ற வார்த்தைகளுடன் முடித்தார் (வசனம் 10ஈ). அவர், கர்த்தருடைய உதவியுடன், சுயத்திற்கும் உலகத்திற்கும் மரித்துக் கொண்டிருந்தார். அவரால், "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்று எழுத முடிந்தது (கலாத்தியர் 2:20அ, ஆ).

கிறிஸ்துவை இன்னும் முழுமையாக அறிய வேண்டும் என்ற பவுலின் விருப்பம், குறைந்த பட்சம் பின்வரும் நான்கு முகப்புக்களைக் கொண்டிருந்தது:

- ஒரு தனிப்பட்ட அனுபவம்: "நான் அவரை அறியும்படிக்கு."
- ஒரு வல்லமை நிறைந்த அனுபவம்: "அவரது உயிர்த்தெழுதலின் வல்லமையையும்."
- ஒரு வேதனை நிறைந்த அனுபவம்: "அவரது பாடுகளின் ஐக்கியத்தையும்."
- ஒரு நடைமுறை அனுபவம்: "அவரது மரணத்திற்கு ஒப்பாகுதல்."[5]

எனக்கு, கிறிஸ்துவை அறிதலுக்கான தாகத்தின் தொடக்கத்தையும், அதைத்தொடர்ந்து கிறிஸ்தவ வாழ்வில் வர வேண்டியவற்றையும் கூறுகிற, ரோமர் 6ம் அதிகாரம் நினைவுக்கு வருகிறது. பின்வரும் வசனங்களை நீங்கள் வாசிக்கையில், கிறிஸ்துவின் பாடுகள் மற்றும் உயிர்த்தெழுதல் அத்துடன் கூடுதலாக அவரது மரணத்தின் சாயலுக்கு ஒப்பாகுதல் ஆகியவற்றின் மீதான வலியுறுத்தங்களைக் கண்ணோக்குங்கள்:

> கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாம லிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய

மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே.

ஆகையால் கிறிஸ்துவுடனே கூட நாம் மரித்தோமானால், அவருடனே கூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம். மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை. அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார். அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள் (ரோமர் 6:3-11).

மனம் வருந்திய விசுவாசி என்ற வகையில் பெறும் ஞானஸ்நானம் (தண்ணீருக்குள் முழுக்காட்டப்படுதல்), கிறிஸ்துவை அறியவருதலின் தொடக்கமாக உள்ளது - ஆனால் அது பயணத்தின் முடிவாக இருப்பதில்லை. இயேசு, "ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை *அநுதினமும்* எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" என்று கூறினார் (லூக்கா 9:23; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

இனிவரும் வாழ்வில் கிறிஸ்துவை அறிதல்

இயேசுவைப் பின்பற்றும்படிக்கு நாம் நம்மையே அர்ப்பணித்து இருந்தாலும், இந்த வாழ்வில் அவரைப் பற்றி முற்றிலுமாக நாம் அறிய முடியுமா? இல்லை. அதைப் பவுல் புரிந்துகொண்டு இருந்தார், எனவே அவர் பரலோகத்தில் கிறிஸ்துவின் பிரசன்னத்தில் தாம் வாழப்போகும் காலத்தை முன்னெதிர் நோக்கினார். 3:10ம் வசனத்தின் இறுதிப் பகுதியில், அவர் இதைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பது தெளிவு: "நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்."

"உயிரோடெழுந்திருப்பதற்கு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை வழக்கத்திற்கு மாறானதாக உள்ளது, இது புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே காணப்படுகிறது. இது "உயிர்த்தெழுதல்" என்பதற்கான வழக்கமான (*anastasis* என்ற) வார்த்தையை, "வெளியே" அல்லது "வெளியின்" என்று அர்த்தப்படுத்துகிற (*ek* என்ற) முன்னிடைச் சொல்லைக் கொண்டு முகவுரைப் படுத்தப்படும் கிரேக்கக் கூட்டுவார்த்தையாக உள்ளது. பின்பு பவுல், *ek* என்ற வார்த்தையைத் திரும்பவும் மரித்தோர் என்ற வார்த்தைக்கும் பயன்படுத்தினார். அப்போஸ்தலர் நேரடி அர்த்ததில் "மரித்தோரிலிருந்து வெளியே உயிர்த்து வெளியே எழுப்பப்படுதல்" என்பதைப் பற்றிப் பேசினார். இது ஆங்கில [மற்றும் தமிழ்] மொழியில் தேவைக்கு அதிகமானதாக இருக்கலாம், ஆனால் கிரேக்க மொழியில், வார்த்தைகளைத் திரும்பத் திரும்பத் கூறுதல்

என்பது வலியுறுத்தம் தரும் வழியாக இருந்தது. இது பவுல், உயிர்ப்பிக்கப்படும் சிலரிலிருந்து வெளியே (அதாவது, ''அவர்களிலிருந்து பிரிந்து'' அல்லது "அவர்களுக்கு அப்பால்") எழுப்பப்படுவார் என்பதை வலியுறுத்தும் அவரது வழியாக இருந்தது.

"... பிரேதக்குழிகளிலுள்ள *அனைவரும்* ... நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவான் 5:28, 29; என்னால் வலியுறுத்தப்படுகிறது) என்ற பொதுவான உயிர்த்தெழுதலைப் பற்றி இயேசு போதித்தார். பிலிப்பியர் 3:10ல் அனேகமாக பவுல், தாம் "தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி" எழுந்திருப்பவர்களில் ஒருவராக *அல்ல*, ஆனால் தாம் "நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருப்பவர்களில்" ஒருவராக எழுப்பப்படும்படி எதிர்பார்த்திருந்ததாகக் கூறியிருப்பார்.

"ஜீவனை அடையும்படி எழுந்திருத்தல்" ஆச்சரியமான ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும். அப்போது எல்லா போராட்டங்களும் தீர்த்துவைக்கப்படும், எல்லா சுகவீனங்களும் குணமாக்கப்படும் (ஒழுக்கரீதியான மற்றும் மாம்சரீதியான) எல்லா மனித பலவீனங்களும் நீக்கிப்போடப்படும் மற்றும் எல்லாத் தவறுகளும் என்றென்றைக்குமாகச் சரியாக்கப்படும்.[6] இருப்பினும் பவுலுக்குக் கிறிஸ்துவை முழுமையாக அறிய வருதலைக் காட்டிலும் அதிக அற்புதமான ஆசீர்வாதம் வேறு எதுவும் இல்லை!

10ம் வசனத்தை விட்டுச் செல்வதற்கு முன்னர், நான் "எப்படியாயினும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொற்றொடரைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறியாக வேண்டும். இந்த மொழிபெயர்ப்பு, 10ம் வசனத்திலிருந்து 11ம் வசனத்திற்கு ஒரு மென்மையான மாறுதலை அளிக்கிறது: "... அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, *எப்படியாயினும்* நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்கு தகுதியாகும்படிக்கும், ..." (என்னால் வலியுறுத்தப்படுகிறது). உண்மையில் இந்த மாறுதலானது NASB வேதாகமத்தில் கருத்தாகத் தெரிவிக்கப்படுவதைப் போன்று மூலவசனத்தில் அவ்வளவு தெளிவாக இருப்பதில்லை.[7] இவ்வசனப்பகுதி "ஆல்" [அதாவது ஆங்கிலத்தில் "if," என்று அர்த்தப்படும் (*ei* என்ற) வார்த்தையுடனும் "எவ்வாறு" அல்லது "எவ்வாறேனும்" என்பதற்கான (*pos* என்ற) வார்த்தையுடனும் தொடங்குகிறது. எனது NASB வேதாகமப்பிரதியில் 10ம் வசனத்தின் முதற்பகுதியில் பின்வரும் குறிப்பு உள்ளது: "நேரடியான அர்த்தத்தில் *எவ்வாறேனும்.*" KJV வேதாகமம் "if by any means" என்ற சொற்றொடருடன் இவ்வசனத்தைத் தொடங்குகிறது. NIV வேதாகமத்தில் "மற்றும் எனவே, எவ்வாறாயினும்" என்றுள்ளது. RSV வேதாகமத்தில் "சாத்தியமானால்" என்றுள்ளது.

"ஆல்," "எப்படியாயினும்" மற்றும் "சாத்தியமானால்" போன்ற சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ள விஷயமானது, பவுல் கர்த்தருடன் எழுப்பப்படுதல் பற்றிச் சந்தேகம் கொண்டிருந்தாரோ என்று சிலரை ஆச்சரியப்படச் செய்துள்ளது. இவ்விஷயத்தில் அப்போஸ்தலர் உறுதியற்ற தன்மை எதையும் தமது சிந்தையில் தேக்கி வைத்திருக்கவில்லை என்று மற்ற வசனப்பகுதிகள் சுட்டிக்காண்பிக்கின்றன (காண்க 2 தீமோத்தேயு 4:8).

பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் முன்னதாக அவர், தாம் மரிக்கும்போது, தாம் "கர்த்தருடன் இருக்க" செல்லுவோம் என்ற தமது நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தினார் (1:23). பின்பு ஏன் அவர், "எப்படியாயினும்" என்று அர்த்தப்படும் சொற்றொடரைப் பயன்படுத்தினார்? பவுல், சந்தேகத்தை அல்ல, ஆனால் தாழ்மையையே வெளிப்படுத்தினார் - அதாவது அவர் தமது சொந்த முயற்சிகளின் விளைவாக இரட்சிக்கப்படப் போவதில்லை, ஆனால் தேவனுடைய கிருபையின் மூலமாகவே இரட்சிக்கப்படப் போகிறார் என்பதை அவர் திரும்பவும் ஒப்புக்கொண்டார் - என்று பல எழுத்தாளர்கள் நம்புகின்றனர். பேதுரு, "நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், ..." என்று எழுதியபோது இதேவகையான மன அமைவைத் தெரியப்படுத்தினார் (1 பேதுரு 4:18).

இந்த பகுதியை முடிப்பதில் நாம், இதன் மைய ஆய்வுக்கருத்திற்கு திரும்புதல் அவசியமாக உள்ளது: பவுல் கிறிஸ்துவை அறிதல் மீது கவனம் குவித்தார். அதுவே நமது வாழ்வின் முதன்மைக் கவனக்குவிப்பாவும் இருக்க வேண்டும். இயேசுவின் கூற்று ஒன்றைத் தழுவிக் கொள்வதென்றால், இதுவே நித்திய ஜீவனாக உள்ளது: தேவனையும் அவர் அனுப்பியுள்ள கிறிஸ்துவையும் அறிதல் (காண்க யோவான் 17:3).

ஒரு பந்தயப் பொருளின் மீது கவனம் குவித்தல் (3:12-14)

அது நம்மை நமது பாடத்தின் இருதயம் போன்ற மையப் பகுதிக்குக் கொண்டுவருகிறது:

> நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் (வசனங்கள் 12-14).

இவ்வசனப்பகுதி, இப்பாடத்தின் தொடக்கத்தில் மேற்கோள் காண்பிக்கப்பட்ட வசனங்களைக் கொண்டுள்ளது. இவ்வார்த்தைகளை நாம் அதிகம் நெருக்கமாகக் கண்ணோக்குகையில், பவுலின் "ஒன்று" என்பதற்குப் பல முகப்புகள் இருப்பதை நாம் காணுகிறோம். அது அவரது வாழ்வின் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கி இருந்தது: அவரது நிகழ்காலம், அவரது கடந்த காலம் மற்றும் அவரது எதிர்காலம்.

நிகழ்காலத்தைப் பொறுத்த மட்டில்: தாழ்மை அவசியம்!

பவுல், யூதர் என்ற வகையிலான தமது கடந்த காலம் (வசனங்கள் 4-6), மற்றும் அவர் கர்த்தருக்காக எவ்வாறு எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்திருந்தார் (வசனங்கள் 7, 8) என்பவற்றைப் பற்றி எழுதியிருந்தார். இந்த அப்போஸ்தலர் பூரணத்தன்மையை உரிமைகோரினார் என்று சிலர் முடிவு செய்யலாம்,

எனவே அவர் "நான் அடைந்தாயிற்று, ... என்று எண்ணாமல்" என்று கூறத் துரிதப்பட்டார் (வசனம் 12அ). இவ்வசனத்தில் NASB வேதாகமத்தில் "அதை" என்ற வார்த்தை சேர்க்கப்பட்டு அது சாய்வெழுத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது, இது இவ்வார்த்தை மொழிபெயர்ப்பாளர்களால் கூட்டப்பட்டுள்ளதைச் சுட்டிக்காண்பிக்கிறது. நேரடி அர்த்தத்தில், பவுல், "நான் அதை ஏற்கெனவே அடைந்தாயிற்று என்று எண்ணாமல்" என்று சொன்னார். எதை அடைந்தாயிற்று? 12ம் வசனத்தை 10ம் வசனத்துடன் பிணைத்தால், பவுல் இன்னமும் தாம் உயிர்ப்பிக்கப்படவில்லை என்று கூறுவது போன்று முதலில் காணப்படலாம். இந்த சத்தியம் உரைப்பதற்கு மிகத் தெளிவானதாக காணப்படலாம், ஆனால் உயிர்த்தெழுதல் என்பது கடந்திருந்தது என்ற கள்ளப்போதகத்தைப் பவுல் எதிர்த்துப் போரிட்டார் என்று சிலர் நினைக்கின்றனர் (காண்க 2 தீமோத்தேயு 2:18). இருப்பினும், 12ம் வசனத்தைப் பவுல் கூறிய *எல்லாவற்றுடனும்* பிணைத்தலானது, அனேகமாக அவர் தாம், உயிர்த்தெழும் வேளையில் வரவிருக்கும், இயேசுவைப்பற்றிய முழுமையான அறிவை இன்னமும் பெற்றிருக்கவில்லை என்று ஒப்புக்கொண்டிருக்கலாம் என்று குறிப்பிடுவதாக உள்ளது.

தொடர்ந்து பவுல், "அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல்" என்று எழுதினார். "தேறினவன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தைக்கு *telos* என்பதே வேராக உள்ளது, இது "முடிவு" என்று அர்த்தப்படுகிறது. "பூரணமாக" இருப்பது எதுவோ, அது "தனது முடிவு நிலையை அடைந்திருக்கிறது," அது தனது நோக்கத்தை நிறைவேற்றியிருக்கிறது.[8] பவுல் நமது வேதவசனப் பகுதியில் இவ்வார்த்தையை இரு கருத்துக்களில் பயன்படுத்தினார். 12ம் வசனத்தில் அவர், தாம் "தேறினவராக" இருக்கவில்லை என்பதை, ஒப்புக்கொண்டு அவ்வார்த்தையை நாம் வழக்கமாகப் பயன்படுத்தும் வகையில் பயன்படுத்தினார். அப்படிப்பட்ட தேறுதல் - அவர் இருக்க வேண்டிய பிரகாரம் இருத்தல் - அவரைக் கர்த்தர் மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கும் வரையிலும் நடைபெறாது. 13ம் வசனத்தின் முதற்பகுதியில் அவர், "சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை" என்று கூறியதன் மூலம் 12ம் வசனத்தின் சிந்தனைக்கு மறுவலிவூட்டினார். (கிரேக்க வசனத்தில், 3:13ல் உள்ள "நான்" என்ற வார்த்தை வலியுறுத்தத்திற்காக வாக்கியத்தின் தொடக்கத்திற்கு அண்மையில் வைக்கப்பட்டுள்ளது.) பவுல் செய்யும்படி கர்த்தர் விரும்பிய எல்லாவற்றையும் அவர் "பற்றிக்கொள்ள" - அல்லது நிறைவேற்றவில்லை.

இவ்விடத்தில் நமக்கு ஒரு பாடம் உள்ளது. பவுல், புதிய ஏற்பாட்டின் மாபெரும் மனிதர்களில் ஒருவராக இருந்தார், அவர் இயேசுகிறிஸ்துவுக்கு அடுத்தபடியாக மாபெரும் மனிதராக இருந்தார். அவரது பயணங்கள் மற்றும் பிரசங்கங்கள் ஆகியவற்றை நினைத்துப்பாருங்கள். அவரது எழுத்துக்கள் மற்றும் அவரது செல்வாக்கு ஆகியவற்றை நினைத்துப் பாருங்கள். ஒருவேளை, கர்த்தரைத் தவிர வேறு எவரும் பவுலைப் போன்று இவ்வளவு அதிகமாக உலகத்தில் செல் வாக்குச் செலுத்தியதில்லை எனலாம். இருந்தபோதிலும் அவர், தமது ஆவிக்குரிய அடைவிடத்தைத் தாம் அடைந்து விட்டதாக நினைக்கவில்லை. நான் வாழும் இடத்தில் நாங்கள், பவுல் தாம் "அதைச் சாதித்ததாக" நினைக்கவில்லை என்று கூறுவதுண்டு. அப்போஸ்தலரான பவுலே பூரணத்தன்மையை உரிமை

கோர இயலாது என்றால், நாமும் அவ்வாறு உரிமைகோர இயலாது. கவனம் குவிக்கப்பட்ட வாழ்வை நடத்த, ஆவிக்குரிய வகையில் நாம் எங்கிருக்கிறோம் - எந்த அளவிற்கு நாம் வந்துள்ளோம் மற்றும் எந்த அளவிற்கு நாம் இன்னும் கடந்து செல்ல வேண்டும் - என்பதைப் பற்றிய உண்மைத்துவமான கண்ணோக்கு ஒன்று நமக்கு அவசியமாக உள்ளது.

நாம் மரிக்கும் வரையில் ஆவிக்குரிய வகையில் வளர்வதைக் காத்துக்கொள்ள வேண்டும் என்று நமக்கு வேதாகமம் அறைகூவல் விடுக்கிறது (எபேசியர் 4:15; 2 பேதுரு 3:18). ஒரு மரமானது வளர்வதை நிறுத்தும்போது, அது இறந்து விடுகிறது. உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த ஜஸ்டிஸ் ஆலிவர் வென்டெல் ஹொம்ஸ் (1841-1935) என்பவர் தமது 91ம் வயதில், பிளேட்டோ என்ற தத்துவ ஞானியின் புத்தகத்தை அதன் மூலமொழியான கிரேக்கமொழியில் வாசித்துக் கொண்டிருந்தது பற்றிய கதையொன்று கூறப்படுகிறது. "ஏன்?" என்ற கேட்கப்பட்டபோது அவர், "எனது மனதை நான் இளமையாகவும் துடிப்புள்ளதாகவும் காத்துக்கொள்ள விரும்புகிறேன்" என்று பதில் அளித்தார். நாம் இந்த உலகத்தில் பிறந்தபோது, நாம் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் வளர வேண்டும் என்று தேவன் நோக்கங்கொண்டிருந்தார். நாம் மறுபடி பிறந்தபோது (யோவான் 3:3, 5), நாம் ஆவிக்குரிய வகையில் வளர வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். எப்போதுமே அதிகமாகக் கற்பதற்கும், எப்போதுமே அதிகமாகச் செய்வதற்கும், எப்போதுமே அடைவதற்குக் கூடுதல் வளர்ச்சியும் உள்ளது. நிகழ்காலத்தை பொறுத்த மட்டில் நமக்குத் தாழ்மை அவசியம்.

கடந்தகாலத்தைப் பொறுத்தமட்டில்: மன்னிப்பு அவசியம்!

பவுல் ஆவிக்குரிய வகையில் தாம் இருக்க வேண்டிய பிரகாரம் இருக்கவில்லை என்ற உண்மையை எவ்வாறு எதிர்த்து சமாளித்தார்? அவர் அதைக் கையாண்ட ஒரு வழி பின்வருமாறு: *"பின்னானவைகளை மறந்து"* (வசனம் 13ஆ). பவுல் தமது கடந்த காலத்தின் எல்லா விஷயங்களையும் மறந்துவிடவில்லை. அவர் தேவனுடைய வசனத்தைப் பற்றிய தமது அறிவை மறந்துவிடவில்லை. அவர் தம்மைக் கர்த்தர் தமது கிருபையினால் இரட்சித்திருந்ததை மறந்துவிடவில்லை. அவர் தமக்கு வாழ்வு கற்பித்திருந்த ஒவ்வொரு விஷயத்தையும் மறந்துவிடவில்லை. அந்தப் பாடங்கள் எவ்வளவுக்குக் கடினமாக இருந்தனவோ அவ்வளவுக்கு அவை அவரது அப்போதைய நிலைக்கு அவரைக் கொண்டு வந்திருந்தன. பவுல் எவற்றை *மறந்தார்?*

அவர் தமது கடந்த கால வெற்றிகளை மறந்திருந்தார். அவர் ஒரு யூதர் என்ற வகையில் தமது சாதனைகளைப் பட்டியலிட்டிருந்தார் (வசனங்கள் 4-6). அவர் ஒரு கிறிஸ்தவர் என்ற வகையில் தாம் செய்திருந்த தியாகங்களைப் பற்றிப் பேசினார் (வசனங்கள் 7, 8). அவர் தமது ஊழியப் பயணங்கள், இயேசுவுக்கென்று தாம் ஆதாயப்படுத்தியிருந்தவர்கள், மற்றும் கர்த்தருக்காகத் தாம் சகித்திருந்த உபத்திரவங்கள் ஆகியவற்றைப் பற்றிப் பேசியிருக்க முடியும். அவர் தாம் சாதித்தவற்றிலேயே சிந்தை கொண்டு தரித்திருக்க முடியும் - ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. அவைகள் அவருக்குப் பின்னாக இருந்தன.

தேவன் நமக்கு வெற்றியை ஆசீர்வதித்திருந்தால், கடந்த கால சாதனைகளைக் குறித்துத் திருப்தி அடைந்த நிலையில் இருக்கும் அபாயம் எப்போதுமே உள்ளது. சர்தை நகரில் இருந்த சபைக்குழுமம் "உயிருள்ளதாக" இருந்தது பற்றி "ஒரு

பெயரை" (புகழ்ச்சியை) கொண்டிருந்தது, ஆனால் அது "மரித்து" இருந்தது என்பதே அந்த கிறிஸ்துவின் கண்டுபிடிப்பாக இருந்தது (வெளிப்படுத்தின விசேஷம் 3:1). கிறிஸ்தவர்களின் அமைப்பு கடந்தகாலப் புகழ்ச்சியில் இருந்து வெளியேற மனவிருப்பமாக இருந்தது.

பவுல் தமது கடந்த காலத் தோல்விகளையும் மறந்திருந்தார். அவர் தமது யூதத்துவ சாதனைகளைப் பட்டியலிடுகையில், சபையைத் துன்புறுத்தியதை உள்ளடக்கியிருந்தார் (பிலிப்பியர் 3:6). கிறிஸ்தவர் என்ற வகையில் அவர் தாம் "முற்றிலும் தேறினவர்" என்ற நிலையை "அடைந்திருக்கவில்லை" என்பதை ஒப்புக்கொண்டார் (வசனம் 12), மற்றும் அவர் இன்னமும் அதை "பிடித்துக்கொள்ளவில்லை" (வசனம் 13). பவுல் தாம் செய்திருந்தவை மற்றும் தாம் செய்திராதவை பற்றிய வருத்தத்தில் ஒவ்வொரு நாளிலும் பவுல் ஒவ்வொரு நிமிடத்தையும் செலவிட்டிருக்க முடியும். அவர் இவ்வாறு தமது நேரத்தை வீணாக்கவில்லை. அவர் தமது பாவங்களில் இருந்து மனந்திரும்பிய பின்பு, தேவனுடைய இரக்கத்தின்மீது நம்பிக்கை வைத்து கடந்த காலத்தைத் தமக்குப் பின்னால் வைத்து விட்டார்.

பலர், தங்களின் கடந்த காலமானது தங்களின் நிகழ்காலத்தை அழிக்கவும் அதனால் தங்கள் எதிர்காலத்தை அழிக்கவும் அனுமதிக்கின்றனர். சிலர் தங்களின் கடந்த காலத் தோல்விகளின் நினைவுகளினாலோ அல்லது கடந்த காலப்பாவங்களின் குற்ற உணர்வினாலோ வேட்டையாடப்பட்டுள்ளனர். கடந்த காலத்தில் நீங்கள் தோல்வி அடைந்திருந்தால் - நாம் யாவரும் அவ்வாறு தோல்வி அடைந்திருக்கிறோம் - உங்கள் குறைபாடுகளுக்காக மனம் வருந்தி, உங்களை மன்னிக்கும்படி தேவனிடம் கேட்டுக் கொண்டு, இன்னும் சிறப்பாகச் செயல்பட உங்களுக்கு உதவும்படி அவரிடம் கேட்டுக் கொண்டு, தொடர்ந்து முன்னேறுங்கள். ஜப்பான் நாட்டுப் பழமொழி ஒன்று, "ஏழுமுறைகள் விழுங்கள்; எட்டாவது முறை எழுந்து நில்லுங்கள்!" என்று கூறுகிறது. மற்றவர்கள் கடந்த காலத்தில் தவறாக நடத்தப்பட்டது பற்றிக் கசப்புணர்வினால் நிரப்பப்பட்டு இருக்கின்றனர். யாரேனும் ஒருவர் செய்துள்ளது உங்கள் சிந்தனைகளை மேலாதிக்கம் செய்ய நீங்கள் அனுமதிக்கும் போது, நீங்கள் அந்தத் தனி நபருக்கு உங்கள் வாழ்வைக் கட்டுப்படுத்துதலைக் கொடுக்கிறீர்கள். உங்கள் வாழ்வைத் திரும்ப எடுத்துக் கொள்ளுங்கள். உங்களைத் தவறாக நடத்தியவரிடத்தில் நீங்கள் சரியான எண்ணப்போக்கைக் கொண்டிருக்க உதவ வேண்டும் என்று தேவனிடத்தில் கேளுங்கள், பின்பு உங்கள் வாழ்வின் பணிகளைக் கவனியுங்கள், இன்னும் மற்றவர்கள், ஒரு காலத்தில் தாங்கள் வாழ்ந்த வாழ்வைத் திரும்பிப் பார்த்து தங்கள் பழைய வழிகளுக்குத் திரும்பும்படி சோதிக்கப்படுகின்றனர். இயேசுவின் எச்சரிக்கை ஏற்புடையதாகக் காணப்படுகிறது: "கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல" (லூக்கா 9:62).

நாம் இன்னும் கடந்த செல்வதற்கு முன்னர், "பின்னானவைகளை மறந்து என்று பவுல் கூறியபோது, அவர் எதை *அர்த்தப்படுத்தினார்?*" என்று கேட்டாக வேண்டும். அவர் கடந்த காலத்தைத் தமது நினைவில் இருந்து அழித்து விட்டதாக அர்த்தப்படுத்தினாரா? தேவன் நமது பாவங்களை மன்னிக்கும்போது, அவர் "அவற்றை இனி நினைப்பதில்லை" (காண்க எபிரெயர் 8:12; 10:17) என்று வேதாகமம் போதிக்கிறது; ஆனால் இது, அவர் அவற்றைத் தமது நினைவில்

இருந்து அழிக்கிறார் என்று அர்த்தப்படுகிறதா? இல்லை, வேதாகமத்தில், நீண்ட காலத்திற்கு முன்பே தேவனால் மன்னிக்கப்பட்டிருந்த பாவங்களைப் பற்றிய, தேவனால் ஏவுதல் பெற்ற விபரங்கள் நிறைந்துள்ளன. தேவன் நமது பாவங்களை மன்னிக்கும்போது, அவர் அவற்றிற்காக நம்மைக் கணக்கு ஒப்புவிக்கும்படி வைப்பதில்லை என்ற கருத்திலேயே அவர் "நமது பாவங்களை இனியும் நினைவில் வைப்பதில்லை"; இது அவைகள் ஒருக்காலும் நடந்திருந்தது இல்லை *என்பது போன்றுள்ளது.* பவுல் தமது கடந்த காலத்தைத் தமது நினைவில் இருந்து அழித்துப் போட்டிருக்கவில்லை என்பது தெளிவு, ஏனென்றால் அவர் 13ம் வசனத்திற்குச் சற்றே முந்தியுள்ள வசனங்களில் அவற்றைப் பற்றிப் பேசியிருந்தார். அப்படி என்றால் அவர் எதை அர்த்தப்படுத்தினார்?

- அவர் கடந்த காலத்திலேயே தங்கியிருக்கவில்லை.
- அவர் தமது சிந்தனையைக் கடந்த காலம் மேலாதிக்கம் செலுத்த அனுமதிக்கவில்லை.
- அவர் நிகழ்காலத்தில் செய்யத் தேவையானவற்றைச் செய்யாதபடி கடந்தகாலம் தம்மை வழிவிலக்க அனுமதிக்கவில்லை.

3:12-14ல் பவுல், பந்தயத்தில் ஓடும் ஓட்டப்பந்தய வீரரின் உருவகத்தைப் பயன்படுத்தினார்.[9] கடந்த காலத்தை மறப்பதற்கு அப்போஸ்தலரின் தீர்மானமானது அந்த உருவகத்துடன் இருவழிகளில் தொடர்புபடுகிறது: முதலாவது, ஒரு பந்தயத்தில் ஓடுவதற்கு ஒருவர் தம்மைக் கீழே விழத்தள்ளும் எதையும் புறம்பே போட வேண்டியுள்ளது (காண்க எபிரெயர் 12:1). பவுல், கிறிஸ்தவ ஓட்டத்தை ஓடத் தயாராகுகையில், அவர் கடந்த காலத்தின் மிகப்பெரிய எடையைப் புறம்பே கிடத்தினார். இரண்டாவது, ஒருவர் பந்தயத்தில் ஓடுகையில், பின்னால் உள்ளதன் மீதல்ல ஆனால் அவருக்கு முன்னால் உள்ளதன் மீது அவரது கவனக்குவிப்பு இருக்க வேண்டும். பின்னோக்கிக் கண்ணோக்கும் ஓட்டப்பந்தைய வீரர் தம்மால் முடிந்த அளவு மிகச்சிறப்பாகச் செயல்பட இயலாது. அவர் கவனம் சிதறடிக்கப்படுவார்; அவரது அடிவைப்புகள் நின்றுவிடும்; அவர் இடறி விழவும் செய்யலாம். நாம் காணப்போகிறபடி, பவுல் எதிர்காலத்தின்மீது கவனம் குவித்தார்.

பழங்காலக் கிரேக்கர்கள் மத்தியிலிருந்த ஒரு ஆசிரியர், தம்மிடம் கற்க வரவிருந்த ஒரு மாணவரிடத்தில், "நினைவில் வைக்க உனக்கு நான் கற்றுத் தருவேன்" என்று கூறினார். அதற்கு அந்த மாணவர், "ஓ இல்லை, மறப்பதற்கு எனக்குக் கற்றுத்தாருங்கள்!" என்று பதில் அளித்தார்.[10] நம்மில் பலர் நாம் நினைவில் வைக்க வேண்டியவற்றை மறந்து விடுகிறோம், மற்றும் நாம் மறக்க வேண்டியவற்றை நினைவில் வைத்திருக்கிறோம். நாம், "கர்த்தாவே - நாங்கள் நிகழ்காலத்தில் வாழும்படிக்கு - கடந்த காலத்தை மறக்க எங்களுக்குப் போதியும்" என்று ஜெபிப்பது அவசியமாக இருக்கலாம்.

எதிர்காலத்தைப் பொறுத்தமட்டில்: வளர்ச்சி அவசியம்!

கடந்த காலத்தைப் பற்றி நினைக்கும்போது சிலர், கவனம் சிதறி அல்லது ஊக்கம் இழந்து போய்விடுகின்றனர் - ஆனால் பவுல் அவ்வாறு இருக்கவில்லை. அவர், "ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை

நாடி" என்று கூறினார் (வசனம் 13ஆ, இ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இந்தச் சொற்றொடராக்கம் முந்திய வசனத்தில் உள்ளது போன்றது: "கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்" (வசனம் 12ஆ).

வசனங்கள் 12 மற்றும் 13 ஆகியவற்றில் இரு வார்த்தைகள், பவுல் தமது நோக்கத்தை அடைவதில் கொண்டிருந்த வலிவூக்கத்தை விவரிக்கின்றன. 12ம் வசனத்தில் "ஆசையாய்த் தொடருகிறேன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை *dioko* என்பதாக உள்ளது, 6ம் வசனத்தில் இவ்வார்த்தை சபையைப் பவுல் துன்புறுத்தியதை விவரிக்கப் பயன்படுத்தப்பட்டது. அவர் "நோக்கத்தின் அதே தனித்துவத்துடன் ... மற்றும் முன்பு சபையைத் துரத்திய அல்லது துன்புறுத்தியபோது கொண்டிருந்த ஒழியாத தீவிர முயற்சியுடன்" தமது இலக்கை நோக்கித் தொடர்ந்து கொண்டிருந்தார்.[11] 13ம் வசனத்தில், "முன்னானவைகளை நாடி" என்று தரவழைக்கப்பட்டுள்ள (Gk.: *epekteinomenos*) வார்த்தை, "முன்னோக்கிச் சாய்தல்" என்று அர்த்தப்படுகிறது. பந்தயத்தில் ஓடும் ஒரு ஓட்டப்பந்தய வீரர், ஒவ்வொரு தசையையும் இழுத்து, பந்தயத்தில் வெற்றிபெறக் கடுமையாக உழைக்கும் உருவகமே இங்குள்ளது. முடிவு எல்லையில் உள்ள நூலைத் தட்டி அதை அறுப்பதற்கு முன்னோக்கிச் சாயும் ஓட்டப்பந்தய வீரர்களில் வலிவூக்கத்தை நான் கண்டிருக்கிறேன்,[12] ஒருவேளை நீங்களும் கண்டிருக்கலாம். பல ஆண்டுகளாக, உலகப்பிரகாரமான இலக்குகளை மாபெரும் வலிவூக்கத்துடன் நாடி ஓடி, பூமிக்குரிய வெற்றியைச் சாதிக்க "தங்களை சாய்த்தவர்கள்" பலரை நான் அறிந்திருக்கிறேன். ஆவிக்குரிய இலக்குகளை அடைய அதே விருப்பம் கொண்டிருக்கும் மிகச்சிலரை நான் கண்டிருக்கிறேன்.

அப்போஸ்தலர் எந்த இலக்கை நோக்கி கடினமாக ஓடிக்கொண்டிருந்தார்? அவரது இலக்கில் ஒரு பகுதி இந்த வாழ்வில் உள்ளடக்கம் கொண்டிருந்தது. வார்த்தைகள் மீது ஒரு விளையாட்டைக் கையாளும் 12ம் வசனத்தைக் கவனியுங்கள்: "... கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் *பிடிக்கப்பட்டேனோ* அதை நான் *பிடித்துக்கொள்ளும்படி*" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). கிறிஸ்து, தமஸ்கு செல்லும் சாலையில் பவுலுக்குச் தரிசனம் கொடுத்ததன் மூலமாகவும் அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்து அவர் செய்யும்படி தாம் விரும்புவது என்ன என்பதைக் கூறும்படிஓ ஒரு பிரசங்கியாரை அனுப்பியதன் மூலமாகவும், பவுலை "பிடித்திருந்தார்." இயேசு பவுலை, "... அந்நிய ஜனத்தாரிடத்தினின்றும் ... அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு" அப்போஸ்தலராக அவரை [பவுலை] அனுப்பினார் என்று பவுலுக்குத் கூறப்பட்டிருந்தது (நடபடிகள் 26:17, 18அ; காண்க நடபடிகள் 9:15, 16; 22:15; ரோமர் 11:13; 1 தீமோத்தேயு 2:7). பவுல், தாம் எதற்காகப் "பிடிக்கப்பட்டாரோ" அதை "பிடித்துக்கொள்ள" விரும்பியதாகக் கூறியபோது, அவர் தாம் தமக்குத் தரப்பட்டு இருந்த ஊழியத்தை நிறைவேற்ற விரும்பியதாகவே கூறினார். அவரது வாழ்விற்கான கர்த்தருடைய நோக்கம் அவர் வாழ்வதற்குக் காரணமாயிற்று.

இவ்விடத்தில் இரண்டு பாடங்கள் காணப்படுகின்றன: முதவாவது, பவுலை "பிடித்ததில்" கர்த்தர் தொடக்கச் செயலை மேற்கொண்டார். பவுல் தமது சுயாதீன

சித்தத்தை மீறுதலில் அவரை இயேசு கைப்பற்றவில்லை - நமது வாழ்வில் கிறிஸ்து செயல்படக் கூடுமுன்பு நாம் நமது சம்மதத்தை கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் - ஆனால் அவர் முதல் அடிவைப்பை மேற்கொண்டார். கர்த்தர் நம்மை "பிடிப்பதிலும்" தொடக்கச் செயலை மேற்கொள்கிறார். நமக்குப் பதிலுக்கு அன்பு செய்யக் காரணமாகும்படிக்கு, முதலில் நாம் அவர்மீது அன்புகூரவில்லை. மாறாக முதலில் அவர் நம்மீது அன்புகூர்ந்தார், எனவே நாம் அவர்மீது அன்புகூருகிறோம் (காண்க 1 யோவான் 4:19). அவரது குமாரனை நமக்காக மரிக்கும்படி அவர் அனுப்பத் தூண்டுவதற்காக நாம் கீழ்ப்படிதலில் நமது அன்பை வெளிப்படுத்தவில்லை. மாறாக, நாம் தேவனுக்குச் சத்துருக்களாக இருக்கும்போதே, கிறிஸ்து நமக்காக மரித்தார் (காண்க ரோமர் 5:10). தேவனுக்கு நன்றி, இது உண்மையாக இருந்தது (மற்றும் இருக்கிறது)!

தேவன் பவுலின் வாழ்விற்கென்று ஒரு திட்டத்தைக் கொண்டிருந்தார், மற்றும் அதைப் பவுல் நிறைவேற்ற விரும்பினார் என்பது இரண்டாவது பாடமாக இருக்கிறது. தேவன் நமது வாழ்விற்கும் ஒரு திட்டத்தைக் கொண்டிருக்கிறார். அவரது திட்டத்தின் ஒரு பாகம் பொதுவானதாக உள்ளது: நம்மை இரட்சிப்பதற்குக் கிறிஸ்து நம்மை "பிடிக்கிறார்"; இது தேவனுடைய திட்டத்தின் மிகவும் முக்கியமான பாகமாக உள்ளது. அவரது திட்டத்தின் அடுத்த பகுதி தனிநபருக்கு உரியதாக உள்ளது. ரோமர் 12, 1 கொரிந்தியர் 12 மற்றும் பிற வேதவசனப் பகுதிகள், நம் ஒவ்வொருவருக்கும் தேவன் ஒரு விசேஷித்த ஊழியத்தைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று சுட்டிக்காண்பிக்கின்றன.[13] ஒவ்வொரு கிறிஸ்தவரும் தமது விசேஷித்த ஊழியம் என்ன என்று தீர்மானிக்கவும் அதை நிறைவேற்றத் தமது பெலத்தில் முடிந்த எல்லாவற்றையும் செய்யவும் வேண்டும். பவுலைப் போல நாம் தேவனுடைய நோக்கத்தை, நமது வாழ்வில் நமது இருப்பிற்கான காரணமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

பவுலின் இலக்கு பற்றிய கலந்துரையாடலுக்குத் திரும்புவதில், இது - அவர் பூமியில் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினாரோ அவ்வாறே இருத்தல் என்ற - இந்த உலக அம்சத்தைக் கொண்டிருந்தது. ஆனால் அடுத்த உலகத்தை சார்ந்ததாகவும் இருந்தது. பிலிப்பியர் 3ல் அப்போஸ்தலர் "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்று தொடர்ந்தார் (வசனம் 14). "தொடருகிறேன்" என்பது 12ம் வசனத்தில் உள்ள பின்வரும் கிரேக்க வார்த்தையாகவே உள்ளது: *dioko*. "இலக்கு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*skopos* என்பதன் ஒரு வடிவமான) வார்த்தை, "காண அல்லது கண்ணோக்க" (*skopeo*) என்று அர்த்தப்படுகிற வார்த்தையின் பெயர்ச்சொல் வடிவமாக உள்ளது. நாம் "telescope" (தொலைவில் காணுதல்) மற்றும் "microscope" (சிறியவற்றைக் காணுதல்) என்பவற்றில் இவ்வார்த்தையைப் பயன்படுத்துகிறோம். *Skopos* என்பது "கண்ணை நிலைநிறுத்தி வைக்கும் ஒரு குறியடையாளம்" என்பதைக் குறிக்கிறது.[14] மீண்டுமாக, ஓட்டப்பந்தய வீரர் முடிவுக் கோட்டை விருப்பநோக்கத்துடன் கண்ணோக்குதல் என்பதே உருவகமாக உள்ளது (காண்க எபிரெயர் 12:1).

இருப்பினும், முடிவுக்கோட்டைச் சென்றடைதல் என்பது தன்னிலேயே ஒரு முடிவாக இருப்பது இல்லை. வெற்றிகொள்வதற்கு ஒரு பந்தயப்பொருள்

உள்ளது. பவுல், "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக" தாம் இலக்கை நோக்கித் தொடருவதாகக் கூறினார். இன்றைய நாட்களில் இந்தப் பந்தயப்பொருள் என்பது ஒரு பதக்கமாக இருக்கலாம்; ஆனால் பவுலின் நாட்களில் விரைவிலேயே உலர்ந்து போய்விடக்கூடிய லாரல் மர இலைகளினால் செய்யப்பட்ட ஒரு கிரீடமே பொதுவாகப் பந்தயப் பொருளாக இருந்தது. பவுல் ஒருக்காலும் மங்கித் தேய்ந்து போய் விடாத பந்தயப்பொருளுக்காக முன்கண்ணோக்கிக் கொண்டிருந்தார் (காண்க 1 கொரிந்தியர் 9:24, 25; 2 தீமோத்தேயு 4:7, 8; 1 பேதுரு 1:4). அவர் அந்தப் பந்தயப்பொருளை, "தேவன் அழைத்த பரம அழைப்பு" என்று குறிப்பிட்டார். தேவன் சுவிசேஷத்தினால் நம்மை அழைக்கிறார் (2 தெசலோனிக்கேயர் 2:14) மற்றும் அவர் தம்முடன் பரலோகத்தில் வாழும்படி நம்மை அழைக்கிறார் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 21:3, 4). பரலோகப் பந்தயப் பொருளைப் பற்றிப் பவுல் விபரமாகக் கூறவில்லை, ஆனால் பின்வரும் விவரிப்பை ஆழ்ந்து சிந்தியுங்கள்:

> ... பூமிக்குரிய காட்சி, தனது கடினமுயற்சிகள், பாடுகள் மற்றும் தியாகங்கள் ஆகிய எல்லாவற்றுடனும் பரலோக மகிமையினால் திடீரென்று மேல்பரவப்படுகிறது. ஒன்றுக்குப் பின் ஒன்றாக வேதவசன ரீதியான சித்திரங்கள் நிரம்புகிறது மற்றும் மனதை உயர்த்துகிறது: கர்த்தரே கூறும், "நன்கு செய்தாய்!"; "அந்த நாளிலே நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அளிக்கும் நீதியின் கிரீடம்"; பிரதான மேய்ப்பரின் பரிசான "வாடாத மகிமையின் கிரீடம்"; (எல்லாவற்றிற்கும் மேலாக) அவரது ஊழியக்காரர்கள் அவரை ஆராதிக்க, அவரது முகத்தைத் தரிசிக்க மற்றும் தங்கள் நெற்றியில் அவரது நாமம் எழுதப்பட்டிருக்கப் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியம்; இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்ட அங்கிகள் மற்றும் கர்த்தருடைய முடிவில்லாத பிரசன்னம். இவை யாவற்றுடனும் கூட, "தேவன் தம்மீது அன்புகூர்ந்திருப்பவர்களுக்கு ஆயத்தம் செய்துள்ள, எந்தக் கண்ணும் கண்டிராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த மனித இருதயமும் உணர்ந்திராத விஷயங்கள்."[15]

நீங்கள் நானும், பரலோக இலக்கின் மீது நமது சிந்தைகளை அமைக்க வேண்டும். பவுல் கொலோசெயருக்கு நிருபத்தை எழுதியபோது, அவர்கள் கிறிஸ்தவர்கள் ஆன விதத்தைப் பற்றி அவர் பேசினார்: "ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" (கொலோசெயர் 2:12). பின்பு, ஒரு சில வசனங்களுக்குப் பிற்பாடு அவர், "நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, *மேலானவைகளையே நாடுங்கள்*" என்றும் கூடுதலாகக் கூறினார் (கொலோசெயர் 3:1, 2; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

மக்கள் மீது கவனம் குவித்தல் (3:15, 16)

உண்மையான அக்கறை

பவுல் தம்மைப் பற்றியும் தமது வாழ்வின் கவனக்குவிப்பைப் பற்றியும் பேசியிருந்தார். 4ல் இருந்து 14வரையிலான வசனங்களில் நாம் ("நான்," "எனக்கு," "என்னுடைய," "எனது" போன்ற) ஒருமைப் பெயர்ச்சொலைத் திரும்பத் திரும்ப - குறைந்தபட்சம் 12 முறைகள் - கண்டறிகிறோம்.[16] இது, இந்த அப்போஸ்தலர் தமது வாசகர்களை மறந்து விட்டார் என்று அர்த்தப்படுவதில்லை. 15ம் வசனத்தில் அவர் ஒருமையிலிருந்து திடீரென்று பன்மைக்கு மாறினார்: "ஆகையால், *நம்மில்* தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம்" (வசனம் 15அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). பவுலின் வாழ்வினுடைய கவனக் குவிப்பானது பிலிப்பியர்களின் வாழ்வின் கவனக் குவிப்பாகவும் இருப்பது அவசியமாக இருந்தது.

12ம் வசனத்தில் பவுல், "நான் ... முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல் ..." என்று கூறி இருப்பதால், பவுலையும் மற்றவர்களையும் விவரிக்க இவ்விடத்தில் "தேறினவர்கள்" என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டிருத்தலானது திகைப்புக்கு உரியதாக இருக்கலாம். நேர்மாறான கருத்தாகத் தோன்றக் கூடிய இது ஒரு எளிய விளக்கத்தைக் கொண்டுள்ளது: ஒரு வார்த்தையானது, அது பயன்படுத்தப்பட்டுள்ள வகையைப் பொறுத்து, வேறுபட்ட அர்த்தங்களைக் கொண்டிருக்க முடியும்.[17] 12ம் வசனத்தில் "தேறினவன்" என்ற வார்த்தையின் பயன்பாடு, இவ்வார்த்தை பயன்படுத்தப்படும் போது நாம் வழக்கமாக நினைக்கும் வகையிலேயே அர்த்தப்படுகிறது: "தவறற்ற தன்மை." 15ம் வசனத்தில் இது, இவ்வாழ்வில் சாதிக்கக்கூடிய சார்பளவிலான பூரணத்தன்மையைக் குறிக்கிறது. "பக்குவம்" என்ற வார்த்தை இந்தக் கருத்தை விளக்குகிறது (காண்க 1 கொரிந்தியர் 14:20 ["தேறினவர்கள்"]; எபிரெயர் 5:14 ["பூரணவயதுள்ளவர்கள்"]). RSV வேதாகமத்தில் 12ம் வசனத்தில் "perfect" என்றும் 15ம் வசனத்தில் "mature" என்றும் உள்ளது. ஏர்ல் பால்மர் என்பவர், "பவுலின் பாகத்தில் விருப்பநோக்கம் கொண்ட வார்த்தையின் மீதான விளையாட்டு இருந்திருக்கலாம்: நீங்கள் பக்குவமானவர்களாக இருந்தால், நீங்கள் பரிபூரணமற்றவர்கள் என்று அறிகிறீர்கள்; நீங்கள் பரிபூரணமானவர்கள் என்று நினைத்தால், நீங்கள் பக்குவமானவர்கள் அல்ல" என்று கூறினார்.[18]

மென்மையான திருத்துதல்

பக்குவமடைந்த கிறிஸ்தவர்கள், பவுல் எழுதியிருந்தவற்றை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று அவர் எதிர்பார்த்தார், ஆனால் பலர் அத்த ஆவிக்குரிய முன்னேற்றமான நிலையை அடைந்திருந்ததில்லை என்பதை அவர் அறிந்தார் (காண்க 1 கொரிந்தியர் 3:1). தேவனுடைய வசனத்தைப் போதுமான அளவில் பற்றிக்கொள்ளாதிருத்தல் என்பது ஆவிக்குரிய பக்குவமின்மையின் ஒரு பண்பினமாக உள்ளது. 15ம் வசனத்தின் கடைசிப்பகுதியில் பவுல், ஒளியூட்டப்பட்டிராதவர்களுக்குப் பின்வருமாறு உரைத்தார்: "எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார்." இவ்விடத்தில் பவுல் முரண் உரை மற்றும்/அல்லது ஏளனப்பேச்சு என்பதைப் பயன்படுத்தியிருப்பதாக, அதாவது

குறுகிய மனப்பான்மையுள்ள கருத்து வேறுபாட்டாளர்களுக்கு இதை உரைத்து, "நீங்கள் என்னுடன் கருத்து வேறுபட்டால், உங்களிடம் முன் அனுமானக் கருத்துக்கள் உள்ளதை உறுதிப்படுத்தத் தேவன் உங்களுக்கு ஒரு வெளிப்படுத்துதலை அனுப்புவார்!" என்று ஏளனமாகக் கூறியதாகச் சிலர் நினைக்கின்றனர். ஒரு கருத்தை நிலைநாட்டத் தேவனுடைய செய்தியாளர்கள் அவ்வப்போது முரண் உரை அல்லது ஏளனப் பேச்சைப் பயன்படுத்தினர் (காண்க 1 இராஜாக்கள் 18:27), ஆனால் அப்போஸ்தலர் அவ்விதமான அணுகுமுறையை இங்கு பயன்படுத்தினார் என்று நம்பக் காரணம் எதுவும் இல்லை.

அவர், தனிநபர்களுக்குத் தேவன் தமது வெளிப்பாட்டை எவ்வாறு ஏற்படுத்த வேண்டும் என்ற தமது எதிர்பார்ப்பைக் கூறவில்லை. நியாயத்தீர்ப்பின் நாளில், இந்த மற்றும் பிற பாடக்கருத்துக்கள் மீதான சத்தியம் அவர்களுக்கு வெளிப்படுத்தப்படும் என்ற உண்மையைப் பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்து இருக்கலாம். பிலிப்பியருக்கு எழுதிய நிருபம், அற்புதங்களின் காலத்தில் எழுதப்பட்டதால், தனிப்பட்ட அற்புதமான வெளிப்படுத்துதல் இவ்விடத்தில் மனதில் நோக்கங் கொள்ளப்பட்டிருக்கலாம். பெரும்பாலும், இந்த அப்போஸ்தலர், தேவனால் ஏவுதல் பெற்ற மற்ற போதகர்களின் அறிவுறுத்துதல்களை மாத்திரம் தமது சிந்தையில் கொண்டிருப்பார் என்பதற்கே அதிக சாத்தியம் உள்ளது. எவ்வகையிலும், தாம் பிலிப்பியர்களுக்குப் போதித்திருந்தவற்றுடன் பிற வெளிப்படுத்துதல் முரண்படாது என்பதில் அவர் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார்.

பிரிவினையை ஏற்படுத்தக் கூடியவர்களைப் பவுல் கையாண்ட வழியானது அறிவுறுத்துதல் அளிக்கும் வழியாக இருந்தது. பவுலின் அப்போஸ்தலிக்க அதிகாரம் எனக்கு அளிக்கப்பட்டிருந்தால் "என்னுடன் கருத்து வேறுபட உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? நான் ஒரு அப்போஸ்தலன்!" என்று கூறும்படி நான் சோதிக்கப்பட்டிருப்பேன். சிலவேளைகளில் பவுல், தமது அப்போஸ்தலிக்க அதிகாரத்தை உறுதிப்படுத்தினார் (காண்க 1 கொரிந்தியர் 14:37, 38; 1 தெசலோனிக்கேயர் 2:13), ஆனால் அந்த அணுகுமுறை இந்த சந்தர்ப்பத்தில் ஏற்றது என்று அவர் நினைக்கவில்லை என்பது உறுதி. அதற்குப் பதிலாக அவர்களிடத்தில் அவர் மென்மையாக இருந்தார், காலங்கள் கடக்கும்போது அவர்கள் இன்னும் சிறப்பாகக் கற்றுக்கொள்வார்கள் என்ற உறுதியான நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

ஒரு பொதுவான கட்டளை

பவுல் இந்தப் பகுதியைப் பின்வரும் புத்திகூறுதலுடன் முடித்தார்: "ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக"[19] (வசனம் 16). NASB வேதாகமத்தில் "standard" ("ஒழுங்காய்") என்ற வார்த்தை சாய்வெழுத்துக்களில் உள்ளது, இது மொழிபெயர்ப்பாளர்களால் இந்த வார்த்தை கூடுதலாகக் கூட்டப்பட்டது என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. நேரடியான அர்த்தத்தில் பவுல், "நாம் ஒரே விஷயத்தில் வாழ்வதைக் காத்துக்கொள்வோமாக" என்று கூறினார். KJV வேதாகமத்தில் "ஒரே சட்டம்" என்றுள்ளது. "வாழ்ந்து கொண்டு இருப்போமாக" என்பது "அணி" அல்லது "வரிசை" என்று அர்த்தப்படும் *stoicheo* என்ற கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவத்தில் இருந்து

மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[20] இது, "வரிசையில் நடக்க" என்று அர்த்தப்படுகிறது.[21] அப்போஸ்தலரின் அறிவுறுத்துதல் பொதுவான நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருக்கக் கூடும்: ஆவிக்குரிய வகையில் ஒன்றுபட்டிருக்க நாம் - தேவனுடைய வசனம் என்ற - பொதுவான அதிகாரத்துவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

இருப்பினும் பவுலின் வார்த்தைகள் சந்தர்ப்பப் பொருளில், அவருடன் கருத்து வேறுபட்டவர்களுக்கு விசேஷித்த நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருந்தன. ஆரோக்கியமான போதனைகள் அவர்களை ஒளியூட்டுவதற்கு, அவர்களுக்கு சிந்தையில் ஒரு குறிப்பிட்ட நிலைப்பாடு அவசியமாயிருந்தது: அவர்கள் கூடுதலான "வெளிச்சத்தை" (போதனையை) பெறத் தயாராவதற்கு முன்பு, அவர்கள் ஏற்கனவே கொண்டிருந்த "வெளிச்சத்தில்" (அவர்கள் ஏற்கனவே "தேறியிருந்தவற்றில்") நடப்பது அவசியமாயிருந்தது. நாம் செய்ய வேண்டும் என்று அறிந்துள்ளவற்றைச் செய்ய மறுப்பவராக இருக்கும் தனிநபர் ஒருவர் (யாக்கோபு 4:17), இன்னும் அதிகம் கற்றுக்கொள்ளும் மன அமைவு எதையும் கொண்டிருப்பதில்லை. 3:15ஆ, 16 ஆகிய வசனங்கள் பற்றி LB வேதாகமத்தில் பின்வரும் பொழிப்புரை காணப்படுகிறது: "நீங்கள் கொண்டுள்ள சத்தியத்திற்கு நீங்கள் முழுமையாகக் *கீழ்ப்படிந்தால்* - தேவன் இதை உங்களுக்கு எளிதாக்குவார் என்று நான் நம்புகிறேன்." (வலியுறுத்தம் என்னுடையது.) இயேசு, "அவருடைய சித்தத்தின்படி *செய்ய* மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்" என்று கூறினார் (யோவான் 7:17; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இதை டேவிட் லிப்ஸ்கோம்ப் என்பவர் பின்வருமாறு கூறினார்: "தேவனுடைய சித்தம் தவிர வேறு விருப்பமோ அல்லது முன்னுரிமையோ இன்றி, தேவனுடைய சித்தத்தை அறிந்து அதைச் செய்ய வேண்டும் என்ற உண்மையான விருப்பம், தெய்வீக சத்தியத்தின் முழுமைக்குள் வழிநடத்தும்."[22]

முடிவுரை

இந்தப் பாடத்தில் நாம், பல சத்தியங்களைத் தொட்டிருக்கிறோம், ஆனால் நீங்கள், பிலிப்பியர் 3ல் பவுலின், "வாழ்விற்கான கோட்பாட்டை"[23] மறக்க மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன்:

> சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் (வசனங்கள் 13, 14).

இதை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ள, நம்மில் ஒவ்வொருவரும், பவுலின் வார்த்தைகள் இவ்வாறு இருக்கின்றன என்று சொல்ல முடியும்.

- நான் ஆவிக்குரிய வகையில் இருக்க வேண்டிய பிரகாரம் இல்லாதபோது, எனக்கு ஆறுதலாக இருக்கின்றன.
- நான் கிறிஸ்தவ வாழ்வில், என்னால் முடிந்த அளவு அல்லது எனக்குத்

தேவையான அளவு முன்னேறியிருப்பதாக நான் நினைக்கும்போது எனக்கு ஒரு திருத்துதலாக இருக்கின்றன.

- எனது வாழ்வின் கவனக்குவிப்பைக் கூர்மைப்படுத்திக் கொள்வதற்கு எனக்கு ஒரு அறைகூவலாக இருக்கின்றன: கிறிஸ்துவின் ஆளுமைத்தன்மையின் மீது, வழியின் முடிவில் உள்ள பந்தயப்பொருளின் மீது, மற்றும் எனது பயணத்தில் நான் எதிர்கொள்ளும் - தேறின மற்றும் தேறியிராத - மக்கள் மீது கவனம் குவிக்க.

வாழ்வில் பல விஷயங்கள் முக்கியமானவையாக உள்ளன, ஆனால் இயேசுவைப் பின்பற்றுதல் என்பதைப் போன்று முக்கியமான விஷயம் வேறு எதுவும் இல்லை. “தேவனே, பவுலைப் போல நான், ஒரு கவனம் குவிக்கப்பட்ட வாழ்வை வாழ எனக்கு உதவும்” என்று ஜெபிப்போமாக.

குறிப்புகள்

[1]நடவுக்கலப்பை என்பது ஒரு குதிரை அல்லது ஒரு கோவேறுக் கழுதையால் இழுக்கப்பட்டது. [2]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary,* vol. 43, *Philippians,* ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 138. (Emphasis mine.) [3]*10ம் வசனத்தில் உள்ள வரிசை முறைமை நாம் எதிர்பார்க்கும் வகையில் இருப்பதில்லை: இது, பாடுகள், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் என்றிருப்பதற்குப் பதிலாக, உயிர்த்தெழுதல், பாடுகள், மற்றும் மரணம் என்றுள்ளது. ஒருவேளை வரிசை முறையில் குறிப்பிடத் தக்க பண்பு இருக்கலாம், அல்லது ஒருவேளை அவ்வாறு இல்லாதிருக்கலாம்.* [4]Robert Laidlaw in *The Reason Why*; quoted in Avon Malone, *Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 84. [5]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 87. [6]Hawthorne, 146. [7]*இந்தத் தகவலை நான், வேதாகமப் போதகர்கள் மற்றும் பிரசங்கியார்களின் பயனுக்காக இங்கு உள்ளடக்கியிருக்கிறேன். உங்கள் உரையைக் கேட்பவர்களுடன் பகிர்ந்து கொள்ளத் தேவையானது என்ன என்பதை நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்.* [8]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III (Minneapolis: Bethany House Publishers, 1984), 845-46. [9]*சில எழுத்தாளர்கள், இது கால்களினால் ஓடும் ஓட்டப் பந்தயத்திற்குப் பதிலாக இரதப் பந்தயத்தின் உருவகமாக உள்ளது என்று நம்புகின்றனர்.* [10]Malone, 93.

[11]John A. Knight, *Beacon Bible Expositions*, vol. 9, *Philippians, Colossians, Philemon* (Kansas City, Mo.: Beacon Hill Press, 1985), 100. [12]*உங்கள் உரையைக் கேட்பவர்கள் அறிந்துள்ள ஓட்டப்பந்தய வெற்றிவீரர் ஒருவரைப் பற்றிய விவரிப்பை நீங்கள் இவ்விடத்தில் கூடுதலாகக் கூற விரும்பலாம்.* [13]*ரோமர் 12ல் விசேஷமாக 4முதல் 8வரை உள்ள வசனங்களைக் கவனியுங்கள். 1 கொரிந்தியர் 12ம் அதிகாரம் அற்புத வரங்களைப் பற்றிப் பேசுகிறது, ஆனால் நம் ஒவ்வொருவருக்கும் தேவன் அருளியிருக்கும் இயல்பான வரங்கள் (திறமைகள்) குறித்து நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும். விசேஷித்த ஊழியங்களின் பட்டியலை உள்ளடக்குகிற எபேசியர் 4:11-16 என்ற இன்னொரு வசனப்பகுதியும் பயன்படுத்தப்படலாம். இவ்வசனப்பகுதி, முதல் நூற்றாண்டின் அற்புத வரங்களை இயல்பான வரங்களுடன் ஒன்று கலக்கிறது, ஆனால் மீண்டும் பொதுவான நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும்.* [14]Vine, 714. [15]Alec Motyer, *The Message of Philippians: Jesus Our Joy,* The Bible Speaks Today series, ed. John R. W. Stott (Downers Grove,

Ill.: Inter-Varsity Press, 1984), 177. *மோட்யெர் பின்வரும் வசனங்களை ஆதார மூலங்களாகப் பட்டியலிட்டார்: லூக்கா 19:17; 2 தீமோத்தேயு 4:18; 1 பேதுரு 5:4; வெளிப்படுத்தின விசேஷம் 22:3, 4; 7:17; 1 தெசலோனிக்கேயர் 4:17; 1 கொரிந்தியர் 2:9.* [16]NASB *வேதாகமத்தில் மொழிபெயர்ப்பாளர்களால் பன்னிரெண்டாவது ஒருமைப்பெயர்ச்சொல் ("நான்") தரப்பட்டுள்ளது.* [17]*இதை நீங்கள், உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமான ஒரு வார்த்தையைக் கொண்டு விவரிக்க விரும்பலாம். எனது மனதிற்கு வரும், பல அர்த்தம் கொண்ட ஆங்கில வார்த்தைகளில்,* "bear" *மற்றும்* "fast" *ஆகியவை உள்ளடங்கும்.* [18]Earl F. Palmer, *Integrity in a World of Pretense: Insights from the Book of Philippians* (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1992), 137. [19]KJV *வேதாகமத்தில் "நாம் ஒரே விஷயத்தைக் கவனிப்போமாக" என்பது கூடுதலாக உள்ளது. இந்த முடிவிற்கான கையெழுத்துப் பிரதியின் ஆதாரம் இலேசானதாக உள்ளது, ஆனால் இது இவ்வசனத்தின் அர்த்தத்தை மாற்றுவதில்லை.* [20]Vine, 1207.

[21]Jac J. Muller, *The Epistles of Paul to the Philippians and to Philemon,* The New International Commentary on the New Testament, ed. F. F. Bruce (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1955), 127. [22]David Lipscomb and J. W. Shepherd, *A Commentary on the New Testament Epistles,* vol. 4, *Ephesians, Philippians, and Colossians* (Nashville: Gospel Advocate Co., 1939), 210. [23]Ralph P. Martin, *The Epistle of Paul to the Philippians,* rev. ed., Tyndale New Testament Commentaries, ed. R. V. G. Tasker (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 155.

13

பூமியில் அடித்தளமிடப்பட்டது, ஆனால் பரலோகத்தில் கட்டப்பட்டது

(பிலிப்பியர் 3:17–4:1)

இந்த வேளையில் நீங்கள் எங்கிருக்கிறீர்கள் - ஒரு கட்டிடத்திற்குள்ளா அல்லது வெளியிலா? நீங்கள் எங்கிருந்தாலும், சுற்றிலும் கண்ணோக்கச் சற்றே நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் காண்பது என்ன? இப்போது உங்கள் கையினால் ஏதேனும் ஒரு பொருளைத் தொட்டுப்பாருங்கள். ஒருவேளை நீங்கள் ஒருதட்டுமுட்டுப் பொருளைத் தொட்டிருக்கலாம். நீங்கள் வெளியே இருந்தால், ஒருவேளை நீங்கள் புல்லை அல்லது வெறும்தரையைத் தொட்டிருக்கலாம். இது நமது ஐம்புலன்களால் நான் அனுபவித்து உணரக்கூடிய உலகமாக உள்ளது. இந்த உலகத்திற்கு நாம் நன்கு பழக்கமாகி இருக்கிறோம். இந்த உலகம் தன்னில் குடியிருப்பவர்களில் பெரும்பான்மையானவர்களின் கவனத்தை ஈர்த்துக்கொண்டதாக உள்ளது. இருப்பினும் இந்த உலகம் தற்காலிகமானதுதான். இது கர்த்தர் மறுபடியும் வரும்போது ஒழிந்துபோய்விடும் என்பதைக் கிறிஸ்தவர் அறிகிறார் (2 பேதுரு 3:4, 9, 10). அவர் [கிறிஸ்தவர்] *பரலோகமே* தமது நிரந்தரமான இல்லமாக உள்ளது - மற்றும் தமது பட்சமானது அதை மையமாகக் கொண்டிருக்க வேண்டும் - என்பதை அறிகிறார்.

நாம் ஏற்கனவே "கிறிஸ்து இயேசுவுக்குள் *தேவன் அழைத்த பரம அழைப்பின்* பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்ற பவுலின் கூற்றைப் பற்றிக் கலந்துரையாடினோம் (பிலிப்பியர் 3:14; என்னால் வலியுறுத்தப்படுகிறது). ஜேம்ஸ் டோல் என்பவர் இதை, "பரலோகத்தி*லிருந்து* மற்றும் பரலோகத்*திற்கு* வரும்" அழைப்பு என்று குறிப்பிட்டார்.[1] இந்தப் பாடத்தில், "பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறவர்கள்" (3:19) மற்றும் "குடியிருப்பைப் பரலோகத்தில் கொண்டுள்ள, இயேசுவின் மறுவருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற" வர்கள் (3:20) ஆகியோருக்கு இடையில் ஒரு நேரெதிர் ஒப்பீடு ஏற்படுத்தப்படும்.

நாம் எதிர்கொள்ளும் மாபெரும் அறைகூவல்களில் ஒன்று, அதேவேளையில், பூமியில் அடித்தளம் இடப்பட்டதாகவும் ஆனால் பரலோகத்தில் கட்டப்பட்டதாகவும் உள்ளது - "இந்த உலகத்தில் இருக்கிறோம்" (யோவான் 17:11) ஆனால் "இந்த உலகத்தாரல்ல" (யோவான் 17:16). இங்கே மற்றும் இப்போது என்பதற்கும் அங்கே மற்றும் அப்போது என்பதற்கும் இடையில் நிலையான இறுக்கம் உள்ளது. நாம் ஒவ்வொருவரும் எதிர்கொள்ள வேண்டிய

ஒரு கேள்வி பின்வருமாறு: "எனது மனம் பூமிக்கு உரியவற்றிலா அல்லது பரலோகத்திற்கு உரியவற்றிலா, எதில் நிலைகொண்டுள்ளது?"

ஒப்புக்கொள்ள வேண்டிய முன்மாதிரி (3:17)

3ம் அதிகாரத்தில் பவுலின் முந்திய புத்திகூறுதல்கள், பிலிப்பி நகரின் சபையில் இருந்த தனித்தனி உறுப்பினர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படக் கூடும். 17ம் வசனத்தில் அப்போஸ்தலர் தமது கவனத்தை, முழு சபையையும் நோக்கித் திருப்பினார். ஆங்கிலத்தில் இவ்வசனம், "*Brethren, join in following my example ...*" என்று தொடங்குகிறது. தமிழில் இது, "சகோதரரே, நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி" என்று தொடங்குகிறது. கிரேக்க மொழியில் இவ்வசனம், "உடன்" (*sun*[2] என்ற) முன்னிடைச் சொல்லை "போலச் செய்பவர்" என்பதற்கான (*mimetes* என்ற) வார்த்தைக்கு முன்னதாகக் கொண்டுள்ள கூட்டுவார்த்தையான *summimetes* என்பதன் பன்மை வடிவத்தைக் கொண்டு தொடங்குகிறது. "உடன்" என்று அர்த்தம் தரும் முன்னிடைச் சொல்லானது, இது கிறிஸ்தவர்கள் ஒன்று கூடிச் செய்ய வேண்டிய விஷயமாயிருந்தது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. ஆகவே *NASB* வேதாகமத்தில் "*join in*" என்றுள்ளது.

பவுலின் உதாரணம்

எதில் சேர்ந்து கொள்ள வேண்டும்? ஒருசில பிரசங்கியார்களுக்கே பவுலின் ஆணையைத் தர துணிச்சல் இருக்கும்: "... என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி." நேரடியான அர்த்தத்தில் பவுல், "என்னைப் போன்று செயல்படுகிறவர்களாக இருங்கள்" என்று கூறினார். நான் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறேன் மற்றும் நான் ஒருக்காலும் எந்த விஷயத்திலும் என்னைப் போன்று செய்ய வேண்டும் என்று எனது உரையைக் கேட்பவர்களிடத்தில் வேண்டிக்கொண்டதில்லை.

பவுல் தன்முனைப்புக் கொண்டவராக இருந்தாரா? இல்லை, அவர் தாம் எல்லாவற்றிலும் இருக்க வேண்டிய பிரகாரம் இருந்ததில்லை என்பதைத் தெளிவாக அறிந்திருந்தார் (3:12, 13). அனேகமாக அவர், தமது வார்த்தைகளுக்குத் தகுதிப்படுத்துதல் அவசியம் என்பதைத் தமது வாசகர்கள் புரிந்துகொள்வார்கள் என்று யூகித்திருக்கலாம். இதேபோன்ற கட்டளையொன்றைக் கொரிந்தியர்களுக்கு அவர் கொடுத்தபோது, அவர் தமது வார்த்தைகளைப் பின்வருவது போன்று தகுதிப்படுத்தினார்: "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" (1 கொரிந்தியர் 11:1; காண்க 1 தெசலோனிக்கேயர் 1:6). பிலிப்பியர் 3:17ல் தகுதியானது சந்தர்ப்பப் பொருளில் இருந்து எடுக்கப்பட வேண்டியதாக உள்ளது. பவுல் தமது வாழ்வின் வலியுறுத்தம் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அவருக்கு கிறிஸ்துவைப் போன்று முக்கியமான விஷயமாக வேறு எதுவும் இருக்கவில்லை (3:4-11). அவர் பின்னானவற்றை மறந்து முன்னானவற்றை நோக்கித் தொடர்ந்து கொண்டிருந்தார் (3:12-14). அவர் தமது வாசகர்கள் மனதில் இதே நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொண்டார் (3:15, 16). 17ம் வசனம் அந்தப் புத்திமதியின் விரிவாக்கமாக உள்ளது. செயல்விளைவில் பவுல், "நான் இயேசுவிடமும் வாழ்விடமும் கொண்டுள்ள எண்ணப்போக்கைப் பின்பற்றுங்கள். பரலோக இலக்கின் மீது உங்கள் கண்களை வையுங்கள்" என்று

சொல்லிக் கொண்டிருந்தார்!

சக கிறிஸ்தவர்களின் உதாரணங்கள்

ஏதேனும் ஒரு விஷயத்தை வெற்றிகரமாகப் பின்பற்றுவதற்கு, அதை நாம் காண வேண்டும். பவுல் தாம் எப்போது திரும்பவும் பிலிப்பியர்களுடன் இருப்பார் என்பது பற்றி நிச்சயமற்றவராக இருந்தார் (காண்க 1:27), எனவே அவர் தமது புத்திகூறுதலை விரிவாக்கினார்: "நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்" (3:17ஆ). பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில், "நடத்தல்" என்ற வார்த்தை "வாழ" என்ற கருத்தில் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது (காண்க சங்கீதம் 1:1; 1 யோவான் 1:7). பிலிப்பி நகருக்குத் திரும்பிச் சென்றுகொண்டிருந்த எப்பாப்பிரோதீத்து (2:25), விரைவில் அங்கு செல்லவிருந்த தீமோத்தேயு (2:19) ஆகியோர் பின்பற்றத் தகுதி யானவர்களில் உள்ளடங்கியிருந்தனர். பிலிப்பி நகரில் இருந்த பக்குவம் வாய்ந்த எந்தக் கிறிஸ்தவர்களும் (காண்க 3:15) நல்ல உதாரணங்களாகச் செயல்பட்டிருக்க முடியும்.

3:17ம் வசனத்தில் உள்ள இரண்டு வார்த்தைகளுக்குக் கூடுதல் விளக்கம் தேவைப்படுகிறது. முதலாவது, "நோக்குங்கள்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையாக உள்ளது (இது skopeo *என்பதன் ஒரு வடிவமாகும்). இது 14ம் வசனத்தில் "இலக்கு" என்று தரவழைக்கப்பட்டுள்ள வார்த்தையின் வினைவடிவமாக உள்ளது. "இலக்கு" என்பது* காணப்படுவதாக *உள்ள ஒன்றிற்கான குறிப்பு ஆகும்; ஒரு ஓட்டப்பந்தய வீரர் தமது கண்களை நிலைநிறுத்தியுள்ள முடிவுக்கோடு என்பதே உருவகமாக உள்ளது. பவுல் பயன்படுத்திய வார்த்தை காணுதலின் கருத்தையும் கொண்டுள்ளது: இது, "காண, கவனிக்க மற்றும் அக்கறையுடன் பார்க்க" என்று அர்த்தப்படுகிறது.[3] அவர் இந்தச் சொற்றொடரை ரோமர் 16:17ல் ஒரு எதிர்மறை அமைவில் பயன்படுத்தினார் ("குறித்து"), ஆனால் இங்கு அவர் இதை ஒரு நேர்மறைக் கருத்தில் பயன்படுத்தினார். துரதிர்ஷ்டவசமாக நம்மில் சிலர், நல்ல உதாரணங்களைக் கவனிப்பதைக் காட்டிலும் மோசமான உதாரணங்களை கவனிப்பதில் அதிக விருப்பம் கொண்டுள்ளனர். அப்போஸ்தலரின் வாசகர்கள் தங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களைப் போலச்செய்வதற்கு அவர்களை, "தொடர்ந்து நோக்கும்படி"[4] கூறப்பட்டனர்.*

"மாதிரி" என்பது இரண்டாவது முறை கண்ணோக்க வேண்டிய இன்னொரு வார்த்தையாக உள்ளது. "மாதிரி" என்பது tupon *என்ற வார்த்தையின் - மொழிபெயர்ப்பாக உள்ளது. இது* tupos *என்பதன் - ஒரு வடிவமாக உள்ளது, இதிலிருந்தே நாம் "type" என்பதைப் பெறுகிறோம். இவ்வார்த்தை ஒரு கட்டிடத்தின் மாதிரியைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது (எபிரெயர் 8:5). இது உபதேச மாதிரியைக் குறிக்கவும் (ரோமர் 6:17) மற்றும் ஒழுக்கமுறை மாதிரிகளுக்கும் பயன்படுத்தப்பட்டது (காண்க 1 கொரிந்தியர் 10:6, 11; 1 தெசலோனிக்கேயர் 1:7). புதிய ஏற்பாடு, இன்றைய நாட்களில் சபைக்கான தேவனுடைய மாதிரியைக் கொண்டுள்ளது: நாம் எவற்றை விசுவாசிக்க வேண்டும், செய்ய வேண்டும் மற்றும் போதிக்க வேண்டும் என்பவை அதில் அடங்கியுள்ளன. நாம், "மாதிரியின்படியே எல்லாவற்றையும் செய்ய" கற்றுக்கொள்வோமாக (காண்க எபிரெயர் 8:5).*

பிலிப்பியர் 3:17ம் வசனம் நல்ல உதாரணங்களைக் கொண்டிருத்தலின் - மற்றும் நல்ல உதாரணங்களாக இருப்பதின் - முக்கியத்துவத்தை அழுத்தமாக கூறுகிறது. நாம் பிறரைப் பார்த்து அவர்களைப் போன்றே செய்பவர்களாகப் பிறந்திருக்கிறோம். தனது தாயின் உடையை அணிந்து கொள்ளும் சிறுபெண்ணை அல்லது தனது பாதங்களைத் தனது தந்தையின் கால்தடங்களில் வைக்கையில் தனது கால்களை அகற்றி விரித்து வைக்கும் இளம் பையனைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். நம்முடைய இன்றைய நாட்களின் திறமைகளில் பல - எவ்வாறு சமைப்பது, எவ்வாறு உழுவது அல்லது எவ்வாறு சிலவற்றைக் கட்டுவது போன்றவை - போலச் செய்வதினாலேயே கற்கப்பட்டன.[5] நமது ஆவிக்குரிய வாழ்வைப் பொறுத்த மட்டில், சகோதரர்கள் தேவனுடைய கட்டளைகளை எவ்வாறு செயல்படுத்துகின்றனர் என்று கண்ணோக்குதல் நமக்கு உதவுகிறது. கர்த்தர் மீது நம்பிக்கை கொண்டிருக்க வேண்டிய அவசியம் *பற்றி வாசித்தல்* ஒரு விஷயமாக இருக்கையில் (காண்க எபிரெயர் 2:13; 1 தீமோத்தேயு 4:10) நல்ல மற்றும் மோசமான காலங்களில் தேவன் மீது நம்பிக்கை வைத்துள்ள கிறிஸ்தவரை *காணுதல்* என்பது இன்னொரு விஷயமாக உள்ளது.

ஒரு சில பிரசங்கியார்களே "என்னைப் பின்பற்றுங்கள்" என்று கூறத் துணிவாக இருப்பார்கள் என்று நான் முன்னமே உரைத்தேன். அதே வேளையில், கர்த்தருடைய ஊழியக்காரர்கள் யாவருமே, தாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அவரைப் பார்த்து அவரைப் போலச் செய்யப்படுவார்கள் என்பதை உணர்ந்திருக்க வேண்டும். இது, நம்மில் தேவனுடைய வசனத்தைப் போதிக்கும் அல்லது பிரசங்கிக்கும் சகோதரர்கள் மீது எவ்வளவு பெரிதான பொறுப்பை வைக்கிறது! (காண்க யாக்கோபு 3:1.) இருப்பினும் இது மக்களுக்கு ஊழியம் செய்பவர்கள் விஷயத்தில் மாத்திரமல்ல, ஆனால் எல்லாக் கிறிஸ்தவர்கள் விஷயத்திலும் உண்மையாக உள்ளது (காண்க மத்தேயு 5:13-16). நாம் யாவருமே ஒன்று நல்ல உதாரணங்களாக இருக்கிறோம் அல்லது மோசமான உதாரணங்களாக இருக்கிறோம். வேறு எல்லாவற்றிற்கும் மேலாகக் கிறிஸ்துவை வைத்திருப்பதன் உதாரணங்களாக, மேலான விஷயங்களில் நமது இருதயத்தை அமைத்து வைத்திருப்பவர்களாக இருக்க நாம் பிரயாசப்படுவோமாக. இதுவே இந்தப் பாடத்திற்கான நமது வேதவசனப்பகுதியின் மைய சிந்தனையாக உள்ளது.

தவிர்க்க வேண்டிய மக்கள் (3:18, 19)

ஒவ்வொரு நல்ல உதாரணத்திற்கு, பல மோசமான உதாரணங்கள் உள்ளன. பெரும்பான்மையான பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகள் யாரைப் பின்பற்றுகின்றனர் என்பது குறித்து அக்கறை கொள்பவர்களாக உள்ளனர். அவ்வாறே, நல்ல உதாரணங்களைப் பின்பற்றித் தாங்களே மாதிரிகளாக இருக்க வேண்டும் என்று பவுல் தமது வாசகர்களுக்குப் புத்திகூறிய பின்பு, செயல் விளைவில் அவர் மோசமான உதாரணங்களை அவர்கள் பின்பற்றக் *கூடாது* என்று எச்சரித்தார்:

> ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன். அவர்களுடைய முடிவு அழிவு,

அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள் (3:18, 19).

குறிப்பிட்ட நடைமுறைப்பயன்பாடு

பவுல் ஒருவேளை, இந்தத் தனிநபர்களைக் குறித்து பிலிப்பியர்களுக்குத் தாம்முன்னதாக அங்கு சென்றிருந்தபோது எச்சரித்து இருக்கலாம் அல்லது முந்திய ஒரு கடிதத்தில் அவர்களை அவர் எச்சரித்து இருக்கலாம் (காண்க பிலிப்பியர் 3:1). இந்தக் குழுவைப்பற்றி அவர்களை அவர் ஏற்கனவே முன்னெச்சரிக்கை செய்திருந்ததால், அவர் தமது சிந்தையில் யாரைப் பற்றிய நினைவைக் கொண்டிருந்தார் என்பதை அவர்கள் அறிந்திருப்பார்கள் - ஆனால் நாம் அதை அறிவதில்லை. சில எழுத்தாளர்கள், யார் சந்தேகத்திற்கு உரியவர்கள் என்பதை நாம் காணவேண்டுமென்றால், நாம் படித்துக் கொண்டுள்ள இந்த அதிகாரத்தின் முதல் பகுதிக்கு அப்பால் நாம் கண்ணோக்கத் தேவை இல்லை என்று சுட்டிக்காண்பிக்கின்றனர்: அவர்கள், 2ம் வசனத்தில் உள்ள யூதத்துவ போதகர்களே ஆவர். "[யூதத்துவப் போதகர்கள் போதித்தபடி] நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே" என்பதால் (கலாத்தியர் 2:21), இவர்கள் "கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞர்கள்" என்ற நிலையில் உள்ளனர். "நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற ... யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தார்கள்" என்பதால் (கலாத்தியர் 5:4), அவர்களுடைய முடிவு "அழிவு" என்பதாக இருந்தது. "அவர்களுடைய தேவன் வயிறு" என்ற சொற்றொடர், உணவு தொடர்பாகப் பழைய ஏற்பாட்டில் இருந்த சிக்கலான கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற அவர்களின் வலியுறுத்தத்தைக் குறிப்பிடக்கூடும். "அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே" என்பது அவர்கள் தங்கள் குறைபடுதல்களினால் வெட்கம் அடைந்து இருக்க வேண்டியிருந்தபோது, நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தல் பற்றி அவர்கள் மேன்மை பாராட்டிய விஷயத்திற்கு நடைமுறைப் படுத்தப்படக் கூடும். (விருத்தசேதனம் பற்றிய மறைவான கருத்து ஒன்று, "இலச்சை" என்ற வார்த்தையில் காணப்பட முடியும், இவ்வார்த்தை சிலவேளைகளில் நிர்வாணம் என்ற வார்த்தைக்கு அர்த்தமாகப் பயன்படுத்தப்பட்டது [காண்க மீகா 1:11; நாகூம் 3:5].) இந்த யூதத்துவ போதகர்கள், சடங்குகள் மற்றும் சடங்காச்சாரங்கள் ஆகியவற்றைக் கடைப்பிடித்தல் பற்றி முதன்மையாக வலியுறுத்திக்கொண்டு, "பூமிக்கடுத்தவைகளைச் சிந்தித்தனர்."

மற்ற எழுத்தாளர்கள், பிலிப்பியர் 3:18, 19ன் சொற்றொடராக்கமானது, கிறிஸ்தவராக இருக்கும் ஒருவர் தாம் விரும்பியவாறு வாழமுடியும், அது தேவனுடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதற்கு முக்கியமானதல்ல என்று போதித்த கள்ளப்போதகர்களுக்குச் சிறப்பாகப் பொருந்துகிறது என்று நம்புகின்றனர்.[6] இப்படிப்பட்டவர்களும் அதேபோன்று, "கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞராக" உள்ளனர், ஏனென்றால் சிலுவை என்பது சுயத்திற்கும் பாவத்திற்கும் மரித்தலின் அடையாளமாக உள்ளது (காண்க மத்தேயு 16:24). "அழிவு" என்பதே அவர்களுடைய முடிவாக இருந்தது, ஏனெனில் "மாம்சத்தின் கிரியைகளை" செயல்படுத்துபவர்கள் "தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" (கலாத்தியர் 5:19-21). "அவர்களின் பசியே"

அவர்களின் "கடவுளாக" இருந்தது, ஏனென்றால் அவர்கள் மாம்சப்பிரகாரமான இச்சைகளுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருந்தனர். அவர்கள் தாங்கள் செய்த வெட்கக் கேடான விஷயங்களுக்கு மகிமை செலுத்தினர், மற்றும் அவர்களின் மனங்கள் இந்தப் பூமிக்குரிய விஷயங்களிலே "அமைவு" கொண்டிருந்தன.

பல நபர்கள் கருத்தாகத் தெரிவிக்கப் பட்டுள்ளனர்.[7] அவர்கள் யாராக இருந்தாலும், அவர்களைப் பற்றி நினைத்தல் கூட பவுலைக் கலங்கச் செய்தது. கிரேக்க வசனத்தில் அவர்களை அவர், "சிலுவையின் பகைஞர்கள்" என்று குறிப்பிட்டார். அவர்களைப் பற்றி அவர் எழுதியபோது, அவர் அழுதார். பிலிப்பியர் 3:18ல் "கண்ணீரோடு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (Gk.: *klaion*) வார்த்தை "அழுகையின் உரத்த வெளிப்பாடு" என்பதைக் குறிக்கிறது.[8] இந்தக் கள்ளப்போதகர்கள் இருந்தனர் மற்றும் இவர்கள் பவுலுக்குப் பிரியமான பிலிப்பியர்களுக்கு அச்சுறுத்தலாக இருந்தனர் என்ற உண்மை, பவுலின் இருதயத்தை உடையச் செய்தது.

பொதுவான நடைமுறைப் பயன்பாடு

18 மற்றும் 19ம் வசனங்கள் பற்றிப் பரவலாக வேறுபடும் விளக்கங்களை நான் வாசிக்கையில், இரு சிந்தனைகள் மனதிற்கு வருகின்றன. முதலாவதாக, மதரீதியாக "சட்டத்தை அளவுமீறிக் கடைப்பிடிப்பவர்களில்" (கிறிஸ்தவர்கள் மீது பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணங்களைக் கட்டுவிக்க முயற்சி செய்த யூதப் போதகர்கள்) இருந்து மதரீதியாக (கட்டளைகளைக் கடைப்பிடித்தல் அவசியமற்றது என்று நினைத்த) "சுயாதீனசிந்தை" கொண்டவர்கள் வரையிலும், பட்டியலானது முழுநிறைவாகச் செல்கிறது. பவுலின் விவரிப்பின் இரண்டாவது சிந்தனையானது, ஏறக்குறைய எந்த ஒரு தவறான மத அல்லது ஒழுக்கரீதியான இயக்கத்திற்கும் நடைமுறைப் படுத்தப்படக் கூடும். இப்போது நாம் இவ்விரு வசனங்களையும் பொதுவான நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தி இன்னொரு முறை கண்ணோக்குவோமாக.

இன்றைய நாட்களில் உள்ள மக்கள் "கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞராக" முடியும் என்பது கவலைக்கு உரியதாக உள்ளது. கிறிஸ்தவத்தில் சிலுவையே மையமானதாக உள்ளது. நாம் "சிலுவையின் மூலமாகத் தேவனோடு" ஒப்புரவாக்கப் பட்டிருக்கிறோம் (எபேசியர் 2:16); "... இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது" (1 கொரிந்தியர் 1:18). கொரிந்தியர்களுக்குப் பவுல், "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" என்று கூறினார் (1 கொரிந்தியர் 2:2). மீண்டும் அவர், "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக" என்றும் எழுதினார் (கலாத்தியர் 6:14). நாம், "கிறிஸ்துவின் சிலுவை" பற்றிப் பேசும்போது, அவர் எதன் மீது மரித்தோரோ அந்த மரத்துண்டை நமது சிந்தையில் கொண்டிருப்பதில்லை, ஆனால் சிலுவை எதற்காகவெல்லாம் நிற்கிறதோ அவை எல்லாவற்றையும் நமது சிந்தையில் கொண்டிருக்கிறோம்: தேவன் நமக்காகக் கொண்டிருந்த அன்பு, இயேசுவின் தியாகம், நமது ஆத்துமாக்களின் இரட்சிப்பு, சுய - மறுப்புக்கான அறைகூவல் மற்றும் பிற.

இயேசுவின் தெய்வீகத்துவத்தைப் பற்றி வேதாகமம் போதிப்பதையும் நமது

இரட்சிப்பை செயல்விளைவாக்க அவர் மரிக்க வேண்டியிருந்ததையும் ஒருவர் விசுவாசிக்காதபோது, அவர் சிலுவைக்குப் பகைஞர் ஆகிறார். மதக்குழுக்களின் போதனையானது சிலுவையை அவசியமற்றதாக ஆக்குகிறபோது, அவைகள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞராகின்றன. இது, நல்ல வாழ்வை வாழுதல் என்பது தன்னில் தானே பரலோகத்தில் ஒரு இல்லத்தை உத்தரவாதப்படுத்துகிறது என்று நம்புபவர்களை உள்ளடக்கியிருக்கிறது. விசுவாசமில்லாத கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞராக உள்ளனர், ஏனெனில் அவர்கள் தங்களின் தேவபக்தியற்ற தன்மை மற்றும் மனம் வருந்தாத நிலை ஆகியவற்றின் விளைவாக, "தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகின்றனர்" (எபிரெயர் 6:6). சிலுவைக்குப் பகைஞர்களாக இருப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள், தாங்கள் சிலுவைக்குப் பகைஞர்களாக இருப்பதை *உரிமைகோருவதில்லை;* அவர்கள் அனேகமாகத் தாங்கள் அவ்வாறு இருப்பதை அறிந்துகூட இருப்பது இல்லை. இருந்தபோதிலும், அவர்களின் போதனை மற்றும்/அல்லது அவர்கள் வாழ்வு ஆகியவற்றினால் அவர்கள், சிலுவை சுட்டிக் காண்பிப்பவற்றிற்குப் பகைஞர்களாக இருக்கின்றனர்.

"அழிவு" என்பதே அவிசுவாசிகளுக்கும் கீழ்ப்படியாதவர்களுக்கும் முடிவாக உள்ளது. "அழிவு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை (இது *apoleia* என்ற கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது), முன்னதாகப் புறதெய்வ வணக்கக்காரர்களாக இருந்துகொண்டு கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது (1:28); இங்கு இது தேவபக்தியற்ற கிறிஸ்தவர்களின் முடிவைக் குறிக்கிறது. இந்தச் சொற்றொடர், துன்மார்க்கருக்கு வரும் நித்திய தண்டனையைக் குறிக்கிறது (காண்க மத்தேயு 7:13; 2 பேதுரு 3:7; வெளிப்படுத்தின விசேஷம் 17:8, 11).[9] CEV வேதாகமத்தில் "... அவர்கள் நரகம் நோக்கிச் செல்கின்றனர்" என்றுள்ளது!

பவுலின் அடுத்த சொற்றொடரானது, கருத்தை இன்னும் நெருக்கமாக வலியுறுத்துகிறது: "அவர்களுடைய தேவன் வயிறு." ஏதேனும் ஒன்றை ஒருவர் தமது "தேவனாக" கொண்டிருத்தல் என்பது, அந்த விஷயம் (அது எதுவாக இருந்தாலும்) மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்றும், அது அவரது வாழ்வைக் கட்டுப்படுத்துகிறது என்றும் அர்த்தப்படுகிறது. NASB ஆங்கில வேதாகமத்தில் இங்குள்ள "பசி" என்ற வார்த்தைக்குப் பதிலாகக் கிரேக்க வசனத்தில் "வயிறு" என்று அர்த்தப்படும் வார்த்தை உள்ளது. [தமிழ் வேதாகமத்திலும் இது "வயிறு" என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.] பவுலின் வெளிப்படையான கண்டனம், உணவிற்கு அடிமையாகுதலை (மீதூண் விருப்பம், போஜனப் பிரியம்; காண்க உபாகமம் 21:20; நீதிமொழிகள் 23:21; 28:7; தீத்து 1:12) அல்லது (மது, போதைப்பொருட்கள் மற்றும் இவை போன்ற) வேறு எதற்காவது அடிமையாகுதலை உள்ளடக்குவதாக இருக்கும். அவரது வார்த்தைகள் சட்டவிரோதமான பாலுறவு உட்பட, பொதுவாக மாம்ச இச்சைகள் யாவற்றையும் குறிப்பவையாக இருக்கவும் முடியும்.[10] NCV வேதாகமத்தில் "அவர்கள் தங்கள் சரீரங்கள் விரும்பும் எல்லாவற்றையும் செய்கின்றனர்" என்றுள்ளது. அப்போஸ்தலரின் குற்றஞ்சாட்டுதல் இன்னும் விரிவாக்கப்படக்கூட முடியும். ரோமர் 16:17, 18ல் சபையில் பிரிவினைகள் ஏற்படக்காரணமாக இருந்த கள்ளப்போதகர்களைப் பற்றி விவரிக்க இதேபோன்ற

சொற்றொடராக்கம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வசனப் பகுதியில், ஒருவர் தமது தனிப்பட்ட விருப்பங்களை எல்லாவற்றிற்கும் மேலாக முக்கியமானதாக ஏற்படுத்துதல் பற்றிய குறிப்பு காணப்படுவதாகத் தோன்றுகிறது. சுயத்தை மையமாகக் கொண்டிருத்தல் என்பது நம்மில் ஒவ்வொருவருக்கும் இன்றைய நாளில்கூட சோதனையாக உள்ளது!

பவுலின் அடுத்த விவரிப்பானது, இன்றைய நாட்களுக்கு வழக்கத்தைவிட மாறாக ஏற்புடையதாகக் காணப்படுகிறது: "அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே." இதில் "மகிமை" என்பதற்குப் பதிலியாக அதிகம் பொதுவாகப் பயன்படுத்தப்படும் "தற்பெருமை" என்பதை இடுங்கள், சித்தரிக்கப்படும் சூழ்நிலை இப்போது இன்னும் அதிக தெளிவாக உள்ளது. அவர்கள் "தாங்கள் செய்கிற அருவருப்பான விஷயங்களைப் பற்றித் தற்பெருமை கொள்கின்றனர்" என்று CEV வேதாகமம் கூறுகிறது. என் மனதில் உதாரணத்திற்குப் பின் உதாரணமாகப் பெருக்கெடுக்கிறது:[11]

- பாலுறவில் தவறான செய்கைகளைப் பற்றி வீண்பெருமை பேசும் மனிதர்கள்.
- முந்திய இரவில் எவ்வளவாகக் குடித்து அல்லது போதைப் பொருட்களைப் பயன்படுத்தி இருந்ததாக வீண்பெருமை பேசும் இளைஞர்கள்.
- தங்கள் நண்பர்களிடமிருந்து வியாபார நடவடிக்கைகளில் எவ்வாறு "தங்களால் முடிந்த அளவு மிகச் சிறப்பான" வருவாயைப் பெற்றோம் (அதாவது, ஏமாற்றினோம்) என்று வீண்பெருமை பேசும் வயது வந்த மனிதர்கள்.
- துன்மார்க்கத்தைத் தாங்கள் "சகித்துக்கொள்ளுதல்" பற்றி வீண்பெருமை பேசுவோர் (காண்க 1 கொரிந்தியர் 5:2).
- ஆபாசத்தையும் தேவதூஷணத்தையும் வெட்கமில்லாமல் பயன்படுத்தும் அல்லது நிர்வாணத்தையும் வேசித்தனம் மற்றும் விபசாரம் போன்ற செயல்களையும் சித்தரிக்கும் புத்தகங்கள், நாடகங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் திரைப்படங்கள்.

எனக்கு எரேமியா 6:15 நினைவுக்கு வருகிறது: "அவர்கள் அருவருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கப்படுகிறார்களோ? பரிச்சேதம் வெட்கப்படார்கள், நாணவும் அறியார்கள்." ஏசாயா 5:20ம் கூட ஏற்புடையதாகக் காணப்படுகிறது: "தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப்பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ!" தாமஸ் மேன்ட்டன் என்பவர், "விழுந்து போன மனிதர் ... தலைகீழாக மாறிய மனிதராயிருக்கிறார்; அவரது வெறுப்பு எங்கிருக்க வேண்டுமோ அங்கே அவரது அன்பு இருக்கிறது," மற்றும் அவரது அன்பு எங்கிருக்க வேண்டுமோ அங்கே அவரது வெறுப்பு இருக்கிறது, மற்றும் அவரது மகிமை எங்கிருக்க வேண்டுமோ அங்கே அவரது வெட்கக்கேடு இருக்கிறது, எங்கே அவரது வெட்கக்கேடு இருக்க வேண்டுமோ அங்கே அவரது மகிமை இருக்கிறது" என்று எழுதினார்.[12]

நமது வசனப்பகுதியில் நாம் முன்னோக்கிக் கடந்து செல்லுகையில்,

19ம் வசனத்தின் முடிவில் நாம், பிரச்சனையின் இருதயம் போன்ற மையப்பகுதிக்கு வருகிறோம்: பவுலினால் கண்டனம் பண்ணப்பட்டவர்கள் "பூமிக்கடுத்தவைகளைச் சிந்தித்தார்கள்." LB வேதாகமத்தில் பின்வரும் பொழிப்புரை உள்ளது: "இங்கு பூமியின் மீது இந்த வாழ்வைப் பற்றி மாத்திரமே அவர்கள் சிந்திக்கின்றனர்." சார்லஸ் ஏர்டுமேன் என்பவர், "அவர்களின் தொடுவானம் காலம் மற்றும் உணர்வுகளின் விஷயங்களுடன் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது" என்று எழுதினார்.[13] அவர்களின் மனஅமைவு பின்வருவது போன்று தொகுத்துரைக்கப்படலாம்: நரகத்திற்கு *நியமிக்கப்பட்டவர்களாகவும்* தங்கள் இச்சைகளினால் *இயக்கப்பட்டவர்களாகவும்* அவர்கள் இந்த உலகத்திற்குத் தங்களை *அர்ப்பணித்தவர்களாக* நிலைத்துள்ளனர்.[14]

முன்னரே உரைக்கப்பட்டபடி, பூமிக்குரிய விஷயங்களில் கட்டிவைக்கப் பட்டிருந்த இந்த மனிதர்கள் யார் என்பதை நாம் அறிவதில்லை, ஆனால் அவர்கள் பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்களிடத்தில் செல்வாக்குச் செலுத்த முடியும் என்று பவுல் அறிந்திருந்தார். அவர்கள் முக்கியத்துவம் வாய்ந்த தனிநபர்களாக இல்லாதிருந்தால் பவுல் கவலைப் பட்டிருக்கமாட்டார். அனேகமாக அவர்கள், வசீகரமான ஆளுமைத்தன்மையும் நம்பி இணங்க வைக்கும் வழிகளும் கொண்டவர்களாக இருந்திருப்பார்கள். இன்றைய நாட்களில் பேச்சாளர்களின் ஒரு படையானது பூமிக்குரிய விஷயங்களின் முக்கியத்துவத்துவம் பற்றி வானளவாகப் புகழ்கிறது. இந்தப் "படையில்" நமது நாட்களின் மிகவும் வெற்றிகரமாக மற்றும் வசீகரமான மக்கள் உள்ளடங்கி இருக்கின்றனர்: நடிகர்கள், நடிகைகள், மிகச்சிறப்பாக விற்பனையாகும் புத்தகங்களின் எழுத்தாளர்கள், உலகளவில் அறியப்பட்டு இருக்கும் விளையாட்டு வீரர்கள், புகழ்பெற்ற இசையமைப்பாளர்கள், மற்றும் பாடகர்கள், புகழ்பெற்ற அரசியல் வாதிகள் ... இன்னும் இந்தப் பட்டியல் நீண்டுகொண்டுள்ளது. இதில் நண்பர்கள், அயலகத்தவர்கள் அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்கள் கூட உள்ளடங்கி இருக்கலாம். அவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் தங்கள் செய்தியில் ஒரு பொதுவான நூலை [கொள்கையை]க் கொண்டுள்ளனர்: "*இந்த* உலகமே முக்கியத்துவம் வாய்ந்தது." பூமிக்குரிய விஷயங்கள் நமது சிந்தனைகளில் ஆதிக்கம் செலுத்தும்படி அவற்றை அனுமதித்தல் என்பது நாம் யாவரும் எதிர்கொள்ளும் ஒரு அபாயமாக உள்ளது. "இந்த உலகத்தில் இருந்து கொண்டு" ஆனால் "உலகத்தாராக" இராதிருத்தல் என்பது எவ்வளவு கடினமானதாக உள்ளது!

பூமிக்குரிய விஷயங்களில் பிரியமாயிருப்பவர்களைப் பார்த்து அவர்களைப் போன்று நாம் செயல்படக் கூடாது. இதற்கு நேர்மாறாக நாம் - காணப்படாதவற்றைக் காணக்கூடியவராக இருந்த ஆபிரகாம் போன்று - வானத்திற்குரிய விஷயங்களில் தங்கள் கண்ணோக்கங்களை அமைத்திருப்பவர்களைப் பார்த்து அவர்களைப் போன்று நாம் செயல்பட வேண்டும்: "விசுவாசத்தினாலே ஆபிரகாம் ... வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து, ... ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்; ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்" (எபிரெயர் 11:8-10).

சாதிக்க வேண்டிய ஒரு நோக்கம் (3:20-4:1)

பவுல் தமது வாசகர்களுக்காகக் கொண்டிருந்த விருப்பம், ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு அவர் கூறிய பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு தொகுத்துரைக்கப்பட முடியும்: "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், ... உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோமர் 12:2அ). கொலோசெயருக்கு எழுதிய நிருபத்தில் அவர் இதே போன்ற சிந்தனையொன்றை முன்னிறுத்தினார்: "பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்" (கொலோசெயர் 3:2). கொலோசெயர் 3:2ஐ பிலிப்ஸ் என்பவர் பின்வருமாறு மொழிபெயர்த்தார்: "பூமிக்குரிய கடந்துபோய்விடும் விஷயங்களுக்கல்ல, ஆனால் பரலோகத்தின் விஷயங்களுக்கு உங்கள் இருதயத்தைக் கொடுங்கள்."

பரலோகம் சார்ந்த ஒரு இடம்

பரலோகத்து இடம் என்பது அவர்கள் தங்கள் சிந்தையை அமைக்க வேண்டிய பரலோகத்திற்குரிய விஷயங்களில் ஒன்றாக இருந்தது. பவுல், மோசமான உதாரணங்கள் பற்றிப் பிலிப்பியர்களை எச்சரித்த பின்பு, 3:17ல் இருந்த சிந்தனை வரிசையை மீண்டும் தொடர்ந்தார்.[15] அவர் "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது" என்று எழுதினார் (3:20அ).[16] "குடியிருப்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (politeuma என்பதன் ஒரு வடிவமாக) கிரேக்க வார்த்தை, 1:27ல் "நடந்துகொள்ளுங்கள்" என்று தரவழைக்கப்பட்ட வினைச்சொல்லின் பெயர்ச்சொல் வடிவமாக உள்ளது. முந்திய பாடத்தில் குறிப்பிடப்பட்டபடி, மொஃப்பாட் என்பவரின் மொழிபெயர்ப்பில் 3:20 "நாம் பரலோகக் காலனிவாசிகளாக இருக்கிறோம்" என்றுள்ளது. இந்த உருவகம் பிலிப்பியர்களுக்கு விசேஷித்த அர்த்தம் கொண்டிருந்தது, ஏனென்றால் பிலிப்பி நகரமானது ரோமக்குடியேற்ற [காலனி] நகராக இருந்தது. ரோமர்களின் காலனி [குடியேற்ற நகரம்] குறிப்பிட்ட சில தனிச்சலுகைகளைக் கொண்டிருந்தது, ஆனால் அதற்கு இணையான பொறுப்புகளையும் கொண்டிருந்தது. ரோமர்களின் காலனியில் உள்ள குடிமக்கள் ரோமாபுரியின் மீது தேசப்பற்று கொண்டிருக்கக் கடன்பட்டிருந்தனர். அவர்களின் நடக்கை அதன் சட்டங்களால் ஆளப்பட்டது, மற்றும் அதன் மகிமையிலேயே அவர்களின் நம்பிக்கை மையங்கொண்டிருந்தது. மற்றும் அவர்கள் காலனி ஆதிக்கம் செய்ய - ரோமச் சிந்தனைகளையும் கலாச்சாரத்தையும் பரப்ப - வேண்டும் என்று எதிர் பார்க்கப்பட்டனர்.

கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், இந்த உலகத்தைப் பொறுத்த மட்டில் "தங்கியிருக்கும் அந்நியர்களாக" (வேறு நாட்டில் குடியிருக்கும் ஒரு நாட்டுக் குடிமக்கள்) இருக்கிறோம், அதாவது நாம் "பூமியின்மேல் அந்நியரும் பரதேசிகளும்" என்ற நிலையில் இருக்கிறோம் என்பதை உணர்ந்தறிவது அவசியமாக உள்ளது (எபிரெயர் 11:13; காண்க 1 பேதுரு 2:11). நமது பெயர்கள் பரலோகத்தில் உள்ள "ஜீவ புத்தகத்தில்" குடிமக்கள் என்ற வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளன (காண்க பிலிப்பியர் 4:3; எபிரெயர் 12:23). இந்த உலகம் நமக்கு ஒரு "தற்காலிக முகவரியாக" மாத்திரமே உள்ளது; பரலோகமே நமது "நிரந்தர முகவரியாக" உள்ளது. ரோமர்களின் காலனியில் இருந்த குடிமக்களைப் போன்றே, நாம் குறிப்பிட்ட சில தனிச்சலுகைகளைக் கொண்டிருக்கிறோம், ஆனால் அதற்கு இணையான பொறுப்புக்களையும்

கொண்டிருக்கிறோம். நாம் நமது பரலோக பிதாவின் மீது நமது பற்றைக் கொண்டிருக்கக் கடன் பட்டு இருக்கிறோம். நாம் அவரது பிரமாணங்களினால் ஆளுகை செய்யப்படுகிறோம் மற்றும் நமது நம்பிக்கை அவரது மகிமையையே மையங்கொண்டுள்ளது - மற்றும் நாம் கிறிஸ்தவ சத்தியங்களைப் பரப்பும்படி எதிர்பார்க்கப்படுகிறோம்.

பரலோகம் சார்ந்த ஒரு நபர்

பிலிப்பியர்கள் தங்கள் சிந்தைகளைப் பரலோகம் சார்ந்த ஒரு நபர்மீது அமைக்க வேண்டும் என்றும் பவுல் விரும்பினார். தொடர்ந்து அவர், "அங்கேயிருந்து [பரலோகத்திலிருந்து] கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்" என்று எழுதினார் (3:20ஆ). பவுல் கடைசியாகத் தாம், கிறிஸ்துவை முழுமையாக அறியக்கூடும்படிக்கு கடைசி நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்ததாக ஏற்கனவே சுட்டிக் காண்பித்திருந்தார் (3:10, 11). அலெக் மோட்யெர் என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> நாம் பல விஷயங்களை நன்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாம்: கடைசியில் பாவம் மற்றும் சோதனை ஆகியவற்றின் முன்னிலையில் இருந்துகூட விடுதலை; மாபெரும் பழம் மனிதர்களை - ஆபிரகாம், ஏசாயா, பவுலையும்கூட - சந்தித்தல்; பூமியின் மீது நாம் அறிந்திருந்த நமக்கு அன்பானவர்களுடன் மறுபடி ஒன்றித்தல்; பரலோக இடங்களின் மகிமை. ஆம் இந்த விஷயங்கள் யாவையும் உண்மையே, ஆனால் இவைகளுக்கு அப்பால் *மீட்பரும் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்து* என்ற ஒருவரின் பிரசன்னமானது பரலோகத்தின் இசைவிணைப்பையும் அர்த்தத்தையும் கவனக்குவிப்பையும் சித்தரிக்கும், அந்த நபரின் மூலமாக மாத்திரமே இந்த மாபெரும் கூட்டம் ஒன்றுகூட்டப்படுகிறது. அவருக்கு மாத்திரமே மகிமை ஏறெடுக்கப்படுகிறது ... இன்னொரு இடத்தில் பவுல், "இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" என்று எழுதினார்.[17]

கிறிஸ்து தமது மரணத்திற்கு முன்பு, தமது சீஷர்களுடன் இருந்த கடைசி மணிகளின்போது, அவர் திரும்ப வருவதாக வாக்குறுதி அளித்தார் (யோவான் 14:1-4). அவர் பரத்துக்கேறியபோது, அதைக் கவனித்துக் கொண்டிருந்தவர்களிடத்தில் தூதர்கள், "உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" என்று கூறினர் (நடபடிகள் 1:11). தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள், கர்த்தர் எந்த வேளையிலும் வரக்கூடும் என்று உணர்ந்தறிந்தவர்களாக, எதிர்பார்ப்பின் நிலையில் வாழ்ந்தனர் (காண்க 1 தெசலோனிக்கேயர் 4:13-5:2; தீத்து 2:13; எபிரெயர் 9:28). இரண்டாம் வருகை அவர்களின் வாழ்விற்கு அர்த்தம் கொடுத்தது. கிறிஸ்துவின் மறுவருகையில் அவர்கள் கொண்டிருந்த உறுதியான நம்பிக்கை, அவர்களின் அன்றாடப் பிரச்சனைகளை எதிர்கொள்ளவும் உபத்திரவத்தின்போது அவர்களை நிலைநிறுத்தவும் உதவியது.

ஒரு இரட்சகர் வர ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று எழுதியபோது பவுல் எதையும் மிகைப்படுத்திக் கூறவில்லை. கிரேக்க

வசனத்தில் "எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்" என்பது *apekdechomai* என்ற வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது. இது (*apo* மற்றும் *ek* என்ற) இரண்டு முன்னிடைச் சொற்களை, "பெற்றுக்கொள்ள" என்று அர்த்தப்படும் (*dechomai* என்ற) வார்த்தையுடன் இணைத்துக் பெற்ற ஒரு கூட்டு வார்த்தையாக உள்ளது. இது "[புதிய ஏற்பாட்டில்] எட்டு முறைகள் வருகிறது, அவற்றில் ஆறுமுறைகள் இது பவுலினால் பயன்படுத்தப்பட்டுள்ளது ... இது அவருடைய சிறப்பு வார்த்தையாக உள்ளது, இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காகக் கிறிஸ்தவரின் இடைவிடாத ஏக்கம், அவரது சந்தோஷமான எதிர்பார்ப்பு மற்றும் அவரது ஊக்கமான விருப்பம் ஆகியவற்றை மிகச்சிறப்பாக வெளிப்படுத்தும் வார்த்தையாக அவருக்கு [பவுலுக்கு] உள்ளது."[18]

பிலிப்பியர் 3:20ல் "இரட்சகர்" என்ற வார்த்தை உள்ளடக்கப் பட்டிருத்தல் தனிச்சிறப்பானதாக உள்ளது. இந்தச் சொற்றொடரைப் பவுல் அடிக்கடி பயன்படுத்தியதில்லை, ஆனால் இங்கு அவர் இதைப் பயன்படுத்தினார் - இந்த வார்த்தை, கர்த்தர் திரும்ப வரும்போது தமது மக்கள் மீது கொண்டுள்ள பணிப்பொறுப்பை மிகச்சிறப்பாகச் சித்தரிப்பதால் அவர்கள் இதை இங்கு பயன்படுத்தி இருக்கலாம். தேவபக்தியற்றவர்களுக்கு அவர் ஒரு நியாயாதிபதியாக மாத்திரமே தோன்றுவார். ஆனால் தமக்குச் சொந்தமானவர்தளுக்கு அவர் ஒரு இரட்சகராக - பாவம் நிறைந்த இந்த உலகத்தில் இருந்து அவர்களை விடுவிக்க, அவர்களைக் தற்காக்க மற்றும் நித்தியம் முழுவதிலும் அவர்கள் தம்மோடு இருக்கும்படி அவர்களை அழைத்துச் செல்ல - வருவார்.

தொடக்ககாலக் கிறிஸ்தவர்களைப் போன்று நாமும் இயேசுவின் மீது நமது இருதயங்களைக் கவனம்குவித்து அவரது வருகைக்காக "எதிர்பார்த்துக் கொண்டிருத்தல்" அவசியமாக உள்ளது. அவர்களைப் போன்று நாமும், அவர் எந்த வேளையிலும் வரக்கூடும் என்பதை உணர்ந்து அறிய வேண்டும். அவர்களைப் போன்று நாமும், "ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்" என்று ஜெபிக்க வேண்டும் (வெளிப்படுத்தின விசேஷம் 22:20)!

பரலோகம் சார்ந்த ஒரு நோக்கம்

கர்த்தர் மறுபடியும் வரும்போது, திகைப்புக்குரிய விஷயங்கள் நடைபெறும். நாம் யாவரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக ஒன்றுகூடுவோம் (மத்தேயு 25:31, 32). [அவரது] வலது புறத்தில் நிற்பவர்கள் பரலோகம் செல்ல, அவரது இடது புறத்தில் நிற்பவர்கள் நரகத்திற்குச் செல்வார்கள் (மத்தேயு 25:34, 41, 46). இருப்பினும் பவுலுக்கு - ஒவ்வொருநாளும் பலவீனமாகிக் கொண்டிருந்த உடலைக் கொண்டிருந்த வயது முதிர்ந்த பவுலுக்கு - சரீரத்தின் மீட்பு என்பது மிகவும் பரவசத்திற்குரிய நிகழ்ச்சிகளில் ஒன்றாக இருந்திருக்கும். அவர், "கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து ... நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" என்று கூறினார் (பிலிப்பியர் 3:20ஆ, 21ஆ).

"நம்முடைய அற்பமான சரீரத்தை"[19] என்பது நாம் இப்போது குடியிருக்கும் பௌதீக சரீரங்களை - படிப்படியாக அழியக்கூடிய, வியாதிப்படக்கூடிய, உருவழியக்கூடிய, மரணம் அடையக்கூடிய, சிதைவடையக்கூடிய சரீரங்களை - குறிக்கிறது. அவோன் மலோன் என்பவர் இந்த உடல்களைத் பற்றி விரிவாகச் சித்தரித்தார்: "வரம்புகளினால் பூட்டப்பட்டுள்ள, பலக்குறைவினால்

தடைப்பட்ட, வேதனையினால் துரத்தப்பட்ட மற்றும் மரிப்பதற்கு நியமிக்கப்பட்ட உடல்.''[20] "தம்முடைய மகிமையான சரீரம்'' என்பது பரலோகத்தில் உள்ள இயேசுவின் ஆவிக்குரிய சரீரத்தைக் குறிக்கிறது. இயேசுவின் "மகிமையான சரீரம்'' என்பது, விசுவாசிகள் மரித்தோரில் இருந்து எழுப்பப்படும்போது பெற்றுக்கொள்ளும் ஆவிக்குரிய சரீரங்களின் மூலமுன்மாதிரியாக உள்ளது.

"ஒப்பாக" மற்றும் "மறுரூபப்படுத்துவார்" என்ற வார்த்தைகள் மாற்றத்தின் முழுமைத்தன்மையை வலியுறுத்துகின்றன. "மறுரூபப்படுத்துதல்" என்பதற்கான (*metaschematisei* என்ற), கிரேக்க வார்த்தை *schema* என்ற வார்த்தையின் ஒரு வடிவத்திற்கு முன்னதாக *meta* ("மத்தியில்") என்ற முன்னிடைச் சொல்லை இட்டுப்பெறப்பட்ட வார்த்தையாக உள்ளது. "ஒப்பாக'' (*summorphon*) என்று தரவழைக்கப்பட்டுள்ள வார்த்தை, *morphe* என்ற வார்த்தையின் ஒரு வடிவத்திற்கு முன்னதாக *sun* ("உடன்'') என்ற முன்னிடைச் சொல்லை இட்டுப்பெறப்பட்ட வார்த்தையாக உள்ளது. *Schema* என்பது ஒரு நபரின் அல்லது ஒரு பொருளின், மாறக்கூடிய மற்றும் மாறுகிற வெளிப்புறத் தோற்றத்தைக் குறிக்கையில், *morphe* என்பது மாறாதிருக்கும் அத்தியாவசிய இயல்பைக் குறிக்கிறது என்பதை நீங்கள் நினைவில் வைத்திருக்கலாம். கர்த்தர் திரும்ப வரும்போது, நமது சரீரங்களின் புறம்பான தோற்றமும் அவற்றின் அத்தியாவசியமான இயல்பும் ஆகிய இரண்டுமே மாறும். "அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்'' (1 யோவான் 3:2)!

நான் இதை அல்லது இது எவ்வாறு நடைபெறும் என்பதைப் புரிந்துகொள்கிறேனா? இல்லை, ஆனால் இதை நான் விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்கிறேன். எர்டுமேன் என்பவர் "இவ்வார்த்தைகள் அறிவதற்கான நமது ஆர்வத்தைத் திருப்திப்படுத்தப் போதுமானவையாக இருப்பதில்லை, ஆனால் இவைகள் ஆறுதலை ஏவுதலுக்கும் நம்பிக்கையைத் தூண்டுவதற்கும் போதுமானவையாக இருக்கலாம்'' என்று எழுதினார்.[21] பிலிப்பியர் 3:20ன் முதல்பாகத்திற்கு, 1 கொரிந்தியர் 15ல் பவுல் எழுதியது அனேகமாக மிகச்சிறந்த விளக்கவுரையாக இருக்கலாம்:

> ஆகிலும், மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்களென்று ஒருவன் சொல்வானாகில், புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே. நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய். அதற்குத் தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்; விதை வகைகள் ஒவ்வொன்றிற்கும் அததற்கேற்ற மேனியையே கொடுக்கிறார் ...
>
> மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம்

> *விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்மசரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு ... இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்தியரையடை [மரணமடை] வதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறு ரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும் சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? ... நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (1 கொரிந்தியர் 15:35-57).*

கையில் உள்ள பாடக்கருத்திற்கு நடைமுறைப் பயன்பாடு தெளிவானதாக உள்ளது: மாம்சம் மாறப்போகிறதாக இருக்கும்போது நீங்கள் மாம்சத்தின் மீது உங்கள் கவனத்தை மையப்படுத்த வேண்டியது என்ன? உங்கள் இருதயம் பரலோகம் சார்ந்த ஒரு நோக்கத்தின் மீது அமைக்கப்பட வேண்டும்: உங்கள் "அற்பமான சரீரம்" மறுரூபமாகுதல் (பிலிப்பியர் 3:20).

பரலோகம் சார்ந்த ஒரு வல்லமை

சித்தரிக்கப்பட்டுள்ள ஆச்சரியப்படத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தக் கிறிஸ்து வல்லவராக இருக்கிறாரா? அவர் அவ்வாறே இருக்கிறார் - அவர் அதை "எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே" செய்வார் (3:21அ) என்று பவுல் தமது வாசகர்களுக்கு உறுதிப்படுத்தினார். இது வல்லமை பொதியப்பட்ட கூற்றாக உள்ளது. "செயலின்படியே" என்பது "energy" *என்ற ஆங்கில வார்த்தைக்கு மூலமான energeian என்ற கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* "Energeia" *"என்பது வெறும் 'வல்லமை'யாக மாத்திரமல்ல, ஆனால் செயல்பாட்டில் உள்ள வல்லமை'யாக, 'இயக்கத்தில் உள்ள வல்லமையாக' 'வேலைசெய்தலில் உள்ள வல்லமை' யாக இருக்கிறது."[22] 3:21ல் "வல்லமை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள dunasthai என்ற கிரேக்கச் சொற்றொடரில் இருந்தே நாம் வலிமை நிறைந்த வெடிப்பொருளுக்குரிய* "dynamite," *என்ற பெயரைப் பெறுகிறோம்.*

இயேசு எவ்வளவு "வல்லமை" கொண்டுள்ளார்? அவர் "சகல அதிகாரமும்" கொண்டுள்ளார் (மத்தேயு 28:18). "எல்லாம் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தப்பட்டுள்ளன" (எபேசியர் 1:22; காண்க 1 கொரிந்தியர் 15:27அ). அவர் "சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய்" இருக்கிறார் (எபிரெயர் 1:3). அவரது "வல்லமை ... உலகளாவியதாகவும் முழுமையானதாகவும் உள்ளது."[23] "சகலத்தையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க" இயேசுவின் வல்லமையானது (பிலிப்பியர் 3:21), அவர் நம்மை மரித்தோரில் இருந்து எழுப்பவும், அழிந்துபோகும்

மாம்சப்பிரகாரமான உடல்களை அழியாமையுள்ள ஆவிக்குரிய உடல்களாக மாற்றவும் வல்லமை கொண்டிருக்கிறார் என்பதற்குத் தேவனுடைய உத்தரவாதமாக உள்ளது! இங்கு நமது சிந்தைகளுக்கு இன்னொரு கவனக்குவிப்பு உள்ளது: அவரது பரலோகம் சார்ந்த வல்லமை.

பரலோகம் சார்ந்த ஒரு ஆணை

பவுலின் பரலோகம் சார்ந்த வலியுறுத்தம் 4ம் அதிகாரத்தின் முதல் வசனம் வரையிலும் தொடர்கிறது: "ஆதலால், எனக்குப் பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே, எனக்குச் சந்தோஷமும் கீரிடமுமானவர்களே, பிரியமானவர்களே, இந்தப்படியே கர்த்தருக்குள் நிலைத்திருங்கள்." இந்த வசனம் "ஆதலால்" என்ற வார்த்தையுடன் தொடங்குகிறது, இது 3ம் அதிகாரத்தின் கடைசி வசனங்களுடன் இவ்வசனத்தைப் பிணைப்பதாக உள்ளது. அடுத்த பாடத்தில் நாம் 4:1ஐ மறுபடியும் கண்ணோக்குவோம், ஆனால் ஒருசில திறவுகோல் வார்த்தைகளை முக்கியத்துவப்படுத்துவதைக் கொண்டு இந்தப் பாடத்தை நான் முடிக்க விரும்புகிறேன்.

"இந்தப்படியே" என்பது பவுலினால் வரைகுறிப்பிடப்பட்ட ஆவிக்குரிய பாதைவழியைக் குறிக்கிறது: ஒருவர் தமது நினைவில் கிறிஸ்துவை முதலாவதாக வைக்கும் பாதைவழி; கடந்த காலத்தை விட்டு விட்டு முன்வைக்கப்பட்டிருக்கும் இலக்கைத் தொடரும் பாதைவழி; ஒருவர் பூமிக்குரிய விஷயங்கள் மீதல்ல ஆனால் மேலான விஷயங்கள் மீது கவனம் குவிக்கும் பாதைவழி.

"இந்தப்படியே" என்பது பற்றிப் பவுல், தமது வாசகர்கள் "நிலைத்திருக்க" வேண்டும் என்று விரும்பினார். "நிலைத்திருங்கள்" என்பது *steko* என்ற வார்த்தையின் ஒரு வடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது அஞ்சிவிலகாமல் பின்வாங்கிப்போகாமல், ஒரு போர்வீரரைப் போன்று யுத்தத்தின் மத்தியில் - அசையாது அசைக்கப்படாது - நிற்பதை அர்த்தப்படுத்துகிறது (காண்க எபேசியர் 6:10-17). கிறிஸ்தவர்கள் பலமடங்கு அழுத்தங்களை எதிர்கொள்கின்றனர்: உலகத்தின் இழுப்பும் மாம்சத்தின் இச்சையும் (ரோமர் 12:2; 1 யோவான் 2:16), புதிதும் புதுமையானதுமான கள்ளப் போதகத்தின் கவர்ச்சி (நடபடிகள் 20:30; 2 தீமோத்தேயு 4:3) மற்றும் துன்புறுத்தப்படுதலின் அச்சுறுத்தல் (2 தீமோத்தேயு 3:12). இவையாவற்றிற்கும் எதிராகப் பவுல், "நிலைத்திருங்கள்!" என்று புத்திகூறினார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "கொலையே செய்யப்படுவோம் என்றாலும்கூட அதையும் பொருட்படுத்தாது உங்கள் இடத்தில் நிலையாக நில்லுங்கள்!" நாம் "உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும்" இருக்க வேண்டும் (1 கொரிந்தியர் 15:58)!

நாம் இதைச் செய்யக்கூடியவர்களாக ஆக்குவது எது? "நிலைத்திருங்கள்" என்ற வார்த்தைக்கு முன்னர் "கர்த்தருக்குள்" என்ற சொற்றொடர் உள்ளது. இது "அவரது அதிகாரத்திற்கு மனவிருப்பமாகக் கீழ்ப்படிதல்" என்பதில் "நிலைத்திருத்தல்" என்று அர்த்தப்பட முடியும்.[24] துரதிர்ஷ்டவசமாகச் சிலர், கர்த்தருடைய வழியில் நிலைநிற்பதற்குப் பதிலாக, தவறிலும் முரட்டாட்டமான கலகத்திலும் "நிலைநிற்கின்றனர்." இருப்பினும் இவ்வசனப் பகுதியில் "கர்த்தருக்குள்" என்பது அனேகமாக நாம் "கர்த்தருடைய பலத்தில்" நிலைநிற்க வேண்டும் என்று அர்த்தப்படலாம். நமது ஆவிக்குரிய

யுத்தம் பற்றிப் பவுல், எபேசியருக்கு எழுதிய போது, "கர்த்தரிலும் *அவருடைய* சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்" என்று கூறினார் (எபேசியர் 6:10; என்னால் வலியுறுத்தப்படுகிறது). "ஒன்று நாம் 'கர்த்தருக்குள்' நிலைநிற்கிறோம் அல்லது நாம் நிலைநிற்பதே இல்லை" என்று கூறப்பட்டுள்ளது. மேலான விஷயங்களின் மீது நமது சிந்தைகளை அமைத்து வைத்தல் என்பது கர்த்தருடைய பலத்தில் நிலைநிற்பதற்கான ஒரு வழியாக உள்ளது.

முடிவுரை

மீண்டுமாக, உங்களைச் சுற்றிலும் உள்ள எல்லாப் பொருட்களையும் கண்ணோக்குவதற்குச் சற்று நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். பின்பு உங்களுக்கு நீங்களே, "இவையாவும் அழிவை நோக்கிச் செல்பவையாக உள்ளன" என்று கூறிக்கொள்ளுங்கள் (காண்க கொலோசெயர் 2:22). பவுலின் வார்த்தைகளைத் திரும்பவும் கூறுங்கள்: "ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" (2 கொரிந்தியர் 4:18). அதனால் தான் இயேசு, "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம் ... பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்" என்று கூறினார் (மத்தேயு 6:19, 20அ). இந்தச் சிந்தனை, நீண்ட நாட்களுக்கு முன்னர் நான் மனப்பாடம் செய்திருந்த, யாரோ ஒருவர் எழுதிய பாடலின் பின்வரும் பல்லவி வரிகளால் நன்கு விளக்கி உரைக்கப்படுகிறது:

> ஒரே ஒரு வாழ்க்கை
> விரைவில் கடந்துபோகும்;
> தேவனுக்காகச் செய்தவைகளே
> கடைசிவரை நிலைத்திருக்கும்.

அப்படியென்றால் நாம் நமது சிந்தனைகளை எங்கே வைக்க வேண்டும்? விரைவில் அழிந்துவிடக் கூடிய பூமிக்குரிய பொருட்களின் மீதா அல்லது என்றைக்கும் அழியாது இருக்கக் கூடிய பரலோகம் சார்ந்த விஷயங்களின் மீதா? தேர்ந்துகொள்ளுதல் என்பது சுலபமான ஒன்றாக உள்ளது. (நான் வாழும் இடத்தில், இந்தத் தேர்ந்து கொள்ளுதலை நாங்கள், "மூளை தேவைப்படாத ஒன்று" என்று அழைப்பது உண்டு; இதற்குத் சிந்தனை எதுவும் தேவைப்படுவதில்லை.) நாம் பூமியில் அஸ்திபாரம் கொண்டவர்களாக இருக்கலாம், ஆனால் நாம் பரலோகத்தினால் கட்டப்பட்டவர்களாக இருக்கும்படி தீர்மானம் செய்வோமாக!

குறிப்புகள்

[1]James M. Tolle, *Notes on Philippians* (San Fernando, Calif.: Tolle Publications, 1972), 59. (Emphasis mine.) [2]கூட்டு வார்த்தைகளில், *sun* என்பது பல்வேறு வகைகளில் எழுத்துக்களைக் கொண்டிருக்கக் கூடும். இங்கு அது *sum* என்பதாக உள்ளது. [3]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III (Minneapolis: Bethany House Publishers, 1984), 715. KJV வேதாகமத்தில் "mark" என்ற வார்த்தை உள்ளது. சிலர் "mark" என்ற வார்த்தையைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர், இதைப்

பற்றி அவர்கள், ஒரு தாளின் மீது (எழுத்தில்) ஒரு குறியை ஏற்படுத்துதல் என்ற வகையில் சிந்திக்கின்றனர். இதற்கு மாறாக இது பின்வரும் வாக்கியத்தில் உள்ள கருத்தமைவில் பயன்படுத்தப்பட்டுள்ளது: "எனது வார்த்தையைக் குறித்துக்கொள்." அதாவது, "எனது வார்த்தைகளுக்குக் கவனம் கொடுத்து அவற்றை நினைவில் வைத்துக்கொள்." [4]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary,* vol. 43, *Philippians,* ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 159. [5]இந்த வாக்கியத்தையும் முந்திய வாக்கியத்தையும் நீங்கள் வாழும் இடத்திற்குத் தக்காற்போன்று தழுவியமைத்துக் கொள்ளுங்கள். [6]இந்தக் கள்ளப்போதகர்கள், வேறுபட்ட எழுத்தாளர்களால் பல்வேறு வகையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். ஒருவேளை அவர்கள், கிறிஸ்தவர்களுக்குத் தரப்பட்ட கிருபையின் போதனையை பாவம் செய்வதற்கான உரிமை என்ற வகையில் போதித்து இருக்கலாம் (காண்க ரோமர் 6:1), அல்லது இது கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் (காண்க 1 யோவான் 2:3, 4) இருந்து விலக்களித்த, மேன்மையான "அறிவை" உரிமைகோரிய அறிவுசார் இயக்கத்திற்கு முந்திய குழுவாக இருந்திருக்கலாம் (காண்க 1 தீமோத்தேயு 6:20). இந்த மனிதர்கள் "லிபர்த்தீனர்கள்" என்றும் அழைக்கப்பட்டிருந்தனர், இவர்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கும் சுயாதீனத்தைப் பாவம் செய்வதற்கு அனுமதியாக்கினர் (காண்க கலாத்தியர் 5:13). மிகச்சரியாக அடையாளம் கண்டறிதல் என்பது முக்கியமற்றது. 2 பேதுரு 2ம் அதிகாரம் இவ்வகையான போதகரைப் பற்றிய பொதுவான விவரிப்பைத் தருகிறது. [7]யூதர்கள் மற்றும் புறதெய்வ வணக்கப் போதகர்கள் ஆகிய இருதிறத்தாரும் பல்வேறு விளக்கவுரையாளர்களால் முன்மொழியப்பட்டுள்ளனர். இருப்பினும் பெரும்பான்மையானவர்கள், *கிறிஸ்தவக்* கள்ளப் போதகர்களையே பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று ஒப்புக் கொள்கின்றனர். பவுல் மிகவும் கலக்கம் அடைந்திருந்தார் ("அழுதார்") என்ற உண்மையானது, இவர்கள் தங்கள் சகோதரர்களைப் பாழாக்கும்படி வழிநடத்திய கிறிஸ்தவர்களாக இருந்தனர் என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. [8]Vine, 1218. [9]துன்மார்க்கர் "அழிக்கப்படும்போது" அவர்கள் (இல்லாது ஒழியும்படி) நிர்மூலமாக்கப்படுகின்றனர் என்று சிலர் போதிக்கின்றனர், ஆனால் *apoleia* என்ற வார்த்தை, "இல்லாது ஒழிவதை அல்ல, ஆனால் நலமாயிருப்பதை இழத்தல்" என்பதையே சுட்டிக்காண்பிக்கிறது (Vine, 295). [10]"Belly" அல்லது "stomach" என்பவை, பாலுறவிற்கான உறுப்புகள் உட்பட, உடலின் கீழ்ப்பாகத்தைக் குறிப்பிடும் அமங்கலமான சொல்வழக்கு என்று ஒரு சில விளக்கவுரையாளர்கள் நினைக்கின்றனர். வேதவசன ரீதியான திருமணமே தேவனால் அங்கீகரிக்கப்பட்ட திருமணமாக உள்ளது (காண்க எபிரெயர் 13:4); மற்ற எல்லாப் பாலுறவுகளும் வேதாகமத்தினால் கண்டனம் பண்ணப்பட்டுள்ளது. ரோமர் 13:9; 1 கொரிந்தியர் 6:18 ஆகியவற்றைக் காணவும் (NASB வேதாகமம், "fornication" என்பதற்கான கிரேக்க வார்த்தையை வழக்கமாக "immorality" என்ற ஆங்கில வார்த்தையாகவே மொழிபெயர்க்கிறது).

[11]இதை, நீங்கள் வாழும் இடத்திற்கு ஏற்றாற்போல் தழுவியமைத்துக் கொள்ளுங்கள். உதாரணங்கள் ஏறக்குறைய முடிவற்றவைகளாக உள்ளன. பண்பற்ற நடவடிக்கைகள் பற்றி வீண்பெருமை கொள்ளுபவர்கள், சூதாட்டத்தில் தாங்கள் எவ்வளவு தொகையை ஜெயித்தனர் என்பதை பற்றி வீண்பெருமை கொள்ளுபவர்கள், இன்னும் இன்னும் மற்ற உதாரணங்கள். [12]Quoted in John A. Knight, *Beacon Bible Expositions,* vol. 9, *Philippians, Colossians, Philemon* (Kansas City, Mo.: Beacon Hill Press, 1985), 108. [13]Charles R. Erdman, *The Epistle of Paul to the Philippians* (Grand Rapids, Mich.: Baker Book House, 1983), 128. [14]இந்தக் கருத்து, Charles R. Swindoll, *Laugh Again* (Dallas: Word Publishing, 1992), 166 என்னும் புத்தகத்திலிருந்து தழுவியமைக்கப்பட்டது. [15]19 மற்றும் 18 ஆகிய வசனங்கள், பவுலின்

*சிந்தனை வரிசையில் தொடர்பற்ற வகையிலான உட்செருகல் என்று நினைக்கப்பட முடியும். (*KJV *வேதாகமத்தில் இது அடைப்புக் குறிகளுக்குள் வருவதைக் கவனியுங்கள்.)* [16]*பிலிப்பியர் 3:20, 21ம் வசனங்கள் தொடக்க கால சபையாரால் ஒரு கீர்த்தனையாக பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று விளக்கவுரையாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர், ஆனால் விஷயம் இவ்வாறு இருந்ததா என்று நமக்கு நிச்சயமாகத் தெரிவதில்லை.* [17]Alec Motyer, *The Message of Philippians: Jesus Our Joy,* The Bible Speaks Today series, ed. John R. W. Stott (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1984), 196. His Scripture quotation is from 1 Thessalonians 4:17. [18]Hawthorne, 171. [19]*மூலவசனம் "நமது சிறுமையான சரீரம்" என்று அர்த்தப்படுகிறது. "சிறுமை" என்பது 2:3ல் உள்ள "மனத்தாழ்மை" மற்றும் 2:8ல் உள்ள "தாழ்த்தினார்" என்ற வார்த்தைகளுக்குரிய அதே கிரேக்க வேர்வார்த்தையில் இருந்து வந்துள்ளது.* KJV *வேதாகமத்தில், "மலிவான," "மதிப்பில்லாத" என்று அர்த்தப்படும் இலத்தீன் வார்த்தையில் இருந்து வந்த* "vile," *என்ற வார்த்தை உள்ளது.* [20]Avon Malone, *Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 98.

[21]Erdman, 130. [22]Hawthorne, 173. [23]Richard B. Gaffin, notes on Philippians, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 1808. [24]Vine, 1084.

14

நல்ல கிறிஸ்தவர்கள் இணங்கிப்போக இயலாத போது[1]

[பிலிப்பியர் 4:1-3]

கிறிஸ்தவர்கள் - நல்ல கிறிஸ்தவர்களும்கூட - எப்போதுமே இணங்கிப் போவதில்லை என்று நான் கூறும்போது, உங்களுக்கு அதிர்ச்சியூட்ட மாட்டேன் என்று நான் நம்புகிறேன். வெளிச்சங்கள் இருக்கும் இடத்தில் பூச்சிகள் இருக்கும். நாய்கள் இருக்கும் இடத்தில் ஈக்கள் இருக்கும். மனிதர்கள் - அவர்கள் கிறிஸ்தவர்களாக, நல்ல கிறிஸ்தவர்களாகக் கூட இருந்தாலும் அவர்கள் - இருக்கும் இடத்தில் தவறான புரிந்து கொள்ளுதல்களும் கருத்து வேறுபாடுகளும் இருக்கத்தான் செய்யும் (காண்க நடபடிகள் 15:36-40). "கிறிஸ்தவர்கள் கருத்து வேறுபட்டால், நாம் என்ன செய்ய வேண்டும்?" என்பதல்ல, ஆனால் "கிறிஸ்தவர்கள் கருத்து வேறுபடும் போது நாம் என்ன செய்ய வேண்டும்?" என்பதே கேள்வியாக உள்ளது.

இந்தப் பாடமானது பிலிப்பி நகரின் சபையில் இருந்த, இணங்கிப் போகாத இரு சகோதரிகளைச் சுற்றிச் சுழலுவதாக இருக்கிறது (பிலிப்பியர் 4:2). பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் ஒன்றிணைந்து இருத்தலின் முக்கியத்துவத்தைப் பவுல் முன்னதாக வலியுறுத்தினார் (1:27; 2:2). இந்தப் பொதுவான புத்திகூறுதல்கள் ஒருமைப்பாடு இல்லாமையின் குறிப்பிட்ட விஷயத்திற்கு வழிநடத்தின என்று சிலர் நினைக்கின்றனர். அது உண்மையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், 4ம் அதிகாரத்தின் முதல் மூன்று வசனங்கள், சக கிறிஸ்தவர்களுடன் இசைவிணக்கமாக வாழ்வதின் முக்கியத்துவத்தைப் பிரதானமாகக் காண்பிக்கின்றன. இந்தச் சூழ்நிலையைப் பவுல் கையாண்ட விதமானது, கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதர சகோதரிகள் அந்நியப்பட்டு இருக்கும் போது என்ன செய்ய வேண்டும் என்று நாம் அறிய உதவக்கூடும்.

உண்மையான பாராட்டுரை (4:1)

முதலாவதாகப் பவுல் ஒரு நேர்மறையான சூழ்நிலையை நிலைநாட்டினார். பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு - இடர்பாடு ஏற்படுத்திய சகோதரிகள் உட்பட எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் - தமது அன்பை உறுதிப்படுத்தினார். அவர் கட்டளையிடுவதற்கு முன்னர் அவர் பாராட்டினார்:[2] "ஆதலால், எனக்குப் பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே, எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரியமானவர்களே, இந்தப்படியே கர்த்தருக்குள் நிலைத்திருங்கள்" (வசனம் 1) வேதாகமத்தில் உள்ள வேறு எந்த வசனமும் இதைவிட அதிகமான இதமும் பிரியமும் நிறைந்ததாக இருப்பதில்லை:

- *"சகோதரரே" - இவர்கள் பவுலின் சகோதரர்களும் சகோதரிகளுமாக இருந்தனர். இவர்கள் யாவரும் ஒரே குடும்பத்தில், எல்லாரும் ஒரே பிதாவைக் கொண்டவர்களாக இருந்தனர்.*
- *"பிரியமும்" - இவர்கள் பவுலுக்குப் பிரியமான சகோதர சகோதரிகளாக இருந்தனர். "பிரியமும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை (agapetos என்ற வார்த்தையின் ஒரு வடிவம்) "அன்பு" என்பதற்கான பின்வரும் விசேஷித்த வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: தேவன் தமது குமாரனைக் குறிப்பிட இவ்வார்த்தையைப் பயன்படுத்தினார் (மத்தேயு 3:17). பவுல் இந்த சகோதரர்களை எவ்வளவாக அன்புகூர்ந்தார் என்பதை வலியுறுத்துவதற்காக இந்தச் சொற்றொடரை [இவ்வசனத்தில்] இருமுறை பயன்படுத்தினார்.*
- *"வாஞ்சையுமான" - இவர்கள் அவர் காண்பதற்கு வாஞ்சை கொண்டிருந்த, பிரியமான சகோதர சகோதரிகளாக இருந்தனர். இந்தச் சொற்றொடருக்கான கிரேக்க வார்த்தை (epipothetos என்ற வார்த்தையின் ஒரு வடிவம்), எப்பாப்பிரோதீத்து இல்லம் திரும்பக் கொண்டிருந்த ஏக்கத்தை விவரிக்கப் பயன்படுத்தப் பட்டது (பிலிப்பியர் 2:26). பவுல் பிலிப்பி நகரில் இருந்த தமது சிநேகிதர்களைக் காண "வீட்டைப் பற்றிய ஏக்கம்" கொண்டிருந்தார்.*
- *"எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமானவர்களே" - அவர்கள் அவருக்கு வாஞ்சையும் பிரியமுமான மற்றும் அவரது இருதயத்தில் பெருமிதம் ஆகியவற்றைக் கொண்டிருக்கக் காரணமாயினர்: அவர்கள் அவரது "சந்தோஷமாக" இருந்தனர். அவர், அவர்களைப்பற்றி நினைத்துப் பார்த்ததே அவருக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது (காண்க 1:3, 4). அவர்கள் அவரது "கிரீடமாகவும்" இருந்தனர்: அவர்களைப் பற்றி அவர், தமது வாழ்வின் முடிசூடும் சாதனையென்று நினைத்தார். இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள (stephanos என்ற) கிரேக்க வார்த்தையானது வெற்றி மற்றும் கொண்டாட்டம் ஆகியவற்றின் கிரீடத்தைக் குறிக்கிறது. (ஆளுகை செய்யச் சூட்டப்படும் கிரீடத்தை குறிப்பதற்கு diadem என்ற வேறொரு கிரேக்க வார்த்தை உள்ளது.)*

ஒப்புரவாக்கப் படவேண்டிய நிலையில் உள்ள இரு கிறிஸ்தவர்களுக்கு நீங்கள் உதவ விரும்புகிறீர்களா? அவர்களின் குறைபாடுகளைச் சுட்டிக்காண்பிப்பதைக் கொண்டு அதைத் தொடங்க வேண்டாம். அவர்கள் மீது நீங்கள் அக்கறையாக இருப்பதை, உண்மையிலேயே அக்கறையாக இருப்பதை உறுதிப்படுத்துவதைக் கொண்டு தொடங்குங்கள். நீங்கள் அவர்களின் மனவிருப்பங்கள் மீது செல்வாக்குச் செலுத்தக் கூடுவதற்கு முன்னர், நீங்கள் அவர்களின் இருதயங்களைத் தொட வேண்டும்.

உணர்வுப்பூர்வமான எதிர்கொள்ளுதல் (4:2, 3)

பிலிப்பி நகரில் இருந்த சபை, பவுலின் கிரீடமாக - வெற்றிக்காகச் சூட்டப்படும் லாரல் இலைகளால் செய்யப்பட்ட தழை வளையமாக -இருந்தது, ஆனால் அந்தக் கிரீடத்தில் ஒரு "முள்" இருந்தது:[3] இரண்டு சகோதரிகள்

தீவிரமான கருத்து வேறுபாட்டைக் கொண்டிருந்தனர். அந்தப் பிரச்சனையை அப்போஸ்தலர் தமது வழக்கமான அறிவுரை புகட்டும் பாங்குடன் எடுத்துரைத்தார்: "கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும்[4] சிந்திகேயாளுக்கும் புத்திசொல்லுகிறேன்" (வசனம் 2). "சிந்திகேயாள்" என்பது "அதிர்ஷ்டமுள்ள" என்று அர்த்தப்படக் கூடுகையில், "எயோதியாள்" என்பது "வளமுள்ள" என்று அர்த்தப்படக் கூடும். *துரதிர்ஷ்டவசமாக* அவர்கள் அந்த வேளையில் ஆவிக்குரிய நிலையில் *நொடித்த நிலையில்* இருந்தனர். மேலும், "சிந்திகேயாள்" என்பது "நட்பான" என்பதையும் அர்த்தப்படுத்தக் கூடியதாக இருக்கையில், "எயோதியாள்" என்பது "இனிய நறுமணம்" என்றும் அர்த்தப்படுவதாகவும் இருந்தது. இருப்பினும் அந்த வேளையில் அவர்கள் நட்பு என்பதைத் தவிர வேறு எந்த நிலைமையிலாவது இருந்தனர்; அவர்கள் பிரிவினை என்ற பிரியமற்ற வாசனையைப் பரப்பிக் கொண்டு இருந்தனர்.

பிரச்சனையை எதிர்கொள்ளுதல் என்பது பவுல் செய்த இரண்டாவது விஷயமாக இருந்தது. பொதுவாக, அந்நியப்பட்டு இருக்கும் நண்பர்களின் தோள்களின் மீது உங்கள் கைகளைப் போட்டு, நீங்கள் அவர்களை நேசிக்கிறீர்கள் என்பதைக் கூறுதல் மாத்திரமே போதுமானதாக இருப்பதில்லை. அவர்களின் வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்ளும்படி அவர்களை நீங்கள் ஊக்குவிக்க வேண்டும்.

நேர்மறைப் பக்கம் மீதான விஷயம்

எயோதியாளும் சிந்திகேயாளும் யார்? நமக்குத் தெரியாது. (சிலர் பிலிப்பி நகரின் சபையில் இருந்த - யூதத்துவ மற்றும் புறஜாதி என்ற - இரு பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய இருபெண்களை அடையாளம் காண முயற்சி செய்திருக்கின்றனர், ஆனால் இரு தனிநபர்களே இணங்கிச் செல்ல முடியாதவர்களாக இருந்தனர் என்று நம்ப மறுக்க எந்தக் காரணமும் இல்லை.) நேர்மறைப் பக்கத்தில், அவர்களைப் பற்றி நாம் பின்வருவதை அறிகிறோம்: இந்தப் பெண்கள் "சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள்"[5] என்று இவர்களைப் பற்றிப் பவுல் மென்மையாகப் பேசினார் (வசனம் 3ஆ). "என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள்" என்பது (*sunethlesan moi* என்ற) இரண்டு கிரேக்க வார்த்தைகளில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது "என்னுடன் பிரயாசப்பட்டனர்" என்று அர்த்தப்படுகிறது. சிலர் இதை வாசித்து, இந்தப் பெண்கள் பவுலுக்குப் பின்னால் வெளியரங்கமாகப் பிரசங்கித்திருந்தனர் என்ற முடிக்கு வருகின்றனர். இது பெண்கள் பொதுவான ஆராதனை ஊழியங்களில் பெண்கள் மௌனமாயிருக்க வேண்டும் என்று மற்ற இடங்களில் இந்த அப்போஸ்தலர் எழுதியுள்ளவற்றிற்கு நேர்மாறானதாக இருக்கும் (1 கொரிந்தியர் 14:34, 35; காண்க 1 தீமோத்தேயு 2:8-12).

எயோதியாள் மற்றும் சிந்திகேயாள் ஆகியோர், "சுவிசேஷ விஷயத்தில் பவுலின் பிரயாசங்களில்" பிரசங்கித்தல் தவிர மற்ற பல வழிகளில் "பங்கேற்று" இருக்கக் கூடும். 1ம் அதிகாரத்தில் பவுல் பிலிப்பியர்களைப் பற்றி, "*சுவிசேஷம்* உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள்முதல் இதுவரைக்கும் *நீங்கள் அதற்கு* [பங்கேற்பதில்] *உடன்பட்டவர்களானபடியால்*" என்று பேசினார் (வசனம் 5; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இந்தக் குறிப்பு அவர்கள் பவுலுக்கு நிதியுதவி

ஆதரவு அளித்ததைப் பற்றியதாக உள்ளது, இது அவருடன் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தலைக் குறிப்பிடவில்லை. அதே அதிகாரத்தில், பவுல் பிலிப்பி நகரின் சபையில் இருந்த எல்லா உறுப்பினர்களையும், "ஒரே ஆத்துமாவினாலே *சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி*" உறுதியாக நிலைநிற்கும்படி வேண்டிக்கொண்டார் (வசனம் 27; என்னால் வலியுறுத்தப்படுகிறது). சபைக்குழுமத்தில் உள்ள ஒவ்வொருவரும் வெளியரங்கமாகச் சுவிசேஷத்தை அறிவிப்பவர்களாக வேண்டும் என்று எவரொருவரும் முடிவுசெய்ய மாட்டார்கள் என்பது நிச்சயமாகும். (எல்லா மனிதர்களும் பிரசங்கிக்கும் தாலந்தைக் கொண்டிருப்பது இல்லை.)

பிரசங்கம் செய்யாதிருந்தும் சுவிசேஷத்தினிமித்தம் பிரசங்கியார்களின் போராட்டங்களில் பங்கேற்ற பெண்களைப் பற்றிப் பிரசங்கியார்கள் பாசத்துடன் பேசமுடியும். நான் எனது தாய் மற்றும் எனது மனைவி ஆகியோரைப் பற்றிப் பேசத்தொடங்கி பின்பு என்னை ஊக்குவித்து எனக்குப் பல வழிகளில் உதவிய பெண்களின் படையொன்றின் பட்டியலுக்கு அதை விரிவாக்க முடியும்.

பெண்கள் பிரசங்க மேடைகளில் நிற்பதைத் தவிர - அதிகமாகத் தனிப்பட்ட அமைவுகளில் போதித்தல் உட்பட - பல வழிகளில் சுவிசேஷத்தைப் பரப்ப முடியும் (காண்க தீத்து 2:3-5; நடபடிகள் 18:26). பிலிப்பி நகரில் இருந்த சபையின் தொடக்கத்தில் இருந்தே, அங்கு பெண்கள் முக்கியமான பணிப்பொறுப்பை ஏற்று நடத்தியிருந்தனர். அங்கு ஒரு பெண்ணும் அவளின் வீட்டாரும் தான் முதன் முதலாக மனம் மாறினார்கள் (நடபடிகள் 16:13-15). (லீதியாள் என்னும்) அந்தப் பெண் உடனடியாகப் பவுலுக்கும் அவரது உடன் ஊழியர்களுக்கும் தன் வீட்டைத் திறந்து கொடுத்தாள். அது சபை கூடிவரும் இடமாயிற்று (நடபடிகள் 16:40). அவளது உதாரணம் சபைக்குள் இருந்த மற்றபெண்கள் கர்த்தருடைய ஊழியத்தில் ஈடுபட ஏவியிருந்தது என்பதில் சந்தேகம் இல்லை.

எயோதியாள் மற்றும் சிந்திகேயாள் ஆகியோருடைய பெயர்கள், ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புத்தகத்தில் (வசனம் 3; வெளிப்படுத்தின விசேஷம் 21:27). இருந்தன என்பது இவர்களைப் பற்றி நமது வேதபாட வசனப் பகுதியில் தரப்பட்டுள்ள இன்னொரு நேர்மறையான உண்மையாக உள்ளது. பவுல் தமது பிரயாசத்தில் இந்த இரு பெண்களும் பங்கேற்று இருந்ததைப் பற்றிப் பேசியபோது, அது அவருடன் பிரயாசப்பட்டிருந்த மற்றவர்களையும் அவர் நினைக்கும்படி செய்தது. இவ்வாறாக அவர், "கிலேமெந்தோடும்" என்ற வார்த்தைகளைக் கூடுதலாகக் கூறினார் (பிலிப்பியர் 4:3இ). இந்த "கிலேமெந்து" என்பவர், தொடக்ககாலத்து ஏவுதல் பெற்றிராத பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டிருந்தவரும், ரோமாபுரியில் நன்கு அறியப்பட்டிருந்தவருமான கிலேமெந்தாக இருந்தார் என்று சிலர் அடையாளப் படுத்தியுள்ளனர், ஆனால் இதற்கு வரலாற்றுப் பூர்வமான ஆதாரம் எதுவும் இல்லை. இந்த கிலேமெந்து அனேகமாக, பிலிப்பி நகரின் சபையில் இருந்தவரும் பவுலுக்கு உதவி செய்திருந்தவருமாக இருக்க வேண்டும்.

கிலெமெந்து பற்றிக் குறிப்பிட்டது, அப்போஸ்தலரைத் தேவனுக்கு உண்மையான ஊழியக்காரர்களாக இருந்த மற்றவர்களைப் பற்றி நினைவூட்டியது. யாரேனும் சிலரைக் குறிப்பிடாது விட்டுவிடும் இடர்ப்பாட்டிற்கு மாறாகப் பவுல் பின்வரும் சொற்றொடரை உள்ளடக்கினார்: "மற்ற என் உடன்வேலையாட்களோடுங்கூடச் சுவிசேஷ விஷயத்தில்

என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது" (வசனம் 3ஈ). "ஜீவபுத்தகம்" என்பது விசுவாசம் நிறைந்தவர்கள் பற்றிய பரலோகத்தின் பதிவேடாகும் (காண்க லூக்கா 10:20). பவுல் தமது சிந்தையில் யாருடைய பெயர்களைக் கொண்டிருந்தார் என்பதை நீங்களும் நானும் அறியாதிருக்கலாம், ஆனால் அதைக் கர்த்தர் அறிந்திருக்கிறார். அவர்களின் பெயர்கள் அவருடைய "புத்தகத்தில்" உள்ளன!

எயோதியாள் மற்றும் சிந்திகேயாள் ஆகியோரின் பெயர்கள், பரலோகத்தில் பட்டியல் இடப்பட்டுள்ளவர்களின் பெயர்களின் மத்தியில் இருந்தன என்பதே மறைமுகமான கருத்தாக உள்ளது. இது இவ்விரு சகோதரிகளும் தங்கள் வேறுபாட்டைத் தீர்த்துவைத்துக் கொள்வதில் பன்முனை ஊக்குவிப்பை அளித்திருக்க வேண்டும்: (1) ஜீவபுத்தகத்தில் தங்கள் பெயர்கள் எழுதப்பட்டிருந்தவர்களுடன் ஒப்பிட்டு நோக்குகையில், அவர்களின் சொந்தப் பிரச்சனைகள் அற்பமானவையாக இருந்திருக்கும். (2) அவர்கள் இருவருமே, இசைவிணக்கம் மேலோங்கியிருக்கும் பரலோகத்தைத் தலைமை யகமாகக் கொண்டிருந்தபடியால், பூமியில் ஏன் அவர்கள் இணங்கிப் போக முடியாது? (3) அவர்கள் தங்கள் பெயர்கள் "நிரந்தரமான மையில் எழுதப்பட்டு" இருக்கவில்லை என்பதை அறிந்திருக்க வேண்டும்; அவர்கள் பவுலின் கட்டளைகளைப் பின்பற்றாது இருந்தால், அவர்களின் பெயர்கள் ஜீவ புத்தகத்தில் இருந்து "அழிக்கப்பட" முடியும் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 3:5).

எதிர்மறைப் பக்கம் மீதான விஷயம்

எயோதியாளும் சிந்திகேயாளும் தங்கள் வாழ்விற்கு நேர்மறையான பக்கம் ஒன்றைக் கொண்டிருந்தனர்; ஆனால் அவர்கள் இணங்கிப்போக இயலாது இருந்ததே அவர்கள் நினைவுகூரப்பட்டதற்குக் காரணமாக இருந்தது என்பது கவலைக்குரியதாகும். அவர்களுடைய வாழ்வின் அந்த அம்சமானது, அவர்கள் செய்திருந்த நன்மை எல்லாவற்றையும் நீக்குவதாக அச்சுறுத்தியது. நான் என்னை அவர்களின் இடத்தில் வைக்க முயற்சி செய்திருக்கிறேன். அவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள நிருபமானது முழு சபைக் குழுமத்திற்கும் (பிலிப்பியர் 1:1) வெளியரங்கமாக வாசிக்கப்படுதலைக் கோள்விப்படுதல் [அதாவது வாசிக்கக் கேட்டல்] என்பது எவ்வளவு சிறுமைக்குரிய விஷயமாக இருந்திருக்கும்! உலகம் முழுவதிலும் மக்கள் அவர்களின் பிரச்சனை பற்றி இன்னமும் வாசித்துக் கொண்டிருக்கின்றனர் என்பது அவர்களைச் சங்கடப்படுத்தும் என்று நீங்கள் நினைப்பதில்லையா? அவர்களின் இக்கட்டான நிலையானது, "எனது வாழ்வைப் பற்றி எழுதப்பட்ட ஒரு வரி - இப்போது இருந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னாலும் வாசிக்கப்படும் ஒரு வரி - இருந்தால் எப்படி இருக்கும்? அந்த ஒரு வரி என்னவாக இருக்கும்?" என்று நான் கேட்கக் காரணமாகி உள்ளது. "அவர் [ரோப்பர்] மற்றவர்களுடன் இணங்கிப்போக இயலாதவராக இருந்தார்" என்று அந்த வரி கூறவேண்டி இருந்தால், அது எவ்வளவு கவலைக்குரியதாக இருக்கும்!

பவுல் இந்த இரு பெண்களைப் பற்றியும் அவர்களின் கருத்து வேறுபாட்டைப் பற்றியும் இவ்வளவு குறிப்பாக இருந்தது ஏன்? அவரது முந்திய உடன் வேலையாட்களைச் சங்கடப்படுத்துதல் என்பது அவரது

நோக்கமாக இருந்திராது என்பது நிச்சயம். சபையின் இரு உறுப்பினர்களுக்கு இடையிலான அந்த இடர்பாடு இன்னும் இருவருக்கும் ... பின்பு இன்னும் நால்வருக்கு ... மற்றும் முழு சபையையும் பாதிக்கும் வரையிலும் பரவக்கூடும் என்று அறிந்திருந்ததால் அவர் இதைச் செய்தார். இவ்வாறு நடைபெறுவதை நான் கண்டிருக்கிறேன், ஒருவேளை நீங்களும் கண்டிருக்கலாம். இரண்டு கிறிஸ்தவர்களுக்கு இடையிலான பிரச்சனையானது பெருகுவதற்கு முன்பாக, அது உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டும்.

எயோதியாளும் சிந்திகேயாளும் எதைப்பற்றிக் கருத்து வேறுபாடு கொண்டிருந்தனர்? அது ஏறக்குறைய நிச்சயமாகவே, உபதேச விஷயமாக இருக்கவில்லை என்பது நிச்சயம். சில எழுத்தாளர்கள், பிலிப்பியர் 4:2, 3ஐ உபதேச விஷயங்களில் சமரசத்தைப் போதிக்கப்பயன்படுத்துகின்றனர், ஆனால் பவுல் பிலிப்பியர்களுக்கு "ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு" (2:14) இருக்கும்படி கட்டளையிட்டிருந்தார். பவுல் உபதேச விஷயத்தைப் பற்றிப் பேசியபோது, பொதுவாகவே அவர், அந்தப் பிரச்சனை என்ன என்பதையும் (காண்க ரோமர் 6:1, 2), தனிநபர்கள் எவ்விதமாகத் தவறு செய்தனர் என்பதையும் (காண்க 2 தீமோத்தேயு 2:18) குறிப்பிட்டார். இல்லை, எயோதியாளும் சிந்திகேயாளும் அனேகமாக, ஆளுமைத்தன்மைகளின் மோதல் ஒன்றைக் கொண்டிருக்கலாம். கர்த்தருக்கு வைராக்கியமாக ஊழியம் செய்பவர்கள் அடிக்கடி, விஷயங்கள் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பது குறித்துப் பலமான கருத்துக்களைக் கொண்டுள்ளனர். அப்படிப்பட்ட இரண்டு ஊழியக்காரர்களை ஒன்றாக வைக்கும்போது அவர்களின் கருத்து வேறுபாடுகள் தவிர்க்க இயலாதவையாக உள்ளன. பிரசங்கித்தலில் எனது ஐம்பதுக்கும் அதிகமான ஆண்டுகளின் அனுபவத்தில், சபையில் சச்சரவுகளை நான் (மிகவும்) அதிகமாகக் கண்டிருக்கிறேன். உபதேசம் மீதான கருத்து வேறுபாடு ஒவ்வொன்றிற்கும், ஒரு நூறு கருத்து வேறுபாடுகள் இருந்துள்ளது.

திருப்தியான இணக்கப் படுத்துதல் (4:2, 3)

பிலிப்பி நகரில் இருந்த இரு சகோதரிகளுக்கு இடையிலான பிரச்சனை பற்றிப் பொதுவாக நாம் பேசியிருக்கிறோம். வலிவார்ந்த வகையில் வெடிக்கக் கூடிய ஒரு சூழ்நிலையைப் பவுல் எவ்வாறு கையாண்டார் என்பதைப் பற்றி அதிக நெருக்கமாக ஆராயும் வேளை வந்துள்ளது. அவர் ஒரு பாராட்டுரையுடன் தொடங்கினார் என்றும் இவ்விரு சகோதரிகளை எதிர்த்து நிற்க அவர் தயங்கவில்லை என்றும் ஏற்கனவே நாம் குறிப்பிட்டோம். நாம் அந்தச் சிந்தனைகளுடன் இன்னும் சிலவற்றைக் கூட்டுவோமாக.

அவர் - உடனடியாக - சிலவற்றைச் செய்தார்.

பவுல் *சிலவற்றைச்* செய்தார். அவர், அந்தச் சூழ்நிலையானது தானாகவே கடந்து சென்று விடும் என்று நம்பி, அதைக் காணாது விடவில்லை. ஒரு பிரச்சனை இருந்தது என்று அறிந்த உடனே அவர் சிலவற்றைச் செய்தார் என்பது உறுதி. சபைக்குழுமம் முழுவதும் பிரிந்து நிற்கும் வரையில் காத்திருக்கவில்லை.

அவர் நடுநிலையில் நிலைத்திருந்தார் - ஆனால் அக்கறை கொண்டிருந்தார்.

அவர் இவ்விரு பெண்களில் யார் சார்பாகவும் இருக்கவில்லை. அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர் ஒரேவித வார்த்தையைப் பயன்படுத்தினார்: "... எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்திசொல்லுகிறேன்." இந்த சந்தர்ப்பப் பொருளில், "புத்திசொல்லுகிறேன்" (Gk.: *parakalo*) என்பது "அருகே அழைத்தல்," "கெஞ்சுதல், அறிவுரைகூறுதல், வேண்டுகோள் விடுத்தல், மன்றாடிக் கேட்டல்" என்று அர்த்தப்படுகிறது.[6]

இவ்விரு பெண்களில் ஒருவர் மற்றவரைக் காட்டிலும், இந்தச் சச்சரவுக்காக அதிகம் குற்றம் சாட்டப்பட வேண்டியவராக இருந்திருக்கச் சாத்தியச்கூறு உள்ளது; அதுவே அடிக்கடி உள்ள விஷயமாக இருக்கிறது. இருந்தபோதிலும், இவ்விருவருமே ஓரளவிற்குத் தவறானவர்களாக இருந்தனர். எனது சகோதரர் காய் என்பவரும் நானும் சிறுபையன்களாக இருந்த போது, சிலவேளைகளில் (அண்ணன் தம்பிகள் செய்வது போன்றே) நாங்கள் சண்டையிட்டுக் கொள்வது உண்டு. எனது தாய் அந்தக் காட்சியைக் காணவரும்போது (இதை அவர்கள் எப்போதுமே செய்தார்கள்), நாங்கள் இருவரும் "ஆனால் *அவன்தான்* இதைத் தொடங்கினான்!" என்று மறுப்புரை கூறுவது உண்டு. எங்கள் தாய், எங்களில் யார் அதிகம் தவறு செய்தது என்று தீர்மானிக்க முயற்சி செய்ய மாட்டார்கள். அவர்கள், "*இரண்டு பேரும்* சேர்ந்தால் கலகம் உண்டாகிறது" என்று மாத்திரம் கூறுவார்கள் - நாங்கள் இருவருமே அதன் விளைவுகளை அனுபவிப்போம்.

இரு கிறிஸ்தவர்கள் சச்சரவு செய்யும்போது, ஒப்புரவு ஆவதற்கு அவர்கள் *ஒவ்வொருவருமே* முதல் அடிவைப்பை எடுத்து வைக்க வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது. தனக்குத் தவறு இழைக்கப்பட்டுள்ளதாக நினைப்பவர், தவறிழைத்த தமது சகோதரரிடத்தில் செல்ல வேண்டும் என்று கட்டளையிடப் பட்டுள்ளார் (மத்தேயு 18:15).[7] தவறு செய்திருப்பதாகக் குற்றம் சாட்டப்படுபவரும் தமது சகோதரரிடம் செல்லும்படி கட்டளையிடப்பட்டுள்ளார் (மத்தேயு 5:23, 24). இந்த இருவரில் எவரும், "அவர் *என்னிடத்திற்கு* வரட்டும்" என்று கூற உரிமை கொண்டிருப்பதில்லை.

அவர் ஒருமைப்பாட்டை - பலமாக - வலியுறுத்தினார்.

வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்வதன் முக்கியத்துவத்தைப் பவுல் வலியுறுத்தினார். அந்த இரு பெண்களும் "இசைவிணக்கத்தில் வாழ" வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார். இசைவிணக்கத்துடன் பாடும் குரல்களைக் கேட்பது எவ்வளவு இனிமையாக உள்ளது மற்றும் பொருந்தாத குரல்களைக் கேட்பது எவ்வளவு இனிமையற்றதாக உள்ளது! "இசைவிணக்கமாக வாழுதல்" [இது தமிழில் "ஒரே சிந்தையாயிருக்க" என்றுள்ளது (வசனம் 2அ)] என்பது "சிந்திக்க" (*phronein*) மற்றும் "ஒரே [விஷயம்]" (*to auto*) என்று அர்த்தப்படும் இரு வார்த்தைகளில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதே போன்ற சொற்றொடர் ஒன்று, 2:2ம் வசனத்தில், "ஏக சிந்தையும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "இசைவிணக்கத்துடன் வாழுதல்" என்பது 4:1-9ல் உள்ள பவுலின் பெரும்பான்மையான அறிவுறுத்துதல்கள் போலவே கட்டளை மனப்பான்மையில் உள்ளது. இசைவிணக்கத்துடன் ஒன்றுகூடி வாழுதல் என்பது

கிறிஸ்தவர்களுக்கு விருப்பத் தேர்வாக இருப்பது இல்லை; அவ்வாறு செய்யும்படி தேவன் நமக்குக் கட்டளை இட்டுள்ளார்!

சிலவேளைகளில் கிறிஸ்தவர்கள், தங்களின் தவறான புரிந்து கொள்ளுதல்கள் [சச்சரவுகள்] "யாரும் தலையிடக்கூடாதவை" என்று நினைக்கின்றனர் - ஆனால் சபைக்குழுமத்திற்குள் ஏற்படும் சச்சரவு என்பது ஒவ்வொரு உறுப்பினரும் தலையிட வேண்டியதாக உள்ளது. கருத்து வேறுபாடுகள் கருத்து வேறுபட்டு இருப்பவர்களைப் பாதிப்பதோடு நின்று விடுவதில்லை, அவைகள் சபையைக் குறித்த ஒரு மோசமான மனப்பதிவை மற்றவர்களுக்குக் கொடுக்கின்றன (காண்க 1 கொரிந்தியர் 1:13) மற்றும் அவைகள் அவிசுவாசிகளை சபையை விட்டுப் புறம்பே துரத்தி விடுகின்றன (காண்க யோவான் 17:21, 23). நாம் ஒருவர் மற்றவருடன் சமாதானமாக வாழ வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார் (காண்க மாற்கு 9:50). "இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?" (சங்கீதம் 133:1). "சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல்" (நீதிமொழிகள் 6:19) என்பது கர்த்தர் வெறுக்கும் விஷயங்களில் ஒன்றாக உள்ளது.

அவர் - ஏற்புடைய வகையில் - அவர்களுக்கு நினைவூட்டினார்.

பவுல், அந்த இரு பெண்களும் "கர்த்தருக்குள்" இருப்பதை அவர்களுக்கு நினைவூட்டினார். "கர்த்தருக்குள்" என்பது (அல்லது அதற்குச் சமமானது), இந்த அப்போஸ்தலரினால் பயன்படுத்தப்பட்ட மிகப்பிரியமான சொல்விளக்கமாக இருந்தது (காண்க பிலிப்பியர் 4:1, 2, 4). எயோதியாளும் சிந்திகேயாளும் "கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம்" பெற்றிருந்தனர் (ரோமர் 6:3; காண்க கலாத்தியர் 3:27). அவர்கள் "கிறிஸ்து இயேசுவுக்குள்" தேவனுடைய பிள்ளைகளாக இருந்தனர் (காண்க கலாத்தியர் 3:26). அவர்கள் "கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும்" மகிழ்வுடன் அனுபவித்தனர் (எபேசியர் 1:3). அவர்கள் "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவனுடைய அன்பினால்" சூழப்பட்டு இருந்தனர் (ரோமர் 8:39). நமது தற்போதய படிப்பைப் பொறுத்த மட்டில், அவர்கள் "கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாக" இருந்தனர் (ரோமர் 12:5). ஆகையால் அவர்கள் "கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாக" இருக்க வேண்டி இருந்தனர் (கலாத்தியர் 3:28). "கிறிஸ்துவுக்குள்" இருத்தல் என்பது அவர்களுக்கு ஒன்று கூடுவதற்குப் பொதுவான களத்தைக் கொடுத்தது. அதன்படியே அவர்கள், சிலுவையின் அடியில் நின்று தங்களுக்காக மரித்திருந்த ஒருவரின் முகத்தை ஏறிட்டுக் கண்ணோக்கும்போது, அவர்கள் ஒருவருக்கு ஒருவர் விரோதத்துடன் கண்ணோக்குவதற்குப் பதிலாக, துதியில் கரங்களை இணைக்க வேண்டி இருந்தது!

அவர் உதவியை - தகுந்த உதவியை - அளித்தார்.

கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்த முயற்சியிலேயே வேறுபாடுகளைக் களையச் செயல்பட வேண்டும், ஆனால் சிலவேளைகளில் மோதலைத் தீர்த்துக் கொள்வதில் அவர்களுக்கு உதவி தேவைப்படுகிறது. எயோதியாள் மற்றும் சிந்திகேயாள் ஆகியோரிடத்தில் இதுவே விஷயமாக இருந்தது என்று பவுல் நினைத்தார் என்பது உறுதி. அவர் ரோமாபுரியில் இருந்து கொண்டு, அவர்களின் பிரச்சனையை ஆராய்ந்து வகைப்படுத்த முயற்சி மேற்கொள்ளவில்லை. அதற்குப்

பதிலாக அவர், பிலிப்பியில் தமக்கு நம்பிக்கையாக இருந்த ஒரு நண்பரிடத்தில், அவர்களுக்கு "உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று கேட்டுக் கொண்டார் (வசனம் 3அ). "கூட்டாளி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (Gk.: *suzuge* என்ற) வார்த்தையானது, "நுகம்" என்று அர்த்தப்படும் *zugos* என்ற வார்த்தைக்கு முன்னதாக, *sun* அதாவது "உடன்" என்ற முன்னிடைச் சொல் சேர்ந்த வார்த்தையாக உள்ளது. இது "நுகத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஒருவர்" என்று அர்த்தப்படுகிறது (காண்க KJV; NIV; ASV; RSV).[8] இது "partner" (CEV; TEV) என்றும், "comrade" (Williams) என்றும்அல்லது இதைப் போன்றும் மொழிபெயர்க்கப்பட்டும் உள்ளது.

"நுகத்தில் இணைக்கப்பட்டிருந்த இந்த நபர்" யார் என்று யூகிப்பதில், அதிகமான காலமும் தாளும் வீணாக்கப்பட்டுள்ளது.[9] சிலர் *sun* மற்றும் *zugos* என்ற இருசொற்களையும் ஒன்றிணைத்து Synzygos என்ற ஒரு உரிப்பெயராக்கி இருக்கின்றனர் (CJB மொழிபெயர்ப்பில் காணவும்). பவுல், பிலேமோனுக்கு எழுதிய நிருபத்தில் போன்றே இங்கும் வார்த்தைகளின் மீதான ஒரு விளையாட்டைப் பயன்படுத்தினார் என்ற கருத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது (வசனம் 11). இது செயல்விளைவில் பவுல், "சின்சிகோஸே, நீ உன் பெயருக்கு ஏற்றாற்போல் வாழ்வாயாக" என்று கூறுவதாக்கும். இருப்பினும் இந்த "பெயர்" பழங்கால இலக்கியம் எதிலும் எவ்விடத்திலும் காணப்படுவதில்லை. பவுல் தமது நண்பரைப் பெயர் கூறி அழைக்கவில்லை என்று யூகித்தலானது சற்றே வினோதமாக இருக்கலாம், ஆனால் இந்த அப்போஸ்தலர் இந்த ஒரு இடத்தில் மாத்திரம், முக்கியமான தனிநபர்களுக்குப் பெயர் கூறி அழைக்காது இருந்தார் என்று கூற இயலாது (காண்க 2 கொரிந்தியர் 8:18, 23). அலெக் மொட்யெர் என்பவர் பின்வரும் ஆர்வத்திற்குரிய கருத்தைக் கூறினார்: "உண்மையான கூட்டாளி பெயர்குறிப்பிடாமல் விடப்பட்டுள்ளார்," எனவே நாம் "பிரிவினை குறித்து எப்போதும் எச்சரிக்கையாக இருந்து, பின்பு சபையின் ஐக்கியத்தில் ஒருமைப்பாடின்மை என்ற புற்றுநோயைக் குணமாக்க" கூடியவர்களாக இருக்கும்படிக்கு, "இங்கு ... நாம் நமது சொந்தப் பெயர்களை இட்டுக்கொள்ளலாம்."[10]

இந்த மனிதர் யார் என்று நாம் அறிவதில்லை, ஆனால் அவர் இப்படிப்பட்ட விஷயங்களில் அனுபவம் கொண்டிருந்தார் என்பதில் சந்தேகம் இல்லை. இப்போது பவுல் இந்த சூழ்நிலையில் இசைவிணக்கம் கொண்டுவர இந்த நபரால் முடியும் என்று எண்ணினார். ஒருசில பணிப்பொறுப்புகள் கடினமானவையாக உள்ளன; ஒருசில பணிப்பொறுப்புகள் அதிக முக்கியமானவையாக உள்ளன.

முடிவுரை

வலிவார்ந்த பல சத்தியங்கள் இந்தப் படிப்பில் போதிக்கப்பட்டுள்ளன. குறைந்தபட்சமாகப் பின்வரும் நான்கு சத்தியங்களையாவது நீங்கள் நினைவில் வைத்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்:

- கர்த்தர் தமது மக்கள் இசைவிணக்கத்துடன் ஒன்றுகூடி வாழ வேண்டும் என்று விரும்புகிறார்.
- சபையானது மக்களைக் கொண்டதாக இருப்பதால், கருத்து வேறுபாடுகள் எழுவது தவிர்க்க இயலாதது என்பது துரதிர்ஷ்டவசமானது. "Peanuts"

என்ற சித்திரப்படம் ஒன்றில், லீனஸ் என்று பெயரிடப்பட்ட ஒரு இளம் நடிகன், "நான் மனிதகுலத்தை நேசிக்கிறேன்; ஆனால் அதன் மக்களை என்னால் சகித்து நிற்க இயலாது" என்று கூறினான். சபையில் சிலர் இதைத்தழுவி, "நான் சகோதரத்துவத்தை நேசிக்கிறேன், ஆனால் சகோதரனைத்தான் என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை" என்கின்றனர். சில வேளைகளில் நல்ல கிறிஸ்தவர்களும் கூட, தாங்கள் இருக்க வேண்டிய பிரகாரம் இணங்கி இருப்பதில்லை.

- பிரிவினை எழுகிறபோது, அதைக் கையாள்வதற்குச் சரியான வழியும் தவறான வழியும் உள்ளன. நாம் கூறுகிற மற்றும் செய்கிற ஒவ்வொரு விஷயத்திலும், அன்பு, பொறுமை மற்றும் சுயநலமின்மை ஆகியவை மேலோங்கி இருக்க வேண்டும்.
- சபையின் இரு உறுப்பினர்களுக்கு இடையிலான சச்சரவு, அந்த சபைக்குழுமத்தின் மற்ற ஒவ்வொரு உறுப்பினரின் அக்கறைக்கு உரியதாக இருக்க வேண்டும். நாம் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்கப் பிரயாசப்பட வேண்டும் (மத்தேயு 5:9).

குறிப்புகள்

[1]இந்தத் தலைப்பு, பின்வரும் புத்தகத்தில் இருந்து தழுவப்பட்டது: Leon Barnes, *That You May Know Christ: Studies from Philippians* (Searcy, Ark.: Resource Publications, 1992), 139. [2]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary,* vol. 43, *Philippians,* ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 177. [3]J. Dwight Pentecost, *The Joy of Living: A Study of Philippians* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1973), 173. [4]KJV வேதாகமம் இந்தப் பெயருக்கான ("Euodias" என்ற) ஆண்பால் வடிவத்தைப் பயன்படுத்துகிறது, இது பவுல் ஒரு ஆணையும் பெண்ணையும், ஒருவேளை ஒரு மனிதருக்கும் அவரது மனைவிக்கும் இதை உரைத்து இருக்கலாம் என்று முடிவெடுக்கும்படி சிலரை வழிநடத்தியுள்ளது. இருப்பினும் மூல வசனத்தில் இந்தப் பெயரின் பெண்பால் வடிவமே உள்ளது. [5]"சுவிசேஷ விஷயத்தில்" என்பதற்குப் பதிலாக மூலமொழி வசனத்தில் "சுவிசேஷத்தில்" என்று மாத்திரம் உள்ளது. [6]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 303. [7]NASB வேதாகமத்தில், "உனது சகோதரன் பாவம் செய்தால்" என்று மாத்திரமே உள்ளது, ஆனால் இங்கு கூறப்படும் பாவம் என்பது இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவருக்கு எதிரானதாக இருக்கலாம் (KJV மற்றும் தமிழ் வேதாகமத்தில் காண்க). [8]விலங்குகள் நுகத்தில் ஒன்றாக இணைக்கப்படுதலைக் காண்பது சாதாரணமாக உள்ள இடத்தில் நீங்கள் வாழ்ந்து வந்தால், இந்த உருவகத்தின் தனிச்சிறப்பை நீங்கள் கலந்துரையாட முடியும். [9]லூக்கா, சீலா மற்றும் எப்பாப்பிரோதீத்து உட்படப் பலர் யூகம் செய்யப்பட்டுள்ளனர். ஆனால் இவை யாவும் யூகங்களாகவே உள்ளன. சிலர் இதை ஒரு பெண் என்று யூகிக்க முயற்சி செய்துள்ளனர், ஆனால் "கூட்டாளி" என்று மாற்றம் தரப்பட்டுள்ள பெயர் உரிச்சொல்லானது ஆண்பால் சொல்லாகவே உள்ளது. அறியப்படாத இந்த "தனிநபர்," இந்தப் பெண்களுக்கு [ஒன்றாயிருக்க] உதவிய சபைக்குழுமத்தின் எல்லா உறுப்பினர்களையும் குறித்து நின்றது என்று கூற முற்படுகின்றனர். இந்த நிருபத்தின் மற்ற எல்லா இடங்களிலும், பவுல் எல்லா உறுப்பினர்களையும் தமது சிந்தையில் வைத்து, ஒருமைச்சொல்லை அல்ல ஆனால் பன்மைச் சொல்லையே பயன்படுத்தி இருந்தார், எனவே இந்த யூகம் பொருத்த

மானதாகக் காணப்படுவதில்லை [10]Alec Motyer, *The Message of Philippians: Jesus Our Joy,* The Bible Speaks Today series, ed. John R. W. Stott (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1984), 204.

15

எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம்

(பிலிப்பியர் 4:4-7)

இடர்ப்பாடு மிகுந்த நமது உலகம் சமாதானத்தை நாடி ஏங்குகிறது. போரினால் சிதைக்கப்பட்ட நாடுகளில் வாழ்பவர்கள், தங்களைச் சுற்றிலும் உள்ள மரணத்தையும் அழிவையும் கண்ணோக்கி, சமாதானத்திற்காகக் கதறுகின்றனர். சிலர், போராட்டத்தினால் கிழித்துப் பிரிக்கப்பட்ட நாடுகளில், அயலகங்களில் அல்லது குடும்பங்களில் வாழ்கின்றனர், அவர்கள் சமாதானம் வேண்டுமென்று பெருமூச்சுடன் நாடி ஏங்குகின்றனர். மற்றவர்கள், சமாதானம் நிறைந்த சூழ்நிலைகளில் வாழுகின்றனர், ஆனால் அவர்கள் இருதயங்கள் பிரிவினை மற்றும் பெருவருத்தம் ஆகியவற்றினால் நிறைந்துள்ளன; அவர்கள் மனசமாதானத்திற்காக ஏங்குகின்றனர்.[1]

நாம் சமாதானம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். இயேசுவின் பிறப்பு, "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" என்பதைக் கொண்டு அறிவிக்கப்பட்டது (லூக்கா 2:14). கிறிஸ்து தமது மரணத்திற்கு முன்பு தமது சீஷர்களுடன் இருந்த கடைசி மணி வேளைகளில், அவர்களிடம் அவர் பின்வருமாறு கூறினார்:

> சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக (யோவான் 14:27).

> என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார் (யோவான் 16:33).

நாம் ஏன் சமாதானம் கொண்டிருப்பதில்லை? குறைந்த பட்சம் இரண்டு தடைகள் நிலவுகின்றன: முதலாவது, உண்மையான சமாதானம் என்றால் என்ன என்பதைப் பலர் புரிந்துகொள்வதில்லை; சமாதானம் பற்றிய அவர்களின் கருத்தானது அடிக்கடி, சமாதானம் நிறைந்த சூழ்நிலைகள் அல்லது போராட்டங்கள் இல்லாமை என்பதோடு எல்லைப்படுத்தப்படுகிறது. இரண்டாவது, உண்மையான, முழுமையும் திருப்திபடுத்துகிற மற்றும் நிலையாக நிற்கிற ஒரே சமாதானம் கர்த்தரிடத்தில் இருந்தே வருகிறது என்பதைப்

பெரும்பான்மையானவர்கள் புரிந்துகொள்வதில்லை.

இந்தப் பாடம் மற்றும் இதற்கு அடுத்த பாடம் ஆகியவற்றிற்கான வேத வசனப் பகுதிகளில் பவுல், தமது வாசகர்களுக்கு விரைவான வரிசையில் கடைசி அறிவுறுத்துதல்களைக் கொடுத்தார் (காண்க 4:8). பிலிப்பியர் 4:4-9 வசனப் பகுதியானது, வேதாகமத்தில் மிகவும் உயர்த்திப் பிடிக்கப்படுகிற வசனங்கள் சிலவற்றைக் கொண்டுள்ளது. சமாதானம் என்பது ஒரு திறவுகோல் தலைப்பாக உள்ளது: "அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (4:7); "அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்" (4:9ஆ). வார்ரென் W. வயர்ஸ்ப் என்பவர் பிலிப்பியர் 4ம் அதிகாரத்தை "புதிய ஏற்பாட்டின் 'சமாதான அதிகாரம்' " என்று அழைத்தார்.[2] இந்த எடுத்துரைப்பில் நாம், 4 முதல் 7வரையிலான வசனங்கள் மீது கவனம் செலுத்துவோம். நமது அடுத்த பாடத்தில் 8 மற்றும் 9 ஆகிய வசனங்களைப் பார்த்து முடிப்போம்.

கர்த்தருக்குள் சந்தோஷமாயிருத்தல் (4:4)

பவுல் பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்கினார்: *"கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்"* (வசனம் 4). அப்போஸ்தலர், சந்தோஷம் என்ற மீண்டும் மீண்டும் வரும் ஆய்வுக்கருத்திற்குத் திரும்பினார் (1:18; 2:17, 18, 28, 29; 3:1), ஆனால் இங்கு அவர் இன்னும் அதிக அழுத்தமாகக் கூறினார்: "கர்த்தருக்குள் *எப்பொழுதும்* சந்தோஷமாயிருங்கள்" (வசனம் 4அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). மூலமொழி வசனத்தில் நிகழ்கால வினைச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. "கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பதை - எப்போதும் - *காத்துக்கொள்ளுங்கள்!*" என்பது நேரடியான தரவழைப்பாக இருக்கும். பின்வரும் உரையாடலை நான் கற்பனை செய்ய முடிகிறது:

"உங்களைப்போன்று சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுத் தவறாக நடத்தப்படும்போது கூடவா?"

"ஆம்!"

"எங்களைப் போன்று துன்புறுத்தப்பட்டுத் தவறாக நடத்தப்படும்போது கூடவா?"

"ஆம்!"

ஒருவேளை, இப்படிப்பட்ட மறுப்புரைகளைப் பவுல் முன்னெதிர் நோக்கியிருந்ததாலேயே, அவர் தமது புத்திமதியைத் திரும்பவும் கூறினார் எனலாம்: "சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்!" (வசனம் 4ஆ). வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், "என்ன நடந்தாலும் சந்தோஷமாயிருங்கள்!"

அது எவ்வாறு சாத்தியமாகிறது? மீண்டும் ஒருமுறை, மூன்று வார்த்தைகள் (in the Lord) [தமிழில் ஒரு வார்த்தை] புறக்கணிக்கப்பட்டுவிடக் கூடாது: "கர்த்தருக்குள்." நாம் "வாழ்வின் சூழ்நிலைகளில்"[3] எப்போதுமே சந்தோஷமாயிருக்க இயலாது, ஆனால் நாம் "கர்த்தருக்குள்" எப்போதுமே சந்தோஷமாய் இருக்க இயலும். நாம் "கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றோம்"; இப்போது "கிறிஸ்துவுக்குள்" இருக்கும் நாம், நன்றி

நிறைந்தவர்களாக இருப்பதற்கு அதிகமானவற்றைப் பெற்றுக் கொண்டுள்ளோம் (ரோமர் 6:3, 4; கலாத்தியர் 3:26, 27; எபேசியர் 1:3)! ட்ரூமேன் ஸ்பிரிங் என்பவர், தாம் சந்தோஷமாயிருக்கக் காரணமான ஆசீர்வாதங்களைப் பின்வருமாறு பட்டியலிட்டார்:[4]

- *அவர் எனது பாவங்களைக் கழுவியபோது அவர் எனக்குக் கொடுத்த இரட்சிப்பு.*
- *சத்தியத்தின் வெற்றி பற்றிய உறுதிப்பாடு.*
- *அவர் எனக்கு அளிக்கிற ஐக்கியம் (1 யோவான் 1:7, 8).*
- *அவர் எனக்குள் நிலைநாட்டியுள்ள நம்பிக்கை.*
- *பரலோகத்தில் எனது பெயர் எழுதப்பட்டுள்ளது என்ற உண்மை.*
- *தேவன் எனது தகப்பனாக இருக்கிறார் என்ற அறிவு.*
- *கிறிஸ்து எனது மத்தியஸ்தராக இருக்கிறார் என்ற உண்மை. அவர் எனது பலவீனங்களை அறிகிறார் மற்றும் வாழ்வின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் பிதாவினுடைய நிலைநிறுத்தும் வல்லமை என்னைப் பெலப்படுத்தும்படி எனக்காகப் பிதாவினிடத்தில் அவர் வேண்டுதல் செய்கிறார்.*

இந்தப் பட்டியலுடன் நீங்கள் அனேகமாக வேறு எவற்றையேனும் கூட்டக்கூடும். யாரோ ஒருவர், "தொல்லை இல்லாதிருத்தல் அல்ல, ஆனால் கர்த்தர் பிரசன்னமாகி இருத்தலே சமாதானம் என்பதாக உள்ளது என்று கூறியுள்ளார்"!

மற்றவர்களுடன் தொடர்புபடுத்துதல் (4:5)

"சந்தோஷமாயிருங்கள்" என்ற புத்திமதிக்கு நாம் கீழ்ப்படிந்தால், "கர்த்தருக்குள்" நமது சந்தோஷம் என்பது நமது இருதயத்தில் இருப்பதாக மாத்திரம் இராது; அது நம்மைச் சுற்றிலும் உள்ளவர்களுக்கும் தெரியவரும். பவுலின் அடுத்து கட்டளை, நாம் மற்றவர்களுக்கு எவ்வாறு தொடர்புபட்டு இருக்கிறோம் என்பதைப் பற்றியதாக உள்ளது: "உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக" (வசனம் 5அ).

"சாந்தகுணம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (epieikes என்ற) வார்த்தை, "ஏறக்குறைய மொழிபெயர்க்கப்பட இயலாத உண்மையான மாபெரும் கிரேக்க வார்த்தைகளில் ஒன்றாக உள்ளது."[5] *இவ்வார்த்தை,* "moderation" (KJV) *மற்றும்* "forbearance" (ASV; RSV) *போன்ற பல வகையான சொற்றொடர்களைக் கொண்டு விளக்கப்படுத்தப்பட்டுள்ளது. இது யாக்கோபு 3:17ல் "சாந்தம்" என்பதன் கருத்தை உள்ளக்குகின்றன* (NIV; *காண்க* CEV *மற்றும்* ASV *வேதாகமத்தில் உள்ள பக்கக்குறிப்பு):* "gentle attitude" [*"சாந்தமான எண்ணப்போக்கு"*] (TEV), "gentle and kind" [*"சாந்தமும் தயவும்"*] (NCV), "reasonable and gentle" [*"நியாயமான மற்றும் சாந்தமான"*] (CJB). *Epieikes என்பது "நியாயமானதன்மை" என்பதற்குரிய (eikos என்ற) வார்த்தைக்கு முன்பாக "மீது" என்று அர்த்தம் தரும் (epi என்ற) முன்னிடைச் சொல்லைச் சேர்த்துப் பெற்ற கூட்டு வார்த்தையாக உள்ளது. ஜெரால்டு ஹாத்தார்ன் என்பவர், "இது பெருமித மனப்பான்மை அல்லது 'இனிய நியாயமானதன்மை' என்பதன் நேர்மறைக் கருத்துக்களைக் கதிர்போன்று பரவச்செய்கிறது" என்று கருத்துத் தெரிவித்தார்.*[6] *இவ்வார்த்தை,*

2 கொரிந்தியர் 10:1ல் இயேசுவை விவரிக்கப்பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் அர்த்தத்தை ரிச்சர்டு கேஃப்பின் என்பவர் விளக்கும் வழிமுறையை நான் விரும்புகிறேன்: "கிறிஸ்துவைப் போன்று மற்றவர்கள் மீது ஆழ்ந்த கவனம்."[7] பின்வரும் கருத்துக்களும் இன்னும் அதிகமானவைகளும் *epieikes* என்ற வார்த்தையினால் கருத்தாகத் தெரிவிக்கப்படுகின்றன:

- ஒரு இனிய [மன] ஒழுங்கமைவு ...
- அது தனது சுயவழியைக் கொண்டிருக்கும்படி வலியுறுத்துவதில்லை (காண்க 1 கொரிந்தியர் 13:4-7),
- நியாயமாக வாதிடப்பட முடிவதாக இருப்பது (அது நியாயமற்றதாக இருப்பதில்லை).

இதைப்போன்ற மனநிலையானது, 4:2ல் பவுல் குறிப்பிட்ட இரு சகோதரிகளின் ஒப்புரவுக்கு சுலபமாக வழிவகுக்கும். சகோதரத்துவ உறவில் மாத்திரமல்ல, ஆனால் *எல்லா* உறவு முறைகளிலும் இந்தப் பண்பு நமக்குத் தேவைப்படுகிறது. "*எல்லா* மனிதராலும்" இந்த எண்ணப்போக்கு "அறிந்திருக்கப்பட வேண்டும் [காணப்பட்டு மற்றும் உணர்ந்தறியப்பட்டு"[8] இருக்க வேண்டும்] என்று பவுல் கூறினார். "கர்த்தருக்குள்" சந்தோஷமாயிருத்தல் நமது மனநிலைப்பாடுகளுக்கு என்ன செய்கிறது என்பதை உலகம் காணவேண்டியது அவசியமாக உள்ளது!

இப்படிப்பட்ட நேர்மறையான நடத்தையைக் காத்துக்கொள்ளுதல் சுலபமல்ல. "இனிய நியாயத் தன்மையுடன்" இருத்தலுக்குப் பவுல் ஏற்கனவே ஒரு காரணத்தைக் கொடுத்திருந்தார்: நாம் "கர்த்தருக்குள்" இருக்கிறோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இப்போது அவர் இன்னொரு காரணத்தைக் கூடுதலாகக் கூறினார்: "கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" (வசனம் 5ஆ). "சமீபமாய்" (Gk.: *eggus*) என்ற வார்த்தை, கர்த்தர் ஒருக்காலும் தூரத்தில் இருப்பதில்லை என்று அர்த்தப்படுத்தக் கூடும் (காண்க மத்தேயு 28:20), நாம் செய்கிற ஒவ்வொன்றையும் கர்த்தர் காணுகிறார் என்று உணர்ந்தறிதலானது (எபிரெயர் 4:13), நாம் மிகச்சிறப்பாகச் செயல்படும்படி நம்மை ஊக்குவிக்கிறது. அவர் எப்போதும் நம் அருகில் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளுதலானது (எபிரெயர் 13:5), நாம் செய்யத் தேவையானவற்றைச் செய்ய நமக்குப் பலம் அளிக்கிறது. இருப்பினும், "சமீபமாய்" என்ற வார்த்தை, சந்தர்ப்பப் பொருளில், அனேகமாக இயேசுவின் இரண்டாம் வருகை எப்போதுமே உடனடியாக நிகழக்கூடியதாக உள்ளது என்ற உண்மையைக் குறிப்பிடலாம் (காண்க பிலிப்பியர் 3:10, 11, 14, 20, 21). கிறிஸ்து எந்த வேளையில் வேண்டுமென்றாலும் வரக்கூடும் என்பதைப் புரிந்து உணருதலானது நம்மைச் சந்தோஷத்தினால் நிரப்ப வேண்டும் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 22:20). அது நாம் - ஒவ்வொருவரைப் பற்றியும் - நினைக்க வேண்டிய மற்றும் செய்ய வேண்டிய பிரகாரம் செயல்பட, வல்லமை நிறைந்த செயலுக்காக உள்ளது (காண்க லூக்கா 12:40; 1 யோவான் 3:3)!

கவலையில் இருந்து ஒதுங்கி இருத்தல் (4:6அ)

பவுலின் அடுத்த கட்டளை ஏறக்குறைய அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது: "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல்" *(வசனம் 6அ).* CEV

வேதாகமம் இதைப் பின்வருமாறு எளிமையாகக் கூறுகிறது: "எதைப் பற்றியும் கவலைப்படாதீர்கள்." கவலைப் படக்கூடாதா? ஒரு நிமிடம் பொறுங்கள்! கவலைப்படுதல் என்பது வாழ்வின் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பாகமல்லவா? நம் யாவருக்குமே கவலைப்படக் காரணங்கள் நிறைய உள்ளன: நமது குடும்பங்கள், நமது வேலைகள், நமது உடல் நலம், ஒவ்வொரு நாளும் நம்மை பாதிக்கும் தொந்தரவுக்குரிய எண்ணற்ற விஷயங்கள்![9] பாப் லியோன்ஸ் என்பவர், மூன்று வகையான மக்கள்தாம் உள்ளனர் என்று கூறினார்: தொல்லை கொண்டுள்ளவர்கள், தொல்லை கொண்டிருந்தவர்கள் மற்றும் தொல்லை கொண்டிருக்கப் போகிறவர்கள்.[10] விஷயம் இப்படி இருக்க, நாம் கவலைப்படக்கூடாது என்று பவுல் அர்த்தப்படுத்தியிருக்க மாட்டார் என்பது நிச்சயம்! நாம் இந்த வசனத்தை மறுபடியும் ஆய்வு செய்வோமாக. ஆம், அது இன்னமும் அதேபோன்றே வாசிக்கப்படுகிறது: "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல்" இருக்கவேண்டும்.

கவலைப்படாது இருக்கும்படி பவுல் பிலிப்பியர்களுக்குக் கட்டளையிட்டது ஏன்? அவர்களின் தொல்லைகளை அவர் இலேசானவைகளாக நினைத்தாரா? இல்லை, அவர்களின் பிரச்சனைகள் எவ்வளவு பெரியவையாக இருந்தாலும், தேவன் அந்தப் பிரச்சனைகளைக் காட்டிலும் பெரியவராக இருக்கிறார் என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார். கவலைப்படுதல் என்பது பாவமாக உள்ளது, ஏனெனில் அது, நமது சிரமங்களை எதிர்கொள்ளவும் வாழ்வு கொண்டுவரும் எந்த துன்பத்தினூடேயும் உயிர்பிழைத்திருக்கவும் பிதாவானவர் நமக்கு உதவக்கூடும் என்ற நம்பிக்கையில் குறைவுபடுவதைச் சுட்டிக்காண்பிக்கிறது (காண்க மத்தேயு 6:25-33).

"கவலை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*merimnao* என்பதன் ஒரு வடிவமான) வார்த்தை, அடிப்படையில் "அக்கறைகொள்ள" என்று அர்த்தப்படுகிறது.[11] இந்தக் கிரேக்க வார்த்தை அவ்வப்போது நேர்மறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (காண்க பிலிப்பியர் 2:20), ஆனால் இது பொதுவாக ஒரு எதிர்மறையான சொல்லர்த்தத்தைக் கொண்டுள்ளது. இயேசு, "ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்" என்று கூறியபோது, அவர் இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார் (மத்தேயு 6:34). பேதுரு, "உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்" என்று எழுதியபோது, அவர் இந்த வார்த்தையின் பெயர்ச்சொல் வடிவம் ஒன்றைப் பயன்படுத்தினார் (1 பேதுரு 5:7). *Merimnao* என்பது அனேகமாக, "பல்வேறு திசைகளில் இழுக்க" என்று அர்த்தப்படுகிற *merizo* என்பதுடன் உறவுகொண்டுள்ளது.[12] கவலையுள்ள மனமானது இங்கும் அங்கும் இழுக்கப்படுகிறது: அது நம்பிக்கையினால் ஒரு வழியில் இழுக்கப்பட்டு, பயத்தினால் இன்னொரு வழியில் இழுக்கப்படுகிறது. சலிப்பு மற்றும் நம்பிக்கையற்ற தன்மை என்ற உணர்வே பொதுவாக இதன் விளைவாக உள்ளது. நான் அந்த உணர்வை அனுபவித்து இருக்கிறேன். அனேகமாக நீங்களும் அதை அனுபவித்து இருக்கலாம்.

உதவி வேண்டுதல் (4:6ஆ)

நாம் கவலைப்படாது இருக்க வேண்டுமென்றால், நாம் என்ன செய்ய வேண்டும்? 6ம் வசனத்தின் பிற்பகுதி [ஆங்கிலத்தில்] "but" என்ற வார்த்தையுடன் தொடங்குகிறது [தமிழில் இவ்வாறு இவ்விடத்தில் வார்த்தை இல்லை]. வேறு

வார்த்தைகளில் கூறுவதென்றால், "கவலைப்படுவதற்குப் பதிலாக, இதைச் செய்யுங்கள்" என்றாகிறது. என்ன செய்வது? *"எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்" (வசனம் 6ஆ).* ஜெபம் என்பதே கவலைக்குப் பவுல் பரிந்துரைக்கும் எதிர்மருந்தாக இருந்தது (இருக்கிறது). J. A. பெனகெல் என்பவர், "கவலையும் ஜெபமும் ... நெருப்பு மற்றும் நீர் ஆகியவற்றைக் காட்டிலும் அதிகம் எதிர்த்து நிற்பவையாக உள்ளன" என்று கூறினார்.[13] இத்துடன் நாம், "வெளிச்சம் மற்றும் இருள்," மற்றும் "சூடான மற்றும் குளிர்ந்த" என்பவற்றைக் கூடுதலாகக் கூறலாம்.

கவலையை "விரைவில் நிவிர்த்தியாக்கும்" ஒரு [குவிக்ஃபிக்ஸ் போன்ற] பொருளைத் தருதல் என்பது பவுலின் நோக்கமாக இருக்கவில்லை. மேக்ஸி டுன்னாம் என்பவர், அப்போஸ்தலர் கூறியபடி, "ஜெபத்தை ஏறெடுத்தல் என்பது ஒரு சுலபமான தீர்வாக இருப்பதில்லை," ஏனெனில் அப்போஸ்தலர் "ஜெபம் என்று நாம் பெயரிட்டுள்ள வார்த்தைகளைப் படுக்கை வேளையிலும் காலைவேளையிலும் திரும்பத் திரும்ப மனப்பாடமாகக் கூறுதலை" தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை என்று எழுதினார். மாறாக அவர் பின்வருமாறு கூறினார்:

> [பவுல்] நமது வாழ்வைத் தேவனுக்கு முன்பாகக் கொண்டுவருதல், தேவன் மீதான நமது சார்ந்திருக்கும் தன்மையை ஆராய்தல், நமது வாழ்வைத் தேவனுடைய கரங்களில் ஒப்புவித்தல் என்ற மும்முரமான பணிகளைப் பற்றிப் பேசுகிறார் ... கவலை என்பது நிகழ்கால மற்றும் எதிர்காலச் சுமைகளை ஒருவர் தாமே சுமக்க மேற்கொள்ளும் முயற்சியாக உள்ளது; ஜெபம் என்பது அதைத் தேவனுடைய பாதுகாப்பான கரங்களில் விட்டு இணங்கி இருத்தலாக உள்ளது.[14]

சற்றேநேரத்திற்கு முன்னர் நாம் கூறிய ஒப்பீடுகளுக்குத் திரும்புவோம். நெருப்பின்மீது நீர் ஊற்றப்படுபோது, நெருப்பு அணைந்து விடுகிறது. வெளிச்சம் உதிக்கும்போது, இருள் மறைந்து விடுகிறது. ஏதேனும் ஒரு பொருளைச் சூடாக்கும்போது, அதன் குளிர்ந்த தன்மை மறைந்து போகிறது. அது போலவே, நாம் நமது பிரச்சனைகளைத் தேவனிடத்திற்கு எடுத்துச் சென்று அவரது கிருபைத்தன்மையில் நம்பிக்கை - உண்மையிலேயே நம்பிக்கை - வைக்கும்போது, கவலைகள் அகன்று போகும்.

6ம் வசனத்தைச் சற்றே நெருக்கமாகச் கண்ணோக்குதல் நமது சிந்தைகளில் இந்தக் கொள்கையை நிலைநிறுத்திக் கொள்ள உதவும். ஜான் வால்வூர்டு என்பவர் இவ்வசனத்தை, "வேதாகமத்தில் உள்ள மாபெரும் ஜெப புத்திமதிகளில் ஒன்று" என்று அழைத்தார்.[15] ரால்ஃப் மார்ட்டின் என்பவர், இவ்வசனப்பகுதி "ஒவ்வொரு காலகட்டத்திலும், வழிகாட்டுதலுக்காகக் கிறிஸ்தவர்கள் திரும்பியுள்ள ஒன்றாகவும், இதிலிருந்து ஊக்கமூட்டுதலையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்ட பகுதியாகவும் உள்ளது" என்று கூறினார்.[16]

ஜெபத்திற்குப் பவுல் பயன்படுத்திய சொற்றொடர்களை நாம் கண்ணோக்குவதற்கு முன்னர், "எல்லாவற்றையுங்குறித்து" என்ற சொற்றொடரை உங்கள் சிந்தையில் அடிக்கோடிட்டுக் கொள்ளுதல்: "*எல்லாவற்றையுங்குறித்து* உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே

கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்” (வசனம் 6ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). “எல்லாவற்றையுங்குறித்து” என்பது ஒவ்வொரு சொற்றொடரையும் தகுதிப்படுத்துகிறது.

முதலாவது “ஜெபம்” என்பதற்கான ஒரு பொதுவான சொற்றொடராக உள்ளது: “நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், ... *ஜெபத்தினாலும்*” (என்னால் வலியுறுத்தப்படுகிறது). “ஜெபம்” என்பதற்கான (*proseuche* என்ற) கிரேக்க வார்த்தை, தனக்கு முன்னதாக “க்கு” அல்லது “நோக்கி” என்று அர்த்தப்படும் (*pros* என்ற) முன்னிடைச் சொல்லைப் பெற்றதாக உள்ளது. இது “நோக்கி ஜெபம்” - (*euche*) அதாவது தேவனை நோக்கி - என்ற குறிப்பைக் கொண்டுள்ளது. என்ன நடந்தாலும் நாம், “அதை ஜெபத்தில் கர்த்தரிடம் எடுத்துச்செல்ல” வேண்டியதாக உள்ளது. முன்னதாக நாம், 6ம் வசனத்தின் முதற்பகுதியினுடைய CEV மொழிபெயர்ப்பைக் கண்ணோக்கினோம். இங்கு அந்த மொழிபெயர்ப்பின் அதிகமான விஷயம் உள்ளது: “எதைப்பற்றியும் கவலைப்படாதீர்கள், ஆனால் எல்லாவற்றைப் பற்றியும் ஜெபியுங்கள்.”

அடுத்ததாகப் பவுல், வேண்டுதலினாலும் என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார்: “... எல்லாவற்றையுங்குறித்து ... ஜெபத்தினாலும் *வேண்டுதலினாலும்*” (என்னால் வலியுறுத்தப்படுகிறது). “வேண்டுதல்” (Gk.: *deesei*) என்பது ஜெபத்தின் ஒரு குறிப்பிட்ட வகையாக உள்ளது. இதற்கான ஆங்கில வார்த்தை சுட்டிக்காண்பிக்கிறபடி, இது சிலவற்றிற்காகத் தேவனிடத்தில் கேட்பதை உள்ளடக்குகிறது. எவற்றிற்காக? “எல்லாவற்றையுங்குறித்து” என்ற வார்த்தையை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். சார்லஸ் ஏர்ட்மேன் என்பவர், “எந்த ஒரு விஷயமும் [செய்யப்பட அது] தேவனுடைய வல்லமையைக் காட்டிலும் மிகவும் பெரியதாக இருப்பதில்லை, எந்த ஒரு விஷயமும் [செய்யப்பட அது] அவரது அக்கறைக்கு அப்பால் மிகவும் சிறியதாக இருப்பதில்லை” என்று எழுதினார்.[17]

“விண்ணப்பங்கள்” என்பது, “வேண்டுதல்” என்ற வார்த்தையுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்ட வார்த்தையாக உள்ளது: “எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ... கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்” (என்னால் வலியுறுத்தப்படுகிறது). “விண்ணப்பங்கள்” என்பதற்கான (*aitemata* என்ற) கிரேக்க வார்த்தை “வேண்டுதல்” என்பதற்கான வார்த்தையை விட அதிகம் வெளிப்படையானதாக உள்ளது; இது திட்டவட்டமான மற்றும் குறிப்பான விண்ணப்பங்களை குறிக்கிறது. நமது வேண்டுகோள்கள் பொதுவானவையாக அல்ல, ஆனால் குறிப்பானவையாக இருக்க வேண்டும்; நமது ஜெபங்கள் கவனம்குவிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும். நாம் விடுக்க வேண்டிய சட்டப்பூர்வமான வேண்டுகோள்கள் பல உள்ளன.[18] நாம் நமக்காக விண்ணப்பங்களை ஏறெடுக்க முடியும். வில்லியம் பார்க்ளே என்பவர், “நாம் கடந்த காலத்தில் செய்தவற்றை *மன்னிக்கும்படியும், நிகழ்காலத்தில்* நமக்குத் தேவையானவற்றைத் தரும்படியும், *எதிர்காலத்தில்* உதவி மற்றும் வழிகாட்டுதல்கள் வேண்டும் என்றும் ஜெபிக்க முடியும்” எனக் கருத்துத் தெரிவித்தார்.[19] நாம் மற்றவர்களுக்காகவும் விண்ணப்பங்களை ஏறெடுக்கலாம்; இது பரிந்துபேசுதல் என்று அழைக்கப்பட்டுள்ளது (காண்க 1 தெசலோனிக்கேயர் 5:25; 2 தெசலோனிக்கேயர் 1:11; யாக்கோபு 5:16). இவ்வார்த்தை வற்புறுத்திக் கேட்டல் என்று இல்லாமல் விண்ணப்பங்கள் என்று

இருப்பதைக் கவனியுங்கள்.[20] ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகுதியைக் கொண்டிருக்க வேண்டும்: "... என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (காண்க லூக்கா 22:42).

இங்கு ஒரு கேள்வி எழும்பலாம்: "நான் ஏன் நமது விண்ணப்பங்களை 'தேவனுக்குத் தெரியப்படுத்த வேண்டும்? நாம் விரும்புவது என்ன மற்றும் நமக்குத் தேவையானது என்ன என்பதை அவர் ஏற்கனவே அறிந்திருப்ப தில்லையா?" ஆம் அவர் அறிந்திருக்கிறார் - ஆனால் அவர் இன்னமும் நாம் கேட்க வேண்டும் என்று விரும்புகிறார் (மத்தேயு 7:7, 8). இது தொடர்பாக ஏற்புடைய சிந்தனை ஒன்றை காஃப்மேன் என்பவர் கூடுதலாகக் கூறினார்: நாம் *கேட்காத* வரையிலும் நம்மிடத்தில் *விண்ணப்பங்கள்* அல்ல, ஆனால் *தேவைகளையே* நாம் கொண்டிருக்கிறோம்.[21]

"ஸ்தோத்திரத்தோடே" என்பது [இவ்விடத்தில்] பவுல் பயன்படுத்திய நான்காவது சொற்றொடராக உள்ளது: "... எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை *ஸ்தோத்திரத்தோடே* கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்." "ஸ்தோத்திரம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட (eucharistia என்பதன் ஒரு வடிவமான) கிரேக்க வார்த்தை, "தாராளமாக கொடுக்க" என்று அர்த்தப்படுகிற (charizomai என்ற) கிரேக்க வார்த்தையுடன் "நல்ல" (eu) என்ற முன்னிடைச் சொல்லை இணைத்துப் பெறப்பட்ட வார்த்தையாக உள்ளது. இது நன்றியுணர்வு பெருக்கெடுக்கும் ஒரு இருதயத்தில் இருந்து தாராளமாகக் கொடுக்கப்பட்ட நன்றிகளைக் குறிப்பிடுகிறது. ஜெபங்கள் என்பவை "விருப்பப் பட்டியல்களாக" மாத்திரம் இருக்கலாகாது; அவைகள் நன்றிசெலுத்துதலினால் செறிவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

6ம் வசனம் முழுமைகளினால் நிரம்பியுள்ளது: ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம்; எல்லாவற்றையுங்குறித்து ஜெபியுங்கள்; எல்லாவற்றிற்காகவும் நன்றிகூறுங்கள்[22]! ஜோ பெர்னெட் என்பவர் "எல்லாவற்றிற்காகவும் ... தேவனைக்கு நன்றி செலுத்துங்கள்" என்று தலைப்பிடப்பட்ட பிரசங்கம் ஒன்றை எடுத்துரைத்தார்.[23] அதில் அவர், ஹிட்லரின் சித்திரவதை முகாமிற்கு அனுப்பப் பட்டிருந்த, கோர்ரீ டென் பூம் என்ற பெண்மணியைப் பற்றிக் கூறினார். நூற்றுக்கணக்கான பெண்கள், சின்னஞ்சிறிய பாசறைக்குள் நெருக்கி அடைக்கப் பட்டிருந்தனர். அந்தக் கட்டிடம் அசுத்தமாகவும் துர்நாற்றம் வீசுவதாகவும் இருந்தது - அதில் அவர்களை இரவும் பகலும் தாக்கிக் கொண்டிருந்த தெள்ளுப் பூச்சிகள் இருந்தன என்பது மிகவும் மோசமான விஷயமாக இருந்தது. அந்தப் பாசறைகளில் வேதாகமக் கலந்துரையாடல் ஒன்றின்போது, பிலிப்பியர் 4:6ம் வசனம் மேற்கோள் காண்பிக்கப்பட்டது. அந்தப் பெண்கள், தெள்ளுப்பூச்சிகளுக்காகத் தாங்கள் எவ்வாறு நன்றி செலுத்த முடியும் என்று எதிர்த்துப் போராடினர். தெள்ளுப்பூச்சிகளில் காப்பாற்றும் மதிப்பீடு எதையும் அவர்கள் காணவில்லை, ஆனாலும் அவர்கள் அவற்றிற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்தினர். பிற்பாடு அவர்கள் மற்ற பாசறைகளில் இருந்த பெண்களை, ஆண் காவலர்கள் தவறாகப் பயன்படுத்திக் கொண்டதையும், ஆனால் [ஜெபித்த] அந்தப் பெண்களின் பாசறைகளில் இருந்த தெள்ளுப் பூச்சிகள் நிமித்தம் அவர்கள் அங்கு வரவோ அல்லது அந்தப் பெண்களைத் தவறாகப் பயன்படுத்தவோ இல்லை என்பதையும் அறிந்தனர்.

நாம் யாவரும் நமது வாழ்வில் "தெள்ளுப்பூச்சிகளை" - நன்றி செலுத்தக்

கடினமான விஷயங்களை - கொண்டிருக்கிறோம், ஆனால் நாம், "[தம்மில்] அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக" நடப்பிக்கிற தேவனை ஆராதிக்கிறோம் என்பதை மறந்து விடலாகாது (ரோமர் 8:28). "எல்லாவற்றிற்காகவும்" நன்றி செலுத்திக் கற்றுக்கொள்ளுதல் என்பது நன்றியுணர்வின் வெளிப்பாடாக இருப்பது மட்டுமின்றி, கீழ்ப்படிதலின் வெளிப்பாடாகவும் உள்ளது. அவ்வாறு இருக்கையில் நாம், செயல்விளைவில் "எனது வாழ்வில் என்ன நடந்தாலும், அதில் நான் தேவனுடைய கரத்தைக் காண முயற்சி செய்து அவருக்குத் துதிசெலுத்துவேன்" என்று கூறுகிறோம்.

நாம் நேர்மறையான ஆசீர்வாதங்கள் பலவற்றையும் கொண்டிருக்கிறோம். நீங்கள் சற்றே நிதானித்து, உங்களுக்குக் கிடைத்துள்ள ஆசிர்வாதங்களைப் பட்டியலிட விரும்பலாம், அந்தப் பட்டியலின் உச்சியில் உங்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் இருக்க வேண்டும். வாழ்வானது உங்கள் இளமை, உங்கள் உடல் நலம், உங்கள் செல்வம், உங்கள் நண்பர்கள், உங்கள் குடும்பம் ஆகியவற்றை உங்களை விட்டு எடுத்துப் போடலாம் - ஆனால் எதுவுமே "கிறிஸ்துவின் அன்பைவிட்டு [உங்களை] பிரிப்பது" என்பது இயலாது (ரோமர் 8:35)!

விளைவு - சமாதானம்! (4:7)

நாம் இப்போது ஆச்சரியமான, ஏறக்குறைய நம்ப இயலாத வாக்குத்தத்தம் ஒன்றிற்கு வருகிறோம்: *"அப்போழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்"* (வசனம் 7). "அப்பொழுது" என்ற வார்த்தையை விட்டுத் தாண்டிச் செல்லாதீர்கள். 7ம் வசனத்தில் உள்ள வாக்குத்தத்தம் 4முதல் 6வரை உள்ள வசனங்களுடன் பிணைக்கப்பட்டுள்ளது: நீங்கள் எப்போதும் மகிழ்ச்சி*யாயிருந்தால்*; நீங்கள் எப்போதும் இனிமையான நியாயத்தன்மையை செயல் *விளக்கப்படுத்தினால்*; கவலைப்படுவதற்குப் பதிலாக நீங்கள் *ஜெபித்தால்*; அப்போது நீங்கள் "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானத்தை" கொண்டிருப்பீர்கள்.

"தேவசமாதானம்" என்பது தேவன் தருகிற சமாதானமாக, அவர் "சமாதானத்தின் தேவனாக" இருப்பதால் (வசனம் 9), அவர் மாத்திரமே தரக்கூடிய சமாதானமாக உள்ளது. "எல்லாப் புத்திக்கும் மேலான" என்பது கிரேக்கச் சொற்றொடரான *huperechousa* ("மேலாகக் கொண்டிருத்தல் [அல்லது பற்றிக்கொண்டிருத்தல்]") panta ("எல்லா" அல்லது "ஒவ்வொரு") *noun*[24] ("மனம்" அல்லது "சிந்தித்தல்") என்பதின் மொழிபெயர்ப்பாக உள்ளது. இது "எல்லா சிந்தைக்கும் மேலான" அல்லது "எல்லா சிந்தித்தலுக்கும் மேலான" என்று அடிப்படையாக அர்த்தப்படுகிறது. இவ்வார்த்தை, தேவன் மாத்திரமே தரக்கூடிய சமாதானத்தை உண்டாக்குதல் மனித மனதால் முடியாததாக உள்ளது என்று குறிக்கக் கூடும். அனேகமாக, ஒரு எளிய விளக்கம் இங்கு நோக்கமாக உள்ளது: தேவனுடைய சமாதானம், முடிவுக்கு உட்பட்ட மனங்களினால் புரிந்துகொள்ள கூடுவதற்கு வழியே இல்லை என்று கூறும்படி, அவ்வளவு அற்புதமாக, அவ்வளவு திகைப்புக்குரியதாக உள்ளது. பல்வேறு மொழிபெயர்ப்புகள் பின்வரும் தெளிவுபடுத்துகிற சொற்றொடர்களைப் பயன்படுத்துகின்றன:

- NCV: "நாம் அதைப் புரிந்துகொள்ள இயலாத அளவுக்குப் பெரியது."

- Phillips: *“மனிதரீதியான புரிந்துகொள்ளுதலைக் கடந்து நிற்கிறது.”*
- LB: *“மனித மனம் புரிந்து கொள்ளக் கூடியதைக் காட்டிலும் அதிகம் அதிகம் அற்புதம் நிறைந்தது.”*

இப்படிப்பட்ட சமாதானத்தைக் கொண்டிருப்பவர்கள், அதைக் கொண்டிருத்தல் என்றால் என்ன என்று முழுமையாக விளக்க இயலாது, மற்றும் அது இல்லாதவர்கள் அதனால் தடுமாற்றம் கொள்கின்றனர். அவர்களைப் போன்றே கிறிஸ்தவர்களும் அதே பிரச்சனைகளைக் கொண்டிருந்தும், சமாதானம் கொண்டவர்களாக இருப்பது எவ்வாறு என்பதை அவர்கள் புரிந்துகொள்ள முடிவதில்லை!

> ஹரோல்டு போஸ்லீ என்பவர், 1930களில் [அமெரிக்காவின்] மாபெரும் தாழ்ச்சியின் நாட்களில் நடந்த ஒரு வரலாற்றை நினைவுகூர்ந்தார். தனிச்சிறப்பு வாய்ந்த வழக்கறிஞரும் கடவுள் நம்பிக்கை இல்லை என்று அறிக்கை இட்டிருந்தவருமான கிளாரென்ஸ் டார்ரோ என்பவர் உட்பட, பேச்சாளர்களின் குழு ஒன்று, சிகாகோவின் தெற்குப் பகுதியில் இருந்த - அவர்களில் பெரும்பான்மையானோர் கறுப்பர்களாக இருந்தனர் - மக்கள் கூட்டத்திற்கு உரையாற்றிக் கொண்டிருந்தது. பொருளாதார சூழ்நிலைகள் மிகவும் மோசமாக இருந்தன: பணமும் வேலைகளும் மிகவும் அரிதாக இருந்தன, மற்றும் கறுப்பின மக்களின் அவலநிலையைச் சுட்டிக்காண்பிக்க, டார்ரோ என்பவர் அந்த உண்மையைப் பயன்படுத்தினார். அவர்களின் கஷ்டங்களைத் தொகுத்துரைத்து முடிவாக அவர், “இன்னும் நீங்கள் பாடுகிறீர்களா? உங்களைப் போல யாருமே பாட இயலாது! பாடுவதற்கு நீங்கள் கொண்டுள்ளது என்ன?” என்று கேட்டார். மக்கள் கூட்டத்தில் இருந்து, திடீரென்று மின்னல் மின்னினாற்போன்று ஒரு பெண்மணி எழுந்து, நாங்கள் பாடுவதற்கு இயேசுவைக் கொண்டுள்ளோம் என்று உரத்துக் கூவினார், மற்றும் அவருடைய பதிலைத் தொடர்ந்து பல “ஆமென்” கள் மற்றும் “ஆம் ஆம்” என்பவை வந்தன ...
>
> வழக்கத்திற்கு மாறாக, டார்ரோ ஒருமுறை ... பதிலைக் கொண்டிருக்கவில்லை, ஏனெனில் அவர், பகுத்தறியப்படக் கூடாத, அரிதாகவே பேசவும் பட்டிருந்த, மனித சொற்றொடர்களில் கூறுவதென்றால் - எல்லாவற்றையும் செய்வதற்குத் தங்களைப் பெலப்படுத்தக்கூடிய ஒருவருடன் தாங்கள் நடந்தபடியினால், கண்ணீர்கள் மற்றும் தங்களின் பயங்களுக்கும் மேலாகவும் பாடக்கூடிய மக்களை - முகமுகமாக எதிர்கொண்டிருந்தார் [பிலிப்பியர் 4:13].[25]

கிறிஸ்துவின் அன்பைப் போன்றே, தேவன் மீது விசுவாசம் கொண்டு அவர் மீது நம்பிக்கை வைத்திருக்கும் பிள்ளையானவர் கொண்டிருக்கக் கூடிய சமாதானம் “எல்லாப்புத்திக்கும் மேலான” தாக உள்ளது (எபேசியர் 3:19).

பவுல் பிலிப்பியர்களிடத்தில், எல்லாப் புத்திக்கும் மேலான இந்த சமாதானம் “உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்” என்று கூறினார் (வசனம் 7ஆ, இ).

"காத்துக்கொள்ளும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*phroureo* என்பதன் ஒரு வடிவமான) கிரேக்க வார்த்தை, "ஒரு இராணுவச் சொற்றொடராக, காவற்படையின் விஷயத்தில்," காவல் செய்வதினால் பாதுகாத்துக்கொள்ள என்று அர்த்தப்படுகிறது ... இது கிறிஸ்தவர்களின் பாதுகாப்பிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது ... , மற்றும் அவர் எல்லாவற்றையும் தேவனுடைய கரத்தில் ஒப்புவித்துவிடும்போது, அவர் கொண்டுள்ள பாதுகாப்பு என்ற கருத்தில் உள்ளது.[26] மிகவும் பாதுகாக்கப்பட்ட மதில் சூழ்ந்த ஒரு நகரைக் கற்பனை செய்து பாருங்கள். பின்பு அதனுள் இருக்கும் ஒரு குடிமகன், தாம் *பாதுகாப்பாக* இருப்பதை அறிந்துள்ளதால், எவ்விதக் கலக்கமும் இன்றி, தமது வேலைக்குச் செல்வதைக் கண்ணோக்குங்கள். "காத்துக்கொள்ளும்" என்று அர்த்தப்படுகிற வார்த்தையினால் தூண்டப்படும் உருவகம் இதுவே ஆகும்.

இருப்பினும், *எது* காத்துக்கொள்ளப்படுகிறது என்பதைக் கவனியுங்கள்: "... உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும்." "இருதயங்கள்" மற்றும் "சிந்தைகள்" என்பது ஒரு கிறிஸ்தவரின் உள்ளான முழு இருப்பையும் விவரிக்கிறது. ("இருதயம்" என்ற வார்த்தை ஒரு வசனப் பகுதியில் ஒன்றாக இணைக்கப்படுகிற போது, அவ்வார்த்தையின் வலியுறுத்தமானது உணர்வெழுச்சிகளின் மீதும், "சிந்தை" என்பதன் வலியுறுத்தமானது சிந்தனைகள் மீதும் உள்ளது.) *புறம்பான* மனிதனல்ல, ஆனால் *உள்ளான* மனிதனே காக்கப்படுகிறான். இந்தப் படிப்பிற்கான முன்னுரையில் நான், உண்மையான சமாதானம் என்றால் என்ன என்று பலர் புரிந்து கொள்ளாததே சமாதானத்திற்கான தடையாக உள்ளது என்று கருத்துக் தெரிவித்தேன். பலர், தங்கள் புறம்பான மனிதனைத் தேவன் காத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றனர். அவர்கள் எப்போதுமே தங்களைச் சுற்றிச் சமாதானமான சூழ்நிலைகள் இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள். கர்த்தரின் மக்கள் எப்போதுமே புயலினால் பாதிக்கப்படாத, நோய்க்கு எதிர்த்து நிற்கக் கூடிய மற்றும் ஆவேசமாகத் தடைசெய்யும் தடுப்புகள் ஆகியவற்றினால் சூழப்பட்டிருப்பார்கள் என்று ஒருக்காலும் அவர் வாக்குத்தத்தம் செய்ததில்லை. அவர்களின் - [நமது] உடல்களுக்கு என்ன நேரிட்டாலும் - இருதயங்களையும் சிந்தைகளையும் காத்துக்கொள்வதாகவே அவர் வாக்குத்தத்தம் *செய்துள்ளார்* ஆகவே பவுலின் "புறம்பான மனிதன்அழிந்து கொண்டிருந்தாலும்" - அவரது "உள்ளான மனிதன் நாளுக்குநாள் புதிதாக்கப்பட்டதால்" - அவர் சமாதானம் கொண்டிருக்க முடிந்தது (2 கொரிந்தியர் 4:16)!

நமது வேதபாட வசனப்பகுதி "கிறிஸ்து இயேசுவுக்குள்" இருக்கிறவர்களுக்கு மாத்திரமே இந்தத் தற்காப்பை வாக்குறுதி அளிக்கிறது என்பதை நான் மீண்டும் ஒருமுறை வலியுறுத்த வேண்டும் (வசனம் 7இ): நாம் அவருக்குள் "ஞானஸ்நானம்" பெற்றுக்கொள்ளாதிருந்தால் (ரோமர் 6:3), மற்றும் நாம் அவருக்குள் நடக்காது (வாழாது) இருந்தால் (காண்க கொலோசெயர் 2:6), அப்போது நமக்குப் பாதுகாப்புப் பற்றி வாக்குத்தத்தம் எதுவும் இராது. ஜான் நைட் என்பவர், "நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவதினாலும் அவரது அதிகாரத்திற்கு ஒப்புக்கொடுப்பதினாலும் மாத்திரமே தேவனுடைய சமாதானம் மற்றும் பாதுகாப்பு ஆகிய கொடைகளை மகிழ்வுடன் அனுபவிக்கிறோம்" என்று எழுதினார்.[27]

முடிவுரை

சமாதானம் - நாம் அதை விரும்புகிறோம், ஆனால் அதைக் கொண்டிருப்பதற்கு அவசியமானதைச் செய்யப் போதுமான அளவிற்கு அதை நாம் விரும்புகிறோமா? இங்கிலாந்து நாட்டின் முன்னாள் பிரதம மந்திரியான ஜேம்ஸ் ராம்ஸே மெக்டொனால்டு என்பவர், தொடர்ந்து இருக்கக்கூடிய சமாதானத்தைப் பற்றி இன்னொரு அரசு அதிகாரியிடம் பேசிக்கொண்டிருந்தார். திரு. மெக்டொனால்டு அவர்களின் கண்ணோட்டங்கள் சூதுவாதற்றவை என்று அந்த அதிகாரி நினைத்தார். "சமாதானத்திற்கான விருப்பம் என்பது அதை உறுதிப்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை" என்று அவர் கூறினார். அதற்கு திரு. மெக்டொனால்டு, "உண்மைதான், அதேபோன்று, உணவுமீதான விருப்பம் உங்கள் பசியைத் திருப்திப்படுத்துவதில்லை, ஆனால் அது குறைந்த பட்சம் உங்களை ஒரு உணவகத்திற்குச் செல்லத்தொடங்கச் செய்கிறது" என்று கூறினார்.[28] நாம் போதிய அளவு பலமாக சமாதானத்தை விரும்பினால், அது நம்மை நாம் செய்யத் தேவையானவற்றைச் செய்யத் தொடங்க வைத்துவிடும்:

- கர்த்தருக்குள் சந்தோஷமாயிருத்தல்,
- மற்றவர்களுடன் ஒரு இனிய நியாயமான தன்மையுடன் உறவுபடுதல்,
- கவலையில் இருந்து விலகியிருத்தல், ஏனெனில் நமது ...
- விண்ணப்பங்கள் கர்த்தருக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதால்.

பவுலின் அறிவுறுத்துதல்களுக்கு நாம் கீழ்ப்படிந்தால், நாம் பின்வரும் விரும்பத்தக்க விளைவைக் கொண்டிருப்போம்: "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் [நமது] இருதயங்களையும் [நமது] சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்"!

குறிப்புகள்

[1]இந்தப் பத்தியை நீங்கள் வாழும் பகுதிக்குத் தேவையான வகையில், தழுவியமைத்து விரிவாக்கிக் கொள்ளுங்கள். [2]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 96. See also John F. Walvoord, *Philippians: Triumph in Christ,* Everyman's Bible Commentary (Chicago: Moody Press, 1971), 100. [3]வாழ்வின் மாற்றக்காரணிகள் மற்றும் நாம் கட்டுப்பாடு கொண்டிராத விஷயங்கள் ஆகியவற்றின் பட்டியல் ஒன்று, Avon Malone, *Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 104. என்ற புத்தகத்தில் தரப்பட்டுள்ளது. நீங்கள் வாழும் இடத்திற்குப் பொருத்தம ான ஒரு பட்டியலைத் தயாரியுங்கள். [4]Adapted from a devotional by Truman Spring in *Power for Today* (June 1956): 40. [5]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary,* vol. 43, *Philippians*, ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 182. [6]Ibid. [7]Richard B. Gaffin, notes on Philippians, *The NIV Study Bible*, ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 1808. [8]Hawthorne, 182. *Gnostheto* என்பது, "தெரிந்திருப்பதாக" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையாகும். [9]இதை நீங்கள் வாழும் இடத்திற்குப் பொருந்துமாறு மிகவும் திட்டவட்டமானதாக ஆக்கிக் கொள்ளுங்கள். [10]Bob Lyons, "God's Survival Kit," Sermon preached at the Judsonia church of Christ, Judsonia, Arkansas, 16 February 2003.

[11]"Careful" என்ற KJV வேதாகமத்தின் தரவழைத்தலானது மிகச்சரியான மொழிபெயர்ப்பாக உள்ளது, ஆனால் இன்றையநாட்களில் நாம், "careful" என்ற வார்த்தையை, KJV காலத்தில் பயன்படுத்தப்பட்ட அதே கருத்தில் பயன்படுத்துவதில்லை. அந்தக் காலத்தில் இது "அக்கறையின் முழுமை" என்று அர்த்தப்படுத்திற்று; இப்போது அது "பாதுகாப்பாக இருக்க கவனம் எடுத்துக் கொள்ளுதல்" என்று அர்த்தப்படுகிறது. KJV வேதாகமத்தில் "careful" என்று இருப்பதால், பல விளக்கவுரையாளர்கள், பவுல் "முறைப்படியான கவலை மற்றும் அக்கறையை" அல்ல, ஆனால் அதற்கு மாறாக "சுயத்தை மையமாகக் கொண்ட, எதிர்விளைவை உண்டாக்கும் கவலையையே கண்டனம் செய்தார்" என்று குறிப்பிடுகின்றனர் (காண்க Gaffin, 1808). [12]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words*, ed. John R. Kohlenberger III (Minneapolis: Bethany House Publisher, 1984), 160. [13]Quoted in John A. Knight, *Beacon Bible Expositions,* vol. 9, *Philippians, Colossians, Philemon* (Kansas City, Mo.: Beacon Hill Press, 1985), 114. [14]Maxie D. Dunnam, *Galatians, Ephesians, Philippians, Colossians, Philemon*, The Communicator's Commentary series, ed. Lloyd J. Ogilvie (Waco, Tex.: Word Books, 1982), 313-14. [15]Walvoord, 106. [16]Ralph P. Martin, *The Epistle of Paul to the Philippians,* rev. ed., Tyndale New Testament Commentaries, ed. R. V. G. Tasker (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 171. [17]Charles R. Erdman, *The Epistle of Paul to the Philippians* (Grand Rapids, Mich.: Baker Book House, 1983), 141. [18]நாம் ஏறெடுக்கக் கூடாத விண்ணப்பங்களும் உள்ளன (எடுத்துக்காட்டிற்கு யாக்கோபு 4:3ஐக் காணவும்). காஃப்மேன் என்பவர் சட்டப் பூர்வமான விண்ணப்பங்களின் பட்டியல் ஒன்றைக் கொடுத்தார் (James Burton Coffman, *Commentary on Galatians, Ephesians, Philippians, and Colossians* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977], 321-22). [19]William Barclay, *The Letters to the Philippians, Colossians, and Thessalonians,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 77. [20]Leon Barnes, *That You May Know Christ: Studies from Philippians* (Searcy, Ark.: Resource Publications, 1992), 149.

[21]Coffman, 321. [22]கண்டிப்புடன் பேசுவதென்றால், இவ்வசனம் "எல்லாவற்றிற்காகவும்" என்றல்ல, ஆனால் "எல்லாவற்றிலும்" என்றே கூறுகிறது. ஒரு குறிப்பிட்ட விஷயத்திற்காக நீங்கள் நன்றி செலுத்த முடியாது இருக்கும்போது கூட, அந்தச் சூழ்நிலையில் நீங்கள் நன்றி செலுத்த வேண்டிய சில விஷயங்கள் உள்ளன. எந்தச் சூழ்நிலையிலும் நன்றி செலுத்துகிறவர்களாக இருத்தல் எவ்வாறு என்பது பற்றி ஒரு நல்ல பகுதி Coffman, 320 ல் கொடுக்கப்பட்டுள்ளது. [23]Joe R. Barnett, *Live! with Peace, Power and Purpose,* The 20th Century Sermons Series, vol. 11 (Abilene Tex.: Biblical Research Press, 1978), 64-70. தெள்ளுப் பூச்சிகள் பற்றிய விவரிப்பு பக்கம் 66-68ல் காணப்படுகிறது. [24]இது "noon" என்று உச்சரிக்கப்படுகிறது. [25]Dunnam, 320-21. [26]Vine, 513. [27]Knight, 115. இதே போன்ற விளக்கங்கள் Martin, 173, மற்றும் Hawthorne, 185 ஆகிய புத்தகங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. [28]James S. Hewett, ed., *Illustrations Unlimited* (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1988), 403 என்ற புத்தகத்தில் இருந்து தழுவப்பட்டது.

16

ஒரு கிறிஸ்தவர் போன்று சிந்தித்துச் செயல்படுதல்[1]

[பிலிப்பியர் 4:8, 9]

கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்கு, ஒருவர் தெளிவாகச் சிந்தித்து சரியாகச் செயல்பட வேண்டும். செயல்பாடு இன்றி வெறும் சிந்தனை மாத்திரம் செய்கிறவர், தமது துப்பாக்கியைக் குறிபார்த்து ஆனால் ஒருக்காலும் அதைக் கொண்டு சுடாதிருக்கும் ஒரு வேட்டைக்காரரைப் போன்றவராக இருக்கிறார். சிந்தித்தல் இன்றி வெறும் செயல்பாட்டை மாத்திரம் செய்கிறவர், தமது துப்பாக்கியால் குறிபாராமல் சுடுகிற வேட்டைக்காரரைப் போன்றவராக இருக்கிறார். சிந்தித்தல் மற்றும் செயல்படுதல் ஆகிய இரண்டுமே நமது வசனப் பகுதியில் உரைக்கப் படுகின்றன:

> *கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள். நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார் (வசனங்கள் 8, 9).*

ஒரு கிறிஸ்தவர் போன்று சிந்தித்தல் (4:8)

8ம் வசனம் "கடைசியாக" என்ற வார்த்தையுடன் தொடங்குகிறது. இது, பவுல் நிருபத்தை முடிக்கத் தயாராகிக் கொண்டிருந்தார் என்று அர்த்தப் படுகிறது. இது, 4ம் வசனத்தில் தொடங்கிய அப்போஸ்தலரின் சிந்தனையின் வரியில், 8 மற்றும் 9 ஆகிய வசனங்கள் அவரது கடைசிக் கூர்ந்தாய்வுகளாக உள்ளன என்றும் அர்த்தப்பட முடியும். (பல எழுத்தாளர்கள், "கடைசியாக" என்பதை ஒரு வரிசையின் பகுதியாகப் பயன்படுத்துகின்றனர்: "முதலாவது," "அடுத்து," மற்றும் "கடைசியாக.") "கடைசியாக" என்பதைத் தொடர்ந்து வருகிற வார்த்தைகள் சிந்தனையைத் தூண்டக் கூடியவையாக உள்ளன. "கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் (KJV) கொண்டிருங்கள்" (வசனம் 8).

சரியான பண்புகள்

விளக்கவுரையாளர்களும் மொழிபெயர்ப்பாளர்களும், 8ம் வசனத்தில் உள்ள சொற்றொடர்களின் மிகச்சரியான அர்த்தம் எது என்பது பற்றிப் போராடிக் கொண்டுள்ளனர். இந்தப் பண்பினங்களின் பட்டியலில் தொடக்கத்தில் உள்ளவை பற்றிய சில ஆலோசனைகள் இங்கு தரப்படுகின்றன:

- "உண்மை" (Gk.: *alethe*) என்பது மெய்யானதாக அல்லது உண்மை யானதாக உள்ளதைக் குறிக்கிறது.
- "ஒழுக்கம்" (Gk.: *semna*) என்பது நேர்மை - மற்றும் அதிகமானவற்றை - சூழ்ந்து நிற்கிறது. KJV வேதாகமத்தில் "honest" என்றுள்ளது, NIV வேதாகமத்தில் "noble" என்றுள்ளது, மற்றும் CEV வேதாகமத்தில் "*pure*"என்றுள்ளது. AB வேதாகமம் "noble" "மரியாதைக்குரிய வணக்கம் செய்யத் தகுதி வாய்ந்த மற்றும் ... கனத்திற்குரிய மற்றும் மிக மேலான" என்று கூறுகிறது. ஜெரால்டு ஹாவ்தார்ன் என்பவர், *semna* என்பதை ஒரு வார்த்தையில் மொழிபெயர்த்தல் சாத்தியமற்றதாக இருக்கலாம், [ஆனால்] அடிப்படைக் கருத்து தெளிவாக உள்ளது. இது மிக உயர்வான விஷயங்களை, மாட்சிமையான விஷயங்களை, மனதை மலிவான மற்றும் அற்பப் பகட்டானவற்றில் இருந்து மாண்பும் நன்மையும் ஒழுக்கரீதியான மதிப்பும் கொண்டவற்றிற்கு உயர்த்துகிற விஷயங்களைக் குறிக்கிறது[2] என்று எழுதினார்.
- "நீதி" (Gk.: *dikaia*) என்பது, தேவனுக்கும் மனிதருக்கும் சரியானவற்றைச் செய்தலைக் குறிக்கிறது.[3] இங்கு பவுல் பயன்படுத்திய வார்த்தை "நீதி" "just" என்றும் மொழிபெயர்க்கப்படக் கூடியதாக உள்ளது. (KJV மற்றும் தமிழ் வேதாகமங்களில் இவ்வாறே உள்ளது.)
- "கற்பு" (Gk.: *hagna*) என்பது "பரிசுத்தம்" என்பதற்கான வார்த்தையுடன் இணைத்துப் பெற்ற *hagnos* என்ற கூட்டு வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது ஒழுக்கரீதியாக அசுத்தப்படாது இருக்கும் நிலையைக் குறிக்கிறது. 1:16ல் இவ்வார்த்தை "சுத்த மனது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- "அன்புள்ளவை" என்பது "நோக்கி" என்பதற்கான (*pros*) முன்னிடைச் சொல்லை "அன்பு" என்பதற்கான (*phileo*) வார்த்தையுடன் இணைத்துப் பெற்ற *prosphile* என்ற கூட்டு வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இது அன்பின் பதில் செயலை மனதிற்கு வரவழைத்தலைக் குறிக்கிறது. AB வேதாகமத்தில் "அன்புள்ள மற்றும் அன்புகூரக்கூடிய விஷயங்கள்" என்றுள்ளது. NRSV வேதாகமத்தில் "பிரியப்படுத்துகிற" என்றுள்ளது.
- "நற்கீர்த்தியுள்ளவை" என்பது (Gk.: *euphema*) இன்னொரு கூட்டு வார்த்தையில் இருந்து தரவழைக்கப்பட்டுள்ளது, இது "நலமான" அல்லது "நல்ல" என்பதற்கான (*eu* என்ற) முன்னிடைச் சொல்லை, "கூற்று அல்லது அறிக்கை" என்பதற்கான (*pheme* என்ற) வார்த்தையுடன் இணைத்துப் பெறப்பட்டதாக உள்ளது.[4] KJV வேதாகமத்தில் "நல்ல அறிக்கையுள்ளவை" என்றுள்ளது. இவ்வார்த்தை, "நன்குபேசப்படுகிற" - அதாவது "மரியாதைக்குரிய" (NCV வேதாகமத்தில் காணவும்), "பாராட்டத்தக்க"

(NRSV), *மற்றும் "கனத்திற்குரிய"* (TEV) - *என்பதைக் குறிக்கிறது.*

பண்புகளின் இந்தப் பட்டியலைத் தொடர்ந்து இரு நிபந்தனைச் சொற்றொடர்கள் வருகின்றன: "புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ (வசனம் 8ஆ). இதில் "புண்ணியம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (Gk.: *arete என்ற) வார்த்தை, "ஒழுக்கப்பண்பு" என்பதற்கான வழக்கமான வார்த்தையாக உள்ளது* (KJV *வேதாகமத்தில் காண்க) மற்றும் இது "ஒழுக்கரீதியான உன்னதத்தன்மை"*[5] *என்பதைக் குறிக்கிறது - "நீதிமான்கள் வாழ்விலும் சாவிலும் காத்துக்கொள்ளும் மேன்மைத்தன்மை."*[6] *Epainos என்பது, "புகழ்" என்று அர்த்தப்படும் கிரேக்க வார்த்தையாக உள்ளது:* "epi" *("மேலே"), கூட்டல் ainos (புதிய ஏற்பாட்டில் "புகழ்").*[7] *2:1ல் "ஆல்"* [*"உண்டானால்"*] *என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ள அதேவகையில், 4:8ல் "எதுவோ" என்பது ஒரு எழுத்துக் கருவிமுறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. "புண்ணியமானது ஏதேனும் இருந்தால் - மற்றும் அது இருக்கிறது - புகழானது ஏதேனும் இருந்தால் - மற்றும் அது இருக்கிறது - நீங்கள் ஒரு குறிப்பிட்ட வழியில் பதில் செயல் செய்தாக வேண்டும்" என்பதே இங்கு சிந்தனையாக உள்ளது.*

சரியாக சிந்தித்தல்

பவுல் கட்டளையிட்ட பதில்செயல் என்ன? "புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). "சிந்தித்தல்" [*இது* NASB *வேதாகமத்தில்* "dwell" *என்றுள்ளது*] (Gk.: *logizesthe) என்பது "ஜாக்கிரதையாகவும் நினைவு நிறைந்த வகையிலும் சிந்திக்க" என்று அர்த்தப்படுகிறது. "அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்" என்பது, "அந்த விஷயங்களை உங்கள் சிந்தனை நிறைந்த ஆழ்ந்த எண்ணங்களின் ஆய்வுப்பொருள்கள் ஆக்குங்கள்" என்று அர்த்தப்படுகிறது.*[8] CJB *வேதாகமத்தில் "அவற்றின் மீது உங்கள் சிந்தனைகளைக் கவனம் குவியுங்கள்" என்றுள்ளது. எந்த "விஷயங்களை"? சற்று முன்னர் பவுல் பட்டியலிட்ட விஷயங்களை: உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவை களெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளை.*

"உண்மை," "ஒழுக்கம்," "நீதி," மற்றும் இன்ன பிற சொற்களுக்கான விளக்கங்களை மீண்டும் கண்ணோக்குங்கள். கணிசமான அளவுக்கு ஒன்றின்மீது இன்னொன்று கவிந்துள்ள நிலை இருக்கிறது. குறிப்பிட்ட வார்த்தைகளுக்கு மிகச்சரியான விளக்கங்கள் அல்ல, ஆனால் இவ்வார்த்தைகளின் ஒன்றிணைவினால் விட்டுச் செல்லப்பட்டுள்ள பொதுவான மனப்பதிவே முக்கியமானதாக உள்ளது: இழிவாக மற்றும் மதிப்புக்குலையச் செய்யும் விஷயங்களுக்கு நேர் மாறாக உள்ள நல்ல மற்றும் உயர்த்தக்கூடிய விஷயங்கள். பவுலின் புத்திமதியானது எதிர்மறையாகச் சொற்றொடராக்கம் செய்யப் பட்டிருந்தால் அது பின்வருமாறு வாசிக்கப்படலாம்: "பொய்யானவைகள் ... அல்லது ஒழுக்கமற்றவைகள் ... அல்லது அசுத்தமானவைகள் ... அல்லது வெறுப்புள்ளவைகள் ... அல்லது மோசமான பெயர்கொண்டவைகள் ... அல்லது ஒழுக்கரீதியாக சந்தேகத்திற்கு உரியவைகள் ... அல்லது தகுதியற்றவைகள்

ஆகியவற்றின் மீது உங்கள் மனம் சிந்தனை கொள்ள *அனுமதிக்காதீர்கள்."* மனம் என்பது இயல்பாகவே *சிலவற்றைச்* சிந்திக்கக் கூடியதாக உள்ளது. பவுல், தமது வாசகர்கள் தங்கள் சிந்தனைகளை மோசமான விஷயங்களின் மீதல்ல ஆனால் நல்ல விஷயங்களின் மீது, எதிர்மறையானவற்றின் மீதல்ல ஆனால் நேர்மறையானவற்றின் மீது, இடித்துப் போடுபவற்றின் மீதல்ல ஆனால் கட்டி எழுப்புகிறவற்றின் மீது நிலைப்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

நமது வாழ்வானது நமது சிந்தனைகளினால் ஆளப்படுகிறது என்பதும் நாம் நமது சிந்தனைகளைக் கட்டுப்படுத்த என்பதும் நவீன மனோதத்துவத்தின் மாபெரும் இரண்டு "கண்டுபிடிப்புகளாக" உள்ளன. இவ்வாறாக, தனிநபர் ஒவ்வொருவரும் ஒரு கருத்தறிவில், அவரது அல்லது அவளது சொந்த வாழ்வைக் கட்டுப்படுத்தப் பலம் கொண்டுள்ளனர். அறிவியல் அறிஞர்கள் இந்த உண்மைகளைக் "கண்டுபிடிப்பதற்கு" நீண்ட காலம் முன்னதாகவே இவைகள் தேவனுடைய வசனத்தில் [சத்தியங்களாக] வெளிப்படுத்தப்பட்டிருந்தன:

> *எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும் (நீதிமொழிகள் 4:23).*

> *அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான் (நீதிமொழிகள் 23:7).*

> *... அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள் (பிலிப்பியர் 4:8).*

அமெரிக்கக் கட்டுரையாளரும் கவிஞருமான ரால்ஃப் வால்டோ எமர்ஸன் (1803-82) என்பவர், "ஒரு மனிதன் நாள் முழுவதும் எதைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறானோ அதுவாகவே அவன் இருக்கிறான்" என்று கூறினார்.[9] வேறு யாரோ ஒருவர் இதைப் பின்வருமாறு கூறினார்: "ஆத்துமா தனது சிந்தனையின் நிறத்தால் சாயமேற்றப்படுகிறது."

இப்போது யாரேனும் ஒருவர், "ஆனால் என்னால் எனது சிந்தனைகளைக் கட்டுப்படுத்த இயலவில்லையே. அவ்வப்போது மோசமான சிந்தனைகள் எனது மனதில் தோன்றுகின்றன - அதைக் குறித்து நான் ஒன்றும் செய்ய இயலாதே" என்று மறுப்புரை தெரிவிக்கலாம். எனது மைத்துனர் ரிச்சர்டு டேக்கஸ்[10] பிரசங்கித்தவற்றில் நான் கேட்ட முதல் பிரசங்கத்தில், அசுத்தமான சிந்தனைகள் பற்றி அவர் பின்வருமாறு கூறினார்: "அவைகள் பறவைகளைப் போன்றவை. அவைகள் உங்கள் தலைக்கு மேல் பறப்பதை நீங்கள் தவிர்க்க இயலாது, ஆனால் அவைகள் உங்கள் தலைமுடியில் கூடுகட்டுவதை நீங்கள் தடுக்க *முடியும்."* நாம் யாவருமே, நாம் கொண்டிருக்கக் கூடாத சிந்தனைகளைக் கொண்டிருக்கிறோம். "நாம் அவைகளைக் கொண்டிருப்போமா? என்பதல்ல, ஆனால் நாம் அவற்றிலேயே தரித்திருப்போமா?" அல்லது "நாம் அவற்றையே சிந்தித்துக் *கொண்டிருப்போமா?"* என்பதே கேள்வியாக உள்ளது. நான் அடிக்கடி [எனக்குள் எழும்] எதிர்மறையான சிந்தனைகளை நிறுத்தும்படியும் எனக்கு நானே விரிவுரை தரும்படிக்கும் என்னை நானே அழைத்துப் பின்வருமாறு கூறவேண்டியுள்ளது: "ரோப்பர், அதிகமாகக் கட்டியெழுப்பும்படியான சிலவற்றை நோக்கி உன் சிந்தனையைத் திருப்பு!" இது சுலபமானதாக இருக்கிறதா? இல்லை ... ஆனால் இது செய்யப்படக் கூடியதாக உள்ளது.

உதவக்கூடிய ஒரு ஆலோசனை இங்கு தரப்படுகிறது: பிலிப்பியர்

4:8ஐ ஒரு அட்டையில் எழுதி அதை உங்களுக்கு அருகில் வைத்துக் கொள்ளுங்கள். அழிவூட்டும் சிந்தனைகளுடன் நீங்கள் போராடுகையில், அந்த அட்டையில் இருப்பதை வாசித்துப்பாருங்கள். பின்பு உங்களை நீங்களே, "உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளைப் பற்றி நான் நினைக்கக் கூடிய ஏதாவது உள்ளதா? என்று கேட்டுக்கொள்ளுங்கள்." நீங்கள் இதை எவ்வளவு அதிகமாய்ச் செய்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாய் நீங்கள் உங்கள் சிந்தனைகளைக் கட்டுப்படுத்த முடியும்.

ஒரு கிறிஸ்தவர் போன்று செயல்படுதல் (4:9அ)

பவுலின் வாசகர்கள் பக்திவிருத்தி ஊட்டும் விஷயங்களின் மீது தங்கள் சிந்தனைகளை ஒருமுகப்படுத்த வேண்டும் என்று பவுல் விரும்பியது ஏன்? அவர் வெறும் மனரீதியான பயிற்சியை மாத்திரம் பரிந்துரைக்கவில்லை; மாறாக அந்தச் சிந்தனைகள் அவர்களின் செயல்பாடுகளை உருப்படுத்தும் என்பதை அவர் அறிந்திருந்தார். கிறிஸ்தவர்கள் போன்று சிந்தித்தல் மாத்திரம் போதுமானதல்ல; நாம் கிறிஸ்தவர்கள் போன்று செயல்படவும் வேண்டும். மூல மொழி வசனத்தில், 9ம் வசனத்தின் தொடக்கத்திற்கு அண்மையில் "மற்றும்" என்ற வார்த்தை உள்ளது, இது மொழிபெயர்ப்பில் பிரதிபலிப்பதில்லை. இந்த "மற்றும்" என்ற வார்த்தை 9ம் வசனத்தை 8ம் வசனத்துடன் நெருக்கமாகப் பிணைக்கிறது. பவுல் 9ம் வசனத்தில் தமது சிந்தனையைத் தொடர்ந்து கொண்டிருந்தார்: "நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்." செயல்விளைவில் இந்த அப்போஸ்தலர், "உண்மை, ஒழுக்கம், நீதி மற்றும் இவை போன்ற விஷயங்களைப்பற்றி நான் கூறுவது இன்னும் தெளிவில்லாதிருக்கும் பட்சத்தில் எனது உதாரணத்தை நினைத்துக் கொள்ளுங்கள்: நான் எதை சிந்தித்தேன் மற்றும் நான் எதை வாழ்ந்தேன் - இந்தக் காரியங்களைப்பற்றி சிந்தியுங்கள் - மற்றும் அவற்றின்படியே *செய்யுங்கள்.*"

சரியான போதனை

9ம் வசனத்தில் பவுல் முதலில், பிலிப்பியர்களின் ஆவிக்குரிய போதனை நிலையின் நான்கு அம்சங்களைத் தொட்டார்:

- பவுல் போதித்ததையும் பிரசங்கித்ததையும் அவர்கள் "கேட்டு" இருந்தனர். அப்போஸ்தலர் தமது உரையைக் கேட்டவர்களுக்கு, "பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் மறைத்துவைக்க வில்லை;" தேவனுடைய ஆலோசனை எல்லாவற்றையும் அவர்களுக்கு அறிவித்தார், (நடபடிகள் 20:20, 26).
- பவுலிடமிருந்து அவர்கள் தேவனுடைய வசனத்தை "கற்று" இருந்தனர். அவர் போதித்ததை அவர்கள் நன்கு புரிந்துணர்ந்து அதை நினைவில் வைத்திருந்தனர்.
- பவுலின் உதாரணத்தை அவர்கள் "கண்டும்" இருந்தனர் -

அவர் தாம் முன்வைத்த கொள்கைகளைத் தமது வாழ்வில் செயல்விளக்கப்படுத்தினார். பரிசேயர்களைப் போலின்றி (மத்தேயு 23:3), அவர்கள் "கூறியதோடு" மாத்திரம் நின்றுவிடாமல், அவற்றின்படி "செய்தும்" வாழ்ந்தார். ஏற்புடைய ஒரு உதாரணத்தைப் போன்று புரிந்து கொள்ள உதவுவது வேறொன்றும் இல்லை (காண்க 1 தீமோத்தேயு 4:12; தீத்து 2:7).

பவுல் கூறியவற்றை அவர்கள் "அடைந்து" இருந்தனர் என்ற உண்மையே மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.[11] *கிரேக்க மொழியில், paralambano "அடைந்து" என்பது "அடைதல்" என்பதற்கான (lambano என்ற) வார்த்தையுடன் "அருகாக" என்பதற்கான (para என்ற) முன்னிடைச் சொல்லைச் சேர்த்துப் பெறப்பட்ட கூட்டு வார்த்தையில் இருந்து வருகிறது. இது "அருகாக அடைதல்" - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், ஒருவரை ஏற்றுக்கொள்ளுதல் - என்று அர்த்தப்படுகிறது. பவுலின் போதனையை கேட்குதல், கற்றுக்கொள்ளுதல் மற்றும் காணுதல் ஆகியவை பிலிப்பியர்களுக்கு முக்கியமான விஷயமாக இருக்கிறது; ஆனால் அந்த போதனையை ஏற்று, நித்திய சத்தியங்களைத் தங்கள் சொந்தமானவைகள் என்று ஏற்புடையதாக்கிக் கொள்ளுதல் என்பது இன்னும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.*

சரியான பயிற்சி

பவுல், தாம் போதித்திருந்தவற்றைப் பிலிப்பியர்கள் கற்றுக்கொண்டது மற்றும் அதைப் பெற்றுக் கொண்டது ஆகியவற்றைப் பற்றிப் பேசியபின்னர், "அவைகளையே செய்யுங்கள்" என்றும் கூடுதலாகக் கூறினார் (வசனம் 9ஆ). மூல மொழியில் "செய்யுங்கள்" என்பது prasso என்பதன் ஒரு வடிவமாக உள்ளது. "பொதுவாகப் பேசுவதென்றால், பவுலின் நிருபங்களில் ... prasso என்பது ஒரு வழக்கத்தைக் குறிக்கிறது ... இது ஒரு குறிப்பிட்ட சாதனைக்கு வழிநடத்தும் செயல்முறையை வலியுறுத்துகிறது."[12] *இவ்வார்த்தை, ஒரு செயல் இயல்பாகும் வரையிலும் அதைத் திரும்பத் திரும்பச் செய்தல் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. இதை "கூடுதலாக - செய்தல்" என்ற வகையில் நினைத்துப் பாருங்கள்.*

"செய்யுங்கள்" என்பதற்கான ("practice" என்ற) ஆங்கில வார்த்தையின் ஒரு விளக்கத்திற்கு நாம் கிரேக்கச் சொற்றொடரை ஒப்பிடலாம்: "ஒரு திறனை அடைவதற்காகத் திரும்பத் திரும்ப நிகழ்த்துதல்." பயிற்சி செய்தல் மீதான வெறுப்பு என்பதே திறமைகளை அடிக்கடி மட்டுப்படுத்துகிறது. சிலர் ஒரு குறிப்பிட்ட விளையாட்டில் சிறந்து விளங்க விரும்புவார்கள் - ஆனால் அவர்கள் அதைப் பயிற்சி செய்வதை வெறுப்பார்கள். சிலர் பாடகர்களாக அல்லது இசையமைப்பாளர்களாக விளங்க வேண்டும் என்று விரும்புவார்கள் - ஆனால் அதைப் பயிற்சி செய்வதை அவர்கள் விரும்ப மாட்டார்கள். (பொழுதுபோக்கு நிகழ்ச்சியாளர் ஒருவரையும் அவரது மனைவியையும் பேட்டி கண்ட போது, அந்தப் பெண்மணி என்னிடத்தில், "அவர் 'ப' வார்த்தையை வெறுக்கிறார் என்பதே அவரது ஒரே குறைபாடு ஆகும்" என்று கூறினார். நான் திகைப்படைந்தவனாக நோக்கியபோது, அப்பெண்மணி, "அவர்பயிற்சி செய்ய விரும்புவதில்லை" என்று விளக்கம் அளித்தார்.) அவ்வாறே, சிலர் "பயிற்சி" மூலமாகக் கிறிஸ்தவ வாழ்வின் "திறன்களை" மேம்படுத்திக் கொள்ள

மனவிருப்பம் இல்லாதிருக்கின்றனர்.

முடிவுரை (4:9ஆ)

9ம் வசனத்தின் முடிவில் பவுல், சமாதானம் என்ற பாடக்கருத்திற்குத் திரும்பினார்: "அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்." இது பவுலுக்கு விருப்பமான ஆசீர்வாதக் கூற்றாக இருந்தது (காண்க ரோமர் 15:33; 2 கொரிந்தியார் 13:11; 1 தெசலோனிக்கேயர் 5:23; 2 தெசலோனிக்கேயர் 3:16). மீண்டும், "and" என்ற வார்த்தையைக் கவனியாது விடாதீர்கள் (இது தமிழில் "அப்பொழுது" என்றுள்ளது). செயல்விளைவில் அப்போஸ்தலர், "நீங்கள் நினைக்க வேண்டியபடி நினைப்பீர்கள் *என்றால், மற்றும்* நீங்கள் வாழவேண்டியபடி வாழ்வீர்கள் *என்றால், அப்பொழுது* சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்."

7ம் வசனத்தில் பவுல், "தேவசமாதானம்" பற்றிப் பேசினார் - இது தேவன், தேவன் மாத்திரமே தரக்கூடிய சமாதானமாகும். இப்போது சொற்றொடர்கள் திருப்பப்பட்டுள்ளன: "சமாதானத்தின் தேவன்" - வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், சமாதானத்தின் ஆதாரமூலமாக இருக்கும் ஒருவர். இவ்வசனத்தில் "பவுல், எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" என்று கூறினார். பாதுகாக்கப்பட்டுள்ள ஒரு நகரில் குடிமகன் ஒருவர் பத்திரமாக வாழ்வதைக் கற்பனை செய்து பாருங்கள். அந்தக் காட்சிக்கு 9ம் வசனம் ஒரு விபரத்தைக் கூட்டுகிறது: அந்தக் குடிமகனின் பக்கத்தில் அவரைப் பாதுகாப்பவர் இருக்கிறார்: "அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்"!

நீங்கள், "தேவசமாதான" த்தையும் "சமாதானத்தின் தேவனையும்" கொண்டிருக்க விரும்புவதில்லையா? அப்படி என்றால், இந்தப் படிப்பின் தொடக்கத்தில் குறிப்பிட்டபடி, நீங்கள் தெளிவாகச் சிந்தித்து, சரியானபடி நடக்க வேண்டும்.

குறிப்புகள்

நீங்கள் இந்தப் பாடத்தைப் பயன்படுத்தும்போது, ஒரு கிறிஸ்தவராவதற்கு பிலிப்பியர் 4:8, 9 வசனங்கள் மீது ஒரு சிறப்பான நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துங்கள்: "(1) *தெளிவாகச் சிந்தியுங்கள்.* இயேசு, 8ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுக்கநெறிகள் எல்லாவற்றிற்கும் நபர்த்துவமாக இருக்கிறார். அவரைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள் (யோவான் 14:1)! (2) சரியானபடி செயல்படுங்கள். ஒரு கிறிஸ்தவராவது எப்படி என்று நீங்கள் கேள்விப்பட்டு கற்றுக்கொண்டு இருக்கிறீர்கள் (மாற்கு 16:15, 16). ம ற்றவர்கள் கிறிஸ்தவர்களாவதை உங்களில் பலர் பார்த்திருக்கிறீர்கள். நீங்கள் இந்தப் போதனையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தால், நீங்கள் மனம் வருந்திய விசுவாசி என்ற வகையில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வீர்கள் (நடபடிகள் 2:36-38)!" தெளிவாகச் சிந்திக்கவும் சரியாகச் செயல்படவும் தவறியுள்ள கிறிஸ்தவர்கள் மீளக்கட்டுவிக்கப் படும்படிக்கு அவர்களை உற்சாகப்படுத்தும் நடைமுறைப் பயன்பாட்டையும் நீங்கள் மேற்கொள்ள முடியும் (நடபடிகள் 8:22, 23).

இது, மூன்று பாகப் பாடம் ஒன்றின் மூன்றாவது பாகமாக உள்ளது. பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் பற்றிய இந்தப் பாடங்களை நீங்கள் பதிமூன்று வகுப்புகளில் முடிக்க வேண்டியது அவசியம் என்றால், இந்தப் பாடத்தை இதற்கு முந்திய இரு பாடங்களுடன் ஒன்றாக இணைத்துக் கொள்ளுங்கள். இதைச் செய்வதற்கான ஆலோசனைகள் "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம்" என்ற பாடத்தைத் தொடர்ந்து வரும் குறிப்புகளில் காணப்படுகின்றன.

குறிப்புகள்

[1]*இந்த தலைப்பு,* David George, "Preaching on Philippians," *Southwest Journal of Theology* 23 (Fall 1980): 48 *என்ற பத்திரிக்கையிலிருந்து தழுவப்பட்டது.* [2]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary,* vol. 43, *Philippians,* ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 188. [3]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III (Minneapolis: Bethany House Publishers, 1984), 613. [4]Ibid., 953. [5]Ibid., 1201-02. [6]Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittle and Gerhard Friedrich, trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 77-78. [7]Vine, 870. [8]Ibid., 1139. [9]Quoted in Thomas A. Harris, *I'm OK - You're OK* (New York: Harper & Row, 1969), 264. [10]Richard Dacus, "Watch," sermon preached at South Burns, Oklahoma, church of Christ, 2 September 1945.

[11]*"அடைந்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை "பாரம்பரியத்தின் பெறுதலுக்கான தனி நுட்ப வார்த்தையாக உள்ளது"* (Pat Edwin Harrell *The Letter of Paul to The Philippians,* The Living Word Commentary series ed. Everett Ferguson [Austin, Tex.: R. B. Sweet Co., 1969], 141). *(காண்க மாற்கு 7:4). பிலிப்பியர் 4:9ல் "பாரம்பரியம்" என்பது மனிதர்களின் பாரம்பரியம் என்பதாக இருப்பதில்லை (காண்க மாற்கு 7:8; கொலோசெயர் 2:8), ஆனால் அது பவுலைப் போன்று ஏவுதல் பெற்ற பேச்சாளர்கள் மற்றும் எழுத்தாளர்களின் மூலமாகத் தேவனிடத்தில் இருந்து பெற்றுக் கையளிக்கப்பட்ட "பாரம்பரியம்" என்பதாக உள்ளது (காண்க 1 கொரிந்தியர் 11:2; 2 தெசலோனிக்கேயர் 2:15; 3:6).* [12]Vine, 322.

17

நாம் அறிந்துகொள்ள அவசியமான ஒரே "இரகசியம்"

(பிலிப்பியர் 4:10-14)

"என்னிடம் ஒரு இரகசியம் உள்ளது": இந்த வார்த்தைகளைப் பற்றிய மனம் ஈர்க்கும் விஷயம் ஒன்றுள்ளது. காதுகள் குத்திட்டு நிற்கின்றன, மக்கள் "அது என்ன? நான் அதை யாரிடமும் சொல்ல மாட்டேன்!" என்று மெதுவாய்ச் சொல்லி [அந்த இரகசியத்தைக் கேட்க] முன்னோக்கிச் சாய்கின்றனர். சில "மாயாவாத மார்க்கங்கள்" கள்ளம் கபடம் இல்லாத மக்களைப் பட்சிக்க, இரகசியங்களை அறிவதற்கான [அவர்களின்] விருப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றன. அவைகள் "இரகசிய" சொற்றொடர்களைக் கொண்டுள்ளன மற்றும் "இரகசிய" சடங்குகளில் பங்கேற்கின்றன. அவைகள் இந்த அண்டத்தின் இரகசியங்களுக்கான திறவுகோல்களைக் கொண்டுள்ளதாக உரிமை கோருகின்றன. அவைகள் அந்த மார்க்கத்தில் சேர்ந்தவர்களுக்கு மாத்திரம் அந்த அறிவு கிடைக்கும் என்று வாக்குறுதி அளிக்கின்றன. இந்த வஞ்சகத்திற்கு நேரெதிரான வகையில், நமது வேதபாட வசனப் பகுதியின் 12ம் வசனத்தைக் கண்ணோக்குங்கள். அங்கு பவுல், தாம் கொண்டிருந்த உண்மையான மற்றும் முக்கியமான "இரகசியத்தை" மறைமுகமாய்க் குறிப்பிட்டார்: "... எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்." ஏரல் பால்மர் என்பவர் இதை "நமக்குத் தேவையான ஒரே இரகசியம்" என்று அழைத்தார்.[1]

பவுல் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தின் முடிவுப் பகுதியை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம். அவர் ஒரு கடைசிப் பணிப்பொறுப்பைக் கொண்டிருந்தார்: எப்பாப்பிரோதீத்து மூலமாக அவர்கள் அவருக்கு அனுப்பியிருந்த கொடைக்காகத் தமது பாராட்டுதலை வெளிப்படுத்துதல். அப்போஸ்தலர், "உங்களுக்கு நன்றி" என்று மட்டும் கூற இயலாதிருந்தார். அதற்குப் பதிலாக, "பவுலின் எழுத்துக்களின் சிறப்பு அம்சம் என்ற வகையில், உங்களுக்கு நன்றி என்று எளிமையாகக் கூறக்கூடிய சில விஷயங்கள் கூட, ஆவிக்குரிய மற்றும் நடைமுறை உட்கண்ணோக்கின் ஆழ்ந்தறிவுள்ள கணங்களைக் கொண்டு ஒரு நீண்ட பத்தியாக மாறுகின்றன."[2] இந்த எடுத்துரைப்பில் நாம் - அப்போஸ்தலரின் மனநிறைவினுடைய "இரகசியம்" உட்பட - இந்த "ஆழ்ந்தறிவுள்ள கணங்களில்" சிலவற்றை நாம் எதிர் கொள்வோம்.

திருப்திகரமான ஒரு சூழ்நிலை (4:10)

பிலிப்பியர்களின் கொடையைப் பற்றிப் பவுல் ஏற்கனவே மறைமுகமாகக் குறிப்பிட்டிருந்தார் (1:5; 2:25-30); இப்போது அவர் அந்தத் தலைப்பிற்கு மீண்டும்

திரும்பி, விபரமாக எடுத்துரைத்தார் (காண்க 4:14, 18). இந்த நிருபத்தில் சந்தோஷத்திற்கான கடைசிக் குறிப்புடன் நமது வேதபாட வசனப் பகுதியான 4:10-14 தொடங்குகிறது: "கர்த்தருக்குள் மிகவும் சந்தோஷப்பட்டேன்" (வசனம் 10அ). இந்த ஒரு இடத்தில்தான் பவுல் சந்தோஷத்தைக் பற்றிய குறிப்பை [பெயர் உரிச்சொல் ஒன்றைக் கொண்டு] தகுதிப்படுத்தினார்: அவர் "மிகவும்" சந்தோஷப்பட்டார் என்பது, அவர் அந்த சந்தோஷத்தை எவ்வளவு பலமாக உணர்ந்தார் என்பதைக் சுட்டிக்காண்பிக்கிறது. அவர் இவ்வாறு சந்தோஷப்படக் காரணம் என்ன? பிலிப்பியர்களின் அன்பின் வெளிப்பாடுதான் அதற்குக் காரணம். இருப்பினும் நாம் பார்க்கப்போகிறபடி, அப்போஸ்தலர் தாம் பெற்றுக்கொண்ட கொடைக்காக அதிக சந்தோஷப்படவில்லை, ஆனால் அது காண்பித்த அக்கறை என்ற உண்மைக்காக அதிகம் சந்தோஷப்பட்டார். இப்பகுதியில், பொருட்களின் மீதல்ல ஆனால் மக்களின் மீதே - கொடையின் மீதல்ல ஆனால் கொடுத்தவர்கள் மீதே - வலியுறுத்தம் உள்ளது.

பவுல், "என்னை விசாரிப்பதற்கு நீங்கள் இப்பொழுது மறுபடியும் மனமலர்ந்தபடியினாலே கர்த்தருக்குள் மிகவும் சந்தோஷப்பட்டேன்" என்று எழுதினார் (வசனம் 10அ, ஆ). இந்தக் கூற்றின் முதல் பாகம் ஒரு மெல்லிய கண்டனமாக எடுத்துக் கொள்ளப்படக்கூடும், ஆனால் கிரேக்க வசனத்தில் இவ்வித குறிப்பு எதுவும் இல்லை. தொடர்ந்து அப்போஸ்தலர், "இப்படிச் செய்ய எண்ணங்கொண்டிருந்தீர்கள், சமயம்மாத்திரம் உங்களுக்கு நேரிடவில்லை" என்று எழுதினார் (வசனம் 10இ). மூல வசனத்தில், "எண்ணங்கொண்டிருந்தீர்கள்" என்பது முடிவுறா வினைச் சொல்லாக உள்ளது, இது கடந்த காலத்தில் தொடர்ந்து நடந்த செயலைக் குறிக்கிறது. இது, "நீங்கள் தொடர்ந்து எண்ணங்கொண்டிருந்தீர்கள்" என்று மொழிபெயர்க்கப் படலாம். அவர்கள் தங்கள் அக்கறையைக் காண்பிக்க "வாய்ப்புக் குறைவாக" இருந்தது என்பதே அவர்களின் பிரச்சனையாயிருந்தது. NCV *வேதாகமத்தில் "அதைக் காண்பிக்க உங்களுக்கு வழி எதுவும் இல்லாதிருந்தது" என்றுள்ளது. பவுல், "அவர்களின் சிந்தனைக்குப் புறம்பே இருக்கவில்லை, ஆனால் அவர், அவர்களின் அடைவு எல்லைக்கு அப்பால் இருந்தார்!"*[3]

பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் பவுலுக்கு உதவும் வாய்ப்பில் ஏன் குறைவுபட்டிருந்தனர் என்பது பற்றி நாம் நிச்சயமாக எதுவும் கூற இயலாது. ஒரு வேளை அவர்கள், அந்த அப்போஸ்தலர் எருசலேமுக்குச் செல்ல மெக்கதோனியாவை விட்டுப் புறப்பட்டுச் சென்ற பின்பு அவருடனான தொடர்பை இழந்திருக்கலாம் (நடபடிகள் 20:6, 16). (அந்த வேளையில் இருந்து, பவுலுக்கு அதிகமான விஷயங்கள் நடந்திருந்தன!) ஒருவேளை அவர்களின் "கொடிய தரித்திரம்" (காண்க 2 கொரிந்தியர் 8:2) அவர்களைச் சற்றுக்காலம் தடைசெய்திருக்கலாம். அவர்கள் தங்கள் நண்பர் இருந்த இடத்திற்குப் பயணமாகச் செல்ல யாரேனும் ஒருவரைக் கண்டுபிடிப்பதில் சிரமம் கொண்டிருக்கவும் சாத்தியக்கூறு உள்ளது. எவ்வகையிலும், உதவி செய்வதில் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த தோல்வியானது, அவர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் இருந்த சூழ்நிலைகளினாலேயே ஏற்பட்டிருந்தது.

கடைசியாக அவர்கள் பிரச்சனையை (அது என்னவாக இருந்தாலும்) வெற்றிகொண்டனர், மற்றும் பவுலின் மீதான அவர்களின் அக்கறை "மறுபடியும் மனமலர்ந்தது" (பிலிப்பியர் 4:10ஆ). "மறுபடியும் மனமலர்ந்தது"

என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "மறுபடியும் மலருதல் அல்லது தளிர்விடுதல்" என்று அர்த்தப்படும் ஒரு கூட்டு வார்த்தையான *anathallo* என்பதன் ஒரு வடிவமாகும்.[4] NEB, வேதாகமத்தில் "என்மீதான உங்கள் அக்கறை இப்போது புதிதாக மலர்ந்துள்ளது" என்று இருக்கிறது. "மனமலருதல்" என்பதற்கான வார்த்தை, கிரேக்கப் பழைய ஏற்பாட்டில் ஒரு உலர்ந்த மரம் உயிர்பெறுவதைக் குறிக்கப்பயன்பட்டது (காண்க எசேக்கியல் 17:24).

இது எனக்கு, அர்க்கன்சாஸ் மாகாணத்தில் வசந்த காலத்தை நினைவூட்டுகிறது. குளிர்கால மாதங்களில், ஒரு குளிர்ச்சியானது காற்றில் மிதக்கிறது, புல் இறந்தது போன்று தோற்றம் அளிக்கிறது, மரங்கள் வெறுமையாக இருக்கின்றன, மற்றும் எந்த மலரும் பார்வையில் படுவதில்லை. பின்பு குளிரானது வெதுவெதுப்பாக மாறுகிறது, மற்றும் மழை பெய்யத் தொடங்குகிறது. எல்லாம் மீண்டும் பச்சையாகின்றன, இங்கும் அங்கும் வண்ணம் தெளிக்கும் மலர்கள் மலருகின்றன. பூமியும் மரங்களும் குளிர் காலம் முழுவதிலும் தங்கள் உயிரைத் தக்க வைத்திருந்தன, ஆனால் வசந்த காலத்தில் மறுபடியும் மலர, அவைகளுக்குச் சூரியனும் மழையும் தேவைப்பட்டன. அதுபோலவே, பவுல் மீது பிலிப்பியர்கள் கொண்டிருந்த அக்கறை ஒருக்காலும் இறந்து போகவில்லை, ஆனால் அது மறுபடியும் மலருவதற்குச் சரியான சூழ்நிலைகள் தேவைப்பட்டிருந்தன.

நீண்ட, கடினமான குளிர் காலத்திற்குப் பின்னர் எல்லாம் திரும்பவும் உயிர் பெற்றதைக் காண்பது மகிழ்வானதாக இருப்பதில்லையா? பவுல், பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் தம்மீது கொண்ட அக்கறை "மறுபடியும் மனமலர்ந்தது" என்று எழுதுகையில், அவ்வகையான மகிழ்ச்சியைக் கொண்டிருந்தார்.

திகைக்கவைக்கும் ஒரு கூற்று
(4:11, 12, 14)

பிலிப்பியர்களின் கொடையைப் பற்றித் தாம் மகிழ்ச்சி அடைந்ததாகக் கூறிய நிலையில் பவுல், "நீங்கள் அனுப்பியது உண்மையிலேயே எனக்குத் *தேவையாயிருந்தது!* அது இல்லாத நிலையில் நான் என்ன செய்திருப்பேன் என்று எனக்குத் தெரியாது!" என்று கூடுதலாகக் கூறும்படி எதிர்பார்க்கப் பட்டிருப்பார். அப்போஸ்தலருக்கு அந்த உதவி *தேவைப்பட்டது* என்பதில் சிறிதளவே சந்தேகம் உள்ளது. 14ம் வசனத்தில் அவர் தமது "உபத்திரவம்" பற்றிப் பேசினார் - இது (நமது அடுத்த பாடத்தில் நாம் காணப்போகிறபடி) குறைபாட்டை மறைமுகமாய் உணர்த்தும் ஒரு பலமான வார்த்தையாகும். இருப்பினும் பவுல், அந்தக் கொடைக்காகத் தாம் கொண்டிருந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் அது வெளிப்படுத்திய *அக்கறைக்காக* அதிகம் மகிழ்ந்ததைத் தமது வாசகர்கள் அறிய வேண்டும் என்று விரும்பினார். இவ்வாறாக அவர் விரைவாக "என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை" என்று கூடுதலாய்க் கூறினார் (வசனம் 11அ). எனது பெண்கள் [மகள்கள்] சிறுமிகளாக இருந்தபோது, அவர்கள் எனக்குத் தந்த பரிசுகள் என் நினைவிற்கு வருகிறது. அவர்களின் பரிசுகள் - ஏதோ சில பௌதீக தேவைகளைக் கவனித்துக் கொண்டதால் அல்ல, ஆனால் அவர்கள் என் மீது எனது மகள்களுக்கான அன்பைக் காண்பித்ததால் - எனக்கு மிகவும் சிறப்பானவைகளாக இருந்தன.

11ம் வசனத்தின் முதல் பாகத்திற்கு, TEV வேதாகமம் பின்வரும்

தரவழைப்பைக் கொண்டுள்ளது: "நான் புறக்கணிக்கப்பட்டதாக உணர்ந்ததால் இதைக் கூறவில்லை." சந்தர்ப்பப் பொருளில் இருந்து நாம் பின்வரும் சிந்தனையையும் வழங்கலாம்: "மற்றும் இதை நான், [நீங்கள்] இன்னொரு கொடையை அனுப்புவதற்கான மறைமுகக் குறிப்பாகக் கூறவில்லை" (காண்க வசனம் 17அ).

அறிவித்தல்

பவுல் "தமது மிகவும் மறக்க இயலாத விசுவாசத்தின் வாக்கியங்களில் ஒன்றை" எழுதத் தொடர்ந்தார்[5]: " ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்" (வசனம் 11ஆ). கிரேக்க மொழி வசனத்தில், "நான்" என்பது வலியுறுத்தமாக உள்ளது.[6] இது இந்த அப்போஸ்தலர், "ஒருவேளை மற்றவர்கள், மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொள்ளாது இருக்கின்றனர், ஆனால் *நான்* அதைக் கற்றுக் கொண்டு இருக்கிறேன்" என்று கூறுவதைப் போலுள்ளது.

பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்த சில "சூழ்நிலைகள்" தொடர்ந்து வரும் வசனத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன: "தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; ... எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்" (வசனம் 12). "எவ்விடத்திலும் எல்லாவற்றிலும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொற்றொடர், "ஒவ்வொரு விஷயத்திலும், எல்லாவற்றிலும் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க முடியும்." "ஒவ்வொரு விஷயத்திலும்" தனித்தனியாகவும், "எல்லாவற்றிலும்" கூட்டாகவும், வாழ்க்கையைக் கையாள்வதைப் பவுல் கற்றிருந்தார்.

பவுலினால் பட்டியலிடப்பட்டுள்ள "சூழ்நிலைகள்" வாழ்வின் மேடுகள் மற்றும் பள்ளங்கள், மேலான மற்றம் தாழ்ந்த இடங்கள், நல்ல மற்றும் மோசமான வேளைகள் என்று நினைக்கப்படலாம். அப்போஸ்தலர் தமது வாழ்வில் தாழ்ந்த இடங்களை அனுபவித்திருந்தார். "தாழ்ந்திருக்கவும்" என்பது, "தாழ்ந்திருக்க" என்று அர்த்தப்படுகிற (*tapeinousthai* என்ற) ஒரே கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது 2:8ல் "தாழ்த்தினார்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைக்கான அதே வேர் வார்த்தையைக் கொண்டுள்ளது. 4:12ல் இவ்வார்த்தை, பிறரைச் சார்ந்து இருக்கக் கூடிய நிலையான, போதிய வளங்கள் கொண்டிராத தாழ்ந்த நிலையைக் குறிப்பிடுகிறது. விரும்பப்படாத இந்த சூழ்நிலையைப் பவுல், "குறைவுபட" என்று குறிப்பிட்டார். பிரச்சனையின் இந்த நிலைக்கு அவர் ஒரு குறிப்பிட்ட உதாரணத்தைக் கொடுத்தார்: "பட்டினியாயிருக்க." வேறோரு இடத்தில் அவர், "... வருத்தத்திலும், ... பசியிலும், தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்" என்று எழுதினார் (2 கொரிந்தியர் 11:27). நீங்கள் அனேகமாக உங்கள் வாழ்விலும் தாழ்வான வேளைகளை அனுபவித்து இருக்கலாம். பவுல், அந்த "மோசமான நாட்களை" எவ்வாறு கையாள்வது என்று கற்றிருந்தார் - மற்றும் அது எவ்வாறு என்பதை நமது வேதவசனப் பகுதி நமக்குக் கூறுகிறது.

யாரேனும் ஒருவர் பின்வருமாறு கூறி இடைமறிக்க விரும்பலாம்: "ஒரு நிமிடம் பொறுங்கள்! தேவன் எப்போதுமே வாழ்வின் தேவைகளை நமக்குக்

கொடுப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறார் [காண்க மத்தேயு 6:31-33; சங்கீதம் 37:25]. தேவனுடைய பிள்ளையொருவர் ஒருபோதும் பட்டினியாக இருக்க மாட்டாரே!" பவுல் தேவனுடைய பிள்ளையாக இருந்தார், ஆனால் அவர் "அநேகமுறை ஆகாரம் இல்லாமல்" இருந்தார் (2 கொரிந்தியர் 11:27). பிச்சைக்காரரான லாசரு தேவனால் அங்கீகரிக்கப்பட்டிருந்தார், ஆனால் அவர் பட்டினியாக இருந்தார் (லூக்கா 16:20-22). ஆம், தேவன் நம்மைக் கவனித்துக் கொள்கிறார் (இதைப் பற்றி இன்னும் சற்று நேரத்தில் நான் அதிகமாகக் கூறப்போகிறேன்), மற்றும் அவர் நமது வயிறுகளைப் பற்றி அக்கறையாக இருக்கிறார் - ஆனால் அவர் நமது ஆத்துமாக்களைப் பற்றி அதிக அக்றை கொண்டுள்ளார். இன்றைய நாட்களில் சிலர், தேவன் மீது விசுவாசம் கொண்டுள்ள அவரது பிள்ளை ஒருக்காலும் வியாதிப்படுவதோ, பட்டினியாயிருப்பதோ அல்லது ஏழையாக இருப்பதோ இல்லை என்று போதிக்கின்றனர். சுயத்தைச் சேவிக்கும் இந்தத் தவறு பவுலை "விசுவாசமற்றவர்" ஆக்குவதாக இருக்கும்; ஏனெனில் பல்வேறு வேளைகளில் அப்போஸ்தலர் இவை எல்லாமுமாக இருந்தார் (2 கொரிந்தியர் 11:27; 12:7).

பவுல், தமது வாழ்வில் தாழ்ந்த இடங்களை மாத்திரம் கொண்டிருக்கவில்லை; அவர் உயர்வான இடங்களையும் கொண்டிருந்தார். அவர் "வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்" என்று எழுதினார் மற்றும் "பரிபூரணமும் உண்டாயிருக்கிறது" என்பதைப் பற்றி அவர் பேசினார். பவுல் ஒரு செல்வந்தக் குடும்பத்தில் இருந்து வந்தவர், ஏதோ ஒரு வேளையில் அவர் ஒரு பரம்பரைச் சொத்தைப் பெற்றிருந்தார் என்று சிலர் யூகிக்கின்றனர். அது சாத்தியமானதாக உள்ளது, ஆனால் இங்கு அவர் தமது உடனடித் தேவைகளைச் சகோதரரின் தாராள மனப்பான்மை அபரிமிதமாய்ச் சந்தித்த வேளைகளை மாத்திரம் குறிப்பிட்டு இருக்கலாம் (காண்க பிலிப்பியர் 4:18). மீண்டுமாக, பரிபூரணமும் கொண்டிருந்ததற்கான அப்போஸ்தலரின் உதாரணம் உணவு விஷயத்தைச் சார்ந்திருக்கக் கூடும்: அவர் "திருப்தியடைந்திருக்கிறேன்" என்று குறிப்பிட்டார். நீங்கள் எப்போதாவது, உணவு உண்டபின்பு, உங்கள் வயிற்றைத் தட்டிப்பார்த்துக் கொண்டு, "நான் திருப்தியடைந்திருக்கிறேன்" என்று பெருமூச்சுடன் சொன்னதுண்டா? அப்படி என்றால் அப்போஸ்தலர் அர்த்தப்படுத்தியது என்ன என்பதை நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள்.

பவுல் "வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்" என்று கூறியதைப் பற்றிச் சிலர் திகைப்படைவார்கள். அவர்கள், "ஆனால் வாழ்ந்திருப்பது எப்படி என்று ஒவ்வொருவரும் அறிந்திருக்கின்றார்களே" என்று கூறி மறுப்புரை தெரிவிப்பதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. இல்லை, அவர்கள் அவ்வாறு அறிந்திருப்பதில்லை. குறைந்த பட்சமாகக் கூறுவதென்றால், மக்கள் வளமையாயிருக்கையில் *தேவன் விரும்புகிறபடி வாழ்வது எப்படி* என்பதை ஒவ்வொருவரும் அறிந்து இருப்பதில்லை. வருமையில் உள்ளதைப் போன்றே வளமையிலும் பல அபாயங்கள் உள்ளன - ஒருவேளை இது அதிகமாகவும் இருக்கலாம். பவுல் பின்வருமாறு எச்சரித்தார்:

> ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும்

வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள் (1 தீமோத்தேயு 6:9, 10).

ஒருவர் ஏழையாக இருக்கும்போது பெருவருத்தம் என்பது அபாயமாக உள்ளது. ஒருவர் செல்வந்தராக இருக்கும்போது, மேட்டிமை என்பது அபாயமாக உள்ளது (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 3:17). எனவே ஆகூர், "... தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக. நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும்; தரித்திரப்படுகிறதினால் திருடி, என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், ..." என்று ஜெபித்தார் (நீதிமொழிகள் 30:8, 9).

பவுல் "ஏழ்மை தம்மைக் கனவீனப்படுத்தவோ அல்லது வளமை தம்மை மேன்மைப்படுத்தவோ அனுமதிக்கவில்லை."[7] அவர் வாழ்வின் சூழ்நிலைகள் ஒரு கணப்பொழுதில் மாற முடியும் என்பதையும் இந்த சூழ்நிலைகளில் எதுவும் தாம் உண்மையில் யாராக இருந்தார் என்பதை விளக்கப்படுத்தவில்லை என்பதையும் புரிந்துகொண்டிருந்தார். அவர் தமக்கு நேரிடும் எதையும், அவர் ஆண்டவருடன் இணைந்து கையாள முடியும் என்று விசுவாசித்தார். இவ்வாறாக அவர், "நான் *எந்த* நிலைமையிலிருந்தாலும்" - அது "நல்ல" அல்லது "மோசமான" என்ற எதுவாக இருந்தாலும் - மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன் என்று கூற முடிந்தது. அவருடைய கூற்று என்னை ஆச்சரியப்படுத்துகிறது. உண்மையில், நான் வெட்கப்பட்டு என் தலையைத் தாழ்த்தும்படி செய்கிறது. ஏனெனில் என் வாழ்கையில் ஒரு சூழ்நிலையில் சில வேளைகளில் நான் திருப்தியாய் இருப்பதில்லை என்பதை நான் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

வேறொரு இடத்தில் பவுல், போதுமென்கிற மனதுடனே கூடிய "தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்தில் நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்" என்று எழுதினார் (1 தீமோத்தேயு 6:6-8). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று சொல்லி யிருக்கிறாரே" என்று கூறினார் (எபிரெயர் 13:5).

விளக்கங்கள்

இது, நாம் சற்றே நின்று, "மனரம்மியமாயிருத்தல் பற்றிப் பவுல் பேசியபோது, அவர் உண்மையில் எதை *அர்த்தப்படுத்தினார்?*" என்று கேட்பதற்கான வேளையாக உள்ளது. "மனரம்மியம்" என்ற வார்த்தை சில வேளைகளில் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. மனரம்மியம் என்பது, அறியாமையின் மீதான அடிப்படையில் அமைந்த கலக்கமற்ற தன்மையாக அல்லது தவறாகக் கற்பிதம் செய்துகொள்ளப்பட்ட சமாதானமாக இருப்பதில்லை. "இது [சூழ்நிலைகள்] மோசமானவையாக இருக்கும்போது, அவைகள் நல்லவையாக உள்ளன என்று பாசாங்கு செய்தல் அல்ல. இது ஒவ்வொரு பிரச்சனையிலும் நேர்மறையான

பக்கத்தைப் பார்க்க மட்டும் முயற்சி செய்தலாக இருப்பதில்லை."[8]

"மனரம்மியம்" என்பதன் மீதான கலந்துரையாடல்களை நான் கேட்டிருக்கிறேன், அவற்றில் பல, அதற்கு ஆங்கில வார்த்தையின் அடிப்படையில் அமைந்துள்ளன. சில வேளைகளில், "மனரம்மியம்" மற்றும் "திருப்தி" என்ற வார்த்தைகளுக்கு இடையிலான நேரெதிர் ஒப்பீடும் ஏற்படுத்தப்பட்டுள்ளது: சிலர், "நாம் கொண்டிருப்பவற்றுடன் நாம் மனரம்மியமாக இருக்க வேண்டும், ஆனால் அது நாம் திருப்தியடைந்து இன்னும் சிறப்பாகச் செய்ய முயற்சி செய்யாது இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுவதில்லை" என்று கூறுகின்றனர். அந்தக் கூற்றில் சற்றே உண்மை உள்ளது - ஆனால் பிலிப்பியர் 4:11ல் "மனரம்மியம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையின் வேர் வார்த்தை "திருப்தி அடைந்திருக்க" என்று அர்த்தப்பட முடியும்.[9] பல மொழிபெயர்ப்புகள், பிலிப்பியர் 4:11ல் "மனரம்மியமாயிருக்க" என்பதற்குப் பதில் (அல்லது அந்த வார்த்தையுடன்) "திருப்தியடைந்திருக்க" என்ற வார்த்தையையும் கொண்டுள்ளன (AB, NCV, CEV, TEV).

பவுல் எதை அர்த்தப்படுத்தினார் என்று நாம் உண்மையாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்றால், ஆங்கில வார்த்தைக்குப் பதிலாகக் கிரேக்க வார்த்தையை நாம் பார்க்க வேண்டும். 1 தீமோத்தேயு 6:6-8 மற்றும் எபிரெயர் 13:5 ஆகிய வசனங்களில் "content" என்று ஆங்கிலத்தில் [மற்றும் "போதும்" என்று தமிழில்] மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*arkeo* என்பதன் ஒரு வடிவமான) வார்த்தை "போதுமானது" என்று அர்த்தப்படுகிறது. பிலிப்பியர் 4:11ல் பயன்படுத்தப்பட்டுள்ள (*autarkes* என்பதன் ஒரு வடிவமான) வார்த்தை, "சுயம்" என்பதற்கான (*autos* என்ற) வார்த்தையுடன் *arkeo* என்பதை இணைத்துள்ள ஒரு கூட்டு வார்த்தையாகும்.[10] NASB வேதாகமத்தில், பிலிப்பியர் 4:11ல் "content" என்ற வார்த்தைக்குப் பின்வரும் குறிப்பு உள்ளது: "அல்லது *சுய - நிறைவு.*" REB வேதாகமத்தில், "எனது சூழ்நிலை எதுவாக இருப்பினும் நான் சுய - நிறைவுடன் இருக்கக் கற்றுக்கொண்டேன்" என்றுள்ளது. இவ்வார்த்தை, "ஒழுக்கக் கட்டுப்பாட்டின் மூலமாக, புறம்பான சூழ்நிலைகளில் இருந்து விடுதலையாகியுள்ள மற்றும் எழக்கூடிய எந்த சூழ்நிலைக்கும் போதுமானதற்கும் மேலான ஆதாரவளங்களைத் தமக்குள்ளேயே கண்டுபிடிக்கக் கூடிய தனிநபரை விவரிக்கப் பயன்படுத்தப்பட்டது."[11]

Autarkes என்பது பவுலின் நாட்களில் இருந்த ஸ்தோயிக்கத் தத்துவஞானிகளுக்கு மிகவும் பிரியமான வார்த்தையாக இருந்தது. ஒவ்வொரு விருப்பத்தையும் மறுத்து - அன்பு மற்றும் பிறர் மீதான அக்கறை ஆகியவை உட்பட - இருதயத்தின் ஒவ்வொரு உணர்வெழுச்சியையும் நீக்கிப்போடுவதன் மூலமாக முற்றிலுமான சுய - நிறைவு கொண்டவர்களாகுதல் என்பதே அவர்களின் இலக்காக இருந்தது. T. R. குளோவர் என்பவர், "ஸ்தோயிக்கர்கள் தங்கள் இருதயத்தை ஒரு பாலைவனமாக்கிக் கொண்டு, அதை சமாதானம் என்பதாக அழைத்தனர்" என்று கூறினார்.[12] *Autarkes* என்ற வார்த்தை "ஸ்தோயிக் தத்துவஞானிகளால், உணர்வுகள் இல்லாத, மரம்போன்ற உணர்வற்ற தன்மையுள்ள, எதுவும் [இருதயத்தை] தொடக்கூடாத நிலையில் உள்ள மனிதரைப் பற்றி விவரிக்கப் பயன்படுத்தப்பட்டது ..." என்று அலேக் மோட்டியெர் என்பவர் எழுதினார்.[13] பவுலின் பண்பைப் பற்றிய எதையாவது நீங்கள் அறிந்திருந்தால், அவர் *autarkes* என்ற வார்த்தையை அந்தக் கருத்தில்

பயன்படுத்தவில்லை என்று நீங்கள் அறிவீர்கள்.

> பவுல், உணர்வுகளற்ற ஊழ்வழிக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டவராகவோ அல்லது ஒரு ஸ்தோயிக்கராகவோ இருக்கவில்லை. "தெய்வீக வகையில் மனநிறைவின்மை" என்ற வகையிலான விஷயம் உள்ளது. பாவம் நிறைந்த நிலையில் இருப்பதற்குச் சூழ்நிலைகள் வேறுபட்டவைகளாக இருக்கலாம். ஒருவர் தமது சொந்த பூரணமற்ற தன்மைகளில் திருப்தி அடைந்திருத்தல், மற்றவர்கள் துன்பத்திலும் வேதனையிலும் இருக்கும்போது அதைப்பற்றிக் கவலையற்று இருத்தல், இந்த மாபெரும் உலகமானது கிருபையின் சுவிசேஷத்தை அறியாது இருக்கையில் வசதியாக இருத்தல் - இப்படிப்பட்டவை பவுலின் மனரம்மியமாக இருப்பதில்லை.[14]

இதற்கு மறுபுறத்தில், அப்போஸ்தலர் தமக்குள்ளாகவே தாம் ஒரு போதுமான மனநிலையைக் கொண்டிருந்ததாக அர்த்தப்*படுத்தினார்*. அவர் மனரம்மியத்திற்கும் மகிழ்ச்சிக்கும் புறம்பான சூழ்நிலைகளைச் *சார்ந்திருக்கவில்லை.* துரதிர்ஷ்டவசமாக நம்மில் சிலர், நம்மை மனரம்மியம் உள்ளவர்களாக்குவதற்குப் புறம்பான சூழ்நிலைகளில் ஒரு மாற்றம் தேவையாக உள்ளது என்று நினைக்கிறோம்:

- "என்னிடம் மட்டும் நிறையப் பணம் இருந்தால் ..." அல்லது "நான் ஒருசில விஷயங்களுக்கு மட்டும் பொறுப்புள்ளவனாக இருந்தால் ..."
- "நான் ஒரு நல்ல மனைவியை/கணவரைக் கண்டு அடையும்போது ..." அல்லது, நான் பிள்ளைகளைப் பெறும்போது ... அல்லது "எனது பிள்ளைகள் பெரியவர்கள் ஆகும்போது ..."
- "எனக்கு அதிகம் பொறுப்புகள் தரப்பட்டிருந்தால் ..." அல்லது "நான் குறைவான பொறுப்புகளைக் கொண்டிருந்தால் ..."

பவுலின் திருப்தியான தன்மை, புறம்பான சூழ்நிலைகளை அல்ல, உள்ளான போதும் என்ற குணத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இருப்பினும் இது, ஸ்தோயிக்கர்கள் போதித்தது போன்று, தனிப்பட்ட ஆதாரவளங்கள் மீது அடிப்படை கொண்டிருந்த மனரம்மியமல்ல. மாறாக இது *தெய்வீக* ஆதாரவளங்கள் மீது அடிப்படை கொண்டிருந்தது (காண்க 2 கொரிந்தியர் 9:8; 12:9, 10). பிலிப்பியர் 4ம் அதிகாரத்தின் 11 மற்றும் 13 ஆகிய வசனங்களை ஒன்றாகப் பிணையுங்கள், அப்போது நீங்கள் பின்வரும், முரண்பாடு போலத் தோன்றும் மெய்யுரையைப் பெறுவீர்கள்: பவுல் சூழ்நிலைகளைச் *சார்ந்திருக்கவில்லை*, ஏனெனில் அவர் கிறிஸ்துவைச் *சார்ந்து இருந்தார்.* 13ம் வசனத்தில் AB வேதாகமத்தில், "நான் கிறிஸ்துவின் போதுமான தன்மையில் சுய - நிறைவு உடையவனாக இருக்கிறேன்" என்றுள்ளது.

13ம் வசனத்தைக் காண்பதற்கு முன்பு, நாம் சற்று நேரம் செலவிட வேண்டிய இன்னொரு வார்த்தை - "கற்றுக்கொண்டேன்" என்ற வார்த்தை - உள்ளது: "நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் *கற்றுக்கொண்டேன்*" (வசனம் 11; என்னால் வலியுறுத்தப்படுகிறது). மூல வசனத்தில், "கற்றுக்கொண்டேன்" என்பது ஆரிஸ்ட் வினைச் சொல்லில் உள்ளது, இது

கடந்த காலத்தில் ஒருமுறை மாத்திரம் செய்யப்பட்ட செயலைக் குறிப்பதாகும். இது, இந்த அப்போஸ்தலர் ஒரு கணத்தில் - ஒருவேளை தமது மனமாற்ற வேளையின்போது - மனரம்மியமாயிருத்தல் பற்றிய தமது உட்கண்ணோக்கை ஆதாயப்படுத்திக் கொண்டார் என்று ஒருசிலர் நம்புவதற்கு வழிநடத்தியுள்ளது. இருப்பினும் நாம் 11ம் வசனத்தை, 12 மற்றும் 13 ஆகிய வசனங்களின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்க்கும்போது, பவுல் தம்முடைய கிறிஸ்தவ வாழ்வு *முழுவதும்* கற்றுக்கொள்ளும் அனுபவமாக இருந்துள்ளதாகக் கூறினார் என்று நாம் முடிவு செய்கிறோம். (கடந்த காலத்தில் ஒருமுறை நடைமுறை ஒரு நிகழ்வு), கர்த்தருடைய உதவியோடு அவர் எந்த அறைகூவலையும் கையாள முடியும் என்று முடிவு செய்ய அவரது வாழ்வு அவரை வழிநடத்தியது.

வாழ்வின் எந்த சூழ்நிலையிலும் மனரம்மியமாக இருக்கும் உள்ளார்ந்த திறனுடன் பவுல் பிறக்கவில்லை. இது அவரது ஞானஸ்நானத்தின்போது அவர் மீது அற்புதமாகப் பொழியப்பட்ட "வரமாக"வும் இருக்கவில்லை. இதற்கு மாறாக அப்போஸ்தலர் இந்தப் பாடத்தை, வேதனை நிறைந்த அனுபவங்கள் (காண்க 2 கொரிந்தியர் 12:7-10) மற்றும் ஊக்கமான ஜெபம் (காண்க எபேசியர் 4:6, 7) ஆகியவற்றின் மூலமாகக் கற்றிருந்தார். இந்தப் பாடத்தைப் பவுல் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தால், நாமும் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். இந்தப் பாடத்தைப் பவுல் கற்றுக்கொள்ள *முடியும்* என்றால், நாமும் கற்றுக்கொள்ள முடியும்.

பலப்படுத்தும் "இரகசியம்" (4:12, 13)

"இரகசியம்"

மனரம்மியத்தைக் கற்றுக்கொள்வதற்கு நாம், பவுலின் "இரகசியத்தை" அறிய வேண்டும். அவர் "எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்" என்று கூறினார் (வசனம் 12ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது) [இவ்விடத்தில் NASB வேதாகமத்தில், "I have learned the *secret of* being filled and going hungry" என்றுள்ளது, ஆனால் "secret" என்ற வார்த்தை தமிழ் வேதாமத்தில் மொழிபெயர்க்கப்பட வில்லை.] "I have learned the secret" என்ற சொற்றொடர், (*mueo* என்பதன் ஒரு வடிவமாக *memuemai* என்ற) ஒரே ஒரு தனிப்பட்ட கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது "இரகசியங்களுக்குள் உட்படுத்துதல்" என்பதைக் குறிக்கிறது.[15] NEB வேதாகமத்தில், "மனிதப் பகுதியின் எல்லா உயர்வு தாழ்வுகளுக்குள்ளாகவும் நான் முற்றிலும் முழுமையாக உட்படுத்தப்பட்டிருக்கிறேன்" என்றுள்ளது. புறதெய்வ வணக்க மார்க்கத்தார், *mueo* என்பதை அவர்களின் தொடக்கச் சடங்குகளுக்குள் உட்படுத்துவதைக் குறிக்கப் பயன்படுத்தினர். பவுல் சில "மாயாவாதங்கள்," "இரகசியம்" என்ற தொடக்கச் சடங்காச்சாரங்களின் வழியே கடந்து சென்றிருக்கவில்லை. மாறாக அவரது கிறிஸ்தவ வாழ்வு முழுமையுமே, அவர் ஒரு ஆச்சரியமான "இரகசியத்தை" அறிந்துகொள்வதற்கான ஒரு "தொடக்க" செயல்முறையாக இருந்துள்ளது. என்ன நடந்தாலும், தம்முடன் கர்த்தர் இருப்பார் (2 தீமோத்தேயு 4:16-18), தம்மைப் பெலப்படுத்தி தமக்கு உதவுவார் என்பதே அந்த "இரகசியமாக" இருந்தது.

அந்த சத்தியம், பவுலின் "மிகவும் புகழ்பெற்ற வார்த்தைகள்"[16] என்று

அழைக்கப்பட்டுள்ள வாக்கியத்தில் - பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் உள்ள நன்கு அறியப்பட்ட வசனத்தில் - வெளிப்படுத்தப் பட்டுள்ளது, இது "இந்த அதிகாரத்தின் மிக உயர்வான மற்றும் நன்கு புரிந்துகொள்ளப்படக்கூடிய செய்தியாக" உள்ளது:[17] "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலிப்பியர் 4:13). இது ஆங்கிலத்தில் "I can do all things through Him who strengthens me" என்றுள்ளது. இதில் "Him" என்று அப்போஸ்தலரால் குறிப்பிடப்பட்டவர் இயேசுவே ஆவார். KJV மற்றும் தமிழ் வேதாகமத்தில், "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" என்றுள்ளது. "கிறிஸ்து" என்ற வார்த்தை பழைய கையெழுத்துக் பிரிதிகளில் காணப்படுவதில்லை, ஆனால் இவ்வசனத்தில் அப்பெயரை உட்செருகியவர் யாராயிருப்பினும், அவர் "பவுலின் நோக்கத்தை தக்க வகையில் புரிந்துகொண்டிருக்கிறார்."[18]

பிலிப்பியர் 4:13ம் வசனம் எவ்வளவு வல்லமை பொதியப்பட்டதாக உள்ளது என்று தகவல் அளிப்பது ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்றிற்கு கடினமாக உள்ளது. "எனக்குப் பெலனுண்டு" என்பது "பெலம்" என்பதற்கான (*ischuros* என்ற) வார்த்தையின் வினை வடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[19] ஹியூகோ மெக்கார்டு என்பவர் 13ம் வசனத்தின் முதல் பாகத்தைப் பின்வருமாறு மொழிபெயர்த்தார்: "ஒவ்வொரு சூழ்நிலைக்கும் நான் பெலத்தைக் கொண்டுள்ளேன்."[20] "பெலப்படுத்துகிற" என்பது ஒரு கிரேக்கக் கூட்டு வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது [தமிழ் மொழிபெயர்ப்பு வேதாகமத்தில் இது முதலில் "பெலப்படுத்துகிற" என்றும் பிற்பகுதியில் "பெலனுண்டு" என்றும் உள்ளது - இது தமிழ் மொழி வார்த்தைக் கட்டமைப்பினால் இவ்வாறு மாற்றப்பட்டுள்ளது] *dunamis* என்பதன் வினைச்சொல் வடிவமானது அந்த வார்த்தையின் இவ்வசனத்தின் பிற்பகுதியில் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது, இவ்வார்த்தையில் இருந்தே நாம் "*dynamite*" என்ற வார்த்தையைப் பெறுகிறோம். இதற்கு முன்னால் "உள்" (Gk.: *en*) என்ற முன்னிடைச் சொல் வருகிறது. "எனக்குள் வல்லமையைச் செலுத்துகிற ஒருவரால்" என்பது இவ்வசனத்தின் இந்தப் பாகத்தை மொழிபெயர்க்கும் இன்னொரு வழியாக உள்ளது.[21] இவ்வசனப்பகுதி (தொடர்ந்து நடைபெறும் செயலைக் குறிக்கிற) நிகழ்கால வினைச் சொல்லில் உள்ளது, எனவே இது, "*தொடர்ந்து* என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே *தொடர்ந்து* எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு!" என்று தரவழைக்கப்பட முடியும். இவ்வசனத்தை நீங்கள் எவ்வாறு மொழிபெயர்த்தாலும் இது வல்லமை மற்றும் தைரியம் ஆகியவற்றுடன் துடிப்பதாக உள்ளது:

- TEV: "கிறிஸ்து எனக்குக் கொடுக்கிற வல்லமையினாலே நான் எல்லாச் சூழ்நிலைகளையும் எதிர்கொள்ளப் பெலம் பெற்றுள்ளேன்."
- CEV: "எதையும் எதிர்கொள்ளக் கிறிஸ்து எனக்குப் பெலம் கொடுக்கிறார்."
- Phillips: "எனக்குள் வாழும் ஒருவருடைய பெலத்தின் மூலமாக எதையும் செய்ய நான் தயாராக இருக்கிறேன்."

இந்த வசனத்தைக் காட்டிலும் அதிகமாக, வேறு எந்த வசனப் பகுதியும்,

கிறிஸ்தவர்களை ஊக்கமூட்டி பெலப்படுத்துவதாக நான் அறிவதில்லை. போராட்ட வேளைகளில் இது, "இருளான இடத்தில் ஒரு ஒளிக்கதிர்"[22] என்று அழைக்கப்பட்டுள்ளது. வாழ்வின் சில சூழ்நிலைகள் குணமாக்கப்படமுடியும், ஆனால் மற்றவை சகித்துக் கொள்ளப் படவேண்டும், கிறிஸ்துவின் வல்லமையானது எந்த சூழ்நிலையையும் நாம் சந்தோஷத்துடன் மேற்கொள்ள நம்மை அனுமதிக்கிறது. நாம் கிறிஸ்துவுடன் நடக்கையில், தேவன் நமக்குத் தேவையான பெலத்தை அளிக்கிறார்.

இருப்பினும் 13ம் வசனத்திற்குச் சில தகுதிகள் தேவைப்படுகிறது. பவுல், "எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" என்று கூறியபோது, அவர் இருபதடி உயரம் கொண்ட ஒரு வேலியின் மீது தாவிக் குதித்துவிட முடியும் என்றோ, ஒரு மணி நேரத்தில் ஒரு நூறு மைல்கள் தூரம் ஓட முடியும் என்றோ அல்லது தமது சுவாசத்தை அறுபது நிமிடங்களுக்கு நிறுத்தி வைக்க முடியும் என்றோ அர்த்தப்படுத்தவில்லை. சந்தர்ப்பப் பொருளில், "எல்லாவற்றையும்" என்பது 11 மற்றும் 12ம் வசனங்களில் கலந்துரையாடப்பட்ட விஷயங்களுக்கு விசேஷித்த நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டுள்ளது: இயேசுவினிமித்தமாக, அப்போஸ்தலர் "நல்ல" மற்றும் "மோசமான" சூழ்நிலைகளில் மனரம்மியமாக இருக்க முடிந்தது!

இருந்தபோதிலும், நாம் இந்த நடைமுறைப் பயன்பாட்டைச் சற்றுதூரம் விரிவாக்க முடியும். மூல வசனத்தில், "எல்லாவற்றையும்" என்பது அதற்கு வலியுறுத்தம் தரும்வகையில் வசனத்தில் முதலாவதாக உள்ளது: "*எல்லாவற்றையும்* செய்ய என்னால் முடியும்." பவுலின் வார்த்தைகளைப் பின்வரும் வெளிச்சத்தில் நாம் சிந்தித்துப் பார்த்தால், நாம் அவற்றிற்கு எந்த அநியாயமும் செய்து விடுவதில்லை: "நான் செய்யும்படி தேவன் என்னிடத்தில் கேட்கிற எல்லாவற்றையும் அவருடைய சித்தத்திற்குச் சீர்பொருத்தமாக உள்ள எல்லாவற்றையும் - என்னால் செய்ய முடியும்." LB வேதாகமத்தில் பின்வரும் பொழிப்புரை உள்ளது: "நான் செய்யும்படி தேவன் என்னிடத்தில் கேட்கும் எல்லாவற்றையும் என்னால் செய்ய முடியும்." சில வேளைகளில் மக்கள், "ஆனால் கர்த்தர் என்னிடத்தில் எதிர்பார்ப்பதை என்னால் செய்யமுடியாது" என்று தங்களுக்குத் தாங்களே சாக்குப்போக்குக் கூற முயற்சிக்கின்றனர். பிலிப்பியர் 4:13ம் வசனம், சிலவற்றைச் செய்யும்படி கர்த்தர் உங்களிடத்தில் கேட்கிறார் என்றால், அதை உங்களால் செய்ய *முடியும்* என்ற உறுதிப்பாட்டைக் கொடுக்கிறது. அதைச் செய்ய உங்களுக்கு அவர் *உதவுவார்.* சாக்குப்போக்குக் கூறுவதை விட்டு வெளியேறுங்கள்!

ஆதாரமூலம்

"[கிறிஸ்துவி]னாலே" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைகளில், இவ்வசனத்தின் மிக முக்கியமான தகுதி காணப்படுகிறது. KJV மற்றும் NIV ஆகிய இரண்டு வேதாகமங்களுமே, [அவர்] மூலமாக என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றன, இது அனேகமாக ஒரு மென்மையான மொழிபெயர்ப்பை அளிப்பதாக இருக்கும். இருப்பினும், NASB வேதாகமத்தில் "[கிறிஸ்துவி]னாலே" என்பதற்குப் பின்வரும் குறிப்பு உள்ளது: நேரடியான அர்த்தத்தில் "[கிறிஸ்துவு]*க்குள்.*" பிலிப்பியர் 4:13ம் வசனத்தின் ஆறுதலை, மக்கள் எல்லாருக்குமானதாகத் தவறாக விரிவாக்கியுள்ளனர். இவ்வசனமானது "நேர்மறை

- சிந்தித்தல்" பேரணிகளில் ஒரு சுலோகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்து வாழும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு ஊக்கம் தரக்கூடப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வசனத்தை இவ்வாறு பயன்படுத்தி இருப்பவர்கள், இவ்வசனத்தின் பின்வரும் திறவுகோல் வார்த்தைகளைக் காணாது விட்டுள்ளனர்: "*அவருக்குள்.*" இவ்வசனத்தில் மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குத்தத்தம் "கிறிஸ்துவுக்குள்" - அவருக்குள் ஞானஸ்நானம் பெற்று இருப்பவர்களுக்கு (கலாத்தியர் 3:26, 27), அவருக்குள் வாழ்பவர்களுக்கு (காண்க கொலோசெயர் 2:6) *மாத்திரமானதாக* உள்ளது.

இயேசுவே பவுலின் "இரகசியமாக" இருந்தார். கர்த்தரே பவுலுக்குள் வாசமாயிருந்த பெலத்தின் ஆதாரமூலமாக இருந்தார் (காண்க 2 கொரிந்தியர் 12:9, 10). அப்போஸ்தலர் கிறிஸ்துவைச் சார்ந்து இருத்தலின் மூலமாக (வசனம் 13) மனரம்மியத்தின் இரகசியத்தை தொடங்கியிருந்தார் (வசனம் 12). அவர் தமது சொந்த ஆதார வளங்களினால் அல்ல, ஆனால் கிறிஸ்துவின் ஆதார வளங்களினாலேயே (வசனம் 13; காண்க வசனம் 19) சுயநிறைவு கொண்டவராக இருந்தார் (வசனம் 11). கோழிக்குஞ்சுகள் பாதுகாப்பிற்காகத் தாய்க்கோழியின் சிறகுகளின் கீழ் ஓடி ஒளிவதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அவ்வாறே பவுலும் "கிறிஸ்துவுடனே தேவனுக்குள்" தம்மை ஒளித்துக்கொள்ளக் கற்றிருந்தார் (கொலோசெயர் 3:3).

ஜான் வால்வூர்டு என்பவர், "ஒவ்வொரு கிறிஸ்தவரும் அறியவேண்டும் என்று தேவன் விரும்புகிறதாக [பவுல்] கண்டுபிடித்த இரகசியம் பின்வருமாறு: விஷயங்கள் மற்றும் சூழ்நிலைகள் ஆகியவற்றைச் சார்ந்து இருத்தலிலிருந்து விடுதலை, ஆனால் கிறிஸ்துவின் மீது முழுமையாகச் சார்ந்திருத்தல்" என்று எழுதினார்.[23] அந்த இரகசியத்தை இந்த உலகம் கற்றுக்கொள்ளவில்லை. அது "எல்லாவற்றையும்" பணத்தின் மூலமாக ... அல்லது கல்வியின் மூலமாக ... அல்லது அறிவியலின் மூலமாக ... அல்லது கடின உழைப்பின் மூலமாக ... அல்லது அரசியல் செல்வாக்கின் மூலமாக ... அல்லது நேர்மறையாகச் சிந்தித்தல் மூலமாக செய்ய முடியும் என்று நம்புகிறது - ஆனால் இவையாவும் கடைசியில் ஏமாற்றமாக முடிகிறது. கர்த்தர் ஒருவரே வாழ்வின் நிச்சயமாக இருக்கிறார். பிலிப்பியர் 4:13ம் வசனம் அதைப் பவுல், சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஏவுதலினால் எழுதிய நாட்களில் இருந்தது போலவே இன்றைக்கும் உண்மையாக நிலைத்திருக்கிறது: "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு."

கர்த்தர் பவுலின் பெலத்திற்கு ஆதாரமூலமாக இருந்தார், அவரே நமது பெலத்திற்கும் ஆதார மூலமாக இருக்கிறார் (காண்க எபேசியர் 3:16; கொலோசெயர் 1:11). இயேசு தமது சீஷர்களிடத்தில், "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (யோவான் 15:5ஈ) என்று கூறினார். "ஒன்றும் செய்யக்கூடாது" என்பதற்கும் எல்லாவற்றையுஞ்செய்ய" முடியும் என்பதற்கும் இடையில் கிறிஸ்துவே வேறுபாடாக இருக்கிறார்![24] நாம் அவர் மூலமாக *என்ன* செய்ய முடியும்? நாம் செய்யும்படி கர்த்தர் விரும்புகிற எதையும் நாம் செய்ய முடியும்! காய் ரோப்பர் பின்வருமாறு எழுதினார்:

- பொருளாதார உலகத்தில் நாம், பவுலைப் போன்று நம்மிடத்தில்

உள்ளவற்றில் மனரம்மியமாக இருக்கக் கற்றுக்கொள்ள முடியும்.

- ஒழுக்கமற்ற ஒரு உலகத்தில், நாம் தூய்மையான மற்றும் ஒழுக்கமான வாழ்வை வாழ முடியும்.
- இன்பத்தில் பைத்தியம் கொண்ட ஒரு உலகத்தில், தேவனுடைய விஷயங்கள் நமது வாழ்வின் கவனக்குவிப்பாக இருக்க முடியும்.
- விக்கிரகபக்தி நிறைந்த ஒரு உலகத்தில், நாம் நம்மை இயேசுவுக்கு அவர் ஒருவருக்கு மாத்திரமே தர முடியும். உங்களால் கிறிஸ்தவ வாழ்வை வாழ முடியாது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? *அவரது* பெலத்தின் மூலமாக உங்களால் அதை வாழமுடியும்![25]

முடிவுரை (4:14)

மீண்டும் ஒருமுறை நான், இவ்வசனப் பகுதிக்கு நியாயம் செய்யத் தவறியிருக்கிறேன். இருப்பினும் இந்த வேளையில், கிரேக்க மொழியின் சிக்கலான அமைப்பில் அல்ல ஆனால் என்னிடத்திலேயே பிரச்சனை உள்ளது. நான் வாழ்வின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் மனரம்மியமாய் இருத்தல் என்ற அறைகூவலுடன் இன்னமும் போராடுகிறேன். நான், எனது சொந்த ஆதாரவளங்களுக்கு மாறாகக் கர்த்தர் மீது சார்ந்திருக்க இன்னமும் கற்றுக்கொண்டு இருக்கிறேன். எனக்கு உதவும்படி நான் தேவனிடத்தில் கேட்கிறேன் - *உங்களுக்கும்* இதேபோன்றே போராட்டங்கள் இருந்தால் அவர் உங்களுக்கும் உதவுவாராக.

பிலிப்பியர்களின் உதவியினால் சந்தோஷம் அடைந்த பின்பு பவுல், தாம் அப்படிப்பட்ட கொடைகள் மீது சார்ந்திருப்பதில்லை என்று கூறினார் - அதாவது, அவர் கொஞ்சம் அல்லது அதிகம் என்று எவ்வளவு கொண்டிருந்தாலும், அவருக்குக் கர்த்தர் உதவினார். இது, அவர் பிலிப்பியரின் கொடையை மதிக்கவில்லை என்று அர்த்தப்படுவதாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதற்காக அவர் உடனடியாக, "ஆகிலும் நீங்கள் என் உபத்திரவத்தில் என்னோடே உடன்பட்டது *நலமாயிருக்கிறது*" என்பதையும் கூடுதலாகக் கூறினார் (வசனம் 14; என்னால் வலியுறுத்தப்படுகிறது). நமது அடுத்த பாடத்தில் நாம், பவுல் தமது தொடக்கால வாசகர்களுக்கு எழுதிய வழக்கத்திற்கு மாறான "உங்களுக்கு நன்றி" என்ற குறிப்பை ஆராயத் தொடருவோம்.

நான் இந்த எடுத்துரைப்பை முடிக்கையில், மனரம்மியத்திற்கான பவுலின் இரகசியத்தை நீங்கள் கற்றுக்கொண்டீர்களா இல்லையா என்று உங்களிடத்தில் கேட்க என்னை அனுமதியுங்கள். நீங்கள் கண்டுபிடிக்க விரும்பும் இரகசியங்கள் பல, வெற்றியின் இரகசியம், நல்ல திருமணத்திற்கான இரகசியம், பெற்றோர்த்துவத்தின் இரகசியம் அல்லது "பாட்டியின் சமையல் குறிப்பு இரகசியம்" என்பதாக மாத்திரம் கூட - இருக்கலாம். இருப்பினும் முடிவில், இயேசு கிறிஸ்துவே பொருட்படுத்தப் படக்கூடிய இரகசியமாக இருக்கிறார்: அவரை அறிதல், அவருக்குள் இருத்தல், அவருக்குள் நிலைத்திருத்தல், அவர் மீது நம்பிக்கை வைக்க மற்றும் அவரைச் சார்ந்திருக்கச் கற்றுக்கொள்ளுதல். நீங்கள் அவருக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாதிருந்தால் (ரோமர் 6:3, 4), அதை இன்றே பெற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் கிறிஸ்தவராக இருந்து, ஆனால் அவருடன் நடக்காது இருந்தால், நீங்கள் வழி விலகிச் சென்றிருந்தால் (காண்க எபிரெயர் 3:10), இன்றே அவரிடத்திலும் அவருடைய மக்களிடத்திலும்

திரும்புங்கள் (1 யோவான் 1:9; யாக்கோபு 5:16).

குறிப்புகள்

[1]Earl F. Palmer, *Integrity in a World of Pretense: Insights from the Book of Philippians* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 170. [2]Ibid., 169. [3]Wayne Jackson, *The Book of Philippians* (Abilene, Tex.: Quality Publications, 1987), 85. [4] W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III (Minneapolis: Bethany House Publi shers, 1984), 966. [5]Palmer, 169. [6]"நான்" என்ற வார்த்தையின் மீது இரட்டை வலியுறுத்தம் உள்ளது. முதலாவது இது, திரும்பக் கூறப்படுவதால் வலியுறுத்தப்பட்டுள்ளது: "கற்றுக் கொண்டேன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வினைச் சொல்லில் மறைமுகமாய் உணர்த்தப்பட்ட "நான்" என்பது உள்ளது. ஆனால் இந்த வினைச் சொல்லுக்கு முன்பாக, "நான்" என்பதற்கான (*ego* என்ற) கிரேக்க வார்த்தை சேர்க்கப்பட்டுள்ளது. இரண்டாவது இது, வாக்கியத்தில் கொண்டுள்ள இடத்தினால் வலியுறுத்தப் பட்டுள்ளது: இது வாக்கியத்தின் முதல் பகுதியில் ("க்கு" என்பதற்கான கிரேக்க வார்த்தைக்கு முன்பாக) வைக்கப்பட்டுள்ளது; இது முதன்மைக்கு உரிய இடமாக உள்ளது. [7]James M. Tolle, *Notes on Philippians* (San Fernando, Calif.: Tolle Publications, 1972), 73. [8]Leon Barnes, *That You May Know Christ: Studies from Philippians* (Searcy, Ark.: Resource Publications, 1992), 161. [9]Vine, 226. [10]Ibid.

[11]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary,* vol. 43, *Philippians,* ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 198. [12]Quoted in William Barclay, *The Letters to the Philippians, Colossians, and Thessalonians,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 85. [13]Alec Motyer, *The Message of Philippians: Jesus Our Joy,* The Bible Speaks Today series, ed. John R. W. Stott (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1984), 217. [14]Charles R. Erdman, *The Epistle of Paul to the Philippians* (Grand Rapids, Mich.: Baker Book House, 1983), 148. [15]Vine, 595. [16]Hawthorne, 200. [17]Erdman, 148. [18]Hawthorne, 201. [19]Vine, 1097. [20]Hugo McCord, *McCord's New Testament Translation of the Everlasting Gospel* (Henderson, Tenn.: Freed-Hardeman University, 1988), 197.

[21]See Barclay, 84. [22]Oliver Cromwell, quoted in Ralph P. Martin, *The Epistle of Paul to the Philippians,* rev. ed., Tyndale New Testament Commentaries, ed. R. V. G. Tasker (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 179. [23]John F. Walvoord, *Philippians: Triumph in Christ, Everyman's* Bible Commentary (Chicago: Moody Press, 1971), 113-14. [24]இந்த கருத்து Avon Malone, *Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 118 என்ற புத்தகத்தில் இருந்து தழுவப்பட்டது. [25]This listing was adapted from Coy Roper, "I Can Do All Things," Sermon preached at the Metro church of Christ, Greater Detroit, Michigan, 7 June 1987.

18

கொடுத்தல் *உங்களுக்கு* என்ன செய்யும்

[பிலிப்பியர் 4:14-20]

நமது முந்திய படிப்பில் நாம், பிலிப்பியருக்குப் பவுல் எழுதிய நிருபத்தின் முடிவில் உள்ள "உங்களுக்கு நன்றி" குறிப்பின் மீது ஒரு பரிசோதனையைத் தொடங்கினோம். அப்போஸ்தலர் இந்த நிருபத்தின் தொடக்கத்தில் கொடையைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு இதன் முடிவு வரையிலும் தமது பாராட்டுதலின் வெளிப்படுத்துதலை நிறைவு செய்யாது இருந்தது ஏன் என்று சிலர் வியப்படைகின்றனர். இது குறைவான ஒருங்கமைப்புக் கொண்ட ஒரு தனிப்பட்ட கடிதம் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். பவுல், தமது நிருபத்தைப் பெறுபவர்கள், தமது விருப்ப நோக்கத்தை அறிய உடனடியாக அனுமதித்தார், ஆனால் நன்றியுணர்வின் வார்த்தைகளை அவர், இந்த நிருபத்தின் உச்சகட்ட முடிவு வரையிலும் எழுதாது விட்டு வைத்திருந்தார்.

பயிற்றுவிப்பவர் ஒருவர் தமது வகுப்பில் இருப்பவர்களுக்கு "உங்களுக்கு நன்றி" என்பதைக் கூறும் ஒரு வழியைப் பற்றி எடுத்துரைத்தார். அவர், "ஒரு 'நன்றி சாண்ட்விட்சை' பயன்படுத்துங்கள். 'நன்றி' என்று கூறுங்கள். அது அந்த சாண்ட்விட்சின் மீதான ரொட்டித்துண்டின் அடிப்பாகமாக உள்ளது. பின்பு பொருத்தமான விபரங்களைக் கூட்டுங்கள். அது அந்த சாண்ட்விட்சை நிரப்பும் பொருளாக உள்ளது. கடைசியில், 'உங்களுக்கு நன்றி' என்று மீண்டும் கூறுங்கள். அது சாண்ட்விட்சின் மீதுள்ள ரொட்டித் துண்டின் மேல்பாகமாக உள்ளது" என்று கூறினார். பவுல் ஒருக்காலும் "நன்றி சாண்ட்விட்ச்" பற்றிக் கேள்விப் பட்டிருக்க மாட்டார் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன், ஆனால் அவர் பிலிப்பியர்களுக்கு இதையே கொடுத்தார்.

"நன்றி என்பதற்கான (eucharistia, என்ற) கிரேக்க வார்த்தையைப் பவுல், நன்றிக்கான தமது வெளிப்பாட்டில் ஒருமுறைகூடப் பயன்படுத்தவில்லை என்பது பவுலின் நன்றி வெளிப்பாட்டில் மிகவும் கவனத்திற்குரிய விஷயமாக இருக்கவாம். உண்மையில், பிலிப்பியர் 4:10-20ல் உள்ள அப்போஸ்தலரின் நன்றியுணர்வின் வெளிப்பாடு, எழுதப்பட்டவற்றிலேயே மிகவும் வழக்கத்திற்கு மாறான "உங்களுக்கு நன்றி" குறிப்புகளில் ஒன்றாக உள்ளது. இந்தப் பாடக்கருத்தைப் பவுல் ஏன் இவ்வாறு அணுகினார் என்பதைப் புரிந்துகொள்ளுதலானது, நிதி சார்ந்த ஆதரவு பற்றி அவரது எண்ணப்போக்கில் சிலவற்றை அறிய நமக்கு உதவலாம்.

வசனத்தைப் போதிப்பவர்களும் பிரசங்கிப்பவர்களும், போதிக்கப் படுபவர்களால் ஆதரிக்கப்படவேண்டிய உரிமை கொண்டுள்ளனர் என்று இயேசு வலியுறுத்தி இருந்தார் (லூக்கா 10:7). பவுலும் இதே விஷயத்தைக்

கூறினார் (1 கொரிந்தியர் 9:9-11, 13, 14; கலாத்தியர் 6:6). ஒரு சுவிசேஷ ஊழியர் “உலகப் பிரகாரமான” வேலை ஒன்றைக் கொண்டிராதபோது, அவர் படிக்கவும், போதிக்கவும் மற்றும் மக்களின் தேவைகளுக்கு ஊழியம் செய்யவும் அதிகமான நேரத்தைத் தாராளமாகச் செலவிடக் கூடியவராக இருக்கிறார்.

இருப்பினும் பவுல்,தாம் இந்த *நிருபத்தை எழுதிய வேளையில்* ஊழியம் செய்து கொண்டிருந்த சபைக் குழுமத்தில் இருந்து உதவியை ஏற்றுக்கொள்ளத் தயங்கினார் (காண்க 1 கொரிந்தியர் 9:18; 2 கொரிந்தியர் 11:7, 9; 1 தெசலோனிக்கேயர் 2:9; 2 தெசலோனிக்கேயர் 3:8). பணம் பெறுதலே பிரசங்கித்தலுக்கான தமது நோக்கம் என்று எவரொருவரும் நினைப்பதற்கு அவர் விரும்பவில்லை (காண்க 2 கொரிந்தியார் 12:14). அப்போஸ்தலர் கூடாரம் செய்பவர் என்ற வகையில் வேலை செய்ததினால் தமக்குதாமே அடிக்கடி உதவி செய்து கொண்டார் (நடபடிகள் 18:1-3; காண்க 1 கொரிந்தியர் 4:12அ; 1 தெசலோனிக்கேயர் 2:9; 2 தெசலோனிக்கேயர் 3:8).

அதே வேளையில் பவுல், தாம் *முன்பு* பிரசங்கித்திருந்த இடங்களில் இருந்து உதவியைப் பெற்றுக்கொள்ள மனவிருப்பமாக இருந்தார்(காண்க 2 கொரிந்தியர் 11:8, 9). அப்படிப்பட்ட உதவி, சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு அவர் அதிக நேரம் செலவிட அவரை அனுமதித்தது (காண்க நடபடிகள் 18:5). இருப்பினும் அவர், “பணத்திற்காக பிரசங்கித்தார்” என்று சிலர் தம்மைக் குற்றப்படுத்தும் சாத்தியக் கூறு பற்றிக் கூருணர்வு கொண்டவராக நிலைத்திருந்தார்.

இது பவுலுக்குள்ளாக உருவாக்கிய மன இறுக்கமானது, பிலிப்பியர்களுக்கு அவர் தமது நன்றிகளை ஏன் இவ்வாறு வெளிப்படுத்தினார் என்று விளக்கமளிக்க நமக்கு உதவலாம். அவர்களின் கொடையைத் தாம் பாராட்டியதை அவர்கள் அறியவேண்டும் என்று அவர் விரும்பினார், ஆனால் *கொடைகளைப்* பெறுவதற்காகவே அவர் பிரசங்கித்தார் என்ற மனப்பதிவை விட்டுச்செல்ல அவர் விரும்பவில்லை. நமது முந்திய பாடத்திற்கான வேதவசனப் பகுதியில், அவர் முதலில் அவர்களின் உதவிக்காகச் சந்தோஷப்பட்டதாகக் கூறினார் (4:10), ஆனால் பின்பு அவர், அப்படிப்பட்ட உதவியைத் தாம் சார்ந்திருக்கவில்லை என்றும் கூடுதலாகக் கூறினார் (வசனங்கள் 11-13). இருப்பினும், பாராட்டாதவராக காணப்படுவதைத் தவிர்ப்பதற்கு உடனடியாக, அவர்கள் தமக்கு உதவி செய்தது நலமாக இருந்தது என்பதையும் கூடுதலாய்க் கூறினார் (வசனம் 14). 10 முதல் 20வரையிலான வசனங்களை ஆராய்தல் என்ற நமது படிப்பை நாம் தொடருகையில், பவுல் தாம் பெற்றுக்கொண்ட கொடைக்காக பாராட்டுதலை வெளிப்படுத்துதல் (வசனங்கள் 14-16, 19) மற்றும் தாம் உதவி பெற்றிருக்க *வேண்டும்* என்பதை மறுத்தல் (வசனம் 17அ) ஆகிய நிலைப்பாடுகளுக்கு இடையில் முன்னும் பின்னுமாக அசைவதை நாம் காண்போம்.

“கொடுத்தல் *உங்களுக்கு* என்ன செய்யும்” என்பதே இந்த எடுத்துரைப்பின் தலைப்பாக உள்ளது. கொடுத்தல் பற்றிய நமது கண்ணோட்டமானது, அதைக் கொடுப்பவருக்கு அது என்ன செய்யக்கூடும்/முடியும் என்பது பற்றிச் சிறிதளவே சிந்தனையுடன், அதைப் பெறுபவர்களுக்கு அது என்ன செய்யும் என்பதுடன் அடிக்கடி மட்டுப்படுத்தப் பட்டுவிடுகிறது. வேதாகமத்தின்படி, கொடுத்தல் என்பது அதைப் பெறுபவரைக் காட்டிலும் கொடுப்பவருக்கு அதிகப் பயன்களைக் கொடுக்கிறது (காண்க மல்கியா 3:10; லூக்கா 6:38; நடபடிகள்

20:35; 2 கொரிந்தியர் 9:6-11).

பகிர்ந்து கொள்ளுதலின் ஆசீர்வாதம் (4:14, 15)

பவுல், "ஆகிலும் நீங்கள் என் உபத்திரவத்தில் என்னோடே உடன்பட்டது நலமாயிருக்கிறது" என்று கூறிய 14ம் வசனத்தில் இருந்து நாம் தொடங்குவோமாக. இவ்வசனத்தில், "உபத்திரவம்" ["affiction"] என்று மொழிபெயர்க்கப்பட்ட (*thlipsis* என்பதன் ஒரு வடிவமான) கிரேக்க வார்த்தை, 1:16 லிலும் "உபத்திரவம்" ["distress"] என்று மொழிபெயர்க்கப்பட்டது. முந்திய பாடத்தில் குறிப்பிடப்பட்டபடி, இது ஒரு பலமான வார்த்தையாக உள்ளது. இது "சூழ்நிலைகளின் அழுத்தங்களினால் அல்லது நபர்களின் பகைமை உணர்வினால் ஏற்படும் பாடுகளை," "ஆவியை வருத்துகிற எந்த விஷயத்தையும்" பற்றிய குறிப்புக் கொண்டுள்ளது.[1] NIV வேதாகமத்தில் "எனது இடர்ப்பாடுகளில் நீங்கள் பங்கேற்றது நன்மையாக இருந்தது" என்றுள்ளது. பவுலின் "இடர்ப்பாடுகளில் சில, நிதிசார்ந்தவையாக இருந்தன" என்பதில் சந்தேகம் இல்லை (காண்க வசனம் 18).

அப்போஸ்தலரின் நிதிநிலை நெருக்கடிகளைப் பற்றிப் பின்வருபவற்றை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். சிலவேளைகளில் பவுல், தாம் முன்பு பிரசங்கித்திருந்த இடங்களில் இருந்து உதவி பெற்றார், சில வேளைகளில் அவ்வாறு பெறாதிருந்தார். கடந்த காலத்தில், அவர் ஒரு கூடாரம் செய்பவர் என்ற வகையில் தொழில் செய்து பிழைக்க முடிந்திருந்ததால், இது (நிதி உதவி பெற்றதோ அல்லது பெறாதிருந்ததோ) ஒரு பிரச்சனையாக இருக்கவில்லை. இருப்பினும், நான்கு அல்லது அதற்குச் சற்றேறக் குறையலான ஆண்டுகளாக (காண்க நடபடிகள் 24:27; 28:30) அவர் சிறையில் அடைக்கப்பட்டு அதனால் வேலை செய்ய இயலாத நிலையில் இருந்தார். இது உக்கிரமான சுயாதீனரான அவரை, மற்றவர்களின் தாராளகுணத்தின் மீது சார்ந்திருக்கச் செய்தது. அவர் இந்தச் சூழ்நிலையைச் சிலவேளைகளில் அசௌகரியமாகக் கண்டாரா? ஒருவேளை அவ்வாறு அவர் கண்டிருக்கலாம்.

பவுலின் நன்றிகூறுதலின் வெளிப்பாட்டை நான் வாசிக்கையில், பிலிப்பி நகரில் இருந்து உதவி வந்து சேர்ந்த வேளையில், அவரது நிதிநிலை ஆதாரமூலங்கள் ஏறக்குறைய வற்றிப்போயிருந்தன என்ற மனப்பதிவை நான் பெற்றேன். இவ்வாறாக அவர், "... நீங்கள் என் உபத்திரவத்தில் என்னோடே உடன்பட்டது நலமாயிருக்கிறது" என்று அவர்களுக்கு நிச்சயப்படுத்தினார். "நலமாயிருக்கிறது" (Gk.: *kalos*) என்ற வார்த்தை, "உள்ளார்ந்த வகையில் நல்லதாக இருக்கிற, எனவே நலமான, நியாயமான, வனப்பான என்பதைக் குறிக்கிறது."[2] செயல்விளைவில் பவுல், "நீங்கள் வனப்புமிக்க சரியான விஷயத்தைச் செய்தீர்கள்" என்று கூறினார்.

இருப்பினும் 14ம் வசனத்தில் உள்ள "உடன்பட்டது" என்பதே நான் வலியுறுத்த விரும்பும் வார்த்தையாக உள்ளது: அவர்கள் *உடன்பட்டதில்* நலமாய்ச் செய்திருந்தனர். இந்த நிருபத்தின் முதல் பகுதியில் பவுல், கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் பிலிப்பியர்கள் தம்முடன் "பங்குள்ளவர்களாக" இருந்தனர் என்ற உண்மையைக் குறிப்பிட்டார் (1:5, 7).

"உடன்படுதல்/பங்குள்ளவர்களாகுதல்" என்ற வார்த்தை 4:15லும் பயன்படுத்தப் பட்டுள்ளது: "... கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள் மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை." 14ம் வசனத்தில் "உடன்படுதல்" என்பது, *sunkoinoneo* என்ற வார்த்தையின் ஒரு வடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது *koinonia* ("பொதுவாக கொண்டிருத்தல்") என்பதன் வினைச்சொல் வடிவத்திற்கு முன் *sun* ("உடன்") என்ற முன்னிடைச் சொல்லைச் சேர்த்துப் பெறப்பட்ட கூட்டு வார்த்தையாகும். பிலிப்பியர்கள் பவுலின் நிதிசார்ந்த சுமையைத் தங்கள் மீது ஏற்றுக் கொண்டபோது, அவர்கள் பவுலுடன் ஐக்கியம் கொண்டிருந்தார்.

நீங்களும் நானும் கர்த்தருடைய ஊழியத்திற்காகக் கொடுக்கும்போது, அது நமக்கு என்ன செய்கிறது? முதலாவதாக அது, நம்மைக் கர்த்தருடைய ஊழியத்திற்கு *உடன்படச்* செய்கிறது. நாம் உதவி செய்யும் எந்த ஊழியத்திலும் நாம் பங்காளிகள் ஆகிவிடுகிறோம். செய்யப்படும் ஊழியம் பற்றிய நல்ல அறிக்கைகளை நாம் கேள்விப்படுகையில், அது நடைபெறச் செய்வதில் நாம் ஒரு பங்கை - வலிவார்ந்த ஒரு பங்கை - பெற்றுள்ளதை அறிகிறோம்!

உதவி செய்தலின் மனதிருப்தி (4:15, 16, 18அ)

மற்றவர்களுக்கு உதவி செய்யப்பட்டுள்ளது என்று அறிவதில் ஏற்படும் மனதிருப்தி என்பது, அந்த ஆசீர்வாதத்துடன் நெருங்கிய வகையில் பிணைக்கப்பட்டுள்ளது. பவுலின் பாராட்டுதலின் வெளிப்பாட்டைப் பிலிப்பியர்கள் வாசிக்கையில், அவர்கள் அந்த மனதிருப்தியை மகிழ்வுடன் அனுபவித்து இருப்பார்கள் என்பது உறுதி.

முதலாம் அதிகாரத்தை நாம் படிக்கையில், பிலிப்பியர்கள் பவுலுக்கு உதவியது இந்த ஒரு முறை மாத்திரமல்ல என்று நாம் குறிப்பிட்டிருந்தோம் (காண்க 1:5). அப்போஸ்தலர் பிலிப்பி நகரில் சபையை நிலைநாட்டியிருந்தது முதல் பத்து அல்லது அதற்குச் சற்றேறக் குறையலான ஆண்டுகளில் அவர்களின் உதவியைப் பற்றித் தெளிவாக அறிந்திருந்தார்:

> மேலும், பிலிப்பியரே, சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே நான் மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்டபோது, கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள்மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நான் தெசலோனிக்கேயிலிருந்தபோதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள் (4:15, 16).

15ம் வசனம், "... என்று நீங்க(ளும்) அறிந்திருக்கிறீர்கள்" என்ற சொற்றொடருடன் முடிகிறது. "உம்" என்ற வார்த்தை (இது தமிழ் வேதாகமத்தில் இவ்விடத்தில் இவ்வாறு இல்லை) அவர்களின் தாராள குணத்தைப் பவுல் அறிந்திருந்தார் என்றும், அவர் அறிந்திருந்தார் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர் என்றும் மறைமுகமாகக் குறிப்பிடுகிறது. "சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே" என்ற சொற்றொடர் பற்றி NASB வேதாகமத்தில் பின்வரும் குறிப்பு உள்ளது: "நேரடியான அர்த்தத்தில், *தொடக்கத்தில்.*" இது பிலிப்பியர்களைப் பொறுத்த மட்டில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படத் தொடங்கப்பட்டதைக் குறிக்கக்

கூடும். NIV வேதாகமத்தில், "சுவிசேஷம் உங்களுக்குப் பழக்கமான தொடக்க நாட்களில்" என்றுள்ளது. இருப்பினும், இவ்வார்த்தைகள் அனேகமாக, பிலிப்பி நகரில் *தொடக்கம்* கொண்டிருந்த பவுலின் ஊழியத்தினுடைய ஒரு புதிய வளர்ச்சிப்படியை மாத்திரம் குறிப்பிடலாம் (நடபடிகள் 16:9-12; காண்க பிலிப்பியர் 1:5).

15ம் வசனத்தில் பவுல், மக்கெதோனியாவை விட்டுப் புறப்பட்டதைப் பற்றிக் குறிப்பிட்டார். பிலிப்பி நகரம் மக்கெதோனியாவில் இருந்தது (நடபடிகள், 16:12) இது இப்போதுள்ள கிரேக்க நாட்டின் வடக்குப் பகுதியாகும். அப்போஸ்தலர் அந்தப் பகுதியை விட்டுப் பிறப்பட்டபின்னர், அவர் இப்போதுள்ள கிரேக்க நாட்டின் தெற்குப் பகுதியான அகாயாவிற்குச் சென்றார். அங்கு அவர் அத்தேனே மற்றும் கொரிந்து ஆகிய நகரங்களில் பிரசங்கித்தார் (நடபடிகள் 17:15-18:11). பிலிப்பியர்களுக்கு பவுல், "... நான் மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்டபோது, கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள்மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல் லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை" என்று கூறினார். 2 கொரிந்தியர் 11:8, 9ம் வசனங்களில் இருந்து நாம், பவுல் கொரிந்து நகரில் இருந்தபோது அவருக்குப் பிலிப்பியர்கள் உதவி அனுப்பினார்கள் என்று முடிவு செய்கிறோம்.

இருப்பினும் பவுல், 2 கொரிந்தியர் 11:8, 9ல் கொரிந்து நகரில் பெற்றுக்கொண்ட உதவியைப் பற்றி எழுதியபோது, அவர் "சபைகள்" என்று பன்மைச் சொல்லைப் பயன்படுத்தினார். அப்படியென்றால், பிலிப்பியர் 4:15ல் அவர், "கொடுக்கல் வாங்கல் காரியத்தில் *நீங்கள்மாத்திரம்* எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை" என்று கூறியபோது எதை அர்த்தப்படுத்தினார்? எழுத்தாளர்கள், "கொடுக்கல் வாங்கல் காரியத்தில்" என்ற வார்த்தைகளின் மீது சிறப்பான விளக்கங்களை இடுவதைக் கொண்டு இதை விளக்கப்படுத்த முயற்சி செய்துள்ளனர். பவுலுக்குப் பிலிப்பியர்கள் நிதிசார்ந்த உதவியை "கொடுத்து" ஆவிக்குரிய உதவியை "வாங்கி" கொண்டனர் என்று சிலர் கூறுகின்றனர். மற்றவர்கள், பவுலுக்குப் பிலிப்பியர்கள் "கொடுத்து" அதற்கான ரசீது ஒன்றை அவரிடத்தில் இருந்து பெற்றுக்கொண்டனர் என்று முடிவு செய்கின்றனர். இந்த விளக்கங்களை வாசிக்கையில் நான், "ஆனால் பவுலுக்கு உதவியை அனுப்பிய *எந்த* சபைக்குழுமத்தைப் பொறுத்த மட்டிலும் இந்த ஏற்பாடுகள் இரண்டுமே உண்மையாக இருப்பதில்லையா?" என்று நினைத்தேன். "கொடுக்கல் வாங்கல்" என்பதற்கு, பிலிப்பியர்கள் உதவி கொடுத்தனர் மற்றும் பவுல் அதை வாங்கிக்கொண்டார் என்பதே மிகவும் எளிய விளக்கமாக உள்ளது.

அது "நீங்கள் மாத்திரம்" என்ற புதிரான சொற்றொடரை இன்னமும் விட்டுவைக்கிறது. ஒருவேளை பவுல், பிலிப்பியில் இருந்த சபை மாத்திரம் தமக்குத் *தொடர்ந்து* உதவியிருந்தது என்பதை வலியுறுத்தி இருக்கலாம் - இது ஒன்று மாத்திரமே அவரது ஊழிய முயற்சிகளில் *நிலையான* "பங்காளியாக" இருந்தது. "நீங்கள்மாத்திரம்" என்ற வார்த்தைகளின் உண்மையான தனிச்சிறப்பு என்னவாக இருந்தாலும், பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்களினால் வழங்கப்பட்ட *தனிசிறப்பான* ஊழியத்தைப் பவுல் வலியுறுத்தினார்.

பவுல் மக்கொதோனியாவை விட்டுப் புறப்பட்டுச் சென்ற பின்பு, பிலிப்பியர்களின் உதவியைப் பற்றி நினைக்கையில், அவர் அந்த மாகாணத்தை விட்டுப் புறப்படுவதற்கு முன்னரேகூட, அவர்களின் உதவி

தொடங்கியிருந்ததை நிறைவுகூர்ந்தார். பிலிப்பி நகரில் இருந்து அவர் தெசலோனிக்கே நகருக்கு, எக்னேஷியா வழி என்ற ரோம நெடுஞ்சாலையில், மேற்குநோக்கி ஒரு நூறு மைல்கள் பயணம் செய்திருந்தார் (நடபடிகள் 16:39-17:1). அங்கு அவர் சற்றுக்காலம் பிரசங்கித்தார். அங்கிருக்கையில் அவர் தமது தொழிலைச் செய்தார் (காண்க 1 தெசலோனிக்கேயர் 2:9; 2 தெசலோனிக்கேயர் 3:8) ஆனால் பிலிப்பியிலிருந்து உதவியையும் பெற்றார். "நான் தெசலோனிக்கேயிலிருந்தபோதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள்" என்று பவுல் எழுதினார் (பிலிப்பியர் 4:16).

இதைப்பற்றி நாம் நினைக்கும்போது, இது திகைப்புக்கு உரியதாக இருக்கிறது. பிலிப்பி நகரில் இருந்த சபை சிறியதாகவும் விசுவாசத்தில் இளையதாகவும் இருந்தது. வேதாகம ரீதியான மற்றும் உலகப் பிரகாரமான வரலாற்றின்படி, அந்தப் பகுதியில் இருந்த குடிமக்கள் நிதிநிலை சார்ந்த வகையில் போராடிக்கொண்டிருந்தனர் (காண்க 2 கொரிந்தியர் 8:1-4). தெசலோனிக்கே ஒரு பெரிய, அதிக செல்வ வளமிக்க நகராக இருந்தது. இருந்தபோதிலும் அங்கு இருந்த பவுலுக்குப் பிலிப்பியில் இருந்த கிறிஸ்தவர்கள் உதவி அனுப்பி இருந்தனர்.

ஊழியப்பணியைத் தொடங்குதல் என்பது ஒரு சபைக்குழுமத்திற்கு ஒருக்காலும் மிகவும் முந்திய வேளை என்பதாக இருப்பதில்லை. சிலவேளைகளில் உறுப்பினர்கள், "இந்தப் பகுதியில் நாம் உறுதியாக நிலைநாட்டப்பட்ட பின்பு, நாம் மற்ற இடங்களுக்குக் கர்த்தரின் ஊழியத்திற்கு உதவிசெய்ய நிதிகளை அனுப்புவோம்" என்று விவாதம் செய்கின்றனர். "ஒரு சபைக்குழுமம், நாம் ஒரு கட்டிடத்தை கட்டி முடித்த உடன்" அல்லது "ஒரு பிரசங்கியாருக்கு நாம் ஊதியம் கொடுக்கக் கூடியவர்களான உடன்" அல்லது "நாம் நமது சொந்தத் தேவைகளைக் கவனிக்கக் கூடியவர்கள் ஆன உடன்" - "*அதன் பின்பு* நாம் மற்ற இடங்களில் உள்ள இழந்துபோகப் பட்டிருப்பவர்களைப் பற்றி நினைப்போம்" என்று நினைக்கலாம். பிலிப்பியில் இருந்த சபை இவ்வாறு வாதிடவில்லை. சிறியதாகவும் ஏழ்மையானதாகவும் இருந்தபோதிலும் இந்த சபைக்குழுமம் தங்களால் முடிந்த அளவுக்குப் பவுலுக்கு உடனே உதவத் தொடங்கிற்று - மற்றும் அவர்கள் ஒரு பத்தாண்டுகள் வரையிலும் அந்த உதவியைத் தொடர்ந்து கொடுத்திருந்தனர். மற்றவர்களின் தேவைகளைப் பற்றி அக்கறையாக இருத்தலைப் போல, ஒரு சபைக்குழுமத்தின் "இருதயத்தை" பெலப்படுத்தும் விஷயம் வேறு எதுவும் இல்லை.

15ம் வசனத்தில் உள்ள, "நீங்கள் மாத்திரம்" என்ற வார்த்தைகளை நாம் மீண்டும் ஒருமுறை கண்ணோக்குவோம். பிலிப்பியர்கள் தாங்கள் செய்ததை, மற்றவர்கள் என்ன செய்தனர் (அல்லது செய்யவில்லை) என்பதன் அடிப்படையில் செய்யவில்லை. அவர்கள் பவுலை நேசித்தனர் மற்றும் - வேறு எவரும் உதவினாலும் உதவாவிட்டாலும் - அவர்கள் அவருக்கு உதவத் தீர்மானித்தனர்.

இது, "எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது; உங்களால் அனுப்பப்பட்டவைகளைச் சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப்பிரோதீத்துவின் கையில் வரப்பற்றிக் கொண்டபடியினால் நான் திருப்தியடைந்திருக்கிறேன்" (வசனம் 18)

என்பதை வாசிப்பது, இந்த சகோதரர்களுக்கு மாபெரும் திருப்தியைக் கொடுத்திருக்க வேண்டும். "உங்களால் அனுப்பப்பட்டவைகளை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (கிரேக்க வார்த்தைகள், NASB வேதாகமத்தின் சில பதிப்புகளில் குறிப்பிடப்பட்டபடி) "உங்களிடம் இருந்து வந்த பொருட்கள்" என்று நேரடியாக அர்த்தப்படுகிறது. நிதிகளுடன் கூடுதலாக அவர்கள் உடைகளையும் மற்ற பொருட்களையும் அனுப்பியிருக்கலாம். அவர்கள் எதை அனுப்பியிருந்தாலும், செயல்விளைவில் பவுல் "எனது தற்போதய தேவைகளுக்கு நான் போதுமானவற்றை - மற்றும் அதிகமானவற்றை - கொண்டிருக்கிறேன். எதிர்காலத் தேவைகளைச் சந்திக்கக்கூட என்னிடத்தில் சில பொருட்கள் எஞ்சியிருக்கின்றன" என்று கூறினார். மற்றவர்களுக்கு நீங்கள் உதவியிருக்கிறீர்கள் என்று நீங்கள் அறிதல் என்பது கொடுத்தலின் ஆசீர்வாதங்களில் ஒன்றாக உள்ளது!

கட்டி எழுப்பப்பட்ட பரலோக "கணக்கு" (4:17, 18அ)

கடந்த காலத்தில் பிலிப்பியர்களின் கொடைகளைப் பற்றிக் குறிப்பிட்ட நிலையில் பவுல், கூடுதல் கொடைகளுக்காகத் தாம் குறிப்புக் காண்பிக்கவில்லை என்பதை மீண்டும் வலியுறுத்த வேண்டும் என்று நினைத்தார்: "உபகாரத்தை நான் நாடாமல், உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன்" (வசனம் 17). கொடுத்தலுக்கான கிறிஸ்தவ நோக்கத்தைத் தொகுத்துரைக்கும் ஒரு வசனம் இருக்கிறது என்றால், அது இந்த வசனம்தான். எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் தேவன், ஏவுதல் பெற்ற தமது எழுத்தாளர்கள் மூலமாக, கொடுக்கும்படி கட்டளையிடுகிறார் (காண்க 1 கொரிந்தியர் 16:1, 2). இது, அவருக்கு ஏதோ தேவைப்படுவதால் அல்ல (காண்க நடபடிகள் 17:25), ஆனால் நமக்குத் தேவைகள் இருப்பதாலேயே அவர் இவ்வாறு கட்டளையிடுகிறார். கொடுத்தல் என்பது *நமக்குச்* செய்யும் நன்மைகளின் நிமித்தமாகவே நாம் கொடுக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். பிலிப்பியர் 4:17ல் பவுலின் வார்த்தைகளுக்கு, வேதாகமத்தில் பின்வரும் பொழிப்புரை உள்ளது: "ஆனால் நான் உங்கள் கொடைகளைப் பாராட்டினாலும், உங்கள் தயவான குணத்தினால் நீங்கள் பெறவிருக்கும் நன்கு ஈட்டப்பட்ட வெகுமதியே என்னை வெகுமகிழ்ச்சிக்கு உள்ளாக்குகிறது" (என்னால் வலியுறுத்தப்படுகிறது).

NASB 17ம் வசனத்தில் "profit" "பலன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை "கனி" என்பதற்குரிய வார்த்தையாகும். கணக்காளர்கள் ஒரு கணக்கின் மீதான வட்டியைக் குறிப்பதற்கு இந்தச் சொற்றொடரை வசனம் 17ல் பயன்படுத்துகின்றனர். REB வேதாகமத்தில், "உங்கள் கணக்கின் மீது உயர்ந்துள்ள வட்டி" என்றுள்ளது. ஒரு சிறு வட்டிவிகிதத்தைத் தரும் உள்ளூர் வங்கி ஒன்றில் எனக்கு ஒரு கணக்கு உள்ளது. ஒவ்வொரு நாளும் கணக்கில் உள்ள இருப்புத்தொகை ஒரு சில சென்ட்டுகள் (பைசாக்கள்) அதிகரிக்கும். பிலிப்பியர்கள் பவுலுக்கு உதவி செய்கையில், அவர்கள் "பரலோகத்திலே பொக்கிஷங்களைச் சேர்த்துவைத்துக் கொண்டிருந்தனர்" (மத்தேயு 6:20; காண்க 1 தீமோத்தேயு 6:17-19). அவர்களின் ஆவிக்குரிய "வங்கிக்கணக்கு" "வட்டியை" ஈட்டிக்கொண்டிருந்தது என்று பவுல் அவர்களுக்குக் கூறினார். அவர் இங்கு ஒரு நிகழ்கால வினைச்சொல்லைப் பயன்படுத்தினார், இது எனது வங்கிக் கணக்கு அன்றாடம் வட்டியை ஈட்டுவது போன்றே, அவர்களின் பரலோக "கணக்கும்"

தொடர்ந்து "வட்டியை" ஆதாயப்படுத்திக் கொண்டிருக்கிறது என்று சுட்டிக் காண்பித்தார்.

இது ஆங்கில மொழிபெயர்ப்பில் எப்பொழுதுமே தெளிவாக இருப்பதில்லை, ஆனால் பவுல் தமது "உங்களுக்கு நன்றி" குறிப்பு முழுவதிலும் வணிக மொழியையே பயன்படுத்தினார்:

- 15ம் வசனத்தில் அவர், "நீங்கள்மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை" என்று கூறினார். "உடன்பட்டது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை "கூட்டாளித்துவத்தைக் கொண்டிருத்தல்" என்று மொழிபெயர்க்கப்படமுடியும்.[3] பிலிப்பியர்கள் பவுலுடன் ஆவிக்குரிய "கூட்டாளிகள்" ஆகி இருந்தனர். ஆவொன் மலோன் என்பவர் 15ம் வசனத்தைப் பின்வருவது போன்று பொழிப்புரை செய்தார்: "வேறு எந்த சபையும் என்னுடன் சேர்ந்து தொழில் செய்யவில்லை ..."[4]
- கூட்டாளித்துவம் என்பது கண்டிப்பான கணக்கு எழுதும் முறையைக் கோருகிறது. இவ்வாறாக, 15ம் வசனத்தில் பவுல், "கொடுக்கல் வாங்கல் காரியத்தை" குறிப்பிட்டார். ஜேக் முல்லர் என்பவரின் கூற்றுப்படி, இது "ஒரு வணிகச் சொற்றொடராக உள்ளது, மற்றும் இது செலவு மற்றும் வரவு ஆகியவற்றின் கணக்கைக் குறிக்கிறது."[5] TEV வேதாகமத்தில் "இலாபங்கள் மற்றும் நஷ்டங்கள்" என்றுள்ளது. அர்ன்டிட் மற்றும் கிங்ரிச் ஆகியோர் நிதிநிலைப் பேரேட்டுத் தாளின்மீதுள்ள வகையில், "பற்று மற்றும் வரவு" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினர்.[6]
- "உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே" என்று கணக்கியல் சொற்றொடரில் பவுல் பேசியுள்ள 17ம் வசனத்தை நாம் கண்ணோக்கியுள்ளோம். CJB வேதாகமத்தில், "உங்கள் கணக்கில் வரவு இருப்பை அதிகரிக்கும் விஷயத்தை நான் கண்ணோக்குகிறேன்" என்றுள்ளது.

18ம் வசனத்தில் முதல் பகுதியில் பவுல், "எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது" என்று கூறியபோது, அவரது வணிகவியல் மொழிப்பயன்பாடு உச்சப்படுத்தப்பட்டுள்ளது. "எல்லாம் எனக்குக் கிடைத்தது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*apecho panta* என்ற) கிரேக்கச் சொற்றொடர், "ஒரு இரசீதைப் பெறுவதில் பயன்படுத்தப்பட்ட நுட்பச் சொல்விளக்கமாக" இருந்தது.[7] இவ்வார்த்தைகள், "முதல் நூற்றாண்டுக் காலத்தில், இரசீதுகளில் அவற்றிற்குரிய தொகை 'முழுமையும் செலுத்தப்பட்டது' என்று சுட்டிக்காண்பிப்பதற்கு அவற்றின் மீது எழுதப்பட்டு" இருந்தன.[8] இவ்வாறாக NRSV வேதாகமத்தில், "எனக்கு முழுமையும் செலுத்தப்பட்டது" என்று இருக்கையில், TEV வேதாகமத்தில், "நீங்கள் எனக்குக் கொடுத்த எல்லாவற்றிற்கும் எனது இரசீது ... இதோ இங்குள்ளது" என்றுள்ளது. "நீங்கள் எனக்குப் பட்டிருந்த எல்லாக் கடனும் செலுத்தப்பட்டு உள்ளது - எனவே இன்னும் அதிகமாக எதுவும் அனுப்பத் தேவையில்லை" என்பது முடிவுவிளைவாக உள்ளது.

கணக்கியல் சொற்றொடரைப் பயன்படுத்தியதால் பவுல், பிலிப்பியர்களின் கொடையை ஒரு உலகப்பிரகாரமான நிதிநிலைப் பரிமாற்றமாகக்

குறைத்துப்போட முயற்சிசெய்தாரா? இல்லை, அவர் இன்றைய நாட்களில் கூட சிலர் செய்வது போலவே, பேச்சின் உருவகங்களைப் பயன்படுத்துவதை மகிழ்வுடன் அனுபவித்தார். அப்போஸ்தலரின் சித்திரத்துவமான மொழிநடை, பிலிப்பியர்களின் நற்செயலைத் தேவன் "பதிவு" செய்திருந்தார் மற்றும் அதை மறக்க மாட்டார் என்று அவர்களுக்கு உறுதியளிக்கும் ஒரு வழியாக மாத்திரம் இருந்தது (காண்க எபிரேயர் 6:10). தேவன் அவர்களுக்கு வெகுமதியளிக்கத் தவற மாட்டார் (1 கொரிந்தியர் 3:8ஆ) - மற்றும் அந்த வெகுமதியானது அவர்கள் செய்திருந்தவற்றை மிஞ்சி நிற்கும்!

நாம் தேவனுடைய ஊழியத்திற்காகக் கொடுக்கும்போது, நாமும் இதே வகையான உறுதிப்பாட்டைக் கொண்டிருக்க முடியும். அது கொடுத்தலின் ஆசீர்வாதங்களில் ஒன்றாக உள்ளது!

கர்த்தருக்கு "பலி"! (4:18ஆ)

கொடுத்தல் என்ற பாடக்கருத்து கணக்குப் பேரேட்டுத் தாள்களுக்கு மாத்திரம் ஒதுக்கப் பட்டது என்று எவரொருவரும் நினைக்கும்படி பவுல் விரும்பமாட்டார். அவர் விரைவிலேயே வங்கிரீதியான வார்த்தை அமைப்பில் இருந்து ஆசாரியத்துவச் சொல்லாக்கத்திற்குக் கடந்து சென்றார்: "உங்களால் அனுப்பப்பட்டவைகளைச் சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப்பிரோதீத்துவின் கையில் வரப்பற்றிக் கொண்டபடியினால் நான் திருப்தியடைந்திருக்கிறேன்" (வசனம் 18ஆ).

இவ்விடத்தில் கூறப்படும் உருவகம், கர்த்தருக்குச் செலுத்தப்பட்ட பலிகள் மற்றும் காணிக்கைகள் பற்றிய பழைய ஏற்பாட்டுக் குறிப்புகளில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, தகனபலிகளின் புகையானது தேவனுக்குப் பிரியமான சுகந்த வாசனையாக எழும்புவதாகக் கூறப்பட்டிருந்தது (ஆதியாகமம் 8:21; லேவியராகமம் 1:9, 13, 17). உங்களை மகிழ்விக்கும் வாசனைகளைப் பற்றி நினைத்துப் பார்க்கச் சற்று நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஒரு வாசமுள்ள மலரை நினைக்கலாம் ... அல்லது உங்கள் மனைவி பயன்படுத்தும் நறுமணப் பொருளை நினைக்கலாம் ... அல்லது குளித்து முடித்த குழந்தை ஒன்றின் இனிய மணத்தை நினைக்கலாம். இப்போது பின்வருவதைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்: நீங்கள் தேவனுடைய ஊழியத்திற்குக் கொடுக்கும் வேளையைக் காட்டிலும் வேறு எதுவும் தேவனுக்கு மேன்மையான "வாசனையாக" இருப்பதில்லை - வேறு எதுவும் அவருக்கு அவ்வளவு சுகந்த வாசனையைத் தருவதில்லை!

பவுல், "தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார். எல்லாக் கிறிஸ்தவர்களும் ஆசாரியர்களாகவும் கர்த்தருக்குப் பலிகளைச் செலுத்த வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர் (1 பேதுரு 2:5, 9). பழைய ஏற்பாட்டின்கீழ் மக்கள் பாவத்திற்காக பலிகளையும் (காண்க லேவியராகமம் 4:2, 3), நன்றி செலுத்துதல் மற்றும் துதி ஆகியவற்றை வெளிப்படுத்தும் பலிகளையும் (காண்க லேவியராகமம் 7:11, 12) செலுத்தினர். நாம் பாவத்திற்காகப் பலி செலுத்த இயலாது; அதை இயேசு சிலுவையில் செலுத்திவிட்டார் (எபிரெயர் 9:26; காண்க எபேசியர் 5:2). இருப்பினும் நாம் நம்மையே - நம்முடைய இருப்பு மற்றும் நமது செய்கை யாவற்றையும் - நன்றி செலுத்துதல் மற்றும் துதி ஆகியவற்றின் பலியாகச் செலுத்த முடியும் (ரோமர்

12:1; எபிரெயர் 13:15, 16; காண்க பிலிப்பியர் 2:17). அதைச் செய்வதற்கு, கிறிஸ்துவின் ஊழியத்திற்காகத் தாராளமாகக் கொடுத்தல் என்பது ஒரு வழிவகையாக உள்ளது (பிலிப்பியர் 4:18).

18ம் வசனத்தில் பவுல், பிலிப்பியர்களுக்கு மாபெரும் பாராட்டுரை ஒன்றை அளித்தார். *மிகச்சிறந்த* பலிகளை மாத்திரமே மக்கள் அளிக்க வேண்டியதாக இருந்தது. அப்போது மட்டுமே அவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன; அப்போது மட்டுமே அவைகள் தேவனுக்குப் பிரியமானவைகளாக இருந்தன (காண்க மல்கியா 1:6-8). இவ்வாறாக அப்போஸ்தலர் பிலிப்பியர்களுக்கு, அவர்களின் கொடை "தேவனுக்குப் பிரியமான உகந்த பலி"யாக இருந்தது என்று கூறியபோது, செயல்விளைவில் அவர், "நீங்கள் உங்களுடைய மிகச்சிறந்தவற்றை அனுப்பினீர்கள் என்று நான் அறிகிறேன்" என்றே கூறினார். நாமும்கூட நமது எஜமானருக்கு நம்மிடத்தில் உள்ளவற்றில் மிகச்சிறப்பானவற்றையே கொடுக்க வேண்டும்.

கொடுத்தலைப் பவுல் அதன் மிக உயர்ந்த மட்டத்திற்கு உயர்த்தினார். பிலிப்பியர்களின் கொடையானது முடிவில் தமக்குக் காட்டிலும் கர்த்தருக்கே மிக அதிகமானதாக இருக்கும் என்று அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று பவுல் விரும்பினார் (காண்க மத்தேயு 10:40-42; 25:31-40; நடபடிகள் 9:3-5). அவர் அதை உடனடியாகப் பெற்றுக்கொள்பவராக இருந்தார், ஆனால் பிதாவாகிய தேவனே அதை நிறைவில் பெற்றுக்கொள்பவராக இருந்தார். நமது கொடைகள் கர்த்தருக்கானவைகள் என்று அறிதல் கொடுத்தலின் ஆசீர்வாதங்களில் ஒன்றாக உள்ளது.

எல்லாத் தேவையும் நிறைவேற்றப்பட்டது (4:19)

பிலிப்பியர்கள் பவுலின் தேவைகளைக் குறித்துப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தனர். இப்போது அவர்களின் தேவைகளைக் குறித்துத் தேவன் பொறுப்பேற்றுக் கொள்ளுவார் என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று அப்போஸ்தலர் விரும்பினார். 19ம் வசனமானது வேதாகமத்தில் உள்ள மாபெரும் ஆசீர்வாதங்களில் ஒன்றாக உள்ளது: "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்." டிவைட் பென்ட்டகாஸ்ட் என்பவர் இந்த வசனத்தை, "யுகங்களினூடே தேவனுடைய பிள்ளைகளின் பாதங்களின் அடியில் உள்ள பாறை" என்று அழைத்தார்.[9] இங்கு பவுல் ஒரு உண்மையையா அல்லது ஒரு விருப்பத்தையா, எதை வெளிப்படுத்தினார் என்பது பற்றிக் கேள்வி உள்ளது. கையெழுத்துப் பிரதி ஆதாரமானது உண்மை என்பதை ஆதரிக்கிறது[10] - "தேவன் நிறை*வாக்குவார்*" - மற்றும் இவ்வாறே இது NASB வேதாகமத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

(ஆங்கில வேதாகமத்தில்) இவ்வசனம் "and" என்ற வார்த்தையுடன் தொடங்குகிறது. இது இவ்வசனத்தை இதற்கு முந்திய வசனத்துடன் பிணைக்கிறது: பிலிப்பியர்கள் பவுலுக்கு அளித்த தங்கள் கொடைகளில் தாராளகுணத்துடன் இருந்ததால், அவர்களைக் குறித்த பராமரிப்பில் தேவன் தாராளமாக இருப்பார். நாம், பிலிப்பியர்களின் சுயநலமற்ற கொடுத்தல் வழக்கங்களைக் *கொண்டிருந்தால்*, நமது தேவைகளையும் தேவன் நிறைவேற்றுவார். "கொடுப்பதற்கு மூடிக்கொள்ளும் கை பெறுவதற்கு

மூடிக்கொள்ளுகிறது, கொடுத்தலுக்குத் திறக்கும் கை பெறுவதற்குரிய நிலையிலும் இருக்கிறது."[11]

பின்பு "என் தேவன்" என்ற வார்த்தைகள் வருகின்றன. அந்தச் சொற்றொடரைப் பவுல் அரிதாகவே பயன்படுத்தினார். இது தனித்துவத் தொடுகை உள்ளதாகவும் தனிநபர் நம்பிக்கை வைத்தலின் வெளிப்பாடாகவும் உள்ளது. செயல்விளைவில் பவுல், "என் தேவன் உங்கள் தேவைகளை நிறைவாக்குவார்" என்று கூறினார்.

தேவன் என்ன செய்வார்? "தேவன் உங்கள் குறைவையெல்லாம் நிறைவாக்குவார்." இது நாம் விரும்புகிற எதையும் மற்றும் எல்லாவற்றையும் தேவன் நமக்குத் தருவார் என்று அர்த்தப்படுகிறதா? இல்லை. யாரோ ஒருவர், தேவன் நமது "பேராசைகளையல்ல" ஆனால் நமது "தேவைகளையே" நிறைவேற்றுகிறார் என்று கூறினார். நமக்கு உண்மையிலேயே தேவையானவற்றை, நமக்கு நன்மையானவற்றைக் கர்த்தர் நமக்கு தருகிறார். ஏர்ல் பால்பர் என்பவர், "நமது தேவைகள், நாம் எவ்வாறு இருக்க வேண்டும் அல்லது நாம் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறோமோ அதன்படியின்றி, நாம் யாராக வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ, அந்த விருப்பத்தினால் விளக்கப்படுகின்றன" என்று எழுதினார்.[12]

நாம் பல விருப்பங்களைக் கொண்டுள்ளோம், ஆனால் சார்பளவில் ஒரு சில அடிப்படைத் தேவைகளையே கொண்டுள்ளோம். மனோதத்துவ நிபுணர்களும் ஆலோசனை வழிகாட்டுநர்களும் மனிதகுலத்தின் அடிப்படைத் தேவைகளைப் பல்வேறு வழிகளில் விளக்கப் படுத்துகின்றனர், ஆனால் பின்வரும் பட்டியலானது நமது நோக்கத்திற்குப் பயனுள்ளதாக இருக்கும்:[13]

- உடல்ரீதியான தேவைகள் - உணவு, உடை, இருப்பினும் மற்றும் வாழ்வின் பிற அத்தியாவசியமான தேவை.
- உடல்ரீதியான பாதுகாப்பு - உடல்ரீதியான தேவைகள் எதிர்காலத்தில் சந்திக்கப்படும் என்ற உறுதிப்பாடு.
- உணர்வுப் பூர்வமான பாதுகாப்பு - ஏற்றுக்கொள்ளப்படுவதாக உணருதலுக்கான தேவை.
- வாழ்வில் ஒரு நோக்கம் - தேவைப்படுகிறோம் என்று உணரப்படுதலின் தேவை.
- ஒருவரின் செயலாற்றலை மேம்படுத்துதல் - வளருவதற்கான தேவை.

இந்தத் தேவைகள் யாவற்றையும் தேவன் அளிக்கிறார் என்பதை உணர்ந்தறிதல் ஆச்சரியமானதாக உள்ளது.

- உடல்ரீதியான தேவைகள் - தேவனுடைய சித்தத்தை நாம் செய்தால் வாழ்வின் தேவைகளை அருளுவதாகத் தேவன் நமக்கு வாக்குத்தத்தம் செய்துள்ளார் (மத்தேயு 6:33).
- உடல்ரீதியான பாதுகாப்பு - எதிர்காலத்தில் தேவன் நம்மைப் பராமரிப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (மத்தேயு 6:34; காண்க பிலிப்பியர் 4:6).
- உணர்வுப் பூர்வமான பாதுகாப்பு - தேவன் தமது நிபந்தனையற்ற

அன்பை நமக்கு விரிவாக்கியுள்ளார் (காண்க ரோமர் 5:8; 8:35, 39).

- *வாழ்வில் ஒரு நோக்கம் - கிறிஸ்தவராக இருத்தல் என்பது வாழ்வதற்கான ஒரு நோக்கத்தை நமக்குக் கொடுக்கிறது (காண்க பிலிப்பியர் 1:21; எபேசியர் 2:10).*
- *ஒருவரின் செயலாற்றலை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு - கிறிஸ்துவுக்குள் நாம் பக்குவம் அடைந்தவர்களாக முடியும் (காண்க எபேசியர் 4:15; கொலோசெயர் 1:28).*

நமக்கான தேவனுடைய அளித்தலில் இருதயம் போன்ற மையப்பகுதியாக இருப்பவர், அவரது குமாரனும் இரட்சிப்பின் வாக்குத்தத்தமும் ஆகும். இதை மலோன் என்பவர், "மன்னிப்பு, சமாதானம் மற்றும் ஆவிக்குரிய வல்லமை ஆகியவை மாபெரும் இருதய வேட்கைகள்" என்று குறிப்பிட்டார்.[14] *தேவன் இவை எல்லாவற்றையும் தருகிறார்! மேலும் அவரது ஆவிக்குரிய அளிப்பானது மற்ற எல்லாப் பகுதிகளிலும் அவரது அளிப்பிற்கு உத்தரவாதமாக உள்ளது: "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" (ரோமர் 8:32). பென்ட்டகாஸ்ட் என்பவர் இவ்வசனத்திற்குப் பின்வருமாறு விளக்கம் கொடுத்தார்:*

> *நான் ஒரு நேர்த்தியான நகைக் கடைக்குச் சென்று அவர்களின் தொகுப்பில் இருந்து ஒரு மிக நேர்த்தியான வைரத்தை வாங்க வேண்டியிருந்தால், அதைச் சுற்றிக் கொண்டுவர ஒரு காகிதத்துண்டை நான் கேட்பதை அவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள் என்பது உறுதி. நமது ஆவிக்குரிய தேவைகளைச் சந்திக்கும்படிக்கு, வளமான உடைமையாகிய தமது பரலோக ஆசீர்வாதங்களை நமக்கு அருளியிருக்கிற தேவன், நமது உலகப்பிரகாரமான தேவைகளைச் சந்தித்தலைப் பெரிய விஷயமாகக் கருதமாட்டார்.*[15]

தேவன் உலகப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய தேவைகள் இரண்டையும் நமக்கு அளிக்கிறார் என்பதால், நாம் நமது வேலைகளை விட்டுவிட்டு, நாம் சொந்தம் கொண்டுள்ள யாவற்றையும் (பிறருக்கு) கொடுத்துவிட்டு, "அவர்மீது மாத்திரமே சார்ந்திருக்க" வேண்டுமா? இல்லை. நமது வேலைகள் மற்றும் உடைமைகள் ஆகியவை கர்த்தர் நமக்கு அளித்திருப்பவற்றின் பாகமாக உள்ளன (காண்க யாக்கோபு 1:17). "தேவன் உங்களுக்கு கொடுத்திருப்பவற்றை நீங்கள் ஊதாரித்தனமாக இறைத்துவிட்டு ... உங்கள் தேவையைச் சந்திப்பதில் அவர் தலையிட வேண்டும் என்று நினைப்பது மதியீனமாக உள்ளது."[16] *நாம் வேலை செய்ய வேண்டும் என்றும் (2 தெசலோனிக்கேயர் 3:10) மற்றும் நமக்கும் பிறருக்கும் நம்மால் முடிந்ததை அளித்துக்கொள்ள வேண்டும் (எபேசியர் 4:28; 1 தீமோத்தேயு 5:8) என்றும் தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். அதே வேளையில் தேவன் நம்மைக் கவனித்துக் கொண்டு இருக்கிறார் என்று உணர்ந்தறிதல் ஆச்சரியமானதாக இருப்பதில்லையா? நமக்குத் தேவையானவற்றை நாம் பெற்றுக்கொள்வதை அவர் நிச்சயப்படுத்துவார்!*

அது ஒரு கேள்வியைக் கொண்டு வருகிறது: நமது தேவைகளுக்குத் தேவன் எவ்வாறு கொடுத்து உதவுகிறார்? (ஏற்கனவே) குறிப்பிட்டபடி,

நாம் வேலைசெய்யத் திறமைகளையும் வாய்ப்புகளையும் அவர் நமக்குக் கொடுக்கிறார். மற்ற வழிமுறைகளும் குறிப்பிடப்பட முடியும்; உதாரணமாக, அவர் பிற மக்களின் மூலமாகப் பவுலின் தேவைகளுக்குக் கொடுத்து உதவினார் (பிலிப்பியர் 4:18), மற்றும் அவர் நமக்கும் அதையே செய்யலாம். மீண்டுமாக அவர், தமது தொடர்ந்த பராமரிப்பை நமக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (ரோமர் 8:28). அப்படியென்றால், எப்போதும் எப்போதுமே அவர் தமது தனிப்பட்ட அன்பினாலும் அக்கறையினாலும் நமது ஆவிக்குரிய தேவைகளுக்கு கொடுத்து உதவுகிறார் (ரோமர் 8:39). தேவன் நம்மை எவ்வாறு பராமரிக்கிறார் என்பதல்ல, ஆனால் அவர் அதைச் செய்வார் என்று விசுவாசிப்பதே - அவர் மீது நம்பிக்கை வைக்கக் கற்றுக்கொள்வதே - முக்கியமாக உள்ளது.

நமது எல்லாத் தேவைகளுக்கும் கொடுத்து உதவ தேவனால் உண்மையிலேயே முடியுமா? 19ம் வசனம் "தம்முடைய ஐசுவரியத்தின்படி ... மகிமையிலே" என்ற சொற்றொடருடன் தொடருகிறது. "மகிமையிலே" என்பது "நிறைவாக்குவார்" என்ற வினைச்சொல்லை ("மகிமையாக") மாற்றியமைக்கிறதா அல்லது "ஐசுவரியம்" என்ற பெயர்ச்சொல்லை ("மகிமையான ஐசுவரியம்") மாற்றியமைக்கிறதா அல்லது அது பரலோகத்தைக் குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளதா ("மகிமையின்" இடம்) என்று விளக்கவுரையாளர்கள் விவாதிக்கின்றனர். இருப்பினும் எல்லாரும், இவ்வசனப்பகுதி தேவனுடைய ஆதாரவளங்கள் மகிமையானவை - ஏனென்றால் அவைகள் அள்ள அள்ளக் குறையாதவை - என்று ஒப்புக்கொள்கின்றனர்.

> தேவன் தமது எண்ணற்ற எண்ணிக்கையிலான பிள்ளைகளின் திரளான தேவைகளைச் சந்திக்க முடியும், ஏனெனில் அவர் தமது மகிமையுள்ள ஐசுவரியத்தில் முடிவற்று இருக்கிறார். வரையறைக்கு உட்பட்ட நிதிகளைக் கொண்டுள்ள ஒரு மனிதர், வெவ்வேறு காரணங்களுக்கு அதைக் கொடுக்கையில், அந்த நிதி குறைந்து போவதைக் காண்பார்; ஆனால் ஒரு மனிதர் அளவற்ற நிதிகளைக் கொண்டிருந்தால், அவர் எல்லை யின்றிக்கொடுக்க முடியும், கொடுப்பதற்கான அவரது இருப்புகளில் குறைவே ஏற்படாது. தேவன் மகிமையில் எல்லையற்று இருப்பதால், எல்லை யற்ற எண்ணிக்கையிலான தேவைகளுக்கு அவர் கொடுக்க முடிவதுடன் இன்னும் அவரிடத்தில் எல்லையற்ற வளங்கள் நிறைந்து இருக்கும்.[17]

ஆகவே தேவன், "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராக" இருக்கிறார் (எபேசியர் 3:20)! வார்ரென் வயர்ஸ்ப் என்பவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> பிலிப்பியர் 4:18 மற்றும் 19 ஆகிய வசனங்களுக்கு இடையில் ஆர்வத்தைத் தூண்டும் ஒரு வேறுபாடு உள்ளது. பவுலின் உரையைப் பொழிப்புரை செய்வதென்றால் நாம் இதைப் பின்வருமாறு உரைக்கலாம்: "நீங்கள் *என்* தேவையைச் சந்தித்தீர்கள், தேவன் *உங்கள்* தேவைகளைச் சந்திக்கப் போகிறார். நீங்கள், நான் கொண்டுள்ள *ஒரு* தேவையைச் சந்தித்தீர்கள், ஆனால் எனது தேவன் உங்கள் *எல்லாத்* தேவைகளையும் சந்திப்பார். நீங்கள் உங்கள் *ஏழ்மையில்* இருந்து கொடுத்தீர்கள், ஆனால் தேவன்

மகிமையுள்ள தமது ஐசுவரியத்தில் இருந்து உங்கள் தேவைகளுக்குக் கொடுத்து உதவுவார்!"[18]

மாபெரும் இவ்வசனப் பகுதியை நாம் முழுமையாகப் பார்த்து முடிக்கவில்லை. இவ்வசனத்தின் முடிவுப் பகுதியில் உள்ள பின்வரும் திறவுகோல் வார்த்தைகளை நாம் தவறவிடக்கூடாது: "கிறிஸ்து இயேசுவுக்குள்." 4:19 ன் மாட்சிமை மிகுந்த வாக்குத்தத்தம் "கிறிஸ்து இயேசுவுக்குள்" நிறைவேறுகிறது மற்றும் "கிறிஸ்து இயேசுவுக்குள்" இருப்பவர்களுக்கு மாத்திரமே உரித்தானது: இவர்கள், அவருக்குள் ஞானஸ்நானம் பெற்று அவருக்குள் வாழ்கிறவர்கள் ஆவர் (ரோமர் 6:3, 4; கலாத்தியர் 3:26, 27; கொலோசெயர் 2:6). பென்ட்டகாஸ்ட் என்பவர் இதன் மீது நேரத்திற்கு ஏற்ற பின்வரும் விளக்கத்தைக் கொடுத்தார்:

> வாக்குத்தத்தம் ... கீழ்ப்படிதலை முன் அனுமானிக்கிறது. தேவனுக்குக் கீழ்ப்படிதலைத் தராமல் வாக்குத்தத்ததின் நிறைவேற்றத்தை உரிமை கோருதல் என்பது தவறான யூகமாகும். இது விசுவாசக் குறைவைக் காண்பிக்கிறது ...
>
> ... திரளான மக்கள் கூட்டத்திற்கு நமது கர்த்தர், "எனது பிதா, பறவைகள் மற்றும் புல் ஆகியவற்றைக் கூடப் பராமரிக்கிறார், ஆனால் தேவனுடைய இராஜ்யத்தை *முதலில்* தேடுங்கள், அப்போது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்" என்று கூறினார்.
>
> இயேசுகிறிஸ்து நமது வாழ்வில் தமது சரியான இடத்தில் இல்லை என்றால், மற்றும் நாம் தேவனுடைய சித்தத்துடன் சரியான வகையில் தொடர்புபடாதிருந்தால், "(நமது) தேவன் ... (நமது) குறைவையெல்லாம் ... நிறைவாக்குவார்" என்று கூறுவது தவறான யூகமாக இருக்கும்.[19]

இருப்பினும், அவருடைய சித்தத்தைச் செய்வதற்கு - நாம் கொடுக்க வேண்டிய பிரகாரம் கொடுத்தல் உட்பட நாம் நம்மை ஒப்புக்கொடுத்திருந்தால் அவர் நமது ஒவ்வொரு தேவையையும் நிறைவாக்குவதாக வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார். அது கொடுத்தலின் மாபெரும் ஆசீர்வாதங்களில் ஒன்றாக உள்ளது.

தேவன் மகிமைப்படுதல் (4:20)

பவுல், 4:19ன் உச்சபட்சச் சிந்தனையை அடைகையில், அவர் தமது துதியை வெளிப்படுத்தாமல் இருக்கக் கூடாதிருந்தார்: "நம்முடைய பிதாவாகிய தேவனானவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக" (4:20அ). பவுல் "என் தேவன்" என்று பேசியிருந்தார்; இப்போது அவர் தம் வாசகர்களுடன் தம்மை அடையாளப்படுத்திக் கொள்கிறார்: "*நம்முடைய* தேவன்." *அவர்களின்* தேவன் அவர்களுக்கு "மகிமையில் ஐசுவரியங்களை" கொடுத்திருந்தார் (வசனம் 19); எனவே அதற்குப் பதிலாக அவர் மகிமையைப் பெறவேண்டும்.

"என்றென்றைக்கும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்றொடரானது மூலமொழியில், "காலங்காலமாக" என்று நேரடியாக அர்த்தப்படுகிறது. நித்தியத்துவம் என்பது யுகத்திற்குப் பின் யுகமாக, மனிதப் புரிந்துகொள்ளுதலுக்கு அப்பால் முடிவில்லாத வகையில் நீண்டுள்ளது என்பதே நித்தியத்தைப் பற்றி

அந்த நாட்களில் இருந்த மனிதர்கள் புரிந்துணரக் கூடிய ஒரே வழியாக இருந்தது. தேவன் என்றென்றைக்கும் மகிமைப்பட வேண்டியவராக இருக்கிறார். இதை நாம் செய்வதற்கு, நாம் கொடுக்க வேண்டிய பிரகாரம் கொடுத்தல் என்பது ஒரு வழியாக உள்ளது. நாம் தேவனை மகிமைப்படுத்துகிறோம் என்று அறிதலானது கொடுத்தலின் ஆசீர்வாதங்களில் ஒன்றாக உள்ளது.

20ம் வசனம் "ஆமென்" என்ற வார்த்தையுடன் முடிகிறது: "அப்படியே ஆகட்டும்" அல்லது "இது உண்மையாக உள்ளது." பவுல் எழுதியிருந்தது நிச்சயமானதும் கேள்விகேட்க இயலாததுமாக இருந்தது என்பதில் சந்தேகம் இல்லை! "நம்முடைய பிதாவாகிய தேவனானவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்."

முடிவுரை

நாம், கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டபடி கொடுக்கும்போது நம்முடையவைகளாகிற ஆசீர்வாதங்கள் சிலவற்றைப் பட்டியலிட்டோம். பிலிப்பியர்கள் இந்த ஆசீர்வாதங்களை பெறுவதற்காகவே கொடுத்தார்களா? அநேகமாக இல்லை என்றே கூறலாம். அவர்கள் பவுலை நேசித்தார்கள், அவ்வளவே. அவர் எங்கிருந்தார் என்றும் அவரது தேவைகள் என்ன என்றும் அவர்கள் கண்டறிந்தபோது, அவர்கள் அவருக்கு உதவியை அனுப்பினார்கள். அவர்கள் தங்களின் தாராளதன்மையினால் விளைந்த பல பயன்களை அறிந்த போது வியப்பு அடைந்திருக்க சாத்தியம் உள்ளது;

- *அவர்கள், பகிர்ந்து கொள்ளுதலில் மூலமாக வருகிற ஆசீர்வாதத்தை கொண்டிருந்தனர்.*
- *அவர்கள், இன்னொருவருக்கு உதவி செய்தலில் மனநிறைவை அறிந்தனர்.*
- *அவர்கள், தங்கள் பரலோக "கணக்கில்" நிதிகளைக் கூடுதலாக்கினர்.*
- *அவர்கள் கொடையானது கர்த்தருக்கு பிரியமான "பலியாக" இருந்தது.*
- *அவர்கள், தங்கள் தேவைகளை தேவன் நிறைவாக்குவார் என்ற வாக்குத்தத்தத்தைப் பெற்றிருந்தனர்.*
- *இதன் விளைவாகத் தேவன் மகிமைப்படுத்தப்பட்டார்.*

பின்வருவதை ஒருக்காலும் சந்தேகப் படாதீர்கள்: தாராளமாக கொடுத்தல் என்பது பிலிப்பியர்களுக்கு என்ன செய்ததோ அதையே அது உங்களுக்கும் செய்யும்! கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்: அமுக்கிக் குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்: நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் (லூக்கா 6:38).

இருப்பினும் முதலில் நீங்கள் உங்களையே கர்த்தருக்கென்று கொடுக்கவேண்டும் (காண்க 2 கொரிந்தியர் 8:5ஆ). இந்த ஆசீர்வாதங்கள் யாவையும் "கிறிஸ்துவுக்குள்" இருப்பவர்களுக்கு மாத்திரமே என்பதை நினைவில் வையுங்கள். நீங்கள் ஒரு மனம்வருந்திய விசுவாசி என்ற வகையில் இயேசுவுக்குள் ஞானஸ்தானம் பெறாதிருந்தால் (மாற்கு 16:16; நடபடிகள் 2:38; கலாத்தியர் 3:26, 27), அதை இன்றே செய்யுங்கள்.

குறிப்புகள்

[1]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III (Minneapolis: Bethany House Publishers, 1984), 30-31. [2]Ibid., 494. [3]Alfred Marshall, *The Interlinear Greek-English New Testament* (London: Samuel Bagster & Sons Ltd., 1958), 788. [4]Avon Malone, *Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 121. [5]Jac J. Muller, *The Epistles of Paul to the Philippians and to Philemon,* The New International Commentary on the New Testament, ed. F. F. Bruce (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publi shing Co., 1955), 149. [6]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957), 204. [7]John A. Knight, *Beacon Bible Expositions,* vol. 9, *Philippians, Colossians, Philemon* (Kansas City, Mo.: Beacon Hill Press, 1985), 122. [8]Pat Edwin Harrell, *The Letter of Paul to the Philippians,* The Living Word Commentary series, ed. Everett Ferguson (Austin: R. B. Sweet Co., 1969), 147-48. [9]J. Dwight Pentecost, *The Joy of Living: A Study of Philippians* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1973), 239. [10]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary*, vol. 43, *Philippians,* ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 208. *ஹாவ்தார்ன் என்பவரின் விளக்கங்கள், விருப்பம் என்ற கருத்தையே ஆதரிக்கின்றன, ஆனால் "எந்த ஒரு பதிலுக்கும் ஒருவர் கையெழுத்துப் பிரதியின் ஆதாரத்தை மாத்திரம் முழுமையாகச் சார்ந்திருக்க வேண்டியிருந்தால், அவர் ... 'அவர் நிறைவாக்குவார்' என்ற கருத்தையே விரும்பித் தேர்ந்தெடுப்பார் ..." என்பதைக் கவனியுங்கள்.*

[11]Wendell Winkler, "Christian Fellowship; God Will Provide; Saints in Caesar's Household; Salutations and the Benediction," *A Homiletic Commentary on the Book of Philippians,* ed. Garland Elkins and Thomas B. Warren (Memphis: Getwell church of Christ, 1987), 285. [12]Earl F. Palmer, *Integrity in a World of Pretense: Insights from the Book of Philippians* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 176. [13]Adapted from unpublished class notes by David L. Roper: "Victory over the Challenge of Life." The list is based on a number of counseling books. [14]Malone, 122. [15]Pentecost, 245. [16]Ibid., 244. [17]Ibid. [18]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 99. [19]Pentecost, 243-44.

19

வல்லமையைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுதல்

[பிலிப்பியர் 4:21-23]

சமீபத்தில் அர்க்கன்சாஸில் பலத்த, உக்கிரமான காற்றுடன் கூடிய மோசமான ஒரு இடிப்புயல் ஏற்பட்டது. அது எனது வீட்டு முகப்பில் உள்ள உயரமான ஒரு பெகான் மரம் உட்படப் பல மரங்களை வீழ்த்தியது, அத்துடன் மின்னாற்றல் கம்பங்களையும் விழ்த்தியது. எங்கள் வீட்டில் பலமணி நேரம் மின்சாரம் இல்லாதிருந்தது; சில பகுதிகளில் அது சில நாட்கள் வரையிலும் இல்லாது போயிற்று. புயலுக்குப் பின்பு ஏறக்குறைய ஒவ்வொரு தெருவிலுமே, மின்னாற்றல் தரும் கம்பிகளைச் சரிசெய்வதற்காக பழுதுநீக்கும் வண்டி வந்திருந்தது. நம்மில் பெரும்பான்மையானவர்கள், நமது வாழ்வில் "புயல்களை" - தனிநபருக்குரிய புயல்கள், உணர்வுரீதியான புயல்கள், உடல்நலமின்மையின் புயல்கள் ஆகியவற்றை - அனுபவித்திருக்கிறோம். இதன் விளைவாகச் சிலர், தங்கள் "வல்லமை போய்விட்டதாக" உணருகின்றனர். ஒருசிலர் உட்கார்ந்து வெறும் வெளியை உற்றுப்பார்க்கின்றனர். மற்றவர்கள் இருதயம் சோர்ந்து, ஏமாற்றம் அடைந்து அல்லது மனம் தளர்ச்சியடைந்து போகின்றனர். இவர்கள் தங்களுடைய "வல்லமை"யைத் திரும்பப் பெற வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

[தேவ] கட்டளைகள் மூலம் வல்லமை (பிலிப்பியர் நிருபத்தின் முக்கியக் கருத்துக்கள்)[1]

பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் வல்லமை பற்றி அதிகமாகக் கூறுகிறது. 2ம் அதிகாரத்தில் பவுல், "ஏனெனில் தேவனே ... உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" என்று கூறினார் (வசனம் 13). "உண்டாக்குகிற" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையில் இருந்துதான் நாம், "வல்லமை" என்பதற்கான ("energy") ஆங்கில வார்த்தையைப் பெறுகிறோம். தேவன் நம்மை வல்லமை உள்ளவர்கள் ஆக்குகிறார்*! 3ம் அதிகாரத்தில் அப்போஸ்தலர், ஒரு நாளிலே கர்த்தர் "அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய* வல்லமையான *செயலின்படியே, நம்முடைய அற்புதமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" என்று எழுதினார் (வசனம் 21; என்னால் வலியுறுத்தப்படுகிறது). 4ம் அதிகாரத்தில் பவுல், "என்னைப்* பெலப்படுத்துகிற *கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" என்று அறிவித்தார் (வசனம் 13; என்னால் வலியுறுத்தப்படுகிறது). "பெலப்படுத்துகிற"*

என்ற அர்த்தமுள்ள கிரேக்க வார்த்தையில் இருந்தே நாம், "dynamite" என்ற ஆங்கில வார்த்தையைப் பெறுகிறோம்!

பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் உள்ள [தேவ] கட்டளைகளை நமது வாழ்வின் பாகமாக, நமது இருப்பின் பாகமாக ஆக்கிக் கொள்ளுதல் என்பது "வல்லமையை திரும்பப் பெறக்கூடிய" ஒரு வழியாக உள்ளது. பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தின் கொள்கைகளை நாம் நடைமுறையில் செயல்படுத்தாமல் இருந்தால், இந்த நிருபத்தைப் பற்றிப் படிக்க நாம் எடுத்துக்கொண்ட நேரம் வீணாக்கப் பட்டதாகவே இருக்கும்.

> *... உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்; அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான். சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான் (யாக்கோபு 1:21-25).*

இந்த நிருபத்தைப் பற்றிய ஒரு விரிவான மறுகண்ணோட்டத்திற்கு இப்புத்தகத்தில் உள்ள இடம் அனுமதிக்காது, ஆனால் இந்தப் பாடவரிசையின் முழு ஆய்வுக்கருத்தைச் சிந்தித்துக் பார்க்கச் சற்று நேரத்தை நாம் எடுத்துக்கொள்வோமாக: "*சந்தோஷம் நிறைந்த* கிறிஸ்தவம்." "சந்தோஷமாயிருங்கள்" என்று அப்போஸ்தலர் மீண்டும் மீண்டும் நமக்குக் கூறினார் (பிலிப்பியர் 3:1; 4:4). இங்கு குறிப்பிடப்படுகிற "சந்தோஷம்" என்பது *"கிறிஸ்துவுக்குள்"* மாத்திரமே காணப்பட முடியும் (காண்க 4:7, 19; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இந்தப்படிப்பின் அங்கமாக இருந்துள்ள ஒவ்வொருவரும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும் (ரோமர் 6:3, 4; கலாத்தியர் 3:27) என்றும் இப்போது அவருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் (மத்தேயு 16:24) என்றும் நான் ஜெபிக்கிறேன். வல்லமை பொதியப்பட்ட இந்தச் சிறு நிருபத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்துதல்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் அவரைப் பின்பற்றுதலை நீங்கள் நன்முறையில் தொடங்க முடியும்!

மக்கள் மூலம் வல்லமை

பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் பற்றிய இந்தப்படிப்பை நீங்கள், வாசிப்பதோடு நிறுத்தி விடாது, இந்த நிருபத்தில் உள்ள தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தும் - மற்றும் [அதன் மூலம்] வல்லமையூட்டப் பட்டும் - இருப்பீர்கள் என்று நான் நம்பிக்கையாக இருக்கிறேன். இருப்பினும் நாம் முழுமையாகப் படித்து முடிக்கவில்லை. முந்திய எடுத்துரைப்பில் பவுல்,

4:19, 20ல் பின்வரும் உச்சகட்டத்தை அடைந்தார்: "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். நம்முடைய பிதாவாகிய தேவனானவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்." அது முடிப்பதற்கு ஒரு நல்ல இடமாகக் காணப்படும், ஆனால் பவுல் எடுத்துரைத்து முடிக்கச் சில விஷயங்களை இன்னும் கொண்டிருந்தார். கடைசி மூன்று வசனங்களை அப்போஸ்தலரின் "பி.கு." ("பின் குறிப்பு") என்று நாம் நினைக்கலாம்.

20ம் வசனத்திற்குப் பின்பு பவுல் எழுதுகோலை எடுத்து தாமே இந்தக் கடைசி வரிகளை எழுதினார் என்று சிலர் நினைக்கின்றனர். தெசலோனிக்கேயருக்கு எழுதிய தமது இரண்டாம் நிருபத்தின் முடிவுக்கு அண்மையில் அவர், "பவுலாகிய நான் என் கையெழுத்தாலே உங்களை வாழ்த்துகிறேன், நிருபங்கள்தோறும் இதுவே அடையாளம்; இப்படியே எழுதுகிறேன்" என்று கூறினார் (2 தெசலோனிக்கேயர் 3:17; காண்க கலாத்தியர் 6:11; கொலோசெயர் 4:18). சார்லஸ் ஸ்விண்டால் என்பவர் பின்வருமாறு கூறினார்: "நரைமுடி கொண்ட அப்போஸ்தலர், விலங்கிடப்பட்ட தமது கையை எப்பாப்பிரோதீத்துவின் தோள்மீது போட்டுக்கொண்டு, அவரது கையில் இருந்து எழுதுகோலை எடுத்து ... தமது சொந்த விரல்களால் பின்வரும் இந்த முடிவு வார்த்தைகளை எழுதி அமைப்பதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது:"[2]

> கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் யாவருக்கும் வாழ்த்துதல் சொல்லுங்கள். என்னோடிருக்கிற சகோதரர்கள் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். பரிசுத்தவான்கள் அனைவரும், விசேஷமாக இராயனுடைய அரமனையிலுள்ளவர்களும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.
>
> நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென் (பிலிப்பியர் 4:21-23).

பவுல் தமது சொந்தக் கையினால் அந்த வார்த்தைகளை எழுதினார் என்று நாம் நிச்சயமாகக் கூற முடியாது, ஆனால் ஒரு விஷயம் தெளிவாக உள்ளது: அவர் தமக்குப் பிரியமாக இருந்த மக்கள் மீது கவனம் குவிக்காது இந்த நிருபத்தை முடிக்க விரும்பவில்லை. ஆவிக்குரிய "வல்லமை" யை "திரும்பப் பெற்றுக் கொள்ள" தேவன் உதவக்கூடிய ஒரு வழி மக்கள் மூலமாகத்தான்.

ஒவ்வொரு பரிசுத்தவானும்

21ம் வசனம், "கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் யாவருக்கும் வாழ்த்துதல் சொல்லுங்கள்" என்று தொடங்குகிறது. முன்பே குறிப்பிட்டபடி, "பரிசுத்தவான்" என்பது "பரிசுத்தமான ஒருவர்" அல்லது "பிரித்து வைக்கப்பட்ட ஒருவர்" என்று அர்த்தப்படுகிறது; இது ஒவ்வொரு கிறிஸ்தவரையும் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்ட ஒரு சொற்றொடராக உள்ளது (காண்க 1 கொரிந்தியர் 1:2; பிலிப்பியர் 1:1). "இருந்த போதிலும் இச்சொற்றொடர், பரிசுத்த வாழ்விற்குரிய மேன்மையான சிலாக்கியங்கள் மற்றும் கடமைகள் ஆகியவற்றைத் தொடர்ந்து நினைவூட்டுவதாகவும் இருந்தது."[3] பவுல் இந்த நிருபத்தை "பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும்"

எழுதியிருந்தார் (1:1). இப்போது இதை முடிக்கையில் அவர், தனிப்பட்ட வகையில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் வாழ்த்துக் கூறினார்.

"பரிசுத்தவான்கள் யாவருக்கும் வாழ்த்துதல் சொல்லுங்கள்" என்று பவுல் யாரிடத்தில் கேட்டுக் கொண்டார்? இவ்வார்த்தைகள் பிலிப்பி நகரின் சபையில் இருந்த எல்லா உறுப்பினர்களுக்கும் எழுதப் பட்டிருக்கலாம்; இவைகள் "ஒருவர் மற்றவரை வாழ்த்துங்கள்" என்று மாத்திரம் அர்த்தப்படலாம். ரோமானியாவில் உள்ள எனது மகள் மற்றும் குடும்பத்தாருக்கு நான் கடிதம் எழுதுகையில், "எனக்காக ஒருவர் மற்றவரை அணைத்துக் கொள்ளுங்கள்" என்று அடிக்கடி அவர்களுக்குக் கூறுவதுண்டு. இருப்பினும் பவுல் தமது தொடக்க வார்த்தைகளில் (1:1), சபைக்குழுமத்தின் நடத்துநர்களைக் குறிப்பாக குறிப்பிட்டிருந்ததால், அந்த நடத்துனர்கள் மற்ற உறுப்பினர்களுக்கு வாழ்த்துக்களைக் கூற வேண்டும் என்று அவர் கேட்டிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது.

பவுல் தமது [பிற] நிருபங்களில் சில வேளைகளில் செய்தது போன்று பெயர்ப்பட்டியல் ஒன்றை ஏன் இணைக்கவில்லை என்று சிலர் வியப்படைகின்றனர் (காண்க ரோமர் 16:3-15). சட்டப்படி பவுல், சபைக்குழுமத்தில் ஒரு சிலரை [மாத்திரம்] அறிந்திருந்தபோது அதைச் செய்தார், ஆனால் பிலிப்பி நகரில் ஆராதித்தவர்களில் ஏறக்குறைய ஒவ்வொருவரையும் பவுல் அறிந்திருந்தார். தனிநபர்களை அவர் பட்டியலிடத் தொடங்கினால், அவர் சிலரை விட்டுவிடக்கூடிய இடர்ப்பாடு இருந்திருக்கும். எனக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தார் ஆராதிக்கும் சபைக்கு சமீபத்தில் "நான் ஒரு கடிதம் எழுதுகையில் [அந்தக் குடும்பத் தலைவரின் பெயர் எழுதி] அவர்களுக்கு என் வாழ்த்துதலைத் தெரிவியுங்கள்" என்ற குறிப்பை எழுதினேன். இருப்பினும், ஆக்லஹாமாவின் மிட்வெஸ்ட் நகரில் உள்ள கிழக்குப் பகுதி சபைக்கு நான் எழுத வேண்டியிருந்தால், பெயர்ப்பட்டியல் ஒன்றை அதில் உள்ளடக்க நான் துணியமாட்டேன். அந்த சபைக்குழுமத்துடன் எனக்கு நாற்பதுக்கும் மேலான ஆண்டுகள் தொடர்பு உள்ளது - நிச்சயமாக அங்குள்ள விசேஷித்தவர்களில் யாரது பெயரையேனும் நான் விட்டுவிடுவேன்!

அடுத்ததாகப் பவுல், "என்னோடிருக்கிற சகோதரர்கள் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்" என்று கூறினார் (பிலிப்பியர் 4:21ஆ). "சகோதரர்கள்" என்பது - தீமோத்தேயு (1:1) மற்றும் பிறர் (காண்க கொலோசெயர் 4:14; பிலேமோன் 23, 24) உட்பட - ரோமாபுரியில் அப்போஸ்தலரின் ஊழியத்தைப் பகிர்ந்து செய்தவர்களைக் குறிப்பிடுவதாயிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. (அந்த வேளையில் தீமோத்தேயு மாத்திரமே ரோமாபுரியில் இருந்தார் [பிலிப்பியர் 2:20] என்று நாம் ஏற்கனவே யூகித்திருந்தோம், ஆனால் மற்றவர்கள் தங்கள் நல்வாழ்த்துதல்களைப் பிலிப்பியில் இருந்த சபையார் அறிய வேண்டும் என்று விரும்பியிருப்பார்கள்.)

அதன்பின் பவுல், "பரிசுத்தவான்கள் அனைவரும், ... உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்" என்று எழுதினார் (வசனம் 22அ, இ). இந்த "பரிசுத்தவான்கள்" ரோமாபுரி சபையின் பிற உறுப்பினர்களாக இருந்திருக்கலாம். வாழ்த்துக்களும் கிறிஸ்தவ ஐக்கியமும் முன்னும் பின்னும் பாய்ந்தோட வேண்டும் என்று பவுல் விரும்பினார்.

குறிப்பிட்ட சில பரிசுத்தவான்கள்

பின்பு பவுல், வாழ்த்துக்களை அனுப்பிய ஒரு விசேஷமான குழுவினரைத் தனிப்படக் குறிப்பிட்டார்: "விசேஷமாக இராயனுடைய அரமனையிலுள்ளவர்களும்" (வசனம் 22ஆ). "இராயன்" என்பது ரோமாபுரியின் பேரரசர்கள் யாவருக்குமான ஒரு குறிப்புப் பெயராக இருந்தது. இங்கு பவுல் குறிப்பிட்ட இராயன், ரோமப் பேரரசை கி.பி. 54-68ம் ஆண்டுகள் அளவில் ஆட்சி செய்த நீரோ என்பவர் ஆவார். "இராயனுடைய அரமனையிலுள்ளவர்களும்" என்று அப்போஸ்தலர் பேசியபோது, அவர் யாரைத் தமது சிந்தனையில் கொண்டிருந்தார்? அந்தச் சுருக்கமான சொற்றொடர் ஆயிரக்கணக்கானவர்களின் கற்பனையை எரியூட்டி, யூகத்தின் எண்ணற்ற பக்கங்களை உருவாக்கியுள்ளது.

நீங்கள், "டேவிட் ரோப்பரின் வீட்டார்" பற்றிப் பேசினால், நீங்கள் என் மனைவியையும் என்னையும் குறித்துப் பேசுவீர்கள். (கடந்த காலத்தில் இந்தச் சொற்றொடர், எனது மூன்று மகள்களையும் உள்ளடக்குவதாக இருந்திருக்கும்.) இருப்பினும், "இராயனுடைய அரமனையிலுள்ளவர்களும்" என்ற வார்த்தைகள் நீரோவின் இரத்த தொடர்பான உறவினர்களை உள்ளடக்குவதாக இருக்கையில், அவைகள் அப்படிப்பட்டவர்களை உள்ளடக்க வேண்டும் என்று அவசியம் இல்லாதிருந்தது என்று பெரும்பான்மையான எழுத்தாளர்கள் சுட்டிக்காண்பிக்கின்றனர். அதிகாரத்துவம் உள்ள ஒருவர், இந்த மக்கள் "பேரரசரின் குடும்ப உறுப்பினர்களாகவோ அல்லது உறவின் முறையாராகவோ இருக்கவில்லை, ஆனால் அவரது அரண்மனையின் வேலைக்காரர்களாக இருந்தனர்" என்று விளக்கினார்.[4]

முன்னதாக நாம், நீரோவின் சிறப்புப் படைப்பிரிவினரில் சிலர் - பவுலைக் காவல் செய்யப் பொறுப்பு நியமிக்கப்பட்டவர்கள் - கிறிஸ்தவத்திற்கு மனமாற்றப்பட்டிருக்கச் சாத்தியக்கூறு இருந்தது என்று குறிப்பிட்டோம் (காண்க 1:13). தொடக்ககால சபையில் இருந்த சில எழுத்தாளர்களும், பவுலை வந்து சந்தித்த முக்கியமான ரோம அலுவலர்கள், சாதகமான வகையில் பவுலினால் ஈர்க்கப் பட்டிருந்தனர் என்று யூகித்தனர்.[5] நீரோவின் மனைவி கடைசியில் கிறிஸ்தவளானாள் என்ற புனை கதைகூட சுற்றுக்கு விடப்பட்டிருந்தது.[6] ''இராயனுடைய அரமனையிலுள்ளவர்களில்'' கர்த்தருக்கென்று மனமாற்றப்பட்டு இருந்தவர்கள் யார் என்பது பற்றி உண்மையில் நாம் கருத்து எதுவும் கொண்டிருப்பதில்லை - ஆனால் அந்த வீட்டாரில் பவுலைச் சந்தித்த ஒவ்வொருவரும் கடைசியில், "நீர் ஏன் விலங்கிடப் பட்டிருக்கிறீர்?" என்று வியப்படைந்திருப்பார்கள் என்பதை நாம் நிச்சயமாகக் கூற இயலும். இது இயேசுவைப் பற்றி அவர்களுக்கும் கூறுவதற்கு, அந்த அப்போஸ்தலருக்குப் பூரணமான வாய்ப்பை அளித்தது. இவ்வாறாக அவர்களில் சிலர் மனமாற்றப் பட்டனர் (ரோமர் 1:16), மற்றும் இவர்கள் பேரரசரின் அரண்மனைக்கு நற்செய்தியை எடுத்துச் சென்றனர்.

பவுல் பிலிப்பியருக்கு எழுதிய தமது நிருபத்தில் இந்தக் குறிப்பை ஏன் உள்ளடக்கினார்? ஒரு வேளை அவர், நாகரீக உலகத்தின் அச்சாணியான ரோமாபுரியில் சுவிசேஷத்தின் வல்லமையை அவர்கள் அறிவது, அவர்களை ஊக்குவிப்பதாக இருக்கும் என்று நினைத்திருக்கலாம். பிலிப்பிய சபையின் உறுப்பினர்களுக்கும் இராயனுடைய அரண்மையில் இருந்த கிறிஸ்தவர்களுக்கும் இடையில் தொடர்புகள் கூட இருந்திருக்கலாம். பிலிப்பி ஒரு ரோமக் குடியேற்ற

நகரம் என்பதை நினைவில் வையுங்கள். அதன் குடிமக்களில் ரோம யுத்தத்தின் நிபுணர்கள் இருந்திருக்கலாம், அவர்கள் தங்கள் நாட்டிற்குச் செய்த சேவைக்குப் பகுதி ஊழியமாக பிலிப்பி நகரில் நிலங்கள் கொடுக்கப்பட்டு இருந்திருக்கலாம். ஒருவேளை இவர்களில் சிலர், இன்னமும் நீரோவின் சேவையில் இருந்து கொண்டிருந்தவர்களுடன் பிணைப்புகள் கொண்டிருந்தவர்கள் கிறிஸ்தவர்கள் ஆகியிருக்கலாம். வில்பர் ஃபீல்ட்ஸ் என்பவர், 4:22ல் உள்ள "விசேஷமாக" என்ற வார்த்தை, "இராயனுடைய வீட்டாரில் கிறிஸ்தவர்களாக இருந்தவர்கள் அப்படிப்பட்ட சிரமமான சூழ்நிலைகளில் அவர்களின் இருப்பைப் பற்றிப் பிலிப்பியர்கள் அறிய வேண்டும் என்று குறிப்பாக விரும்பினார்கள் மற்றும் [அவர்களின்] ஜெபங்களையும் ஐக்கியத்தையும் விரும்பினார்கள் என்று சுட்டிக்காண்பிப்பதாகக் காணப்படுகிறது ..." என்று கருத்துத் தெரிவித்தார்.[7]

"பரிசுத்தவான்கள் அனைவரும், விசேஷமாக இராயனுடைய அரமனையிலுள்ளவர்களும்" என்ற ஆவலைத் தூண்டும் சொற்றொடர் பற்றிக் கேட்கப்படக் கூடிய எல்லாக் கேள்விகளுக்கும் நாம் பதில் அளிக்க இயலாது, ஆனால் சுவிசேஷம் அந்த "அக்கிரமத்தின் குகைக்குள்" ஊடுருவி இருந்தது என்பதை நினைத்துப் பார்த்தல் திகைப்புக்கு உரியதாக உள்ளது. எழுத்தாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் எழுதியவற்றில் இருந்து விளக்கவுரைகளின் மாதிரிகள் கீழே தரப்படுகின்றன:

> "பரிசுத்தவான்கள்" காணப்பட்டிருக்கக் கூடியதாக யூகிக்கப்படும் கடைசி வட்டாரங்களில் ஒன்றாக அது இருந்தது ... தீய ஒழுக்கம் மற்றும் கொடுமை ஆகியவற்றிற்கு ஏறக்குறைய அர்த்தமாக இருந்த நீரோ என்ற பெயர் கொண்ட அவன், ஒரு கொடுங்கோல் ஆட்சியாளனாக இருந்தான். அவனது "வீட்டார்" எப்படி இருந்திருப்பார்கள் என்பது கற்பனை செய்யக் கடினமாயிருக்காது. இருப்பினும் இதன் இருள் மற்றும் மூடநம்பிக்கை மற்றும் பொல்லாங்கு ஆகியவற்றின் மத்தியிலும் கிறிஸ்துவின் சுவிசேஷம் வேர்பிடித்து வளமான கனிகளை உண்டாக்கிற்று.[8]

> அவிசுவாசத்தின் கோட்டையிலேயே கிறிஸ்து தாக்குதல் செய்து ஊடுருவியிருந்தார் ... கிறிஸ்துவின் பெயர் குறிப்பிடப்படக் கூடாது என்ற நிலையில் இருந்த அந்த அறைகளிலேயே, அவர் கர்த்தர் என்ற வகையில் வெளிப்படையாகக் கலந்துரையாடப்பட்டார். மற்றும் அவை யாவும் நீரோவின் பார்வையின் கீழ் இருந்த இடத்திலேயே சரியாக நடைபெற்றன ... ![9]

> இந்த மக்கள் 100 சதவிகிதம் ரோமானியர்களாகவும் இராயனுடைய வர்களாகவும் இருத்தலினால் ஆதாயப்படுத்த ஒவ்வொரு விஷயத்தையும் கொண்டிருந்தனர், மற்றும் கிறிஸ்தவர்களாக இருத்தலினால் அவை எல்லாவற்றையும் இழந்து போகும் அபாயத்தையும் கொண்டிருந்தனர். இருப்பினும் அவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தனர். அவர்கள் கொள்கையை செயல்நுட்பத்திற்கு மேலாகவும், அன்பை வாழ்விற்கு மேலாகவும், கிறிஸ்துவை இராயனுக்கு மேலாகவும் வைத்திருந்தனர்.[10]

> இந்தப் பரிசுத்தவான்களில் பலருக்கு, அவர்களின் பற்றுறுதியான சாட்சியம்

என்பது, வட்டரங்கு, வன விலங்குகள், சித்திரவதை மற்றும் மரணம் ஆகியவற்றையே அர்த்தப்படுத்தி இருக்கலாம்; ஆனால் அவர்களின் அழியாமையுள்ள நினைவானது சபையின் ... இருதயம் போன்ற மையப்பகுதியில் புனிதமாகக் குடிகொண்டிருந்தது, இதனிமித்தமாக அவர்கள் பிலிப்பி நகரில் இருந்த பரிசுத்தவான்களுக்கு வாழ்த்துதல்களை அனுப்பினார்கள்.[11]

இராயனுடைய வீட்டாருக்குள் பரிசுத்தவான்கள் இருந்தனர் என்ற உண்மையில் இருந்து ஆதாயப்படுத்திக் கொள்ளப்பட வேண்டிய பாடங்கள் உள்ளன. அந்த சூழ்நிலையில் இருந்த மக்களிடத்தில் சுவிசேஷம் சென்று சேரக்கூடும் என்றால், அது *எந்த* சூழ்நிலையில் உள்ள மக்களிடத்திலும் சென்று சேரக்கூடும் என்பது ஒரு பாடமாக உள்ளது. சுவிசேஷம் வல்லமை நிறைந்ததாக உள்ளது (ரோமர் 1:16)! பலருக்கு, அவர்களைத் தேவன் எங்கு வைத்திருந்தாலும் அவர்கள் கிறிஸ்தவர்களாக - விசுவாசம் நிறைந்த கிறிஸ்தவர்களாக - முடியும் என்பது அவர்களுக்குத் தேவையான பாடமாக இருக்கலாம். எர்ட்மான் என்பவர் பின்வருமாறு தொடர்ந்து எழுதினார்:

கிறிஸ்துவின் வல்லமை வெற்றிகொள்ள முடியாத சூழ்நிலைகள் என்று எதுவும் இல்லை. சில சூழ்நிலைகளில் ஆவிக்குரிய வாழ்வானது மற்ற சூழ்நிலைகளில் போன்று அவ்வளவு சுலபமாக வளர்வதில்லை, ஆனால் புறதெய்வ வணக்கப் பேரரசர் ஒருவரின் அரண்மனையில் கூட அது [ஆவிக்குரிய வாழ்வு] உண்டாக்கப்பட்டு மகிழ்வுடன் அனுபவிக்கப்பட முடிந்தது.

இராயனுடைய வீட்டாரில் பரிசுத்தவான்கள் இருந்தனர் என்று காண்பது வியப்புக்குரியதாக இருக்கலாம், இருப்பினும் அந்த இடத்தில் தான் பரிசுத்தவான்கள் மிகவும் தேவைப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது ... உலகம் எந்த இடத்தில் மிகவும் மோசமானதாக உள்ளதோ, அந்த இடத்தில் சபையானது மிகச்சிறப்பானதாக இருக்க வேண்டும்.

மீண்டுமாக, இராயனுடைய வீட்டார் வழக்கத்திற்கு மாறாக செல்வாக்கின் மையமாக இருந்தனர் என்று நிரூபிக்கப்பட்டது குறிப்பிடப்படலாம். பேரரசரின் நகரத்தில் இருந்த வேறு எந்த வட்டாரத்தைப் பார்க்கிலும், அங்கிருந்த பற்றுறுதியான சாட்சிகள் கிறிஸ்துவின் ஊழியத்திற்கு மிகவும் முக்கியமானவர்களாக இருந்தனர் ...[12]

நீங்கள் உங்கள் சொந்த "இராயனுடைய வீட்டாரில்" இருக்கலாம்:

- *தேவனும் அவருடைய வழியும் மதிக்கப்படாத ஒரு குடும்பத்தில்.*
- *தேவனும் வேதாகமமும் ஏளனம் பண்ணப்படும் ஒரு கல்வி நிறுவனத்தில்.*
- *கிறிஸ்தவக் கொள்கைகளைத் தண்டிக்கும் ஒரு வேலையில்.*
- *உலகப்பிரகாரமான தன்மை ஏராளமாக இருக்கும் ஒரு இராணுவத்தில்.*
- *"பழமைவாதமற்ற" மதவெளிப்பாட்டைத் தண்டிக்கும் ஒரு சமூகத்தில்.*
- *கொடுமையும் தேவபக்தியின்மையும் எழுதப்படாத சட்டங்களாகக் கருதப்படும் தண்டிக்கும் நிறுவனம் ஒன்றில்.*

நீங்கள் இப்படிப்பட்டதொரு அமைவில் இருக்கக் கண்டால், "இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், ... மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாவதற்கு" தீர்மானம் செய்யுங்கள் (ரோமர் 12:2). உங்களுக்கு உதவுவதற்குத் தேவனிடத்தில் நம்பிக்கை வையுங்கள். அது சுலபமாயிராது - ஆனால், கர்த்தரின் உதவியுடன் நீங்கள், "இராயனுடைய வீட்டாரில்" ஒரு பரிசுத்தவானாக இருக்க முடியும்!

பரிசுத்தவான்கள் அனைவரும்

நாம் பிலிப்பியர் 4:21, 22ஐ விட்டுக் கடந்து செல்வதற்கு முன்னர், பவுலினால் பட்டியலிடப்பட்ட அனைவரையும் கண்ணோக்குவதற்குத் சற்றே தாமதிப்போமாக. அவர்கள் எவ்வளவு ஆச்சரியமான வகையில் சமூகத்தில் பல்வேறு பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்! முதலாவதாக அவர், பொதுவாக சபையின் உறுப்பினர்களாக இருந்த "பரிசுத்தவான்களை" குறிப்பிட்டார். பின்பு பவுல், "என்னோடிருக்கிற சகோதரர்கள்" என்று பேசுகையில், பிரசங்கியார்களையும், போதகர்களையும் பிற நடத்துனர்களையும் குறிப்பிட்டார். கடைசியாக. "இராயனுடைய வீட்டாரிலும்" பரிசுத்தவான்கள் இருந்தனர்! கர்த்தருடைய சரீரம் மக்களால் - எல்லா வகையான மக்களாலும் - ஆனதாக உள்ளது மற்றும் நாம் ஒருவர் பிறரிடத்தில் இருந்து பெலத்தைப் பெற்றுக்கொள்கிறோம். "அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்" (ரோமர் 12:5); "ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம்" (ரோமர் 14:19).

ஒரு நபரின் மூலமாக வல்லமை (4:23)

பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் இன்னும் ஒருவசனம் மாத்திரம் எஞ்சியுள்ளது: 23ம் வசனத்தில் உள்ள ஆசீர்வாதம். இது "இந்த நிருபம் முழுவதற்குமான கிரீடத்தைச் சூட்டுவதாக"[13] இருப்பதால், இதைப் புரிந்துகொள்ள நாம் சற்று நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும். பவுலின் நாட்களில், கடிதங்களை ஒரு சுருக்கமான "பிரியாவிடை" கொண்டு முடித்தல் என்பது வழக்கமானதாக இருந்தது, ஆனால் அப்போஸ்தலர் தமது நிருபங்களை ஒரு ஆசீர்வாதத்துடன், தமது வாசகர்களுக்கான ஒரு ஜெபத்துடன் முடித்தார். வார்த்தைகள் மாறுபட்டன, ஆனால் அடிப்படையில் கருத்து ஒரே மாதிரியாகவே இருந்தது: "நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்" (வசனம் 23).

"கிருபை"

இந்த நிருபத்தைப் பவுல், பிலிப்பியர்களுக்கு "... கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" என்ற வாழ்த்துதலுடன் தொடங்கியிருந்தார் (1:2). தொடர்ந்து வந்த பத்திகளில் அவர் பல தலைப்புக்களை எடுத்துரைத்து முடித்திருந்தார்; ஆனால் முடிவுப் பகுதியை அடைந்தபோது, அவர் இன்னமும் கிறிஸ்துவின் கிருபை (அவரது ஆச்சரியமான, தகுதியற்றவருக்குத் தரப்படும் ஈவு) அவர்கள் வாழ்வை ஆசீர்வதிக்க வேண்டும் என்று ஜெபித்தார்.[14]

KJV வேதாகமத்தில் *4:23ல்*, "be with you all" *என்றுள்ளது [இதுவே தமிழில் "உங்களனைவரோடுங்கூட இருப்பதாக" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது]. ஆனால் கையெழுத்துப் பிரதிகளின் ஆதாரம், "உங்கள் ஆவியோடு இருப்பதாக" என்பதற்கே சாதகமாக உள்ளது. எந்த மொழிபெயர்ப்பு பயன்படுத்தப்பட்டாலும் அர்த்தம் அடிப்படையில் ஒன்றுபோலவே உள்ளது. இந்த சந்தர்ப்பப் பொருளில், "ஆவி" என்பது "மனிதரின் மற்ற பாகங்களைத் தவிர்த்து ஒரு பாகத்தையல்ல, ஆனால் அவரது உள்ளான பக்கத்தில் இருந்து, அவரது இருப்பின் மிகமுக்கியமான பகுதியில் இருந்து காணப்படுகிற முழு நபரைக் குறிக்கிறது [காண்க கலாத்தியர் 6:18; 2 தீமோத்தேயு 4:22; பிலேமோன் 25]."*[15] *"ஆவி" என்ற வார்த்தையின் பயன்பாட்டில் தனிச்சிறப்பு ஏதேனும் உள்ளது என்றால், அது ஒரு தனிநபரின் ஆவி மிகவும் முக்கியமானதாக உள்ளது என்ற வலியுறுத்தமாக இருக்கலாம். ஆவியே கிருபையில் இருந்து மிகவும் அதிகமாகப் பயனடைகிறது.*

"கர்த்தராகிய இயேசுகிறிஸ்து"

"கர்த்தராகிய இயேசுகிறிஸ்து" என்பதே 23ம் வசனத்தின் மிக முக்கியமான பகுதியாக உள்ளது. "இராயனைக் காட்டிலும் பெரியவர் ஒருவர் இருக்கிறார், அவர் பவுலுடன் சிறையறையைப் பகிர்ந்து கொண்டிருந்தார், மற்றும் அவரைப் பற்றியே பவுல் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தின் கடைசி வார்த்தைகளில் பேசுகிறார்."[16] *அப்போஸ்தலரின் கண்கள் அவர் நேசித்த இயேசுவின் மீது மீண்டும் கவனம் குவித்திருந்தன.*

இங்கு ஒரு உவமை ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டியதாக உள்ளது.[17] *ஒருகாலத்தில் ஆட்சியாளர் ஒருவர் ஒரு குறிப்பிட்ட நகரைப் பார்வையிடத் திட்டமிட்டார். ஆட்சியாளர் அந்த நகருக்கு வருவார் என்றால், அவருக்கு ஒரு அரியணை அறையை ஏற்பாடு செய்து பராமரிக்கும் பொறுப்பு அந்த நகரின் அலுவலர்களுக்கு உரியதாக இருந்தது. அவர் முன்பு ஒருக்காலும் அங்கு வந்திருந்தது இல்லை என்பதால், அரியணை அறையானது கூட்டம் நடத்தும் அறையாக மாற்றப்பட்டு இருந்தது. பார்வை இடுதல் விரைவில் நடைபெறும் என்று அலுவலர்கள் அறிந்தபோது, அவர்கள் சீக்கிரத்தில், அறையை அரியணை அறையாக மாற்றுவதற்கு வேலையாட்களை அமர்த்தினர். பின்பு அந்த அரியணை எங்குள்ளது என்று தாங்கள் அறியவில்லை என்பதை அவர்கள் உணர்ந்தனர்! மனக்கவலையுடன் எல்லா இடங்களிலும் தேடியபின்பு, கடைசியில் அந்த ஆட்சியாளரின் வருகைக்குக் சற்றுமுன்னதாக, இருளான ஒரு பொருள் வைப்பு அறையில் அந்த அரியணை இருப்பதைக் கண்டுபிடித்தனர். அவர்களின் அனுபவம் சங்கடமூட்டுவதாகவும் வலிவார்ந்த வகையில் சிறுமைப்பட்டதாகவும் இருந்தது, ஆனால் நான் உங்களுக்கு [இதைவிட] அபாயகரமான மற்றும் வலிவார்ந்த வகையில் பேரிழப்புக்குரிய சூழ்நிலை பற்றிக் கூற அனுமதியுங்கள்: சிலர் இயேசுவின் "அரியணையை தவறான இடத்தில் வைத்துள்ளனர்"! ஒன்று, நம்பிக்கை வைத்தல் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றின் மூலம் (எபிரெயர் 5:8, 9; காண்க மாற்கு 16:15, 16), அவர்கள் அவரை "இராஜாதி இராஜாவாக" முடிசூட்டாது இருக்கின்றனர் அல்லது அவரைத் தங்கள் வாழ்விலிருந்து ஆட்சியாளராக இல்லாது விலக்கி விட்டனர் (வெளிப்படுத்தின விசேஷம் 1:5). பவுல் தமது இருதய அரியணையில் இயேசுவைக் கொண்டிருந்தார்: அவரை "கர்த்தராகிய இயேசுகிறிஸ்து" என்று அவர் அங்கீகரித்திருந்தார்!*

"ஆமென்"

KJV வேதாகமமும் "ஆமென்" என்ற வார்த்தையைக் கொண்டு ஆசீர்வாதத்தை முடிக்கிறது. இவ்வார்த்தை, வசனத்தின் நவீனப் பதிப்பாளர்கள் பலரால் விடப்பட்டுள்ளது; ஆனால் ஜெரால்டு ஹாவ்த்தார்ன் என்பவரின் கூற்றுப்படி, "இதற்கான ஆதாரம் பலமாக உள்ளது."[18] "எவ்வகையிலும் இது, பிலிப்பி நகரில் இருந்த சபைக்கு - மற்றும் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு காலத்திலும் உள்ள இயேசு கிறிஸ்துவின் சபைக்கு - அப்போஸ்தலரின் ஜெபத்திற்கான பொருத்தமான பதிலுரை ஒன்றை வடிவமைக்கிறது."[19] "முடிவாகச் சொல்லும் 'ஆமென்' என்ற வார்த்தையுடன் பவுல், தாம் கூறிய சத்தியத்தை உறுதிப்படுத்துகிறார் மற்றும் ஆசீர்வாதங்களைக் கேள்விப்பட்ட தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கு சபைக்குழுமம் 'ஆம்' என்று பதில் உரைக்கிறது."[20]

முடிவுரை

பிலிப்பியருக்குப் பவுல் எழுதிய நிருபம் முடிக்கப்பட்டது. ஒன்று அவர் சொல்லுவதை நிறுத்தி இருக்க வேண்டும் அல்லது - அவர் அந்த கடைசி வரிகளை எழுதியிருந்தால் - அவர் தமது எழுது கோலைக் கீழே வைத்திருக்க வேண்டும். எழுதிய மை உலருகையில், அவர் எப்பாப்பிரோதீத்துவுக்கு, இந்த நிருபம் யாருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பது உட்படக் கடைசி அறிவுறுத்துதல்களைக் கொடுத்திருப்பார். அப்போஸ்தலர், எப்பாப்பிரோதீத்துவின் பாதுகாப்பான பயணத்திற்காக பரலோகத்தை நோக்கி ஜெபத்தை ஏறெடுத்திருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. பின்பு அவர், தோல்சுருளைச் சுருட்டி, அதைத் தமது உடன் ஊழியக்காரரிடத்தில் கையளித்து அவரைக் கட்டித் தழுவியிருப்பார். (நாம், நடபடிகள் 20:36, 37ல் விவரிக்கப்பட்டது போன்ற காட்சியொன்றைச் சித்தரித்துக் கொள்ளலாம்.) மன உறுதிகொண்ட அந்த ஊழியக்காரர் தூரத்தில் சென்று மறைவதை நாம் கற்பனை செய்கையில், நாமும் இப்படிப்புப் பயணத்தை முடிப்பதற்கான வேளையாயிற்று என்பதை அறிய வேண்டும். CEV வேதாகமம் இந்த நிருபத்தைப் பின்வரும் வார்த்தைகளுடன் முடிக்கிறது: "நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்கள் மீது இரக்கமுள்ளவராக இருந்து உங்கள் வாழ்வை ஆசீர்வதிக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்!" அதுவே உங்களுக்கான என் ஜெபமுமாக இருக்கிறது. உங்கள் இருதயத்தில் "வல்லமை" மீண்டும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியுள்ளது என்றால், பிலிப்பியருக்கு எழுதப்பட்ட, ஆற்றல் பொதியப்பட்ட இந்தச் சிறு நிருபத்தைப் பற்றிய நமது படிப்பு உங்களுக்கு உதவியிருக்கும் என்று நான் நம்புகிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

குறிப்புகள்

[1]நமது படிப்பின் இந்தப் பகுதி, இந்நிருபத்தை மறுகண்ணோட்டமிடும் வாய்ப்பாக உள்ளடக்கப்பட்டுள்ளது. நீங்கள் இன்னும் அதிக விரிவான மறுகண்ணோட்டம் செய்ய விரும்பலாம். [2]Charles R. Swindoll, *Laugh Again* (Dallas: Word Publishing, 1992), 237. [3]Charles R. Erdman, *The Epistle of Paul to the Philippians* (Grand Rapids, Mich.: Baker Book House, 1983), 152. [4]William F. Arndt and F. Wilbur Gingrich, *A Greek-English Lexicon of the New*

Testament and Other Early Christian Literature, 4th ed., rev. and aug. (Chicago: University of Chicago Press, 1957), 560. [5]Earl F. Palmer, *Integrity in a World of Pretense: Insights from the Book of Philippians* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 176-77. [6]Swindoll, 235. See Wendell Winkler, "Christian Fellowship; God Will Provide; Saints in Caesar's Household; Salutations and the Benediction," *A Homiletic Commentary on the Book of Philippians,* ed. Garland Elkins and Thomas B. Warren (Memphis: Getwell church of Christ, 1987), 289-90. [7]Wilbur Fields, *Philippians-Colossians-Philemon,* Bible Study Textbook Series (Joplin, Mo.: College Press, 1969), 112. [8]Erdman, 153. [9]Swindoll, 235. [10]Carroll Simcox, *They Met at Philippi* (New York: Oxford University Press, 1958), 158.

[11]Erdman, 154. [12]Ibid., 153-54. [13]Ralph P. Martin, *The Epistle of Paul to the Philippians,* rev. ed., Tyndale New Testament Commentaries, ed. R. V. G. Tasker (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 187. [14]இவ்விடத்தில் நீங்கள் ஜான் நியூட்டனின் புகழ்பெற்ற "Amazing Grace" என்ற பாடலை [தமிழில் இதற்கு இணையாக "கிருபையிதே தேவகிருபையிதே" என்ற பாடல் உள்ளது] பாடலின் வார்த்தைகளை வாசிக்க இவ்விடத்தில் தாமதிக்க விரும்பலாம். ஏற்புடையதென்றால், உங்கள் உரையைக் கேட்பவர்கள் அப்பாடலைப் பாடச் செய்யலாம். [15]Richard B. Gaffin, notes on Philippians, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 1810. [16]Palmer, 177. [17]Adapted from Maxie D. Dunnam *Galatians, Ephesians, Philippians, Colossians, Philemon,* The Communicator's Commentary series, ed. Lloyd J. Ogilvie (Waco, Tex.: Word Books, 1982), 275. [18]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary,* vol. 43, *Philippians*, ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 216. [19]Martin, 187. [20]Hawthorne, 216.